திரு. ம. சங்கரலிங்கம் : நாகர்கோவில் தலைமை மருத்துவமனையில் கதிர்வீச்சுக் கருவி பல மாதங்களாக இல்லாததால், அங்கு காச நோயாளிகள் துன்பத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அங்கிருந்த கருவி பல ஆண்டுகளுக்கு முன் வாங்கப்பட்ட கருவி என்று அறிகிறேன். அதை மாற்றி புதிய கருவியை வாங்கும் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா ? அத்தகைய முறையீடு அங்கிருந்து வந்திருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புநமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இந்த 200 எம்.ஏ. கதிர்வீச்சுக் கருவிக்குத் தேவையான உதிரி உறுப்புக்கள் கிடைப்பதிலே கொஞ்சம் கடினமான நிலை இருந்தது. சுமார் ரூபாய் 93,148 அளவுக்கு உதிரி உறுப்புகள் வாங்கப்பட்டன. மேலும் அந்த மருத்துவமனைக்காக ரூ. 1,05,000 மதிப்பில் இரண்டாவது 100 எம்.ஏ. கதிர்வீச்சுக் கருவியை வாங்க 13—7—1978 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, அது மிக விரைவிலே பெறப்படும்,

[1979 ஏப்ரல் 25

டாக்டர் இரா. சனார்த்தனம் : கதிர்வீச்சுக் கருவிகளை பேருந்துகளில் பொருத்தி கிராமங்களுக்கு அனுப்பி அங்கேயுள்ள நோயாளிகளைப் படம் எடுக்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : நடமாடும் மருத்துவமனைகள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைப் போலவே காச நோய்களைக் கண்டுபிடிக்க கதிர்வீச்சுக் கருவிகளைக் கொண்ட பேருந்துகள் சில இடங்களில் நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவைகள் சில பகுதிகளிலே மட்டுந்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லா மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்ற முறையில் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, some years ago, when the same question was asked about the Rajah Mirasdar Hospital in Thanjavur, the Hon. the Health Minister replied that special teams were being trained to repair such apparatuses in hospitals. May I know whether there is any such scheme in existence and, if so, why it takes so many months for this sort of equipment to be repaired in hospitals?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அதற்குத் தேவையான உறுப்புகள் கிடைப்பதிலே சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. தேவையான உறுப்புகளை சில நேரங்களில் வெளி நாடுகளிலிருந்து பெற வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவேதான் காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. க. அறிவழகன் : மருத்துவமனைகளில் உள்ள கதிர்வீச்சுக் கருவிகளுக்கான தொழில் நுட்பம் வாய்ந்த உதிரிப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைப்பதில் காலதாமதம் ஏற்பட்டால், பரவாயில்லை, ஆனால் சாதாரண நிலையில் பழுதடைகின்றபோது, அதைக் கூட சீர் செய்ய முடியாமல் காலதாமதம் ஆகிறது. அதனால் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கேட்டது போல, அவைகள் உடனடியாகப் பழுதுபார்க்கக் கூடிய பொறியியல் உதவியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, சாதாரண குறைபாடுகள் ஏற்படுமானால் அவைகளை உடனடியாகக் கவனிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட சில பெரிய குறைபாடுகள், தவறுகள் ஏற்படுமானால், அவைகளைச் சரி செய்ய காலதாமதம் ஆகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1979 ஏப்ரல் 25]

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : நடமாடும் மருத்துவப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தலைநகரைச் சுற்றி ஓடிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தாலுக்கா வாரியாக, எங்களுடைய பகுதியில் வந்ததாகத் தெரியவில்லை. ஆகவே ஒவ்வொரு தாலுக்காவிலும், இரண்டு நாள், மூன்று நாள் வரும்படி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : நடமாடும் மருத்துவமனை ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்தோடும் இணைக்கப்பட்டு, அந்த ஆரம்பச் சுகாதார நிலையம் உள்ள ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் குறிப்பிட்ட நாளில் சென்று பணியாற்ற வேண்டுமென்று படிப்படியாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலும் 100 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவ மனைகளை உருவாக்குவதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 4-20)

THIRU A. R. DAMODARAN : Sir, I would like the Hon. Minister kindly to note that we have got medical equipments worth hundreds of lakhs of rupees in our hospitals. I know that the Department has been giving this reply. I would request him to consider the possibility of having a medical engineering service attached to his Department, as we have a number of skilled boys in polytechnics, etc., who can take up this repair work. Secondly, if the X-Ray apparatus is out of order, do the Government expect a person to wait for his fracture to be X-rayed until the parts are got from other countries.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : மிகப் பெரிய மருத்துவமனைகளில் ஒன்றுக்கு மேல் இரண்டு அல்லது மூன்று கதிர்வீச்சு இயந்திரங்கள் இருக்கின்றன. அப்படி ஒரே ஒரு இயந்திரம் இருக்கின்ற இடத்திலே, அந்த இயந்திரம் பழுது அடைந்தால், பக்கத்து மருத்துவ மனையிலிருந்து மிகவும் தேவையானபோது, எடுத்துக்கொள்வதற்கான வழிவகைகளைச் செய்து அதைப் பெறுகின்றார்கள். தனிப்பட்ட முறையிலே அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்ய மருத்துவ மனையிலேயே ஒருவரைப் பணியாற்றிட வைத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். இது ஒரு நல்ல யோசனை. அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. க. அறிவழகன் : மருத்துவமனையிலே வைத்துக்கொள்வது என்பதில் இப்போது இருக்கின்ற உதவியாளர் என்ஜினியர் அல்லது பொதுப் பணித்துறையைச் சேர்ந்தவராக இருக்கிறார் என்று தெரிகிறது. சென்னையில்

உள்ள மெட்ராஸ் மெடிகல் காலேஜ் போன்ற நிறுவனங்களிலிருந்து அல்லது D.H.S., D.M.E., அவர்களிடமிருந்து ஒருவர் நியமிக்கப்பட்டால், அந்த வேலை விரைந்து செயல்பட முடியும். அதை அரசு செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இதே பொருள் உள்ள கேள்வியைத் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் கேட்டார்கள். ஆகவே அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கதிர் வீச்சுக் கருவிகள் பழுதடைந்தால், சரிப்படுத்துகின்ற படிப்புப் படித்தவர்கள் பலர் வெளிநாட்டுக்குப் போகிறார்கள். இங்கேயே அவர்களைப் பயன்படுத்த உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Tindivanam Government Hospital.

* 350 Q.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government Hospital at Tindivanam is equipped with X-Ray Plant and Blood Bank facilities?

திண்டிவனம் அரசு மருத்துவமனை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திண்டிவனத்தில் உள்ள அரசு மருத்துவமனை, கதிர் வீச்சு சாதனம் (X-ray Plant) இரத்த சேமிப்பு நிலையம் (Blood Bank) வசதிகளைக் கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : ஆம்.

திரு. க. இராமமூர்த்தி : திண்டிவனத்தில் 25 எம்.எம். எக்ஸ்ரே யூனிட் தான் இருக்கிறது. அது எதற்குமே பயன்படுவதில்லை. அந்தப் பகுதி அதிகமாக விபத்துக்கள் நடக்கின்ற பகுதி. கை முறிவு, கால் முறிவு ஏற்படுகின்ற பகுதியாக இருக்கிறது. விபத்துக்குள்ளாகின்றவர்களை பாண்டிச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பாமல் கடலூர் மருத்துவ மனைக்கு அனுப்புவதால் விபத்துக்கு ஆளாகின்றவர்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். பாண்டியைத் தாண்டி கடலூருக்குப் போகவேண்டி

யிருக்கிறது. திண்டிவனத்தில் 100 எம்.எம். எக்ஸ்ரே யூனிட் வைக்க வேண்டும். அங்கே உள்ள பிளட் பாங்க் (Blood Bank) இதுவரையிலே வேலை செய்யவில்லை. அதுபற்றித் தகவல் வந்திருக்கிறதா ? அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தென்னாற்காடு மாவட்டத்திலே திண்டிவனம் அரசினர் மருத்துவமனை 76 படுக்கைகளோடு தற்போது செயல் பட்டுக்கொண்டிருக்கின்றது. அந்த மருத்துவ மனையில் சுமார் 60,000 பேர்கள் பயன் பெற்று வருகின்றனர். அந்த அளவுக்கு அந்த மருத்துவமனை நிலைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த மருத்துவ மனையில் ரத்த சேமிப்பு செய்வது, மருத்துவ சிகிச்சைப் பிரிவு போன்றவை இருக்கின்றன. ஈ.சி.ஜீ. போன்ற இயந்திரம் இருக்கின்றது. 11 எம்.எம். கதிர்வீச்சு இணைப் பிரிவு இருக்கிறது. 100 எம்.எம். கதிர் இணை பிரிவு வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலித்து ஒரு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எக்ஸ்ரே யூனிட்பற்றி பரிசிலனை செய்கின்ற வாக்குறுதியைத் தந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பிளட் பாங்கைப் பொறுத்தவரையிலும், தவறான தகவல் வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது வேலை செய்யவில்லை. அது மட்டுமல்ல. பல மாதங்களாக அங்கே அந்த பிளாண்ட் இயங்காமல் இருக்கிறது. அங்கே பிளட் பாங்கே செயல்படவில்லை. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தவறான தகவல் கொடுத்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இங்கே தரப்பட்டிருக்கின்ற குறிப்பில், ரத்த சேமிப்பு நிலையம் செயல்பட்டு வருவதாகத் தான் சொல்லியிருக்கிறார்கள். அது இல்லை என்று தெரியுமானால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : I take the responsibility. நான் அதற்குப் பொறுப்பேற்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப் பற்றிய பரிசீலனைக்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : திண்டிவனம் மருத்துவமனையில் ரூ. 3.5 லட்சம் செலவில் அவுட் பேஷண்ட் அண்டு அட்மினிஸ்ட்டிரேடிவ் பிளாக்

கட்ட ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டதாகவும், ஆனால் அது இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். அது உண்மைதானா? அதை அரசு செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துப் பதில் தருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து 20—4—1979 அன்று ஒத்தி வைக்கப்பட்ட வினாக்கள். வினா எண் 311 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

Special Training to Politicians.

@ * 311. *Q.*—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state :

(*a*) whether a scheme has been formulated to impart special training to politicians, in connection with Rajaji's Centenary Celebrations; and

(*b*) if so, the details thereof?

அரசியல்வாதிகளுக்கு தனிப் பயிற்சி.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராஜாஜி நூற்றாண்டு விழாவையொட்டி அரசியல்வாதிகளுக்கு தனிப்பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : திரு. இராஜாஜி அவர்கள் அரசியல் துறையில் மூதறிஞர். அத்தோடு அவருடைய நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடுகின்றோம். அரசியல்வாதிகள் என்று நான் சொல்வது, என்னுடைய கேள்வியிலே தவறாக பதியப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அரசியலில், நல்ல பண்பட்ட அரசியல்வாதிகளை உருவாக்குகின்ற நிலையிருக்கிறது. அரசியல் முதுகலை வகுப்புகளில் படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு, விடுமுறைப் பயிற்சி என்று 3 மாத வெக்கேஷனில்

@ 20—4—1979 அன்றைய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

அளிப்பதற்கு, ஒரு திட்டம் வேண்டும். இராஜாஜி அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவர்களுடைய அரசியல் தத்துவங்களை, அவர் அதை எந்த நிலையிலே உருவாக்கினார்கள் என்பது பற்றியெல்லாம் கற்றுக் கொடுக்கலாம். அதற்கு என்று ஒரு விடுமுறைகாலப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அகில இந்திய அளவில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட இராஜாஜி நூற்றாண்டு விழாக் குழு ஒரு உலகம் தழுவிய நிறுவனமாக இருக்கிறது. பப்ளிக் அபையர்ஸ் அண்டு அட்மினிஸ்ட்ரேஷன் என்ற துறையில் பயிற்சி அளிப்பதற்காக ஒரு நிறுவனம் அமைய வேண்டுமென்ற கருத்து உருப்பெற்று அந்தத் திட்டம் அவர்கள் அளவிலேயே இருக்கிறது. அந்த அளவுக்கு நிறுவனம் அமையுமானால், அது தமிழகத்திலேதான் அமைக்கப்பட வேண்டுமென்று அந்தக் குழுவினிடத்திலே வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அதை இங்கே அமைப்பதுதான் சிறந்தது என்று தெரிவித்திருக்கிறோம். அதற்கு வேண்டிய உதவிகளை தமிழக அரசு அளிக்கும் என்றும் தெரிவித்திருக்கிறோம். அந்த முயற்சியில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய ஆலோசனையையும் ஏற்று அதற்கு முயல்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தாம் விரும்புகின்ற அந்தத் திட்டங்களை எழுதித்தருவார்களானால், அதைப்பற்றியும் அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மேலை நாடுகளிலே எல்லாம் ஒரு கட்சிக்குச் சொந்தமாகக் கருதப்பட்டு, எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்கின்ற பேரறிஞர்களை வாழ்த்த அவர்கள் பிறந்த நாளை விழா நாளாகக் கொண்டாடுகின்ற நிலைமை இருக்கின்றது. அதற்கு என்று ஒரு பல்கலைக் கழகம்கூட அவர்கள் விரும்பினால் வருகிறது. அதுபோல இராஜாஜி அவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், அமெரிக்கப் பல்கலைக் கழகத்திலிருந்து காமராஜர் அவர்களுடைய அரசியல் வாழ்வைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காக 2, 3 மாணவர்களை அவர்கள் இங்கே அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் இங்கேயே மூன்றாண்டுகள் தங்கி தெரிந்துகொண்ட பிறகு, அதுபற்றிப் புத்தகம் வெளியிடவேண்டுமென்று இருக்கிறார்கள். அது போலவே இராஜாஜி அவர்களைப்பற்றி ஆராய்ந்து அதைப் புத்தகமாக வெளியிடுவதற்கு நிதி உதவி கிடைக்குமா? அந்த நிதி உதவி பல்கலைக் கழகம் மூலம் கிடைப்பதற்கு ஒரு திட்டத்தை இந்த அரசு வகுக்குமா? நானும் என் திட்டத்தை எழுதி அனுப்புகிறேன். அதை அரசு செய்ய முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய கருத்துக்களைத் தெளிவாக எழுதிக்கொடுத்தால், அரசு அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : நாகரிகமும் நடுநிலைமையும் வாய்ந்த ஒரு அறிவாளியாக, அரசியல்வாதியாக இருந்து அரசியலை நடத்திக் காட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா அடுத்த ஆண்டிலே வரும்போது, அவருடைய நல்ல தத்துவங்களை எடுத்து போதிக்க இப்படிப் பட்ட ஒரு நிறுவனம் வேண்டும் என்று நினைக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் வாழ்க்கையை ஆக்கபூர்வமாகக் கற்பிக்கும் முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மூதறிஞர் அவர்கள் பெயரிலே அப்படிப்பட்ட நிறுவனம், அமைப்பு அமைந்தாலே பேரறிஞர் அண்ணாவின் அரசியல் உணர்வுகளை எடுத்துக் கற்பிக்க அதுவும் ஒரு பகுதியாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Tourist Trade Fairs in District Headquarters.

@ * 312 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to conduct Tourist Trade Fairs in the District Headquarters; and

(*b*) if so, the date from which they will be conducted?

மாவட்டத் தலைநகரங்களில் சுற்றுலா பொருட்காட்சி.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மாவட்டத் தலைநகரங்களில் சுற்றுலா பொருட்காட்சி நடத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாவட்டத் தலைநகரங்களில் சுற்றுலா பொருட்காட்சி நடத்தும், செயற்குறிப்பு வாய்ப்புகள் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

@ 20—4—1979 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.

(பிற்பகல் 4-30)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாவட்டத் தலைநகரங்களில் சுற்றுலாப் பொருட்காட்சிகளை நடத்தும்போதும், மாநிலத் தலைநகரில் நடத்தும் போதும் அவை வெறும் வர்த்தகப் பொருட்காட்சியாக இல்லாமல், அறிவியல், கல்வி, தொழில் துறை போன்ற பல்வேறு துறைகளின் வளர்ச்சியையும் மக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நம்முடைய பொருட்காட்சிகளை மாண்புமிகு உறுப்பினரவர்கள் பார்க்கவில்லையோ என்ற ஐயம் ஏற்படுகிறது. வெறும் வர்த்தக அடிப்படையிலே பொருட்காட்சிகள் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான், தனியார் நடத்தும் பொருட்காட்சிகளைத் தடை செய்து, அரசுத் துறைகளே பொருட்காட்சிகளை நடத்த முன்வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட பொருட்காட்சிகளில் வெறும் வர்த்தகக் கடைகளை மாத்திரம் வைப்பதில்லை. பல்வேறு அரசுத் துறைகளைப் பற்றி மக்களுக்கு விவரங்கள் அளிக்கின்ற வகையில், அமைப்புகள், அரங்குகள், மற்றும் பல்வேறு அறிவு வளர்ச்சியைத் தருகிற அரங்குகள் எல்லாம் அங்கே அமைக்கப்படுகின்றன. குறிப்பாக 16 அரசுத் துறைகள் பொறுப்பேற்று, அரங்குகளை அமைக்கின்றன. இது தவிர, மத்திய அரசு சார்பாகவும், தனியார் துறைகளின் சார்பாகவும் அரங்குகள் அமைக்கப் படுகின்றன.

டாக்டர் இரா. சனார்த்தனம் : உலக நாடுகளிலும், பிற நகரங்களிலும் நிரந்தரமாகப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, அவை மக்களுக்கு அறிவூட்டுவனவாக அமைந்திருக்கின்றன. அதை மனத்திலே கொண்டு, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களிலும் நிரந்தரப் பொருட்காட்சிகளை அமைக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : முதலிலே தலைநகரிலே அத்தகைய நிரந்தரப் பொருட்காட்சியை அமைக்க அரசு ஆலோசித்துக் கொண் டிருக்கிறது. அதை நிறுவியதற்குப் பிறகு மாவட்டத் தலைநகரங்களில் அமைக்க ஆலோசிக்கப்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தற்போது எந்தெந்த மாவட்டங்களில் அரசால் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன ? போன வருடம் அந்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : சென்னை, மதுரை, சேலம் ஆகிய நகரங்களில் அரசுத் துறைகளின் சார்பாக பொருட்காட்சிகள் நடத்தப் படுகின்றன. வருவாய்ப்பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரமான பதில்

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பொருட்காட்சிகளை நடத்தும்போது, திரைப்படக் காட்சியோ, நாடகக் காட்சிகளோ கலா நிகழ்ச்சிகளாக ஏற்பாடு செய்யப்படுகின்றன. அதோடு மட்டுமல்லாமல், மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகளை நடத்தும்போதும் மாநிலத் தலைநகரில் பொருட்காட்சியை நடத்தும்போதும் அந்தந்தப் பகுதியில் கலாச்சாரத் துறையில் புகழ் பெற்றுள்ள, உள்ளூர் நிகழ்ச்சிகளையும், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்து ஆதரிக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : திரைப்படம், நாடகங்கள் தவிர கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் தொடர்ந்து அத்தனை நாட்களும் இடம் பெறுகின்ற அளவிற்கு, நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன. இப்போது மதுரை மாநகரத்தில் நடைபெறுகிற சித்திரை சுற்றுலாப் பொருட்காட்சியில், அந்தப் பகுதியிலே இருக்கிற கிராமியக் கலா நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

(1) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1979-80 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :—

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. பி. ஆர். தாமஸ்.
3. திரு. ஆ. நல்லசிவன்.
4. திரு. ஜே. எம். மியாகான்.
5. திரு. டி. வி. டி'மாண்டி.
6. திரு. ஏ. ஆர். தாமோதரன்.
7. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
8. திரு. நீலநாராயணன்.
9. திரு. க. [illegible]வரிவழகன்

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

மேலவை விதி 156 (1)-ன்படி மாண்புமிகு மேலவை முன்னவர், அவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோர், இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்ட மன்ற மேலவை விதிகளின் 156 (4)-வது விதியின்கீழ் சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களை இக் குழுவின் தலைவராயிருக்கும்படி நான் நியமித்துள்ளேன்.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு
2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு.
3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு.

(3) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையின் பரிந்துரைக்காகப் பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்ட கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1979).
2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1979).
3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1979).

[மேலவைத் தலைவர்] [1979 ஏப்ரல் 25

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம் மேலவையின் ஆய்விற்காக, பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பள வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

3. கவன ஈர்ப்பு.

(1) கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய வங்கியின் செயலாளர்மீது ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருந்தும், நடவடிக்கை எடுக்காதது குறித்து.

புலவர் புலமைப்பித்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

“கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய வங்கியில் மேற்படி வங்கிச் செயலாளர்மீது ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருந்தும் அரசு இது காறும் நடவடிக்கை எடுக்காதது பற்றி கோவை மாவட்ட கூட்டுறவாளர்கள் மத்தியிலும், வங்கி ஊழியர்கள் மத்தியிலும் அரசின்பால் ஏற்பட்டுள்ள கவலையையும், கொந்தளிப்பையும் குறித்து”.

மாண்புமிகு திரு. கே. ஏ. கே. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

புலவர் புலமைப்பித்தன்: தலைவரவர்களே, நான் கடந்த ஆண்டு இதே செயலாளர்மீது ஒரு சில ஆதாரபூர்வமான புகைப்படங்களைக் காட்டி, நடவடிக்கை எடுக்க விரைவுபடுத்தும் வகையிலே, என்னுடைய விண்ணப்பத்தைத் தெரிவித்திருந்தேன். தொடர்ந்து, அந்தச் செயலாளர் யார், யாரையோ எல்லாம் பிடித்து, அதிகார வர்க்கத்தைக் கையிலே வைத்துக் கொண்டு, தப்பித்துக் கொள்ளும் வழிகளில் ஈடுபடுவதற்காக என்னுடைய கவலையைத் தெரிவித்திருக்கிறேன். அவர்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளினால், பல்வேறு வகையிலே அவர் பணத்தைக் கட்டியிருக்கிறார். அதிலிருந்தே அவர் செய்த குற்றங்களை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பது தெரிகிறது. அதுவே போதுமான ஆதாரம் என்பதை உணர வேண்டும்.

@ 113 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையின்பேரில் உறுப்பினருக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். சொற்பொழிவு நேற்றோடு முடிந்துவிட்டது.

புலவர் புலமைப்பித்தன்: அதிகாரிகள் அந்தச் செயலாளரைப் பாதுகாக்க நினைக்கிறார்களோ என்ற அச்சம் உருவாகியிருப்பதால் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டியிருந்தது. அரசு, அப்படி ஊழல் செய்கிற அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிற முயற்சியில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இருக்கின்ற விழுமிய அரசு, தவறு செய்கின்ற எந்த அதிகாரியையும் நிச்சயமாகக் காப்பாற்ற முன் வராது. மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் வாயிலாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் முறைப்படி விசாரிக்கப்பட்டு, கடந்த 4—12—1978 அன்று குற்றப் பத்திரிக்கை தயார் செய்து, அவருடைய விளக்கத்திற்காக அளிக்கப்பட்டிருக்கிறது. அவரும் 21—12—1978 அன்று இது சம்பந்தப்பட்ட சமாதானம் சொல்வதற்காக, ரிகார்டுகளைப் பரிசீலனை செய்ய வாய்ப்பு வேண்டுமென்று கேட்ட காரணத்தாலே, அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் சமாதானம் கொடுத்த பிறகு, அதைப் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகளை, உறுதியாக தமிழக அரசு எடுக்குமென்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 4-40)

(2) அடகு வைக்கப்பட்ட நகைகளின் விற்பனைபற்றி உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் காரணமாக எழுந்துள்ள நிலைமை குறித்து.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

“அடகு வைக்கப்பட்ட நகைகளின் விற்பனைபற்றி அடகுக்கடை நிறுவனம் தொடுத்த ரிட் மனு மீது சென்னை உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் காரணமாக எழுந்துள்ள நிலைமை குறித்தும் தமிழ்நாடு அடகுக்

கடைக்காரர்கள் சட்டத்தில் ஏலம் விடுபவர் ஏல விற்பனை அறிவிப்பை ஒரு வாரத்திற்கு முன்னமேயே அனுப்ப வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அந்த அறிவிப்பு சேர்க்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை யென்ற உயர்நீதிமன்றத்தின் கருத்து குறித்தும்".

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, a statement @ is placed on the table of the House.

திரு. க. இராமமூர்த்தி: நகைகளை விற்பனை செய்வோர் விற்பனை அறிவிப்பை ஒரு வாரத்திற்கு முன்னால் அடகு வைத்திருப்பவர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டுமென்று விதிகளில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்களின் அறிக்கையில் இருக்கிறது. அடகு வைத்தவர்களுக்கு அந்த அறிவிப்பை கட்டாயம் சேர்ப்பிக்க வேண்டுமென்று அதில் இல்லை. சட்டம் எதுவாக இருந்தாலும் அடகு வைத்திருப்பவர்களை அல்லது கடன் பெற்றிருப்பவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இருந்தாலும் கூட, அரசின் நல்ல நோக்கம் இதன் காரணமாக அடிபட்டுப் போகிற நிலை இருக்கிறது. பல இடங்களில் ஏழைகள் பாதிக்கப்படுகின்ற நிலையும் நகைகள் ஏலம் போகின்ற நிலையும் இருக்கின்றன. இது குறித்து உடனடியாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அவசரச் சட்டம் கொண்டு வந்தால்தான், அந்த ஏழை மக்களைக் காப்பாற்ற முடியும். அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, while appreciating the sentiments of the hon. Member Thiru Ramamoorthi, I want to assure him that the parallel pieces of legislation will be examined in order to ensure that the notice is served on the pawner effectively and in consonance with the rules that may be framed in order to achieve the objective which has been so elaborately set out and pleaded for by the hon. Member Thiru Ramamurthi.

திரு. க. இராமமூர்த்தி: அதே தீர்ப்பிலே தாசில்தாருடைய தீர்ப்புக்கு மேல் ஆர். டி. ஓ.விடம் போக முடியாது என்கின்ற ஒரு நிலை இருப்பதாகத் தெரிகிறது. முழுத் தீர்ப்பு வந்ததற்குப் பிறகு அதன் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபடியும் அதைப் பரிசீலிப்பார்களா ?

@ 114 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு அட்வகேட். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் பெரிய படிப்பு படித்தவர்கள். இரண்டு பேருக்கும் உள்ள சொந்த சமாச்சாரமா இங்கே பேசப்படுகிறது? சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வு அறையில் நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் தமிழில் பேசிய பேச்சைக் கேட்டு சந்தோஷப்பட்டு ரசித்துக் கொண்டிருந்தோம். அவர்கள் பேசிய தமிழ் யாழ்ப்பாணத் தமிழ்போல் இருந்தது. இங்கே பேசப்படுகிற கருத்துக்கள் இரண்டு பேருக்கு மட்டும் புரிவதற்காக அல்ல. இந்த அவை யிலே உள்ள மற்றும் ஊரிலே உள்ள எல்லோருக்கும் தெரிய வேண்டிய கருத் துக்கள் இந்த அவையிலே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இரண்டு பேருக்கு மட்டும் புரிவது மாதிரி பேசுவது நியாயமில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழில் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள் கின்றேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: As the subject is exclusively of legal interest, lending itself for precise expression in English, I chose to reply in English itself.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்காக வேண்டி ஒரு ஆறுதலுக்காக 4 வார்த்தைகள் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்தை நான் மனமார ஏற்கத் தயாராக இருக்கிறேன். காரணம் என்னவென்றால் நான் முன்னமே சொன்னபடி பதிவுத் தபாலில் விற்பனை அறிவிப்பை அனுப்பித்தான் ஆக வேண்டும், சேர்வ் பண்ணித்தான் ஆக வேண்டுமென்கிற முறையைக் கையாண்டு அதை அமுல்படுத்துகிறபோது, ஆர்.டி.ஓ.-வுக்கு திரும்பவும் ஒரு அப்பீல் செய்கிற முறை இருக்க வேண்டுமா இல்லை வேண்டாமா என்பது பற்றி என்னைப் பொறுத்தவரை, சந்தேகப்படுகிறேன். அது தேவை இல்லை என்று நான் இப்பொழுது சொல்ல முடியாது. நிச்சயம் சேர்வ் பண்ணிய பிறகு அடகு வைத்தவர்கள் திரும்பத் திரும்ப அப்பீல் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை என்று நான் நினைக்கின்றேன்.

I am inclined to think there is no need after notice is served.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சரவர்கள் அழகான மணிப் பிரவாள நடையில் பேசியிருக்கிறார்கள். அது போதும்.

(4) அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1979).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த நிதி ஒதுக்க சட்டமுன் வடிவுகள் நிறைவேறியதும் தனி உறுப்பினர் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் பட இருக்கின்றன. கோயிலில் பிரம்மோத்சவத்துக்கு மறுநாள் நடக்கும் விடையாற்றி உற்சவம்போல்தான் இது. அசலாக எடுத்துப் பேச உறுப்பி னர்கள் எல்லோரும் முற்பட வேண்டாம். ஏதாவது விடுபட்டிருந்தால் மட்டும் உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கெனவே எதிர்க் கட்சித் தலைவர வர்களுடனும் மற்ற கட்சித் தலைவர்களுடனும் நான் பேசியதில் அவர்கள் அதிகமான நேரம் எடுக்க மாட்டார்கள் என்றும், பெரும்பாலும் சில பேர் பேச விரும்பவில்லையென்றும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசலாம். அவைக்கு ஒத்துழைக்கின்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கூட "நான் பேசப் போவதில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் பிரச்சினை சுலபமாக முடியும் என்று நம்புகின்றேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் பேசுவதாக இருந்தால் $\frac{3}{4}$ மணி நேரம் பேச வேண்டியிருக்கும் என்று சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நேரம் இல்லாததால் உறுப்பினர் அவர் களும் அதிக நேரம் பேச விரும்பவில்லை என்ற கருத்தில்தான் சொல்கிறார்.

@ 115-118 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN: Since we see the Hon. the Finance Minister only when he presents the Budget and only when he moves the Appropriation Bill, in my opinion, he can spend a little more time with us.

* THIRU P. YELLAMANDA: Hon. Chairman, Sir, I am very glad that I have been given an opportunity to participate in the discussion on the Appropriation Bill. As suggested by our Hon. Finance Minister, I do not want to take much time of the House. But within the time-limit allowed, I want to devote my speech exclusively to the problems of Harijans, because the demand on Harijan Welfare has not come up before this House, and I have to speak about it only on the Budget and on the Appropriation Bill.

(மாற்றுத் தலைவர் திரு. ச. எஸ். வெங்கடேசன் தலைமை)

I think this is the opportunity for me to put forth the grievances of this community.

Sir, it is very clear from the performance Budgets and other demands that although there is a substantial increase in the budget amount to about 849 crores of rupees, the Government have allocated a very meagre amount for the Harijan Welfare Department to the extent of Rs. 19.40 crores. On the other hand, the D.M.K. Government, for the year 1975-76, had allocated Rs. 19.82 crores out of a total budget of Rs. 566 crores. This shows that the Harijan Welfare Department has a very meagre allocation to redress the grievances of the Harijans. With that amount, it is very difficult to redress the grievances of this

(பிற்பகல் 4-50)

community. Anyway, I request the Hon. the Minister for Harijan Welfare, who is now here, to fight with the Hon. the Finance Minister and get some more funds for the welfare of these socially disabled persons who have been oppressed and suppressed for decades together. Even after 30 years of Independence, the Harijans are living in a segregated way and are treated as untouchables. The stigma of untouchability is attached to them in society. To remove this disability and to bring the Harijans on a par with the other sections of society, substantial allocations of funds should be made to the Harijans Welfare Department.

I would now refer to the provisions made in the Constitution of India for extending certain concessions for the overall development of the Scheduled Castes and Scheduled Tribes. A separate Chapter, namely, Chapter XVI of the Constitution deals with this subject. Article 338 of the Constitution very clearly provides for the appointment of a separate Special Officer to go into the status of Harijans and present his report to the Government. Article 335 of the Constitution very clearly states that in the matter of educational facilities and job opportunities, certain concessions should be given to these socially disabled persons. Article 332 of the Constitution clearly provides for the reservation of seats in the Assembly for this community. Thus, the Constitution of India, both in the Directive Principles of State Policy as well as in Chapter XVI, states that each and every State Government should give special attention to the development of Scheduled Castes. But while replying to the discussion on the Policy Note on Industries on 24th April 1979 the Hon. the Chief Minister said, "To-day, the Government is constructing houses for the Harijans; there are a number of poor people in other communities and after seeing these houses for Harijans, they may also agitate for such houses". Of course, it is a fact. I too agree with our Hon. the Chief Minister that there are a number of poor people in other communities also. They too deserve every encouragement from the Government. But, to-day, the economically weak people are suffering only in one aspect, whereas the Harijans are suffering both from poverty and from the stigma of untouchability attached to them. It is only because of the existence of the stigma of untouchability that the Constitution has safeguarded the interests of these people and has given certain rights for the development of this community. After some time, after at least 50 per cent of improvement is attained by this community, these concessions may be dropped. But, to mix the problems of Harijans with those of other communities is not at all conducive to their welfare. Responsible persons like the Hon. the Chief Minister should not say that if houses are given to Harijans, the people belonging to other communities would give trouble. It means that the Hon. the Chief Minister is inciting the other people to rebel against the Harijans. To-day, the Harijans are treated as segregated people, untouchables and Chandalas and they are living on the outskirts of villages. That is the fate of Harijans. At a time when man is reaching the moon, the Harijans are

living in an awful condition. They are not allowed to take water from the public wells and they are not even allowed to take dead bodies through the Caste Hindus' places. When such is their fate, we must encourage these people. No doubt, we must improve the lot of the other poor people also. But, all the Governments should retain the concessions given to the Harijans till a time that community attains at least 50 per cent of improvement. Otherwise, the fate of the Harijans will be sealed for ever. Anyhow I am requesting the Hon. the Chief Minister not to issue such statements which will incite the other caste people to rebel against the Harijans. Our Hon. Chief Minister has created a problem regarding the Harijan Welfare Department. By his statement, he has questioned the validity of the Constitution, the Directive Principles of State Policy. My point is that these people are suffering from social disability also. For example, there may be a poor person in Brahmin community; he can walk in the street and he can go anywhere into the Caste Hindu's house; but it is not the case with a Harijan. I am requesting this Government to take special care for the development of Harijans and such a statement should not be made hereafter, as it will not be proper for responsible Ministers and Leaders to issue statements like that.

Now, I want to say another thing about the atrocities on Harijans. When we compare the atrocities on Harijans in various States during the past 30 years since Independence, in most of the States like Uttar Pradesh, Madhya Pradesh, Andhra Pradesh, the atrocities on Harijans are many. During the leadership of Kalaignar in the regime of the D.M.K., the atrocities on Harijans were very much less compared to those in other States. I had an opportunity to go through the Scheduled Castes Commission's Report which mentioned about it. But to-day under the regime of A.I.A.D.M.K. Government, the atrocities on Harijans are more and more. One Thiru Sithan, a Harijan was put to death. The reason attributed is that these Harijans went to remove a road block in the road leading to the burial ground. There the Hindus and Harijans clashed and this Sithan was put to death mercilessly and two more people were seriously injured. Another atrocity is that in Naduppattu village, Krishnaveni, a Harijan girl committed suicide. There was the clash at Villupuram resulting in loss of lives and burning of huts of Harijans. There is the brutal murder of Muru-

gaiyan. These are the features of A.I.A.D.M.K. rule in Tamil Nadu. Atrocity after atrocity, instance after instance, humiliation after humiliation are going on in the A.I.A.D.M.K. rule. It is high time on the part of the Government to analyse and find out the causes and to devise ways and means to overthrow such disabilities. When such is the situation, our Hon. Chief Minister has stated on the floor of this House that if we give houses to Harijans, the other people will rebel against the Government. It means there will be no end to the problem of Harijans.

(பிற்பகல் 5-00)

For encouraging inter-caste marriages, Government have now come forward with a scheme for granting a loan of Rs. 5,000 to such couples. When this was mentioned in the Assembly, cutting across Party lines, an AIADMK Member, Thiru Dhanushkodi said that this scheme was only on paper. That shows the performance of the AIADMK Government in the field of uplift of Harijans. I am an M.L.C. belonging to the D.M.K. Party. If I say anything, they may say that the D.M.K. people are saying such things wantonly, that the D.M.K. people are criticising Thiru M.G.R. wantonly and that Yellamanda would always praise only Kalaignar whenever he gets an opportunity. But, here is a ruling Party Member who said that the scheme of loans to inter-caste marriage couples was only on paper. That shows the performance of the A.I.A.D.M.K. Government.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Thiru P. YELLAMANDA: To achieves their goal, leaders like Dr. Ambedkar, Gandhiji and Periyar waged a war against these atrocities and they dedicated their lives for the sake of these people. The AIADMK Government is, no doubt, doing some service in the field of economic concessions like construction of houses, grant of loan facilities, scholarships, etc. The grant of mere economic concessions is not the be-all and end-all of all problems. The provision of employment opportunities and extension of concessions on the political, social and educational aspects would ensure the full growth, development and prosperity of this community. So far, the AIADMK Government have been giving concessions, perhaps, only on the economic side. In the

other spheres, they have done nothing spectacular, new and concrete, whereas the DMK Government, under the leadership of Kalaignar, did a lot for the Harijans. I will give a few examples of the measures taken by the DMK Government. The main features of the economic measures are the construction of houses for Harijans, the setting up of the Slum Clearance Board and the grant of scholarships, etc. On the political side, the main features are the giving of representation both in the Assembly and in the Council, enhancement of reservations from 16 per cent to 18 per cent in the case of Harijans and from 25 per cent to 31 per cent in the case of Backward Classes, inclusion of Muslims in the list of Backward Classes, bringing about Temple-entry system, etc. The DMK Government, under the leadership of Kalaignar, showed the way for the overall development of Harijans whereas the other Governments touched only the economic side of the problem. Though economic measures are also important for development of Harijans, social equality is more important than anything else for the welfare of Harijans. Even with education and some status I will be treated only as a Harijan. Even with his portfolio of Harijan Welfare, our Hon. Thiru Soundarapandian will be treated only as Harijan Welfare Minister. That stigma is always there. To remove that stigma, we have to work fast. Particularly, the higher castes should come forward and they must change their hearts. For the uplift of scavengers who are in the lowest rung of the communal ladder, the D.M.K. tried its level best to do something. For example, during the 15 years of Congress rule, the scavengers were getting a salary of only Rs. 100 per month. But, during the time of the D.M.K. Government, under the leadership of Kalaignar, it increased more than three times and came to about Rs. 390.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): பல உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

THIRU P. YELLAMANDA: The scheme for the grant of Rs. 10,000 is nothing but a boon to the scavengers.

It is said that the administration should not be interfered with. But the humanitarian aspect of the question is always there. The Report of the Working Group of the Scheduled Castes Commis-

sion very clearly states that in the matter of admissions to educational institutions the rules and regulations should not be rigidly applied to the children of scavengers. During the regime of Kalaignar, I brought to his notice the case of a scavenger-boy for admission into the M.B.B.S. course. That boy passed examination only in the third attempt and he secured only very ordinary marks. Because of that, his application was rejected by the authorities of Government. As a representative of this community, I approched Kalaignar. When I represented the matter to him, he said, " This boy is a more meritorious boy than all the other boys because he has passed the examination despite so many hurdles. Being in the midst of gamblers and having drunkards before him he has passed the examination at least in the third attempt. A boy who enjoys all the luxuries of life and passes the examination with distinction should not be compared with this Harijan boy. I am interfering in the administration and I say that this scavenger-boy should be given admission. That he passed the examination in the third or fourth attempt is immaterial because he is the son of a man who is doing an essential service to society." On that ground, that boy was given admission. That may not be correct according to the rules of selection, but on humanitarian grounds it has to be done. If a boy without any facility gets his education up to P.U.C., it is the duty of the Government to encourage that boy. Without insisting on being sponsored by Employment Exchanges and without following other rigid rules or regulations, these scavenger-boys should be given employment opportunities. These boys were born and bred in Tamil Nadu and they are here only. Though by birth they may be Telugu people they are no more Telugu people. For decades together they have been doing an esstntial service to society. During the period of Kalaignar, they were given good opportunities and we had doctors, engineers and clerks from this community. My community is really indebted to Kalaignar because, overthrowing all those rules, he gave an M.B.B.S. seat in Stanley Medical College for a scavenger-boy. The Hon. the Finance Minister who is a good Parliamentarian knows the problems of Harijans. I appreciate him because he did a monumental thing. When I approached him in connection with a loan application, he immediately spoke to the Bank Officers and sanctioned loan for house-site pattas.

Of course, with a lot of experience in Parliament, our Hon. nance Minister knows the problems of Harijans and I hope would allocate more funds. Our Chief Minister's statement is lly regrettable, and I feel sorry for such statement coming m such a responsible person like Chief Minister. It is high ne on the part of the Government to do something for the velopment of this community. If the A.I.A.D.M.K. Governnt neglect this community, under some pretext or another, re will only be a blood revolution. With these words, I am ncluding my speech. Thank you.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு மேலவை மாற்றுத் லைவர் அவர்களே, இன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் வர்கள் சொன்ன அறிவிப்புகளை இங்கே மேலவையிலும் மசோதாவாகக் ண்டு வந்து அறிவிக்க இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

மாலையில் மேலவைக் கூட்டத்திற்காக இங்கே வரும்போது இங்கே ருக்கும் சிப்பந்திகள் அனைவரும் மிகவும் குதூகலமாக இருந்ததைப் பார்த் ன். காரணம் 1 மாதத்தில் அல்லது 2 மாதத்தில் அல்லது 3 மாதத்தில் ணியிலிருந்து ஓய்வு பெற்றுப் போய்விடுவோம் என்று இருந்தவர்களெல்லாம் வு பெறும் வயது நீட்டிக்கப்பட்டதன் காரணமாக மிகவும் ஆனந்தமாக ருக்கிறார்கள். "புண்ணியவான் நிதியமைச்சர் அவர்கள் இதைச் செய் ரே, இது எவ்வளவு பெரிய காரியம்" என்று என்னிடத்தில் சொன்னார்கள். ந்தச் செய்தி எனக்கும் சந்தோஷத்தைத் தந்தது. அதைப் போலவே ம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களுக்கும் திடீரென்று ஒரு யோகம் அடித்திருக்கிறது. னாவது அவர்கள் ரெயிலில் பயணம் செய்யும்போது, தங்களுடன் யாரை ண்டுமானாலும் அழைத்துக் கொண்டு செல்லலாம் என்று சொல்லியிருக்கி ர்கள். நான் அப்போது சபையில் இல்லை. என்றாலும், மாண்புமிகு நிதி மைச்சர் அவர்கள் அவ்வாறு பேரவையில் அறிவித்ததாகச் சொன்னார்கள். னாவது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடன் யாரை வேண்டுமானாலும் ணைக்கு, உதவிக்கு அழைத்துச் செல்லலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ப்படி சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடன் யாரை வேண்டுமானாலும் ழைத்துப் போகலாம் என்றால், மிகவும் மரியாதையாக அவர்களும் நடந்து ள்வதுதான் நன்றாக இருக்கும். சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடன் ணைக்கு யாரையாவது அழைத்துச் செல்லலாம் என்றால், அதனால் மிகவும் தோஷம் ஏற்படுகிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் இதை மிக நீண்ட ங்களாகக் கேட்டுக்கொண்டு வந்தார்கள். நான் என்ன சொல்ல விரும்பு றேன் என்றால். தற்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுக்கு ரூபாய் 2,000 மதிப்பிற்கான ரெயில் கூப்பன்தான் கொடுக்கிறார்கள். இந்த

ரூபாய் 2,000 பெறுமானமுள்ள ரெயில் கூப்பனில் அவர்கள் தங்களோடு ஒரு துணையையும் அழைத்துப் போக வேண்டுமென்றால், இன்னும் கொஞ்சம் அதிகமான தொகைக்கு ரெயில் கூப்பன் வழங்கப்பட வேண்டும். குறைந்தது இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய் அளவுக்கு மதிப்புள்ள ரெயில் கூப்பனாவது வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் வசதியாக இருக்கும். எனக்குக் கொடுத்திருக்கிற ரெயில் கூப்பன் இப்போதே சரியாகப் போய்விட்டது. இந்த முறை நான் பஸ்ஸில் தான் பயணம் செய்தாக வேண்டும். எனவே அரசாங்கம் இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ரெயில் கூப்பனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குத் துணையாக முறையானவர்களைத்தான் கூப்பிட்டுக்கொண்டு போக வேண்டும் என்ற வார்த்தையையும் சேர்க்க வேண்டும். அப்படி நடந்து கொள்ளச் சொல்லுவதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன். மற்றவர்கள் எண்ணம் எப்படியோ எனக்குத் தெரியாது.

(பிற்பகல் 5-10)

அதிகமான சம்பளத்தைக் கொடுத்திருப்பதால், எல்லோருக்கும் சந்தோஷம். ஆனால் இங்கு வேலை செய்யக்கூடிய சிப்பந்திகள், இரவு நேரங்களில், சபை நடக்கிற வரையிலும் வேலை பார்க்கிறார்கள். பகல் நேரங்களிலும் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒன்றரை ரூபாய், இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நமக்கெல்லாம் அதிகப்படுத்திவிட்டு அவர்களுக்குக் குறைவாகக் கொடுத்தால், அவர்கள் சுரம் குறைந்துவிடும். ஆகவே அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய தொகையை 5 ரூபாயாகக் கொடுத்தால் அவர்களும் சந்தோஷப்படுவார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு பல காரியங்களைச் செய்கிறார்கள். விவசாயிகளுடைய விஷயத்திலும் அவர்கள் தலையிட வேண்டும். விவசாயிகளுடைய பிரச்சினையை சிலர் அதிகப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறார்கள். அப்படி அதிகப்படுவதால் சிலர் வருத்தப்படுகிறார்கள். இந்த இரண்டுக்கும் மத்தியிலே அரசே நேரிடையாகத் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது நம்முடைய நோக்கம் என்னவென்றால், ஏற்கெனவே புயல் காலத்திலே ஏற்பட்ட நஷ்டங்களுக்காக உதவ வேண்டும் என்பது. ஆனால் இப்போது நல்ல காரியங்கள் ஒன்றும் நடக்கவில்லை. கணக்கு எடுக்கச் சொன்னார்கள். எல்லாம் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் ஒரு காரியமும் நடக்கவில்லை. ஆகவே இந்த மாதிரியான காரியங்களை விரைவிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரிசனங்களுக்கு நன்மை செய்ய வேண்டாமென்று யாரும் சொல்லமாட்டார்கள். அப்படி ஓரிருவர் சொல்லியிருந்தால் வெறுப்பிலே சொல்லியிருப்பார்கள். அரிசனங்களிலே மூன்று, நான்கு பிரிவுகளாக இருந்து கொண்டு அதிகத் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். ஆகவே, இது மாதிரி இல்லாமல் அவர்களை வழிப்படுத்தினால் இன்னும் நலமாக இருக்கும். இந்த விஷயத்திலே காந்தியையும், அம்பேத்காரையும் இழுத்துப் பேசுவதில் பிரயோசனம் இல்லை. அவர்கள் எல்லாம் அதிமேதைகள். சொல்ல வேண்டியதையெல்லாம் அவர்கள் சொல்லிவிட்டுப் போனார்கள். அவர்கள் சொன்னதையெல்லாம் நிறைவேற்றுவதற்காகத்தான் நாம் இருக்கிறோம். ஆகவே, அவர்கள் சொன்ன காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு அமைச்சரவையில் உள்ள எல்லோரும் நல்ல முறையிலே சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் நல்ல முறையிலே நடந்துகொள்ளுகிறார்கள் என்பது எங்களுக்கு சந்தோஷத்தை உண்டாக்குகிறது. ஆனால், அவர்களிடம் சொன்ன காரியங்கள் நடக்கவில்லையென்று சொல்லும்போதுதான் வருத்தமாக இருக்கிறது. நான் ஒரு சமாசாரத்தைச் சொன்னேன். அதை அமைச்சர் அம்மையார் அவர்கள் குறித்துக் கொண்டார்கள். அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள், அதை அவர் செய்வார் என்று ஒரு நாள் அமைச்சர் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இப்போதும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எழுந்து போய்விட்டார்கள். முன்பு போல இப்போதும் அம்மையார் அவர்கள் குறித்துக்கொள்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு லாரி லாரியாகக் கடிதங்கள் வருகின்றன. நான் பேசுவதைக் குறித்து வைக்கின்ற காகிதங்களும் அதோடு சேர்ந்து போச்சோ என்னவோ தெரியவில்லை. நான் சொல்லுவதில் நியாயம் இருந்தால், அதைக் குறித்து அமைச்சர் அவர்கள் சிந்தனை பண்ண வேண்டும், தவறு இருந்தால் அதைத் தள்ளிவிடலாம்.

கண்மாய்களில் கடல்நீர் பாய்ந்து, வயலிலும் நீர் பாய்ந்தது. அதனால் வயலில் மணல் மேடிட்டது. இதை எடுக்க வேண்டுமென்று சொன்னால், வயலில் உள்ள மண்ணை எடுத்து கண்மாயிலும், கண்மாயிலுள்ள மண்ணை எடுத்து வயலிலும் போடுகிறார்கள். இரண்டு இடத்திலும் உப்பு மண் இருக்கின்றது. இரண்டு உப்பு மண்களும் சேர்ந்தால், நல்ல மண் ஆகிவிடுமா? எங்கள் பகுதி ரொம்பவும் பின்தங்கிய பகுதி. முதலமைச்சர் அவர்கள் கூட நேரிலே வந்து பார்த்தார்கள். ரொம்ப வருத்தப்பட்டார்கள். அவர்

வருத்தப்படுவதாலே மட்டும் எங்களுக்குப் பயன் என்ன? ஒன்றுமில்லை. பரிகாரத்தை உடனடியாகச் செய்ய வேண்டும். ஆர். எஸ். மங்கலத்திலே மதகுகள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டோம். அங்கே வெள்ளம் வரும் போது, நீர் நிரம்பி பயிர்கள் அழிந்து போகின்றன. ஆகவே அதைச் செய்ய வேண்டியது அவசரம் என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். கலெக்டர்கூட சிபார்சு செய்திருக்கிறார்கள். இரக்கமுடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கும்போதே, இதைச் செய்யவில்லையென்றால், ஏழைகளுக்குப் பலன் கிடைக்காமலே போகும். அமைச்சர் அவர்களிடம் சொல்லி அவர்கள் செய்ய வில்லையென்றால், நாங்கள் பிறகு ஆண்டவனிடம்தான் சொல்லவேண்டும். ஆனால் நாங்கள் செத்த பிறகுதான் அங்கே போக முடியும்.

மாற்றுத் தலைவர் (திரு. ச. எஸ். வெங்கடேசன்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து சிக்கிரம் முடித்துவிட வேண்டும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : கண்மாயிலும் தண்ணீர், வயலிலும் தண்ணீர். இரண்டு இடங்களிலும் மண் இருக்கின்றது. இவைகளைச் சரி செய்ய எவ்வளவு ஆகுமென்று விவசாயத் துறையினைக் கூப்பிட்டுக் கேட்டார்கள். ஏக்கருக்கு 5,000 ரூபாய் ஆகுமென்று சொன்னார்கள். இதைப்போல 9,000 ஏக்கர்களில் தண்ணீர் பாய்ந்திருக்கிறது. ஆகவே கலெக்டர் அவர்கள் எப்படியென்று பார்த்து, ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். இந்த மண்ணையெல்லாம் எடுத்து எங்கே கொட்டுவது? சமுத்திரத்திலே கொட்டலாம் என்றாலும், ஒரு மைல் தொலைவில் சமுத்திரம் இருக்கிறது. ஆகவே இது முடியுமா? அதற்கு எவ்வளவு செலவாகும்? நாங்கள் எல்லாம் இந்த அரசைத்தானே நம்பியிருக்கிறோம். ஆகவே இதற்கெல்லாம் ஒரு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மீனவர்களுக்குப் புகலிடம் கட்டுவதற்காக கணக்குகளை எடுக்கச் சொல்லி அதிகாரிகளை அனுப்பினார்கள். அவர்கள் தொண்டியிலும், உப்பூர் என்ற இடத்திலும் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட திருப்பாலக்குடி என்ற ஊருக்கு நேரிலே வந்து பார்த்தார்கள். அங்கே மீனவர்களுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்தை அவர்கள் தேர்ந்தெடுக்கவில்லை. வருகிற அதிகாரிகளாவது எங்களை ஒரு வார்த்தை கேட்டிருந்தால், நாங்கள் சொல்லியிருக்க முடியும். ஆனால் அவர்கள் எங்களைப் போன்றவர்களைக் கேட்காமல், அங்கே போனவர்களையும், வந்தவர்களையும் விசாரித்துவிட்டு ஏதோ எழுதியிருக்கிறார்கள். இதனால் எங்களுக்குத்தான் கெட்ட பெயர் வருகிறது. நாங்கள்

சரியாக இங்கே எடுத்துச் சொல்லவில்லையென்று மக்கள் நினைக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் வந்து பார்த்த ஊர் மிக முக்கியமான ஊர். அந்த ஊரிலே வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். நாங்கள் 10 இடங்களில் கேட்டால் இவர்கள் இரண்டு இடங்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஒன்றும்

(பிற்பகல் 5-20)

செய்யவில்லை. பண்ணுகிறோம் பண்ணுகிறோம் என்று சொல்கிறார்கள் ஒன்றும் செய்யவில்லை. ஏழை மக்கள் என்ன செய்யப்போகிறார்கள்? அரசாங்கமாகப் பார்த்துச் செய்த பின்னர்தான், அதெல்லாம் செய்ததாகக் கருத முடியும். எல்லாவற்றையும் அரசே பார்த்து விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கும் மேலே அதிகமான நேரம் பேசி நான் என்ன செய்யப்போகிறேன்? நான் செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று இப்படியே சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஒரு செட்டியார் வீட்டிலே விசேஷத்திற்குப் போனால் அங்கே நூறு பேர்கள் நின்றுகொண்டிருப்பார்கள். அவர்கள் அந்த நூறு பேர்களையும், ஒரே நேரத்தில், வாங்க, வாங்க என்று அழைத்துக்கொண்டிருப்பார்கள். அது மாதிரிச் சொல்வதற்கு நான் பெருமைப்படுகிறேன். எப்படியோ எங்களுக்குக் காரியம் நடக்க வேண்டும். அமைச்சர் என்ற முறையிலே கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த அளவிலே நாங்கள் கண்டிப்பதில்லை. மாண்புமிகு அமைச்சர் அம்மையார் அவர்களும் சொன்னார்கள். அந்தக் காரியம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. அதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் சொல்வது அவர்களுக்கு ஒன்றும் புரியாதது அல்ல. கபடமான முறையிலே நான் இங்கே பேசவில்லை. உண்மையைத்தான் நான் பேசுகிறேன். தாங்கள் கோரியிருக்கின்ற காரியங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவிலே சில கருத்துக்களை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இன்று தொழில் வளர்ச்சிப் பிரச்சினையிலே தமிழக அரசு உருவாக்கியிருக்கின்ற தொழில் கொள்கையிலே ஒரு அம்சம் மிகுந்த கவலை அளிப்பதனால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே போதிய அளவுக்கு தொழில் வளர்ச்சி ஏற்படாததற்குக் காரணம் என்ன என்று நேற்றுக்கூட பேசும்போது, பலர் பல காரணங்களைச் சொன்னார்கள். தொழில் வளர்ச்சி

யில் கடந்த 14, 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வேகம் இப்போது நாம் விரும்புகின்ற அளவுக்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து எல்லாவற்றையும் சுருக்கிச் சுருக்கி 'இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்'-லே கோளாறு இருப்பதால்தான் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்ற எண்ணத்தை தமிழ் நாட்டு மக்கள் உருவாக்கு கிறார்கள். அது சரியல்ல என்பதை எடுத்துச் சொல்கின்ற வகையிலே இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். குறிப்பாக வேலை நிறுத்தம் நடைபெறுவதன் காரணமாக, தொழில்களில் இன்வெஸ்ட்மெண்ட் பண்ணு வதற்கான கிளைமேட் இல்லாத நிலைமைகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் பலர் மூலதனம் போடத் தயாராக இல்லை, அதனாலே வளர்ச்சி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மாதிரி வேலை நிறுத்தம் நடைபெறா மல் இருப்பதால் மட்டுமே தொழில் வளர்ச்சி ஏற்படும், உண்மையான தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு சரியான நிலையை ஏற்படுத்தும் என்பது சரியல்ல என்பதை, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அரசுக்குச் சமர்ப்பிக் கின்றேன்.

தொழில் வளர்ச்சியிலே மூலதனச் சேர்க்கை என்ற பிரச்சினை இருக் கிறது. ஏற்கெனவே இருக்கின்ற தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகின்ற பொருள்களை வாங்குவதற்கு பொதுமக்களிடம் போதிய வாங்கும் சக்தி இருக்கின்றதா என்ற பிரச்சினையும் இருக்கின்றது. ஏற்கெனவே உற்பத்தி யாகின்ற பொருள்களை தமிழ் நாட்டு மக்களுக்கு வாங்குகின்ற சக்தியிருந் தால், அந்தப் பொருள்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் சுமை இல்லை. இப்போதுகூட சொல்கிறோம். கைத்தறியைப் பற்றிப் பேசும்போது, அதை ஊக்குவிக்க வேண்டுமென்று பேசுகின்றோம். இங்கே கைத்தறித் துணிகள் உற்பத்தியாகின்றன. தமிழ் நாட்டிலே உற்பத்தியாகின்ற துணிகள் தமிழ் நாட்டில் விற்பனையாகின்றன. அத்துடன் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படு கின்றன. தரமான கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்காக வெளி நாடுகளில் நிலவரங்கள் எப்படி இருக்கின்றன, எவ்வளவு தேவை என்பதை யெல்லாம் கண்டறிவதற்காக அங்கேயே போய் வந்து கொண்டிருக்கின்றோம். அங்கே அவற்றை எவ்வளவு விற்க முடியுமோ அந்த அளவுக்கு விற்க முயற்சி செய்கிறோம். அந்த மாதிரி நிலைமைகள் இருக்கின்றன. அப்படியிருந்தும் கைத்தறித் துணிகள் விற்கும் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை. அப்படி யானால் தொழில் வளர்ச்சிக்கு நிதி வழங்குகின்ற மக்கள் இல்லை என்ற பிரச்சினையும் இங்கே இருக்கின்றது. அது ஒரு பிரச்சினை அல்லவா? மூலதனச் சேர்க்கைக்கு ஒரு செழுமை இருக்க வேண்டும். அந்த அடிப்படை யிலேதான் நாட்டிலே இருக்கின்ற சர்ப்ளசை மூலதனமாகச் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி மூலதனச் செலவு செய்ய தமிழ் நாட்டிலே வசதி இருக்கிறதா? அது இல்லை. மக்களுடைய வாங்கும் சக்தி போதிய அளவில் இல்லை. நம்முடைய கைத்தறித் துணிகளை எக்ஸ்போர்ட் செய்துதான் விற்பனை செய்ய முடியும் என்ற நம்பிக்கையில்தான் இருக்கிறது. பண வீக்கம் இருக்கிறது என்றும் பேசுகிறோம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

விலைவாசி உயர்வு இருக்கிறது என்றும் பேசுகிறோம். கடைசியாகத் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு மூலதனம் தேவை, தொழில் நுட்பம் தேவை. மொத்தத்தில் மூலதனம் என்பது வேறு. தொழில் நுட்பம் என்பது வேறு. வளர்ச்சி அடைந்த நாடுகளிலே, சோஷலிச நாடுகளிலே தொழில் எப்படி இருக்கின்றது? நம்முடைய இந்தியப் பேரரசு பொருளாதாரத் துறையிலே எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இந்த விஷயத்தில் தமிழ் நாட்டு மக்களுடைய கவனத்தைத் திருப்புவதற்காக இப் படிச் சொல்கின்றார்கள். "வேலை நிறுத்தம் ஒன்றுதான் இதிலுள்ள பிரச் சினை. அதுதான் தொழில் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கிறது" என்று சொல் கிறார்கள். நம்முடைய துணைத் தலைவர் அவர்களும், மதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் உட்பட, நம் முதலமைச்சர் உட்பட எல்லோரும் தொழில்வளர்ச்சி ஏற்படாததற்குக் காரணம் இதுதான் என்று கூறினார்கள். தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இதுதான் தடையாக இருக்கிறது என்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்த ஒன்றும் காரணம் என்றுதான் கூறினோம். இது ஒன்றேதான் காரணம் என்று கூறவில்லை.

திரு. ஆ. நல்லசிவன்: அது ஒன்றுதான் காரணம் என்று நேற்று பேசி யிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது அப்படிக் கூறினார்கள். "நாங்கள் வந்த காலத்திலேயிருந்து ஸ்டிரைக் இல்லாத நாளே கிடையாது. இப்போதுதான் கொஞ்சம் ஸ்டிரைக் ஓய்ந்திருக்கிறது. அதனால்தான் தனியார்கள் முதலீடு செய்ய முன்வருகிறார்கள்" என்று சொன்னார்கள். ஸ்டிரைக் பற்றி உங்களுடைய கண்ணோட்டமே அதுதான் என்றால், நான் இன்னொன்று கேட்கிறேன். ஒரு சமுதாயத்தினுடைய, நாட்டினுடைய வளத்தை மதிப்பிடும்போது, உற்பத்தியை மட்டும் பார்ப்ப தில்லை. வருமானத்தையும் பொறுத்துத்தான் சொல்ல முடியும். உற்பத்தி யாகின்ற பொருள்கள் எப்படி பணமாகின்றது என்பதைப் பொறுத்துத்தான் மக்களுடைய வளத்தைத் தீர்மானிக்க முடியும்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 25

இங்கே ஸ்ட்ரைக் பற்றிப் பேசுகின்றார்கள். சமூக நீதியைப்பற்றிப், பேசப் படுகிறது. தொழிலாளர்களுக்கு உரிமை வேண்டுமென்று விரும்புகிறோம். தொழிலாளர்களுக்கு உரிமை வேண்டும், சமூக நீதி வேண்டும். அதற்கு தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் பண்ணுகிறார்கள். அவர்கள் ரெகுலேட்டட் ஸ்ட்ரைக் பண்ணுகிறார்கள். அவர்களை அப்செஸ் பண்ணுகிறார்கள். அப் படிப்பட்ட ஸ்ட்ரைக் செய்வது முட்டத்தனமானது என்று தமிழக மக்கள் நினைக்கவேண்டிய அளவுக்குப் பேசியிருக்கிறார்கள். இதைப்பற்றி யோசனை பண்ண வேண்டும். ஸ்ட்ரைக் பண்ணுவதை மட்டும் குறிப்பாகக் கண்டிப்பது சரியா என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ட்ரைக்கைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்கிறேன். இந்த வர்க்க உரிமையைத் தடுத்து நிறுத்த முடியாது. 3 மாதங்கள், 4 மாதங்கள் மட்டும் அரசு தடுத்திருப்பதாக நினைத்தால், அது அரசுக்கு ஏமாற்றத்தைத்தான் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு அறிவித்த அறிவிப்பு களால் அல்ல, இந்த ஸ்ட்ரைக்குகள் குறைந்திருப்பது. ஸ்ட்ரைக்குகள் வந்த தற்குக் காரணம் அரசின் கொள்கைகள்தான். அதற்கு முன் 1978 ஜனவரி வரையில் அவர்கள் அடக்கப்பட்டிருந்த காரணத்தால்தான் இந்த நிலைமை கள் வந்தன. 1977-78-ல் இந்நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம், இடைக் காலத்தில் அந்தத் தொழிலாளர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த தொல்லை கள்தான். வர்க்க சமூகத்தை அரசு அடக்கவே முடியாது. பாதையில் ஒரு பெரிய பாறாங்கல் இருக்கிறது என்றால், அதன் மேல் ஏறி நின்று பார்த்தால் எவ்வளவு தூரத்தில் இருக்கிறோம் என்பது தெரியும். அதுபோல, தொழி லாளர்கள் அவர்கள் பிரச்சினைக்காக ஸ்ட்ரைக்கில் ஈடுபடுகிறார்கள். போற்கு வங்கத்தில் ஸ்ட்ரைக் என்றால் அதற்காகக் கவலைப்படுவதில்லை. ஸ்ட்ரைக் என்பது ஒரு பக்கம் நடந்துகொண்டே இருக்கும். இண்டஸ்ட்ரியல் டெவலப் மெண்டு ஏற்படுவதற்கு இன்னொரு பக்கம் ஏற்பாடு செய்துகொண்டே இருக்க லாம். ஒன்றுக்கொன்று காண்ட்ரா-வாக இருக்கும். ஒன்றுக்கொன்று போட் டியாக நடக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

அரசு சொல்ல விரும்புவதுபோல, அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை. கல்லின்மீது ஏறி நின்று பார்க்கலாம். அதாவது குன்றின்மீது ஏறி நின்று, போக வேண்டிய வழியைப் பார்க்கலாம். ஆனால் போவதற்கு முன்பு பாறையை அகற்றிவிட்டுத்தான் போவேன் என்றும் சொல்லலாம். அந்த நிலையில்தான் அரசு சொல்கிறது. தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர் கள். முதலாளி வர்க்கம் பெற்றிருக்கிற செல்வத்தில், லாபத்தில், தங்களுக்குச்

1979 ஏப்ரல் 25] [திரு. ஆ. நல்லசிவன்]

சேர வேண்டியதைப் பெற பாடுபடுகிறார்கள். அதைப் பெற போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால் அரசு அந்தப் போராட்டத்தை முடித்துவிட்டுத் தான் போகப் போகிறோமென்று சொல்லுகிறார்கள். அப்படி 'கான்வென்ட்ரேட்' செய்யாதீர்கள். அப்படிச் சொல்லாமல், தொழிலை வளர்க்க, வேறு மாநிலங்கள் முயற்சிக்கின்றன. டெக்ஸ்டைல் மில்ஸ் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்யப் போகிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் அதில் கலந்துகொள்ளப் போகிறார்கள். 150 ரூபாய் அடிப்படைச் சம்பளம், 40 பைசா பஞ்சப்படி என்று மே மாதம் 25 ஆம் தேதிக்குள் அறிவிக்காவிட்டால், ஸ்டிரைக் செய்வோமென்று எல்லோரும் சேர்ந்து நோட்டீஸ் கொடுத்திருக்கி றார்கள். 1¼ லட்சத்திற்கும் மேல் பஞ்சாலைத் தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அந்த ஸ்டிரைக்கை உங்களுக்கு எதிராகச் செய்யப் போகிறீர்களா? மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் ஒன்று சொன்னார்கள். நல்லவேளை, அவர்களே அவைக்கு வந்து விட்டார்கள். என்ன சொன்னார்கள் என்பதைச் சொல்கிறேன். தொழிலாளர்கள் 100 ரூபாய் சம்பளம் கேட்கிறார்கள், முதலாளி 50 ரூபாய் தருகிறேன் என்று சொல் கிறார், அப்போது 50 ரூபாயை வாங்கிக்கொண்டு, பாக்கி 50 ரூபாய் டிஸ்பியூட் குறித்து முடிவு செய்ய கோர்ட்டுக்கு அந்தப் பிரச்சினையை விட்டால் என்ன என்று சொன்னார்கள். தொழிற் சங்கத்தில் இல்லாதவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள். 50 ரூபாயை கையிலே வாங்கிக்கொள்ளலாம், ஸ்டிரைக் செய்ய வேண்டாம், ஸ்டிரைக் செய்தால் நஷ்டம் ஏற்படும், இதனால் நஷ்டம் ஏற்படாது, பாக்கித் தொகை குறித்து கோர்ட்டிலே முடிவெடுத்து, வாங்கிக் கொள்ளலாம் என்றால், வெளியிலே இருக்கிறவர்களுக்கு இது நியாயமாகத் தான் தோன்றும். இதுகூட முட்டாள் தொழிற்சங்க வாதிகளுக்குத் தெரிய வில்லையே என்று நினைப்பார்கள். ஆனால் இதில் இன்னொரு பிரச்சினை அடங்கியிருக்கிறது. எனக்கும் அவருக்கும் தெரியும். தமிழ்நாட்டிலே பஞ்சாலை முதலாளிகளுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு லாபம் கிடைத் திருக்கிறது. லாபம் அப்படி, இப்படி இல்லை. நம்முடைய நாட்டிலே துணியை விற்று, அல்லது நூலை விற்று லாபம் பெறவில்லை. மிடில் ஈஸ்ட் நாடுகளில் விற்று, பணம் வசூலாகியிருக்கிறது. தமிழ்நாட்டிலே பஞ்சாலைத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 55 ரூபாய். அவர்கள் 150 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வேண்டும், 40 காசு பஞ்சப்படி வேண்டுமென்று கேட்கிறார்கள். (Most opportune time for bargaining) அமைச்ச ரவர்கள் கூறுகிறார்கள்; 50 ரூபாயை வாங்கிக்கொள்ளுங்கள் என்று. பேமென்ட் ஆஃப் போனஸ் ஆக்டில், இந்தியாவிலே முதன் முதலாக ஆடிட் பேலன்ஸ் சீட்டை கொஸ்டின் பண்ணலாமென்று அரசால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் பேமெண்ட் ஆஃப் போனஸ் ஆக்டின் செக்ஷன் 23 பற்றிச் சொல்கிறார்கள். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறேன்.

If it has been certified by a Chartered Accountant, the Profit and Loss Account as certified should be presumed as correct. என்று அந்தச் சட்டத்தில் இருக்கிறது. ஆனால் ஏதாவது ஒரு குறிப்பிட்ட அயிட்டத்தை எடுத்துக்கொண்டு, இதிலே தவறு செய்திருக்கிறீர்கள் என்று தகுந்த ஆதாரத்தோடு, லேபர் கோர்ட் அல்லது ட்ரிபியூனலில் நிரூபிக்க முடியுமானால், அதைப்பற்றி இன்டிவிஜுவல் கேசாக எடுத்துக்கொண்டு, விவரங்கள் அனைத்தையும் பரிசிலனை செய்யலா மென்று இருக்கிறது. சார்ட்டட் அக்கவுன்டன்ட் கையெழுத்துப் போட்டு விட்டால், 'It shall be presumed as correct' இதுதான் இன்றுள்ள சட்டம். அவர் சொன்ன வேறொரு கருத்து பற்றியும் சொல்கிறேன். நானும் இந்த அவையின் உறுப்பினர்தான். இன்னும் 4, 5 வருடங்கள் இந்த அவையிலே இருக்கப்போகிறோம். அது மேஜர் பாலிசி. நான் சொன்னதைத்தான் அவர் சொன்னார். மாற்றிச் சொல்லவில்லை. கவனமாகச் சொன்னார். இந்த அரசின் கொள்கையாகச் சொல்கிறேன். ஏனென்றால் முக்கியமான பிரச்சினை. முதலமைச்சரவர்கள்கூட இதைப்பற்றிச் சொன்னதை நேற்றைய தினம் கவனித்திருப்பீர்கள். பேச்சு வார்த்தை நடத்துகிறோம். Negotiation மூலம் ஒரு தொகை கிடைக்கிறது. பிறகு கன்சிலியேஷன் அமைச்சர் அளவிலோ, கமிஷனர் அளவிலோ நடக்கிறது. அங்கே ஒரு தொகை கொடுக்கிறேன் என்று முதலாளிகள் சொல்லுகிறார்கள். அதைவிட அதிகமாக வேண்டு மென்று தொழிலாளர்கள் கேட்கிறார்கள். அதைக் கொடுக்கவில்லை என்றால், வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஈடுபடுகிறார்கள். மூன்று மாதம் வேலை நிறுத்தம் நடக்கிறது. அவர்கள் சம்பளம் 400 ரூபாய் என்றால், அவர்கள் 1,200 ரூபாயை இழக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு அடுத்த ஆண்டு கிடைக்கும் போனஸில் நஷ்டம் ஏற்படுகிறது. நிர்வாகத்திற்கும் இதனால் நஷ்டம். எனவே புதிய முறையை இதிலே கையாள வேண்டு மென்று அரசு கருதுகிறது. முதலாளி கொடுக்கிறேன் என்று சொன்னதைப் பெற்றுக்கொண்டு, அதற்கு செட்டில்மென்ட் போட்டுக்கொண்டு, அதற்கு மேலும் உண்டா, இல்லையா என்று லேபர் கோர்ட் அல்லது இன்டஸ்ரியல் ட்ரிபியூனலுக்குச் சென்று, let as take a chance லாபம் உண்டு என்றால் கிடைக்கும். அண்மைக் காலத்தில் சி.பி.எம். கட்சியைச் சார்ந்தவர்களே லேபர் கோர்ட்டில் நம்பிக்கை வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பாக, மதுரா கோட்ஸ் கம்பெனி

யில் 1975-76 ஆம் ஆண்டுக்கான போனஸ் வழங்குவது குறித்து கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டுமென்ற மனுவை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கொடுத்திருக்கிற காரணத்தால், தொழில் நீதி மன்றங்களை நம்ப லாம், அதிலே முயற்சி செய்யுங்கள், நஷ்டமில்லாமல் தொழிலாளர்களுக்கு லாபம் வருமென்று தெரிவித்துக்கொள்கிறேன். It is bond thinking. Please take it for what it is worth பரிசிலனை செய்யுங்கள் என்று சொன்னேன். இன்னும் பரிசிலனை செய்வீர்களென்றும் நம்புகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: நான் பேசிய ஒவ்வொரு பேச்சுக்கும் அமைச்சர வர்கள் பதில் சொல்வார்களென்றால், என்னுடைய நேரத்தினை நீட்டித்தர வேண்டும். கடைசியில் நிதி அமைச்சரவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அனுமதித்தால் தான் அமைச்சர்கள் பேசலாம்.

It depends on whether the hon. Member is yielding. If the hon. member does not want to yield, he may say "I am not yielding". Then the Hon. Minister will not intervene.

திரு. ஆ. நல்லசிவன்: கோர்ட்டிலே போய் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறும்போது, கோர்ட்டிலே என்ன நடக்குமென்பதற்கு தொழிலாளர் களுக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. அதன் காரணமாகத்தான், அவர்கள் வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்துகிறார்கள். இப்போது அரசின் சார்பில் உள்ள கொள்கையைப் பார்த்தால், வேலை நிறுத்தம் இல்லா மலே செய்து விடுவார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. வேலை நிறுத் தம் இல்லாமலேயே கொடுக்கக்கூடிய அளவிற்கு தமிழ் நாட்டு முதலாளிகள் மாறிவிட்டார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? எந்தப் பிரச்சினை யிலும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் என்ற ஆயுதம், உரிமையைப் பயன் படுத்தாமல், போராட்டம் இல்லாமல், முடித்துவிடலாம் என்றால், இந்தியா விலே சுதந்திரம் அடைவதற்கு போராட்டம் தேவைப்பட்டிருக்காது. சுரண் டப்படுகிற தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் என்பது கடைசி ஆயுதம். யார் சொன்னாலும் அதை விட மாட்டார்கள். அந்த ஆயுதத்தைப் பயன் படுத்தி, அவர்களுக்குள்ள உரிமைகளைப் பெறும்போது, அது தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குப் பாதகமாக இருக்கிறதென்று சொல்வது சரியாக இல்லை. கடந்த 5, 6 மாத வளர்ச்சிக்குப் பிறகு, தமிழக அரசின் சார்பிலே முதலமைச்சரவர்கள் கூறிய ஒரு யோசனையை ஏற்கிறேன். ஒப்பந்தம் செய் வதானாலும் சரி, வேலை நிறுத்தம் செய்வதானாலும் சரி, பெரும்பாலான

தொழிலாளர்களின் சம்மதம் பெற வேண்டும், அதற்காக ரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற அடிப்படையிலே மசோதா கொண்டுவர இருப்பதை வரவேற்கிறேன். தொழிற் சங்கத் தலைவர்களுடன் பேசும்போது, இன்னொன்றையும் பேசினார்கள். பெரும்பான்மையான தொழிற்சங்கங்கள் ஒத்துக்கொண்டால்தான் வேலை நிறுத்தம் நடத்த வேண்டும், அல்லது ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும்; அதை மீறி ஆலையை மூடுவோமென்று மேனேஜ்மென்ட் கூறினால், அப்படிப்பட்ட மேனேஜ்மென்டுகளை அரசே பொறுப்பேற்று நடத்தத் தயாராக இருக்கிறது என்று கூறினார்கள். அந்த ஷரத்துக்கள் அடங்கிய மசோதாவைக் கொண்டுவர வேண்டும். தமிழ் நாட்டிலே இருக்கிற உழைக்கும் மக்களுக்கு இருக்கும் ஒரே ஆயுதமாகிய ஸ்டிரைக் என்ற ஆயுதத்தை, சமுதாயத்திற்கு எதிரான ஆயுதமென்ற கருத்தை உருவாக்க அரசு தன் செல்வாக்கையும், அந்தஸ்தையும் பயன்படுத்தக்

(பிற்பகல் 5-40)

கூடாது. அப்படிப் பயன்படுத்தினால் எந்த அடித்தளத்திலுள்ள மக்களுக்காக நன்மை செய்கிறோம் என்று அரசு சொல்கிறதோ அவர்களுக்கே அது பாதகமாக முடியும். தொழிலாளர்களுடைய உரிமையை அங்கீகரிக்கிறோம் என்று அரசு சொல்லிவிட்டு, அதை நடைமுறைக்குக் கொண்டு வர மாட்டோம் என்று சொன்னால், அந்த உரிமைக்கு என்ன பெயர்? அதற்கு என்ன அர்த்தம்? ஸ்டிரைக் செய்பவர்கள் எல்லாம் சமூக விரோதிகள் என்று சொன்னால் ஸ்டிரைக் பண்ணுவதற்கு உரிய உரிமையை அரசு கொடுக்கவில்லை என்று தானே அர்த்தம். மெஜாரிட்டி தொழிலாளர்களுடைய அபிப்பிராயத்தின் அடிப்படையில் சட்டம் கொண்டு வரும்போது அதை முதலாளிகள் ஒப்புக் கொள்ளாவிட்டால் அரசு என்ன செய்யும்? அப்படி வரும்போது இந்த இரண்டு அவையிலும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். முதலாளிகள் அந்தச் சட்டத்தை ஏற்று அதற்கு ஒத்துப் போகாவிட்டால், அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அரசே ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். ஏற்கெனவே நெடுங்காலமாக இருக்கிற தொழிலாளர்களுடைய இந்தப் பிரச்சினையை உடனடியாக நிறைவேற்றினால் மிகவும் நல்லது. இந்த அரசுக்கும் நல்லது. அப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்வதன் மூலம் தமிழ் நாட்டிலுள்ள முற்போக்கு சக்திகள், இடதுசாரி சக்திகள் வளர வாய்ப்பு ஏற்படும். இந்தக் கருத்துக்களை இப்பொழுது இருக்கிற சட்டத்தின் மூலம் நிறைவேற்ற முடியாவிட்டால், அவசரச் சட்டம் கொண்டு வந்தாவது அதன் மூலம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படிச் செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு பரிகாரம் காண முடியும்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான பிரச்சினையான கரப்ஷன்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது தேவை என்றால், உதவி தேவை என்றால், அமைச்சர்களிடம்தான கேட்கிறார்கள். அதில் நியாயம் இருக்கிறது. அதில் என்ன தப்பு இருக்க முடியும்? அப்படி உதவி செய்வார்கள் என்று முறையிட்ட காரணத்திற்காக ஒரு சிலருக்கு ஏற்பட்ட சங்கடங்களை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். புள்ளிவிவரத் துறை இயக்குநராக பத்மாவதி அம்மையார் என்பவர் இருந்தார். அவர் டி.ஏ. வாங்கியதில் தவறு செய்தார். அதுபற்றி சட்ட மன்றத்தில்கூட பேசப்பட்டது. ஆதாரத்துடன் அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் புகார் கொடுக்கப்பட்டது. இங்கே டி.ஏ. வாங்கி விட்டு ஆந்திராவிலுள்ள காரையும் அவர் பயன்படுத்தியிருக்கிறார். அப்படிக் கொடுக்கப்பட்ட புகாரில் நியாயம் இருந்ததால், அவரை ரிட்டயராக வேண்டிய காலத்தை விட எர்லியாக ரிட்டயர் பண்ணி வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். ஆனால் அவரைத் தண்டிக்கவில்லை. ரிட்டயராகிற போது அவருக்கு கட்டாயம் தண்டனை கொடுக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. ஆனால் அந்த டிப்பார்ட்மென்டில் வேலை செய்கிற அதிகாரிகளை குறிப்பாக இன்ன அதிகாரி தவறு செய்தார் என்று புகார் கொடுத்த அதிகாரியை என்ன பாடுபடுத்துகிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஏதோ தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவருடைய டிப்பார்ட்மென்டில் தவறு செய்தவர்களைக் காட்டிக் கொடுத்ததற்காக, காட்டிக் கொடுத்தவர்களை எப்படியெப்படி எல்லாம் பழி வாங்குகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

(மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

THIRU A. NALLASIVAN : I am not yielding.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member is not yielding The Hon, Minister connot take the floor.

திரு. ஆ. நல்லசிவன் : கரப்ஷன் செய்ததை, தவறு செய்ததைச் சொன்ன ஒரே காரணத்திற்காக. காட்டிக் கொடுத்த ஒரே காரணத்திற்காகத் துணை இயக்குநராக இருந்த ஒருவர்மீது நடவடிக்கை எடுத்து, ரிவர்ஷன் செய்து, அதன் பிறகு டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவையில் உட்கார்ந்திருக்கிறார்கள். இதுகுறித்து விசாரணை நடத்தினால், இதுபற்றிய உண்மைகள் தெரிய வரும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இதில் தலையிட்டுச் சொன்னதால், இது இன்றையதினம் பெரிய விவகாரமாக மாறியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினருக்கு ஒரு வேண்டுகோள். பொதுவாக நிதி ஒதுக்க முன்வடிவின் மீது பேசும்போது உறுப்பினர்கள் 4 அல்லது 5 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்வதில்லை. உறுப்பினர் அவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 7, 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். பேச வேண்டிய கருத்துக்களைச் சுருக்கமாகக் குறைவாகப் பேசி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் பேசி முடிந்த உடன் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் விளக்கம் கொடுக்கலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : அந்தப் புள்ளிவிவரத் துணை இயக்குநர்தான் இந்தத் தகவலைக் கொடுத்திருக்க முடியும் என்கின்ற முறையில் ரூல் (7)-ன்கீழ் முதலில் ரிவர்ஷன் கொடுத்து அதற்குப் பிறகு டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். சென்னையில் அவர் மாவட்டப் புள்ளிவிவர அதிகாரியாக இருந்த நேரத்தில் பொருளாதாரப் புள்ளிவிவரம் எடுக்கப்பட்டபோது, அதில் ஏற்பட்ட சிக்கல்களை அவர் போக்கியதற்காக டிப்பார்ட்மென்டின் நன்மதிப்பைப் பெற்றவர். அமைச்சரவர்களின் தலையீட்டின் காரணமாக முதலில் அவரைக் காஞ்சிபுரத்திற்கு மாற்றினார்கள். அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் பண்ணியிருக்கிறார்கள். உடனடியாக அவர் குவார்ட்டர்சிலிருந்து காலி பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அதிகாரி என்னிடம் வந்து சொன்னபோது, நான் அமைச்சரிடம் முறையிட்டேன். அமைச்சர் அவர்கள் ஒன்றும் செய்யாமல் போனால்கூட பரவாயில்லை. அமைச்சரிடம் சொன்ன காரணத்திற்காக தர்மபுரிக்கு, ஓசூருக்கு, கிருஷ்ணகிரிக்குப் போ என்கிறார்கள். கிருஷ்ணகிரியில் இத்தனைக்கும் புள்ளிவிவர அலுவலகமே இல்லை. அவரைக் கொண்டு போய் கிருஷ்ணகிரியில் போடுகிறார்கள்.

தவறு செய்தவர்களின் பெயரை, கரப்ஷன் செய்தவரின் பெயரைச் சொன்ன ஒரே காரணத்திற்காக டிப்பார்ட்மென்ட் இரகசியங்களை ஏன் வெளியிட்டாய் என்று சொல்லி தண்டனை கொடுக்கின்ற நிலை, போக்கு இந்த ஆட்சிக்கு நல்லதுதானா? அதேபோல் இன்னொரு சீனியர் உதவியாளர். அவருக்கு 6 மாதம் இன்கிரிமென்ட் கட். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பார்லிமென்ட் உறுப்பினர் மூலம் அவர்தான் முதலமைச்சருக்குப் புகார் கொடுத்தார். தொழிலாளர் நல அமைச்சருடைய இலாகாவில் இப்படிக் காரியங்கள் நடைபெறுகின்றன.

இந்தமாதிரி தகவலைக் கொடுத்ததற்காகப் பெருந்தன்மையோடு அமைச்சரவர்கள் அவரைப் பாராட்டியிருக்க வேண்டும். அதுதான் செய்யவில்லை, அவர்களை அலைக்கழிக்காமலாவது இருந்திருக்க வேண்டும். இப்படி அவருடைய இலாகாவிலுள்ள ஒரு அதிகாரியையே அவர் அலைக்கழிக்கக்கூடிய

நிலை இருந்தால், தமிழ் நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பிலுள்ள அமைச்சரவர்கள் அந்தத் தொழிலாளர்களை எப்படியெல்லாம் அலைக்கழிப்பார்கள் என்பதை நாமெல்லாம் நன்றாக உணர முடிகிறது.

ஒரு அரசாங்க இலாகாவிலே தவறு செய்ததாகச் சந்தேகப்பட்ட ஒரு அதிகாரியைச் சுட்டிக்காட்டிய அதிகாரியைப் பழி வாங்குவது என்றால், இதைவிடக் கொடுமை, அராஜகம் வேறு ஏதாவது இருக்க முடியுமா? இந்தக் கொடுமையைப்பற்றி இந்த அவையிலே சொல்லுவதைத் தவிர, உறுப்பினர்களாகிய எங்களுக்கு வேறு வழியில்லை. சென்னையிலிருந்து அந்தப் புள்ளிவிவர அதிகாரியைப் பொறுத்தவரை, அவர்மீது கம்பிளைன்ட் பண்ணினார்கள் என்று சொல்லி அவர்மீது விஜிலென்ஸ் என்கோயரி வைத்தார்கள். அதில் அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. ஆக, கரப்ஷன் செய்த ஒரு அதிகாரியைப் பற்றிய தகவலைக் கொடுத்த ஒரே காரணத்திற்காக அந்த அதிகாரி பல வழிகளில் 'டீஸ்' பண்ணப்பட்டார். இனிமேல் எந்தக் கீழ் மட்டத்திலுள்ள அதிகாரியாவது தங்கள் மேல் அதிகாரி கரப்ஷன் அல்லது ஊழல் செய்தால், அதுபற்றிய தகவலை மேலிடத்துக்குத் தெரிவிக்க முன் வருவார்களா? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடமோ, இந்த மந்திரி சபையிலுள்ள வேறெந்த ஒரு அமைச்சரிடமோ இதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அப்படி நான் நிரூபிக்காவிட்டால், அவர்கள் கொடுக்கக்கூடிய எந்த தண்டனையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அது உண்மை தான் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால், தொழிலாளர் நல அமைச்சர் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கக் கூடிய அமைச்சருக்கு அந்தப் பதவியின் பெயர் இருக்கலாமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (As a personal explanation) பத்மாவல்லி என்பவருக்கு சார்ஜ் ஷீட் கொடுத்து; தண்டனை கொடுக்க இருக்கிறோம். ஒரு அரசாங்க அதிகாரி ரிட்டயராகி விட்டால் 4 ஆண்டுகளுக்குள்ளாக தண்டனை கொடுக்கலாம் என்று விதிகளில் இருக்கிறது. தண்டனை கொடுக்கப் போகிறோம். என்ன தண்டனை என்று இப்பொழுது சொல்ல விரும்பவில்லை.

ஒரு அரசு ஊழியரை மாற்றுகிறோம் அல்லது தண்டனை கொடுக்கிறோம் என்றால், அதிலே ஒரு எம்.எல்.ஏ. தலையிடலாமா? மேலும் அதுபற்றி ஒரு அமைச்சரிடம் வந்து முறையிடலாமா என்பதுபற்றி இந்த அவையிலுள்ள

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 25

மாண்புமிகு உறுப்பினர்களுக்கே நன்றாகத் தெரியும். அது தவறு. ஒரு அரசு ஊழியர் என்று சொன்னால் அவருக்குப் பல உரிய வழி முறைகள், சேனல்கள் இருக்கின்றன. அப்பீல் செய்வதற்கும் வழிகள் இருக்கின்றன. அவருக்கு மேல் அதிகாரி, அவருக்கு மேல் அதிகாரி, அவருக்கும் மேல் அதிகாரி என்று படிப்படியாக சானல்கள் இருக்கின்றன. அல்லது அசோஸியேஷன் இருக்கிறது. ஒரு எம்.எல்.ஏ., அல்லது எம்.எல்.சி.யைக் கூட்டி வந்து அவரை மாற்றியது தவறு என்று அமைச்சரிடம் சொல்வது தவறு. மாற்றப்பட்டவர், பத்மாவல்லி என்பவரைப்பற்றி புகார் கொடுத்து வந்திருக்கிறார். அதை வைத்துக்கொண்டு உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் பேசி வந்தார்கள். "அவர் கொடுத்த தகவலை வைத்துக்கொண்டு பேசி வந்த எங்களுக்கு அவர் மாற்றப்பட்டு விட்டபடியால், இனி எப்படித் தகவல் கிடைக்கும்? இனி அரசுக்கு நாங்கள் எப்படி தகவல் தந்து பேச முடியும்? சட்டமன்றத்தில் அவர் தருவதை வைத்துக்கொண்டு தான் பேசுகிறோம்" என்று சொன்னால், அவர் செய்தது எல்லாம் "சிவில் சர்வன்ட்ஸ் கான்டக்ட் ரூல்ஸ்" படி முறை தானா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 5-50)

மாற்றச் சொல்லி வரலாமா, சட்டவிரோதம். வரக்கூடாது. அதையொட்டி அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி யெல்லாம் நான் சொல்லக்கூடாது. சொல்லத் தயாராகவும் இல்லை. ரூலிங் கொடுக்கவேண்டும்.

"No Government employee is empowered or permitted to approach any legislator to represent his grievance, thereby making that legislator to come straighway to the Minister and represent the employee's grievance. It is against the Civil Servants Conduct Rules".

என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

வீட்டைக் காலி செய்வது என்பது குறித்து, ஒருவரை மாற்றிவிட்டால் மூன்று மாத காலம் வரைதான் அந்த வீட்டில் இருக்கலாம். அதற்குப் பிறகு காலிசெய்துவிட வேண்டும். அந்தச் சட்டத்தைத்தான் அமுல்படுத்தியிருக்கிறேன். அப்படியில்லாமல், பொதுவாக இப்படிப் போட வேண்டும், இப்படிச் சட்டமிட வேண்டும் என்று சொன்னால், நான் அதைத் தெரிந்துகொண்டு, பரிசீலித்து அதன்படி நடப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

1979 ஏப்ரல் 25]

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister has asked for your ruling on this subject. The Hon. Minister is perfectly entitled to his opinion about the Government Servants Conduct Rules, etc. But I do not think it lies within your purview to give a ruling on this subject because it is not under the rules of the House.

திரு. க. அறிவழகன்: எங்களைப்போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சில நேரங்களில் சில கருத்துக்களையும், குறைகளையும் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. தனிப்பட்டவர்கள் அவர்களுடைய குறைகளை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்ல முடியாமல் இருக்கலாம். அவர்கள் எங்களைப் போன்ற உறுப்பினர்களை அணுகி அக்குறைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார்கள். ஆகவே, துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் இதில் ஒரு தீர்ப்பு அளிக்க வேண்டும்.

MR. DEPUTY CHAIRMAN: The Chair cannot give a ruling regarding a matter that was taken to the Minister by an M.L.A. or M.L.C. Whether the Service Rules of the Government have been contravened is a matter between the Minister and the legislator concerned. A ruling of the Chair here will only be on issues relevant to the Rules of the House. On matters which happen apart from the Rules of the House, I have no province.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது எம்.எல்.ஏ-க்களையும், எம்.எல்.சி.க்களையும் இழிவுபடுத்துவதாக இருக்கிறது. அவர் இப்படி எம்.எல்.ஏ., எம்.எல்.சி. மூலமாக இந்தக் குறைபாடுகளைத் தெரிவித்தார் என்பதற்காக அரசாங்கம் பழி வாங்குகிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அவர்களின் அபிப்பிராயத்தைச் சொல்லலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அரசாங்கம் இப்படி ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது. நான் இதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

* **திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதித்துறை பற்றியும், ஓய்வுபெற்றவர்கள்பற்றியும் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லுகின்ற கருத்துக்களைப் பரிசீலித்து

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1979 ஏப்ரல் 25

இந்த அரசு ஆவன செய்யும் என்று நான் நம்புகின்றேன். நீதிபதிகள் நீதி வழங்குகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நீதி வழங்குவதற்கென சரியான மார்க்கம் இப்போது கிடையாது. செக்ரட்டேரியட்டில் பல துறைகள் இருக்கின்றன. ஆனால் நீதித் துறை என்று ஒரு துறை கிடையாது. அது அநேகமாக யாருடைய கவனத்திற்கும் வரவில்லை. சட்டத் துறை என்று இருக்கிறது. ஆனால் டிப்பார்ட்மென்ட் ஆஃப் ஜஸ்டிஸ் என்று ஒரு தனித் துறை இல்லை. அதன் காரணமாக நீதிபதிகள் அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்குச் சரியான வழிமுறைகள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளம் அவர்களுக்கு அளிக்க வேண்டிய சலுகைகள், இன்னும் மற்ற வசதிகளையெல்லாம் கவனிக்க வேண்டும். செக்ரட்டேரியட்டில் புதிதாக 'டிப்பார்ட்மென்ட் ஆஃப் ஜஸ்டிஸ்' என்று தனியாக ஒரு துறையை ஆரம்பித்து அதற்கு ஒரு நல்ல சிறந்த அனுபவம் வாய்ந்த நீதிபதியைச் செயலாளராக நியமித்து அதன்மூலம் நீபதிகளின் சர்விஸ் கண்டிஷன், சம்பளம் மற்றவைகளையெல்லாம் கவனிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். இப்போது இருக்கின்ற சட்டத் துறையில் கூட நீதிபதிகள் யாரும் கிடையாது. முன்பு சட்டத் துறைச் செயலாளராக, நீதிபதியாக இருந்த ஒருவரை நியமித்தார்கள். டேபுடி செக்ரட்டரியாகச் சார்பு நீதிபதியாக இருந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் இப்போது அப்படி கிடையாது. இப்போது ஒரு நீதிபதிகூட 'லா டிப்பார்ட்மென்ட்டிலே' இல்லை. ஆகவே, இந்த நிலைமைகளைப் பரிசீலித்து செக்ரட்டரியாக ஒரு நீதிபதியையும், டேபுடி செக்ரட்டரியாக ஒரு சார்பு நீதிபதியையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள், மற்றும் அலுவலர்களின் குறைகளைப் போக்க 'கன்சல்டேட்டிவ் கமிட்டி' என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது போல, நீதிபதிகளின் நலன்களையும், குறைபாடுகளையும் கவனிக்கவும் 'ஒரு கன்சல்டேட்டிவ் கமிட்டி' ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே இந்த அரசு ஒன்றை அறிவித்தது. உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு 10 பங்களாக்கள் அடையாற்றிலே கட்டப்படும் என்று சொல்லப்பட்டது. அதற்காக இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், சார்பு நீதிபதிகளுக்கு சென்னையிலே எந்தவிதமான குடியிருப்பு வசதியும் கிடையாது. ஆகவே, ஹவுசிங் போர்டு மூலமாக நல்ல குடியிருப்பு வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

நேரம் அதிகம் இல்லாததால் நான் விரிவாகப் போகவில்லை. நானும் ஒரு ஓய்வுபெற்ற நீதிபதி. ஆதலால் ஓய்வு பெற்றவர்களுக்காகவும் பேசுகிறேன். மூன்றாவது ஊதியக் குழு சில சலுகைகளை ஓய்வுபெற்றவர்களுக்கு அளித்திருக்கிறது. அந்தச் சலுகைகளைக் கூட இன்னும் ஏற்று ஆவன செய்யப்படவில்லை. குறிப்பாக 'கம்யூட்டேஷன் ஆஃப் பென்ஷன்' தொகையில் 1/3 பகுதியைக் குறைத்தால், குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மறுபடியும் ரெஸ்ட்டோர் செய்து வழங்க வேண்டும் என்று ஊதியக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இவற்றையெல்லாம் பரிசீலித்து, ஏற்று, நல்ல முடிவெடுத்து செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாமெல்லாம் மகிழத்தக்க வகையில் பல்வேறு அறிவிப்புக்களைத் தந்திருக்கிறார்கள். நீண்டகாலமாக வற்புறுத்தியதற்கிணங்க மேலவை-சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தினை 1—4—1978 முதல் 200 ரூபாய் உயர்த்தி, நிலுவைத்தொகை கூட பெறும் அளவுக்கு அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். 35 ரூபாய் என்று பெற்றுவந்த தினப்படியை 50 ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் கூட, ஒரு முறை அங்கம் வகிப்பவர்களுக்கும் கூட ஓய்வூதியம் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். புகைவண்டியிலே இரண்டாவது வகுப்பிலே கூட பயணச்சீட்டுகளைப் பயன்படுத்தவும், துணையோடு பயணம் செய்யவும் வாய்ப்பளித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புக்கள் எல்லாம், என்னைப்போன்று சாதாரண ஆசிரியராக இருந்து இந்த மேலவைக்கு வந்திருப்பவர்களுக்கு பயனளிக்கும் வகையில் நாங்கள் இழந்துவிட்ட பல வாய்ப்புக்கள் மீண்டும் தரப்பட்டிருக்கின்றன என்று தான் நான் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி சொல்லுகின்ற நேரத்தில் சில வேண்டுகோள்களையும் வைப்பது என்னுடைய மரபு. அகவிலைப்படியைப் பொறுத்தவரையில் மத்திய அரசு 4 சதவீதமும், 3 சதவீதமும் என்று உயர்த்தியிருந்தபோதிலும், மாநில அரசு ஊழியர்களுக்கு இப்போது 2.5 சதவீதமும், 1.875 சதவீதமுமாக உயர்த்தி 6 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையிலே உண்டு என்று அறிவித்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது என்றாலும் கூட, மத்திய அரசிலே 16 ரூபாய் முதல் 32 ரூபாய் வரையிலே வழங்கப்பட்டிருக்கும்போது, இங்கே 6 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை வழங்கப்பட்டிருக்கும் நிலை தான் இருக்கிறது. இந்த உயர்வுப்படி இளநிலை ஆசிரியர்களுக்கு 7 ரூபாய் தான் கிடைக்கிறது. இடை நிலையாசிரியர்களுக்கு 8¾

ரூபாய் கிடைக்கிறது. மேலும், டிசம்பர் மாதத்திலேயே இந்த அகவிலைப் படியை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இங்கே ஏப்ரல் மாதம் முதல் என்று சொல்லி, அதாவது 'மே' மாத ஊதியத்திலேதான் இந்த உயர்வைப் பெற முடியும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்நிலை ஆசிரியர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாவேன்.

(பிற்பகல் 6-00)

மற்றொன்று, ஓய்வு பெற்றவர்களுக்கும் அகவிலைப்படி ரூபாய் 3 முதல் 12 வரை வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதைப்போலவே அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக உயர்த்தியிருப்பதை நான் வரவேற்கின்றேன். இவைகள் வரவேற்கத் தக்க அம்சங்கள் என்பதில் சந்தேகமில்லை. மத்திய அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வு பெறும் வயது 58 ஆக இருக்கிறது. அதைப் போலவே மாநில அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதையும் 58 ஆக உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன். இதைச் செய்யும்போது இது சம்பந்தமான மற்றோர் வேண்டுகோளையும் விடுக்க விரும்புகிறேன். மத்திய அரசின் ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு பெற்றுவந்த ஊதியத்தில் 50 சதவிதம் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. ஆனால் நமது மாநில அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், அது 33/80 என்ற விதத்தில் இருக்கிறது. எனவே மத்திய அரசோடு போட்டியிடும் அளவுக்கு அல்லது மத்திய அரசோடு சமமான அளவுக்கு மாநில அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று, உடனடியாக இல்லையென்றாலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படிப்படியாக வழங்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கான ஓய்வூதியத்தைக் கணக்கிட்டு வழங்கும்போது, அது சம்பந்தமான உத்தரவு அக்கவுண்ட்டெண்ட் ஜெனரல் அலுவலகத்திலிருந்து வந்த பிறகுதான் வழங்குவது என்றிருந்த நிலையை மாற்றி, மாவட்டக் கல்வி அலுவலகத்தோடு தணிக்கை போன்றவைகளை முடித்துக் கொள்ளவும் அங்கேயே ஓய்வூதியம் வழங்கும் உத்தரவிடவுமான ஓர் அறிவிப்பை கடந்த 11 ஆம் தேதி சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். அதைப் பின்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மாநில என்.ஜி.ஓ.-க்களுக்கும் இதே முறையை அறிவித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஓய்வூதியம் வழங்கும் இந்தப்

புதிய திட்டத்தை முன்னாலேயே அறிவித்திருக்க வேண்டும். இப்போதாவது அறிவித்திருக்கிறார்களே என்று நான் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒரு சாதாரணமான வேண்டுகோள் என்பதையும் முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிறபோதே, நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு சைக்கிள் வாங்கவும், ஸ்கூட்டர் வாங்கவும், வீடு கட்டவும் கடன் வழங்கப்படுகிறது. இந்தக் கடன்களெல்லாம் திரும்பப் பெறக் கூடிய கடன்கள். இந்தச் சலுகைகளை அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப்போல் ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். திரும்பப் பெறும் இந்தத் தொகைகளைக் கடனாக அவர்களுக்கு வழங்குவதில் என்ன கஷ்டம் என்று எனக்குப் புரியவில்லை. தற்போது அரசு ஊழியர்களுக்கு சைக்கிள் வாங்க முன்பணக் கடன் தொகை ரூபாய் 450 என்று இருக்கிறது. இந்தத் தொகையை இப்போது உயர்த்தி ரூபாய் 600 என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு வரியைச் சேர்த்து 'ஆசிரியர்களுக்கும் இந்தக் கடன் வசதி உண்டு' என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமது எல்லா அறிவிப்புகளையும் சட்டமன்றப் பேரவையிலேயே செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக மேலவையில் இடம் பெறுகிற நாங்கள் மிகுந்த ஏமாற்றத்திற்கு உள்ளாகிறோம். எனவே இந்த அவையை மதித்து சில அறிவிப்புகளைச் செய்ய வேண்டுமென்றும் சைக்கிள் வாங்க முன்பணக் கடன் தொகை ஆசிரியர்களுக்கும் உண்டு என்று இங்கே அறிவிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர்களுடைய 'சோப்தார்'களுக்கு ரூபாய் 25 ஊதிய உயர்வை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் அமைச்சர்கள் தங்களுடைய சுயநலத்தின் காரணமாக இந்த முடிவை எடுத்திருக்க மாட்டார்கள் என்று நாங்கள் நம்புவதற்கு வாய்ப்பாக அவர்களுடைய சோப்தார்களுக்கு அளிக்கப்படுவதைப்போலவே, சட்டமன்றத் துறையின் செயலாளர்களுடைய பியூன்கள், மாண்புமிகு மேலவைத் தலைவர், துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், அரசு கொறடா ஆகி

யோரிடம் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களுக்கும் ரூபாய் 25 ஊதிய உயர்வளிக்கும் அறிவிப்பைச் செய்ய வேண்டும் என்று அவர்களின் சார்பில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்களான நாங்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசின்முன் வைத்திருக்கிறோம். அரசாங்கமும் தன்னால் இயன்றதைச் செய்திருக்கிறது. அண்மையில் 37½ கோடி ரூபாய் அளவுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. தற்போது ரூபாய் 12 கோடி அளவுக்கு ஊதிய உயர்வுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எனினும் ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கைகளான மருத்துவப்படி, கிராம ஈட்டுப்படி, வீட்டுவாடகைப்படி ஓய்வு பெறும்போது ரூபாய் 10,000 அளித்தல் போன்ற கோரிக்கைகளையும் விரைவில் அரசாங்கம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க முன்வடிவை மாண்புமிகு நிதியமைச்சர் திரு. நாஞ்சிலார் அவர்கள் இங்கே அளித்திருக்கிறார்கள். அதற்காக நான் ஆரம்பத்திலேயே நன்றிக்கூறிக்கொள்கிறேன். எங்களுடைய ஊருக்கும் குன்றத்தூருக்குமிடையே ஓடுகிற ஆற்றில் ஒரு பாலம் கட்ட இந்த நிதி ஒதுக்க மசோதாவில் வகை செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதற்காகவும் நான் அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலிருந்து கைத்தறித் துணியை பெருமளவுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்பது நீண்ட நாட்களாக அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. பொதுவாக இந்த நிதி ஒதுக்க முன்வடிவில் எங்கள் துறையான கைத்தறித் துறைக்கு என்று எதுவும் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எங்களுக்கும் ஓரளவுக்கு நிதியை ஒதுக்கி உதவி செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் கைத்தறி நெசவாளர்களான நாங்கள் மிகவும் ஏழைகள், உழைத்து, உழைத்து ஓடாய்ப் போனவர்கள். அந்நிய நாடுகளையும் உள்ளூரையும், இங்கே இருக்கிற தோழர்களையும், இஸ்லாமியச் சமுதாயத்தையும் நம்பித்தான் நாங்கள் துணியை நெய்கிறோம். நாங்கள் நெய்கிற துணியை ஏற்றுமதி செய்ய, அந்நிய நாடுகளோடு அல்லது அங்குள்ள வர்த்தகர்களோடு தொடர்பு கொண்டு பெருமளவுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. இது வரையில் அந்தக் கோரிக்கை சரியாகப் பரிசீலிக்கப்படவில்லை. மாண்புமிகு

நிதியமைச்சர் அவர்கள் அண்மையில் வெளிநாடுகளுக்குச் செல்ல இருக்கிறார்கள். அவர் செல்லுகிற நாடுகளிலெல்லாம் நமது கைத்தறித் துணிகளின் மேன்மையை எடுத்துச் சொல்லி, அவர்கள் அதை விரும்பி வாங்குவதற்கான வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு வரவேண்டும் என்ற எனது நீண்ட நாள் ஆசையை இங்கே வெளியிட விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செல்லும்போது, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் உடன் அழைத்துச் சென்று வெளிநாடுகளிலுள்ள வர்த்தக நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு பெருமளவுக்குத் தமிழ் நாட்டின் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்துகொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நூல் விலை மிக அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக மில்களுக்கு மிக அதிகமான லாபம் கிடைக்கிறது. ஓராண்டுக்கு முன்னால் வரை கடன்பட்டிருந்த மில் முதலாளிகளெல்லாம் இன்றைக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் அளவுக்கு லாபம் சம்பாதித்திருக்கிறார்கள். நிறைய லாபம் சம்பாதித்திருக்கிறார்கள் என்பது அவர்கள் கொடுக்கிற புள்ளிவிவரத்திலிருந்தே தெரிகிறது. கூட்டுறவுத் துறையில் உள்ள மில்கள்கூட ஒரு காலத்தில் ரூபாய் 50 லட்சம், ரூபாய் 60 லட்சம் நஷ்டமடைந்து கொண்டிருந்த நிலை மாறி, ஆண்டுக்கு ரூபாய் 1 அல்லது 1½ லட்சம் லாபம் கிடைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் நூல் விலை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. அரசாங்கம் இதைக் கருத்தில் கொண்டு நூலின் விலையை ஓரளவுக்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காங்கிரஸ் ஆட்சியின்போது, தலைவர் காமராஜர் அவர்களால் கைத்தறி நெசவாளர்களுக்கு காலனிகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. அந்தக் காலனிகளில், நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்காக அந்த நெசவாளிகள் இன்றும் மாதத் தவணையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாதத் தவணையைக் கடந்த 15 ஆண்டுகளாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களால் முழுமையான அளவுக்கு அந்தத் தவணை முறைகள் கட்டி முடிக்கப்படாததால், அந்த வீடுகள் அவர்களுக்கு முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை. எவ்வளவோ நெசவாளிகள் வீட்டின் மீதுள்ள கடனை வட்டியாகவே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். முழுமையாகக் கட்டுவதற்கு அவர்களுக்கு வசதியும் இல்லை, வாய்ப்பும் இல்லை, வேலையும் இல்லை. எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நெசவாளத் தொழிலாளர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீட்டின் மீதுள்ள அவ்வளவு கடன் தொகையையும் ரத்து செய்து கொடுத்து அந்த நெசவாளர்களைச் சுதந்திர புருஷர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய வேண்டுகோளை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துவதோடு வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யும்போது, தமிழகத்தின் கைத்தறித் துணியை அங்கெல்லாம் பெருமளவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நல்ல வாய்ப்பினை உருவாக்கும் வகையில் அந்த நாட்டு அரசுகளோடு ஒப்பந்தம் செய்து கொண்டு வெற்றிகரமாகத் திரும்பி வரவேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவின்மீது சில கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மிக முக்கியமாக அரசாங்கத்திற்குத் தெரிவிக்க விரும்புவது "அரசாங்கம் அதிகமான அளவுக்குச் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்பதாகும். சான்றாக, ஒவ்வொரு ஆண்டும் தொழிற் துறையைச் சார்ந்த பல்வேறு தொழில் நிறுவனங்களின் சார்பாக வெளியிடப்படும் அறிக்கைகளை மிக உயர்ந்த தாள்களில் அச்சிட்டு அவைகளை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் வழங்கும் முறையைப் பார்க்கிறோம். இந்த வெளியீடுகளுக்காக ஆகிற செலவையும், இந்த வெளியீடுகளால் ஏற்படுகிற பலனையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவ்வளவு விலை உயர்ந்த காகிதங்களில், மிகப் பெரிய பொருட் செலவில் இந்த அறிக்கைகளும் வெளியீடுகளும் அச்சிடப்பட வேண்டியது தேவைதானா என்ற ஐயம் ஏற்படுகிறது. இந்த அறிக்கைகளோ வெளியீடுகளோ காலா காலத்திற்கும் சேர்த்து வைத்துக்கொள்ளப்பட வேண்டியவை அல்ல. அப்படி இருக்கும்போது இவைகளை மிக உயர்ந்த காகிதங்களில் அதிகமான பொருள் செலவில் அச்சடிக்க வேண்டுமா என்பதையும், இவைகளுக்கு வண்ணத் தாள்கள்—ஆர்ட் பேப்பர்—உபயோகிக்கப்பட வேண்டுமா என்பதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் எந்த அளவுக்குச் செலவைக் குறைக்க முடியுமோ அதைச் செய்ய நிதியமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 3-வது ஊதியக் குழுவின் அறிக்கையால் எழுந்துள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும் என்று நீண்ட காலமாக நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கு உண்மையிலேயே ஒரு நடைமுறைத் தீர்வு காண வேண்டுமென்றால், எங்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையில் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களையும் நிதித்துறை மற்றும் கல்வித் துறை செயலாளர்களையும் இதர முக்கிய அதிகாரிகளையும் எங்கள் பிரதிநிதிகளையும் அழைத்து, வரும் மே மாதத்தில ஒரு நாளைக் குறிப்பிட்டு, ஒரு கூட்டத்தை நடத்தி, இருக்கிற முக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்து அதில் முடிவெடுக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உருவாக்கினால், நாங்கள் பேசிக்கொண்டே போவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம். "பரிசீலனை செய்கிறோம்", "பரிசீலனை செய்கிறோம்" என்று அரசாங்கம் சொல்லுவதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்பது என்னுடைய பணிவான கருத்தாகும். மே மாதத்திலே இத்தகைய கூட்டத்தை நடத்தினால், நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்லி, பிரச்சினைக்குத் தீர்வு காண வழி ஏற்படுமென்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-10)

அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இதை நாங்கள் வரவேற்கிறோம். இதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்காத காரணத்தால்தான், அரசு ஊழியர்களுக்கு 55 வயதென்று இருந்தபோது, ஆசிரியர்களுக்கு ஓய்வு பெறும் வயதை 58 ஆக வைத்திருந்தார்கள். ஒரு காலத்திலே ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 62 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பதவி உயர்வு வாய்ப்பு இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கு இப்போது ஓய்வு பெறும் வயதை 58 ஆக ஆக்கியிருப்பதால், பதவி உயர்வு பெற வாய்ப்பற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு பெறும் வயதை 62 ஆக மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை இந்தச் சமயத்தில் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது, உதவித் தொகையாக ரூபாய் பத்தாயிரத்தை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை அனைத்துத் தரப்பிலிருந்தும் எழுப்பப்பட்டிருக்கிறது. நேரம் இல்லாத காரணத்தால், அதைப்பற்றி நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. இன்றைக்கு $7\frac{1}{2}$ இலட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் அவர்களிடமிருந்து வசூலித்தால், ஆண்டு ஒன்றுக்கு 90 இலட்சம் ரூபாய் ஆகிறது. மேலும் அதனுடன் வட்டியும் சேர்கிறது. இதற்கு இணையான ஒரு தொகையை அரசும் போட்டால், ஓய்வு பெறுகின்றவர்களுக்கு உதவித் தொகை

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 25

யாகப் பத்தாயிரம் ரூபாயை மிக எளிதாக கொடுக்கலாம். இதைப்பற்றி விரிவான திட்டமொன்றை நாங்கள் வைத்திருக்கிறோம். இதை மிக எளிதாகச் செயல்படுத்தலாம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர் விரும்புவாரேயானால், ஒரு நாள் குறித்து, எங்களை அழைத்தால், நாங்கள் அந்தத் திட்டம் குறித்து விரிவாக விளக்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்தால் உதவித் தொகை கொடுப்பதைப் போல, செய்தி நிருபர்களுக்கும் அரசு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சமுதாயத்தினுடைய மிக முக்கியமான குறைபாடுகளையும், பிரச்சினைகளையும் படம் பிடித்துக் காட்டுகிற செய்தி நிருபர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அண்மையிலே, மேலவைக்கு வந்து கொண்டிருந்த செய்தி நிருபர் ஒருவர் மரணமடைந்தார் என்றும் அவருடைய குடும்பம் நிராதரவான நிலையிலே இருக்கிறதென்றும் அறிகிறேன். அவருடைய குடும்பத்திற்குப் பயனளிக்கக் கூடிய வகையிலே, செய்தித் துறை நிருபர்களுக்கும் குடும்ப உதவித் திட்டத்தின்கீழ் அரசு பத்தாயிரம் ரூபாய் வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, மேலவையிலே பணியாற்றுகிற கடைநிலை ஊழியர்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மேலவையின் அலுவல்கள் முடிந்த பின்னரும் கூடுதல் வேலை செய்கிற அவர்களுக்குப் பணிப்படியாக இரண்டரை ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். பல்வேறு சமயங்களில் மேலவையின் நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு மற்ற பணிகளை முடித்துவிட்டு அவர்கள் வீடு செல்ல இரவு 12 மணி, 1 மணி ஆகிறது என்று அறிகிறேன். அப்படிப்பட்ட ஊழியர்களுக்கு ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் விதம் மேலவை நடக்கும் நாட்களில் கொடுக்கலாம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நான் மேலேகூறிய கருத்துக்களை நிதியமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்றும், குறிப்பாக அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது, பத்தாயிரம் ரூபாய் அளிப்பதற்காக நாங்கள் வைத்திருக்கிற மிக எளிதான திட்டத்தைப் பற்றி விவாதிக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு நாளைக் குறித்து எங்களை அழைப்பார்களேயானால், அதைப்பற்றி நாங்கள் மிக விரிவாக, விளக்கமாக விவாதிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த வாய்ப்புக் கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன்.

1979 ஏப்ரல் 25]

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஒதுக்கீடு என்று சொன்னாலும், அரசு இந்தத் தொகையைச் சுவீகரித்துக் கொள்ளுகிறது என்று பொருள். ஏனென்றால் தன் வயமாக்கிக் கொள்ளக்கூடிய தொகையை வரக்கூடிய ஆண்டில் நம்முடைய அரசு நிர்வாகத்தை நடத்தும்போது, ஏற்கெனவே அது அறிவித்துள்ள சில கொள்கைகளை நடைமுறையிலே நிறைவேற்றும்போது பயன்படுத்திக் கொள்ளும். பொதுவாக உலக வளர்ச்சியையொட்டித்தான் நம்முடைய மாநிலம் தன்னுடைய வளர்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருக்கிறது. இதிலே அரசு வளர்ச்சிப் போக்கையொட்டி, காலத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, நிர்வாகக் கொள்கைகள், செயல்முறைகள் ஆகியவற்றை வகுத்தால் உதவிகரமாக இருக்கும். ஆனால் கடந்த கால அனுபவத்தைப் பார்க்கும் போதும், இந்த ஆண்டு துவக்கத்திலேயே ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போதும், வேதனை மட்டுமல்ல, கவலையும் ஏற்படுகிறது. ஏனென்றால் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியின் அஸ்திவாரமாக இருப்பது விவசாயம். விவசாயத் துறையில் அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பது உண்மை. தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளின் சிறப்பு என்னவென்றால், விவசாயிகளுடைய சொந்த மூலதனம் அவர்களுடைய சொந்த உழைப்புத்தான். மற்ற மாநிலங்களைவிட இந்தச் சிறப்பு இந்த மாநிலத்தில் தான் அதிகம். இது இந்த மாநிலத்திற்குரிய பெருமை. விவசாயத் துறையை ஆராய்ந்த பல நிபுணர்கள் இதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மை என்னவென்றால், தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் மிகவும் பண்பட்டவர்கள். அதை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால் "Highly Civilised Peasants" என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டில் விவசாயம் நீண்ட கால வரலாற்றின் அடிப்படையிலும், நிகழ்காலத் திறமையின் அடிப்படையிலும் நடக்கிறது. நம் மாநிலத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் 9 இலட்சம் பம்புசெட்டுகள் இருக்கின்றன. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் 9 இலட்சம் பம்புசெட்டுகள் இருக்கின்றனவென்றால், இதற்கு முக்கிய காரணம் விவசாயிகளுடைய சொந்த முயற்சிதான். அதிலே பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, பல திட்டங்களை அரசு போட்டாலும், இறுதியாக அதன் வெற்றிக்கு உத்தரவாதம் விவசாயிகள்தான். அந்த விவசாயிகளுடைய குறைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அரசு வேறு கொள்கைகளைக் கையாள்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், மிகவும் அடக்கமாகச் சொல்ல வேண்டுமென்று விரும்பினாலும், ஒரு கருத்தைச் சொல்லாமல் இருக்க முடிய

வில்லை. இந்த அரசு விவசாயிகளின் மீது போர் தொடுத்துள்ளதோ என்ற சந்தேகம், அச்சம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு, குறிப்பாக இந்த மாதத்தில் மட்டும் இரண்டு துப்பாக்கிச் சூடு விவசாயிகளின் மேல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஒன்று தண்ணீருக்காக, மற்றொன்று மற்ற கோரிக்கைகளுக்காக. விவசாயிகள் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். 1979 ஆம் ஆண்டிலே இப்படி நடப்பதென்பது மிகுந்த வேதனையைத் தருகிறது. அது மட்டுமல்லாமல், இது ஒரு அபாய அறிவிப்புங்கூட. 'கடன்' என்பதும் 'விலை' என்பதும் தமிழகத்து விவசாயிகளுடைய நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கக்கூடிய பிரச்சினைகளாகும்.

1938 ஆம் ஆண்டிலே, இராஜாஜி அவர்கள் தமிழ் நாட்டு விவசாயிகளுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய நெருக்கடியைத் தீர்க்கக் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் வராமல் இருந்திருந்தால், 1938 ஆம் ஆண்டிலே விவசாயத்தைக் காப்பாற்றியிருக்க முடியாது. அந்தக் காலத்தின் அனுபவங்கள் இன்னும் விவசாயிகளுடைய குடும்பங்களிடம் இருக்கின்றன. 1938 ஆம் ஆண்டிலே திரு. இராஜாஜி அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்திருக்காவிட்டால், பல விவசாயக் குடும்பங்கள் அழிந்திருக்கக் கூடும் என்று இப்போதும் நினைவு கூறுகிறார்கள். இப்போதும் பல கிராமங்களில் அப்படிப்பட்ட பல விவசாயக் குடும்பங்கள் அழிந்து போகக்கூடிய நிலை இருக்கிறது. நான் பெரிய விவசாயக் குடும்பங்களை ஆதாரமாக வைத்துச் சொல்லவில்லை. சிறிய, நடுத்தர விவசாயிகளை ஆதாரமாக வைத்துச் சொல்லுகிறேன். திறமையான விவசாயக் குடும்பங்கள் தமிழ் நாட்டில் அழிவது நமக்கு நல்லதல்ல.

கடன் பிரச்சினையில் அரசு இன்னும் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்பது மட்டுமல்லாமல், விவசாயிகளுடைய பிரச்சினையை அணுகும் முறையிலே பரந்த மனோபாவம் இருக்க வேண்டும். வெறும் அரசாங்க நிர்வாக முறைகளால் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது.

உயர்மட்டக் குழு போடப்பட்டு பல மாதங்கள் ஆகின்றன. அந்தக் குழுவின் முடிவு என்ன, அரசின் நிலை என்ன என்பது இன்றுவரை வரவேயில்லை. இந்த மாதிரியான காரியங்களை அரசு துரிதமாகச் செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் நிர்வாக முறையில் அமைந்துள்ள வகையில் அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலைமையை அமைதிப்படுத்த வேண்டுமென்ற பொதுக் கொள்கையை அரசு வைத்துக்கொண்டு வரக்கூடிய நிலை, அரசுக்கும், மக்களுக்கும் இடையே

விநோதமான வேதனையை வளர்த்துக் கொண்டே செல்கிறது. அது நல்லதல்ல. அப்படிப்பட்ட நிலைக்குப் போய்விடக்கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள், தொழில் துறையைப் பற்றியும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி மேலும் நான் குறிப்பிட விரும்பவில்லை. தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கையைப் பற்றி நேற்று கூட இங்கே விவாதிக்கப்பட்டது. அப்போது சிறு தொழில்களில் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. பொதுவாக நான் ஏற்கெனவே ஆளுநர் உரையின் விவாதத்தின் போதும், நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போதும், நேற்றும்கூட சொன்னேன். அதை இப்போதும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமென்றால், தொழில் துறையிலே முன்னேற வேண்டும்.

(பிற்பகல் 6-20)

இங்கே விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். 1 லட்சம் 1½ லட்சம் பேர்களுக்கு வேலை கொடுத்ததாகப் போட்டிருக்கிறார்கள். அந்த வேலைகள் எல்லாம் தற்காலிகமானவைகள்தான். அதனால் மீண்டும் நெருக்கடிதான் அதிகமாக ஏற்படும். நாம் அதிகமாக பெரிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அரசு அதற்கு ஊக்கம் தருவது மட்டுமல்ல, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு மத்திய அரசிடம் கேட்க வேண்டும். தமிழ் நாட்டிலே உள்ள அரசு, மத்திய அரசு மூலம் மேற்கொள்ள வேண்டிய எல்லா முயற்சிகளையும் தொழில் வளர்ச்சிக்காக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த முறையிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய அரசு நிருவகிக்கின்ற பல்வேறு நிறுவனங்கள் அவைகளினுடைய செயல் முறைகள், அவைகள் எப்படி காரியங்களை நிறைவேற்றுகின்றன என்பதைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. இறுதியாக நாம் பார்த்தால், அதற்குள்ள பலன் மிகக் குறைவு. இதற்குக் காரணம் நாம் தவறான திசையிலே போய்க்கொண்டிருக்கிறோம். அண்டை மாநிலங்களோடு நம் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், தொழில் வளர்ச்சியில் தொழில் துறை அக்கறையோ, ஆர்வமோ காட்டுவதாகத் தெரியவில்லை. நம் மாநிலத்திலே அக்கறை காட்டுவதில்லை. நான் அதிகாரிகளைக் குறைகூறவில்லை. அதற்கு வழி காட்டவேண்டியது அமைச்சரவைதான். எந்த முறையில் நம்முடைய அரசின் கவனம் செல்கிறது? பொருளாதாரத் தடைகள் இருக்கின்றன என்பது மட்டுமல்ல. கவனக் குறைவும் சேர்ந்து விட்டது என்பதைத்

[திரு. ப. மாணிக்கம்] [1979 ஏப்ரல் 25

தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலில் அக்கறை உள்ளவர்களை ஊக்குவிக்க வேண்டும். தொழில் செய்பவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஊக்கத்தையும் உதவியையும் காலத்திலே நாம் செய்வதில்லை. நான் கேள்விப்படுகின்ற புகார்கள் எழலாம், ஆந்திராவிலே போய் தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசுத் துறையிலே அவர்கள் செய்து கொடுக்கிறார்கள். அதுபோலவே கர்நாடக அரசும் துரிதமாகச் செய்துகொடுக்கின்றது. ஆனால் தமிழ் நாட்டில் மட்டும் சிக்கிரம் காரியங்கள் நடக்கவில்லை என்பது அந்தத் துறையிலே தொடர்பு உள்ளவர்களுடைய கருத்து. அந்த நிலைமைகளை நாம் உடனடியாக மாற்றவேண்டியிருக்கின்றது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். முதலாளிகளை 3 மாதங்களுக்கு ஒரு முறை பார்த்துப் பேசவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் எடுத்துக் காட்டியது போல, 3 மாதத்திற்கு ஒரு முறை, 6 மாதத்திற்கு ஒரு முறை என்பது மட்டுமல்ல, மொத்தத்திலே அப்படிப் பட்ட ஒரு அணுகுமுறை வேண்டும். பிரச்சினைகள் இருந்தால், அவர்களை அணுகி, கூட்டம்கூட்டிப் பேசித் தீர்ப்பது நல்லதுதான். அப்படிப்பட்ட ஒரு உறுதியான நிலை ஏற்பட வேண்டும். இண்டஸ்ட்ரியல் கேடர் என்று சொல்லக் கூடியவர்களை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட நிறுவனங்களில் அறிவுள்ளவர்களைப் பொறுப்புகளிலே அமர்த்துவதில் கவனம் செலுத்துவதும் அவசியம். நான் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். நான் இருக்கக்கூடிய பகுதி குரோம்பேட்டை. அது சென்னையை அடுத்துள்ளது. அந்தப் பகுதியிலுள்ள ஒரே ஒரு பெரிய தொழிற்சாலை. அந்த தொழிலுக்கு உள்ள பெயரே ஊருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. க்ரோம் லெதர் பாக்டரி என்று பெயர். பல நூறு தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அது பல மாதங்களுக்குமேல் மூடப்பட்டிருக்கிறது. அதாவது லாக் அவுட் நடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் உள்ளே போகலாம். ஆனால் வேலை நடக்காது. சம்பளம் கிடைக்காது. போகிறார்கள். வேலை கிடைக்காது திரும்பி வருகிறார்கள். வீட்டிலேயிருந்து சாப்பாடு கொண்டு போகிறார்கள். எப்படியாவது வேலை கிடைக்கும் என்று நம்பிப் போகிறார்கள். அங்கே வேலையும் நடக்கவில்லை. தொழிலாளர்களுக்கும் சம்பளம் இல்லை. ஆனால் அங்கே இருக்கவேண்டிய சாதனங்கள் இருக்கின்றன. இந்த நிலைமையைச் சீர்படுத்த வேண்டும். தமிழகத்திலே உள்ள நவீன தொழிற்சாலை அது. அது தோல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை. (Finished products) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை. இப்படிப் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலையில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். மூலதன நஷ்டங்களும் ஏற்பட்டுவிட்டன என்று சொல்கின்றார்கள். அப்படி

1979 ஏப்ரல் 25] [திரு. ப. மாணிக்கம்]

ஒரு தொழிலைக் காப்பாற்ற அரசு முயற்சிக்கக்கூடாதா? அது அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற்று நடத்துவதா அல்லது வேறு வகையில் நடத்துவதா என்று பரிசீலனையில் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதிலே இன்னும் காலதாமதம் காட்டவேண்டியதில்லை. ஏற்கெனவே 9, 10 மாதங்களாகவே இந்த நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் அனைவரும் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஒரு நல்ல தொழில். அது வீணாக முடங்கிக் கிடக்கிறது. இதிலே அரசு 9, 10 மாதங்களாக ஏன் இப்படி இருக்கிறது என்று புரியவில்லை. இவ்வளவு அசமந்தமாக இருக்கிறது. ஏன் தூங்கிக்கொண்டிருக்கிறது என்றுதான் கேட்கிறேன். வங்கியிலிருந்து கடன் வாங்கி எடுத்துக்கொள்ளலாம். அதற்கென்று ஒரு ஸ்பெஷல் ஆபிசர் போட்டு அந்தத் தொழிலை எடுத்துக்கொண்டு நடத்தலாம். தொழிலாளர்கள் முழு ஒத்துழைப்பையும் தரத்தயாராக இருக்கிறார்கள். ஏன் அதை இந்த அரசு எடுத்துக்கொள்ளக்கூடாது? இது அரசினுடைய ஊக்கமின்மையைத்தான் எடுத்துக்காட்டுகிறது. அதன் ஊக்கம் மிகக் குறைவு என்பதைத்தான் காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள்பற்றி சில அறிவிப்புகள் பேரவையிலே செய்யப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அந்த அறிவிப்புகளினுடைய முழு விவரங்கள் தெரியாத நிலையிலே சிலவற்றைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதிலே 2, 3 விஷயங்களைப்பற்றி மட்டும் சொல்கிறேன். நிலையான வருமானம் உள்ள குடும்பங்கள் இந்தியாவில் கடந்த 15 ஆண்டுகளாகப் பல துன்பங்களுக்கு ஆளாகியிருக்கின்றன. இது உண்மை. 15 வருடங்களாக படிப்படியாக விலைவாசிகள் உயர்வு காரணமாக எதுவும் செய்ய முடியாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ரிட்டையர் ஆகும் போது அவர்களுக்கு பி.ஏ. அல்லது எம்.ஏ. படித்த மகன் இருப்பான். அல்லது கல்யாணம் ஆகக்கூடிய நிலையில் ஒரு பெண் இருப்பாள். அந்தப் பிள்ளைக்கு வேலை ஒன்றும் கிடைக்காத நிலையிருக்கிறது. ரிட்டையர் ஆகும்போது, மணமாகாத பெண்ணையும், வேலையில்லாத பிள்ளையையும் வைத்துக் கொண்டு எப்படி அவர் வாழ்க்கை நடத்த முடியும்? அவர்கள் அரசிலே 20 வருடங்களுக்கு மேல் வேலைசெய்துவிட்டு ரிட்டையர் ஆகும்போது அவர்களிடம் என்ன இருக்கிறது என்று சொன்னால், ஒன்றுமில்லை. அவர்களுக்குச் சுமைதான் இருக்கிறது. அதை மாற்றுவதற்குத்தான் இந்த 10 ஆயிரம் ரூபாய் கேட்டு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் அரசு அதை நிராகரித்திருக்கிறது. அரசு உத்தரவுகள். ஜீ.ஓ. மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. உதாரணமாகச் சொல்கிறேன். அரசு ஊழியர்களுக்குச் சொந்த

மான விடு இல்லை. விடு கட்டினாலும அவர்கள் அந்த வீட்டிற்கு மூலதனம் போட்டிருக்கிறார்கள். விடு மெயின்டனல்க்காக அவர்களுக்குச் செலவாகிறது. அது அவர்களுக்கு நஷ்டம். ஊழியர்கள் அக்காமடேஷன் வீடுகளில் குடியிருந்தால், அந்தத் தொகையை வீட்டு வாடகைப்படியிலிருந்து கழித்துக் கொள்கிறார்கள். இதனால் அவர்களுக்கு வாடகைத் தொகை குறைந்துவிடுகிறது. அதற்கான வாடகைப் பொறுப்பை ஊழியர்கள்தான் சுமக்கிறார்கள். வீட்டின் சொந்தக்காரர்கள் அந்த வீட்டிற்கு மெயின்டனன்ஸ் எதுவும் செய்ய மாட்டார்கள். இந்த அனுபவம் உள்ள பலர் இங்கே இருக்கிறார்கள். அதிலேயும் சென்னை நகரத்திலே உள்ள வீட்டுக்காரர்கள் மெயின்டினன்ஸ் பண்ணவே மாட்டார்கள். அவர்கள் செய்யாததனால், அதிலே குடியிருக்கின்ற ஊழியர்களே அதைச் செய்துகொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும். விதிகளைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக ஆசிரியர்கள் பலபேர் 400 ரூபாய், 500 ரூபாய் என்று சம்பளம் வாங்குகிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆசிரியர்களின் பிள்ளைகள் படிப்பதற்குப் பண வசதியில்லாமல் இருக்கிறார்கள். தொடக்கப் பள்ளியில், நடுநிலைப்பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் சம்பளம் இல்லாமல் இலவசமாகப் படிப்பதற்கு அரசு உதவவேண்டும். பல இடங்களில் அவர்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் சொல்லிக்கொடுக்கிற நிலைமைகள் இருக்காது. வாத்தியார் பிள்ளைகள்பற்றி ஒரு பழமொழி சொல்வார்கள். வாத்தியார்கள் இங்கே கோபித்துக் கொள்ளக்கூடாது. நாட்டிலே உள்ள ஒரு பழமொழி. நடைமுறையிலே வாத்தியார் மகன் உருப்படியாக இருக்காது என்று சொல்வார்கள். அவர்களிடம் வறுமை இருக்கிறது. அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்விச் சலுகைகளை அரசு எந்த அளவுக்குச் செய்து தரமுடியுமோ அந்த அளவுக்குச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாகம் சம்பந்தப்பட்டதைக் குறிப்பிடும்போது, நிர்வாகத்திலே இன்னமும்கூட குறைபாடுகள் இருக்கின்றன. ஏதாவது முறையீடு செய்தால் அது சீக்கிரமாகத் தீர்க்கப்பட வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால், நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் இடையிலே இடைவெளி அதிகமாகிவிடும். ஆட்சியில் இருப்பவர்கள் இதையெல்லாம் சரியாகப் பரிசீலனை செய்தால், மக்களுடைய ஆதரவு அரசுக்கு இருந்துகொண்டிருக்கும். நம் தமிழ் நாட்டிலே அனுபவத்திலே பார்க்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் எல்லோருக்கும் ஒரு அரசியல் தலைவராக திரு. காமராஜர் அவர்கள் இருந்தார்கள். நான் அவரைப்பற்றிச் சொல்லும்போது, ஏதாவது குறையிருந்தால், நம் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். புகழ்

பெற்ற தலைவர். தமிழ்நாட்டில் பல நல்ல காரியங்களையெல்லாம் செய்தவர். மக்கள்பால் அன்புள்ளம் கொண்டவர்தான். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட மக்களுடைய மனப்போக்கை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர் காலத்திலே சில குறைபாடுகள் ஏற்பட்டதால், அவர் காலத்திலே நிலைமைகள் **மாறியதால்**, சில விளைவுகள் ஏற்பட்டன. சில சூழ்நிலைகள் ஏற்பட்டன.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை.)

(பிற்பகல் 6-30)

அப்படிப்பட்ட நிலை இந்த அரசுக்கு ஏற்படக்கூடிய அபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு மொத்தத்தில் தன்னுடைய நிர்வாகத்தை, மக்கள் சார்பு நிலையில், மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய வகையில் செயல்படுத்த வேண்டுமென்பதற்காக நிதி ஒதுக்கீடு மசோதாவிற்கு அங்கீகாரம் அளிக்கிறோமென்ற கருத்தைக் கூறி, அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவரவர்களே, 1967 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி அறிஞர் அண்ணா அவர்கள் அவையிலே சொன்ன வாசகத்தை முதலிலே சொல்லி என்னுடைய உரையைத் துவங்க விரும்புகிறேன்.

"Agitation is a part of dtmocarcy, a constitutional form rf expressing either displeasure or a demand"

என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே, ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிதி அமைச்சரவர்கள் சட்ட மன்றப் பேரவையிலே பல விஷயங்களை அறிவித்திருக்கிறார்கள். அதை முதலிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற பல சலுகைகளுக்கும் நிதி அமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொன்றாகத் சொல்வதென்றால், நேரம் போதாது. நேரத்தைச் சுருக்கிக்கொள்ளுமாறு தலைவரவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஒரே வார்த்தையில், 'மிக்க நன்றி, மிக்க நன்றி' என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வு பெற்ற சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு மருத்துவச் சலுகை இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை கவனிக்க வேண்டும். அதைப்பற்றி யோசிக்க வேண்டும். இரண்டாவதாக, ஹாஸ்டலில் தங்கும்போது 8 ரூபாய் வாங்குவதாகச் சொல்லுகிறார்கள். அரசு

ஊழியர்களைப்போல, அதை ஐந்து ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் 58 வயதுவரை பணியில் இருக்கலாமென்று அறிவித்ததன் மூலம், 55 வயதைக் கடந்திருக்கும் ஊழியர்களின் குடும்பங்கள் நிதியமைச்சரவர்களை வாழ்த்தும், பாராட்டும் என்ற அவர்கள் உள்ளக் கிடக்கையை, அவர்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் கோத்தாரி கல்விக் கமிஷன் ஆசிரியர்களுக்கு 60 வயதுவரை ஊழியமாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. நிதியமைச்சரவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது, அந்தக் குழுவின் அறிக்கை தயாரித்து அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலேதான் ஆசிரியர்களுக்கு 60 வயதுவரை பணிக்காலத்தை நீட்டிக்கலாமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மற்றவர்களுக்குத் தந்திருக்கக்கூடிய சலுகைகள் ஆசிரியர்களுக்குத் தரப்பட வேண்டுமென்று நாங்கள் பல கோரிக்கைகளை அரசிடம் தந்திருக்கிறோம். பல கோரிக்கைகளில், ஒன்றைப் பற்றிப் பரிசீலித்து, நிதியமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நிதி அமைச்சரவர்களைச் சந்தித்தபோது, செய்கிறேன் என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சினைகளிலே ஒன்றைச் செய்திருக்கிறார்கள். அதற்காக நிதியமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன். ஆப்ஷன் எந்தத் தேதியாக இருந்தாலும், 5 சதவிகிதம் உயர்த்தித் தரப்படுமென்ற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், குறிப்பாக 1—4—1974க்குப் பிறகு வந்தவர்கள் 290 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்கள்; இளநிலை ஆசிரியர்கள் 195 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்கள் இதனால் பயனடைகிறார்கள். நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளைப் பல முறை அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அந்தக் கோரிக்கைகள் கிடைத்ததாகக்கூடத் தகவல் இல்லை. ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகள் வந்தன என்ற வார்த்தையைச் சொல்லியிருந்தால், எங்களுக்கு மனநிறைவு ஏற்பட்டிருக்கும். இரண்டு லட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். நிதித் துறையின் பொறுப்பேற்றிருக்கிற நிதியமைச்சரவர்கள், நாங்களும் இருக்கிறோம் என்ற அளவிற்கு, எங்களையும் சேர்த்துக்கொண்டு, இனி அறிவிப்புக்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் 2, 3 பிரச்சினைகள் இருக்கின்றன. அதையும் செய்வார்கள், நிச்சயம் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நிதியமைச்சரவர்கள் ரஷ்யத் திருநாட்டுக்குச் செல்லுகிறார்கள். அதற்குமுன் சில அறிவிப்புகளை

அறிவித்துவிட்டுச் செல்லுகிறார்கள். அமைச்சர்களுடைய சோப்தார்களுக்குக் கூடுதல் சிறப்பூதியம் அளித்தமைக்காகப் பாராட்டுகிறேன். அதே போன்று சட்டமன்றத் துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற கடைநிலை ஊழியர்களுக்கும் அதைப்போல அறிவிக்க வேண்டுமென்ற பரிந்துரையை, அவர்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதியமைச்சரவர்கள் அந்த அறிவிப்பை அறிவித்தவுடன், அவர்களுக்கு தங்களுக்குக் கொடுக்கவில்லையே என்ற அயர்ச்சி ஏற்பட்டு, எங்களுக்காகப் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதியாகப் பேசுகிறேன். அந்தக் கோரிக்கையையும் பரிசீலித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களைப் பொறுத்தமட்டில், நாங்கள் மட்டும் பயணம் செய்யலாமென்று இருக்கிறது. இரயிலில் துணைக்கு ஒருவரை அழைத்துச் செல்லலாமென்று இருக்கிறது. பஸ்களிலும் ஒரு உறுப்பினர், அட்டென்டன்ட் என்ற முறையில் ஒருவரை அழைத்துச் செல்ல முடியாவிட்டாலும் அவருடைய மனைவியை அழைத்துச் செல்ல அல்லது கணவனை அழைத்துச் செல்ல கன்செஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மண்டல மாநாட்டில், சங்கம் வளர்த்த மதுரையில் மிக்க அழகான, ஆற்றல்மிகு சொற்பொழிவிலே, கிராமங்களிலே உள்ளவர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்குவதுபற்றி நிதியமைச்சரவர்கள் அறிவித்தார்கள். கிராமங்களில் உள்ளவர்கள் குறித்த புள்ளிவிவரத்தைக் கூற விரும்புகிறேன். 5 ரூபாய் ஒருவருக்கு என்று வைத்துக்கொண்டாலும், 75 லட்சம் ரூபாய்தான் ஆகிறது. ஒரு லட்சம் ஆசிரியர்கள் கிராமங்களில் பணியாற்றுகிறார்கள். 25,000 அரசு ஊழியர்கள் கிராமப் புறங்களில் பணியாற்றுகிறார்கள். ஆக 1¼ லட்சம் பேர்களுக்கு மட்டும் வீட்டு வாடகைப் படி இல்லை என்ற வித்தியாசத்தை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதியமைச்சரவர்கள் உணர்ந்த ஒன்றை, ஒப்புக்கொண்ட ஒன்றை, அறிவித்த ஒன்றை, தயவு செய்து ஏற்றுக்கொண்டு, அறிவிக்க வேண்டுமென்று பணிவோடு உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இளநிலை ஆசிரியர்களை; இடைநிலை ஆசிரியர்களாக்குவது பற்றிய கோரிக்கையை நிதியமைச்சரவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு 20 வருடங்கள், 15 வருடங்கள் பணி புரிந்துள்ள இளநிலை ஆசிரியர்கள் 370 ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள். இடைநிலை ஆசிரியர்களாகும்போது, அதற்கான சம்பள விகிதம் 350 ரூபாயில்தான் தொடங்குகிறது. கோத்தாரிக் கமிஷன் அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்

பட்டிருக்கிறது. அவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளித்து, அவர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக்க வேண்டுமென்ற பரிந்துரை இருக்கிறது. அப்படிச் செய்தால், இந்த அரசுக்கு, 5 ஆண்டுகளுக்கு, சுத்தமாக எந்தவிதத்திலும் பைசாகூட கமிட்மென்ட் கிடையாது. ஹையர் கிரேட் இடத்தில் பணியாற்றிய செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்காக, அந்தப் பணியிடங்களை செகண்டரி கிரேட் பணியிடங்களாக மாற்றுவது அண்ணா அவர்கள் காலத்தில் ஆரம்பித்து, இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது. இந்த நிலையில், இளநிலை ஆசிரியர்கள் அனைவரையும் இடைநிலை ஆசிரியர்களாக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அரசு பரிசீலித்து, ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாளை காலையில் நிதியமைச்சரவர்களைச் சந்திக்கும்போது, இதைப் பற்றி விவரமாக விளக்குகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்ட மன்ற பேரவையில் பல ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மேலவைக்கூட்டம் நடைபெறும்போது, அதிக நேரம் பணியாற்றுகிறார்கள். அந்த ஊழியர்களுக்கு ஓ.டி. அளிக்கப்படுகிறது. அவர்கள் கடைநிலை ஊழியர்களாக இருந்தாலும் அல்லது உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும், மத்திய அரசு தருகின்ற அளவிற்கு அந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் மணியடித்தார்)

பென்ஷனைப் பொறுத்தவரையில், 50 சதவிகிதம் ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலவைத் துறையில் இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நிதியமைச்சரவர்கள், மேலவைத் துறையை வந்து பார்க்க வேண்டும். எந்தப் பிரிவிற்குப் போனாலும், நெருக்கடியாக இருக்கிறது. எல்லோரும் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு, வேலை செய்கிறார்கள். வழித் தடத்தில் உட்கார்ந்து, வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே மேலவைத் துறைக்கு மேலும் இட வசதியை அளிக்க வேண்டும். உறுப்பினர்கள் போய் உட்காரக்கூட இடமில்லாமல் இருக்கிறது. ஆகையால், மேலவையில் இட நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சப்படியைப் பொறுத்தவரையில், குறைந்த அளவு 6 ரூபாய் என்றிருக்கிறது. அதை 8 ரூபாயாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6 ரூபாயிலிருந்து 30 ரூபாய்வரை பஞ்சப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது. அத்தியாவசியமான பொருள்களின் விலை ஏற்றத்தை ஈடுகட்ட பஞ்சப்படி

கொடுக்கிறார்கள். கடைநிலை ஊழியர்களுக்கு 6 ரூபாய் பஞ்சப்படி, பெரிய அதிகாரிகளுக்கு 30 ரூபாய் பஞ்சப்படி. விலை எல்லோருக்கும் ஒன்றாகத்தான் ஏறுகிறது. அரிசி விலை, சோப்பு விலை, சீமை எண்ணெய் விலை எல்லோருக்கும் ஒன்றுதான். எனவே இதில் வேறுபாடு வேண்டுமா? சோஷலிச நோக்கத்தோடு, அதைப்பற்றிப் பரிசிலித்து, பஞ்சப்படி உயர்வை ஒன்றாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறிவித்த அறிவிப்புகளுக்கு என்

(மாற்றுத் தலைவர் மணியடித்தார்)

னுடைய பாராட்டு. மேலும் நாங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட விஷயங்களைப் பரிசிலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிச்சயமாகச் செய்வார்கள், அதுவும் ரஷ்யாவிற்குப் போவதற்கு முன்னால் ஒன்றிரண்டைச் செய்வார்கள் என்று ஆசிரியர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முக்கியமாக எதிர்பார்க்கும் விட்டுவாடகைப்படி, 20 ஆண்டுகளில் சிறப்பு நிலை ஊதியம் ஆகியவை குறித்து அறிவிப்பு வரும் என்ற நம்பிக்கையோடு, செய்தவற்றுக்கு மீண்டும் நன்றியையும், மேலும் செய்ய வேண்டியது குறித்து அழுத்தமாகக் கேட்டுக்கொண்டும், முடிக்கிறேன்.

(பிற்பகல் 6-40)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவரவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கேட்டுக்கொண்டதற்கேற்ப என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாக வேகமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் காவல் துறை மானியத்தைப் பற்றி விவாதிக்கின்ற வாய்ப்பு இந்த ஆண்டு இல்லை. இருந்தாலும் நிதியமைச்சர் அவர்கள் அந்த இலாகாவிற்கும் நிதி ஒதுக்குவதால் நாட்டில் இருக்கிற பல்வேறு காவல் துறை சம்பந்தப்பட்ட சிக்கல்களை இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி எடுத்துச் சொல்லுவதன் மூலம் முதலமைச்சர் இல்லாத நேரத்தில் நிதியமைச்சர் அவருடைய பொறுப்பையும் ஏற்பதால் காவல் துறையில் நடக்கின்ற பல்வேறு அநியாயங்களை, அக்கிரமங்களைத் தடுக்க அவர்களுக்குப் பயன்படும், உதவிகரமாக இருக்கும் என்ற வகையில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த அரசு மதுவிலக்கில் மிகத் தீவிரமாக இருப்பதை நாடு அறியும். அவசர அவசரமாக அவசரச் சட்டங்கள் கொண்டு வந்தார்கள். அப்படி அவசர அவசரமாகக் கொண்டு வந்ததன் காரணமாக நாட்டிலே இன்றைய

தினம் ஏராளமான தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 3 மாதம், 6 மாதம் மதுவிலக்குக் குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்க வேண்டு மென்று சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

ஆனால் அதேநேரத்தில் நாட்டிலேயுள்ள காவல் துறையினர் **எப்படி** நடந்துகொள்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கி**றேன்.** சட்டப்படி யாரும் மது குடிக்கக் கூடாது, கள்ளச்சாராயம் காய்ச்சக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்திருக்கிற நேரத்தில், மது காய்ச்சுங்கள் **என்று** ஒரு அதிகாரியே சொன்னால், எவ்வளவு தூரம் அது கொடுமையான காரியம் என்பதை நான் சொல்லியதிலிருந்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிச்சயமாக உணர்ந்து கொள்வார்கள். அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. நேரம் அதிகமாக இல்லாததால், மேலோட்டமாகச் சொல்கிறேன்.

ஈரோடு தாலுக்காவில் சித்தோடு வசமப்பட்டு என்ற கிராமத்திலிருக்கிற பொது மக்களை அங்கே இருக்கிற சப்-இன்ஸ்பெக்டர் அழைத்து கள்ளச் சாராயம் காய்ச்ச வேண்டுமென்றும், அப்படிக் காய்ச்சிய பிறகு மாமூல் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார். அப்படி சாராயம் காய்ச்சி மாமூல் கொடுக்காவிட்டால், மதுவிலக்குக் குற்றம் செய்ததாக வழக்கு போடுவேன் என்று சொல்லி தொல்லைக்கு ஆளாக்கியிருக்கிறார். இது எந்த வகையில் நியாயம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதுமாதிரி ஆங்காங்கே சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகளைத் தடுக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் கூட இந்த மன்றத்தில் அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லி யிருக்கிறார். "போலீஸ்காரர்கள் பொதுமக்களைச் சாராயம் காய்ச்சச் சொல்லுகிறார்கள்" என்ற ஒரு குற்றச்சாட்டை இந்த மன்றத்திலே அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாகத் தான் நான் சொன்னமாதிரி சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு காவல் துறையினருக்கு நாம் நல்ல ஊதியங்களை அளித்து வருகிறோம். இன்னும் பல்வேறு சலுகைகளை அறிவிக்கிறோம். முதலமைச் சர் கூட காவல் துறையினர் வீரச் செயல்களைப் புரிந்து, பணியில் இருக்கும் போது இறந்துவிட்டால், இன்னும் 10,000 ரூபாய் அவர்களுடைய குடும்பத்துக் குத் தருகிறோம் என்று அறிவிக்கிறார்கள்.

அப்படி இருந்தும் காவல் துறையில் இருக்கின்ற சிலர் எப்படிப்பட்ட கொடுமைகளைப் புரிகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுக்கா சின்னசேலம் சேக் அமீர் சாகிப் குமாரர் எஸ். ஏ. பாட்சா என் பவர் கொடுத்திருக்கிற தகவல்கள். அந்த வட்டார காவல் துறை அதிகாரிகள் மதுவிலக்குக் குற்றங்களைச் செய்ய பொதுமக்களைத் தூண்டுகிறார்கள். மது விலக்குக் குற்றத்தைச் செய்ததும் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்கிறார் கள். பிறகு அவர்களைக் காப்பாற்ற பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக காவல் துறையி லுள்ளவர்கள் இப்படிப்பட்ட குற்றங்களைப் பரவலாகச் செய்து வருகிறார்கள் என்கிற தகவல் என்னிடம் இருக்கிறது.

ஒரு பக்கம் மது விலக்குக் குற்றம் செய்யக் கூடாது என்று காவல் துறை யினரால் சொல்லப்படுகிறது. எல்லோராலும் சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லிய காவல் துறையினரே மது காய்ச்சு என்று பொதுமக்களிடம் சொல்லி தூண்டி விட்ட பிறகு அவர்களை மது விலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்கி றோம் என்று சொல்லி, கைது செய்கிறார்கள். அதன் பிறகு கையூட்டாகப் பணம் கேட்கிறார்கள். பணம் கொடுக்க மறுத்தால், அவர்களைச் சித்திர வதை செய்து பலியாக்கிக் கொண்டிருக்கிறார்கள், அதற்கு ஒரு உதாரணத் தைச் சொல்ல விரும்புகிறேன்.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் தாலுக்கா வெள்ளோடு என்ற ஊருக்குப் பக்கத்தில் காடை என்ற ஆரோக்கியத்தின் மனைவி சம்பூரணம் என்பவர் ஒரு புகார் எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்த அம்மையாரின் கணவன் குடித்து விட்டதாக அவரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதாக வும், மறுநாள் சிறைச்சாலையில் அவர் அடைத்து வைக்கப்பட்டு போலீசாரால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்ததாகவும் அதற்கு மறுநாள் அவருடைய பிணத்தை ஒப்படைத்ததாகவும் அந்த அம்மையார் புகார் கொடுத் திருக்கிறார். மதுவிலக்குச் சட்டத்தை சட்டத்திற்குப் புறம்பாகப் பயன்படுத் திக் கொண்டு, மக்களை எந்த அளவுக்கு துன்பப்படுத்துகிறார்கள், கொடுமைப் படுத்துகிறார்கள், சித்திரவதை செய்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காக இதை நான் இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் சொன்னவைகள் எல்லாம் எப்படிப்பட்ட அராஜகத்தில், வன்முறையில் காவல் துறையினர் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒருசில எடுத்துக் காட்டுக்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 ஏப்ரல் 25

அடுத்து, திருட்டு வழக்கில் சந்தேகப்பட்ட ஒருவரைக் கைது செய்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டம் ஆர். கே. பெட் காவல் நிலையத்தில் துரைசாமி என்ற ஒரு அரிசனத் தோழரையும் அவருடைய மகள் செந்தாமரையையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று வழக்குப் பதிவு செய்து, அதை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, காவல் துறை அதிகாரிகள் அவரை வற்புறுத்துகிறார்கள். இந்தக் குற்றங்களுக்கும் எனக்கும் சம்பந்தமேயில்லை என்று அவர் சொல்லிய நேரத்தில் அவரைத் துன்புறுத்தும் வகையில்—இங்கு இருக்கிற பெண்மணிகளும் நிதியமைச்சர் அவர்களும் மன்னிக்க வேண்டும்—தகப்பன் முன்னாலேயே மகளை நிர்வாணமாக்கி தகாத முறையில் காவல் துறையினர் நடந்துகொண்டிருக்கிறார்கள். அதுபற்றி முதலமைச்சருக்கும் இந்த அரசுக்கும் அவர்கள் புகார் அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான செயல்களைப் புரிகின்ற காவல் துறையினர் மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்து, விசாரித்து, வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று நான் சொல்கின்ற கருத்தினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

இன்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் சில இலாகாக்களுக்கு நிதி ஒதுக்கம் செய்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்காக நிறைய அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன் இன்னும் சில குறிப்புகளை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ரிட்டயராகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பென்ஷன் வழங்கப்படுகிறது. அதை ஒரு நியாயமான கருத்தாகக் கருதலாம். நான் கோரிக்கை எதையும் வைக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பென்ஷன் வழங்கும்போது, கூடவே அவர்களுக்கு ஒரு 'ஐடன்டிபிகேஷன்' கார்டு கொடுத்தால் அவர்கள் பஸ்களில் பயணம் செய்கின்ற நேரத்தில் அவர்களுக்கு வசதியாக இருக்கும். அப்படிப்பட்ட பணச் செலவில்லாத ஒரு உத்தரவை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிதியமைச்சருக்கு நிதித் துறையில் செலவு வைக்காமல் இப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை மட்டும் நான் வைத்திருக்கிறேன்.

பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. அப்படி நிதி ஒதுக்கம் செய்கின்றபோது, அந்த நிதியை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தி, ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தாமல் நெடுஞ்சாலைத் துறை நிதியைச் செலவழிக்காமல் திருப்பிக் கொடுக்கிறது. அது ஒருவேளை நிதியமைச்சருக்கு மகிழ்ச்சி தரும். அதன் காரணமாக எந்த அளவு நாட்டிலே

1979 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நடைபெறவேண்டிய நல்ல பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன என்பதை நான் விவரமாக இங்கே சொல்லி விளக்காவிட்டாலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஏப்ரல் 3 ஆம் நாள் வந்திருக்கின்ற ஒரு செய்தியை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட அதைப் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

1978 ஆம் ஆண்டு 'ரூரல் ரோட்ஸ் அன்ட் ஹைவேஸ்' என்ற தலைப்பில் 5.7 கோடி ரூபாயை நம்முடைய தமிழக அரசு நிதி ஒதுக்கம் செய்திருந்தது. அதில் 1 கோடி ரூபாயை அந்த இலாகா அரசுக்குத் திருப்பித் தந்திருக்கிறது. இதன் மூலம் இந்த நாட்டிலே பல கிராமங்களிலே அமைய வேண்டிய சாலைகள் அமையவில்லை. அதேபோல புதுப்பிக்கப்பட வேண்டிய சாலைகள் புதுப்பிக்கப்படவில்லை. நிதியமைச்சர் அவர்களுடைய பெயரைச் சுட்டிக்காட்டி பத்திரிகையில் சொல்லியிருக்கிறார்கள்.

The Finance Minister Thiru K. Manoharan announced a new scheme in the last year's budget to provide durable metalled road throughout the State linking each village with roads and other main arteries with more important villages.

என்று நம்முடைய நிதியமைச்சர் இந்த மன்றத்திலே சொன்ன வாக்குறுதியைச் சொல்லி அப்படிச் சொல்லியதற்குப் பிறகு அந்த இலாகா ஒரு கோடி ரூபாய் பணத்தைத் திருப்பித் தந்திருக்கிறது என்றால், இது எண்ணிப்பார்க்க வேண்டிய விஷயம்.

அதிகாரிகள் ஏதாவது தவறு செய்தால், நடவடிக்கை எடுக்க வேண்டும். அது முறை. ஒரே ஆண்டில் 50 எஞ்சினியர்கள் இன்றையதினம் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் பணிகளை நிறைவேற்றுவதற்கான எஞ்சினியர்கள் இல்லாத காரணத்தால், பணிகள் தடைப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் சாலைகள் போடப்படவில்லையென்றால், ரோடுகள் செப்பனிடப்படவில்லையென்றால், அரசாங்கம் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இப்படிப்பட்ட காரியங்களுக்கு பணத்தை ஒதுக்கியும் அந்த நல்ல காரியங்கள் ஒழுங்காகச் செய்யப்படாமல் இருக்கின்றன என்பதற்கு இதைவிட ஒரு ஆதாரம் தேவையில்லை என்பது என் கருத்து.

அதேபோல ஹைவேஸ் துறைக்கு மத்திய அரசு கொடுத்த 25 இலட்சம் ரூபாயும் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். சூப்பிரன்டென்டிங் எஞ்சினியர்கள் என்று ஹைவேஸ் துறையில் இருக்கிறார்களே அவர்களை அந்த இலாகாவில் அரசாங்கம் நிம்மதியாகப் பணியாற்ற விடாமல் இருப்பதால் தான், இப்படிப்

பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். ஒரு சூப்பிரன்டென்டிங் எஞ்சினியர் மாற்றத்தில் ஓரிடத்திற்கு வந்திருப்பார். அப்படி வந்தவரிடம் திடீரென்று நீங்கள் விடுப்பில் போய்விடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அவர் விடுப்பில் போய்விடுகிறார். புதிதாக அந்த இடத்தில் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று இன்னொருவருக்கு எஸ்.ஈ. அந்தஸ்தைக் கொடுக்கிறார்கள். முதலமைச்சர் இல்லாத நேரத்தில் உடனடியாக டெபுடி சூப்பிரன்டென்டிங் எஞ்சினியர் (டெக்னிக்கல்) என்ற புதிய பதவி ஏற்படுத்தப்படுகிறது. அப்போது முதலமைச்சர் அவர்கள் பல பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஒருவர் ஒரு பதவிக்குரிய முழுத் தகுதியினைப் பெற்று அதற்குரியவராக இருந்தால், அப்படிப் பதவியை உருவாக்கிக் கொடுப்பதில் தவறு இல்லை. பதவி கொடுக்கப்பட்ட பிறகு, அந்த போஸ்ட் கிரியேட் செய்யப்பட்டதே தவிர, இன்றுவரை அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6.50)

அவர் அந்த இடத்திலே போய் உட்கார்ந்துவிட்டார். அந்தப் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில், இன்றையதினம் கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தத் துறை என்று சொன்னால் "ஊழல்" என்று சொன்னார்கள். அங்கே ஊழலே இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை மூன்றாகப் பிரித்திருக்கிறோம் என்று சொன்னார். மூன்றாகப் பிரித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவகளிடத்திலேயும், போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்களிடத்திலேயும் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். நான் சொல்லிக்கொள்கிறேன், அங்கே ஊழல் நடைபெறுகிறது. அலுவலர்களையும், அதிகாரிகளையும் நியமிப்பதிலே ஊழல் நடைபெற்றிருக்கிறது. பல்லாண்டுகளாக வேலை செய்த ஒருவரை நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசாங்கம் எப்பேற்பட்ட முறையிலே வைத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அங்கே சீப் எஞ்ஜினியர், நேஷனல் ஹைவேய்ஸ் என்று திரு. லோக விநாயகம் என்பவர் இருந்து வருகிறார். அவர்கள் செப்டம்பர் 1979-லே ரிட்டையர் ஆக வேண்டியவர். ஆனால் அரசாங்கம் தலையிட்டு அவசரமாக நிரந்தரமாகப் பதவி உயர்வு பெற்ற ஒருவரை, தற்காலிகமாக சீப் எஞ்ஜினியர் (ஃப்ளாட்ஸ்) என்ற ஒரு பதவியைத் திடீரென்று உருவாக்கி, அந்தப் பதவிக்கு அவரை அனுப்பிவிட்டு அவருக்குக் கீழேயிருக்கின்ற, அய்ந்து பேர்களுக்குக் கீழேயிருக்கின்ற சிவசங்கர மன்றாடியார் என்பவரை சீப் எஞ்ஜினியர்

(நேஷனல் ஹைவேய்ஸ்)-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இந்தக் கொடுமையைப் பார்த்து அங்கே இருக்கிற ஒரு அதிகாரி பதவியிலேயிருந்து விலகிவிட்டார். அவர் எப்பேர்ப்பட்டவர் என்று சொன்னால், அவர்கள் பெயர் அய்யாசாமி, அவர் ஒரு எஞ்சினியர், சீப் எஞ்ஜினியராக வரவேண்டியவர். அதிலேயும், இந்த அரசாங்கம் அய்யாவுடைய பெயரைச் சொல்லி நூற்றாண்டு விழா எடுக்கிறதே; அந்த அய்யாவுடைய பாராட்டைப் பெற்றவர் அந்த எஞ்ஜினியர். இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்து நல்லமுறையிலே பணியாற்றி, அவருக்கு முன்னாலே இருந்த பல சீப் எஞ்ஜினியர்களிடத்திலே பல சான்றிதழ்கள் பெற்ற அய்யாசாமி என்பவருடைய திறமையை இந்த அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை. அவரைவிட ஜூனியராக இருந்த ஒருவரை இந்த அரசு சீப் எஞ்சினியராகப் பதவி உயர்த்தியிருக்கிறது. அந்த ஆத்திரத்தில் அவர் பதவி விலகியிருக்கிறார் என்று சொன்னால், இது இந்த அரசுக்கு நல்லதா?

அதைப்போலவே, ஏ. கிருஷ்ணசாமி என்பவர் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சீப் எஞ்ஜினியராக பாம்பன் பிரிட்ஜ் வேலைக்கு என்று நியமிக்கப்பட்டார். அவர் நல்ல திறமைசாலி. அந்தப் பணியிலேயே சிறப்புப் பயிற்சி பெற்றவர். ஒரு ஸ்பெஷலிஸ்ட். அவர் சிறந்த முறையில் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஆனால், இந்த அரசு அந்தப் பணியிலிருந்து அவரை எடுத்துவிட்டு அந்தப் பாம்பன் பாலப் பணிக்காக அப்துல் சமது என்ற வேறொருவரைப் போட்டிருக்கிறார்கள். அவர் எப்படிப்பட்டவர் என்றால், அவருக்கும் அந்த வேலைக்கும் சம்பந்தம் இல்லை. அந்த வேலைக்கு வேண்டிய 'டெக்னிக்கல்-நோஹௌ' அவருக்குத் தெரியாது. அந்தத் துறையிலே அவருக்கு முன் அனுபவம் இல்லை. அப்படிப்பட்ட ஒருவரை அங்கே நியமித்திருக்கிறார்கள். இப்படி நியமிக்கப்படும் நியமனங்களே ஊழல். ஆளும் கட்சி மொழியிலே சொன்னால் இதெல்லாம் 'ஊழல்'.

அந்தத் துறைக்கு ஒதுக்கிய பணத்தைச் சரியாகச் செலவழித்து ஆக்கப் பணிகளை நிறைவேற்றாமல் ஏன் ஒதுக்கிய பணத்தை அதிகமாக நீங்கள் திருப்பிக்கொடுக்கிறீர்கள் என்று அவர்களைக் கேள்வி கேட்டவுடனேயே, அந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்தவுடனேயே அவசர அவசரமாக அந்த இலாக்காவிலே இருக்கின்றவர்கள், பல எஞ்ஜினியர்கள், பல தவறுகளைச் செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், 31—3—1979 வரை அவர்கள் பல வேலைகள் செய்ததாக பில் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே சில இடங்களிலே சாலைகளே போடாமல், சாலைகள் போட்டதாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், நான்

நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், திருநீர்மலை முதல் திருமுடிவாக்கம் வரையில் 25-ம் கிலோமீட்டரிலேயிருந்து 29/4 கிலோ மீட்டர் வரையில் சாலை போட்டதாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கு சாலையே போடவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்றைக்கே அதிகாரிகளை அங்கே அனுப்பிப்பார்க்கலாம். இந்த அரசாங்கம் பணத்தைத் திருப்பிக்கொடுக்கச் சொல்கிறது என்று தெரிந்த வுடனே அந்த சாலை போட்டதாக எம்.டி. சுப்பிரமணியம் என்ற காண்டிராக் டருக்கு 60 ஆயிரம் ரூபாய்க்கு பில் போட்டு பணம் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்போலவே, மாங்காட்டுப்பட்டு என்று ஊருக்கும் முகறாவாக்கம் என்ற ஊருக்கும் இடையிலே இருக்கக்கூடிய 0 கிலோமீட்டரிலிருந்து 3/8 கிலோ மீட்டர் தூர சாலையை 70 ஆயிரம் ரூபாய் செலவில் போட்டதாக 'செக்' கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே, கொறட்டூர்-சின்னனூர்-பெரிய பாளையம் சாலை, 0 கிலோமீட்டரிலிருந்து 5/8 கிலோமீட்டர் தூரம் வரையில் சாலை போட்டதாகச் சொல்லி கே. சி. ஜெயபால் என்ற தாண்டிராக் டருக்கு பில்போட்டு பணம் கொடுத்திருக்கிறார்கள். இப்படி தமிழ்நாட்டில் இன்றையதினம் சாலைகளே போடாமல், சாலைகள் போட்டதாகச் சொல்லி பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் வீணாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதியொதுக்கம் மட்டும் செய்தால் போதாது. இப்படிப் பட்ட தவறுகள் நடக்கும்போது, அவற்றைச் சுட்டிக்காட்டுகின்ற நேரத்தில் அவைகளின்மீது கடுமையான நடவடிக்கைகளும் எடுத்தாக வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் 20 நிமிடங்கள் கேட்டார்கள், ஏற்கனவே 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : பொதுவாக முதலமைச்சர் அவர்களை யாரும் பார்ப்பது மிகவும் கடினம். அமைச்சர்களேகூட அவரைப் பார்க்க முடியவில்லை என்றெல்லாம் பேசப்படுகிறது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்க்க முயற்சித்ததில்லை. ஆகவே, எனக்கு அதைப் பற்றிய அனுபவம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்க்க அரசாங்க ஊழியர்களும், பிரச்சினை உள்ளவர்களும் போகும்போது, அவருக்கு இருக் கின்ற பி.ஏ.க்களில் ஒருவர் "நீங்கள் இந்தச் செய்திகளைச் சொன்னால், அவருக்கு ஒன்றும் புரியாது, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் எழுதி ஒரு கோரிக்கையாக 'அண்ணா' பத்திரிகையிலே விளம்பரமாகக் கொடுத்தால், முதலமைச்சர் அவர்கள் படித்துப் புரிந்துகொள்வார்" என்று சொல்கிறார். அப்படிக் கொடுத்தால், அதற்குப் பிறகு நாங்கள் தொடர்புகொண்டு, என்கேஜ் மென்ட் பிக்ஸ் பண்ணி அழைக்கிறோம் என்று சொல்லி, இன்றையதினம் எந்தப்

பிரச்சினையாகப் போனாலும், 'அண்ணா' பத்திரிகையிலே விளம்பரமாகக் கொடுத்தால்தான் அந்தப் பிரச்சினைகள் கவனிக்கப்படும் என்ற நிலைமை கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. டிப்ளமா பட்டம் பெற்ற பொறியாளர் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்க்க முயற்சித்து, அவர் களைப் பார்க்க முடியாததால், அவர் தெரிவிக்க விரும்பிய செய்திகளை எழுதி 'அண்ணா' பத்திரிகையிலே விளம்பரமாகக் கொடுத்திருக்கிறார். அவர் அப்படி விளம்பரமாகக் கொடுத்த கோரிக்கையின் டைப் செய்யப்பட்ட காப்பி என்னிடத்திலே இருக்கிறது. அவர் 'அண்ணா' பத்திரிகைக்குக் கொடுத்தது விளம்பரமாக வந்திருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் அவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கண்டித்து ஒரு அறிக்கை கொடுத் திருக்கிறார், அதையும் வாங்கி விளம்பரமாகப் போட்டிருக்கிறார்கள். அவர் களுக்குப் பணம்தான் மிகவும் அவசியம். இப்பேர்பட்ட தவறுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, ஆகவே, இவைகளைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுவாக தவறுகளே நடக்கக்கூடாது, ஊழலே நடக்கக்கூடாது, லஞ்சத்தை ஒழிப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தபோதுகூட, சில தவறுகளைக் கண்டித்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். குறிப்பாக அவருடைய பெயரை எந்தவிதமான விளம்பரத் திற்கும் பயன்படுத்தக்கூடாது என்பதிலே அவர் மிகவும் கண்டிப்பாக இருப்பார். நடிகராக இருந்தபோதேகூட அப்படி இருந்தார். நடிகைகளைப் பொறுத்த வரையில், சிலர் இந்த சீப்பு, சோப்புக்களுக்கெல்லாம் விளம்பரம் கொடுக்கிறார் கள், பலவிதமாக போஸ்கள் கொடுக்கிறார்கள், ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் அன்றையதினமே மிகவும் கண்டிப் பாக இருந்தார்கள். யாரோ ஒருவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரைப் போட்டு விளம்பரப்படுத்தியதற்காக, அவர் மீது வழக்குப் போடுவேன் என்று அந்தக் காலத்திலேயே பத்திரிகையிலே எச் சரிக்கை விடுத்தார். தன்னுடைய பெயரை எந்த விளம்பரத்திற்கும் பயன் படுத்தக்கூடாது என்று மிகவும் கண்டிப்பாக இருப்பவர் நம்முடைய மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள். நம்முடைய நாட்டிலே 'எஸ்' மருந்து நிறு வனம் என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்திற்கு இந்த இரண் டாண்டுகளிலே ஏற்பட்ட வளர்ச்சியும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற செல் வாக்கும் கொஞ்சநஞ்சமல்ல. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கோ ஒரு குழந்தையை எடுத்து அதை அன்போடு பார்க்கின்ற ஒரு படத்தை

வைத்துக்கொண்டு, அந்த நிறுவனம் தன்னுடைய விளம்பரங்களிலே அதைப் பயன்படுத்துகிறது. எல்லா டாக்டர்களிடத்திலேயும் முதலமைச்சர் அவர் களின் படம் போட்ட காரணத்தினால், இந்த மருந்தையே வாங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அந்தக் கம்பெனிக்குச் சொந்தக்காரர், மதுரை யிலே கெஸ்ட் ஹவுஸ்-க்குச் சென்று மதுரை மருத்துவமனையில் இருக்கும் டாக்டர்களை எல்லாம் அழைத்து அவர்களுக்கு விருந்து வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது படத்தைப் போட்டு விளம்பரம் செய்யப்பட்டிருக் கும் இந்த மருந்துகளையே வாங்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தப்பட் டிருக்கிறார்கள். இப்படி, இன்றையதினம் ஒரு தனிப்பட்ட நிறுவனம் பல லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடிப்பதற்கு நம்முடைய மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களின் பெயர் பயன்படலாமா, துணையாக இருக்க லாமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன இந்தக் குற்றச் சாட்டுகளைப் பரிசீலித்து இந்தக் குற்றங்களுக்கு உரியவர்கள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும். காவல் துறையில் இருப்பவர்கள் கடுமையாகக் குற்றங்கள் செய்கின்ற காரணத்தினால், அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய அரசாங்கம் ஒரு புது உத்தரவைப் போட்டிருக் கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் நிகழ்ச்சிகள் முடியும் வரை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : சப் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் அவர்கள் பிறந்த மாவட்டங்களிலே பணியாற்றக்கூடாது. ஹெட்கான்ஸ்டபிள்கள் எல்லாம் அவர்கள் பிறந்த ரெவின்யூ டிவிஷன்களிலே இருக்கக்கூடாது என்றும், கான்ஸ் டபிள்கள் எல்லாம் அவர்கள் பிறந்த எல்லைக்குள்ளே பணியாற்றக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சில காவலர்கள் தவறுகளைச் செய்வார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே எங் களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அதற்காக ஒட்டு மொத்தமாக 48 ஆயிரம் போலீஸ்காரர்களும் தவறு செய்யக்கூடியவர்கள் என்று நாம் சொல்லக்கூடாது. எங்களது கட்சிக்கும் அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. சப்-இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் குறிப்பிட்ட ஒரு இடத்திலே பிறந் திருந்தால், அந்த மாவட்டங்களிலே அவர்கள் பணியாற்றக்கூடாது என்றும், ஹெட்கான்ஸ்டபிள்கள் அவர்கள் பிறந்த ரெவின்யூ டிவிஷன்களிலே பணி யாற்றக்கூடாது என்றும் போட்டிருக்கும் இந்த உத்தரவு அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்று போட்டிருக்கின்ற உத்தரவு. ஆகவே, இந்த உத்தரவை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இந்த நிதியொதுக்கத்தைத் தருவதிலே நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் ஒதுக்கப் படுகின்ற நிதி வீணாக்கப்படாமல் செலவழிக்கப்படாமல் மறுபடியும் நம்முடைய கைக்குத் திரும்பிவராமல்—நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளிநாட்டுக்குப் போய்விட்டு வந்த பிறகாவது அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-00)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது விவாதமாகத் துவங்கிய இந்தத் தொடர் கூட்டம் நிதி ஒதுக்க மசோதாமீது பேசி முடிவடைகிற நிலைக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை அவையின்முன் அளித்தபோது, மிகுந்த நம்பிக்கையோடு பல்வேறு துறைகள் இன்னின்ன காரியங்களைச் செய்ய இருக்கின்றன என்று கோடிட்டுக் காட்டி னார்கள். அதனையொட்டி பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர்களும் மிக விரிவாக அவரவர்களுடைய துறைகள் மேற்கொள்ள இருக்கிற திட்டங்களை இங்கே விளக்கினார்கள். என்னைப் பொறுத்தவரை யில், இந்த அரசினுடைய கொள்கைகளில் மாறுபட்ட கருத்திருந்தாலும், அமைச்சர்கள் தாங்கள் ஏற்றிருக்கிற துறைகள் மூலம் அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகுந்த நம்பிக்கையோடு இருந்து செயல்படுகி றார்கள் என்பதையும் நாம் சுட்டிக்காட்டுகிற குற்றங்களையும் குறைகளையும் பல நேரங்களில் உணர்ந்து அவைகளைக் களைய முயற்சியெடுக்கிறார்கள் என் பதையும், ஒரு வேளை முடியவில்லையென்றாலும் குறைந்தபட்சம் தங்களுக் குப் புரிந்த அளவில் குறைகளைக் களைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை யும் தெரிவித்து அதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே எனக்கிருக்கிற சங்கடமெல்லாம், இவ்வளவு விவாதங்களுக்குப் பிறகு ஒதுக்கீடு செய்யப்படுகிற பணம் முறையாகச் செலவு செய்யப்படுகிற வகையில் அடிமட்டத்திலிருக்கிற அரசு அமைப்புகள் இயங்கிக் கொண்டிருக்கின்றனவா என்றால், இல்லை என்பதைத்தான் மிக வேதனையோடு சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இந்த அவையும், அமைச்சரவையும் முடிவு செய்யப்பட்ட திட்டங்களை, எந்த நிலையில் செயல்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்களோ, விரும்புகிறார்களோ அந்த நிலையில் அவைகள் செயல் படுத்தப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பெரும் பாலான இடங்களில் இப்படிச் செயல்படுத்தாத நிலைதான் இருந்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னால் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 'அரசு அதிகாரிகள் இந்த அரசினுடைய திட்டங்களைச் சரிவரச் செயல்படுத்துவதில்லை' என்பதை ஒரு எச்சரிக்கையாகவே கூடக் குறிப்பிட்டார்கள். அப்போது ஒரு இலேசான சந்தேகம்கூட எழுந்தது. அரசு அதிகாரிகள் வேறு கட்சிகளோடு தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தால், இந்த அரசின்மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அப்படிச் செயல்படுகிறார்களோ என்ற சந்தேகம் தோன்றுமளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேச்சும் எச்சரிக்கையும் அமைந்திருந்தன. அரசு அதிகாரிகளுக்கு மாற்றுக் கட்சிகளோடு தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பது வேறு. ஆனால் பல அதிகாரிகள் இந்த அவையும் அமைச்சரவையும் ஒப்புதல் தந்திருக்கிற திட்டங்களைக்கூட நிறைவேற்றாத நிலையில் இருக்கிறார்கள். நிறைவேற்றாத நிலை மட்டுமல்ல, தங்களை யாரும் தட்டிக் கேட்கிற நிலையில்லை என்று செயல்படுகிறார்கள். இதன் காரணமாகத்தான் நான் நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது துவக்கத்திலேயே ஒரு கருத்தைத் தெரிவித்தேன். அதாவது

"This Government is losing its grip over the administration" என்று குறிப்பிட்டேன்.

உள்ளாட்சித் துறை இன்றையதினம் ஒரு அறிவிப்பைச் செய்திருப்பதாக நண்பர்கள் தெரிவித்தார்கள். அதாவது இன்னும் 5, 6 மாதங்களுக்கு உள்ளாட்சித் தேர்தல்கள் இல்லை. அவைகள் தள்ளிப் போடப்படுகின்றன என்று அறிவித்திருப்பதாகச் சொன்னார்கள். நான் அதைப்பற்றிய விவாதத்திற்குள் இப்போது போக விரும்பவில்லை. எப்படியானாலும் 1979 ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறாது என்ற நிலை இருக்கிறது. இன்றையதினம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நிலையில் அந்த உள்ளாட்சி அமைப்புகள் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று பார்க்கிறபோது, அவைகளைவிட மிகத் தான்தோன்றித்தனமாக இயங்கும் வேறு அமைப்புகளே இருக்க முடியாது என்ற நிலையில் இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து ஒன்றியங்களை நிருவாகம் செய்து வரும் தனியதிகாரிகள் தங்களைத் தட்டிக் கேட்போர் யாருமில்லை என்ற அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய பகுதியில் நகர வளர்ச்சிக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் 31—3—1979-ல் நடைபெறும் என்று 30—3—1979 அன்றுதான் எனக்குத் தகவல் தரப்படுகிறது. திண்டிவனம் நகரத்தில் தற்போது நகராட்சி ஆணையரே தனியதிகாரியாகச் செயல்படுகிறார். அவரிடமிருந்து எனக்கு

30—3—1979 ஆம் தேதியன்று 31—3—1979-ல் நடைபெற இருக்கிற கூட்டம் பற்றிய அறிவிப்புத் தகவல் வருகிறது. எந்த அளவுக்கு இதுபோன்ற விஷயங்களில் நிருவாகத்தில் உள்ள அதிகாரிகள் முக்கியத்துவம் அளிக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அவையில் நான் பேசும்போது, அவ்வப்போது நடைபெறுகிற நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். ஏற்கெனவேகூட என்னுடைய பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றினைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்று அமைச்சர் ஒருவரை அழைத்தார்கள். அவர் தன்னால் வர இயலவில்லை என்று சொல்லிவிட்டார். பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஒரு தண்ணீர்த் தொட்டியைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியம் அந்தத் தண்ணீர்த் தொட்டியை பஞ்சாயத்திடம் ஒப்படைத்து விடுகிறது. அதற்கான கடிதங்கள் பஞ்சாயத்து யூனியனிலிருந்து பஞ்சாயத்துத் தலைவருக்குப் போகின்றன. வடவாலப்பாக்கம் என்ற பஞ்சாயத்தின் தலைவருக்கு மரக்காணம் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து 22—7—1977, 12—8—1978 மற்றும் 29—1—1979 ஆகிய தேதிகளில் கடிதங்கள் போகின்றன. வடவாலப்பாக்கம் கிராமத்திலுள்ள தரை மட்டத் தண்ணீர்த் தொட்டி, மின்னிணைப்புக் கொடுக்கப்பட்டு இதுவரை இயங்கவில்லை என்று தெரிகிறது. பொது மக்களின் நன்மைக்காகக் கட்டி முடித்ததை இயங்காமல் வைத்திருப்பது முறையல்ல. எனவே மின்சார மோட்டாரை இயக்கி, கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன் என்று மரக்காணம் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளர் 9—2—1979-ல் ஒரு கடிதத்தை பஞ்சாயத்தின் தலைவருக்கு எழுதுகிறார். கட்டிடத் திறப்புவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. எங்கள் கட்சித் தலைவராகவும் மாநிலங்களின் அவையில் உறுப்பினராகவும் இருக்கும் திரு. மூப்பனார் அவர்கள் அந்தத் தண்ணீர்த் தொட்டியைத் திறந்து வைப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் விழா நடப்பதற்கு முதல்நாள் அந்த அதிகாரியிடமிருந்து ஒரு தடையுத்தரவு வருகிறது. அந்தத் தண்ணீர்த் தொட்டியைத் திறக்கக்கூடாதென்று தடையுத்தரவு வருகிறது. உடனே அதுபற்றி அமைச்சரிடம் தொடர்புகொள்ளுகிறபோது, அவர் இல்லை என்ற நிலையில் துறையினரோடு தொடர்பு கொண்ட பிறகு, 'தண்ணீர்த் தொட்டியைத் திறக்கலாம்' என்று துறையிலிருந்து அனுமதி வருகிறது. இப்படி பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஒரு தண்ணீர்த் தொட்டியைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டு, நாள் குறிக்கப்பட்ட பிறகு, அதற்கு முன்னால் அதைத் திறக்கக்கூடாது என்று தடை உத்தரவு வருகிறது. பஞ்சாயத்திலிருந்து தீர்மானம் போட்டு 10 நாட்களுக்கு முன்பே அனுப்பி வைக்கிறார்கள். இத்தனைக்கும் பிறகு முன்னாள் இரவு 'தண்ணீர்த் தொட்டியைத் திறக்கக்கூடாது' என்று உத்தரவு வருகிறது

என்றால், இந்த ஆட்சியை அந்த ஆணையாளர் மதிக்கிறார் என்று பொருளா அல்லது அவருடைய அதிகாரத்தைக் காட்டுகிறார் என்று பொருளா? தான் எதைச் செய்தாலும் இந்த ஆட்சியில் கேட்பார் இல்லை என்ற நிலையில்தான் அந்த அதிகாரி அப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்கிறார் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏதோ ஒரு பஞ்சாயத்து யூனியனில்தான் இப்படிப்பட்ட நிலை என்பதல்ல. எங்கேயும் இதே நிலைதான். இது ஒப்படைக்கப்பட்ட தண்ணீர்த் தொட்டியைத் திறப்பதிலே ஏற்படுகிற நிலை. இன்னொரு பக்கம்— செஞ்சியில்—ஒப்படைக்கப்படாத கட்டிடத்தைத் திறந்து வைக்க மாவட்டக் கலெக்டர் வருகிறார், மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் வருகிறார்கள், இரண்டு சாரார் அங்கே அடித்துக்கொண்டு உதைத்துக்கொண்டு செயல்படுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, பிறகு நடவடிக்கை எடுக்கிறோம் என்கிறார்கள். இது ஒரு பக்கம். இந்த நிலையில்தான் நாம் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறோம். உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலை இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு நடத்தப் போவதில்லை என்ற நிலையில் இருக்கிற அதிகாரிகள் மூலமாகத்தான் பல்வேறு வேலைகளைச் செய்தாக வேண்டும். இந்த நிலையில் நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம் என்பதை அமைச்சர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைலம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த செந்தூர் என்ற கிராமத்தில் 16 ஆண்டுகளாக ஒரு ஆசிரியர் ஒரே இடத்திலிருந்து கொண்டு தொல்லைகளைத் தந்து கொண்டிருக்கிறார். அந்த ஊர் மக்கள் முழுவதும் அவரை அந்த இடத்திலிருந்து மாற்ற வேண்டுமென்று திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இத்தனையையும் மீறி அவர் அங்கேயே இருந்து கொண்டிருக்கிறார். அதற்கு யாருடைய சிபாரிசு இருக்கிறது என்பதுபற்றி நான் இங்கே விரிவாகப் போக விரும்பவில்லை. ஊராட்சி ஒன்றியங்களும் நகராட்சி மன்றங்களும் எப்படிப்பட்ட முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டவே இதைச் சொல்லுகிறேன். ஒரு பக்கத்திலே பல உள்ளாட்சி அமைப்புகளில் எந்த வேலையும் செய்ய முடியாதபடி பணம் இல்லை என்கிற நிலை. இன்னொரு பக்கம் பணம் ஒதுக்கப்பட்ட வேலைகளில் வேலை நடக்காமல் மோசடி நடக்கும் நிலை. இப்படிப்பட்ட முறையில் இந்த அவையையும் அமைச்சரவையையும் மதிக்காமல் பல உள்ளாட்சி அமைப்புகள் தான் தோன்றித்தனமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் எந்த எண்ணத்தோடு பணத்தை ஒதுக்கீடு செய்கிறார்களோ அந்த எண்ணத்தில் செலவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையைப்பற்றியும் மெத்தப் பணிவோடு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். காவல் துறை இன்றையதினம் செயல்படுகிற நிலையிலேயே தொடர்ந்து செயல்பட்டால், இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு ஓராண்டு காலத்திற்குள் இருக்கவே இருக்காது. எது வேண்டுமானாலும் நடைபெறும் என்ற நிலைதான் தற்போது இருக்கிறது.

காவல் துறையைப் பொறுத்தவரையில், மதுவிலக்குக் குற்றங்களைப் பிடிப்பது, அது சம்பந்தப்பட்ட கேஸ்களைப் பதிவு செய்வது என்பதைத் தவிர, வேறு தொழிலைச் செய்யவில்லை. தமிழகம் முழுவதிலுமிருந்து எனக்குக் கிடைக்கிற தகவல் இதுதான். வீட்டில் நகைகள் கொள்ளை போனதைப் பற்றியோ பொதுமக்கள் தங்கள் மீது தாக்கல் நடைபெற்றதைப் பற்றியோ தருகின்ற புகார்கள்கூட ஒழுங்காக விசாரிக்கப்படுவதில்லை. குற்றவாளிகளைக் கைது செய்வதுகூட நடக்கும். ஆனால் முறையான விசாரணை அதற்குப் பிறகு இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. பல மாதங்கள், இன்னும் சொல்லப் போனால் ஆண்டுக் கணக்கில் எந்தக் குற்றப் புகார் பேரிலும் விசாரணை என்பதே இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. திண்டிவனத்தில் பசுபதி என்பவரிடமிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகை கொள்ளையடிக்கப்பட்டது என்று புகார் கொடுக்கப்பட்டும் பல மாதங்களாகியும் இதுவரை அதுபற்றி ஒன்றும் காவல் துறையிடமிருந்து தெரியவில்லை. எனவே சட்ட மன்றத்திலாவது நீங்கள் கேட்கக் கூடாது என்ற நிலை வந்திருக்கிறது.

(பிற்பகல் 7-10)

காவல் நிலையங்களில் உள்ளவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதில்லையென்பதை வேறு எங்கே சொன்னாலும் கேட்பதில்லை, ஆகவே சட்டமன்றங்களிலாவது பேசுங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு காவல் துறை புரையோடிப் போயிருக்கிறது. காவல் துறை சரியாக, முறையாக இயங்கவில்லை. நான் ஆட்சியிலே உள்ளவர்களைப் பற்றிக் குற்றம் சாட்டவில்லை. காவல் துறையை இயக்குபவர்கள் சரியாக இயக்கவில்லை என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலைக்குக் காரணம் என்னவென்பதைப் பார்க்க வேண்டும். நாம் ரிடையர் ஆனவர்களையெல்லாம் அந்தத் துறையிலே வைத்துக்கொண்டிருப்பதால், அவர்கள் பொறுப்பில்லாதவர்களாக இருக்கிறார்கள். தங்கள் இஷ்டப்படி நடக்கிறார்கள். அவர்கள் முறையாகச் செயல்பட்டிருந்தால், துப்பாக்கிச் சூடுகளைத் தவிர்த்திருக்க முடியும். எந்த ஸ்ட்ரைக் நடந்தாலும் பரவாயில்லை, ஒன்றோ இரண்டோ துப்பாக்கிச் சூடுகளை நடத்தலாம் என்ற அளவுக்கு நாட்டிலே நிலைமைகள் இருந்து கொண்

டிருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு நான் எச்சரிக்கையாகக் கூட சொல்ல விரும்புகிறேன், இந்த நிலை தொடர்ந்து வளர்ந்தால், அதனால் பல விபரீதங்கள் நடக்குமென்பதை. ஏற்கெனவே தமிழக காவல் துறை அதிகமான துப்பாக்கிச் சூட்டை நடத்திக் கொண்டிருப்பவர்கள் என்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது வளர்ந்து கொண்டே போவது நல்லதல்ல.

"தூத்துக்குடியில் பட்டப் பகலில் துணிகரக் கொள்ளை" என்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. செல்லம்மாள் என்ற அம்மையார் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். செல்லம்மாள், தங்கவேலு நாடார் மனைவி, மஞ்சள்நீர்காயல், ஊரைச் சேர்ந்தவர், திருநெல்வேலி மாவட்டம் ஏரல் போலீஸ் நிலையத்தில் கொடுத்த பிராது பல மாதங்களாக கேட்பாரற்று இருக்கிறது என்று தூத்துக்குடியிலிருந்து தகவல் வந்திருக்கிறது.

அடுத்து, விழுப்புரம் பகுதியிலிருந்து, வெங்கந்தூர் கிராமத்திலிருந்து ஒரு தகவல் வந்திருக்கிறது. இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். "அந்தக் கொலை தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காவல் துறை அதை ஒதுக்கிவிட்டது. விசாரணை முறையாக நடைபெறவில்லை" என்று சென்னையில் உள்ள கிரைம் பிரான்ச் சி.அய்.டி.க்குத் தகவல் கொடுத்திருக்கிறார். அதற்குப் பிறகும் கூட விசாரணை முறையாக நடைபெறவில்லை என்று சொல்லுகிறார்.

அடுத்து, திண்டிவனம் பகுதியைச் சேர்ந்த பசுபதி என்கிற இன்ஜினியர் தன் கையில் பையையும், பணப் பெட்டியையும் எடுத்துச் செல்லும்போது பெட்டியும், பையும் களவு போயிற்று என்றும் ரூபாய் 25 ஆயிரம் பெறுமானமுள்ள நகைகள் பறி போய்விட்டதென்று காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தார். புலன் விசாரணை என்ற பெயரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது வரை கண்டுபிடிக்க முடியவில்லையென்று சொல்லுகிறபோது, கண்டுபிடிக்க முடியவில்லையா அல்லது கண்டுபிடிக்க விரும்பவில்லையா என்று தெரியவில்லை. ஆனால் அந்த நகைகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

இன்னுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன். செயின்ட் தாமஸ் மவுண்டில் ஃபிரான்சிஸ் என்ற சப்-இன்ஸ்பெக்டர், இந்திரா தேசிய சங்கத்திற்குப் பல ஆண்டுகளாகச் சொந்தமாயிருந்த குடிசையைப் பிரித்துப் போட்டு விட்டு, அவரே ஒரு குடிசையைப் போட்டுக் கொண்டார். சப்-இன்ஸ்பெக்டர் போட்

டிருக்கிற குடிசை உட்பட போட்டோ இருக்கிறது என்னிடம். இந்த அளவுக்குத் தைரியம் அவருக்கு எப்படி வருகிறதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திருவொற்றியூரிலிருந்து ஒரு செய்தி—

"Complaint against non-joinder of two real accused in a murder case of Thirumayam Police Circle in Pudukkottai district".

இப்படிப்பட்ட தகவல்கள் ஒவ்வொரு ஊரிலிருந்தும், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், மாநிலம் முழுக்க இருந்து வந்து கொண்டிருக்கின்றன. இதற்கான பல்வேறு காரணங்களைச் சொல்ல முடியும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற குறைகள் வளர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? காவல் துறையில் உள்ளவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற முறையில் செயல்படுவதால் சட்டம், ஒழுங்கு சீர் குலைகின்றது. இதனுடைய விளைவுகள் மிகப் பயங்கரமாக இருக்கின்றன. பல இடங்களில் வன்முறைகள் நடந்திருக்கின்றன. வன்முறையில் ஈடுபட்டவர்கள் யாரென்று கண்டுபிடிக்கப்படவில்லை. இதற்கான காரணங்கள் என்ன? சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளின் கடந்த கால வாழ்வைப் பார்த்தால், அவர்கள் பல முறை சஸ்பெண்ட் ஆனவர்களாகவும், காவல் துறையினுடைய நடவடிக்கைக்கு ஆளானவர்களாகவும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் காவல் துறையின் உதவியைக் கோரி வருகின்றவர்களையெல்லாம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் சில இடங்களில் வழக்கறிஞர்களையும் அடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு எவ்வளவு பாதுகாப்போடு மீண்டும் மீண்டும் இது போன்ற குற்றங்களைச் செய்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தத் துறை முறையாகச் செயல்படவில்லை என்பதை வேதனையோடு சொல்ல விரும்புகிறேன்.

ஹைவேஸ் துறைபற்றியும், இரயில்வே செஸ் பற்றியும் பல முறை சொல்லியிருக்கிறேன்

The Collector of South Arcot, Cuddalore has been addressed to provide further funds under R.C.F works to meet L.A. charges and the execution and implementation of the work. On receipt of funds from the Collector, the above work will be taken up and completed."

இந்த ரோடு வேலை என் ஏறத்தாழ ஆறேழு ஆண்டுகளாக நடந்து வருகிறதென்று தெரியவில்லை. இரண்டு மைல் உள்ள இந்த ரோடைப் போட ஆறேழு ஆண்டுகள் பிடிக்கிற நிலையைக் காண்கிறோம். ரோடு போடுவதற்குத் திட்ட

மிடுவதற்கு முன்னாலேயே அந்த செஸ் பண்டில் பணம் இருக்கிறதா, அது முறையாகச் செயல்பட்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்த்து, செயல்பட்டிருக்க வேண்டும். கரடிப்பாக்கத்திலிருந்து ஏரஊர் வரையில் திருவண்ணைநல்லூர் பிளாக்கில் உள்ள ரோடின் கதிதான் இது. செஸ் பண்டில் எவ்வளவு நிதி இருக்கிறதென்று பார்க்காமல், வேலையைத் துவங்குவதும், பிறகு மேற்கொண்டு பணம் தேவையென்று அலைவதும், அதைப் பெற முடியாமல் பிறகு கிட்டப்பிலே போடுவதுமான நிலை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் விரைவாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, அரியலூரில் ஒரு சிமென்ட் ஆலையை துவக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஆலைக்காக வேண்டிய நிலத்தை அரசு ஆர்ஜிதம் செய்திருக்கிறது. அந்த நிலத்தை கொடுத்தவர்களுடைய குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதாக அரசு ஒரு வாக்குறுதியைத் தந்திருக்கிறது. ஆனால் அங்கே செயல்படுகிற அதிகாரிகள் அவர்களுடைய குடும்பத்தினருக்கு வேலை கொடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே வேலையில் இருக்கின்றவர்களை தொழிற்சாலையிலிருந்து எப்படி வெளியேற்றுவது என்று திட்டமிட்டு வெளியேற்றுகிற நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் மனிதாபிமான நிலையிலே நின்று நடக்கவில்லையென்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சில நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும். அவருக்குப் பிறகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேச வேண்டும். அதற்குப் பிறகு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நீண்ட நேரம் பேசவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : பின்தங்கியவர்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு ஒரு தெளிவான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். எங்களுடைய பகுதியிலே பின்தங்கியவர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. குற்றப் பரம்பரைச் சட்டம் நீங்கி பல ஆண்டுகள் ஆகின்றன. நான் குழந்தையாக இருந்தபோதே, அந்தச் சட்டம் நீங்கியது. ஆனால் அதுபோன்ற நிலையிலேயே இன்றும் எங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தவறு செய்தாரென்று செல்வாக்குள்ள ஒருவர் காவல் நிலையத்திற்கு ஒரு பெட்டிஷன் கொடுக்கிறார் என்றால், உடனே ஊரில் இருக்கின்ற 25 பெண்களையும்,

நாற்பது, ஐம்பது ஆண்களையும் அழைத்துப் போய் நாள் முழுவதும் காவல் நிலையத்தில் அவர்களை உட்கார வைப்பதென்ற நிலை இன்றைக்கும் தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கின்றது. ஆனால் அதைப் போல நாங்கள் தகவல் கொடுத்தால், 'நாங்கள்' என்று சொல்லும்போது என் கட்சியைச் சேர்ந்தவர்களைச் சொல்லவில்லை, எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைச் சொல்லுகிறேன்—அப்படி மற்ற சமுதாயத்தினரை அழைத்துப் போவதில்லை. ஆகவே நான் அனுபவத்தின் அடிப்படையிலே சில வேலைகளைச் செய்ததுண்டு. நீதி மன்றத்திலே அவர்களுடைய மனைவி மக்களை வைத்து வழக்குப் போட ஆரம்பித்து, நீதி மன்றத்திற்கு வந்ததும் எல்லோரும் சமம் என்ற நிலை ஏற்பட்ட போதுதான் அந்த நிலை மாறியது. ஆனால் இன்றைக்கு அரசாங்கத்தின் துணை இருக்கிறதென்ற திமிறால் சில பேர்—உண்மையிலேயே அரசாங்கத்தின் துணை அவர்களுக்கு இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியாது—ஆனால், அரசின் பெயரைப் பயன்படுத்தி இதுபோன்ற சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். திண்டிவனம் பகுதியிலே இந்தச் செயலைச் செய்துக் கொண்டிருக்கிற பல பேர் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களிடம் மாமூல் வாங்க துணை நிற்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கொடுக்கிற பிராதுகளை வைத்துக்கொண்டு வன்னிய

(பிற்பகல் 7-20)

சமுதாயத்தை அடக்கிக் கொண்டிருக்கிறார்கள். பல பேர்களை அவர்கள் நாள் முழுக்க காவல் நிலையத்தில் காக்க வைத்துத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். திண்டிவனத்திலே ஒரு பெரிய மனிதருடைய வீட்டிலே வேலை செய்துகொண்டிருந்த ஒரு பெண், வயது வந்த பெண் கிணற்றிலே விழுந்து இறந்தாள் என்று தெரிந்தது. என்ன காரணத்திற்காக அப்படி இறந்தாள் என்பது தெரியாது. அந்தப் பெண்ணை வெளியே எடுத்த பிறகுதான் அதுவும் தெரியும். காவல் நிலையம் அதைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. காவல் துறை அந்தக் கேசை முறையாகப் பதிவு செய்யவும் இல்லை. நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல் துறையினர் கட்டுப்பாடற்ற நிலையிலே இருக்கிறார்கள். பல இடங்களிலே பயமற்ற நிலையில் இருக்கிறார்கள். திண்டிவனம் பகுதியில் லஞ்சம், ஊழல் எல்லாம் இருக்கின்றன. சாராயம், கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்களுக்கு, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் துணை புரிகின்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களது சட்டம், ஒழுங்கு காக்கும் நடவடிக்கைகள் மக்களைக் காப்பாற்றுவதற்காக இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இதுபோன்ற நிலைகள்தான் மாநில முழுமையிலும் இருக்கிறது

கடைசியாக, பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களைப் பொறுத்துச் சொல்கிறேன். மொத்தம் ஒரு 2 ஆயிரம் பேர்கள்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு ஹவுஸ் ரெண்ட் கண்ட்ரோல் வீடு கொடுத்து வாடகையை அவர்கள் சம்பளத்தில் பிடித்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுத்து அதையே குறைத்துவிடுகிறார்கள். அதிலே 10 பெர்செண்ட் பிடித்தம் செய்யப்படுகிறது. கிட்டத்தட்ட ரூபாய் 110 அளவிலே கூட வாடகை கொடுக்க வேண்டிய நிலை வருகிறது. கொடுக்கப்படும் சம்பளம் ரூபாய் 350. வீட்டுவாடகையாக ரூபாய் 110 கொடுத்து விட்டால், நாம் அவர்களுக்கு எந்தச் சலுகைகளைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ அதைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் மிகுந்த பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாயிரம் பேர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதற்கான பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் நிர்வாகத்தைத் திறமையாகச் செய்யாமல் போனால், அதனுடைய விளைவுகள் நன்றாக இருக்காது. நாம் செய்ததெல்லாம் வீணாகிப் போய்விடும். அந்த மாதிரியான நிலைமைகள் உருவாகிவிடும் என்பதை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு இந்தத் தவறுகளையெல்லாம் தடுப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவின் மீது எனது கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன். நமது மாநிலத்தில் 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு செய்கின்ற நேரத்தில், இந்த அவையிலே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிதி ஒதுக்கீட்டில் என்னென்ன நிலைகள் இருக்கின்றன, அவைகள் எப்படி செயல்படவேண்டும், அது எப்படி சமுதாயத்தை உருவாக்குவதற்கும், சிறந்த ஒரு ஆட்சி முறையை உருவாக்குவதற்கும் பயன்படும் என்று அரிய பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

குறிப்பாக காவல் துறையினருடைய குறைகளை எடுத்துச் சொன்னார்கள். காவல் துறையினர் சரியான முறையில் நடக்காமல் போனால், நாட்டில் கட்டுப்பாடற்ற நிலைமைகள் ஏற்படும். அதனால் வேலியே பயிரை அழிக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேர்மையாக நடந்துகொள்ள வேண்டியவர்கள் பணத்திற்கு அடிமைப்பட்டு பிரச்சினைகளில் தலையிடுகிறார்கள். நேர்மையாக நடக்கவேண்டிய காவல் துறையினர் இந்த நாட்டிலே உள்ள மக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக,

அவர்களைக் கஷ்டப்படுத்துகின்றவர்களுக்குத் துணை நிற்கிறார்கள் என்பதை பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். பேசியவர்கள் பல எடுத்துக்காட்டுகள் சொன்னார்கள். நானும் அவர்களுக்கு வந்த கடிதங்களைக் கொடுத்ததைப் பார்த்தேன். திரு. வீராசாமி அவர்கள் அவர்களுக்கு வந்திருந்த கடிதங்களைப் படித்தார்கள். அவர்கள் தான் வைத்திருந்ததில் கால் பங்கு கடிதங்களைத் தான் படித்தார்கள். எனக்கு வந்திருக்கின்ற கடிதங்களிலே ஒன்றிரண்டை மாத்திரம் படித்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இதுபோன்ற கடிதங்கள் மாவட்டத்திற்கு ஒன்று வந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே காவல் துறையினர் அந்தப் பகுதி மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவர்களாக, பாதுகாப்பு அளிக்கின்றவர்களாக இருப்பதற்குப் பதிலாக அநீதியாக நடக்கின்றவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். அவர்கள் அதிகமாகப் பணம் கொடுக்கின்றவர்களுக்குத் துணை நிற்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த மாதிரி அவர்கள் செய்தால், ஒரு நாட்டினுடைய நிர்வாக நிலைகள் கெடுகின்றன என்பதற்கு அறிகுறி அல்லவா என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லவேண்டிய தேவை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று அவர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த விவரங்களைச் சொல்லி, அவர்கள் காவல் துறை சரிய முறையில் நடக்க வேண்டுமென்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

கோவையிலே ஆர்.எஸ். புரம் என்ற பகுதியிருக்கிறது. அங்கே ஒரு அரசாங்க ஊழியர் விஷயத்திலே தலையிட்டிருக்கிறார்கள். அவர் ஓரளவுக்குக் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவருடைய வீடு 1978-ல் இடிக்கப்படுகிறது. அவருக்குள்ள சில விரோதிகளால் அது இடிக்கப்படுகிறது. அவர்கள் ஒரு பெடிஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடு இடிக்கப்பட்டபோது, அது பற்றி காவல் துறையினரை அணுக வேண்டும். அவர்களை அவர் அணுகியிருக்கிறார். அதனால் ஒரு பலனும் இல்லாமல் போய்விட்டது. அவர்கள் மீண்டும் வழக்குகள் தொடுக்கப்படுவது மாதிரி இருந்தாலும்கூட, அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அந்த வீடு இடிக்கப்பட்டது செய்தியாக வெளியே வந்திருக்கிறது. கோயம்பத்தூரிலே சர்க்கார் ஊழியருடைய வீடு தாக்கப்பட்டது. அவருடைய பெயர் பெருமாள். அவர் அரசாங்க ஊழியராக இருக்கிறார். உறவினர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக அந்த வீடு தரைமட்டமாக ஆக்கப்பட்டது. இரவு 2½ மணி முதல் தாக்கப்பட்டு விடிவதற்குள் வீடு இல்லாத நிலைக்கு வந்துவிட்டது. பெருத்த பொருட்சேதம்

எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்த பொருள்களும் எடுக்கப்பட்டன. இதை எதற்குச் சொல்கின்றேன் என்றால், அந்த வீட்டை இடிப்பதற்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டுபிடிக்காமல் பொறாளவிலே இருந்தது. அது மாத்திரம் இல்லாமல் அங்கு இருக்கக்கூடிய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் 21—3—1979-ல் கோவையிலிருந்து, கோவை டவுன் காமராஜபுரம் அண்ணா தி.மு.க. கிளை சார்பில் ஒரு மகஜரை முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதில் 10, 15 பேர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அதனுடைய நகல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் பலன் இல்லை. 1978-லே சம்பவம் நடந்திருக்கிறது. 1979-ல் ஆளுங்கட்சியினர் மூலம் அரசாங்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையினரிடம் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையினர் பணம் எங்கே நடமாடுகின்றதோ அங்கேதான் சலுகை கொடுக்கிறார்கள். அவர்கள் அனைவரும் சேர்ந்து எதிர்க்கட்சியினரிடம் புள்ளி விவரம் வைத்து எழுதுகிறார்கள். அந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுடைய நிலை என்ன? அரசாங்கத்துக்கு எழுதுவார்கள். இந்த அளவுக்கு நிலைமைகளைக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இந்தக் கடிதங்களை நிதியமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். எதற்காக இதை நான் இங்கே எடுத்துச் சொல்கிறேன் என்றால் இத்தகைய சம்பவங்கள் மாநிலம் முழுவதும் நடைபெறுகின்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த நிலைமைகள் வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். இதுதான் காவல் துறையினுடைய நிலை.

இந்த அரசு உண்மையிலேயே ஊழலற்ற அரசாக இருக்கும் என்று சொல்லிப் பொறுப்பேற்றார்கள். இந்த நாட்டிலே ஆட்சியில் இரண்டு சாராரும் கொள்கைகளை மாறி மாறிச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இந்த அரசு திறமையுள்ள ஆட்சியாக இருக்கும், ஊழலற்ற ஆட்சியாக இருக்கும் என்றெல்லாம் சொல்லி, நாட்டு மக்களிடம் சொல்லி ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். ஆனால் இன்றைய அரசு அந்த மாதிரி நடத்த முடியவில்லை. காரணம் எது என்று அவர்கள்தான் அறிந்துகொள்ள வேண்டும். அந்த மாதிரி நடத்த முடியவில்லை என்பதை மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன். அதற்குப் பல ஆதாரங்கள் காட்ட முடியும். நேரம் மிகுதியாக ஆகி விட்டதைக் கருதி, ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பண்ணையாபுரம் என்று ஒரு ஊர் கோம்பையிலே இருக்கிறது. அங்கே ஒரு ரெஜிஸ்டர்ட் அசோசியேசன் இருக்கிறது. 'எங்கள் சங்கம் எம்.ஜி.ஆர். சங்கம் 15212' என்று இருக்கிறது. அவர்கள் ரெஜிஸ்டர் பண்ணியிருக்கி

றார்கள். அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள். 24—3—1979-ல் வந்திருக்கிறது. அங்கே டவுன் பஞ்சாயத்து பில் கலெக்டர் நியமனத்திற்காக ஒருவர் ரூபாய் 5,000 வாங்கியிருக்கிறார். அவர் பெயர் தந்தியில் இருக்கிறது. நான் சொல்வது முறையல்ல. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தெரிந்து விட்டது. அது குறித்து எதிர்க் கட்சிக்காரர்கள் வால் போஸ்டர் அச்சடிக்கப் போகிறார்கள். உடனடியாக அந்த நியமனம் நடக்காமல் செய்ய வேண்டும் என்று எழுதி, அந்தத் தந்தியை அமைச்சர் அவர்களுக்கு அடித்திருக்கிறார்கள். இந்த ஆதாரத்தையும் தலைவர் அவர்கள் அனுமதியோடு, அமைச்சர் அவர்களின் நடவடிக்கைக்குக் கொடுக்கிறேன்.

(எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அமைச்சர் அவர்களிடம் கடிதங்களைக் கொடுத்தார்கள்.)

(பிற்பகல் 7-30)

இன்னும் ஒன்றே ஒன்று இருக்கிறது. காவல் துறை எப்படி இயங்குகிறது என்று சொன்னேன். ஊழலற்ற ஆட்சி நடத்த வந்தவர்களால், அப்படி நடத்த முடியவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு சொன்னேன். கிருஷ்ணகிரி டி.பி.-யில் 3 மாதங்கள் தங்கியிருந்தவர் யார்? இங்கே இருந்து எத்தனை போன் கால்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதை அருள்கூர்ந்து ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாமன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள்மீது வழக்கு பதிவு செய்து, அந்த வழக்கு தவறானது என்று சொல்லி, அவர் விடுதலை செய்யப்பட்டது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட சிறப்பு வழக்கறிஞர் அங்கே தங்கியிருந்த 3 மாத காலத்தில், 100 முறைக்கும் மேலாகப் போனில் பேசியிருக்கிறார். அந்த நம்பர்கள் விவரம் இருக்கிறது. கிருஷ்ணகிரி டி. பி. யிலிருந்து எவ்வளவு கால்கள் புக்காயிருக்கின்றன என்று டெலிபோன் அலுவலகத்திலிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு காலுக்கும் 40, 50, 100 ரூபாய் சார்ஜ் பண்ணியிருக்கிறார்கள். 9 நிமிடங்களுக்குக் குறைந்த பேச்சே கிடையாது. மொத்தம் எவ்வளவு தொகை அதனால் ஆகியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் அரசாங்கம்தான் பொறுப்பு ஏற்கிறது. நீதி மன்றத்தில் வழக்கு நடக்கிறது. வழக்கறிஞர் போயிருக்கிறார். அவருக்குக் கிடைக்கும் செய்திகளை வைத்துக்கொண்டும், பிராசிகியூஷன் என்னென்ன தகவல்கள் கூறுகிறதோ அவற்றை வைத்துக்கொண்டும், அவர் எப்படி தீர்ப்பு வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறாரோ, அப்படி வராத சூழ்நிலை இருக்கிறது. எனவே ஏதாவது செய்ய முடியும் என்றால் செய்யுங்கள் என்று பேசியிருக்கிறார்.

டேப் ரிகார்ட் மூலம் பதிவு செய்திருந்தால் தெரிந்திருக்கும். முதலமைச்சரவர்கள்கூட பல கூட்டங்களில், தீர்ப்பு வர இருக்கிறது, அப்போது எவ்வளவு அநீதி நடந்திருக்கிறது என்பதைப் பாருங்கள் என்று நீதித் துறையில் தலையிடுவது மாதிரி, பேசியிருக்கிறார். அவர் அப்படிப் பேசியிருந்தாலும், நீதிமன்றத்திலிருந்து வேறுவிதமாகத் தீர்ப்பு வந்திருக்கிறது. நீதிமன்றங்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாமல், இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சொல்லி, இதையும் தலைவரவர்கள் அனுமதியோடு, நிதியமைச்சரவர்களிடம் கொடுக்கிறேன்.

(நிதியமைச்சரவர்களிடம் ஒரு பேப்பரை அளித்தார்)

நான் பொய்யான தகவல் தந்துவிட்டேன் என்று சொன்னால் அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை சரியாகச் செயல்படவில்லை; உள்ளாட்சித் துறையிலே, ஊராட்சி ஒன்றியத்திலே நியமனங்கள் நடக்கும்போது, ஊழல்கள் இருக்கின்றன; நீதித் துறையிலேகூட அரசு தலையிடுகிற அளவிற்கு நடந்துகொண்டிருக்கின்றது என்பதைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக நம்முடைய நாட்டு மக்கள் கவனித்ததிலிருந்து, இப்படி அறிவுறுத்துகிறோம். நாட்டு மக்கள் கொடுக்கும் வரிப் பணத்தை, பொது நிதியைச் செலவு செய்ய அரசு அதிகாரம் பெறும் நாளில், அந்த அதிகாரத்தைத் தரும் இந்த நேரத்தில், நீங்கள் எதைச் சொன்னீர்களோ, அப்படிச் செயல்பட, உங்கள் இலாக்காக்களைக் கட்டுப்படுத்தி, அந்த முறையில் செயல்பட வேண்டுமென்று சொல்லத்தான், இந்தச் சந்தர்ப்பத்தில், அதைச் சொன்னேன். அதை விரித்துக் கொண்டே போனால் நிறைய நேரமாகும். ஆகவே அதை இதோடு முடித்துக்கொள்கிறேன்.

ஜனநாயக ரீதியிலே பொதுமக்களுடைய கருத்துக்களைக் கூறுமிடம் சட்டமன்றம். எனவே இந்தச் சட்டமன்றங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும், இப்போது இரண்டு மாதங்களாகத் தொடர்ந்து நடைபெறுகின்றது. இன்னும் 6 மாதங்கள் சட்டமன்றக்கூட்டம் இல்லாமல் இருக்கக்கூடாது. இடைவேளை 3 மாதங்கள் இருக்கலாம். பட்ஜெட் கூட்டம் தவிர, மற்ற கூட்டங்கள் 15 நாட்கள் அளவிற்கு இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் பொது மக்களுடைய கருத்துக்களை சட்ட மன்றத்திலே சொல்ல முடியும். அதையெல்லாம் பார்த்து, அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வருஷத்திற்குப் பேச வேண்டிய விஷயங்களை உறுப்பினர்கள் வைத்திருக்கிறார்கள். வருஷத்திற்கு ஒரு முறை என்ற

முறையில் சட்டமன்றத்தைக் கூட்டியிருக்கிறார்கள். ரொம்ப நேரம் நாங்கள் பேசுவதற்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. நிதியமைச்சரவர்கள் காலையிலிருந்து மாலைவரை பதில் சொல்லிக்கொண்டு, மறு நாள் ரஷ்ய நாட்டுக்குச் செல்கிற நல்ல செய்தியைக் கேட்கிறோம். உலகத்தின் பல நாடுகளுக்குச் சென்றவர்கள், அதையெல்லாம் கண்டவர்கள், இப்போது நிதியமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, எப்படி நாட்டை ஆளுவது என்ற அனுபவத்தை இரண்டு ஆண்டுகள் பெற்று, அந்தக் கண்ணோட்டத்தில் உலக நாடுகளைப் பார்க்கப் போகும் நேரத்தில், ரொம்ப நேரம் தடுத்து நிறுத்தி வைத்திருக்கிறோமோ என்ற வருத்தம் இருக்கிறது. நாங்கள் சொல்லாமல் இருந்தால், எங்கள் கடமைகளிலிருந்து தவறுகிறோம் என்பதால், சொல்ல வேண்டியிருக்கிறது. இருந்தாலும் எங்கள் பேச்சுக்களைச் சுருக்கிக் கொள்கிறோம். சட்டமன்றங்கள் அடிக்கடி கூட்டப்பட வேண்டும். கூட்டப்படுகிற சட்டசபைகளிலே முதலமைச்சர், நிதியமைச்சர், மற்ற எல்லா அமைச்சர்களும் எப்போதும் இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணம் இருந்தால்தான், அவையில் இல்லாமல் இருக்கலாம். அறையிலிருந்தே கேட்கிறோமென்றால், எங்களுக்கும், எங்கேயிருந்து சொல்லுவது என்ற எண்ணம் வரும். ஜனநாயக ரீதியில் அமைச்சர்கள் அவைக்கு வந்திருந்து, கேட்டால்தான், நல்லது. இப்போது அமைச்சர்கள் ஒரே முகமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளும், சுற்றி இருக்கும் ஆட்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் நல்லது சொல்லிப் பழகியவர்கள். அவர்கள் வார்த்தைகளில் தவறு வராது. நாங்கள் எப்படியெல்லாம் நாட்டிலே இருக்கிறது என்பதைப்பற்றிச் சொல்லுகிறோம். அமைச்சர்கள் நாட்டைப் பார்க்காது போனாலும், நாங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும், வள்ளுவர் என்ன சொல்கிறார் என்றால், 'கற்றிலன் ஆயினும் கேட்க' என்கிறார். அமைச்சர்களுக்குத்தான் சொல்லியிருக்கிறார். நாடாள்கிறவர்களுக்குத்தான் சொல்லியிருக்கிறார். நாங்கள் கூட இருந்து துணை புரிகிறவர்கள். இப்போது வள்ளுவர் இருந்தால் என்ன சொல்வார் என்றால், அமைச்சர்கள் கற்றுப் பார்க்கவில்லை, எனவே, எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதை இருந்து கேட்க என்று சொல்லியிருப்பார். நாங்கள் போன பிறகு, அமைச்சர் அதிகாரிகளைக் கூப்பிட்டு, அவர் அப்படிச் சொல்லுகிறார், எவ்வளவு டெலிபோன் கால்கள் போடப்பட்டிருக்கின்றன, அதற்கான தொகையை அவரிடமிருந்து வாங்கு, அதற்காக சட்டசபை ஒப்புதல் தந்த பணத்திலிருந்து எடுக்கக்கூடாது என்று சொல்லுகிற நிலை வரும். இப்போது அப்படிப்பட்ட நிலை இல்லை. இனி மேலாவது அப்படிப்பட்ட நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 25

மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தபோது, முதலிலே 'நம்முடைய' கட்சித் தலைவராக இருந்தார்கள். பிறகு 'அவருடைய' கட்சித் தலைவரானார்கள். பாராளுமன்றத்தில் என்ன முறையில் நூலகம் நடக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் நூலகத்திற்குச் சென்று, 'லா & ஆர்டர்' என்று சொன்னால், உடனே 'பைரிங்' பற்றிய தகவல்களையும், 'லத்தி சார்ஜ்' பற்றிய தகவல்களையும் தனித் தனியாகச் சேகரித்து வைத்திருப்பதைத் தருகிறார்கள். நம்முடைய நூலகத்திற்குச் சென்று, போன மாதம் பைரிங் நடந்தது என்றால், எங்கே நடந்தது என்று நம்மையே கேட்கிறார்கள். அதற்காக ஆளே இல்லை. அதற்காக தனி அசிஸ்டன்டுகள் இருக்க வேண்டும். இங்கே மொத்தத்திற்கும் இரண்டு பேரைப் போட்டிருக்கிறார்கள். நூலகம் சரியாக இல்லாமல் இருப்பதால், சரியான தகவல்களை அதிகமாகத் தர இயலவில்லை. எனவே நூலகத்தை விரிவுபடுத்தி, அதற்குத் தனி அமைப்பு முறையை ஏற படுத்தி, அங்கத்தினர்கள் இருந்து படிப்பதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து, கூடுதலாக ஆட்களைப் போட்டு, நல்லதொரு நூலகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லைப்ரரி சையன்ஸ் படித்த ஒருவருக்கு, பார்லி மெண்ட் நூலகத்தில் ஸ்பெஷல் ட்ரெயினிங் அல்லது ரெப்ரஷர் கோர்ஸ் மூன்று மாதங்கள் கொடுத்து, இங்கே நூலகராகப் போட வேண்டும். 15 அல்லது 30 வருடங்களுக்கு முன்னால் நடந்ததைக் கேட்டால், கம்ப்யூட்டரில் போட்டு, போட்டோஸ்டட் காப்பி தருகிறார்கள் அங்கே. அதைக் கொண்டு வந்து, பேச முடிகிறது. நிதியமைச்சரவர்கள் அனுபவப்பட்டவர்கள். அவற்றையெல்லாம் பயன்படுத்தியவர்கள். எனவே எங்களுக்கும் அப்படிப்பட்ட வாய்ப்புகளை உங்கள் காலத்தில் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னாலே ஓரிரு விஷயங்களைக் கூற விரும்புகிறேன். இந்திப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு பென்ஷன் வழங்குவதாகச் சொன்னார்கள். இதுவரை அது வழங்கப்பட வில்லை. கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணையப் போராடிய தியாகிகளுக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டது. இப்போது அது நிறுத்தப் பட்டிருக்கிறது. வடக்கு எல்லையிலிருந்து போராடிய தியாகிகளுக்கும் பென்ஷன் கொடுக்கவில்லை. எனவே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திற்கு மத்தியி லிருந்து வரக்கூடிய பணங்கள், உரிமைகள் ஆகியவைகளையெல்லாம் தவறி விடாமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அரிசி யையும், கோதுமையையும், ''ஃபுட் பார் ஒர்க் ப்ரோக்ராம்' என்ற திட்டத்

979 ஏப்ரல் 25] [திரு. ம. சங்கரலிங்கம்]

ின்கீழ் கொடுக்கிறார்கள். ஒர்க் நடக்காது, ஃபுட்டாவது கிடைக்கும். சிரிப்பு) அதை வாங்கிக் கொண்டு போவதே வேலை. (சிரிப்பு) அந்தத் ிட்டத்தை போன வருடம் துவக்கியிருந்தால், நமக்கு அரிசி, கோதுமை ிடைத்திருக்கும். அதை போன வருடம் துவங்கவில்லை. இந்த வருடமா து அந்தத் திட்டத்தை நமது மாநிலத்தில் துவங்க வேண்டுமென்று கேட்டுக்

(பிற்பகல் 7-40)

கொள்கிறேன். சென்ற மாதம் நான் பத்திரிகையில் படித்தேன். சென்ற ாதம் தொழில் அமைச்சர்களுடைய மாநாடு டெல்லியில் நடந்தது. இரும்பு, ருக்கு கோட்டா எல்லாம் வேண்டுமென்று ஒவ்வொரு மாநிலத்திலுள்ள மைச்சர்களும் கேட்டார்கள். நம் மாநிலத்தில் சரியாகக் கேட்கவில்லை. ஆயிரம் டன் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். நமக்கு ஒதுக்கப்பட வேண்டிய ோட்டா குறைந்ததன் காரணமாக தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ின் அதை ஊன்றிப் படிக்கிறபோது, நம்முடைய மாநில சார்பாக திரு. கீதா ிருஷ்ணன், ஐ. ஏ. எஸ்., அரசாங்கச் செயலாளர் அவர்கள் கலந்துகொண்டார் ள் என்று தெரிந்துகொண்டேன். அப்பேர்ப்பட்ட ஒரு முக்கியமான மாநாட் ிக்கு முதலமைச்சர் அவர்கள் போக முடியாவிட்டால், வேறு ஒரு அமைச்சர் ட்டாயம் போயிருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் நம்முடைய ஸ்பெசல் ரப்ரசென்டேட்டிவ் ஆக இருக்கிறவரும் கலந்துகொள்ள முடியாது. காரணம் வருக்கு காபினெட் ராங்கு இல்லை. இங்கிருந்து ஒரு அமைச்சரை அவ யம் அனுப்பியிருக்க வேண்டும். கோட்டா கொடுத்ததாக இந்து பத்திரிகை ில் படித்தேன். கேபினட் ரேங்க் அமைச்சர் ஒருவர் போயிருந்தால், நாம் ின்னும் அதிகமாகப் பெற்றிருக்க முடியும். அதுமாதிரி வரக் கூடிய ாய்ப்புகளை மாத்திரம் நாம் தவற விட்டு விடக்கூடாது.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சட்டமன்றம் நடந்துகொண்டி ந்ததால், முதலமைச்சர் அல்லது செல்ல வேண்டிய ஒரு அமைச்சர் செல்ல டியவில்லை. ஆனால் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் இதுபற்றிக் கலந்து பசியிருக்கிறோம். நமது மாநிலத்திற்குக் கூடுதலாக அயர்ன் அன்ட் ஸ்டீல் தேவைப்படுகிறது என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். தை அவர்கள் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் இப்போது தான் அவர் ளிடமிருந்து கூடுதலாக அதாவது 4,000 டன் பெற்றிருக்கிறோம். அமைச் ர்கள் அங்கே போகாமலேயே சாதனை செய்திருக்கிறோம். போய்விட்டு ாதனை இல்லாமல் போனால் அர்த்தமில்லாமல் போய் விடும்.

திரு. ம. சங்கரலிங்கம் : போகாமலேயே 4 ஆயிரம் டன் பெற்று சாதனை ரிந்ததற்கு நன்றி. போயிருந்தால் 6 ஆயிரம் டன்களாவது பெற்றிருக்க ாம் என்பது என்னுடைய கருத்து.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சென்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் வாங்கிய அளவு இந்த அளவு இல்லை. அதிகபட்சமாக இப்பொழுது தான் இவ்வளவு நாம் வாங்கியிருக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : வீட்டு வாடகைப் படியை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறோம். அதன் அறிக்கை அரசுக்குத் தரப்பட்டது என்று சொல்லுகிறார்கள். பரிசீலனை செய்ய 5 மாதம் ஆகியிருக்கிறது. இன்னும் அதைப் பரிசீலித்துக்கொண்டிருக்காமல், விரைவில் வீட்டு வாடகைப் படியைப் பொறுத்தவரை, ரேஷனலைஸ் பண்ணி அறிவிக்க வேண்டும். கிராமப்புற ஒருங்கிணைந்த திட்டம் என்று சொல்லி கிராமப்புற அலுவலர்களுக்கும் ஒரு 5 ரூபாயாவது, 3 ரூபாயாவது வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படும் என்று அறிவிக்க வேண்டும். சட்டமன்றப் பேரவையில் தான் அறிவித்து விட்டேனே, இங்கே என்ன அறிவிப்பது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் யோசித்துக்கொண்டிருக்கலாம், கிராமப்புறங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு 5 சதவிகிதம் வீட்டு வாடகைப் படி அளிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏதோ ஆசிரியர்களுக்காக மட்டும் கேட்கவில்லை. கிராமப்புற வளர்ச்சி என்ற அடிப்படையிலேயே தான் கூறுகிறேன். நேர மிகுதியின் காரணமாக நான் மேற்கொண்டு கருத்துக்களைக் கூற விரும்பவில்லை. மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களிலே மிக முக்கியமான கருத்து காவல் துறை பற்றிய சிக்கல்கள். பெரும்பான்மையான உறுப்பினர்கள் அதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். அதையும் மனதிற் கொண்டு, நான் சொல்லிய அனைத்துக் கருத்துக்களையும் மனதிற்கொண்டு அவைகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, இந்த நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவுகள் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறி அமைகிறேன்.

2. அறிவிப்பு—தொடர்ச்சி.

(4) அலுவல் ஆய்வுக்குழு முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தனி உறுப்பினர் அலுவல் ஏப்ரல் 27 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே இன்று சட்டமுன்வடிவுகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

1979 ஏப்ரல் 25]

ஏப்ரல் 26, 1979 ..	பிற்பகல் 4 மணி முதல் 7 மணி வரை ..	மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம்.
ஏப்ரல் 27, 1979 ..	முற்பகல் 10·30 மணி முதல் 1.30 மணி ..	தனி உறுப்பினர் அலுவல்.
ஏப்ரல் 28, 1979 ..	முற்பகல் 10·30 மணி முதல் 1·30 மணி வரை.	மின்சார வாரிய நிதி நிதி அறிக்கையின் மீது விவாதம்.
	பிற்பகல் 4 மணி முதல் 7 மணி	அரசின் சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்தல்.
ஏப்ரல் 29, 1979 ..	ஞாயிற்றுக்கிழமை ..	விடுமுறை
ஏப்ரல் 30, 1979 ..	முற்பகல் 9 மணி முதல் 1 மணி மற்றும் பிற்பகல் 3 மணி முதல் 7 மணி வரை ..	அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்

ஏப்ரல் 28 மற்றும் 30 ஆகிய நாட்களில் கேள்வி நேரம் இல்லை.

4. அரசின் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(1) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1979)—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்க மசோதாவின் மீது நமது மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதானாலும் சரி, ஆளுநர் உரையின் மீது பேசுவதானாலும் சரி, இறுதியிலே 'அப்ராபிரியேஷன் பில்' என்ற மசோதாவின் மீது பேசுவதானாலும் சரி, உரையிலே என்னென்ன செய்திகள் இருக்கின்றனவோ, தொடர்புடைய செய்திகளோ தொடர்பற்ற செய்திகளோ, பேசுகின்ற உரிமைகள் பெற்றிருக்கின்ற வாய்ப்பினை இந்த மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெற்றிருக்கிறார்கள்.

அவர்களுள் சில பேர் ஒழுங்காக அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பேசியவர்களிலே பெரும்பாலோர் நல்ல உள்ளத்தோடும் உணர்வோடும், ஒதுக்கப்பட்டு, ஒதுக்கப்பட இருக்கிற இந்தத் தொகையை வீண் விரயம் செய்யாமல் ஒழுங்காக, முறையாகச் செலவழித்து தமிழகத்தை ஒரு வளர்ச்சிப் பூங்காவாக மாற்ற வேண்டுமென்ற தங்களது சீரிய எண்ணத்தை வெளிப்படுத்தியமைக்காக உறுப்பினர்களுக்கு எனது நன்றியை முதற்கண் வெளிப்படுத்திக்கொள்கிறேன். அப்படி கருத்துக்களை வெளியிடும்போது, அவரவர்களின் மன இயல்புகளை ஒட்டி அல்லது உணர்வுகளை ஒட்டி சில பேர் பக்குவமாகவும்—நமது எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களைப் போல் பக்குவமாகவும்—சில பேர் பக்குவமாகவும்—ஆனால் அவர்களுக்கே உரிய சாதுர்யத்தோடும் உதாரணமாக திரு. ஆற்காடு வீராசாமி அவர்களைப் போல், சில பேர் கொஞ்சம் உறுதியாகவும் அழுத்தமாகவும் ஆனால் நல்ல உள்ளத்தோடும் உதாரணத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைப் போல், சில பேர் ஏதாவது இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிதியமைச்சரிடமிருந்து பெற முடியாதா என்ற உணர்வோடும் உதாரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் முத்துசாமி, மீனாட்சி சுந்தரம், இலட்சுமிகாந்தன் ஆகியோர்கள் போல் இங்கே பேசியிருக்கிறார்கள்

பேசியவர்களில் ஒவ்வொருவரும் ஆதாரங்களை அடுக்கிக் கொண்டு போவது போன்ற உணர்வுகள் மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற வகையில் காகிதங்களை எல்லாம் காட்டிக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அவைகளையெல்லாம் முன்கூட்டியே என்னிடம் தந்து "இவைகளையெல்லாம் நீங்கள் பார்த்து நடவடிக்கைகளை எடுங்கள்" என்று சொல்லியிருந்தால், ரொம்ப நேரத்தைக் காப்பாற்றியிருக்க முடியும். ஆனாலும் அதைச் சொல்லி ஆக வேண்டும் என்ற, ஒரு உற்சாகம் என்று சொல்லுவதுதான் நியாயமாக இருக்கும், ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாத தேவை என்ற அடிப்படையில் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். உண்மையிலேயே என்னை நமது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகப்பெருமையோடு சொன்னார்கள். பாராளுமன்றத்திலே அனுபவம் பெற்றவன் என்ற காரணத்தாலே பெருமையோடு சொன்னார்கள். என்னைப் போன்றவர்களுக்கு இப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கும்போது எதிர்க் கட்சியில் இருக்க வேண்டிய விழிப்புணர்ச்சி நிச்சயமாக கருத்துக்களை வழங்கியவர்களிடம் இருக்கிறது என்பதை நான் மனதார ஏற்றுக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சித்தூரிலே ஆரம்பித்த பயணத்தை இறுதியிலே திருவெற்றியூரில் சென்று முடித்தார்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திண்டிவனத்தில்

ஆரம்பித்த பயணத்தை கடைசியில் திருவெற்றியூரில் முடித்தார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆர். எஸ். புரத்தில் ஆரம்பித்த பயணத்தை கன்னியாகுமரியில் சென்று முடித்திருக்கிறார்கள். அங்கிருந்து திரட்டித் திரட்டி இங்கே செய்திகளைத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு நடைபெற்ற இந்த விவாதம் பெரும்பாலும் காவல் துறை மானியத்தின் மீது நடைபெறுகிற விவாதமோ என்று சந்தேகப்படுகிற அளவில் எல்லோரும் பேசினார்கள். அதற்கேற்றாற்போல் நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, இது தொழில் துறை மானியத்தின் மீது நடைபெறுகிற விவாதமோ என்று நினைக்கிற அளவுக்குப் பேசி, அவர் பேசியது அப்படித்தான் என்று உறுதிப்படுத்துகிற வகையில் தொழிலாளர் நல அமைச்சர் அதற்குரிய பதிலையும் தெரிவிக்க, இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கிய பிறகு, இறுதியில் எனது சுமையைப் பெருமளவிற்குக் குறைத்தமைக்காக உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-50)

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். வேலைநிறுத்தம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் ஜீவாதாரமான உரிமை என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிற அரசு இந்த அரசு என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கு இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். வேலைநிறுத்தம் என்ற ஆயுதத்தைச் சுழற்ற வேண்டிய கட்டம் இறுதிக் கட்டம் என்பதையும் இந்த அரசு தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லாமல் இருக்க முடியாது. நினைத்ததற்கெல்லாம் வேலைநிறுத்தம் என்ற ஆயுதத்தைச் சுழற்றினால், அதன்மூலம் இந்த நாட்டில் ஒரு நல்ல ஆட்சி அல்லது சட்டம், அமைதி, ஒழுங்கு இருக்கும் என்ற நம்பிக்கை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் போன்றவர்களுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை அவர்கள் மாற்றிக்கொள்வது நன்றாக இருக்கும். தொழிலாளர்களுக்குத் தொல்லைகள் ஏற்படும்போது, அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உணர்வுகள் வரும்போது, எந்தெந்த அளவுக்கு வேலைநிறுத்தம் இல்லாமல் செய்ய முடியுமோ அத்தனை முறைகளிலேயும் ஈடுபட்டு அவைகள் எல்லாம் பயனில்லை என்று தெரிந்ததற்குப் பிறகு, இறுதிக் கட்டத்தில் விரக்தி மனப்பான்மை வரும்போது அந்தத் தொழிலாளி வேலைநிறுத்தம் என்ற ஆயுதத்தைத் தூக்குகிறான். ஆனால், ஆரம்பக் கட்டத்திலேயே அந்தத் தொழிலாளியின் கையிலே அந்த ஆயுதத்தைக் கொடுத்து சுழற்று என்று சொல்லும் தொழிற் சங்கத் தலைவர்கள் நம்முடைய

தமிழகத்தில் இருக்க மாட்டார்கள், இருக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன். ஒருவேளை கடந்த காலத்திலே இருந்திருக்கலாம். அவர்கள் இனிமேலாவது தமிழகத்தின் ஒட்டுமொத்த நலன் கருதி தங்களுடைய ஸ்ட்ரைக் பற்றிய கருத்துக்களைப் புனர்ப்பரிசிலனை செய்ய வேண்டும். வேலை நிறுத்தத்திற்கு இந்த ஆட்சி எதிரானதல்ல. ஆனால் வேலைநிறுத்தம் செய்வதற்கு ஒரு முறை இல்லையா, ஒரு இலக்கணம் இல்லையா என்பதையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுகின்ற பொறுப்பு—மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களிடம்—எனக்கு உண்டு. வேலைநிறுத்தம் என்பது ஒரு பெரிய பாறாங்கல்லாக இருக்கலாம். பாதையிலே செல்கிறபோது, அந்தப் பாறாங்கல் இருக்கக்கூடும். அதைத் தூக்கிப் போட்டுவிட்டுத்தான் நான் நடப்பேன் என்று அரசு அடம்பிடிக்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் போன்றவர்கள் கேட்கும் போது, என்னைப் போன்றவர்கள் தரும் பதில், அந்தப் பாறாங்கல்லை பாதையிலே இருந்து மாற்றி அந்தப் பாதையை ஒழுங்குபடுத்தி, அந்தப் பாறாங்கல்லை யார் போட்டார்களோ, அதற்கு யார் காரணமாக இருந்தார்களோ, அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டித்து, அதன்மூலம் தக்கதொரு திருப்பத்தை உருவாக்குவதுதான் நியாயமே தவிர, பாறாங்கல்லை அப்படியே போட்டுவிட்டு பாதையோரம் பார்த்து வேறு பாதைக்குப் போ என்று சொன்னால், இந்த அரசு தயாராக இல்லை.

அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசினார்—அவர் இப்போது இந்த அவையிலே இருக்கிறார் என்று கருதுகிறேன். அவர் என்னோடு பேசிக்கொண்டிருந்தபோது, "சைக்கிள் வாங்க 600 ரூபாய் கொடுக்கிறீர்களே, அந்த அலவன்ஸ் ஆசிரியப் பெருமக்களுக்கும் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார். எவ்வளவு ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று நான் கேட்டேன். இரண்டரை லட்சம் பேர் இருப்பார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு 600 ரூபாய் வீதம் எவ்வளவு ஆகும் என்று கேட்டபோது, "எல்லோருமா கேட்கப் போகிறார்கள்?" என்று சொன்னார். நான் அவருக்குச் சொன்னேன், 2½ லட்சத்தில் 1 லட்சம் பேர்களாவது கேட்கமாட்டார்களா என்று. ஆமாம், கேட்பார்கள் என்றார். 1 லட்சம் பேர்களுக்கு 600 ரூபாய் என்ற அளவுக்கு கணக்குப் போட்டு எனக்குச் சொல்லுங்கள் என்று கேட்டபோது—அவர் கணக்கு ஆசிரியர் அல்ல என்பதை நான் தெரிந்து கொண்டேன்—அறுபது லட்சம் ரூபாய் என்றார். இல்லை. 6 கோடி ரூபாய் என்று நான் நினைவுபடுத்தினேன். இரண்டரை லட்சம் பேருக்கு 600 ரூபாய் என்று கொடுத்தால், 15 கோடி ரூபாயாகும் என்பதை

V211,32 'N79 N80.1625

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்குச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இந்த அரசுக்கு எவ்வளவோ இருக்கிறது. என்னென்னவோ சொல்லிப் பார்க்கிறார்கள். ரஷ்யாவுக்குப் போகிறார்களே, போவதற்கு முன்பு இங்கே ஏதாவது அறிவித்துச் செல்லமாட்டார்களா என்று கேட்கிறபோது சங்கடமாக இருக்கிறது. என்னை ஆசியோடு அனுப்பமாட்டார்களோ என்று சந்தேகமாக இருக்கிறது. எதையும் அறிவிக்க முடியாத அளவுக்கு நான் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறேன். கட்டுண்டு இருக்கிறேன். இப்படிச் சொல்லும்போது அரசின் நிதியாதாரத்தை நான் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறேன் என்று அர்த்தமாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, இந்த ஆட்சிக்கு "It is fast losing the grip over administration". என்ற கருத்துப்பட பேசினார். அவர் சொன்ன கருத்துக்களுக்கு நன்றி. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன், இந்த அரசின் "**Grip** over the administration is now being strengthened".
இந்த அரசு தனது பிடிப்பை எந்த அளவுக்கு வைத்துக் கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் ஆறு மாத காலத்திற்குள்ளாகப் பார்க்கப்போகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னென்ன குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டதோ அப்பேர்ப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து நடைபெறாத அளவுக்கு இந்த அரசு இயங்கும் என்ற உறுதியை இந்த அவைக்கு நான் வழங்குகிறேன். ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது. ஒரு ஆட்சி சென்றதற்குப் பிறகு, இடையிலே ஒரு ஆட்சி என்று தற்காலிகமாக ஆளுநர் ஆட்சி வந்ததற்குப் பிறகு, வந்த அரசு இது என்பதை மறந்துவிடக்கூடாது. காலாகாலமாக இருந்த அல்லது இருந்து வருகிற பல தவறுகள் இன்றைக்கும் இருந்துகொண்டே இருக்கின்றன. அந்தத் தவறுகளை வெளியேற்று வதற்கேதான் இன்றைக்கு நாங்கள் நின்றுகொண்டிருக்கிறோம். எந்த அலுவலர்களை அவர்கள் சந்தித்தார்களோ, எந்த உத்தியோகஸ்தர்களை அவர்கள் பார்த்தார்களோ, எந்த அதிகாரிகளை அவர்கள் சந்தித்து யோசனை கேட்டார்களோ, எந்த அதிகாரிகளின் யோசனைகளை அவர்கள் பெற்றார்களோ, அவர்களின் மத்தியிலேதான் நாங்கள் இன்றைக்கு நின்றுகொண்டிருக்கிறோம். அவர்களெல்லாம் அவர்களுக்கு யோசனை சொன்னபோது அது பெரிய தெய்வீகமான யோசனை என்றும், அவர்கள் எங்களுக்கு யோசனை வழங்குகிற போது, 'உங்களை அதிகாரிகள் திசைதிருப்புகிறார்கள்' என்று சொல்லுவது,

18/9/79

வேண்டுமானால் வாதத்திற்கு நன்றாக இருக்குமே தவிர, ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையை அரசுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே உருவாக்குவதற்கு இப்படிப்பட்ட கருத்துக்கள் பயன்படாது என்று நான் நம்புகிறேன். சில அதிகாரிகள் மிக அற்புதமாகப் பணியாற்றுகிறார்கள். உதாரணத்திற்கு நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன், ஒரு நல்ல அதிகாரியை நாம் இழந்துவிட்டோம். உங்களுக்கெல்லாம் தெரியும், போக்குவரத்துத் துறையிலே பணியாற்றிய அருமை நண்பர் திரு. பாங்கோ அவர்கள் எவ்வளவு தலைசிறந்த அதிகாரியாக விளங்கினார், அப்படிப்பட்ட அதிகாரிகள் ஏராளமாக நமக்கு இருக்கிறார்கள். சில அதிகாரிகள் திசைதிருப்பக்கூடும். நான் மறுக்கவில்லை. அப்படி திசை திருப்புகிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது, அந்த நடவடிக்கைக்கு ஆட்பட்ட அதிகாரிகள் சில உறுப்பினர்களை அணுகி எனக்காக நீங்கள் வாதாடுங்கள் என்று கேட்கிறபோது, அவர்களுக்காக சட்ட மன்றத்திலே வந்து வாதாடி இது என்ன நியாயம் என்று கேட்கிறபோது, எங்களுடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதற்கு நமது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எப்படிப்பட்ட நிலைமையில் அது அமைந்தது என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசியபோது நமக்கெல்லாம் அங்கே நடக்கின்ற செய்திகளைச் சொல்லிக்கொண்டிருந்த ஒருவர் என்று அவருக்குப் பட்டம் சூட்டப்பட்டது. ஒரு அரசாங்கத்திலே பணிபுரிகின்றவர், செய்திகளை வெளியே இருக்கின்றவர்களுக்குத் தெரிவிக்கின்ற அளவுக்கு தன்னை உருவாக்கிக்கொண்டிருக்கிறார் என்றால், அதிகாரியானாலும், ஊழியரானாலும் அவர் எப்படி இந்த ஆட்சிக்கு ஒழுங்கானவராக இயங்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இங்கே போலிசார் மாமூல் வாங்குவதைப் பற்றியும், சில இடங்களிலே கள்ளச்சாராயம் காய்ச்சுங்கள் என்று கிராமத்து மக்களைப் பார்த்து வற்புறுத்துவதாகவும், அவர்கள் அப்படிச் செய்யத் தவறினால் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்வதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். அவர் என்னிடம் அந்தச் செய்திகளைத் தந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அவைகளை நான் கொடுத்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற முயற்சியை மேற்கொள்வேன் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். கிடைக்கிற செய்திகளையெல்லாம் உண்மையான செய்திகளாகக் கருதக்கூடாது என்பதையும் நான் அவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். செய்திகள் ஆயிரம் வரும். நம்முடைய மாண்புமிகு எதிர்க்

கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களைப்பற்றி, எதிர்க் கட்சித்தலைவர் வரிசையிலே இருப்பவரைப் பற்றி இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்தோ, வேறு எந்தப் பகுதியிலிருந்தோ அவரைப்பற்றித் தவறான அல்லது அவர் இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார் என்ற முறைகேடான செய்திகள் எனக்கு இதுவரை வரவில்லை. இவைகளையெல்லாம் நான் எண்ணிப்பார்க்கிறபோது, என்னை அறியாமலேயே கூட ஒரு தனிப்பட்ட மரியாதை எதிர்க் கட்சித் தலைவர் மேல் ஏற்படுவது இயற்கையாக ஆகிவிடுகிறது. ஆனால், வேண்டு

(பிற்பகல் 8-00)

மென்றே சிலர் எழுதி அனுப்புவதை வைத்துக்கொண்டு, அந்தச் செய்திகளையே வேதப் புத்தகமாகக் கருதிக் கொண்டு இந்த மாமன்றத்தில் அவைகளைப் படித்துக் காட்டுவதன் மூலமாக இந்த அரசின் மதிப்பை, இமேஜை, கெடுத்து விட முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது கருதுவார்களானால், அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று மக்களின் சார்பாக இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும் போது, ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்தார்கள். 7-1/2 லட்சம் ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் மாதம் போடுவது என்றும், அரசாங்கத்திலிருந்து 'மேட்சிங்' ஆக ஒரு ரூபாய் போடுவது என்றும், இதன் காரணமாக மாதம் ரூ. 15 லட்சம் ஆகும் என்றும், இதிலிருந்து வருஷத்திற்கு இவ்வளவு ஆகும் என்று ஒரு தொகையைக் கணக்கிட்டு இந்தத் தொகையிலிருந்து ஊழியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கலாம் என்பது போன்ற ஒரு சில திட்டங்கள் வைத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்தக் கருத்தை வெளியிட்டு, இந்தத் திட்டங்களையெல்லாம் விரிவாக விளக்குவதற்கு நிதியமைச்சர் அவர்கள் நேரம் தந்தால், அதற்கு நான் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். திட்டங்களை வகுத்து அளிக்கிற அளவுக்கு முன்னே வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய வெளிநாட்டுப் பயணம் முடிந்து வந்தவுடன் உங்களையும் நீங்கள் யாரை அழைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவர்களையும் அழைத்து நாம் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து யோசிப்போம், அதனடிப்படையில் நடைமுறைக்குச் சாத்தியமான திட்டங்கள் என்று எவற்றையேனும் அரசு கருதுமானால், நிச்சயமாக அவற்றைச் செயல்படுத்த முடியும் என்ற உறுதியை இந்த நேரத்தில் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். சிக்கன நடவடிக்கை தேவை என்று சொன்னார்கள். நான் அதை மறுக்கவில்லை. ஊதாரித்தனமாக செலவு கூடாது என்றார்கள். மறுக்கவில்லை நான். ஒவ்வொரு தொழிலாளியும் சிந்துகிற வியர்வைத் துளியும் வெள்ளிக் காசாக மாற்றப்பட்டு நடைபெறுகிற இந்த அரசு, ஊதாரித்தனத்திற்கு நிச்சயமாக உதவியாக இருக்காது. ஆனால் ஒரு சில வெளியீடுகளை சுட்டிக்காட்டி இவ்வளவு உயர்ந்த விலையுள்ள காகிதத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கின்றனவே என்று சொல்லி, பொதுத் துறையிலிருந்து வெளியிடுகிற புத்தகங்களையெல்லாம் எடுத்துக் காட்டினார்கள். தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் போன்ற பல பொதுத்துறை நிறுவனங்கள் வெளியிட்ட வெளியீடுகளைச் சுட்டிக்காட்டி இந்த அளவுக்கு 'விலையுயர்ந்த காகிதம் இவைகளுக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டியது தேவைதானா' என்று கேட்டார்கள். நான் அவருக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். அநேகமாக பல்வேறு மாநிலங்களில் உள்ள நிலைமையை நான் பார்த்திருக்கிறேன். இங்கே நமது மாநிலத்தைச் சார்ந்த பொதுத் துறை நிறுவனங்கள் உபயோகப்படுத்துகிற காகிதங்களைவிட அங்கேயிருக்கிறவர்கள் உபயோகிக்கும் காகிதங்கள், அவர்கள் வெளியீடுகளுக்குப் பயன்படுத்தும் காகிதங்கள் மிக உயர்ந்த விலையோடும் மிக நேர்த்தியாகவும் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஏதோ வெளிநாடுகளிலிருந்து அவர்களுக்கு அச்சிட்டுத் தந்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் கிளம்புகிற அளவுக்கு அவ்வளவு அற்புதமாக அவைகளை அச்சடித்திருக்கிறார்கள். அதில் அவர்களுடைய அச்சுத் தொழிலின் திறமையும் தெரிகிறது, அதே நேரத்தில் எந்த அளவுக்கு அச்சடிக்கிறார்கள் என்றும் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே அரசுத் தரப்பில் தரப்படுகிற 'கொள்கை விளக்கக் குறிப்பு' களைப் பார்க்கிறபோதும், சர்க்கார் தரப்பில் வெளியிடுகிற வெளியீடுகளைப் பார்க்கிற போதும் பல நண்பர்கள் என்னிடம் கேட்கிறார்கள். 'உங்களுக்கு ஒழுங்காக அச்சடிக்கத் தெரியாதா? உங்களுக்கு நல்ல காகிதம் கிடைக்காதா' என்று கேட்கிறார்கள். சிக்கன நடவடிக்கை தேவை என்பதை நூற்றுக்கு நூறு நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சிக்கன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமதிப்பிற்குரிய மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது ஒரு குறிப்பைச் சொன்னார்கள். 'நிதியமைச்சர் அவர்கள் அதிக நேரம் பேச இருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். அது, நான் அதிக நேரம் பேசுவேன் என்று நம்பிச் சொன்னதல்ல. அதன் மூலம் மற்றவர்கள் கொஞ்சம்

குறைத்துக்கொள்ள மாட்டார்களா என்ற எண்ணத்தில் சொல்லப்பட்டதாகும். அவர் சொன்ன பிறகும் அவர் விரும்பியது நடைபெறவில்லை. என்னைப் பொறுத்தவரையில், எனக்கு இன்று இன்னும் இரண்டு நிகழ்ச்சிகள் இருக்கின்றன.

இங்கே பேசியவர்களெல்லாம் திரும்பத் திரும்ப இரண்டு மாதங்களாக எதைப் பேசினார்களோ அவைகளையே பேசி என்னைத் திருப்திப்படுத்த வைத்தமைக்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புதிய செய்தி ஒன்றையாவது சொல்லக்கூடாதா என்று மேலவைத் தலைவர் அவர்களே கேட்டார்கள். இல்லாதபோது எப்படிச் சொல்ல முடியும்? எனக்குத் தெரிகிறது. ஆனாலும் சொல்ல வேண்டுமே என்பதற்காகச் சொல்லுகிறார்கள். எனக்குப் புரிகிறது. இப்படிச் சொல்லுகிறீர்களே என்று கேட்டால், இது ஜனநாயகக் கடமையல்லவா என்று கேட்கிறார்கள். இப்படித் தானா ஜனநாயகக் கடமையை ஆற்றுவது என்று கேட்டால், வேறு எப்படி என்கிறார்கள்? வேறு வழியே இல்லையா என்றால் இதுதான் வழி என்கிறார்கள். இது ஒரு வழி. நான் மறுக்கவில்லை. கடைசியாக நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

என். ஜி. ஓ. சங்கத்தினர்களும் மற்ற சங்கத்தினர்களும் விடுத்த கோரிக்கைகள் சிலவற்றினையேற்று அரசு அறிவித்துள்ள அறிவிப்பைப் பாராட்டி வாழ்த்துக்களைப் பலரும் வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக ஆசிரியப் பெருமக்கள் அத்தனை பேரும் வாழ்த்தினார்கள். நான் அத்தகைய வாழ்த்துக்களை ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்த்தேன். உண்மை. அவர்களும் தந்தார்கள். ஆனால் நான் அந்த வாழ்த்தை யாரிடம் ஆசையாக எதிர்பார்த்தேன் என்றால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரிடம்தான். ஒரு வேளை அவர் மறந்திருக்கக்கூடும். காரணம் அவருக்கு மனச் சாட்சி உண்டு. மறந்துதான் சொல்லாமல் விட்டிருப்பாரே தவிர வேறொன்றுமில்லை. வேண்டுமானால் இப்போது சொல்லிவிடுகிறேன் என்று கூட எழுந்திருப்பார் என்ற பயம் எனக்குண்டு. எனவே உள்ளத்திலேயே பாராட்டுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அடுத்து நண்பர் திரு. வீராசாமி அவர்கள் வேறு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததால், இது நினைவில்லாமல் போய்விட்டது.

அரசு ஊழியர்களுக்காக இந்த அரசு தன்னால் முடிந்ததைச் செய்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசு ஊழியர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தின் தூணாக இயங்கிக் கொண்டிருக்கிற நீங்கள் மேலும் மேலும் போராட்டச் சூழலை

உருவாக்காதீர்கள். சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை நீங்கள் ஆற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

விடைபெறுவதற்கு முன்பு மீண்டும் ஒரு முறை திரும்பச் சொல்லு கிறேன். நீங்கள் அளிக்கிற இந்தப் பணம் விரயமாகாமல் நான் பாதுகாப்பேன் என்றும், அப்படி விரயமாகிறது என்ற சந்தேகம் எப்போதாவது யாருக்காவது ஏற்படுமானால், எங்கள் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள் என்றும், விழிப்புணர்ச்சியோடிருந்து எங்களை வழி நடத்துங்கள் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டு இந்த நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றி எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1979).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 118-120 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1979)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 21-122 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 5-10)

2. அறிவிப்பு—தொடர்ச்சி.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் திருத்தச் சட்டமுன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளுவதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசின் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(4) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கிற இந்தத் திருத்த மசோதாவை என் கட்சியின் சார்பிலே நான் எதிர்க்கிறேன். இந்த மசோதாவிலே மூன்று, நான்கு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. காம்பென்சேட்டரி அலவன்சை ரூபாய் 350 என்றும், டெலிபோன் அலவன்சை ரூபாய் 150 என்றும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். பஸ் வசதி, இரயில் வசதி போன்ற சில வசதிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் இதையெல்லாம் சேர்த்து மாதம் 550 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது மேலும் ஸ்பெஷல் அலவன்ஸை அதிகப்படுத்துவதை

@ 122-125 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நாங்கள் எதிர்ப்பதற்குக் காரணம், இப்போது தமிழ் நாட்டில் இருக்கிற பெரும்பான்மையான மக்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது, அவர்கள் வாழ்வதற்காக படுகிற பாட்டை தினசரி பார்க்கிறோம், அவர்கள் நடத்துகிற போராட்டங்களையும், கஷ்டங்களையும் நாம் பார்க்கிறோம்—இப்படிப்பட்ட நிலைமையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மேலும் வசதிகளை அளிப்பது சரியா என்பதுதான். அதைக் குறையென்று கூற முடியாது, மக்கள் இப்படிக் கஷ்டப்படும் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குத் தாங்களே சம்பளத்தை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்களே என்று அரசு ஊழியர்களும், தொழிலாளர்களும் தவறான முறையிலே எண்ணக்கூடிய சூழ்நிலை இருப்பதால், 150 ரூபாய் ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுப்பதென்பது வேண்டாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

போன் சம்பந்தப்பட்ட வரையில், பார்லிமென்ட் உறுப்பினர்களுக்குத் தருவதைப் போல . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்ப்பை தெரிவிப்பதென்றால் தெரிவிக்கலாம். அதற்காக ஒவ்வொன்றாகச் சொல்ல வேண்டியதில்லை. இன்னின்ன நான்கைந்து அயிட்டங்களை எதிர்க்கிறேன் என்று சொல்லி தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்ளலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : தாங்கள் சொல்லுவதைப் போல் நான் சொல்ல விரும்பவில்லை. என்னுடைய கருத்தின் படியே சொல்ல விரும்புகிறேன். போன் சம்பந்தப்பட்ட வரையில் பார்லிமென்ட் உறுப்பினர்களுக்கு மத்திய அரசு செய்து கொடுத்திருப்பதைப் போல இலவசமாக போன் வைத்துக் கொடுத்து அய்ந்தாயிரம் கால்களை ஃபிரியாகச் செய்து கொள்ளலாம் என்று வைக்கலாம். பொது மக்களோடும், அரசோடும் தொடர்பு கொள்ளுவதற்கு அதுவே போதும். போன் அலவன்ஸ் என்று தனியாகத் தர வேண்டியதில்லையென்பது என்னுடைய அபிப்பிராயம். இதைப்பற்றி மத்திய அரசிடம் கேட்டுச் செய்ய காலதாமதம் ஆகுமென்றால், அது வரையில் இந்த அலவன்சைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், நாங்கள் அதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இரயிலில் உடன் அழைத்துச் செல்லுவதற்காக, "ஸ்பவுஸ்" என்று போட்டார்கள். பிறகு அதை 'ரிலேடிவ்' என்று மாற்றியிருக்கிறார்கள். இதை விட "கம்பானியன்" என்று மாற்றினால் உதவியாக இருக்கும். சில இடங்களுக்கு உறுப்பினர்கள் தங்களோடு அதிகாரிகளையோ அல்லது பொது மக்களையோ அழைத்துச் செல்ல வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

கடைசியாக, 150 ரூபாய் அளித்திருக்கக் கூடிய சலுகை மிகப் பெரிய சலுகையாக இருப்பதால், அந்தச் சலுகையை எங்கள் கட்சி ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதால், இந்தத் திருத்தம் முழுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தனது கட்சியின் நிலைமைகளை இங்கே தெளிவுபடுத்திப் பேசியிருக்கிறார்கள். அதற்காக நன்றி. ஆனால் ஒன்றை இங்கே தெளிவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சட்டசபை உறுப்பினர்களுக்கு எவ்வளவு சம்பளம் வழங்குகிறார்கள், அவர்களுக்கு எவ்வளவு வசதிகள் இருக்கின்றன என்பதை நாங்கள் மிகக் கூர்மையாக, தெளிவாகப் படித்துப் பார்த்ததற்குப் பின் தெரிந்து கொண்ட உண்மை, தமிழ் நாடு சட்டமன்றத்திலேதான் உறுப்பினர்கள் மிகக் குறைச்சலாக சம்பளத்தை வாங்குகிறார்கள் என்பது.

இன்னுமொன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேற்கு வங்காளத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பெறுகின்ற அளவுக்கு உயர்த்தித் தர முடியாது என்பதை இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 8-20)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

145. Notification issued in G.O. Ms. No. 256, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 8th March 1979 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Comptist in the National Employment Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

146. Notification issued in G.O. Ps. No. 243, Commercial Taxes and Religious Endowments, dated the 5th March 1979 exempting from payment of Additional Sales Tax the sales of timber by the Government of Kerala by their Depot at Shenkottah,

Tirunelveli district. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1958).]

B. *Reports, Notifications and other Papers.*

*161. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1977–78. (Tamil and English).

இணைப்பு I

[22 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கோவை மத்திய வங்கியின் செயலாளர் மீது பெருமளவில் குற்றச்சாட்டுகள் வந்தன. ஆகவே கூட்டுறவு சங்க கூட்டுப்பதிவாளரை குற்றச் சாட்டுக்களை தலத்திலேயே விசாரணை செய்ய கோவைக்கு அனுப்பும்படி கூட்டுறவு சங்கப் பதிவாளரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. கூட்டுப்பதிவாளரின் விசாரணை அறிக்கையின் பேரில் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஓர் அறிக்கையை அரசுக்கு அனுப்பினார். இவ்வறிக்கையிலிருந்து ஆறு குற்றச் சாட்டுகள் மட்டும் ஓரளவுக்கு நிருபிக்கப்பட்டன.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டப்படி கூட்டுறவு சங்கப் பதிவாளர் மத்திய கூட்டுறவு வங்கியின் சிப்பந்திகள் மீது நேரடியாக குற்றம்சாட்டி நடவடிக்கை எடுக்க இயலாது. அதிகப்பட்சம் குற்றம் இழைத்த சிப்பந்தியை தற்காலிக வேலைநீக்கம் செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி வங்கியின் நிர்வாகக் குழுவிற்கு ஆணையிடலாம். குற்றச்சாட்டுகள் கடுமையாக இருப்பதால், மத்திய வங்கியின் செயலாளரின் மீது குற்றம்சாட்டி தக்க நடவடிக்கை எடுக்கும்படி தலைமை நிர்வாக அலுவலருக்கு ஆணையிடுமாறு கூட்டுறவு சங்கப்பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

கோவை மத்திய வங்கியின் தனி அலுவலர் வங்கி செயலாளர் மீது குற்றச் சாட்டுகள் கொடுத்துள்ளார். குற்றப் பத்திரிகைக்கு வங்கிச் செயலாளர் திரு. பழனிச்சாமியிடமிருந்து சமாதானம் கிடைக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளைப் பார்வையிடுவதற்கு அவர் அனுமதி கேட்டிருக்கிறார். அவர் சமாதானம் கிடைத்ததும் மேற்கொண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

---

* Circulated to all M.L.Cs. on 24th April 1979.

% Subject to the Bills being passed by the Assembly and received therefrom in the Council on 25th April 1979.

இணைப்பு II

[24 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

Under Rule 12 (7) (iv) of the Tamil Nadu Pawnbrokers Rules 1944, the auctioner shall also send a copy of printed catalogue of the pledges to be sold in public auction containing the following particulars by Registered Post to the Pawner at least a week before the date fixed for sale :—

(a) The name, place of business and licence number of the Pawnbroker concerned;

(b) Date of loan;

(c) Number of pledge in pledge book;

(d) Full and detailed description of the article (weight to be noted in the case of jewels).

(e) Date, hour and place of sale.

Further, as a measure of precaution, under Rule 12 (9), the auctioner shall insert in some public newspaper approved by the Collector of Madras in Madras City or by the Revenue Divisional Officer elsewhere, an advertisement giving notice of sale and stating,

(i) the pawnbroker's name and place of business;

(ii) the months in which the pledges were pawned and the date, hour and place of sale.

Under Rule 12 (10), the advertisement shall be inserted on two separate days in the same newspaper and the second advertisement shall be inserted at least 10 clear days before the first day of sale. As observed by the Court, the rules require that the auctioneer should send a copy of the printed catalogue by registered post to the Pawner at least a week before the date fixed for the sale. There are no instructions to say that the notice should be served on the pawner.

Copy of the judgment has been applied for and it has not yet been received from the High Court. It is understood that it may take some time to get a copy of it from the Court. Necessary action would be taken on receipt of the judgement copy.

[26 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L. A. Bill No. 25 of 1979.

(As passed by the Asesmbly)

A Bill to provide for the appropriation of moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year commencing on the 1st April 1979.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 3) Act, 1979.

2. *Appropriation out of the Consolidated Fund for the financial year commencing on the 1st April 1979.*—The State Government may appropriate out of the Consolidated Fund of the state for the financial year commencing on the 1st April 1979, a sum not exceeding one thousand two hundred and thirty-six crores, sixty-four lakhs and fifty-one thousand rupees [which shall be inclusive of the sum of the two hundred and six crores, ten lakhs and seventy-six thousand rupees specified in section 2 of the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1979 (Tamil Nadu Act 16 of 1979)], being moneys required to meet—

(a) the grants made by the Tamil Nadu Legislative Assembly for that year, as set forth in column (3) of the Schedule; and

(b) the expenditure charged on the Consolidated Fund of the State for that year, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

(*See* section 2.)

Demand number	Service and purposes	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department	4,87,29,000	..	4,87,29,000
2	State Excise Department	75,30,000	..	75,30,000
3	Motor Vehicles Acts Administration	1,55,25,000	6,000	1,55,31,000

1979 ஏப்ரல் 25]

Demand number.	Services and purposes.	Sums not exceeding — Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
4	Gentral sales Tax and Other Taxes and Duties Administration	6,62,18,000	20,000	6,62,38,000
5	Stamps—Administration	69,76,,000	..	69,76000
6	Registration	2,69,36,000	1,000	2,69,37,000
	Debt Charges	..	90,99,19,000	90,99,19,000
7	State Legislature	77,63,000	64,000	78,27,000
8	Elections	21,76,000	..	21,76,000
9	Head of State, Ministers and Headquarters Staff ..	14,49,98,000	83,96,000	15,33,94,000
10	Milk Supply Schemes ..	95,36,000	..	95,36,000
11	District Administration ..	19,13,36,000	68,000	19,14,04,000
12	Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959	1,61,42,000	20,000	1,61,62,000
13	Administration of Justice	5,80,62,000	85,41,000	6,66,03,000
14	Jails	5,66,63,000	1,000	5,66,64,000
15	Police	38,59,84,000	27,000	38,60,11,000
16	Fire Services	2,88,39,000	5,000	2,88,44,000
17	Education	2,08,53,13,000	6,000	2,08,53,19,000
18	Medical	54,59,99,000	..	54,59,99,000
19	Public Health	42,10,25,000	1,000	42,10,26,000
20	Agriculture	44,04,65,000	6,000	44,04,71,000
21	Fisheries	2,44,02,000	10,000	2,44,12,000
22	Animal Husbandry ..	11,65,73,000	1,000	11,65,74,000
23	Co-operation	7,26,25,000	..	7,26,25,000
24	Industries	10,72,53,000	2,000	10,72,55,000
25	Cinchona	1,86,48,000	..	1,86,48,000
26	Handlooms and Textiles ..	5,13,53,000	..	5,13,53,000
27	Khadi	1,52,51,000	..	1,52,51,000
28	Community Development Projects, etc. . .	40,89,64,000	..	40,89,64,000
29	Labour including Factories	4,94,50,000	1,000	4,94,51,000
30	Social Welfare . .	6,94,56,000	..	6,94,56,000
31	Welfare of the Scheduled Tribes and Castes, etc.	18,46,54,000	62,000	18,47,16,000

1979 ஏப்ரல் 25]

Demand number.	Services and purposes.	Sums not exceeding — Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State	Total
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
32	Welfare of the Backward Classes, etc. . .	7,04,41,000	*1,000*	7,04,42,000
33	Housing . . .	9,65,92,000	.	9,65,92,000
34	Urban Development .	9,80,40,000	..	9,80,40,000
35	Civil Supplies . .	4,88,41,000	*50,000*	4,88,91,000
36	Irrigation	22,56,83,000	*12,000*	22,56,95,000
37	Public Works—Buildings	2,78,68,000	*1,33,000*	2,80,01,000
38	Public Works—Establishment and Tools and Plant	7,2085, 000	.	7,20,85,000
39	Roads and Bridges ..	35,37,13,000	*1,000*	35,37,14,000
40	Road Transport Services and Shipping ..	39,56,000	*2,000*	39,58,000
41	Relief on account of Natural Calamities.	6,86,000	*8,59,00·000*	8,65,86.000
42	Pensions and other Retirement Benefits	29,90,50,000	*27,15·000*	30,17,65,000
43	Miscellaneous ..	45,33,15,000	*14,73,00*	45,47,88,000
44	Stationery and Printing	8,23,89,000	*9,07,000*	8,28,96,000
45	Forest Department ..	5,41,90,000	*7,000*	5,41,97,000
46	Compensation and Assignments ..	15,59,79,000	*22,53,0 00*	15,82,32,000
47	Information, Tourism and Film Technology.	1,43,16,000	..	1,43,16,000
48	Compensation to Zamindars. ..	8,00,000	*2,000*	8,02,000
49	Capital Outlay on Public Health, Sanitation and Water-supply	4,78,000	..	4,78,000
50	Capital Outlay on Agriculture.	11,12,11,000	*1,000*	11,12,12,000
51	Capital Outlay on Industrial Development	5,39,39,000	*1,51,000*	5,40,90,000
52	Capital Outlay on Irrigation ..	31,46,20,000	..	31,46,20,000
53	Capital Outlay on Public Works—Building.	12,67,69,000	*23,83,000*	12,91,52,000

(1)	(2)	(3) Rs.	(4) Rs.	(5) Rs.
54	Capital Outlay on Roads and Bridges.	10,55,03,000	*1,000*	10,55,04,000
55	Capital Outlay on Road Transport Services and Shipping	57,53,000	..	57,53,000
56	Capital Outlay on Forests.	5,34,73,000	..	5,34,73,000
57	Miscellaneous Capital Outlay	5,59,02,000	*5,000*	5,59,07,000
58	Loans and Advances by the State Government	1,14,43,52,000	..	1,14,43,52,000
	Public Debt—Repayment	..	*1,62,89,09,000*	1,62,89,09,000
	GRAND TOTAL ..	9,71,47,88,000	*2,65,16,63,000*	12,36,64,51,000

இணைப்பு IV

[105 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L. A. Bill No. 30 of 1979.

(As passed by the Assembly)

A Bill to provide for the authorisation of appropriation of meneys out of the Consolidated Fund of the State to meet the amounts spent on certain services during the financial year ended on the 31st day of March 1973, in excess of the amounts authorised or granted for the said services.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 4) Act, 1979.

2. *Issue of Rs.* 9,25,93,958 *out of the Consolidated Fund of the State for the financial year ended on the* 31*st March* 1973.—The sum specified in column (5) of the Schedule amounting in the

aggregate to the sum of of nine crores, twenty-five lakhs, ninety-three thousand nine hundred and fifty-eight rupees shall be deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State to meet the amounts spent for defraying the charges in respect of the services and purposes specified in column (2) of the Schedule during the financial year ended on the 31st day of March 1973, in excess of the amounts authorised or granted for those services and purposes for that year.

3. *Appropriation.*—The sums deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State under this Act shall be appropriated and shall be deemed to have been appropriated for the services and purposes specified in the Schedule in relation to the financial year ended on the 31st day of March 1973.

THE SCHEDULE.

(See Sections 2 and 3.)

Demand number.	*Services and purposes.*	*Sums.* *Voted by the Legislative Assembly.*	*Charged on the Consolidated Fund of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department.	2,10,418	..	2,10,418
4	Stamps—Administration ..	9,17,631	..	9,17,631
6	State Legislature	..	*60,563*	60,563
9	District Administration and Miscellaneous	19,02,938	..	19,02,938
10	Administration of Justice ..	5,54,648	*1,54,981*	7,09,629
11	Jails	5,73,843	..	5,73,843
12	Police	38,16,657	..	38,16,657

Demand number.	Services and purposes.	Sums. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
14	Medical	53,85,659	..	53,85,659
17	Fisheries	9,42,505	..	9,42,505
18	Animal Husbandry	9,07,561	..	9,07,561
19	Co-operation	4,74,387	..	4,74,387
20	Industries	10,44,783	..	10,44,783
27	Public Works—Works ..	75,83,326	512	75,83,838
30	Road Transport Schemes ..	27,31,962	..	27,31,962
32	Pensions	80,52,299	..	80,52,299
34	Stationery and Printing ..	23,14,873	..	23,14,873
35	Forest Department	11,74,578	..	11,74,578
36	Other Miscellaneous Compensations and Assignments.	3,17,899	..	3,17,899
43	Capital Outlay on Road Transport Schemes ..	31,42,238	..	31,42,238
44	Capital Outlay on Forests ..	6,98,751	..	6,98,751
45	Commuted Value of Pensions.	6,28,289	..	6,28,289
46	Capital Outlay on Schemes of Government Trading ..	4,24,45,985	519	4,24,46,504
47	Loans and Advances by the State Government ..	65,56,153	..	65,56,153
	Grand Total ..	9,23,77,383	2,16,576	9,25,93,958

இணைப்பு V

[108ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L. A. Bill No. 31 of 1979.

(As passed by the Assembly)

A Bill to provide for the authorisation of appropriation of moneys out of the Consolidated Fund of the State to meet the amounts spent on certain services during the financial year ended on the 31st day of March 1974, in excess of the amounts authorised or granted for the said services.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 5) Act, 1979.

2. *Issue of Rs. 6,97,22,167 out of the Consolidated Fund of the State for the financial year ended on the 31st March 1974.*—The sums specified in column (5) of the Schedule amounting in the aggregate to the sum of six crores, ninety-seven lakhs, twenty-two thousand one hundred and sixty-seven rupees shall be deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State to meet the amounts spent for defraying the charges in respect of the services and purposes specified in column (2) of the Schedule during the financial year ended on the 31st day of March 1974, in excess of the amounts authorised or granted for those services and purposes for that year.

3. *Appropriation.*—The sums deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State under this Act shall be appropriated and shall be deemed to have been appropriated for the services and purposes specified in the Schedule in relation to the financial year ended on the 31st day of March 1974.

THE SCHEDULE.

(*See* sections 2 and 3.)

Demand number.	Services and purposes.	Sums: Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
6	Registration Department ..	63,096	..	63,096
13	Administration of Justice ..	1,43,163	..	1,43,163
14	Jails	4,35,660	..	4,35,660
17	Medical	1,38,36,849	..	1,38,36,849
19	Agriculture	46,13,517	..	46,13,517
23	Industries	54,27,299	..	54,27,299
31	Irrigation	67,22,733	..	67,22,733
32	Public Works–Works ..	1,18,87,554	..	1,18,87,554
35	Road Transport Schemes ..	52,24,788	..	52,24,788
37	Pensions	91,18,323	*58,48,134*	1,49,66,457
45	Capital Outlay on Industrial Development	..	*1,31,429*	1,31,429
48	Capital Outlay on Road Transport Schemes ..	39,78,302	..	39,78,302
50	Commuted Value of Pensions.	9,46,327	..	9,46,327
51	Capital Outlay on Schemes of Government Trading ..	..	*246*	246
52	Loans and advances by the State Government ..	13,44,747	..	3,44,747
	Grand Total	6,37,42,358	*59,79,809*	6,97,22,677

இணைப்பு VI

[109-ஆம் பக்கத்தில் இனம் 4 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

A Bill further to amend the Tamil Nadu Payment of Salaries Act, 1951.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1979.

(2) (*a*) The provisions of this Act, except clause (ii) of section 7 and section 8, shall be deemed to have come into force on the 1st April 1978.

(*b*) Clause (ii) of section 7 shall be deemed to have come into force on the 1st October 1975.

(*c*) Section 8 shall be deemed to have come into force on the 1st June 1978.

2. *Amendment of section* 4, *Tamil Nadu Act XX of* 1951.—In section 4 of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951) (hereinafter referred to as the principal Act), for sub-section (2), the following sub-section shall be substituted, namely :—

"(2) There shall be paid to the Deputy Speaker a salary of seven hundred and fifty rupees per mensem and a house rent allowance of one hundred rupees per mensem; but the house rent allowance shall not be paid to the Deputy Speaker if he occupies a house provided by the State Government free of rent.".

3. *Amendment of section* 5, *Tamil Nadu Act XX of* 1951.—In section 5 of the principal Act, for sub-section (2), the following sub-section shall be substituted, namely :—

"(2) There shall be paid to the Deputy Chairman a salary of seven hundred and fifty rupees per mensem and a house rent allowance of one hundred rupees per mensem; but the house rent allowance shall not be paid to the Deputy Chairman if he occupies a house provided by the State Government free of rent. ".

4. *Substitution of new section for section* 6, *Tamil Nadu Act XX of* 1951.—For section 6 of the principal Act, the following section shall be substituted, namely :—

" 6. *Salaries and allowances of Parliamentary Secretaries.*—(1) There shall be paid to the Chief Parliamentary Secretary, if there is one, a salary of eight hundred and fifty rupees per mensem and a house rent allowance of one hundred rupees per mensem and to each of the other Parliamentary Secretaries a salary of seven hundred and fifty rupees per mensem and a house rent allowance of one hundred rupees per mensem; but the house rent allowance shall not be paid to the Chief Parliamentary Secretary and to the Parliamentary Secretaries, if they occupy a house provided by the State Government free of rent.

(2) There shall be paid to each of the Parliamentary Secretaries, including the Chief Parliamentary Secretary a conveyance allowance of one hundred and fifty rupees per mensem. ".

5. *Amendment of section 6-A, Tamil Nadu Act XX of* 1951.—In section 6-A of the principal Act, for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

" (1) There shall be paid to the Leader of the Opposition in the Legislative Assembly and to the Leader of the Opposition in the Legislative Council a salary of seven hundred and fifty rupees per mensem and a house rent allowance of one hundred rupees per mensem; but the house rent allowance shall not be paid to the Leader of the Opposition in the Legislative Assembly and the Leader of the Opposition in the Legislative Council if they occupy a house provided by the State Government free of rent :

Provided that clause (*a*) of sub-section (1) of section 12 shall not apply to the holders of the offices mentioned in this sub-section.".

6. *Amendment of section 6-B, Tamil Nadu Act XX of* 1951.—In section 6-B of the principal Act,—

(i) in sub-section (1), for the words " the Speaker or the Chairman ", the words " the Speaker, the Deputy Speaker, the Chairman, the Deputy Chairman, the Chief Parliamentary Secretary, and Parliamentary Secretary, the Leader of the Opposition in the Legislative Assembly or the Leader of the Opposition in the Legislative Ctuncil" shall be substituted;

(ii) in sub-section (2), for the expression " the Speaker or the Chairman is paid a house rent allowance under section 3, 4 or 5", the expression "the Speaker, the Deputy Speaker, the Chairman, the Deputy Chairman, the Chief Parliamentary Secretary, a Parliamentary Secretary, the Leader of the Opposition in the Legislative Assembly or the Leader of the Opposition in the Legislative Council is paid a house rent allowance under section 3, 4, 5, 6 or 6-A " shall be substituted.

7. *Amendment of section* 12, *Tamil Nadu Act XX of* 1951.—In section 12 of the principal Act,—

(i) in sub-section (1-A), for the words " two hundred rupees per mensem ", the words " three hundred and fifty rupees per mensem " shall be substituted;

(ii) in sub-section (4-A),—

(*a*) for the words " by the State Transport Department or by any Transport Corporation ", the words " by any Transport Corporation owned by the State Government" shall be substituted;

(*b*) the *Explanation* shall be omitted;

(iii) in sub-section (4-B), for the words " one hundred rupees per mensem ", the words " one hundred and fifty rupees per mensem " shall be substituted.

8. *Amendment of section 12-A, Tamil Nadu Act XX of* 1951.—In section 12-A of the principal Act, in sub-section (1), for the portion beginning with the words " shall be provided with " and ending with the words " during a financial year ", the following shall be substituted, namely :—

" shall, for every financial year, be provided with railway coupons for a value of two thousand rupees which shall, subject to such rules as may be made by the State Government in this behalf, entitle such member to travel either singly or with his or her spouse or any other relative in one or more journeys by any class by any railway in India.".

9. *Substitution of new section for section* 13, *Tamil Nadu Act XX of* 1951.—For section 13 of the principal Act, the following section shall be substituted, namely :—

" 13. *Relinquishment of salaries and allowances and cancellation thereof.*—(1) Any person entitled to any salary or allowance under this Act, may, at any time during the term of his respective office, relinquish the whole or any portion of such salary or allowance payable to him.

(2) Any relinquishment made by any person under sub-sction (1) may be cancelled by him.

(3) Every relinquishment or cancellation made under sub-section (1) or sub-section (2) shall be made in writing and shall take effect on the date specified therein. ".

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1979 ஏப்ரல் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

High Court of Madras.

* 350-A *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that vacancies in the High Court remain unfilled for a long time ; and

(*b*) if so, the reasons therefor ?

சென்னை உயர்நீதி மன்றம்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உயர்நீதி மன்றத்தில், நீதிபதி பதவியிடங்கள் நீண்டகாலமாகக் காலியாக உள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) & (இ) தற்போது, சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள 21 நிலையான நீதிபதி பதவிகளும் நிரப்பப்பட்டு விட்டன. கூடுதல் நீதிபதி பதவிகள் 4-ல் இரண்டு நிரப்பப்பட்டு, மீதமுள்ள 2 பதவிகள் மட்டும் நிரப்பப்பட வேண்டியுள்ளது. நிரப்பப்படாது உள்ள 2 கூடுதல் நீதிபதி பதவிகளை நிரப்புவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள், மற்ற அப்பீல் மனுக்கள் மிகுந்த அளவுக்கு தேங்கிக் கிடப்பதாகவும், 1975-லே பதிவு செய்யப்பட்ட அப்பீல் மனுக்கள்கூட இன்றைக்கும் விசாரணைக்கு வராத நிலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை உத்தேசித்தாவது அரசு கூடுதல் நீதிபதிகளை நியமிக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியும் இது தொடர்பாகவே இருக்கிறது. அதற்கும் பதில் சொல்லி விட்டால், இரண்டையும் சேர்த்து பதில்கள் கொடுத்துவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு கேள்விகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம். அடுத்த வினா எண் 350 (ஆ)-விற்கு பதிலளிக்கலாம்.

* 350-B *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Madras High Court has requested the Government to appoint more Judges for the High Court; and

(*b*) if so, the action taken thereon?

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை உயர்நீதி மன்றம், உயர்நீதி மன்றத்திற்கு கூடுதலாக நீதிபதிகள் நியமிக்க வேண்டுமென்று, அரசைக் கேட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது தொடர்பாக எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) ஆம்.

(இ) சென்னை உயர்நீதி மன்றம், நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று வேண்டிக்கொண்டதற்கு இணங்க, இவ்வரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்தது. மத்திய அரசு நிலையான நீதிபதிகளின் எண்ணிக்கையை 21 ஆகவும், கூடுதல் நீதிபதிகளின் எண்ணிக்கையை 4 ஆகவும் மாற்றியமைத்து, 18—12—1978 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : நிலையான நீதிபதிகளுடைய எண்ணிக்கை 21 என்றும், கூடுதல் நீதிபதிகளின் எண்ணிக்கை 4 என்றும் மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால் நம் உயர்நீதி மன்றத்திலே பல வழக்குகள் தேங்கியிருக்கின்றன. மூன்று வருடங்கள் ஆகியும் கூட சில வழக்குகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதால், 'நீதி வழங்குவதிலே காலதாமதம் செய்வது, நீதியை மறுப்பதற்கு ஒப்பாகும் என்ற நிலையில் நீதிபதிகளுடைய எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா? மத்திய அரசிடம் இந்த அரசு எவ்வளவு நீதிபதிகள் வேண்டுமென்று முதலிலே கேட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தற்போதைய அரசு பதவி ஏற்பதற்கு முன்பு 16 நிலையான பதவிகளும், 6 கூடுதல் பதவிகளும் இருந்தன. அதற்குப் பிறகு இந்த அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க 21 நிலையான பதவிகளும், 4 கூடுதல் பதவிகளும், ஆக மொத்தம் 25 நீதிபதிகள் இப்போது நிலைப்பட்டிருக்கிறது. முன்னாலே இருந்தது 22, இப்போது 25 என்று ஆகி 3 பதவிகள் அதிகமாகப் பெறப்பட்டு, செயல்பட்டு வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். வெங்கடேசன் : அமைச்சர் பதிலிலிருந்து 21 உயர்நீதி மன்ற நீதிபதிகள் உயர்நீதி மன்றத்தில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இயங்க ஆரம்பித்தபின், தேக்க நிலை எவ்வளவு தூரம் குறைந்திருக்கிறது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தேக்க நிலையைத் தவிர்ப்பதற்காகத்தான் இப்போது இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலேயும் குறிப்பாக 23—1—1979 அன்று கூடுதல் நீதிபதிகளாக இருந்த 4 நீதிபதிகளை நிலையான நீதிபதிகளாக மாற்றியிருக்கிறோம். கிட்டத்தட்ட 3, 4 மாதங்கள்

தான் ஆகியிருக்கின்றது. கொஞ்சம் பொறுத்துப் பார்த்தால், இதனுடைய விளைவுகள் என்ன, பயன்கள் என்ன என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: முன்னர் இருந்த நீதிபதிகளுடைய எண்ணிக்கை 22. அது நிலையானதோ, தற்காலிகமானதோ, எப்படி இருந்தாலும், முன்னால் இருந்த நீதிபதிகளுடைய எண்ணிக்கை 22, இப்போது 25 ஆக ஆக்கப் பட்டிருக்கிறது. ஆகவே 3 நீதிபதிகளுடைய இடம்தான் அதிகப்படுத்தித் தரப்பட்டிருக்கிறது. ஆனால் ஆயிரக்கணக்கான வழக்குகள் தேங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எவ்வளவு வழக்குகள் இப்போது தேங்கியிருக்கின்றன் என்பதைப் பற்றிய புள்ளி விவரம் இருக்கின்றதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத கேள்வியாக இருக்கிறது. எனவே குறிப்புகள் இங்கே இல்லை. ஆனால் நிச்சயமாகக் கூடுதலான நீதிபதிகள் இன்னும் நியமிக்கப்பட வேண்டுமென்ற நிலைமைகள் வரும்போது, அரசு அதைப் பரிசிலித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ்: கூடுதலாக 4 நீதிபதிகள் வழங்க வேண்டுமென்று இருக்கும்போது, மூன்றே மூன்று நீதிபதிகள் தானே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஒரு நீதிபதி நியமிக்கப்படாததன் காரணம் என்ன என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: கூடுதல் நீதிபதிகள் ஸ்தானங்களில் நான்கிலே இரண்டு ஸ்தானங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. மற்ற இரண்டும் நிரப்பப்படும், விரைவிலே நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

House Rent Allowance.

* 351 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to raise the present minimum salary limit, for eligibility of House Rent Allowance, from Rs. 500 to Rs. 700 in the case of Government servants, residing in places other than Madras City and in places specified under Grade III of the Annexure to G.O. Ms. No. 224, Finance, dated 8th February 1971, since Income-tax limit has been raised; and

(*b*) if so, the stage at which the matter now stands?

வீட்டு வாடகைப்படி.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வருமான வரி வரையறை உயர்த்தப்பட்டுள்ளதால், சென்னை மாநகரம் நீங்கலான பிற இடங்களிலும், நிதித்துறையின் 8—2—1971 ஆம் நாளிட்ட 224 ஆம் எண் அரசாணையின் இணைப்பில், III -வது தரத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலும் வசித்து வரும் அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, வீட்டுவாடகைப்படியைப் பெறும் தகுதிக்கான தற்போதுள்ள குறைந்தளவு சம்பள வரம்பை ரூபாய் 500-லிருந்து ரூபாய் 700 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதியமைச்சர் சார்பில்): நிலை III இடங்களிலுள்ள அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் மூன்றாவது சம்பளக் குழுவின் அறிக்கையையொட்டி, வீட்டு வாடகைப்படி வழங்க அனுமதித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

Third Tamil Nadu Pay Commission Report.

* 352 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Third Tamil Nadu Pay Commission Report was submitted to the State Government in July 1978; and

(*b*) if so, whether the Government would place the same on the table of the House?

மூன்றாவது தமிழ்நாடு ஊதியக் குழு அறிக்கை.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மூன்றாவது தமிழ்நாடு ஊதியக் குழு அறிக்கை 1978 ஜூலையில் மாதில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆமெனில், அரசு அதனை அவையின் முன் வைக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதியமைச்சர் சார்பில்) : (அ) ஆம்.

(இ) முந்தைய சம்பளக்குழு அறிக்கைகள் வெளியிடப்பட்டபோது பின்பற்றப்பட்ட நடைமுறைக்கிணங்க மூன்றாவது சம்பளக் குழு அறிக்கை நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. க. இராமமூர்த்தி : இப்போது அந்தக் குழுவினுடைய பல்வேறு பரிந்துரைகளை நிறைவேற்றிய நிலையிலே, அங்கத்தினர்கள் சில நேரங்களிலே ஊதியக் குழு அறிக்கை வேண்டுமென்று நினைத்தால், லைப்ரரிக்குத்தான் செல்லவேண்டியதாக இருக்கிறது. அவர்களுடைய சௌகரியம் கருதி, அங்கத்தினர்களுக்கு அந்தப் பகுதிகளைத் தருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : பொதுவாக "Statutory Body" ஆக இல்லாமல் அமைக்கப்பட்ட இப்படிப்பட்ட குழுக்களுடைய அறிக்கையை அச்சடித்து மன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது என்பது இதுவரை மரபாக இல்லாத காரணத்தினாலே இந்த முறை பின்பற்றப் பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மூன்றாவது ஊதியக் குழுவினுடைய அறிக்கை வெளியானதற்குப் பின்னாலே அரசு எடுத்த முடிவுகளை வெளியிட்டபோது, அதை மேலவை உறுப்பினர் என்ற முறையிலே நகல் கேட்டபோது, சர்வீஸ் அசோசியேஷனுக்குத்தான் தரப்படுமே தவிர மேலவை உறுப்பினர் அல்லது பேரவை உறுப்பினர்களுக்கு என்ற முறையில் தரப்பட மாட்டாது என்று மறுத்தார்கள். அதற்குப் பின்னாலே வேறு வழியிலே அதை நான் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கல்வித் துறையிலே தொடர்புள்ளவர்களுக்கு அவ்வப்போது அரசுத் தரப்பிலே வெளியிடப்படுகின்ற அறிக்கைகளைத் தருவதற்கு அரசு ஆணையிடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மூன்றாவது சம்பளக் குழுவினுடைய பரிந்துரைகள் வந்துள்ளன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அச்சிடப்பட்டு வழங்கப்படுமா என்பது கேள்வி. இது ஸ்டேசுடரி பாடியாக இல்லாத காரணத்தினாலே, மரபு என்னவென்றால், சில பிரதிகள் மட்டும் தயார் செய்யப்பட்டு நம்முடைய நூலகத்திலே வைக்கப்படுகின்றன. மன்ற உறுப்பினர்கள் மேற்கோளாகவும் அதன் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்காகவும்தான் அங்கே வைக்கப்படுகின்றன. இதுவரையில் அங்கே பிரதிகள் வைப்பதுதான் மரபு. அதன்படி அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே வைக்கப்படவில்லை என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்களா? அந்தமாதிரி ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அதற்குப் பதில் சொல்லலாம். மற்ற விஷயங்கள் ஏதாவது இருந்தால், தனிக் கேள்வியாகப் போட்டால்தான், அரசினுடைய நிலையைத் தெளிவாகச் சொல்ல முடியும்.

திரு. க. அறிவழகன் : ஊதியக் குழுவினுடைய அறிக்கையின் ஒரு பகுதி முதலிலே வெளியிடப்பட்டது. இரண்டாவது பகுதி பிறகு வெளியிடப்படும் என்று சொல்லப்பட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, 'வைக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். அந்தக் குழுவினுடைய முழுப் பகுதியும் நூலகத்திலே வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சம்பளக் குழுவினுடைய அறிக்கை முழுவதும் நூலகத்திலே இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : அரசு பல்வேறு அறிக்கைகளை இந்த அவை உறுப்பினர்களுக்குத் தந்துகொண்டிருக்கிறது. இது அச்சடிக்கக்கூடிய அறிக்கை. ஊதியக் குழு அமைக்கப்பட்டபோது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், முக்கியமாக இருக்கக்கூடிய சங்கங்கள் ஆகியோரிடமிருந்து கருத்துக்கள் கேட்கப்பட்டன. அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே அமுல்படுத்துவது என்பது அரசாங்கத்தினுடைய முடிவைப் பொறுத்திருக்கிறது. அந்த அறிக்கையை உறுப்பினர்களுக்குத் தருவது என்பது இதுவரையில் இல்லாமல் இருந்தாலும்கூட, இந்த அறிக்கை எந்தவிதத்திலும் ரகசியமானது அல்ல என்பதால், அதைத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஊதியக் குழுவினுடைய அறிக்கையைப் பெற்று, அதன்மீது அரசு முடிவுகளை எடுத்து, இப்போது நிறைவேற்றப்பட்டு, அதெல்லாம் முடிந்துபோன கதையாகிவிட்ட விஷயமாகியிருக்கிறது. இனிமேல் ஒரு சந்தர்ப்பம் வரும்போது, அரசு அதைப்பற்றி கவனத்திலே கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Headmasters of Municipal High Schools.

* 355 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that though there are two scales of pay in force in the State to the Headmasters of High Schools, on the basis of the strength of the pupils, only the lower scale is adopted in High Schools under Municipal Administration; and

(*b*) if so, the reasons therefor?

நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையின்படி உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு மாநிலத்தில் இரு சம்பள விகிதங்கள் செயலில் இருந்தபோதிலும், நகராட்சி நிர்வாகத்தின்கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் குறைந்த அளவு சம்பள விகிதம் மட்டும் பின்பற்றப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4-10)

திரு. பி. ஆர். தாமஸ்: மதுரை மாநகராட்சியை எடுத்துக்கொண்டாலும் சரி, திண்டுக்கல் நகராட்சியை எடுத்துக்கொண்டாலும் சரி, அதுபோன்று பல நகராட்சிகளிலும் சரி, இரண்டு ஊதிய விகிதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை வந்தபிறகு, ஒரே ஒரு ஊதிய விகிதம்தான் இருக்கிறது. இதற்கு முன்னதாக இரண்டு ஊதிய விகிதங்கள் இருந்தன. ஒரு ஊதிய விகிதத்தின் அடிப்படைச் சம்பளம் 450 ரூபாய், மற்றொரு ஊதிய விகிதத்தின் அடிப்படைச் சம்பளம் 500 ரூபாய். 1,000 மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு 500 ரூபாய் சம்பள விகிதமும், மற்ற பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு 450 ரூபாய் சம்பள விகிதமும் வழங்கப்பட்டது. இப்போது அப்படி இரண்டு விகிதங்களில் நகராட்சிப் பள்ளிகளில் வழங்கப்படுவதில்லை. இதைப் பரிசீலித்து, தலைமை ஆசிரியர்களுக்கு முன்பு வழங்கப்பட்டதுபோல் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதுபோல, அவ்வாறு வழங்குகிற முறையிலேதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

House-sites to Adi-Andhras.

* 356 Q.—THIRU P. YELLAMANDA: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Hon. the Chief Minister has distributed only a few sale deed documents of house-sites to Adi-Andhras in Madras City on 24th October 1978;

(*b*) whether it is also a fact that a large number of such documents have to be issued to the Adi-Andhras in the City, by the Corporation of Madras—*vide* G.O. Ms. No. 2160, Revenue, dated 21st October 1976; and

(*c*) if so, the action taken thereon?

ஆதி-ஆந்திரர்களுக்கு வீட்டு மனைகள்

திரு. பி. எலமந்தா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 24—10—1978 ஆம் நாளன்று சென்னை மாநகரத்தில் உள்ள ஆதி-ஆந்திர மக்களுக்கு வீட்டு மனைகளுக்கான சில விற்பனைப் பத்திரங்களை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார் என்பது உண்மையா?

(இ) சென்னை மாநகராட்சியால் மாநகரில் உள்ள ஆதி-ஆந்திர மக்களுக்கு அத்தகைய எண்ணற்ற பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதும் உண்மையா? (வருவாய்த் துறையின் 21—10—1976 ஆம் நாளிட்ட 2160 ஆம் நிலை எண் அரசாணையைக் காண்க).

(உ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ), (இ) மற்றும் (உ) கிரயத்துக்கான முழுத் தொகையையும் செலுத்தி, அதற்கான பத்திரங்களையும் தாக்கல் செய்த ஆதி-ஆந்திர மக்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு விற்பனைப் பத்திரம் கொடுக்க மாநகராட்சி ஆவன செய்துவருகிறது.

THIRU P. YELLAMANDA: On 24th October 1978, the Hon. the Chief Minister issued only two pattas but in the newspapers like *the Hindu*, it appeared that 900 pattas were given to Adi-Andhras. Even after six months, the Corporation has not yet settled the house site problem, whereas the Revenue Department has issued pattas subsequently. May I request the Hon. Minister to give strict instructions to expedite the matter?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 30—4—1979-க்குள் முழுமையாக அவர்களுக்குப் பத்திரங்கள் கொடுக்க முடியுமென்று வருவாய்த்துறை அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 353, 354, 357 மற்றும் 358 ஆகியவை ஒத்திவைக்கப்படுகின்றன. அடுத்து, 20—4—1979 அன்று வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

Appointment of Teachers in Private Higher Secondary Schools.

@ * 313 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state whether provision will be made to appoint teachers in Private Higher Secondary Schools from the list of Post-Graduate Teachers in the Private High Schools, on the lines of the procedure followed in Government Schools ?

தனியார் உயர் இடைநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம்

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படும் நடைமுறையைப் போல தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள முதுகலைப் பட்டதாரிகளின் பட்டியலிலிருந்து தனியார் உயர் இடைநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் நியமனம் செய்ய வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இல்லை. தனியார் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம் குறித்து பூரண உரிமை நிர்வாகத்திற்கே உரியதாகும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 1978 ஜூன் மாதத்தில், மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம் செய்வது சம்பந்தமாக இரண்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. அந்த ஆணைகளின் எண்கள் 1091, 1092 என்பதாகும். இரண்டு ஆணைகளிலும் மிக முக்கியமான குறிப்புகள் போடப்பட்டிருக்கின்றன. தனியார் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் பட்டியலை முதன்மைக் கல்வி அதிகாரி தயாரித்து, நிர்வாகங்களின் ஒப்புதலுடன், அவர்களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. இந்த ஆணையைக்கூட பல முதன்மைக் கல்வி

@ 20—4—1979 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

அதிகாரிகள் நிறைவேற்றவில்லை என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த ஆணையை நிறைவேற்ற, அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் பெற தகுதிபடைத்த ஆசிரியர்கள், தங்கள் சேவை தேவைப்படும் மேல்நிலைப் பள்ளிக்கு விண்ணப்பித்து, பணியில் பாதிப்பு ஏற்படாமல், பிற மேல்நிலைப் பள்ளிகளில் பணியேற்க இரு சாராரும் வேண்டி விரும்பினால், அரசு தேவையான அனுமதியை அளிக்கத் தயங்காதென்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அமைச்சரவர்கள் சொன்ன அதே கருத்தைத்தான் நான் சொல்கிறேன். அந்த ஆணையை பல முதன்மைக் கல்வி அதிகாரிகள் நிறைவேற்றவில்லை. எந்தெந்த ஆசிரியர்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது. எனவே அந்த ஆணையை முழுமையாக நிறைவேற்ற, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெளிவாகத் தமிழிலே ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அனைத்து அதிகாரிகளுக்கும் ஆணையை அனுப்பிய பிறகுதான், மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தப் புகாரைச் சொல்லுகிறார்கள். எங்கே அப்படி நடைபெறவில்லை என்று சொன்னால், குறிப்பாக அந்த அதிகாரிக்கு அனுப்பப்படும்.

திரு. க. அறிவழகன் : அரசுப் பள்ளிகளிலே பின்பற்றப்படுகிற முறை என்னவென்றால், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் பட்டியலை எடுத்து, அவர்களிலே பணிமூப்பு உடையவர்களை நியமிப்பதாகும். தனியார் பள்ளிகளிலே வேலை பார்க்கும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை பணியிடம் காலியிருந்தும் நியமிக்காமல் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதற்கு வழி செய்ய முடியாதென்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்னொரு சாரார், செய்ய முடியுமென்று சொல்லுகிறார்கள். எனவே தனியார் பள்ளிகளில் பணி புரியும் முதுகலைப் பட்டதாரிகள் பட்டியலை எடுத்து, அதிலிருந்து நியமிக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எந்தப் பள்ளியிலே அப்படி இருக்கிறதென்று அவர்கள் சொல்வார்களானால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப் படும்.

[1979 ஏப்ரல் 26

திரு. செ. முத்துசாமி : தற்போது சில பள்ளிகளிலே முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் பணியாற்றுகின்ற காரணத்தால், அவர்களுக்கு மரியாதை குறைகிறதென்று நினைக்கிறார்கள். நீலகிரியில், பெதல்ஹம் பெண்கள் உயர் நிலைப்பள்ளியில், டைரக்டர் அவர்கள், ஒரு ஆசிரியையை 'மேத்ஸ்' பாடம் எடுக்க வேண்டுமென்று சொன்னதால், அவர்கள் வெளியேறியிருக்கிறார்கள். இப்படி போஸ்ட் கிராஜுவேட்களை நியமனம் செய்யும்போது, அவர்கள் இஷ்டம்போல் நடப்பதால், வேறொரு பள்ளியில் இருக்கிற போஸ்ட் கிராஜுவேட்களைப் போடுவதில் தயக்கம் காட்டி, அங்கே இருக்கும் ஆசிரியர்களையே வைத்துக்கொள்ளும் நிலை இருக்கிறது. அதனால் அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லாத நிலையும் இருக்கிறது. அதை கல்வி அமைச்சரவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எனவே இது குறித்து சரியான ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு நிர்வாகத்திலே இருக்கின்றவர்களை, இன்னொரு நிர்வாகத்தில் போடும்போது, இரண்டு பேரும் ஏற்றுக் கொண்ட பிறகுதான் போட முடியும். ஒரே நிர்வாகம் போல வேலை மாற்றம் செய்ய முடியாது. அப்படிச் செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை. ஆகவே, அந்த அடிப்படையிலேதான் இப்போது நாம் புதிய உத்தரவுகளைத் தந்துகொண்டிருக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகள் இருக்கக்கூடிய இடங்களில், அரசுப் பள்ளிகளைப் பொறுத்து ஒரு நடைமுறை இருக்கிறது. முதுகலைப் பட்டம் பெற்றவர்களானாலும், பெறாதவர்களானாலும், பணி மூப்பு அடிப்படையில் எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தனியார் பள்ளிகளில் அப்படி கடைப் பிடிப்பதில்லையென்று சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் எந்தப் பள்ளி என்று கேட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மணலிக்கரையில் தென்கொரட்டி உயர்நிலைப் பள்ளியில், பணிமூப்பு அடிப்படையில் ஆசிரியர்களை எடுக்காமல், மேனேஜ் மென்ட்டுக்கு வேண்டியவர்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமான புகாரை முதன்மைக் கல்வி அதிகாரியிடம் சொன்னபோது, எங்களுக்கு அவர்களைக் கட்டுப்படுத்த உரிமையில்லை என்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டு அரசு நடைமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்காத மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு ஆரம்பிக்காமல் இருக்க, அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து விசாரிக்கப்படும்.

1979 ஏப்ரல் 26]

திரு. பி. ஆர். தாமஸ் : மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நியமனம் குறித்த அரசு ஆணையிலே திட்டவட்டமாக ஒரு ஆசிரியரை மாற்றுவது என்றால், அந்த ஆசிரியர் செல்லக்கூடிய பள்ளியின் நிர்வாகம், அந்த ஆசிரியர் இருவரும் ஒப்புதல் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அந்தக் குறிப்பை நீக்கி விட்டால், அந்த நிர்வாகம் அவர்களைக் கட்டாயம் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அந்த முறையில் அரசாணையை மாற்ற அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த வகையில் நாம் ஆணையிட்டோமானால், பிறகு எல்லாம் ஒரே நிர்வாகம் போல் இருக்கும் சூழ்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட உரிமை அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நான் தமிழில் ஆணையை அனுப்ப வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம், தென் ஆற்காடு மாவட்டத்தில் இது சம்பந்தமாகக் கசப்புணர்ச்சி ஏற்பட்டு, அந்த அதிகாரி, "நான் படித்த ஆங்கிலத்தின்படி இதுதான் அர்த்தம்" என்று ஒரு மாறான விளக்கத்தைச் சொன்னார். அமைச்சரவர்கள் சொன்ன அதே கருத்தை நான் சொன்னபோது தான், அவர்கள் அப்படிச் சொன்னார்கள். நான் படித்த ஆங்கிலத்தின்படி நான் சொல்வதும், கல்வி அமைச்சரவர்கள் சொல்வதும், இந்த அரசாணை சொல்வதும் ஒன்றாக இருக்கும்போது, முதன்மைக் கல்வி அதிகாரி சொல்வது வேறாக இருக்கிறது. அதனால்தான் தமிழில் ஆணையிட வேண்டுமென்று சொன்னேன். அந்த அதிகாரிமீது விசாரணை நடைபெறுவதால், அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. எனவே இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய, தமிழிலே தெளிவாக உத்தரவிட அமைச்சரவர்கள் முன்வருவார்களா ? உள்ளாட்சித் துறையிலுள்ள நகரவை மேல்நிலைப் பள்ளிகள் தனித் தனி யாக இயங்கினாலும், அத்துறையில் மாநிலத்திலுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளையும் நடைமுறை ரீதியாக ஒரே அமைப்பாக ஏற்படுத்தி, மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும் தமிழில் முற்றுப்புள்ளியே கிடையாதா ?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நகரவை மேல்நிலைப் பள்ளிகள் தனித் தனியாக இயங்கினாலும், நடைமுறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழி இருப்பதுபோல, தனியார் பள்ளிகளிலும் அந்த யுக்தியை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் பயன்படுத்தி, ஆணையிடுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழிலே உத்தரவு போடுவதுபற்றி படிப்படியாக ஆட்சிமுறைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கிறோம். அந்த முறையிலே, ஆட்சி மொழியாகிய தமிழ் எங்கும் இருக்க வேண்டுமென்ற நிலையிலே, நடவடிக்கை எடுக்கிறோம். அந்தத் துறையும் என்னிடத்திலேதான் இருந்து கொண்டிருக்கிறதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிப்பது குறித்து தெளிவாக விளக்கம் தந்திருக்கிறோம். ஆணையில் உள்ள ஆங்கிலம் ஒரு அதிகாரிக்குப் புரியவில்லையென்றால், அது அதிகாரியின் தவறே தவிர, ஆணையின் தவறு அல்ல. தமிழில் ஆணைகள் போட்ட பிறகுகூட, இதே அதிகாரிகளுக்கு தமிழில் புரியவில்லை அல்லது தெரியாது என்ற நிலை வந்தால், பிறகு நாம் ஆணையை எந்த மொழியில் போடுவது என்கின்ற ஒரு நிலை வந்துவிடும். பொதுவாக ஆங்கிலத்தில் போடப்படுகிற ஆணைகளில்கூட ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால், உரிய விளக்கத்தைத் தந்து கொண்டிருக்கிறோம். ஆணையிலுள்ள ஆங்கிலம் புரியாவிட்டால், மேல் அதிகாரிக்கு, அவர்கள் எழுதிக் கேட்டால், மேல் அதிகாரியின் மூலம் அதை அனுப்பி வைக்கிறோம். அப்படியும் புரியவில்லையென்றால், அப்படிப்பட்ட அதிகாரியை நாங்கள் வைத்துக்கொள்ள விரும்பவில்லை.

(திரு. முத்துசாமி எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எவ்வளவு நேரம் ஒரே வினாவைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பது?

திரு. செ. முத்துசாமி : கல்வித் துறை அரசாணையைப் பொறுத்தவரை, எந்த ஒரு ஆணைக்கும் இப்படிப்பட்ட சிக்கல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆணைகளை வெளியிடும்போது, கூடவே இல்லஸ்டிரேஷனையும் போட்டால், இப்படிப்பட்ட சிக்கல்கள் வர வாய்ப்பில்லை. பல துறைகளில் அரசாணையை வெளியிடும்போது, இல்லஸ்டிரேஷனையும் சேர்த்து வெளியிடுகிறார்கள். ஆனால் கல்வித் துறையில் எந்த ஒரு அரசாணையைப் போட்டாலும், அப்படிப்பட்ட இல்லஸ்டிரேஷன் இல்லாததால், வேண்டுமென்றே அதில் சிக்கல்களை எப்படி உண்டாக்குவது என்று கல்வித் துறை அதிகாரிகள் சிந்திக்கிறார்கள். கல்வித் துறையிலிருந்து அரசாணைகளை வெளியிடும்போது, தமிழில் அவைகளை வெளியிடுவதுடன் கூடவே இல்லஸ்டிரேஷனையும் தமிழில் வெளியிட மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழில் வெளியிட்டதற்குப் பிறகு தெளிவாகவும், புரியும்படியாகவும், நல்லமுறையிலும் இருக்கும் என்கிற நம்பிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பொழுது வெளியிடப்படுகின்ற அரசாணைகளில்கூட சிக்கல் ஒன்றும் வருவதில்லை. அதை நன்றாக ஆர்வத்தோடு நல்ல முறையில் படித்து, புரிந்து அதற்குப் பிறகு அதை நிறைவேற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணம் அவர்களுக்கு இருந்தால், அதை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். அதற்குப் பிறகு ஏதாவது புரியாவிட்டால், விளக்கம் கேட்டால், மேலதிகாரிகள் விளக்கம் கொடுக்கிறார்கள்.

Physical Education Directors.

@ * 314 Q.—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Physical Education Directors in Polytechnics are given U.G.C., scales of pay ; and

(*b*) if not, the reason therefor ?

உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்கள்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பல்துறைத் தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் பணிபுரியும் உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழுவின் ஊதிய வீதம் வழங்கப்படுகிறதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பல்துறைத் தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு சிபார்சு செய்துள்ளபடி ஊதியம் அளிக்க அண்மையில் ஆணை இடப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

@ 20—4—1979 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

Reimbursement of Cost of Spectacles.

@ * 315 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the reimbursement of an amount not exceeding Rs. 40 for the purchase of spectacles by the 'C' and 'D' Grade Government Servants sanctioned in G.O. No. 759, Finance (Allowances-I), dated 29th July 1978, is applicable to the teachers of Private Schools; and

(*b*) if not, whether the Government will take steps to extend the concession to those teachers?

மூக்குக் கண்ணாடி வாங்கும் தொகையை ஈடு செய்தல்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிதித் துறையின் (படிகள்-1) 29—7—1978 ஆம் நாளிட்ட அரசாணை எண் 759-ன்படி 'சி' மற்றும் 'டி' பிரிவு அரசு ஊழியர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்கிக் கொள்ள வழங்கப்பட்டுள்ள ரூ. 40-க்கும் மேற்படாத தொகையினை ஈடுசெய்துகொள்ளும் சலுகை, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பொருந்துமா?

(இ) இல்லையெனில், அந்த ஆசிரியர்களுக்கு அச்சலுகை நீட்டிக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பொருந்தாது.

(இ) இது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

திரு. செ. முத்துசாமி : பொதுவாகவே பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக முதலில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அரசுத் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு நிதித் துறையிலிருந்து சலுகைகள் அளிக்கும்போது, ஆசிரியர்கள், தனியார் துறையிலும் உள்ளாட்சித் துறையிலும் பணியாற்றுகிறார்கள் என்பது சிறிது காலமாக மறக்கப்பட்டு வருகிறது. சலுகைகள் அவர்களுக்கு அளிக்கப்படாமல் விடப்பட்டு வருகிறது. உதாரணமாக

@ 20—4—1979 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

சைக்கிள் வாங்க அட்வான்ஸ் மற்றும் ஆசிரியர்களுடைய பிள்ளைகள் கல்லூரியில் படிக்க அட்வான்ஸ் வழங்குவது போன்ற சலுகைகளைப் பொறுத்தவரை கூட அதில் இடம் பெறவில்லை. அவற்றையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மற்ற துறைகள் அரசாணைகளை வெளியிடும்போது, அரசு ஊழியர்களுக்கு என்றுதான் பொதுவாக சலுகை சம்பந்தப்பட்ட ஆணைகளை வெளியிடுகின்றன. அதற்குப் பிறகு கல்வித் துறையைப் பொறுத்தவரை, தனியார் பள்ளிகளுக்கு என்று தனியாக உத்தரவைப் போடுகிறோம். ஆனால் எந்தச் சலுகையாக இருந்தாலும் அவர்களுக்கும் அவைகளைக் கொடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தக் குறைபாடுகளை நீக்க பல மாற்றங்களாக யோசனை சொல்லிக்கொண்டு வருகிறோம். அரசு ஆணைகளை வெளியிடும்போது, "இது தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும்" என்று ஒரு வார்த்தையை அதில் சேர்த்து விட்டால், இந்தமாதிரி பிரச்சினைகள் வராது. சில சமயங்களில் அரசாணைகளை வெளியிடும்போது, அதுபோல் சேர்த்தும் இருக்கிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சலுகைகள் சம்பந்தப்பட்ட எல்லா அரசு ஆணைகளையும் கல்வித் துறையே வெளியிடுகின்ற ஒரு நிலை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்து சரியாக இருக்கும். கல்வித் துறை சம்பந்தப்பட்ட ஆணைகள் கல்வித் துறையிலிருந்து வெளியிடப்படுகின்றன. நிதித் துறையிலிருந்து ஆணைகள் வெளியிடும்போது, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பொருந்துமாறு வெளியிடுகிறார்கள். அதற்குப் பிறகு நாம் பரிசீலித்து, கல்வித் துறைக்குப் பொருந்துமாறு வெளியிடுகிறோம்.

R.D.M. College, Sivaganga.

@ * 316 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the erstwhile management of R.D.M. College, Sivaganga, has not yet cleared the arrears of salary payable to the former staff for seven months from December, 1975 to June 1976 ; and

(*b*) if so, the action taken or proposed to be taken thereon ?

சிவகங்கை ஆர். டி. எம். கல்லூரி.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1975, டிசம்பர் முதல் 1976 ஜூன் வரையிலான ஏழு மாதங்களுக்கு முன்னாள் பணியாளர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பள பாக்கிகளை, சிவகங்கை ஆர்.டி.எம். கல்லூரியின் முன்னாள் நிர்வாகத்தினர் இது வரையில் கொடுத்துத் தீர்க்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவர்கள் மீது எடுத்த அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இந்த ஊதிய நிலுவையை பழைய நிர்வாகம்தான் தர வேண்டும்.

திரு. பி. ஆர். தாமஸ் : சிவகங்கை ஆர்.டி.எம். கல்லூரியை அரசு தன்னுடைய மேற்பார்வையில் எடுத்துக்கொண்டிருக்கிறது. முன்னாள் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள பாக்கிகளை முந்திய நிர்வாகத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுத் தரவேண்டும் அல்லது அதற்கான பொறுப்பினை ஏற்று, அரசு தானே தரவேண்டும். அந்த முறையில் 7 மாத சம்பள பாக்கியையும் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிக்குத் தர வேண்டிய மானியத்தை அரசு தரக் கடமைப்பட்டிருக்கிறது. அதிலே ஏதாவது நிலுவைத் தொகை அரசால் தரப்படாமல் இருக்குமானால், நிச்சயமாக அந்த

@ 20—4—1979 ஆம் தேதிய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

மானியத்தைத் தரும். இங்கே இருக்கின்ற பிரச்சினை 1975 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1976 ஜூன் வரையுள்ள ஊதிய நிலுவை, பழைய பாக்கியைப் பற்றியது. நிர்வாகம் அதை கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் டிசம்பர் 1975 முதல் 31—3—1976 வரை இக் கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் பணியைச் செய்யவில்லை. அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு, கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு நிதியிலிருந்து பணம் தர வாய்ப்பில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தக் கல்லூரிக்கு இன்று அரசு முழுத் தொகையையும் மானியமாக வழங்குகிறது. எனவே நிர்வாகத்திலிருந்து எந்த வித நிதியையும் ஒதுக்கத் தேவையில்லை. முன்பு நிர்வாகத்தினரிடம் அந்தக் கல்லூரி இருந்தபோது, 80 சதவிகித நிதியை அரசிடமிருந்து அது பெற்றிருக்கலாம் என்று நம்புகிறேன். இன்றைக்கு அந்தக் கல்லூரியின் சொந்த வருவாய்களைச் சேர்த்து, அதிலிருந்து 7 மாத ஊதிய பாக்கிகளை அந்தப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது, 1975-76 ஆம் ஆண்டில் கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலுவைத் தொகை சம்பந்தப்பட்டதாகும். அப்போது நிர்வாகத்துக்கு அரசு முழுத் தொகையையும் மானியமாகத் தரவில்லை. அப்போது தர வேண்டிய மானியத்தைத் தராமலிருந்தால், அதிலிருந்து நாம் இப்போது தரலாம். அவர்களுக்குத் தர வேண்டிய மானியத்தை ஏற்கெனவே தந்திருந்தால், அதன் பிறகு இப்பொழுது அரசு நிதியிலிருந்து பணம் தருவதற்கில்லை.

Development of South West Part of Madurai.

@ * 317 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Special Officer of the Madurai Corporation has recommended to the Government, special steps for the development of South West Part of Madurai which formed part of Madakulam Panchayat before Madurai was upgraded as a Corporation ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon ?

@ 20—4—1979 ஆம் தேதிய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

மதுரை தென்மேற்குப் பகுதி வளர்ச்சி

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மதுரை, மாநகராட்சியாக உயர்த்தப்படுவதற்குமுன் மாடக்குளம் ஊராட்சிப் பகுதியாக இருந்த, மதுரை மாநகரின் தென்மேற்குப் பகுதி வளர்ச்சிக்குச் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறு, மதுரை மாநகராட்சியின் தனி அதிகாரி அரசுக்குப் பரிந்துரைத்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

Misappropriation of Funds.

*318 THIRU V. R. PERIANNAN (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government to the effect that the amount collected from the travellers in Township Travellers Bungalow, Courtallam, has been misappropriated; and

(*b*) if so, the action taken thereon?

பணம் கையாடல்

திரு. வி. ஆர். பெரியண்ணன் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) குற்றால நகரிய விடுதியில் பயணிகளிடமிருந்து வசூலித்த பணத்தில் கையாடல் நடந்துள்ளதாக அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

@ 20—4—1979 ஆம் தேதிய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம்: பயணிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்ட பணம் எவ்வளவு கையாடப்பட்டிருக்கிறது? பணத்தை கையாடல் செய்த நபர்கள் யார் யார்?. நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்தவரை, பரிசீலனையில் இருக்கிறது என்ற அளவில் இருந்தாலும், அந்தப் பணத்தைக் கையாடல் செய்த நபர் இப்பொழுது வேலையில் இருக்கிறாரா அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாரா என்பதற்கு மாண்புமிகு அமைச்சரிடமிருந்து பதிலறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பயணிகளிடமிருந்து வசூலித்த பணத்திலிருந்து கையாடல் செய்ததாக சோதனையில் கண்டுபிடிக்கவில்லை. ஆட்கள் அறைகளில் தங்கியிருக்கின்றபொழுது, அங்குள்ள குறிப்பேட்டில் அவர்களுடைய பெயர் இல்லாதிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதுபற்றிப் புகார் செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: குறிப்பேட்டில் விடுதியில் தங்கியிருந்த பயணியின் பெயர் குறிக்கப்படவில்லை. அது போல் வாங்கிய பணத்தை அரசுக்குச் செலுத்தவில்லை. ஆக பெயர் குறிக்கப்படவில்லை என்பதோடு பணமும் வாங்கியிருக்கிறார் என்ற அடிப்படையில் இரண்டு குற்றங்கள் செய்திருக்கிறார். இந்நிலையில் அவர் தொடர்ந்து பணியில் இருக்கிறாரா என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பெயர் பதிவு செய்யப்படாமல் இருந்ததற்கு அவர் விளக்கம் சொல்லியிருக்கிறார். முக்கிய பிரமுகர்கள், வி.அய்.பி.-க்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் அங்கு தங்க வந்தால், பெயர் பதிவு செய்கின்ற இடத்தில் பெயர் பதிவு செய்யும் வரை நிற்க வைத்துக் கொண்டிருப்பது அவ்வளவு முறையாக இல்லையென்று, அவர்களை விடுதிக்கு அனுப்பி வைத்து விட்டு, அதன் பிறகு அவரிடம் போய் கையெழுத்து வாங்கியதாகத் தெரிவித்திருக்கிறார். புகார் பற்றிய முழு அறிக்கையையும் அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டிருக்கிறோம். அவர் பணியில் இருக்கிறார்.

[1979 ஏப்ரல் 26

திரு. ம. சங்காலிங்கம் : முக்கிய பிரமுகர்களை அனுப்பிவிட்டு பிறகு கையெழுத்து வாங்குவது என்றால், அவருக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்று பாவிக்கக்கூடிய நிலை ஏற்படும் அல்லவா? அவரை உடனடியாக வேலையிலிருந்து நீக்கிவிட்டு இதுபற்றி விசாரிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதுபற்றி முழு அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்தத் தப்பு எப்போது நடந்தது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1978 ஆகஸ்ட் 12.

Powerlooms

@ * 318 THIRU V. R. PERIANNAN (on behalf of THIRU Minister for Handlooms be pleased to state the quantity of cloth produced by the powerlooms in Tamil Nadu every year ?

விசைத்தறிகள்

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கைத்தறி-நெசவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தமிழகத்தில் விசைத்தறிகள் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் துணியின் அளவு என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தமிழகத்திலுள்ள விசைத் தறிகள் மூலமாக ஆண்டுக்கு சுமார் 6,000 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : விசைத் தறிகள் மூலம் தயாரிக்கின்ற துணி களைப் பொறுத்தவரை, மத்திய அரசு அண்மையில் வரிச் சலுகை கொடுத் திருக்கிறது. நம்முடைய கைத்தறித் துணிகளோடு விசைத்தறித் துணி களைச் சேர்த்து ஏற்றுமதி செய்கின்றதாக ஒரு குற்றச்சாட்டு சொல்லப்படு கிறது. அந்தக் குற்றச்சாட்டுபற்றி இந்தத் துறைக்குத் தெரியுமா ? அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தமிழகத்தைப் பொறுத்த வரை, விசைத்தறித் துணிகளோடு, கைத்தறித் துணிகள் சேர்த்து ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. இதர மாநிலங்களில் இதுபோன்ற முறைகேடுகள் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. இதுபற்றி மத்திய அரசுதான் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : நம் மாநிலத்தில் சட்டத்தைக் கடுமையாக வைத்து, விசைத்தறித் துணிகளைப் பொறுத்தவரை, கட்டுப்படுத்தியிருக்கி றோம். அதே நேரத்தில் மற்ற மாநிலங்களில் விசைத்தறித் துணிகளுக்கு தாராளமாக உரிமம் கொடுத்து, அது முழுமையாக வளர்ச்சி பெற்று, போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைய நிலையில் விசைத்தறித் துணிகளைப் பொறுத்தவரை, அவர்களோடு சேர்ந்து நாம் போட்டி போட முடியாது. இந்த நிலைமையில் நம் மாநிலம் வருவாயை இழந்து, கைத்தறித் துறை வளர்ச்சி பாதிக்கப்படக் கூடிய, சங்கடப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. இந்த நிலையைத் தவிர்ப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரை, கைத்தறித் துணிகள் நெய்கின்ற தொழில் அவ்வளவு பிரபல மாக இல்லை. நம் மாநிலத்தில் கைத்தறித் துணிகள் நெய்கின்ற தொழில் அதிகம். ஆகவே நாம் கைத்தறித் துறையைக் காப்பாற்ற வேண்டும். அதற்கு விசைத் தறியை நாம் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் விசைத் தறிக்கு உரிமம் தருகின்ற உரிமை மத்திய அரசிடம்தான் இருக்கிறது. அதுபற்றி இந்த அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் இருக் கிறது.

(பிற்பகல் 4-30)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பல விசைத்தறி உரிமையாளர்கள், உரிமம் வாங்கி அதற்கும் அதிக மான அளவிலே, பெரிய அளவிலே தொழிற்சாலைகளை நடத்திக்கொண்டிருக் கிறார்கள். அல்லது வெவ்வேறு பெயர்களில் அதிகமான விசைத்தறிகளை ஒருவரே நடத்துகின்ற நிலை எல்லாம் தமிழகத்திலே இருக்கிறது. இந்த நிலைமைகளைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : கடந்த நவம்பர் மாதம் விசைத்தறிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்சொன்ன வழி வகைகளைக் கருத்தில் கொண்டு மத்திய அரசை கீழே கூறப்பட்ட வழிகளில் நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டது :—

1. மத்திய ஆயத்துறை அதிகாரிகளுடைய அனுமதியில்லாமல் செயல்படும் விசைத்தறிகளுக்கு எல். 4 உரிமம் வழங்கக்கூடாது என அறிவுரை செய்யப்பட்டுள்ளது.

2. 19—6—1976 வரையில் செயல்பட்டு வந்த விசைத்தறிகளை ஒழுங்குபடுத்துவதற்கான அறிவுரைகள் அவசரமாகப் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

3. 19—6—1976-க்குப்பின் செயல்பட ஆரம்பித்த அனுமதியற்ற விசைத்தறிகளை மாநில அதிகாரிகள் மூடிவிடவோ அல்லது கைப்பற்றவோ அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

4. பஞ்சாலை ஆணையரின் பருத்தித் துணிநூல் கட்டுப்பாடு உத்திரவுகளை தகுந்தவாறு திருத்தியமைத்து மாநில அதிகாரிகளுக்கு, கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகங்களை உற்பத்தி செய்யும் விசைத்தறிகளை மூடவும், கைப்பற்றவும் அதிகாரம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

Handloom Polyester Cloth

* 360 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Handlooms be pleased to state—

(*a*) whether the Government are giving patronage for the Handloom polyester Cloth Production ; and

(b) if so, the places where the said cloth is produced in Tamil Nadu?

கைத்தறி பாலியெஸ்டர் துணி

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கைத்தறி-நெசவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கைத்தறி பாலியெஸ்டர் துணி உற்பத்திக்கு அரசு ஆதரவு தந்து வருகிறதா ?

(இ) ஆமெனில், தமிழ் நாட்டில் எந்தெந்த இடங்களில் இந்தத் துணி உற்பத்தி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் திருவில்லிபுத்தூர், ராஜபாளையம், சேலம், கோயமுத்தூர் ஆகிய இடங்களில் பாலியெஸ்டர் துணி கைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பாலியெஸ்டர் கைத்தறித் துணி உற்பத்திக்காக அரசு எவ்வளவு முதலீடு செய்திருக்கிறது, அதிலே எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், பாலியெஸ்டர் துணி இந்த ஆண்டிலே எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தமிழ் நாட்டில் தற்போது 500 தறிகளில் பாலியெஸ்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த தீபாவளி, பொங்கலின் போது 1½ லட்சம் மீட்டர் பாலியெஸ்டர் ஷர்ட்டிங் துணி (மதிப்பு ரூபாய் 37.50 இலட்சம்) விற்பனை செய்யப்பட்டது. நடப்பாண்டில், பாலியெஸ்டர் துணிகளை உற்பத்தி செய்கின்ற தறிகளினுடைய எண்ணிக்கையை 500-லிருந்து 1,000 ஆக உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. க. இராமமூர்த்தி : பாலியெஸ்டர் துணியை உற்பத்தி செய்வதற்கு கைத்தறிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நிரந்தரமாக பாலியெஸ்டர் கிடைக்கின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? இப்படி விசைத்தறிகளை மாற்றியமைப்பதற்கு எவ்வளவு செலவாகிறது? இந்தச் செலவை சாதாரணமானவர்களாலே செய்ய முடியுமா? அல்லது அரசு துணை நின்று மானியம் கொடுக்க முன் வருமா?

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சாதாரணமாக பருத்தி ரகங்களை நெய்து வருகின்ற கைத்தறிகளுக்கு பாலியெஸ்டர் ரகங்களை நெய்ய வேண்டும் என்றால், ரூபாய்கள் 200 முதல் 300 வரையில் அந்தத் தறியிலே சில செலவினங்களை மேற்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. இதற்காக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வங்கிகளிடமிருந்து நெசவாளர்களுக்கு நீண்டகாலக் கடனைப் பெற்றுத் தருகிறது. மாற்றியமைக்கப்பட்ட இந்தத் தறிகள் தொடர்ந்து பாலியெஸ்டர் துணிகளை நெய்து வரும். தற்போது குஜராத் மாநிலத்தில் உள்ள பரோடா என்ற இடத்திலிருந்து பாலியெஸ்டர் 'யார்ன்' பெறப்பட்டு, எல்லாத் தறிகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றது. கூடிய விரைவில் நாது மாநிலத்திலேயே இந்தப் பாலியெஸ்டர் நூலை உற்பத்தி செய்கின்ற நூற்பாலையை நிறுவுவது குறித்து அரசு பரிசிலித்து வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : கைத்தறி பாலியெஸ்டர், மில் பாலியெஸ்டர் இந்த இரண்டுக்கும் உள்ள விலை வித்தியாசம் என்ன ? தரத்தில் எப்படி இருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மில்லில் நெய்யப்படுகின்ற பாலியெஸ்டர் ரகங்களைவிட, கைத்தறியில் நெய்யப்படுகின்ற பாலியெஸ்டர் ரகங்களின் விலை மிகக் குறைவு. தரத்தைப் பற்றிக் கேட்டால், கைத்தறியிலே தயாராகின்ற தரம் மிகச்சிறந்த தரம் என்று நான் கூறுவேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. மேலவை விதி 82-ன்படி விளக்க உரைகள்.

(1) நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்கு அமைச்சரின் பதிலுரைக்குத் திருத்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு திருத்த அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 19—4—1979 அன்று சட்டமன்ற மேலவையில் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் மீது

1979 ஏப்ரல் 26] [திரு. சி. பொன்னையன்]

நடந்த விவாதத்தின்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு (பெருநகர் பிரிவு) வாங்கிய "டாடா" சேஸிஸ்கள் குறித்து நான் குறிப்பிட்ட அறிக்கையில் உள்ள சில மாறான கருத்துக்களுக்கு கீழ்க்கண்ட திருத்திய அறிக்கையினை சமர்ப்பிக்கிறேன் .

உலக வங்கித் திட்டத்தின் கீழ் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒற்றை அடுக்குப் பேருந்து அடித்தளம் வாங்குவதற்கு உலக டெண்டர் கோரி 1977-ஆம் ஆண்டு ஏப்ரலில் விலைப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. அசோக் லேலண்ட் சென்னை, இந்துஸ்தான் மோட்டர், கல்கத்தா மற்றும் யூனிமேக் கார்ப்பரேஷன், அஹமதாபாத் ஆகிய நிறுவனங்களுடன் டெல்கோ நிறுவனமும் தனது டெண்டரை சமர்ப்பித்தது. 1210-டி என்னும் மாடல் வண்டி டெல்கோவிடம் அப்போது இருந்தது. 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 'டெல்கோ' நிறுவனம் 1210-டி/55 என்னும் புதிய மாடல் வண்டிகளை உற்பத்தி செய்து உலக டெண்டரில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்கேற்ப சிறப்பு அம்சங்களுடன் 'டெண்டர்' அனுப்பியது. அப்போது டெல்கோ 1210-இ மாடல் மார்க்கெட்டிலே அறிமுகப்படுத்தப்படவில்லை. அது 1977-ம் ஆண்டு செப்டம்பரில்தான் அறிமுகம் செய்யப்பட்டது. டெண்டருக்குக் கொடுக்கப்பட்ட வாகனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் 1210-டி அல்ல, நான் கூறியது போல 1210-டி-55 புதிய மாடலாகும்.

உலக வங்கி டெண்டரில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்கு ஏற்றார்போல், 1210-டி.55 மாடலில் கீழ்க்கண்ட சிறப்பான அம்சங்கள் உள்ளன.

(1) ரிங் காரியர் பிஸ்டன்.

(2) கட்ஜன் பின்.

(3) சர்க்குலர் திரஸ்ட் வாஷர்.

(4) எலக்ட்ரானிக் டிரான்ட்ஸ்யூசர் டெம்பர்ரச்சர் கேஜ்.

(5) மின் உற்பத்தி மானிக்குப் பதிலாக, உயர்திறன் ஆல்டர்னேட்டர் போன்ற பல சிறப்பு அம்சங்கள் 1210-டி மாடலில் இருந்ததால் ஏற்கப்பட்டு 12—1—1978 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. இச்சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய இந்த டெல்கோ மாடலுக்கு எல்.பி. 1210-டி-55 எனப் பெயரிடப்பட்டது. இதற்கு 1210-டி என்பது பெயர் அல்ல. இது ஒரு தனி மாடல் வண்டியாகும்.

‘It is a special model manufactured only for Glob al Tender’ இந்த 1210-இ வணிக அமைப்பு வண்டியையும்விட இந்த வாகனம் சிறப்பான அம்சங்களுக்காக மேலான வகையைச் சேர்ந்ததாகும்.

1. நீண்ட சேஸிஸ்கள்.
2. சிறந்த காற்றுத் துடைப்பான்.
3. சின்கோரமேஷ் கியர் பெட்டி.
4. சிறந்த கிரவுன் வீல் மற்றும் பினியன்.
5. ‘ஃபெயில் ஸ்டேஜ்’ பாதுகாப்பாக இயங்கக்கூடிய பிரேக்.
6. உரத்த எச்சரிக்கை செய்யும் ஏற்பாடு.
7. டெம்பரேச்சர் காஜ்.
8. ஆல்ட்ர்னேட்டர்.

போன்றவை இருந்தன.

குளோபல் டெண்டர்களுக்கு சில வரிச் சலுகைகள் உண்டு. எக்சைஸ் டியூட்டி கிடையாது. அதனால் ஒரு சேஸிஸின் விலை, உள்நாட்டு விலையை விட மிகக் குறைவு. குறைந்த விலையிலேயே சேஸிஸ்கள் வாங்கப்பட்டன. உள்நாட்டு விலை வரி உட்பட ரூபாய் 2 லட்சத்துக்கு மேற்பட்டு இருந்த போது, குளோபல் டெண்டரில் அசோக் லேலண்டு, 65,233 ரூபாய்க்கும் டெல்கோ 62,358 ரூபாய்க்கும் டெண்டர் அறிவித்திருந்தார்கள். அசோக் லேலண்ட் நிறுவனத்தைவிட டெல்கோவினுடைய டெண்டர் தொகை குறைவாக இருந்தது. டெண்டரில் குறிப்பிட்டு ஒப்பந்தத்தில் முடிவு செய்யப்பட்டு வாங்கப்பட்ட 1210-955 சேஸிஸ்கள் 1210-டி, 1210-இ-யைவிட மிகச் சிறந்தவையாகும். ஆதலால் 1210-இ சேஸிஸ்க்குண்டான விலையைக் கொடுத்து, அதைவிட தரக்குறைவான 1210-டி சேஸிஸ்கள் வாங்கப்பட்டன என்று எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது மிகத் தவறு. காரணம் அந்த டெண்டர் கோரப்பட்ட நாளில் 1210-இ என்ற ஒரு சேஸிஸ் டெல்கோ நிறுவனம் உற்பத்தி செய்யவும் இல்லை, மார்க்கெட்டிலே அதை விடவும் இல்லை. எனவே சேஸிஸ்கள் வாங்கியதில் ரூபாய் 30 லட்சம் நட்டம் ஏற்பட்டது என்று கூறுவதும் தவறு. மாறாக, டெல்கோவில் உள்நாட்டு விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு வாகனத்துக்கு ரூபாய் 25,000 வீதம் என்று 71.25 லட்சம் ரூபாய் குளோபல் டெண்டர் மூலம் டெல்கோவில் வாங்கியதில் அரசுக்குச் சிக்கனம்

ஏற்பட்டிருக்கிறது. அத்தோடு அசோக் லேலண்டுடன் ஒப்பிட்டால் உற்பத்திப் பார்ட்ஸ் கூட 10 லட்சம் ரூபாய் அரசுக்கு சிக்கனம் செய்யப்பட்டுள்ளது. டயர் மற்றும் டீசல் செலவில் 5 லட்சம் ரூபாய் சிக்கனம் செய்யப்பட்டுள்ளது. ஆக, 15 லட்சம் ரூபாய் அசோக் லேலண்ட் சேசிஸ்களை வாங்காமல் விட்டதால், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சிக்கனம் ஏற்பட்டுள்ளது.

அதோடு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதில், ஒரு சில ஓட்டுநர்கள் கிளட்ச் மீது காலைவைத்து ஓட்டும் பழக்கம் உள்ளவர்களாக இருந்ததால், கிளட்ச் பழுதடைந்ததுண்டு. ஓட்டுநர்கள் அதிக சிரமம்படாமல் இயக்கும் வகையில் கிளட்ச் பெடல் இருந்த காரணத்தால், கால் வைத்தவுடனேயே கிளட்ச் சிறிது விடுபட ஏதுவாயிருந்தது. இதுவே கிளட்ச் பழுதுபடக் காரணமாயிருந்தது. இதைத் தவிர்க்கும் வகையில் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இந்த முறையினால் ஓட்டுநர்களின் சிரமம் குறைக்கப்பட்டதோடல்லாமல் கிளட்ச் ரைடிங் என்னும் தவறான பழக்கத்தால் பழுது

(பிற்பகல் 4-40)

படுவதும் தவிர்க்கப்பட்டது. இவ்வாறு தவறான பழக்கத்தால் ஏற்பட்ட பழுதுபட்ட கிளட்ச் பாகங்களை, டெல்கோ நிறுவனத்தார் தங்களுடைய செலவிலேயே மாற்றிக் கொடுத்து வருகிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதன் காரணமாக அரசுக்குப் பல லட்சக் கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்ற முறையில் ஒரு தவறான தகவலை இங்கே பேசும்போது கூறியிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே எஞ்சினில் சிறிய பழுது ஏற்பட்டபோதிலும், 9-க்கும் மேற்பட்ட எஞ்சின் பிளாக்குகளை டெல்கோ தங்கள் செலவிலேயே மாற்றிக் கொடுத்துவிட்டார்கள். இப்படி மாற்றிய போதிலும் இந்தப் பேருந்துகள் சாதாரணமாக ஓட வேண்டிய கிலோ மீட்டரில் 90 சதவிகிதத்துக்கு மேலேயே ஓடியுள்ளன. எனவே இவ்வாறு பழுதுபட்ட பாகங்களை மாற்றியதால் ரூபாய் 10 லட்சத்திற்குமேல் நட்டம் ஏற்பட்டது என்பது தவறான தகவலாகும்.

குளோபல் டெண்டர் மூலம் சேசிஸ்கள் வாங்கியதில் ரூபாய் 71.25 லட்சம் குறைவாகவே செலவாகியுள்ளது. பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மாடலான 1210-இ-யைவிட தரமான சேசிஸ் ஆகும். நகரங்களில் செல்லும் பேருந்துகளில் ஒரு நாள் ஒன்றுக்கு சராசரி ஒரு வண்டியில் 1,570 பயணிகள்

பயணம் செய்கிறார்கள். கூடுதலான எண்ணிக்கை பயணிகள் ஏறி இறங்கி வருவதால், பேருந்துகளில் உட்பக்கங்களில் கறையும் அழுக்கும் சேர ஏதுவாகிறது. இதை தினமும் சுத்தம் செய்வதினாலும் வர்ணத்தைப் பூசுவதனாலும் அதிகப்படியான நேரமும் பராமரிப்புச் செலவும் ஏற்படுகிறது. சன் மைக்கா பொருத்துவதனால்தான் இந்தக் கறையும் அழுக்கும் சுலபமாகச் சுத்தப்படுத்தப்படுகிறது. மற்றபடி சோப்போ அல்லது வேறுவிதமான சுத்தம் செய்யும் ரசாயனமோ தேவைப்படுவதில்லை. இம்முறையினால் உட்புறத் தூய்மை எளிதாகப் பராமரிக்கப்படுகிறது. நகரப் பேருந்துகளில் சன் மைக்கா பயன்படுத்தியிருப்பது சுகாதாரத்தைப் பராமரிப்பதற்காகவேயன்றிப் பயணிகள் ரசிப்பதற்காக அல்ல. சுகாதாரத்திற்கு ஏதுவான இந்த மாற்றத்தைப் பயணிகள் பாராட்டுகிறார்கள்.

பல வருஷங்களாக சிவப்பும் வெளிர் மஞ்சளும் கலந்த வர்ணங்களையே சென்னை நகரப் பேருந்துகளில் அடிக்கப்பட்டு வந்தது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, எதற்காக சிவப்பு நிறத்தை விட்டுவிட்டு பச்சை நிறத்திற்குப் போனீர்கள் என்று கேட்டார்கள். உலக வங்கியின் மூலம் வாங்கப்பட்ட பேருந்துகளில் தனிப்பட்ட நிறம் வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள். பல பயணிகள் சிவப்பு நிறத்தைத் தவிர்த்து வேறு குளிர்ச்சியான வர்ணத்தைப் பூச வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இதனடிப்படையிலேயே சிவப்பு நிறத்திற்குப் பதிலாக பி.டி.சி-பேருந்துகளில் பச்சை நிற வர்ணம் பயன்படுத்தப்பட்டது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது எதற்காக சிவப்பு நிறத்தை விட்டுவிட்டுப் பச்சை வர்ணத்தைப் பூசினார்கள், யாருக்கோ வேண்டியவர்களுக்கு இந்தப் பணி கொடுக்கப்பட்டு அவர்களுக்கு லாபம் ஏற்படுத்த இந்த வர்ணப்பூச்சு மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். உண்மை நிலைமையை அறியாமல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த விவரத்தைக் கூறியிருக்கிறார்கள்.

பேருந்து கட்டும் இடமான பல்லவன் போக்குவரத்துத் தொழிற் பட்டறையிலேயே (குரோம்பேட்டை) பேருந்துகளின் வெளிப்பக்கம் உபயோகப்படுத்தப்படும் வர்ணம் முழுவதும் பூசப்படுகிறது.

அதோடு புதிதாக ஒரு பெயின்ட் கம்பெனிக்கு வழி ஏற்படுத்தும் வகையில் இந்தப் பச்சை வர்ணம் வாங்கப்படுகிறது என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே எந்த அய்.சி.அய். (கெமிக்கல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா) கம்பெனியிலிருந்து இந்தச் சிவப்பு பெயின்ட் வாங்கப்பட்டிருக்கிறதோ, அதே கம்பெனியாரிடமிருந்துதான் இந்தப் பச்சை பெயின்ட்டும் வாங்கப்பட்டிருக்கிறது. அதோடு இந்தப் பச்சை பெயின்ட்டின் விலையும் குறைவு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சிவப்புப் பெயின்ட்டின் விலை ஒரு லிட்டர் ரூபாய் 29-க்கும் அதிகமாக இருக்கும்போது, பச்சைப் பெயின்ட்டின் விலை ரூபாய் 27.28 பைசாதான் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விதி 82-ன் கீழ் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் "பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி, தலைவரின் இசைவைப் பெற்று, அமைச்சர் அறிக்கையை வெளியிடலாம்" என்றிருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் அவையின்மூலம் தந்திருக்கிற அறிக்கை விதி 82-ன் கீழ் வராது. இது ஏற்கெனவே நடைபெற்ற விவாதத்தைப்பற்றி இன்னொரு விவாதத்தைத் துவக்கி வைப்பதைப்போல் இருக்கிறது. எனவே இதைக் குறித்து நான் பதிலளிக்க ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் இந்த அறிக்கை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் கருத்துக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ன சமாதானம் அளிக்க விரும்புகிறார்கள்? 82-வது விதியின்படி பொதுப் படையாக ஒரு அறிக்கையை அளிப்பது என்பது சரி. ஆனால் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விவாதத்தை எழுப்புவது போல் பல மறுப்புகளை இங்கே வெளியிட்டிருக்கிறார். அதன் மூலம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். எனவே இதில் அமைச்சரின் விளக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அன்றையதினமே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, புழுதி வாரித் தூற்றுவதைப்போல் பல குற்றச் சாட்டுகளை எந்த விதமான ஆதாரமுமில்லாமல் சொன்னார்கள். நானும் அப்போதே அவைகளை மறுத்து அவைகளுக்கு ஆதாரத்தைத் தர வேண்டுமென்று கூறினேன். அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் "நீங்கள் தகவல்

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 26

சேகரித்துத் தாருங்கள்" என்று கூறினார். அந்த வகையில் தகவல் சேகரித்துத் தரும் முறையில்தான் இந்த கரெக்ஷன் ஸ்டேட்மெண்ட் படித்தேன். இதில் "1210-ச என்ற சேசிஸ் வாங்கியதாகச் சொல்கிறீர்கள், ஆனால் அது சரியல்ல, 1210-டி என்ற சேசிஸ்தான் வாங்கியிருக்கிறீர்கள்" என்று அவர் கூறி, அதற்கு உதாரணமாக ஒரு நெம்பரைக்கூட இங்கே அவையில் குறிப்பிட்டார்கள். உடனே நான் அதிகாரிகள் இப்படிக் கூறியிருக்கிறார்கள், எனவே நான் விவரத்தைத் தெரிந்து நடவடிக்கையை எடுக்கிறேன் என்று கூறினேன். அந்த அடிப்படையில்தான் இங்கே உண்மையான தகவல்களைக் கூறியிருக்கிறேனேயொழிய விவாதத்திற்காக எதையும் கூறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பொதுவாக 82-வது விதியின்கீழ் அறிக்கை கொடுக்கும் மரபு இருக்கிறது என்றாலும், கூடுமானவரை விவாதத்திற்குரியதல்லாத ஒரு அறிக்கையைத் தருவது என்பதுதான் சரி. எனவே இனிமேல் அமைச்சர்கள் அந்த முறையை ஒழுங்காகக் கடைப்பிடிப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களிடம் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஏதாவதொரு குற்றச்சாட்டைக் கூற வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு சிறிதும் ஆதாரமில்லாமல் நான் அதைப் * * என்று கூட சொல்ல விரும்புகிறேன். * * தகவல்களை இந்த அவையில் கொடுத்துவிட்டு அடுத்த நாளே அதை நாளேடுகளிலும் போட்டு விளம்பரப் படுத்திவிடுகிறார்கள். இதற்கு மறுப்புத் தெரிவிக்கக்கூட ஒரு வாய்ப்பினை அமைச்சர் பொறுப்பிலிருக்கிற எங்களுக்குத் தரவில்லையென்றால், இது சரியாக இருக்காது. இந்த அடிப்படையில்தான் இந்த அறிக்கையை அளித்தேன் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மறுப்புகளையெல்லாம் அப்போதே அவர் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் இருந்ததால், அதை உபயோகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அறிக்கையில் அவைகளைக் கொண்டு வர முடியாது. அமைச்சர் அவர்கள் பேசும்போது * * என்ற வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தைகளை அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். அந்த வார்த்தைகள் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

---

* * : தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

1979 ஏப்ரல் 26]

இந்தப் பிரச்சினை இதோடு முடிகிறது. இந்த அவையைப் பொறுத்த வரையில், மரபுகளை எல்லோரும் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் அவையை ஒழுங்காக நடத்த முடியும்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொருள் குறித்த விவாதம் நடைபெற்ற நாளன்று விவாதம் முடிகிறவரை, அமைச்சர் அவர்கள் அவையில் இருந்தார்கள். அவர் பதில் பேசி முடியும்வரை நானும் இங்கே அவையில் இருந்தேன். அவர் பதிலளிக்கும் போதே, என்னுடைய கருத்துக்கள் தவறு என்று சொன்னார்கள். அப்போதே நானும் அவர்களுக்குப் பதில் சொன்னேன். நான் சொன்னவற்றை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், இந்த அவையின் மூன்று உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்க வேண்டுமென்று கேட்டேன். அந்தக் குழு என்னுடைய குற்றச்சாட்டுக்கள் தவறா, சரியா என்று முடிவு செய்யட்டும் என்று கூடச் சொன்னேன். ஏனென்றால் அமைச்சர் அவர்களுக்கு இலாகாவிலிருந்து சில புள்ளி விவரங்களையும், தகவல்களையும் தருகிறார்கள். நானோ வேறொரு தகவலை இங்கே அவையில் தருகிறேன். எனவே இவை எல்லாவற்றையும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவுக்கு அனுப்ப வேண்டும். அமைச்சர் அவர்களின் கருத்துக்கள்தான் சரியானவை, என்னுடைய கருத்துக்கள், தகவல்கள் தவறானவை என்று அந்தக் குழு கருதுமானால், அவைகளுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் தவறான தகவல்களைக் கொடுத்திருந்தால், இந்த அவை எந்த விதமான தண்டனையைத் தந்தாலும், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இந்த நேரத்தில் இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் * * அல்லது தவறாக தகவல்களைத் தந்திருப்பேனானால் என்மீது உரிமைப் பிரச்சினை தான் அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வரவேண்டுமேயொழிய 82-வது விதியின்கீழ் அறிக்கை தருவது சரியல்ல. எனவே இதைக் கண்டித்து நாங்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அவையிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களும் அவையைவிட்டு வெளியேறினார்கள்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கையை அளிப்பார்.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்கு அமைச்சரின் பதிலுரைக்குத் திருத்தம் குறித்து

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு பிரச்சினையாக வந்துவிட்ட காரணத்தால் ஒன்றைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விதி 82-ன்கீழ் 'பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி, தலைவரின் இசைவோடு அமைச்சர் ஒரு அறிக்கையை வெளியிடலாம்' என்றிருக்கிறது. ஆகவே தலைவர் அவர்களின் இசைவைப் பெற்றுதான் இங்கே அமைச்சர் அவர்கள் அறிக்கையை வெளியிட்டாரே தவிர தானாகவே அமைச்சர் ஒரு அறிக்கையை வெளியிட முடியாது. இத்தகைய அறிக்கைகள் தங்களின் கவனத்திற்கு வந்துதான் தங்களின் இசைவைப் பெற்றுதான் அவையில் அளிக்கப்படுகின்றன என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்னிடம் இசைவு பெறவில்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை. நான் இதற்கு இசைவு கொடுத்ததால்தான் அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படித்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, தங்களின் இசைவோடு வைக்கப்பட்ட இந்த அறிக்கையில் சில விவரங்கள் ஒரு விவாதத்திற்குரிய பிரச்சினையாக இருப்பதால். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து உட்கார வேண்டும். அந்தப் பிரச்சினை அதோடு முடிந்துவிட்டது. அடுத்த பிரச்சினையை எடுத்துக் கொண்டுவிட்டோம். எனவே மீண்டும் அதை அனுமதிக்க முடியாது. விதி 82-ன்கீழ் அளிக்கப்படும் அறிக்கையின்மீது கண்டிப்பாக விவாதம் கூடாது என்று இருக்கிறது. சில பிரச்சினைகள் எழுந்துவிட்டதால் நானே அதை எடுத்து விளக்கியிருக்கிறேன். எனவே அது இத்துடன் முடிகிறது.

திரு. க. இராமமூர்த்தி : I rise on a point of order விதி 82-ன்கீழ் ஒரு அறிக்கை அளிக்கும்போது. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் இப்போது படிக்கப் போகிற அறிக்கையைப்பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறாரா அல்லது ஏற்கெனவே படித்து முடித்துவிட்ட அறிக்கையைப்பற்றி ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி : படித்து முடித்ததைப்பற்றிதான் நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன்.

நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்கு அமைச்சரின் பதிலுரைக்குத் திருத்தம் குறித்து

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதை அனுமதிக்க முடியாது. அது முடிந்துவிட்டதாக நான் ஏற்கெனவே அறிவித்துவிட்டேன்.

திரு. க. இராமமூர்த்தி : அதையொட்டி இப்போது நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பக்கூடாதென்றால் விட்டுவிடுகிறேன். ஆனால் அது முடிந்துவிட்ட பிரச்சினையென்றால் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அதையொட்டித்தான் இப்போது கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அதையொட்டி நான் சொல்வதில் தவறு இருக்காது என்ற அடிப்படையில்தான் இதைச் சொல்கிறேன். நான் பேச வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைத்தான் நான் கேட்கிறேன். உறுப்பினர் எந்த அறிக்கையைப்பற்றி ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறார்? முதலில் வந்தது முடிந்துவிட்டது. இப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டாவது அறிக்கையை அளிக்க இருக்கிறார்கள். இதில் எதைப்பற்றி உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறார் என்றுதான் அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : முடிந்ததாகச் சொல்லுகிற அந்தப் பொருள் குறித்துதான் நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன். அதைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் ஒரு சிறிய கருத்தைச் சொன்னார்கள். மின்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, இந்த அறிக்கை தலைவரின் அனுமதியோடு கொடுக்கப்பட்ட அறிக்கை என்று குறிப்பிட்டார்கள். தலைவர் அவர்கள்கூட தான் அனுமதி கொடுத்ததால்தான் அவையில் அறிக்கை படிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். எனவே அதையொட்டி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கூடாது என்றால் நிறுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் உறுப்பினர் அவர்கள் எதைப் பற்றி ஒழுங்குப் பிரச்சினை கிளப்ப விரும்புகிறார் என்றுதான் கேட்டேன். உறுப்பினரே பிரச்சினையைக் கிளப்பினால் எப்படி?

திரு. க. இராமமூர்த்தி : நான் பிரச்சினையை எழுப்பவில்லை. நான் எழுந்ததே பிரச்சினையாகக் கருதப்படுகிறது.

தலைவர் அவர்களே, விவாதத்திற்குரிய பகுதிகளாக, மறுப்புடன் வந்திருக்கிற பகுதிகளை அறிக்கையிலிருந்து நீக்கிவிட்டு மீதி இருக்கிற அறிக்கையை அவையில் படித்ததாகப் பரிசீலிக்கலாமென்று. . .

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒழுங்கு மீறிய வார்த்தைகளைத்தான் அவைக் குறிப்பிலிருந்து நீக்க முடியும். அந்த வார்த்தைகளை நானே நீக்கி விட்டேன். விவாதத்திற்குரியவைப்பற்றி நானே சொல்லியிருக்கிறேன். எனவே இனிமேல் இம்மாதிரி அறிக்கைகளில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

(2) நெடுஞ்சாலைத் துறையிலே கிராமச் சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை வாசிப்பதற்கு முன்னால் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். நேற்று அவையில் நான் இல்லாத நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, காண்ட்ராக்ட் பற்றி . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் அறிக்கையை மட்டும் படிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மேலவைத் தலைவர் அவர்களே, நேற்று அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, நெடுஞ்சாலைத் துறையிலே, கிராமச் சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு கோடி ரூபாய் மைய அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது என்ற பொருளோடும், நெடுஞ்சாலைத் துறையிலிருந்து 25 இலட்சம் ரூபாயை மைய அரசுக்குத் திருப்பித் தரப்பட்டுவிட்டது என்ற பொருளோடும் பேசியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய விளக்கத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரைக்கும் கிராமப்புறத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய். . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மைய அரசுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாக நான் பேசவில்லை. 25 இலட்சம் ரூபாயை நேஷனல் ஹைவேஸ் திருப்பியனுப்பியதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்று குறிப்பிட்டேன். ரூபாய் 5.7 கோடி ஒதுக்கியதில் ஒரு கோடி ரூபாய் செலவு செய்யவில்லையென்று சொன்னேன். மைய அரசுக்குத் திருப்பியனுப்பப்பட்டது என்று நான் சொல்லவில்லை. வேண்டுமானால் ரிகார்டுகளை எடுத்துப் பாருங்கள்.

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டால் அறிக்கைக்கு அவசியமே இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, விதி 82-ன்கீழ் அனுமதியளிப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். விவாதத்திற்கு அன்றைக்கே பதில் சொல்லியிருக்க வேண்டும். அப்போதே விவரங்களைக் கையில் வைத்திருக்க வேண்டும், இல்லையென்றால் மறுநாளைக்குச் சொல்லுகிறேன், அவகாசம் வேண்டுமென்று கேட்டிருக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நானும் சொல்லிக்கொள்ளுகிறேன் . . .

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் இல்லாத நேரத்தில் குறிப்பிட்டவைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இருப்பதால்தான் நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவர் என்ற முறையில் நான் தெரிவித்துக்கொள்ளுவது, விதி 82-ன்படி செய்யப்படும் அறிவிப்பு முக்கிய விஷயமாக, பொதுவாக இருக்க வேண்டும். விவாதத்தில் சொல்லப்பட்டதற்கு மறுப்பாக இருந்தால், அந்த நேரத்திலேயே தாங்கள் எழுப்பியிருக்கலாம். நேற்று நிதி ஒதுக்க மசோதா வந்தபோது, வந்திருந்து அப்போது சொல்லியிருக்கலாம். 82 வது விதியை அதற்குப் பயன்படுத்த வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கமாகக் கூற விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, எங்கள் பேரில் தவறு இருந்தால், உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்து, அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னிலை விளக்கமாகச் சொன்னால் அதைத் தடுப்பதற்கில்லை .

திரு. ப. மாணிக்கம்: தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும், ஆங்கில விதிப் புத்தகம்தான் இருக்கிறது.

"A member may, with the permission of the Chairman, make a personal explanation although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward, and no debate shall be allowed on such explanation."

என்று விதி 81-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டிபேட்டபிள் மேட்டர் இப்போது வந்திருப்பதால் இது விதி 81-ன்கீழ் வராது.

[திரு. ப. மாணிக்கம்] [1979 ஏப்ரல் 26

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போதைக்கு இந்த விஷயத்தை மேலும் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவாதத்திற்குரியது வேண்டாமென்று சொல்லும்போது, தன்னிலை விளக்கமாகத் தெளிவுபடுத்துவது நல்லது. மறுப்பாக இருந்தால் மற்றவர்களையும் பதில் சொல்ல அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நேற்று நான் அவையில் இல்லாத நேரத்தில் தவறாகக் கூறியதற்கு மறுக்க வேண்டிய வாய்ப்பும், விளக்கம் தர வேண்டிய வாய்ப்பும் இருக்கிறது. இதை எந்த விதியின்கீழ் தெரிவிக்க வேண்டும்?

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, எங்கள் மீது தவறு இருந்தால், அதற்காக உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தால், நாங்களே ஒத்துக்கொள்ளுகிறோம். அப்போது உரிமைக் குழுவிற்கு அனுப்பவும், விசாரணை செய்யவும் முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அந்த மாதிரிச் சொல்லவில்லையென்று தெரிவித்து விட்டார்கள். ஆகவே எப்படி 82-வது விதியின்கீழ் வர முடியும்? பிறகு யோசித்துப் பார்க்கலாம். இன்றைக்கு அதை வற்புறுத்த வேண்டாம்.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, இப்போது எந்த விதியின்கீழ் அமைச்சர் அவர்கள் அறிக்கையைக் கொடுக்க வேண்டும், அறிக்கை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி இங்கே சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் இல்லாத நேரத்திலே சில கருத்துக்கள் சொல்லப்படுகிறபோது, அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இல்லையா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. பாலிசி மேட்டரில் உடனடியாகப் பதில் சொல்ல முடியும். நிர்வாக ரீதியாக அந்தந்த இலாக்காக்களைக் கவனிக்கிற அமைச்சர்கள் பதில் சொன்னால்தான் சரியாக இருக்கும். சில உண்மைகளைச் சொல்ல அமைச்சர் அவர்கள் விரும்புகிறார். 82-வது விதியின்கீழ் அறிக்கையைப் படிக்க முடியுமே தவிர, பேசக்கூடாது என்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் பேசுகிற போது, விஷயங்களைக் குறிப்பிடாமல் மறுக்கிற வகையில் வாசிக்கலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்களென்று உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்தால்,அதற்கு அவர்களும் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது.

1979 ஏப்ரல் 26] [திரு. கா. இராசா முகமது]

ஆகவே இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, என்னென்ன கருத்துக்கள் தவறு என்று படுகிறதோ, அதற்காக உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். அதற்கான வாய்ப்பு இருக்கிறதென்பதை நானும் என்னுடைய கருத்தாகச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறாரா?

டாக்டர் எச். வி. ஹண்டே : On a point of order இப்பேர்ப்பட்ட பிரச்சினை வருகிற நேரத்தில், எந்த உறுப்பினராக இருந்தாலும், அவரைப் பற்றிய தகவல் இங்கே அவர் இல்லாதபோது சொல்லப்படுகிறதென்றால், அதற்கடுத்த நாள் அவர் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு தன்னிலை விளக்கமாகப் பேசுவதற்கு உரிமையுண்டு. அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் அறிக்கையை அளிக்க முன் வந்தார்கள். தலைவர் அவர்கள் கூடாதென்று சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, தன்னிலை விளக்கமாகச் சொல்லுகிறார்கள். அவருக்கு அந்த வாய்ப்புக் கொடுக்கவில்லையென்றால், பிறகு எந்த உறுப்பினருக்கும் அந்தப் பாதுகாப்பு இருக்காது என்பது என்னுடைய கருத்து. அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் தலைவர் அவர்களுடைய விருப்பம். ஆகவே இன்றைக்கு அவரை அனுமதிக்கவில்லையென்றால் எந்த உறுப்பினருக்கும் பாதுகாப்பு இருக்காதென்ற அச்சம் ஏற்படுகிறது. இன்றைக்கு அமைச்சருக்கு இந்த நிலை வந்திருக்கலாம். நாளைய தினம் உறுப்பினர்களுக்கும் அந்தத் தொல்லைகள் வரலாம். ஆகவே சுமுகமான ஒரு நல்ல யோசனையை நான் சொல்லுகிறேன். தன்னிலை விளக்கமாக அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். பிறகு கேள்வி கேட்க உறுப்பினர்களுக்கும் உரிமையுண்டு என்று சொல்லலாம். ஆனால் விவாதமாக்காமல் ஒரு விளக்கத்தை மட்டும் கேட்கலாம் என்று வைக்கலாம்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, கருத்துக்களை எல்லோரும் சொல்ல வேண்டுமென்ற ஆர்வம் இருந்தாலும் கூட, அரசுத் துறையிலே ஒரு அமைச்சருக்குள்ள நிலைமை எல்லோருக்கும் பொதுவானவை என்ற அடிப்படையிலே உணர்ந்துதான் சொல்லுகிறேன் என்பதைத் திரும்பவும் வற்புறுத்துகிறேன். அமைச்சரைப் பார்த்து நேரடிக் குற்றச்சாட்டினால், தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டும். ஆனால் நிர்வாக ரீதியாகத் தவறு நடந்திருக்கிறதென்று சொல்லி உண்மைக்கு மாறான தகவல்களைக் கொடுத்தால், அறிக்கையளிப்பதைவிட உரிமைப் பிரச்சினையாக

கொண்டுவருவது தெளிவான வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதை முன்னவர் என்ற முறையிலே என்னுடைய நிலையைத் தெளிவுபடுத்திய பிறகு, தலைவர் அவர்களே, தாங்கள்தான் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, விவாதத்திற்குள்ளே நான் போகவில்லை. 19 ஆம் தேதி நான் பேசியிருக்கிறேன். வேறு ஒரு உறுப்பினர்கூட பேசியிருக்கலாம். போக்குவரத்து பற்றிய குறிப்பு 19 ஆம் தேதி நடந்திருக்கிறது. நேற்று நிதி ஒதுக்க மசோதா வந்தது. உறுப்பினர்கள் பேசியதில் தவறு இருந்திருந்தால் நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற நேரத்தில், போக்குவரத்து அமைச்சரிடமிருந்து விளக்கம் கேட்டு அவர்கள் பதில் அளித்திருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்த அவையிலே ஒரு வாரம் கழித்து பதில் சொல்லுகிறார்கள். நேற்று பத்திரிகையிலேகூட செய்தி வந்திருக்கிறது. நாங்கள் தெளிவுபடுத்தித் தெரிந்துகொண்ட பிறகு தான், பத்திரிகைக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த அவையில் சில விதிகளின் கீழ் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த விஷயத்தில் விதி 82ஐப் பயன்படுத்த முடியாது. விதி 81-ன்கீழ் இது குறித்துத் தன்னிலை விளக்கமும் கொடுக்க முடியாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப்பற்றிக் கேள்வியில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : சர்ச்சைக்குரிய பொருளாக இருக்கக்கூடாதென்று விதி 81-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தன்னிலை விளக்கத்திலே சர்ச்சைக்குரிய பொருள் கூடாதென்று விதி 81-லே இருக்கிறது. விவாதத்திற்கும், ஆராய்ச்சிக்கும், விசாரணைக்கும் வாய்ப்புள்ளது உரிமைப் பிரச்சினைதான். ஆகவே உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தால் நாங்கள் வரவேற்கிறோம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் கூறியது போல், தவறான தகவல்களை அவைக்குத் தந்ததற்காக, * * * தகவலைத் தந்ததற்காக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப் பற்றி யோசித்த பிறகு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், * * * தகவல் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதை உண்மைக்கு மாறான தகவல் * * * என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் நேற்று அவையிலே உண்மைக்குப் புறம்பான தகவல்களை, ஹைவேஸ் காண்ட்ராக்ட் விஷயத்தில் கூறியிருப்பதால அவர் மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வர விரும்புகிறேன். அது பற்றி தலைவர் அவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

(பிற்பகல் 5.00.)

3. அரசின் தீர்மானம்.

மேலவை விதி 42 (5)-ல் கொடுத்துள்ள வரம்பை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி, அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்தவரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி, அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. உரிமைப் பிரச்சினை எழுப்புவது குறித்து தலைவரின் விளக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைக்கு ஒரு தகவல் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய உரிமைப் பிரச்சினையை எழுத்து மூலம் தந்த பிறகுதான், அதன்மேல் தீர்ப்பு அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

5. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

(1) சென்னை சாஸ்திரி நகர், எம்.எஸ் முத்து நகர் பகுதிகளிலுள்ள சர்வகட்சி குழுவினர், அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கக் கோரி, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியிருப்பது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

“சென்னை சாஸ்திரி நகர், எம். எஸ். முத்து நகர் ஆகிய பகுதிகளிலுள்ள சர்வகட்சிக் குழுவினர் வெள்ள நிவாரணம், அப்பகுதி வாழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கக் கோரி தொடங்கியுள்ள சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தின் விளைவாக பொது மக்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து.”

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ மன்ற அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே அந்தப் பகுதியிலே [illegible] இருப்பதாகவும், ஆகவே அவைகள் பாதிக்கப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டபோது, அதிலே பாதிக்கப்பட்டோர், [illegible] மற்ற பகுதிகளிலே குடியிருப்பவர்கள் [illegible] தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இங்கேயும் அங்கேயும் ஓடி அலைந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் பொருட் சேதமும், [illegible] ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் வேறு வழியிலே தங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வெள்ளப் பகுதியிலே நிவாரணம் [illegible], வசதிகளுக்கும், பாதுகாப்பு நடவடிக்கைகளின் [illegible] ஏற்பாடுகளுக்கும், நிவாரண உதவி யாவது [illegible] முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் வருவாய்த் துறை அதிகாரிகளும், அதே போல மற்ற அதிகாரிகளும், வேண்டிய உதவிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 209 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) அரசு உயர் பள்ளிகளில் பணி புரியும் தற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 1973-74-ல் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கும், நிதித் துறை அரசாணை எண். 41 செயல்படுத்தப்படாமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சி. ரா. லெட்சுமி காந்தன், பி. ஆர். ராமன் ஆகிய இருவரும் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் பேசினால் போதுமானது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

“அரசு உயர் பள்ளிகளில் பணிபுரியும் தற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் 1973-74 ஆம் ஆண்டுகளில் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கும் நிதித் துறை அரசாணை எண். 41 (11-1-1977) இதுவரை கல்வித் துறையில் செயல்படுத்தப்படாமல் வீண் காலதாமதமாவதால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நேரடி நடவடிக்கையில் இறங்க முடிவு செய்திருப்பது குறித்து.”

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ மன்ற அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நான் எழுப்பிய பிரச்சினைதான். ஆனால் பழைய விளக்கங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து ஒரே கருத்தாக அறிக்கை வடிவத்திலே இங்கே தாக்கல் செய்திருக்கிறது. நிதித்துறை அரசாணை 41-ன் படி, பல்வேறு துறைகளிலே துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால்தான், தகுதிகாண் பருவம் நிறைவு பெறும் என்று இருக்கிறது. ஆகவே வேறு பல துறைகளுக்கும் இந்த விதிமுறைகள் இதற்கு முன்பே இருந்தன. ஆனால் அரசாணை 41-ன்படி அரசு ஊழியர்களின் அடிப்படை விதிகளிலே திருத்தம் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், அமெண்ட்மெண்ட்ஸ் போடப்பட்டிருப்பதால், அனைத்துத் துறைகளிலும் உள்ள பல்வேறு விதிமுறைகள் பொருந்தாத விதிமுறைகள் அடிபட்டுப் போகின்றன என்பதுதான் என் வாதம். அரசாணை 41-ன் படி வேறு பல துறைகளிலும் அது அமுல் நடத்தப்பட்டு தொடர்ச்சியாக ஆண்டு ஊதிய உயர்வும் அவர்களுக்குத் தரப்படுகிறது. ஆனால் கல்வித் துறையிலே இந்த விதித் துறை அமுல் நடத்தப்படவில்லை.

@210-211 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அரசு உயர் பள்ளிகளில் பணி புரியும் தற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 1973-74-ல் தேர்வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கும், நிதித்துறை அரசாணை எண் 41 செயல்படுத்தப் படாமல் இருப்பது குறித்து

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 26

ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித்துறையிலே இந்த விதி முறைகளினுடைய பலன் கிடைப்பதற்கு, இந்த விதிமுறைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு இது குறித்துப் பரிசிலிக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவர் அவர்களே, ஊதிய உயர்வுக்குத் தேர்வுகள் தேற வேண்டுமென்று ஒரு அம்சம் நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கின்ற காரணத்தினாலே, தேர்வு பெறுவதையும், ஊதிய உயர்வையும் இணைக்காது, பிரிக்கக்கூடிய அளவுக்கு ஆசிரியர்கள் பயன் அடையும் வகையிலே ஆணையிடுவார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்துத்தான் பரிசிலிக்கப்படும் என்று சொன்னேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இது குறித்து அனுதாப உணர்ச்சியுடன் இருக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அக்கௌண்டண்ட் ஜெனரல் இது குறித்து மிகவும் தெளிவாகவே விளக்கியிருக்கிறார்கள். கல்வித் துறையிலே புரொபேஷன் டிக்ளரேஷன் என்பது பதவி உயர்வுக்கு இருக்கலாமே தவிர, ஆண்டு ஊதிய உயர்வுக்குக் கூட டெஸ்ட் பாஸ் செய்ய வேண்டுமென்பது சரியல்ல என்பது எங்களுடைய வாதமாக நீண்ட நாட்களாக இருக்கிறது. இது குறித்து விரிவாக ஆய்வு செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பரிசிலனைக்குப் பின் முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ் : 3-8-1973-லே தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்குத்தான் இந்தச் சலுகை உண்டு என்றும், அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இல்லை என்றும் இருக்கிறது. 3—8—1973-க்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்தும் பரிசீலிக்கலாம்.

(3) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், மகாஜன ஆரம்பப் பள்ளியை, மேட்டுப்பாளையம், நகராவை எடுத்துக்கொண்ட நாள் முதல் ஆசிரியர்கள் ஊதிய உயர்வு ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் இருப்பதால், மூன்றாவது ஊதியக் குழு சம்பள விகிதம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாம லிருப்பது குறித்து.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் மகாஜன ஆரம்பப் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டதால் இப்பள்ளியை ஆசிரியர்களுடன் அப்படியே மேட்டுப்பாளையம் நகராவை 1975 ஜூன் மாதம் எடுத்துக்கொண்டது. அன்றுமுதல் இந்த ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு தராமலும், உரிய ஊதியம் நிர்ணயிக்கப்படாமலும், இதனால் மூன்றாவது ஊதியக்குழு சம்பள விகிதம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து".

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி : அது ஒரு வகையில் நிறைவு அளிப்பதாக இருந்தாலும், 1975 ஆம் ஆண்டிலே பள்ளி எடுக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டிலே தணிக்கை செய்யப்பட்டு ஆட்சேபணை வழங்கப்பட்டிருக்கிறது. 1975-லேயிருந்து 1979 வரை, இந்தப் பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு வருவது வரை, அதிலே நடவடிக்கை எடுப்பதற்கு, தவிர்ப்பு வழங்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட தவிர்ப்பு வழங்கக்கூடிய நடைமுறைகள் 5 ஆண்டுகளாக இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்தத் தவிர்ப்பு வழங்கக்கூடிய நிலையைக் கொண்டுவந்து, தொடர்ந்து விரைந்து நடவடிக்கை எடுத்து, அவர்களுடைய ஊதிய உயர்வுகளை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எடுக்கப் படும்.

@ 212 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், மகாஜன ஆரம்பப் பள்ளியை மேட்டுப்பாளையம், நகரவை எடுத்துக்கொண்ட நாள் முதல் ஆசிரியர்கள் ஊதிய உயர்வு, ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் இருப்பதால், மூன்றாவது ஊதியக் குழு சம்பள விகிதம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமலிருப்பது குறித்து.

[1979 ஏப்ரல் 26

திரு. செ. முத்துசாமி : 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. தனியார் பள்ளிகளை ஒழுங்குப்படுத்தியபோது சட்டத்தினுடைய முதல் பாதிப்புக்கு உள்ளான ஆசிரியர்கள் 6 ஆண்டுகளுக்கு முன் வேலையை இழந்திருக்கிறார்கள். இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 6 ஆண்டுக் காலத்திற்கு இந்த நிலுவைச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கல்வி இலாகாவில் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். சட்ட ரீதியாகவும் செல்லும் என்று சட்டம் சொல்கிறது. இந்த 6 ஆண்டுக் காலத்திற்கும் அரசு சம்பளம் தரவிட்டாலும், அந்த 6 ஆண்டுக் காலத்திற்கும் ஆன ஊதிய உயர்வைச் சேர்த்துச் சம்பளம் நிர்ணயிக்கும்போது, இந்த அரசு அந்தச் சம்பளத்தைக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு பரிசீலிக்கும்.

(4) நிலம்-தொழிலாளர் விகிதம் நிர்ணயிப்பது குறித்த கமிட்டி, சேர்வராயன் மலைப்பகுதி நீங்கலாக, தனது சிபாரிசுகளை சமர்ப்பிக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதால் அப்பகுதியில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை இனி தோட்ட முதலாளிகள்தான் நிர்ணயிக்கும் நிலை இருப்பது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்: "1976 ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 408 மற்றும் 1398-ன் படியும் நிலம்-தொழிலாளர் விகிதம் நிர்ணயிப்பது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கமிட்டியை, சேர்வராயன் மலைப்பகுதி நீங்கலாக, தனது சிபாரிசுகளை சமர்ப்பிக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதால், சேர்வராயன் மலைப்பகுதியில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை இனி தோட்ட முதலாளிகள்தான் நிர்ணயிக்கும் நிலைக்கு விடப்பட்டிருப்பது குறித்து."

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை ஆணையரின் முன்னிலையில் 18—5—1977 அன்று தொழிற் தகராறு சட்டம், 1947 . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை பெரிதாக இருந்தால், அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தால் போதும்.

பட்ட கமிட்டி, சேர்வராயன் மலைப்பகுதி நீங்கலாக தனது சிபாரிசுகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதால், அப்பகுதியில் வாழுகின்ற தோட்டத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை இனி தோட்ட முதலாளிகள் தான் நிர்ணயிக்கும் நிலை இருப்பது குறித்து

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பெரிதாக இருக்கிறது. கொஞ்சம் ஷார்ட்டாக பண்ணிவிடலாம் என்று பார்த்தேன். விவர அறிக்கை ஒன்று@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையில் ஏதோ நிலம்-தொழிலாளர்கள் விகிதம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நிர்ணயம் செய்ய வேண்டியது அரசினுடைய கடமை. அந்தத் தொழிலாளர்கள் தொழில் துறை ஆணையாளருடைய தலைமையில் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டதாகவும் அந்த நிர்ணயம் செய்வதிலே காலதாமதம் ஆகி இருப்பதாகவும் சொல்கிறார்கள். தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சம் சம்பளத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாதது. மற்ற மலைத் தோட்டங்களில் ரூபாய் 5.20 பைசா என்று சம்பளம் தருகிறார்கள். இங்கே ரூபாய் 4.20 பைசாதான் பெறப்படுகிறது என்பதை மாற்றிக் கொடுக்க அரசு என்ன முயற்சி எடுக்கிறது?

(பிற்பகல் 5-10)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம், 'லேண்ட்-லேபர் ரேஷியோ'—எவ்வளவு நிலத்திற்கு எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டுமென்பது பற்றியதாகும். அதிலே சேர்வராயன் பகுதி விடுபட்டுப் போய்விட்டது. அது குறித்த கோப்பில் நான் கையெழுத்திட்டுவிட்டேன். செயலாளருக்கு அது சென்று, ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : அப்படிப்பட்ட ஆணை பிறப்பித்த பிறகுதான் கூலி நிர்ணயம் செய்யப்படும். மற்ற பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் ரூபாய் 5.20 வாங்குகிறார்கள், ஆனால் சேர்வராயன் மலைப் பகுதித் தொழிலாளர்கள் ரூபாய் 4.20 தான் பெறுவார்கள். அந்த நிலை நீடிக்காமல், விரைவில் அந்த ஆணையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதலிலே லேண்ட்-லேபர் ரேஷியோ நிர்ணயிக்க சேர்வராயன் மலையைச் சேர்க்க வேண்டுமென்ற கோப்பில் நேற்று நான் கையெழுத்து இட்டுவிட்டேன். அது செயலாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வேலையை டெபுடி கமிஷனர் அவர்கள் செய்வார்கள். அதற்குப் பின்னால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னது பரிசீலிக்கப்படும்.

@213 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(5) சென்னை—திருச்சி நெடுஞ்சாலையில் பள்ளிக் குழந்தைகள் சென்ற வேன்மீது ஒரு லாரி மோதியது குறித்து.

* **திரு. க. இராமமூர்த்தி** : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் திண்டிவனம் அருகே மார்ச் திங்களில் பள்ளிக் குழந்தைகள் அடங்கிய ஒரு வேன்மீது ஒரு லாரி மோதியதன் விளைவாக மூன்று குழந்தைகள் இறந்தது குறித்தும், சில குழந்தைகள் காயமடைந்தது குறித்தும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 8—3—1979 அன்று மகாபலிபுரத்திற்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த திண்டிவனம் தாகூர் குழந்தைகள் தனியார் பள்ளியைச் சார்ந்த பத்து பள்ளிக் குழந்தைகளும், நான்கு ஆசிரியைகளும் பயணம் செய்த அப்பள்ளிக்குச் சொந்தமான வேன் 9—3—1979 அன்று அதிகாலை சுமார் ஒரு மணி அளவில் கோனேரிக் குப்பத்திற்கு (திண்டிவனத்திற்கு) அருகில் நிறுத்தி வைக்கப்பட்டு பழுது பார்த்துக் கொண்டிருந்தபொழுது அவ்வழியாக சென்னையிலிருந்து சேலத்திற்கு பாரம் ஏற்றிச் சென்று கொண்டிருந்த வேல் முருகன் என்று பெயரிட்ட லாரி அந்த வேனின் பின்புறத்தில் மோதியதின் விளைவாக, இரண்டு வாகனங்களும் கவிழ்ந்தன. சரவணன் (வயது 7), பிரேம்சந்தி (வயது 9), மூரளி (வயது 9) என்ற மூன்று பள்ளிக் குழந்தைகள் அதே இடத்தில் மரண மடைந்து விட்டனர். மேலும் மூன்று பள்ளிக் குழந்தைகளும், மூன்று ஆசிரியைகளும், வேன் நடத்துநரும் காயமுற்றனர். காயமுற்றோர்கள் அனைவரும் உடனே திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர். சிகிச்சைக்குப்பின் அவர்கள் அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். மரணமடைந்த குழந்தைகளின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்குப் பின்பு அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் பட்டன. லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டு பின்பு ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்தில் இரண்டு வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டது. இவ்விபத்து தொடர்பாக ஒலக்கூர் காவல் நிலையத்தில் லாரி ஓட்டுநருக்கு எதிராக இ.பி.கோ. 304 ஏ-பிரிவின் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்த திண்டிவனம் இயக்கூர்தி ஆய்வாளர், இவ்விபத்து இயந்திர

கோளாறு காரணமாக ஏற்படவில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளார். மரணமடைந்த மூன்று குழந்தைகளின் குடும்பங்களுக்கும் முதல் அமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,000 நிதி உதவி அளித்துள்ளதாகவும், காயமடைந்த ஆசிரியை ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் தலா ரூபாய் 50 நிதி உதவி அளித்துள்ளதாகவும் தென்னாற்காடு மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, விபத்தின் காரணமாக இறந்து போன குழந்தைகளின் வயது 9, 7 என்ற அளவில் இருக்கிறது. சுற்றுலா சென்ற இடம் திண்டிவனத்திலிருந்து 40 மைல் தொலைவிலேதான் இருக்கிறது. சுற்றுலா சென்ற வேன் எத்தனை மணிக்குப் புறப்பட்டது? அந்தச் சின்னக் குழந்தைகளை வைத்துக்கொண்டு அவ்வளவு காலதாமதமாக இரவு 11 மணி 12 மணி அளவில் அங்கேயிருந்து திரும்ப வேண்டிய அவசியம் என்ன என்பதை அரசு பரிசீலித்ததா? அதைப்போலவே விபத்து இயந்திரக் கோளாறு காரணமாக நடைபெறவில்லை என்றாலும், வேன் பழுதுபட்ட காரணத்தாலே நின்றிருக்கிறது. வேன் முறையாக இருந்ததா? அதற்கு வேண்டிய டேஞ்ஜர் லைட் எல்லாம் இருந்ததா? அது இல்லாததால் இந்த விபத்து நேர்ந்திருக்கிறதா என்பதை அரசு பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தனியார் பள்ளியைச் சேர்ந்தவர்கள் எந்த நேரத்தில் பள்ளியைவிட்டு சுற்றுலாவிற்குப் புறப்பட வேண்டும், எந்த நேரத்திற்குள் திரும்பி வரவேண்டுமென்பது பற்றி அரசு பொறுப்பெடுத்து, நடவடிக்கை எடுப்பது சிரமம். அந்த வாகனத்தைப் பொறுத்த வரையில், பழுதுபட்ட காரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கிறதென்று குறிப்பைத் தந்திருக்கிறார்கள். மற்ற விதத்தில் மோட்டார் வாகனச் சட்டத்திற்கு உட்பட்டு, முறையாக இருந்ததென்று தகவல் கிடைத்திருக்கிறது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : குறிப்பாக சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு இடைப்பட்ட தூரத்தில், நெடுஞ்சாலையில் மிக அதிகமாக விபத்துக்கள் நடக்கின்றன. பொதுவாக இந்த மாதிரி விபத்துக்கள் லாரிகளின் காரணமாக இருக்கின்றன என்ற செய்திகள் வருகின்றன. ஆகவே லாரி டிரைவர்களுக்குக் கட்டுப்பாடு விதித்து, லாரிகளால் அதிகமான விபத்துக்கள் நடைபெறுவதைத் தடுக்கும் விதத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் பள்ளிக் குழந்தைகள் சென்ற வேன் மீது ஒரு லாரி மோதியது குறித்து

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இதைத் தடுக்க ஒரு முக்கிய வழி, வாகனங்களின், குறிப்பாக சரக்கு உந்துகளின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதுதான் சிறப்பாக இருக்குமென்று அரசு கருதுகிறது. அந்த அடிப்படையிலே, 'டேக்கோகிராப்' என்ற கருவியைப் பொருத்துவோமானால், குறிப்பிட்ட வேகத்தைத் தாண்டிச் செல்கிற வாகன ஓட்டுனர்கள் மீதும், உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும். டேக்கோகிராப் என்று சொல்லப்படுகிற அந்த மெஷின்கூட, தற்போது இந்தியாவில் ஒருவரால்தான் தயாரிக்கப்பட்டு வருகிறது. நாம் கேட்கின்ற அளவிற்கு அவர்களால் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலும் அவர்கள் இஷ்டம்போல் விலை சொல்வதால், உடனடியாக 'டேக்கோகிராப்' பொருத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம். நம்முடைய நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகம் ஒன்றே, அந்த டேக்கோகிராப்களை செய்யப் பொறுப்பு எடுத்து, அதைச் செய்து, தமிழகத்தில் அதை நடைமுறைக்குக் கொண்டுவரலாமென்று தீவிரமாக யோசித்து வருகிறோம். அது ஆலோசனை முடிந்த பிறகு, இந்தக் குறை களையப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவரவர்களே, மூன்று குழந்தைகள் காயப்பட்டிருக்கிறார்கள். மூன்று ஆசிரியர்கள் காயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு குழந்தைக்கு 50 ரூபாயும், ஒரு ஆசிரியருக்கு 50 ரூபாயும் பண உதவி செய்யப்பட்டிருக்கிறது. ஏனையோருக்கும் அவ்விதம் பண உதவியை ஏன் செய்யவில்லை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்த உதவியைப் பொறுத்தவரைக்கும் ஆட்களின் தன்மையைப் பொறுத்து அல்ல, காயத்தின் தன்மையைப் பொறுத்துதான். எனவேதான் அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறது.

6. 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகள் குறித்தும், 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதி நிலை அறிக்கைகள் குறித்தும் விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின் மீது நான் ஆற்ற விரும்பிய உரையை@ நூலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தந்துள்ளேன். எனவே இந்த அவையில் அதை நான் உரையாற்றியதாக எடுத்துக்கொண்டு, உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 214-239 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் குறித்தும் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதிநிலை அறிக்கைகள் குறித்தும் விவாதம்

1979 ஏப்ரல் 26]

டாக்டர் இரா. சனார்த்தனம் : மேலவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழ் நாட்டிலே மின்சார நிலை சீரும் சிறப்புமாக இருப்பதோடு, மேற்கு வங்கத்தில் இருப்பவர்கள்கூட தங்களுடைய தொழிலில் பாதிப்பு ஏற்பட, அதற்காகத் தமிழகத்தை நோக்கி வருமளவிற்கு தமிழ் நாட்டின் மின்சார நிலைமை சீரும் சிறப்புமாக இருப்பது பாராட்டுக்குரியது. அந்த முறையில் தொழில் பெருகுவதற்கு மின்சாரம் தேவையான ஒன்று. மேலும் நமது மாநிலத்தைத் தொழில் மயமாக்க முதலமைச்சரவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிக்கு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் பெரிதும் உறுதுணையாக இருக்கிறார்கள். சில நேரங்களில் சிலர் மேற்கு வங்கத்திடம் பாடம் கற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள். உள்ளபடியே பார்ப்போமானால், மேற்கு வங்கம், தமிழகத்திடம் பாடம் கற்றுக்கொள்ளலாம் என்ற அளவிற்கு, மின்சாரத் துறையிலே பெரிய புத்துணர்ச்சியையும், செயலாற்றுகின்ற நிலையையும் பார்க்கும்போது, மகிழ்ச்சி அடையத் தோன்றுகிறது. குறிப்பாகச் சொல்வதானால், இந்த அரசு கிராமங்களின் பக்கம் போகிறது, ஏழைகளின் பக்கம் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக, கிராமங்களில் குடிசைகளில் இருக்கிற ஒவ்வொருவரும் தனியாக மீட்டர்களை வைத்துக் கொள்ள முடியாது என்பதால் வீட்டிற்கு ஒரு விளக்கு தருகிறோம், 2½ ரூபாய் கட்டினால் போதுமென்று சொல்லி, அதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியிருப்பது புரட்சிகரமான செயலாகும். இதனால் ஏழை மக்கள் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நடைமுறைப்படுத்தும்போது, நம்முடைய மக்களில் யாராவது தவறு செய்யாமலிருக்கும் வண்ணம் எச்சரிக்கையோடு இருந்து, அதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், திட்டம் நல்லதாக இருந்து, இடையிலே சிலர் தவறு செய்து, அந்தத் திட்டத்தையே கைவிடக்கூடிய நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

மின்சாரத் துறை நல்ல சீரிய முறையில் இயங்க வேண்டும். பல இடங்களில் அந்தத் துறை இயங்கி வருவதைப் பார்வையிட வேண்டும். வெளிநாடுகளில் ஹெலிகாப்டர்கள் இருப்பதுபோல், அந்தத் துறைக்கும் ஹெலிகாப்டர்கள் வாங்கினால், சிறப்பாக இருக்கும். குந்தா போன்ற இடங்களுக்கு போவதானாலும், இன்னும் சொல்லப்போனால், விவசாயிகள் போராட்டத்தின்போது வழியை மறிக்கும்போது, பணிகள் தடைபடாமல் இருக்க, அதைச் செய்தால் சிறப்பாக இருக்கும்.

(பிற்பகல் 5-20)

குறிப்பாக மின்சாரத்தை 4, 5 வழிகளிலே பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. நீர்வீழ்ச்சிகளிலிருந்து 'ஹைட்ரோ பவர்' என்கிற முறையிலே எடுக்கப்படுகிறது. அந்த முறையிலே நாம் நம்முடைய சக்திகளையெல்லாம் பயன்படுத்தி விட்டோம். இன்னும் சொல்லப்போனால், காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் என்கிற முயற்சியிலும் நாம் ஒரு கட்டத்தைக் கடந்து விட்டோம். அடுத்து, நிலக்கரியிலிருந்து 'தெர்மல் பவர்' என்கிற முறையிலும், நம்முடைய கனி வளங்கள் இருக்கிற நிலையைப் பொறுத்து அதிலும் ஒரு எல்லையை அடைந்திருக்கிறோம். டீசலிலிருந்து எடுப்பது என்கிற முறையில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற எண்ணெய் தட்டுப்பாட்டில் அது இனி சாத்தியமில்லை என்பதையும் எண்ணிப் பார்த்து, அடுத்த கட்டம் அணு சக்தியிலிருந்து 'ஆட்டாமிக் எனர்ஜி' என்ற நிலையைப் பார்க்கிறபோது, அதற்குத் தேவைப்படுகிற யூரேனியத்திற்காக கானடா, அமெரிக்கா போன்ற நாடுகளை நாம் எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதனை இப்பொழுது நாம் ஒரு தொலை நோக்கோடு சிந்தித்துப்பார்த்தாக வேண்டும். காரணம் அந்தத் தொலை நோக்குப் பார்வை இருந்தால்தான், இன்று நாம் போடுகிற திட்டம் எதிர்காலத்தில் பயன்படும். அந்த முறையிலே ஒரு நிகழ்ச்சியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முன்பு அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஒரு முறை ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். குந்தா மின்சாரத் திட்டத்தை உருவாக்கிய நேரத்தில் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 2 பைசா ஆகும் என்று ஒரு கணக்குப் போட்டார்கள். அந்த நேரத்தில் ஒரு யூனிட்டுக்கு 2 பைசாவா என்று நிதித் துறை அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாம். ஆனால் இப்பொழுது நாம் ஒரு யூனிட்டுக்குச் செலவிடுகிற பணத்தைப் பார்க்கிறபோது, 2 பைசா ஆகிறது என்பதற்காக நிதித் துறையில் எதிர்ப்பு ஒரு காலத்தில் இருந்திருக்கிறதே என்பதை கவனித்து, இந்த மின்சாரத்தைப் பொறுத்தவரை, எவ்வளவு தொலைநோக்குப் பார்வை நமக்குத் தேவை என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதையொட்டி மின்சாரம் தயாரிப்பதற்கு எவ்வளவு செலவு என்பது முக்கியமல்ல, எவ்வளவு செலவானாலும் அந்த மின்சாரத்தின் மூலம் பெறுகிற பொருள் நமக்குத் தேவையான ஒன்றாக இருக்கிறது. ஒரு 100 ரூபாய் பொருளை தயாரிக்க மின்சாரத்திற்காக ரூபாய் 110 ஆனாலும்கூட அது

பரவாயில்லை. ஆனால் மின்சாரமே இல்லாமல் போகுமானால், அந்தப் பொருளைப் பெறுகிற சந்தர்ப்பத்தையும் நாம் இழந்து விடுகிறோம். அதனாலே தொழில்களை தமிழகத்தில் 2 கோடி ரூபாய் செலவில் தொடங்க வருகின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த வகையில் அவர்களுக்கு லைசன்ஸ் வழங்குகிறபோது, அவசியம் அவர்கள் 10 இலட்சம் ரூபாய்க்கான ஜெனரேட்டர்களை வைக்க வேண்டுமென்று நாம் அவர்களை வற்புறுத்த வேண்டும். இல்லாவிட்டால் மின்சாரம் இல்லை, அதனாலே நாங்கள் தொழிற்சாலைகளை மூடி விடுகிறோம் என்று அவர்கள் சொல்லுவார்கள். அதிலே நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் கூட ஒன்றைத் தெரிவித்தார்கள். கடல் அலையின் வாயிலாக மின்சாரத்தைப் பெறுவது ஒரு முறை. 'சோலார் எனர்ஜி' என்கிற முறையில் நிரம்ப சூரிய ஒளி கிடைக்கும் இடங்களிலிருந்து மின்சாரம் பெறுவது இன்னொரு முறை. ரொம்ப சூரிய ஒளி கிடைக்கும் இடங்களிலே சூரிய ஒளியை வைத்து மின்சாரம் பெற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக 1973 ஆம் ஆண்டு டிசம்பரில் மாண்ட்ரீலில் கனடியன் பசிபிக் ரயில்வே தனது தேவைக்குப் பயன்படுத்தியுள்ளது. அதே போல சூரிய ஒளி மூலமாக மின்சாரம் பெறும் வழிவகைகளையும், அதனைப் பயன்படுத்தும் ஆக்க பூர்வமான முறைகளையும் ஆஸ்திரேலியாவில் இங்கிலாந்தைச் சேர்ந்த 'ஆக்கால் சோலார் சிஸ்டம்' என்னும் நிறுவனத்தார் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர். சூரிய ஒளியை அடிப்படையாகக் கொண்டு சோலார் பேட்டரிகள் சோவியத் நாட்டில் தயாரித்துப் பயன்படுத்தி வருகின்றனர். 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இவ்வாராய்ச்சியை அவர்கள் தொடங்கியுள்ளனர்.

1977 ஆம் ஆண்டில் இந்தியாவைச் சேர்ந்த இத்துறை வல்லுநர்கள் சோவியத் நாட்டுக்குச் சென்று வந்துள்ளனர்; சோவியத் நிபுணர் குழுவும் இங்கு வந்து சென்றுள்ளது. இந்தியாவிலுள்ள அநேக இடங்களில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் பெற இயலும் என்கிற கருத்தையும் இத் தூதுக்குழு வெளியிட்டுள்ளது நினைவில் கொள்ளத்தக்கதே.

ஜப்பானில் அலைகளிலிருந்து மின்சாரம் பெறும் வழிவகைகளைச் கண்டுபிடித்து அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஜெர்மன், மெக்சிகன் முயற்சியால் சூரிய ஒளியை வைத்து ஒரு சிறு கிராமத்தையே 'சன்னி டவுன்' என்ற பெயர் வைத்து செய்திகாட்டில் வெற்றிகரமாக மின்சாரம் பெற்று வருகின்றனர்.

அதனாலே நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம் நம்முடைய வல்லுநர்களைக் கொண்டு இனி உலக நாடுகளில் இருக்கின்ற முறைகளை எல்லாம் கடந்து சோலார் எனர்ஜி மூலமாகவும், அலைகளின் மூலமாகவும் மின்சாரம் பெறுகிற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நம்முடைய வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்களை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வேடிக்கைக்குச் சொல்வதானால், ஒரு இடத்தில் மனித மூளையை விற்றுக் கொண்டிருந்தார்களாம். ஒருவன் போய் விலை கேட்டானாம். கேட்டதும் சொன்னார்கள். இங்கிலாந்து நாட்டுக்காரன் மூளையினுடைய விலை 2 ரூபாய் என்று சொன்னபோது, கேட்டவன் ஆச்சரியப்பட்டு அடுத்த மூளை என்ன விலை என்று கேட்டானாம். அந்த மூளை அமெரிக்கனுடைய மூளை அதன் விலை $1\frac{1}{2}$ ரூபாய் என்றார்களாம். அடுத்து இருக்கிற மூளை ஜப்பான் நாட்டுக்காரன் மூளை, அதன் விலை 1 ரூபாய் என்றார்களாம். கேட்டவன் வியந்துபோய் வெளியிலே இருக்கின்ற ஒரு மூளையைச் சுட்டிக்காட்டி, என்ன விலை என்றானாம். அதற்கு 40 ரூபாய் என்று விலை சொன்னார்களாம். அவன் வியந்தபோது, " அது பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அப்படியே பயன்படுத்தப்படாமல் அது இருப்பதால் அதனுடைய விலை அதிகம் " என்று சொன்னார்களாம்.

அந்த அளவிற்கு மூளைப் பலம் மிக்க தமிழ் மக்களுடைய, அறிஞர்களுடைய ஆற்றலைப் பயன்படுத்தி புதிய முறையில் சோலார் எனர்ஜி, மற்றும் கடல் அலைகளின் மூலமாக மின்சாரத்தைப் பெற்று இந்தத் தமிழகம் சீரும் சிறப்பும் பெற வேண்டுமென்று தெரிவித்து அமைகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, மின்சாரத் துறையினுடைய அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற அளவிலே முதலாவதாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மத்திய ஆட்சி விதித்த மின்சார உற்பத்தி வரியை தவறு என்று சுட்டிக் காட்டியதில் திரும்ப அந்தப் பணத்தை மாநிலங்களுக்கே தர வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதை அவருடைய அறிக்கையிலேயிருந்து பார்க்கிறோம். அதறகாக அவருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

மத்திய அரசு வசூலித்துள்ள ஒரு ஆண்டுக்கான வருவாய் அதிலே இன்னும் நிலுவை இருக்கிறது. கடந்த ஆண்டிலே வசூலித்த பணம் வரியாக மத்திய ஆட்சிக்குச் செலுத்தப்பட்டது. அந்தப் பணம் திரும்ப வராத நிலை இருக்கிறது. அதைத் திரும்பவும் இந்த அரசு பெற வலியுறுத்தி வருகின்றது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதிலே வெற்றி காண வேண்டுமென்கின்ற நிலையை நான் வலியுறுத்துகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, மின்சாரத் துறை வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் இவ்வளவு தூரம் மின்சாரத் துறை வளர்ச்சி காணாத நிலையைப் பார்க்கின்றபோது, நம் மாநிலத்தோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய முறையில் எட்டு மடங்கு அதிகமாக வளர்ச்சி இருக்கிறது என்கிற தகவல் நமக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் அதேநேரத்தில் அந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்தத் துறையிலே இருக்கின்ற சூப்பர்வைசர், எஞ்சினியர், மற்ற பதவிகளில் எல்லாம் போதுமான அளவிலே இருக்கின்றார்களா என்று பார்க்கும்போது, இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். இன்றைக்கு இந்தத் துறை மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தாலும்கூட, வேலைப் பளு இருக்கின்ற காரணத்தால், அதைக் குறைக்கின்ற வகையிலே, மேலும் நல்லமுறையில் இது இயங்குகின்ற முறையில் நிர்வாகப் பொறியாளர்கள், சூப்பர்வைசர்கள் மற்றும் தொடர்புடைய பணியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அவசியம் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மின்சார உற்பத்தியில் நம் மாநிலம் மேலும் ஒரு முன்னேற்றத் திட்டத்திலே வேகமாக அடி எடுத்து வைக்கிறது. நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரை, முழுமையாக முடித்துவிட்டோம். இனிமேல் நீர் மின்சாரம் அதிகமாகப் பெற வாய்ப்பு இல்லை என்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இன்றைக்கு நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரை, இருக்கின்ற வாய்ப்புகள் அத்தனையையும் பயன்படுத்தி விட்டோம் என்கின்ற நிலை இருந்தாலும், அதிலேயும் இரண்டு இடங்களைக் கண்டுபிடித்து, புதிதாக நீர் மின் உற்பத்தி செய்வதற்கான நிலைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. அதற்காக இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரை, மேலும் இரண்டு திட்டங்களை நிறைவேற்றுகின்ற அளவிலே, ஒன்று தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு அதன் முதல்கட்ட வேலை முடிந்து, இரண்டாவது கட்டத்திலே அடி எடுத்து

வைத்திருக்கிறார்கள். அதுமாதிரி மேட்டூரில் ஒன்று. அவற்றைத் தவிர சென்னையிலே ஒன்று துவங்க இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நம் மாநிலத்தில் மின்சார உற்பத்தி பெருகிக்கொண்டே வருகின்றது என்கிற நிலையில் இப்படிப்பட்ட திட்டங்கள் வருவது வரவேற்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற முறையில் இன்னும் இதன் உற்பத்தியை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கின்ற கருத்தினை நான் வலியுறுத்துகிறேன்.

நீர் மின்சார உற்பத்திக்கும் அனல் மின்சார உற்பத்திக்கும் இருக்கின்ற வேறுபாட்டின் காரணத்தால், அவற்றை இயக்குகின்ற பொறியாளர்கள் தனித் தனியாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த நேரத்தில் என்னுடைய கருத்தினை வலியுறுத்திச் சொல்கிறேன். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது, அப்படி தனித் தனியாக பொறியாளர்கள் இருக்கத் தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய அனல் மின்சாரத் துறையைப் பொறுத்தவரை, மேலும் மேலும் அந்தத் துறை வளர்ந்துகொண்டே இருக்கிறது. அதை வளர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதை வளர்க்க வேண்டிய அவசியத்தில் நாம் இருப்பதாலும், வளர்க்க வேண்டிய திறமை பெற்ற வல்லுநர்கள் இருக்கின்ற காரணத்தாலும், அப்படிப்பட்ட வல்லுநர்களின் பெயர்களைக் கொண்ட ஒரு பட்டியலை அவசியம் தயாரிக்க வேண்டும். அனல் மின்சாரத்திற்குத் தேவைப்படுகின்ற பொறியாளர்களுடைய பெயர்களடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதற்கான ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

மின்சாரத் துறை மின்சாரத்தை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்ல, இன்றைக்கு தமிழகத்தில் பல்வேறு பணிகளையும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் எல்லோரும் அறிந்த முழுக்க முழுக்க இருக்கின்ற ஒரு நிலை என்னவென்றால், பல்புகள் ரோடுகளில் சரியாக எரியவில்லை என்கின்ற ஒரு நிலை. இதை பலமுறை சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஆனால் மின்சாரத் துறைக்கும் விளக்குகள் எரியாமல் இருப்பதற்கும் தொடர்பேயில்லை. பஞ்சாயத்துக்கள்தான் பல்புகளை வாங்கிக் கொடுக்க வேண்டும். இருந்தாலும் பல்புகளை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலையை நாம் நிறுவியாக வேண்டும். நம் மாநிலத்தில் அநேகமாக அத்தனை கிராமங்களிலும் இன்றைக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலையிலே இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களையும்விட

அதிகமாக பல்புகளைப் பயன்படுத்துகிற மாநிலம் நம் மாநிலம்தான். அந்த வகையில் ஒரு தொழிற்சாலையை தமிழகத்தில் நிறுவ வேண்டியது மிக மிக அவசியம். ஆகவே பல்புகளைத் தயாரிக்கின்ற தொழிற்சாலையை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

(பிற்பகல் 5-30)

எவ்வளவுதான் மின்சாரம் உற்பத்தியானாலும்கூட, தமிழகத்தினுடைய தேவை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருகிறது. நாம் தொழில் ரீதியாகவும், விவசாய ரீதியாகவும் வளர்ந்துகொண்டிருக்கின்ற நிலையில் மின்சார உற்பத்தியோடு போட்டிபோட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த வளர்ச்சி இன்றைய தினம் வேறொரு சங்கடத்தையும் நமக்கு உருவாக்கியிருக்கிறது. எப்போது மின்சாரப் பற்றாக்குறை, தட்டுப்பாடு இருக்கிறதோ அப்போதுதான் விவசாயம் ஒரு முக்கிய கட்டத்திலே இருக்கிறது. விவசாயம் கதிர் பயிராக இருந்துகொண்டிருக்கும்போது, மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனாலே அவதிப்படுகிற விவசாயிகளுக்கு இப்போது நேரப்படி மின்சாரம் கிடைக்காது என்று அறிவிப்பு செய்யப்பட்டாலும்கூட, வருகின்ற மின்சாரமே எந்த நேரத்தில் வரும் என்று சில நேரங்களிலே தெரியாது. அதற்குக் காரணமாக இயந்திரப் பழுதுகளைச் சொன்னாலும்கூட, அதற்கு என்ன காரணம் என்று ஊன்றிப் பார்த்தால், நம்மாலே புரிந்துகொள்ள முடிகிறது. என்னவென்றால் இப்போது இருக்கும் பற்றாக்குறையை சமாளிப்பதற்காகத்தான் இப்படி 'அன்-அஃபிஷல்' ஆக மின்சாரத்தை நிறுத்தி அதன்மூலம் பற்றாக்குறையைச் சமாளிக்கிறார்களோ என்று சந்தேகம் ஏற்படுகின்ற அளவுக்கு இந்த மின்சாரத்தட்டுப்பாடு, மின்சாரம் நின்றுபோகின்ற நிலை ஏற்படுகிறது. இந்த நிலையைத் தவிர்க்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்திலேதான் மின்சாரம் வராது என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து, மற்ற நேரங்களிலே மின்சாரம் கிடைக்கும் என்ற உத்தரவாதத்தைத் தருகின்ற அளவிலே சில நடவடிக்கைகளை எடுத்தால்தான், விவசாயிகளுக்கு இருக்கும் சங்கடங்களை அகற்ற முடியும். தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், அங்கெல்லாம் 'ஜெனரேட்டர்கள்' இருக்கின்றன. விவசாயிகளுக்கு ஜெனரேட்டர்கள் இல்லை. ஆகவே, இந்த ஏற்பாடு செய்வது மிகவும் அவசியம்.

நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற மிகப் பெரிய குறை என்னவென்றால், மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது என்பதுதான். மீட்டரைத் தட்டி விட்டுவிட்டு, மீட்டருக்கும் மின்சாரத்துக்கும் தொடர்பு இல்லாமல் பயன்படுத்தும் நிலை அநேகமாக நம்முடைய மாநிலத்தில் மிக அதிகமாக இருக்

கிறது. எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் உண்மையாக இருந்தால், அதை நிவர்த்திக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் மத்திய அரசு விதிக்கின்ற இன்கம்-டாக்ஸைப் பொறுத்தவரையில், மீட்டர் ரீடிங் அடிப்படையிலேதான் அந்த இன்கம்-டாக்ஸ் அசெஸ் செய்யப்படுகிறது. பல இடங்களிலே ஒருவருடைய மீட்டர் எவ்வளவு ஓடியிருக்கிறது என்ற கணக்கை எடுத்து, அந்த அடிப்படையிலே இன்கம்டாக்ஸ் விதிக்கின்ற காரணத்தினாலே, மிகப் பெரிய செல்வந்தவர்கள்கூட, திருடுவதற்கு அவசிய மற்றவர்கள்கூட, தவறாக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற அவசியம் இல்லாதவர்கள்கூட, பெரிய தொழில்களிலே இருப்பவர்கள்கூட இந்த மின்சாரத் திருட்டைச் செய்யும் கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள். தங்களை அறியாமல் இந்தச் சமுதாயத்தின் சொத்தைத் திருடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசிடம் வலியுறுத்தி இந்த நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

இரண்டாவதாக, இப்போது சமீபத்திலே கேரள மாநிலத்தோடு நாம் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முடிவுக்கு வந்தது. அதற்குப் பிறகு ஏற்பட்ட புதிய ஒப்பந்தத்தின் அடிப்படையிலே நமக்குக் கொடுக்க வேண்டிய மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு, மிகுதியான மின்சாரத்தை அவர்கள் விருப்பப்படி கர்நாடகத்திற்குக் கொடுப்பதென்று அறிவித்திருந்தார்கள். அதிலே நாம் அதிகமாக சங்கடப்படத் தேவையில்லை. நம்முடைய மின்சாரத் தேவைக்கேற்ற அளவுக்குக் கிடைத்துவிடும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கும் நிலையில் முழுமையான அளவுக்கு கேரளாவிலேயிருந்து நாமே மின்சாரத்தைப் பெறுகின்ற வாய்ப்பு இருந்திருக்குமானால், அது நல்லதாக அமைந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், மாநிலங்களுக்கிடையிலேயான இந்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில், நாம் மட்டும் வலியுறுத்தி அதை முழுமையாக்கிவிட முடியாது என்றாலும்கூட, இந்த மின்சாரப் பற்றாக்குறையை அந்த வாய்ப்பு குறைத்திருக்குமோ என்ற எண்ணம் இருப்பதால், மேற்படி முறைகளிலே கேரளாவிலிருந்து மின்சாரத்தை வாங்க முயற்சியெடுக்க வேண்டுமென்றும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை நிற்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே புதிதாக 'ரூரல் எலக்ட்ரிபிக்கேஷன் கார்ப்பரேஷன்' என்ற புதிய அமைப்பு ஒன்றை ஆரம்பித்து அதன் மூலமாக மின்சாரத்தைக் கிராமங்களுக்குத் தருகின்ற, விநியோகிக்கின்ற ஏஜென்சிகளை உருவாக்குகின்ற ஒரு முயற்சி துவக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மின்சாரத் துறையே, மின்சாரத்தை விநியோகிக்கும்போது, பல இடங்களில் தட்டுப்பாடுகளும், பல இடங்களில் தவறாகப் பயன்படுத்தப் படுகின்ற, திருடுபோகின்ற நிலையும், தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற மின்சாரம் பல கோடிக்கணக்கான ரூபாய் இழப்புக்குக் காரணமாகவும் இருக்கும்போது, இது போன்ற விநியோகத்திற்கான அமைப்புக்கள் சரியாக வருமா, அந்த அமைப்புக்களை அமைப்பதன் மூலமாக அவர்களுக்கு மொத்தமாக மின்சாரத்தைத் கொடுத்துவிட்டாலும்கூட, கிரயத்தை நாம் பெற்றாலும் கூட, அமைக்கப்படுகின்ற ரூரல் எலக்ட்ரிஃபிக்கேஷன் கார்ப்பரேஷன் மூலமாக முறையாக மின்சாரம் விநியோகிக்கப்படுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நம்முடைய துணை அமைப்புக்கள் என துணை ஏஜென்சிகளை உருவாக்கிவைத்திருக்கிறோம். இந்த அமைப்பு நஷ்டத்திலே நடைபெறும் நிலை வருமேயானால், இந்த அமைப்புக்களோடு சேர்ந்து மின்சாரத் துறையும் நட்டத்தில் ஆழ்ந்துவிடும். ஆகவே, முயற்சிகளை மேற்கொள்ளும்போது, மிகவும் எச்சரிக்கையாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின்சாரம் தமிழகம் பூராவும் கிடைக்கும் அளவுக்கு பரவலாக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் பயன்படுத்தப்படுகின்ற அளவைப் பார்த்தால், இந்தத் துறையினுடைய அதிகாரிகள் பெருமளவிலே சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகியிருக்கிறது. பல நேரங்களிலே அந்த அதிகாரிகள் சுற்றுப் பிரயாணம் மேற்கொள்கின்றபோது, அவர்கள் தங்குவதற்கான வசதிகள், 'ரெஸ்ட் அவுஸ்' இல்லை. ஆகவே, தேவையான தங்கும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், மாநிலத்திலேயே அதிகமாக மின்சாரத் திருட்டு நடைபெறுவது இங்கே தான். வீடுகளிலே துவங்கி, தொழிற்சாலைகள் வரை மிக அதிகமான அளவுக்கு மின்சாரத் திருட்டு இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலும்கூட எங்கே வசதி படைத்தவர்கள் வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகளிலேதான் இந்தத் திருட்டு அதிகமாக இருக்கிறது. இந்த நிலைமைகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, சென்னை மாநகரத்திலே கண்காணிப்பை இன்னும் முடுக்கிவிட வேண்டியது மிகவும் அவசியம். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், கோடைகாலம் வந்துவிட்டது. சென்னை மாநகரத்தின் ஏழைகள், நடுத்தரவர்க்கத்தினர், அத்தனை பேரும் இனிமேல் கடற்கரையில்தான் இருக்க முடியும். அவர்களுக்கு எந்தவிதமான பணச்செலவும் இல்லாமல் கிடைக்கின்ற

லக்சுரி அதுதான். ஆனால், இப்போது அந்தப் பகுதிகள் இருளிலே மூழ்கிக் கிடக்கின்றன. அடையாற்றிலேயிருந்து, கண்ணகி சிலை வரையிலே இருளில் மூழ்கியிருக்கின்ற நிலையிருக்கிறது. அந்த நிலைமையை உடனடியாக நிவர்த்திக்க வேண்டுமென்பதோடு மட்டுமல்ல, அந்தப் பகுதிகளை ஒளிமய மாக்குவதன் மூலமாக, அந்தப் பகுதிகளில் குறைந்தபட்சமாக ஒளியையாவது தருவதன் மூலமாக பெண்களும், குழந்தைகளும், ஏழைகளும் கொஞ்சம் அச்சமற்ற நிலையில் வந்துபோகின்ற வாய்ப்பினை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்களுடைய

(பிற்பகல் 5-40)

ஒரு திட்டம் நல்ல பயனைத் தந்திருக்கிறது. அதாவது விவசாயத்திற்கான மின்சார இணைப்புகளைப் பொறுத்தவரையில், விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடைய 'பிரையாரிடி' படி மின்னிணைப்பு தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் நான் சென்று பார்த்தபோது, அங்கெல்லாம் முன்னைப்போல் குறைகள் ஏதுமில்லை என்ற நிலை இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் மின்சார இணைப்புக் கொடுப்பதைப் பொறுத்தவரையில், எந்தக் குறைபாடும் இல்லை என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக இந்தத் துறையோடு விவசாயத் துறையின் வளர்ச்சி இணைந்திருக்கிறது. தற்போது விவசாயத் துறைக்கு மின்சாரம் கிடைக்காத காரணத்தால், விவசாய வளர்ச்சி தடைபட்டு நிற்கிறது. நேரடியாக அதற்கு மின்சார அமைச்சர் அவர்கள் பொறுப்பில்லையென்றாலும், தற்போது விவசாயிகளின் பிரச்சினை தீர்க்கப்படாத காரணத்தால், பல இடங்களில் விவசாயிகள் தங்களின் மின்சாரக் கட்டண பாக்கியைச் செலுத்தாத காரணத்தால், அவர்கள் இருக்கும் பகுதிகளில், அவர்களின் கிராமங்களில் புதிதாக மின்னிணைப்புத் தரமாட்டோம் என்று மின்துறையினர் சொல்லுகிறார்கள். இப்படிப் பணம் கட்டாத காரணத்தால், கிராமங்களில் மற்றவர்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. இதன் காரணமாக பொது மக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் அவர் பொறுப்பு வகிக்கும் துறையின் நலனைக் காக்கவாவது விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக முன்வர வேண்டுமென்று சொல்லி, பொதுவாக மின்துறையின் வளர்ச்சிக்கும், மின் துறை நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பணிகளில் ஈடுபட்டிருப்பதற்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து அமைகிறேன்.

7. அயல்நாடு செல்லும் நிதியமைச்சரவர்களுக்குப் பாராட்டுரை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மேலவை உறுப்பினர்களை, சென்னை எழும்பூர் கைத்தறிக் கண்காட்சிக்கு வருகை தந்து அதைக் காணுமாறு அழைத்திருக்கிறார்கள். அந்த அழைப்பினையொட்டி அவை உறுப்பினர்களும் அக்கண்காட்சிக்குச் செல்ல இருக்கிறார்கள். ஆகையால் மின்சார நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை இத்துடன் நிறுத்திக்கொண்டு அவை உறுப்பினர்களை அக்கண்காட்சிக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவை நிகழ்ச்சிகள் முடிவடைவதற்கு முன் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சோவியத்து ரஷ்யாவுக்குச் செல்ல இருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து அவருடைய பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டுமென்று பிரார்த்தனையைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதற்கு முன்பும் ரஷ்யாவிற்குச் சென்றிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அவர் நல்ல முற்போக்கான கருத்துடையவர். உலகத்திலே முற்போக்கான சமூகப் பொருளாதார அரசியல் அம்சங்களுக்கு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் விளங்குகிற சோவியத் ரஷ்யாவிற்கு முன்னே அவர் சென்றிருந்தாலும், இந்திய நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், பார்வையாளர் என்ற முறையிலும்தான் சென்றிருப்பார். இப்போது இந்தியாவின் மிகப் பெரிய மாநிலத்தின், முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட பிரதேசத்தின் நிதியமைச்சராக சோவியத்து ரஷ்யாவிற்குச் செல்கிறார்கள். ஆகையால் அவருக்கு இந்த அவை உறுப்பினர்களோடு, அவையின் தலைவர் என்ற முறையில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நானும் அங்கே சாதாரணப் பேர்வழியாகச் சென்று வந்திருக்கிறேன். அவர் மதிப்பிற்குரிய நிதியமைச்சராகச் செல்லுகிறார். நான் சென்று வந்ததன் அடிப்படையில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய பயணம் நல்ல முறையில் அடுத்த பட்ஜெட்டைச் சமர்ப்பிக்க நல்ல முன்னோடியான அனுபவத்தை அவருக்குத் தரும் என்று நம்புகிறேன். அவருடைய ஆரோக்கியத்தை நன்கு கவனித்துக் கொண்டு அங்கே காண்கிற ஒவ்வொன்றைப் பற்றியும் அறிந்து வந்து அரசுக்கு தனது அனுபவத்தைத் தெரிவிப்ப

தோடு மட்டுமல்லாமல், இன்னொரு பணியையும் அவர் ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் ஒரு நல்ல எழுத்தாளர். மிகுந்த துடிப்புடனும் சுவையோடும் தமிழில் எழுதும் வல்லமை பெற்றவர். சிறந்த எழுத்தாளர். அப்படிப்பட்ட அவர் அங்கே கண்டதையெல்லாம் சிறந்ததொரு நூலில் எழுதி, அதை தமிழிலக்கியக் களஞ்சியத்திற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அவையின் தலைவர் என்ற முறையிலும், இங்கே உள்ள உறுப்பினர்களில், வயதானவர்களில் ஒருவன் என்ற முறையிலும் அவரை வாழ்த்தி வழியனுப்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் திரு. மனோகரன் அவர்கள் ரஷ்ய நாட்டிற்குச் செல்லுகிற செய்தி நமக்கெல்லாம் உண்மையிலேயே மகிழ்ச்சியான செய்தியாகும். ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில், இது ஒரு சாதாரண செய்திதான். ஏனென்றால் பாராளுமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தலைவராகவும் இருந்த அவர்கள் ஒரு கட்சியின் தலைவர் என்ற நிலையில் முன்பே ரஷ்ய நாட்டிற்கும் வேறு பல நாடுகளுக்கும் சென்று, நிரம்ப அனுபவம் பெற்றவர்கள்.

பொருளாதாரத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்று நல்ல பொருளியல் நிலையை ஆராய்ந்து நீண்ட நெடுங்காலமாக நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் அனுபவம் பெற்ற ஒரு தேர்ந்த, தலைசிறந்த அரசியல் வாதியாக அவர்கள் விளங்குகிறார்கள். அவர்கள் நமது மாநிலத்தின் சார்பாக ரஷ்ய நாட்டிற்குச் செல்கிறார்கள். அதிலும் குறிப்பாக மே மாதம் 1 ஆம் தேதி நடைபெறுகிற விழாவில் கலந்து கொள்கிற வாய்ப்பையும் பெற்றுச் செல்கிறார்கள்.

தமிழகம் அந்த நிகழ்ச்சியில் பிரதிநிதித்துவம் பெறுகிறது என்ற வகையில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். தமிழ் மக்கள் 2,000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஒரு சமதர்ம சமுதாய உணர்வைப் பெற்றிருந்தார்கள் என்று நமது இலக்கியங்களில் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, இன்றையதினம் சமதர்ம சமுதாய வாழ்வை இந்த நாட்டில் அமுல்படுத்த வேண்டிய நிலையில்தான் நாம் இருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பணியைத் தொடங்கினார்கள். அவர்களுடைய வாரிசுகள்தான் நாம் அனைவரும். அந்த நிலையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரஷ்ய நாட்டிற்குச்

சென்று பொருளியல் நிலை அங்கே எவ்வாறு ஆளப்படுகிறது என்பதையும், நிதி எவ்வாறு சேர்க்கப்பட்டு மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது என்பதையும், அந்த நாட்டுப் பொதுத் துறை எவ்வாறு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதையும் சரியான கண்ணோட்டத்தில் ஆராய்வதற்கு அவருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் தம்முடைய ஆற்றலால், அறிவின் திறனால், இப்போது பெற்றிருக்கிற அனுபவத்தால், நல்ல முறையில் அங்கேயிருக்கிற நிலைமைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து தமிழகம் உயர, தமிழகத்தினுடைய நிதிநிலை உயர, தமிழகம் வளர, தமிழகத்தின் சமதர்மச் சமுதாயம் மலர என்னென்ன தேவையோ அவைகளைச் செய்ய வேண்டும். அதற்கு அவருடைய இந்தப் பயணம் நல்ல நன்மையை அளிக்கும் என்று நம்பி நானும் தலைவர் அவர்களோடு சேர்ந்து நிதியமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரஷ்ய நாட்டுக்குச் செல்லுகிறபோது, நிதித் துறையில் மாத்திரம் சமத்துவத்தைக் கொண்டுவந்தால் போதாது. அங்கே கொடுப்பாரும் இல்லை, கொள்வாரும் இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்று பலரும் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நாட்டிற்குச் செல்வதில் மகிழ்ச்சி என்பது மட்டுமல்ல, அங்கேயிருக்கிற மாநிலங்கள் மாநில சுயாட்சிபெற்று தனித்தனிக் கொடிகளையும் வைத்துக்கொள்கிற உரிமையைப் பெற்றிருக்கின்றன. துவக்கத்தில் சோவியத் சமஷ்டி அமைந்தாலும், உக்ரைன் போன்ற பிரிந்து செல்லுகிற உரிமை பெற்ற மாநிலங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிற அரசியல் அமைப்புத் திட்டத்தைக் கொண்ட நாடு அது. அதைப்போலவே அந்த மாநிலங்களில் தனி நாட்டு வணக்கப்பாடல்களையும் பெற்று தம் தம் மொழியிலேயே ஆட்சியை நடத்திச் செல்கிற நிலைமையைப் பெற்றிருக்கின்ற மாநிலங்களை அடக்கிய நாடாக இருக்கிறது. இந்த அரசியல் அமைப்பையும் தெரிந்து வர வேண்டும். காரணம் இந்த நாட்டில் அந்த முறையை அமுல்படுத்த விழைகிற நேரம் இது. எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதிலும் தமது கருத்தைச் செலுத்தி அறிந்து வருவார்கள் என்று நம்புகிறேன்.

அதோடு அவர்கள் யுகோஸ்லோவேகியா நாட்டிற்கும் செல்ல இருக்கிறார்கள் என்று அறிகிறேன். சின்னஞ்சிறிய நாடாக இருந்தாலும், ஜனநாயகத்தை உலகில் அமைதியாக நடத்திக் கொண்டிருக்கும் அந்த நாட்டிற்கும் செல்கிறார்கள் என்பதில் மிகுந்த மகிழ்ச்சி. அதைப்போலவே இன்னும் பல்வேறு நாடுகளுக்கும் அவர் செல்கிறார் என்று நம்புகிறேன். இங்கிலாந்து நாட்டிற்கும் செல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கெல்லாம் கிடைக்கிற அரிய கருத்துக்களைக் கொண்டு அவர் தமிழகத்தில் சேர்க்க வேண்டும் என்று

தலைவர் அவர்களோடு நானும் அவர்களை வாழ்த்தி அனுப்புகிறேன். அதற்குரிய சூழ்நிலை அமைய விழைகிறேன். அதற்கு அவருடைய உடல்நலம் நல்ல முறையில் அவருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று விழைகிறேன்.

அவருடைய பயணம் இனிதாக அமைந்து நலமாக அவர் பல அரிய கருத்துக்களை நமக்குக் கொண்டு வந்து சேர்க்கிற நிலை உருவாக வேண்டுமென்று வாழ்த்துவதோடு, தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அங்கே பெறும் அனுபவத்தையும், அறிகிற கருத்துக்களையும் தம்முடைய எழுத்துத் திறத்தாலே தமிழக மக்களின் உள்ளத்தில் என்றென்றும் இடம் பெறுகிற வகையில் நூலாக இயற்றித் தர வேண்டும். இப்போது இருக்கிற பொறுப்போடு அந்த நூலை வெளியிட முடியாவிட்டாலும், பின்னால் வெளியிடுகிற சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ள வேண்டும். தமது அனுபவத்தையெல்லாம் நூல் வடிவில் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது இருக்கும் பொறுப்பில் இருந்துகொண்டு வெளியிடுவது என்பது கொஞ்சம் கஷ்டம்தான். காரணம் பொறுப்பிலிருக்கும்போது, பல உண்மைகளை அப்படியே சொல்ல முடியாது. குறிப்பாக சமஷ்டி முறையைப் பற்றி தற்போது சொல்ல முடியாது. அங்கேயிருக்கிற மாநிலங்களின் முழு சுயாட்சியைப் பற்றியும் இப்போது இருக்கிற பொறுப்பிலிருந்துகொண்டு சொல்ல முடியாது. இப்போது கொஞ்சம் சொன்னாலும், பிறகு முழுமையாகச் சொல்ல வாய்ப்பு இல்லாமல் போய்விடும். நான் விரும்புவதெல்லாம், தமிழகம் அவருடைய பயணத்தின் மூலம் நிலையான பலனைப் பெற வேண்டும். எனவேதான் அவருடைய அனுபவத்தைத் திரட்டி ஒரு புத்தக வடிவில் எழுதி பின்னால் வெளியிட வேண்டிய வாய்ப்பும் நேரமும் கிடைக்கிறபோது, அதை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவரை வாழ்த்தி வழியனுப்புகிறேன். அதோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், தி.மு.க. சட்டமன்றக் கட்சியின் சார்பிலும் அவரை வாழ்த்தி வழியனுப்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சோவியத் நாட்டுக்கும், மற்றும் யுகோஸ்லோவேகியா, ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லவிருக்கிறார்கள். அவர் ஏற்கெனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து பல முறை வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள் என்றாலுங்கூட, இன்றைக்கு தமிழகத்தினுடைய அமைச்சர் பொறுப்பிலே நின்று நம்முடைய தனி பிரதிநிதியாக இந்தப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்ள விருக்கிறார்கள் என்று சொல்லும் இந்தச் சமயத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சோவியத் நாட்டுக்குச் சென்று வந்ததைப்பற்றி மீண்டும் நினைவுகூர்ந்து பார்க்கிறேன். இந்தியாவினுடைய அரசியலே ஒரு புதிய மாற்றத்தை வகுக்க வேண்டிய நிலையிலே அவருடைய சுற்றுப்பயணம் அமைந்தது. சுற்றுப் பயணம் சென்று வந்ததற்குப் பிறகு, தேசவுடைமைக் கொள்கையிலே அவர் எடுத்த நடவடிக்கைகளை இன்றைக்கும் என்னால் மகிழ்வோடு எண்ணிப்பார்க்க முடிகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகுந்த முற்போக்கு உணர்வுடையவர்கள். அதோடு மட்டுமல்லாமல், அதையும் தாண்டி நின்று அந்த உணர்வுகளை மற்றவர்களிடமும் பதிய வைக்கின்ற அளவிலே காரியங்களை ஆற்றும் வல்லமை பொருந்தியவர். நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக அவர் பணியாற்றியபோது, இந்தியா முழுக்க மிகுந்த கவலையோடும், மிகுந்த ஆச்சரியத்தோடும் திராவிட முன்னேற்றக் கழகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், அவைகளையெல்லாம் தாண்டி நின்று, அரசியல் ரீதியாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெரிய மரியாதை ஏற்படக்கூடிய அளவுக்குப் பணியாற்றினார். இன்றைக்குக் கூட டில்லிக்குச் செல்லுகிறபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சிகளிலும் உள்ளவர்களையும், அமைச்சர்களையும் பார்த்துவிட்டு வருகிறார்கள் என்பது அவர் சொல்லுகிற வார்த்தைகள் மூலமாக நமக்குத் தெரிகிறது. அவரால் இந்த மாநிலத்திற்கு வேண்டியவைகளைச் சாதிக்க முடிகிறதென்றால் அதற்கு அவருடைய அனுபவம் மட்டுமல்லாமல் அவருக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிற தொடர்புகளும் துணையாக இருந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு இந்த மாநிலத்தினுடைய அமைச்சராக சோவியத் நாட்டுக்குச் செல்லுகிற அவர்கள் பெற்று வருகிற அனுபவம், இரண்டு நாடுகளுக்குமிடையே நல்ல உறவை நிலைநாட்டுவதற்குத் துணை நிற்குமென்ற அளவிலே நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன். அவருடைய பயணத்தால் இந்தியாவிற்கு நன்மை பயக்க வேண்டுமென்பதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலே பல்வேறு புதிய திட்டங்களை, புரட்சித் திட்டங்களை, முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பயன்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட வாய்ப்புக்களைப் பெற்று வரப்போகிற சுற்றுப்பயணம் நல்ல பயனுள்ளதாக அமைய வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல, சுற்றுப்பயணத்தினுடைய அனுபவங்களையெல்லாம் அவர் தன்னுடைய எழுத்திலே வடிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அவருடைய அனுபவங்களை உடனடியாக வெளியிட முடியாவிட்டாலும், சுற்றுப்பயணம் முடித்து வந்தவுடனே அவற்றை எழுதி வைத்து, சில ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றை வெளியிடலாம். அமைச்சர் பொறுப்பிலேயிருந்து செல்லுகிறபோது அவருக்கு மேலும் புதிய

(திரு. க. இராமமூர்த்தி) [1979 ஏப்ரல் 26

விவரங்களைத் தருவதாக இந்தச் சுற்றுப்பயணம் அமையலாம் என்ற வகையிலே அவருடைய பயணம் மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டுமென்று சொல்லி, பயணத்தின்போது அவர் தன்னுடைய உடல்நலனையும் காத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குளிர் நாடுகளுக்குப் போகின்றவர்கள் எல்லாம் சற்று சிவந்து வருவது வழக்கம். சாதாரணமாக நம்மோடு ஒப்பிடுகிறபோது அவர் நம்மைவிட சிவந்தவர். ஆகவே அவர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வருகிறபோது, உடலால் மட்டுமல்லாது கொள்கையிலும் சிவப்பேறி வர வேண்டுமென்று வாழ்த்தி வழியனுப்பி வைக்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகவும் கவர்ச்சி மிக்கவர், எவரையும் எந்தத் தருணத்திலும் கவரக்கூடிய சிறந்த தோற்ற வடிவம் கொண்டவர். அது மட்டுமல்லாமல் இனிய உள்ளம் படைத்தவர். ஒரு சில சமயங்களில் அவரிடம் நெருங்கிப் பழகும்போது அவருடைய சொற்களின் இனிமையைக் கண்டு, கேட்டு இரசித்தவன் என்ற முறையில், அவர் எங்கு சென்றாலும் அனைவரது உள்ளத்தையும் கவரக்கூடிய ஆற்றல் மிகுந்தவர் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம்முடைய நாட்டின் பண்பை, சிறப்பை எடுத்துக்காட்டுகிற வல்லமை படைத்தவர் என்ற முறையிலே அவரைப் பாராட்டி வழியனுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறந்த பொருளாதார அனுபவம், ஆற்றல், பண்பு அனைத்தும் ஒருங்கே பெற்ற அவர் இந்த மாநிலத்தினுடைய நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த அனுபவத்துடன் சென்று பொதுவுடைமைக் கொள்கையிலே வடிக்கப்பட்ட அந்த ஆட்சி அமைப்புகளைப் பார்த்து வந்து, அதன் தொடர்பாக தமிழகத்திலே மறுமலர்ச்சி செய்யக்கூடிய புதுமைகளையும், புத்துணர்ச்சியையும் புகட்டுவார்கள் என்ற நம்பிக்கையுடன் அவருடைய பயணம் சிறக்க எல்லா நலன்களும் பெற்று ஆரோக்கியத்துடன் திரும்பி வந்து சிறந்த தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அமைகிறேன்.

திரு. ப. மாணிக்கம் : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், சோவியத் நாட்டிற்கும், வேறு சில ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் செல்லவிருக்கிறார்கள் என்ற செய்தி எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. பல நாடுகளுக்குச் சென்று அங்குள்ள அரசுகள் செயல்படுவதைத் தெரிந்துகொள்ளுவதன் மூலமாக, அதிலும் குறிப்பாக நிதித்துறை எவ்வாறு செயல்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளுவதன் மூலமாக ஏற்படக்கூடிய பலன்கள் நம்முடைய மாநிலத்திற்கும் உதவுமென்ற முறையிலே அவருடைய சுற்றுப்பயணங்கள் வெற்றிகரமாக அமைய வேண்டுமென் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26] [திரு. ப. மாணிக்கம்]

சோவியத் நாட்டிற்கு அவர் செல்லுவது இது முதல் தடவையல்ல. ஏற்கெனவே சென்று வந்திருக்கிறார். இருப்பினும் ஒவ்வொரு தடவையும் அந்த நாட்டிற்குச் செல்லும்போது, புதிய புதிய அனுபவங்களைப் பெறலாம். அவர் முன்பு சென்று வந்ததற்கும், இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டை அவரால் காண முடியும். நானே 1971 ஆம் ஆண்டிலே சென்று வந்தேன். பிறகு 1976 ஆம் ஆண்டிலே சென்றபோது, வீட்டு வசதி, மக்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப்படுவதைக் காண முடிந்தது. அது போல அங்கே ஏற்படக்கூடிய வளர்ச்சிகளின் விகிதாச்சாரத்தையும், அதற்கான காரணங்களையும் தெரிந்துகொள்ளுவதன் மூலமாக, அந்த அனுபவங்கள் நம்முடைய மாநிலத்தில் நம்முடைய வசதிக்கேற்ப, நம்முடைய அமைப்பிற்கேற்ப பல காரியங்களைச் செய்யப் பயன்படும். அவர்களுடைய அதிகார அமைப்பு வேறுபட்டதென்றாலும், அங்கு பெறக் கூடிய அனுபவங்கள் நம்முடைய மாநிலத்திற்கு உதவும் என்ற முறையிலே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அனுபவங்களைக் கிரகித்து நம்முடைய மாநிலத்திற்குத் திரும்ப வந்து உதவுவார் என்று நம்புகிறேன். அப்படி உதவ வேண்டுமென்று வற்புறுத்தி அவருடைய பயணம் வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இப்போது மேற்கொள்ளவிருக்கிற ஐரோப்பிய சுற்றுப் பயணத்தின் போது இரண்டு சோவியத் நாடுகளுக்குப் போவது என்பதும் அவருடைய திட்டத்திலே இருக்கிறதென்று அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

(பிற்பகல் 6.00)

ஒன்று சோவியத் யூனியனுக்கும், இன்னொன்று செக்கோஸ்லேவாகியாவிற்கும் போகிறார் என்று நான் அறிகிறேன். சோவியத் யூனியனுக்குப் போவதிலே இயல்பாகவே நான் மகிழ்ச்சியடைகிறேன். மற்ற நாடுகளுக்குப் போகக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஏனென்றால், நம் நாட்டிலே இன்றைக்கு எல்லாக் கட்சியினரும் சோஷலிசம் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் சோஷலிஸம் இவ்வளவு கவர்ச்சியாக இருப்பதற்கு வித்திட்டவர், லெனின்தான். அவர் தலைமையிலே 65 ஆண்டுகளுக்கு முன்பு அந்த நாட்டிலே அது ஸ்தாபிக்கப்பட்டது. அங்கே எப்படி சோஷலிசத்தை அமைத்து அதை வளர்ச்சி அடையச்செய்து இன்று கம்யூனிஸத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதை நமது அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்க்க முடியும். சில தடவைகள் முன்பே போயிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இப்போது ஆட்சியிலே பொறுப்பிலே இருக்கின்ற முறை

யிலே போகிறார்கள். ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறபோது, நாட்டு மக்களுடைய பிரச்சினைகளில் தினம் தினம் மோதிக்கொண்டு, பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கிறார்கள். குறிப்பாக 5 கோடி மக்கள் வாழும் தமிழகத்திலே, அமைச்சரவையிலே முதலமைச்சர் அவர்களுக்கு அடுத்தபடியான முக்கியமான பொறுப்பாகிய நிதியமைச்சர் பொறுப்பிலே இருப்பதால், தமிழ்நாட்டு மக்களுக்குரிய பல பிரச்சினைகளிலே அவர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற அவர்கள், சோவியத் நாட்டிலே எப்படி பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்பதை அறிந்துகொள்வது, சமுதாயச் சூழ்நிலை, பொருளாதாரச் சூழ்நிலை வேறாக இருந்தாலும்கூட, பல முறைகளிலே பயன் உள்ளதாக இருக்கும். அவர்களுக்கும், அவர்கள் மூலமாக தமிழக மக்களுக்கும் அது பயன்படத்தக்க பிரயாணமாக இருக்கும். இந்தப் பிரயாணத்தின் மூலம் இந்திய மக்களுக்கும் சோவியத் மக்களுக்கும், குறிப்பாக தமிழக மக்களுக்கும், சோவியத் மக்களுக்கும் இடையே நல்ல உறவு ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, அவர் போகின்ற காலத்திலே, தமிழ்நாட்டிலே பப்ளிக் செக்டாரிலே, ஏதாவது தொழில் மேற்கொண்டு, நல்ல கேந்திரமாக ஆக்க, தொழில் ஆற்றலை சோவியத் கார்ப்பரேஷன்கள் மூலம் பெற முடியுமா என்று பார்க்க வேண்டும், அதற்கு மத்திய அரசிடம் அனுமதி எல்லாம் வாங்க வேண்டுமென்று என்னுகிறீர்கள். உண்மைதான். அதற்கு முதலில் அஸ்தி வாரம் போடலாம். பிறகு அதை எப்படிப் பெறுவது என்று பார்க்கலாம். அதற்கு எப்படி ஈடு கொடுப்பது என்பதையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்தான் 'எக்ஸ்ப்ளோர்' பண்ண வேண்டும், அதற்கான முறைகளைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். நானும் அங்கே 21 நாட்கள் இருந்து பார்த்தேன். அந்த நாட்டைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரிய வில்லை. அமைச்சர் அவர்கள் எத்தனை நாட்கள் இருப்பார்கள் என்று தெரிய வில்லை. அந்த நாட்டைப்பற்றி நான் புத்தகத்தில்தான் அதிகமாகப் படித் திருக்கிறேன். அந்த நாட்டிலே இருந்தபோது, அந்த நாட்டிலே ஆழமாக ஜனங்களைப் பார்க்க முடியவில்லை. அமைச்சர் ஏற்கெனவே அரசியல் ஞானம், பொருளாதார ஞானம், இன்னும் ஆட்சி அனுபவம் எல்லாம் பெற்றி ருப்பதன் காரணமாக, இந்த முடிச்சான விஷயங்களை எல்லாம் அவர்கள் பார்க்க வாய்ப்பு இருக்கிறது. அந்த நாட்களில் நல்ல அனுபவத்தைப் பெற்று தமிழக மக்களுக்கும், சோவியத் மக்களுக்கும் இடையே நல்ல உறவை ஏற்படுத்தி, அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற முறையிலே, பயணத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழக மக்களின் பொருளாதார வளர்ச் சிக்கும் அவர்களிடமிருந்து எவ்வளவு உதவி பெறமுடியுமோ அதைப் பெற்று

வரவேண்டும். அதற்கு அவர் பயணம் பயன்பட வேண்டும். என் கட்சியின் சார்பாக, இந்தப் பிரயாணம் செல்வதற்காக அவர்களுக்கு வாழ்த்துக்கூறி அமைகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்பமிகு நிதியமைச்சர் அவர்கள் ரஷ்யாவிற்குப் பயணம் ஆகின்றார்கள். அத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்கும், மற்ற நாடுகளுக்கும் செல்ல இருக்கிறார்கள். முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலே அவர்களுக்கு நல் வாழ்த்துக்கள் தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உலக நாடுகளிலேயே இன்றைக்கு முன்னணியில் உள்ள நாடுகள் இரண்டு. ரஷ்யா ஒன்று, அமெரிக்கா மற்றொன்று. எந்தப் பிரச்சினையை எடுத்தாலும், ரஷ்யாவும், அமெரிக்கா வும்தான் உலகம் பார்க்கிற நாடுகள். அந்த நாடுகளின் முன்னேற்றம், உலகத் திற்கே வழிகாட்டியாக இருக்கின்றது. அந்த மாபெரும் தேசத்திற்கு அவர்கள் செல்கின்றார்கள். அவர்களுக்கு இது முதல் பிரயாணம் அல்ல. முன்பு எம்.பி. ஆக இருந்தவர்கள். அப்போது அவர்கள் சென்றதாக நினைக் கிறேன். முன்பு சென்றதற்கும் இப்போது செல்வதற்கும் வேறுபாடு உண்டு. அவர்கள் எம். பி. ஆகச் சென்றபோது அணுகுமுறை வேறு, அமைச்சராக அவர்கள் செல்லும்போது அணுகுமுறை வேறு. இரண்டும் வேறுபட்டதாக இருக்கும். இப்போது அவர்கள் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டிய அளவுக்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே ஏற்படும் அந்த அனுபவம் தமிழகத் திற்குப் பலன் அளிக்கக்கூடியதாக அமையும். சமதர்ம சமுதாயத்திற்கு வழி காட்டியாக இருக்கின்ற நாடு ரஷ்ய நாடு. சமதர்மம், சோஷலிசத் தத்துவம் வேறு பல நாடுகளில் பரவுவதற்குக் காரணமாக அமைந்ததோடு, உலகத்தை காலப்போக்கில் எடுத்துச் சென்ற நாடு ரஷ்யாதான். ரஷ்யாவிலே அவர்கள் கையாண்ட முறைகள் மற்ற நாடுகளையும் ஈர்த்தன என்று சொல்வது தப்பாக இருக்க முடியாது. தமிழகத்தைப் பொறுத்த அளவில், பெரிய தலைவராக இருந்து, ரஷ்ய நாட்டிற்கு அழைக்கப்பட்டவர் முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்கள்தான். அதைப்போலவே திரு. ராஜாஜி அவர்கள் ரஷ்யாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும் ரஷ்யாவிற்குச் சென்று வந்ததாக எனக்கு நினைவு இருக்கிறது. இப்படி பெருந்தலைவர்கள் எல்லாம் போய் வந்த நாட்டிற்கு நிதி அமைச்சர் அவர்கள் போகின்றார்கள். அங்குள்ள நிலைகளைத் தெரிந்துகொண்டு வரு வார்கள். மற்ற நாடுகளுக்கும் சென்று பார்த்துவிட்டு வருவார்கள். உருப்படி யான முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளுக்குச் செல்கிறார்கள். அங்குள்ள புதுமைகளை எல்லாம் நேரடியாகத் தெரிந்துகொள்வார்கள். அவர் முன்பே போய் வந்திருந்தாலும், இந்த முறை நேரடியாக அனுபவித்து, உறுதியாகப் புரிந்துகொண்டு வருவார்கள். அது அவருக்கு நல்ல படிப்பினையாக

அமைந்து விடும். அவர் திரும்பி வந்தபின்பு தமிழகத்தில் நிச்சயமாக அவர் பல பலன்களை அளிக்கக்கூடிய காரியங்களைச் செய்வார்கள். அந்த அளவுக்கு அவருடைய இந்தப் பயணம் அமையும். அவர்களுடைய பயணம் வெற்றிகரமாக இருக்க வேண்டுமென்று நான் பிரார்த்தித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சோவியத் யூனியன் போன்ற வெளிநாடுகளுக்கெல்லாம் செல்கின்ற அந்த நேரத்திலே, இதுவரையிலே அனைத்துக் கட்சித் தலைவர்களும் வாழ்த்திய அந்த நிலையிலே, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் சார்பிலே, அவர்களை, நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தலைவர் அவர்கள் பாராட்டிய பிறகும், அவர்களே யார் யார் என்னென்ன சொல்லிப் பாராட்டினார்களோ அதனை அதனைச் சுருக்கமாகவே ஒரு சில வார்த்தைகளில் சொல்லிப் பாராட்டியிருக்கிறபோது நான் பேசுவது பாராட்டுவது, சம்பிரதாயமாக அமையும் என்று அங்கத்தினர்கள் கருதக்கூடாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கருதுவதாகச் சொல்லப்போகிறீர்களோ என்றுதான் பார்த்தேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாகை பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது, அவருக்காக வேலை செய்தவன் நான். அப்போது—இப்போதல்ல.

ஓர் உறுப்பினர் : அவர் அங்கே தோற்றதற்கும் தாங்கள்தான் காரணமா ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தோற்றதற்குக் காரணம், அவர்கள் அந்தப் பகுதியில் அப்போதுதான் அறிமுகமாகியிருந்தார். நாஞ்சில் பகுதியில் இருந்தவர்கள். நாகைக்குப் புதியவர்கள் என்ற முறையிலே தோற்று இருக்கலாமே தவிர, நான் வேலை செய்ததாலோ அவருடைய சாமர்த்தியம் பற்றாத காரணத்தினாலோ அல்ல. அன்றைக்கு அவரை அப்போது எப்படிப் பார்த்தேனோ அப்படியேதான் இப்போதும் இருக்கிறார்கள். என்றும் இளமையாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று ஒரு புத்தகம் அவர் எழுதினாலும் கூட நன்றாக இருக்கும். அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்கின்ற இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சபரி மலைக்குச் செல்கின்றவர்களை, அவர்கள் செல்கின்ற நேரத்திலே பார்த்து அவர்களிடத்திலே அவர்களுக்கு வேண்டியவர்கள் சென்று சில உதவிகளைக்

கேட்பார்கள். அப்படிக் கேட்பதற்குக் காரணம் அந்த நேரத்திலே எதையும் இல்லை என்று சொல்லாமல் சொல்லுபவர்கள் தர வேண்டுமென்பது ஐதிகம். அமைச்சர் அவர்களும் இதைப் பின்பற்ற வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அது ஒரு மரபு என்பதைச் சொல்லத்தான் சொன்னேன். எனக்கு அந்தக் கொள்கையில் நம்பிக்கையில்லை எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், சபரி மலைக்குச் செல்பவர்கள் போகும் முன்னர் எதாவது மற்றவர்களுக்கு வழங்கிவிட்டுச் செல்வது போல, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்கெல்லாம், அரசு ஊழியர்களுக்கெல்லாம் முன்னாலே கொடுத்துவிட்டு அவர்கள் இப்போது சபரி மலைக்குப்போகவில்லை. சோவியத் யூனியனுக்குத்தான் செல்கிறார்கள். அவர் கொடுத்ததை எல்லாம் இன்னும் முழுமையாக முழு மனதிற்கும் நிறைவு அடைகின்ற வகையிலே கொடுக்க வேண்டும். அவர்கள் மனது ஆதங்கம் அடையக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் எல்லாம் ஓரளவு நிம்மதியாக நேற்றிலிருந்து, இன்று வரை அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் வெளிநாடு செல்வது மிகவும் பொருத்தமானது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக அவர்களுடைய பயணம் மிகவும் பயன் தரக்கூடியதாக, பயன் உள்ளதாக அமையும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஏறத்தாழ ஏழரை லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சார்பில் நான் அமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன். நிச்சயமாக அவர்கள் பயணம் பயனுள்ளதாக இருக்கும். அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். நான் திரும்பி வந்த பின்னாலே உங்களைப் பார்ப்பேன், உங்களையெல்லாம் அழைப்பேன், பேசுவேன் என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள் என்னையும் அழைப்பார்கள் என்று கருதுகிறேன். சபரி மலைக்குச் சென்றவர்கள் திரும்பி வந்து பிரசாதம் தருவார்கள். அதை வாங்குவதற்கு வேண்டியவர்கள் செல்வார்கள். அதைப்போல அமைச்சர் அவர்கள் வந்த பின்னாலே நான் அவர்களிடத்திலே சொல்வேன். அப்போது அவர்கள் பிரசாதம் தருவதற்குப் பதிலாக, எங்களுடைய கோரிக்கைகளை மீண்டும் பரிசீலித்து, அவைகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். அதற்கான வழிமுறைகளையும் ஆய்ந்தறிந்து கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் அவர்களுக்கு நேரம் இல்லை. அவர் சீக்கிரம் வெளியே போகவேண்டியிருக்கிறது. அதற்கு வழி விட்டாலே போதும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோவியத் யூனியனிலே இருக்கின்ற பள்ளி நிறுவனங்களுக்கும் போய் பார்த்துவிட்டு வரவேண்டும். அங்கே 10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருப்பதாக எனக்குத் தெரியவருகிறது. அப்படி உண்மையிலேயே இருக்குமானால், அதை இங்கே நாம் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். அந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு இதுதான் காரணம். தனித்த முறையிலே மாணவர்களிடம் கவனம் செலுத்திப் பாடம் போதிப்பதற்கு ஆசிரியர்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வகையிலே அவர்கள் மாணவர்களுக்குச் சிறப்பாகச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டறிய வேண்டும். அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும், மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க வகையில் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, அமைச்சர் அவர்கள் திரும்பி வரும்போது சிவப்பாக வர வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் சொன்னது அவர்கள் கம்யூனிஸ்டாக வர வேண்டுமென்று நினைத்துச் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் அன்போடு, புரட்சியோடு, மென்மேலும் பணியாற்றக்கூடிய அளவுக்கு ஆற்றலோடு மிகவும் சுறுசுறுப்போடு வர வேண்டுமென்ற அளவில் அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் சார்பிலே நான் அவருக்கு வாழ்த்துக் கூறி விரும்புகிறார்கள் அதையே நானும் விரும்புகிறேன். என்று கூறி அமைகிறேன்.

(பிற்பகல் 6.10)

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நான் கடந்த 11 ஆண்டுகளாக மேலவையினுடைய உறுப்பினராக இருந்துகொண்டிருக்கிறேன். இந்த 11 ஆண்டுகளில் வெளி நாடுகளுக்குச் செல்லக் கூடிய அமைச்சரையோ அல்லது மேலவை உறுப்பினர்களையோ எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் இருந்து, பாராட்டி அனுப்புவது என்பது எனக்குத் தெரிந்தவரையில் இதுதான் முதல் தடவை என்று கருதுகிறேன். அந்த வகையில் நம்முடைய நிதியமைச்சரவர்கள் எல்லாத் தலைவர்களாலும் பாராட்டப்பட்டு, செல்கிறார்கள். அதற்கு சில அர்த்தங்கள் உண்டு. அது அவருக்கும் தெரியும், நமக்கும் தெரியும். இன்னொன்று, பலர் வெளிநாடுகளுக்குப் போகிறோம், பலர் வெளி நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் போவதற்கும், ஒரு சிலர் போவதற்கும் வித்தியாசம் உண்டு. நாம் போக வேண்டுமென்று நினைக்கும்போது,

நாமாகச் செலவு செய்துகொண்டு, வெளி நாடுகளைப் பார்த்து விட்டு வருகிறோம். ஆனால் வேறு நாடுகள் அழைத்துச் செல்வது என்பது ஒரு சிலருக்குக் கிடைக்கும் பாக்கியம் என்றுதான் நான் நினைப்பேன். அந்த வகையில், நிதியமைச்சரவர்கள் இன்றையதினம் ரஷ்யா செல்லுகிறார்கள். மேலை நாடுகள் சிலவற்றுக்கும் செல்லுகிறார்கள் என்றால், ரஷ்ய நாடும், மற்ற சில நாடுகளும் அழைத்துச் செல்கிறார்கள் என்று பார்க்கிறபோது, அது நம்முடைய பாராட்டுக்கு மிகவும் உரியது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, அவர் சிறந்த பேச்சாளர் என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். அதை எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பொது மேடைகளில் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் சிறந்த முறையில் சொற்பொழிவாற்ற வல்லவர் அவர் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் அவர் அமைச்சராக வந்த பிறகு, எவ்வளவு சுருக்கமாகப் பேச வேண்டுமோ, அவ்வளவு சுருக்கமாகப் பேசிவிட்டுச் செல்கிறார் என்பதைப் பார்க்கிறோம். நேற்றையதினம் கூட உறுப்பினர்களெல்லாம் $2\frac{1}{2}$ மணி நேரம் பேசி, அதற்கு அவர் 1 மணி நேரம் பதில் சொல்லுவார் என்று எதிர்பார்த்த நேரத்தில், $\frac{1}{2}$ மணி நேரத்திற்குள்ளாகப் பேச்சை முடித்துக்கொண்டு சென்று விட்டார்கள். எனவே இங்கே மிகக் குறைந்த நேரம் பேசுகிறார் என்பதைக் கவனிக்கிறேன். வெளியே பேசும் அளவிற்கு, இங்கே பேசவில்லை. என்ன சொல்ல வேண்டுமோ, அதை மிக மிகச் சுருக்கமாகச் சொல்லிவிட்டுச் செல்கிறார். ஆனால் அவர்கள் வெளி நாடுகளிலிருந்து திரும்பி வரும்போது, இன்னும் கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டும். அவருக்குத் தெரியும், சுருக்கமாகப் பேசிவிடுகிறார். ஆனால் நமக்குப் புரியவில்லை என்பதால், நமக்கெல்லாம் புரிய வைக்கும் அளவிற்கு, விரிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கிறார்கள். கிராம மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுக்கும் வகையில், அந்த நிதி நிலை அறிக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் பார்த்தோம். நம்முடைய நண்பர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், திரு. மாணிக்கம் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ரஷ்ய நாட்டை 6 ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்துவிட்டு வந்து மீண்டும் 6 ஆண்டுகளுக்குப் பிறகு சென்று பார்க்கும்போது, பல மாறுதல்களைப் பார்த்தேன் என்று சொன்னார்கள். அதைப்போல நிதியமைச்சரவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து சென்ற முறை ரஷ்யா போனதற்கும், இப்போது போவதற்கும் உள்ள இடைவெளியில் அதிகமான மாறுதல்கள் ஏம்

பட்டிருக்குமென்று சொன்னார்கள். ரஷ்ய நாடு மட்டுமல்ல, மேலை நாடுகளிலே, ஓரிரு ஆண்டுகளுக்குள் பெரிய மாறுதல்கள் ஏற்படுகின்றன. எனக்குக் கவனம் வருகிறது. தஞ்சையிலிருந்து டெல்லி சென்று, பெரிய உத்தியோகத்தில் ஒருவர் இருக்கிறார். பத்து ஆண்டுகள் கழித்து அவர் தஞ்சைக்கு வந்தார். தஞ்சைக்கு வந்தவுடன், தஞ்சையிலே பெரிய மாறுதல்களைப் பார்த்தேன் என்று சொன்னார். உடனே, தஞ்சையிலே என்ன மாறுதல்களைப் பார்த்தீர்கள் என்று கேட்டேன். அவர், தஞ்சையிலுள்ள பழைய கட்டிடங்கள் மேலும் பழமையாகிவிட்டதென்ற கருத்தைச் சொன்னார். அந்த அளவிற்கு தஞ்சை இருந்தாலும், தமிழகத்தில் பல பகுதிகள் இருந்தாலும், இந்தியாவில் பல பகுதிகளில் புதிய மாறுதல்கள் இல்லாமல் இருந்தாலும், மேலை நாடுகளில் புதிய மாறுதல்கள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் கண்டு, நிதியமைச்சரவர்கள் நம்முடைய மாநிலத்திற்கு சேவை செய்யக்கூடிய வகையிலே, திரும்பி வர்வேண்டும். அவற்றைப்பற்றிப் புத்தகம் எழுதலாமே என்பது பற்றியும் சொன்னார்கள். நான் வெளிநாடு சென்று வந்தபோது, ஒரு புத்தகம் எழுதலாமென்று நண்பர்கள் சொல்ல, நானும் எழுதலாமென்று முடிவு செய்து, 3, 6 மாதங்கள் ஆகிவிட்ட பிறகு, பார்த்ததெல்லாம் பழங் கனவுகளாகத் தெரிகின்றனவே ஒழிய, என்ன பார்த்தோம் என்பது நினைவில் இல்லை. 15, 20, 30 நாட்களில் பல இடங்களை, பல பேர்களைப் பார்க்கிறோம். அவர்கள் பல பிரச்சினைகளைப் பேசுகிறார்கள். எனவே திரும்பி வந்தவுடன் எழுத வேண்டும், புத்தகத்தை எழுதி வைக்க வேண்டுமென்றும், அமைச்சர் பதவி முடிந்த பிறகு அதைப் புத்தகமாக வெளியிட வேண்டுமென்றும் சொன்னார்கள். அவர்கள், அமைச்சர் பதவியில் நீண்டகாலம் இருப்பார்களென்று நான் கருதுகிறேன். அவர்கள் எழுதி வைத்து, அங்கே இன்னும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டால், புத்தகம் பழமையாகிவிடும். எனவே விரைவாக அவர்கள் புத்தகம் எழுத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதியமைச்சரவர்கள், தங்கள் குடும்பத்துடன் செல்வதாகச் செய்தி பார்த்தேன். தனியாகச் சென்று பார்ப்பதைவிட, குடும்பத்தோடு செல்வது நல்லது. நம்முடைய தலைவரவர்கள் கூட, ரஷ்ய நாட்டிற்குச் சென்றிருக்கிறேன் என்று சொன்னார்கள். தனியாகத்தான் சென்றார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நிச்சயமாக தனியாகத்தான் சென்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அடுத்த முறை, தலைவரவர்கள் குடும்பத்துடன் போவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். நிதி அமைச்சரவர்கள் குடும்பத்துடன் செல்கிறார்கள். குடும்பத்துடன் சென்று வெளிநாடுகளைப் பார்க்கும் அனுபவம் எனக்கும் உண்டு. மனைவி மக்களோடு வெளிநாடுகளுக்குப் போகும்போது, அவர்கள் பார்க்கும் மகிழ்ச்சியில்,

நாமும் மகிழ்ச்சி கொள்ள முடியும் என்பதை நான் சொல்லி, மற்றவர்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. இதற்கு முன்னாலே நிதியமைச்சரவர்கள் குடும்பத்துடன் சென்றிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். நல்ல முறையில் அந்த நாடுகளைப் பார்த்துவிட்டு, நிதியமைச்சரவர்கள் திரும்பி வர வேண்டும். அரசியலில் இருக்கக்கூடியவர்கள் குடும்பத்தைக் கவனிக்க முடிவதில்லை. நம்முடைய நிதியமைச்சரவர்கள் குடும்பத்துடன் செல்கிறார்கள். அப்படிப் போய், வெளி நாடுகளைப் பார்க்கும்போது, அவருக்கும், அவருடைய குடும்பத்திற்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது, நாட்டிற்கும் பலன் கிடைக்கிறது. உடல் நலத்தோடு அவர்கள் வெளி நாடுகளைப் பார்க்க வேண்டும். உடல் நலமில்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்வது என்பது இயலாத காரியம். அவர்கள் திரும்பி வரும்போது இளமையோடு வர வேண்டுமென்று நண்பர்கள் சொன்னதுபோல நானும் வாழ்த்தி, சிறந்த முறையில் சென்று, திரும்பி வர வேண்டுமென்று வாழ்த்தி, விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சோவியத் நாட்டிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார்கள். அவர்களுடைய பயணம் இனிதாகவும், சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் இருக்க வேண்டுமென்று எண்ணுகின்ற தங்களுடைய உணர்வுகளை தலைவரவர்களும், எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திண்டிவனம் இராமமூர்த்தி அவர்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அண்ணன் வெளிநாடு செல்கிறான், தம்பி வாழ்த்துகிறேன் என்ற நிலையில்தான் இன்றைக்கு உணர்ந்து பார்க்கிறேன். ஒரு வகையில் அன்னையை மகன் வாழ்த்துவதும், மகனை அன்னை வாழ்த்துவதும், அன்னை மகற்கு இடையில் அழகில்லை. அவரை நான் வாழ்த்துவதுகூட சரிதானா என்று எண்ணிப் பார்க்கிறேன். அவை முன்னவர் என்ற முறை இருந்தாலும்கூட, சில உணர்வுகளும், பாசப் பிணைப்புகளும் சில சம்பிரதாயங்களையும் தாண்டி, எழுச்சியோடு இருப்பதை உணர்ந்திருக்கிறோம். இங்கே பெருமைப்படக்கூடிய ஒரு விஷயம், உற்சாக மூட்டக்கூடிய ஒரு விஷயம் இருக்கிறது.

ஒரு இயக்கப் புரட்சி நடத்தி, சோஷலிசக் கட்டுமானத்திற்குள் ஒரு சமுதாய அமைப்பு செயல்பட்டால்தான் இல்லாமையை ஒழிக்க முடியுமென்று உலகறியச் செய்து, முதலாளித்துவ சக்திகள் திட்டமிட்ட பிரச்சினையை முனை மழுங்கச் செய்து, இன்றைக்கு வான்போல, வான்கடர்போல வளர்ந்து நிற்கும் பொதுவுடைமைப் பூங்காவிற்கு நிதியமைச்சரவர்கள் செல்லுகிறார்கள். செல்லும் நேரம் ஒரு சோஷலிசக் கட்டுமானத்திற்குள் சமூக அமைப்பு ஏற்பட

வேண்டுமென்பதற்காக உலகத் தொழிலாளர்கள் போராடிய நாள், அவர்கள் சிந்திய அந்தத் தியாகத் துளிகளுடைய விளைவாக, இன்றைக்கு வளர்ந் திருக்கிற பொதுவுடைமை அமைப்புகள் ஒன்று சேர உலகமெல்லாம் மே தின

(பிற்பகல் 6.20)

விழா கொண்டாடுகிற அந்த நல்ல நாளில் அங்கே இருக்கிறார்கள். பெரிய அணி வகுப்புகளை அவர்கள் பார்க்கிறார்கள். அதற்குப் பிறகு நீண்ட காலமாகப் போராடி அதே நேரத்தில் போராட்டத்திற்குப்பின் அவர்கள் எதற்காக இந்த அரசை உருவாக்கினார்களோ, எப்படிப்பட்ட சமுதாய அமைப்பு இருந்தால் நாட்டிலே சமத்துவம் இருக்கும் என்பதை அவர்கள் நம்பி இன்றைக்கு செயல்பட்டு, நிமிர்ந்து நிற்கிறார்களோ அவர்களுடைய அந்த நாட்டிற்குச் செல்லுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினைப் பெறுகின்றபோது, அவைகள் எல்லாம் அனுபவங்களாக, அறிவுரைகளாக, ஏற்கத் தகுந்த திட்டங்களாக நாளைக்கு தமிழகத்திற்குத் திரும்பி வருகின்றபோது, நமக்கு அது கிட்டுகின்றபோது, நிச்சயமாக தமிழகத்தினுடைய வளர்ச்சிப் போக்கிலே ஒரு பெரிய மாறுதல் ஏற்படுத்தும் என்றுகூட நாம் எதிர்பார்க்கலாம். அந்த அளவிலே சோவியத் நாடு இன்றைக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. அதைப் பற்றியெல்லாம் இன்றைக்கு நாம் பேச ஆரம்பித்தால் எவ்வளவோ நேரங்கள் தேவைப்படும்.

நல்ல சக்தி வாய்ந்தவர்கள் பிரச்சாரம் செய்தும்கூட, முறியடித்து அது நின்றிருக்கிறது, அது தான் உண்மை. அந்த வளர்ச்சிதான் ஒவ்வொரு நாட்டுக்கும் தேவையானது என்பதை நாம் எல்லோரும் இன்றைக்கு நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி நம்பிக்கொண்டிருக்கும்போது, அந்த இடத்திற்குச் செல்லுகின்றபோது, அந்த நம்பிக்கை உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் செயல்பட்டது போல் இங்கே செயல்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு நமக்கு ஒரு சிறந்த மன வலிமையை ஏற்படுத்துகிறது என்கின்ற அளவில் உங்களுடைய சுற்றுப்பயணம் இந்த நாட்டுக்கே பயன் தருகிற ஒரு சுற்றுப்பயணமாக அமைந்திருக்கிறது. தனிப்பட்ட முறையில் சமுதாயத்தின் அடிப்படையில் ஒரு நாடு இன்னொரு நாட்டிலேயுள்ள முக்கிய அரசியல் தலைவர்களையோ, அமைச்சர்களையோ அழைப்பது என்பது வேறு. ஆனால் அவைகளுக்கெல்லாம் அப்பால் பொறுப் பிலே இருக்கக்கூடிய அதிலும் மற்றவர்கள் எல்லாம் சொன்னதுபோல் நம் அண்ணாவினுடைய பாசறையிலே உருவானவர்களை அழைப்பது வேறு. நம்முடைய தமிழகம் சோஷலிசக் கட்டுமானத்திற்குள் வந்து, சோஷலிச

சமுதாய அமைப்புக்குட்பட்ட தமிழகமாக இருக்க வேண்டும் என்பதிலே நமக்கு எந்தவிதமான ஐயமும் இல்லையென்று அண்ணா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். எனவே அதை உருவாக்குகின்ற ஒரு பெரும் பணியில் இருக்கிற நீங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கே சென்று திரும்புவது என்பது எவ்வளவோ பெரிய பலன்களை நமக்கு ஏற்படுத்த இருக்கிறது. அந்த வகையில் மற்றவர்கள் எல்லாம் தெரிவித்த அந்த நல்ல வாழ்த்துக்களை. நானும் தம்பி என்ற முறையிலும், அதே நேரத்தில் மேலவை முன்னவர் என்ற முறையிலும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே புத்தகங்கள் எழுதுவதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நிச்சயமாக நாட்டிலே நிலவுகின்ற பல பிரச்சினைகளை, தீர்ப்பதற்கு சோவியத் மிகப் பெரிய எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். தேசிய இனங்களின் பிரச்சினையாக இருக்கட்டும், மொழிப் பிரச்சினையாக இருக்கட்டும், மாநிலங்கள் எந்த அளவுக்கு அதிகாரங் களைப் பெற்று இயங்க வேண்டுமென்பதற்கான பிரச்சினைகளாகட்டும், அவைகளையெல்லாம் இப்படி இப்படித்தான் தீர்க்க வேண்டுமென்று அங்கே அவர்கள் நடைமுறைப்படுத்துகின்ற காரணத்தினாலே, அவைகளைப் பார்த்து வந்து திரும்பவும் ஒரு முறை வலியுறுத்திச் சொல்வதன் மூலமாக தமிழகம் சிறந்த முறையில் வளர்ச்சி பெற முடியும். அவர்களுடைய பயணத்தை யொட்டி அவர் எழுத வேண்டுமென்று நாம் விரும்புகின்ற பயணக் கட்டுரைகள், அதையொட்டி அந்தக் பயணக் கட்டுரைகள் அடங்கிய நூல்கள் இலட்சக் கணக்கிலே அச்சிடப்பட்டு இங்குள்ள ஒவ்வொரு இளைஞனும் அதை வாங்கிப் படிக்கக்கூடிய அளவுக்கு நாம் உருவாக்கினோமானால், மிகப் பெரிய நன்மைகளை அது ஏற்படுத்தும் என்று நினைக்கிறேன்.

எனவே, ஏதோ ஒரு சுற்றுப்பயணி மேற்கொண்டிருக்கிற சுற்றுப் பயணத்தைப்போல் இல்லாத ஒரு நிலையில் மிக உயர்ந்த கோபுரங்களைப் பார்ப்பதற்கும், அழகான நகர் நிரங்களில் நின்று உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பதற்கும் அல்லது கவர்ச்சிகரமான சில இடங்களைச் சென்று பார்ப் பதற்கும் உதவும் என்கிற அளவில் இந்தச் சுற்றுப்பயணம் அமையவில்லை.

சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிற அரசின் ர்பில், அதுவும் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆதாரமாக ருக்கின்ற நிதி அமைச்சர் என்ற முறையில் அவர்கள் சென்று திரும்பி, அந்த னர்வுகளை நாம் செயல்படுத்த ஆரம்பிக்கின்றபொழுது, அது எவ்வளவோ ரிய மாறுதலை ஏற்படுத்தும்.

(திரு. கா. இராசா முகமது) [1979 ஏப்ரல் 26

உங்களுடைய பயணம் வெற்றிகரமாக நிறைவேறி, திரும்பியதற்குப் பிறகு உங்களுடைய அந்தக் கருத்துக்களை ஏற்று இங்கே செயல்படுகிற ஒவ்வொரு திட்டமும், இந்த நாட்டினுடைய சமூக அமைப்புகளைக்கூட மாற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்ற அளவிற்குப் பெருமையோடு இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நினைத்துப் பார்க்கிறோம். உங்களுடைய பயணம் மிகச் சிறந்த முறையில் அமைய வேண்டும். ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, இனிமையாக, அதே நேரத்தில் பலனுள்ளதாக, வெற்றிகரமாக உங்களுடைய பயணம் அமைந்து, திரும்ப வந்து தமிழகம் அந்தப் பயணத்தின் அனுபவங்களின் பயனையெல்லாம் பெறக் கூடிய அளவிற்கு உங்களுடைய சேவை மிகவும் சிறந்த முறையிலே தொடரப்பட வேண்டும் என்கிற அளவில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சோவியத் நாட்டிற்கும் செக்கஸ்லோவாகியா நாட்டிற்கும், மற்றும் சில ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ள இருக்கிற என்னை வாழ்த்தி வழியனுப்புவதற்காக அதற்கு என்று இந்த அவையின் விலை உயர்ந்த நேரத்தை கொஞ்சம் ஒதுக்கி அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற வாய்ப்பினை உருவாக்கியமைக்காக தலைமைப் பொறுப்பிலே இருக்கிற உங்களுக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இங்கே பேசிய எதிர்க் கட்சித் தலைவரிலிருந்து அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல், 7½ இலட்சம் அரசு ஊழியர்களின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வரை என்பால் எவ்வளவு பற்றும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதை நான் புரிந்து கொள்கிற முறையில் தங்களது இதயம் திறந்து கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் என்னை மதிக்கிறார்கள் என்பது கூடப் பெரிய விஷயமல்ல. எவ்வளவு பாசத்தோடு என்னை அவர்கள் பார்க்கிறார்கள் என்பதை எண்ணித்தான் நான் விடை பெறுவதற்கு முன்பு பரவசத்தோடு உங்கள் முன்பு நின்றுகொண்டிருக்கிறேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நல்ல எதிர்பார்ப்புகளோடுதான் என்னை அனுப்பப் போகிறீர்கள் என்ற உணர்வில் அவர்களுடைய பேச்சுக்களை நான் எடுத்துக்கொள்கின்றேன. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது துணைவியாரோடு செல்கிறார், ஆகையினாலே பயணம் சுவையுள்ளதாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். அவரது மன நிலை எனக்குப் புரிகிறது.

1979 ஏப்ரல் 26] (திரு. கி. மனோகரன்)

நான் எனது துணைவியாரோடு பயணம் மேற்கொள்கிறபோது, அவரது வார்த்தைகளில் சொன்னால் துணைவியாரின் கண்கள் பார்க்கின்ற அந்தப் பார்வை, அதன் மூலம் அவர்கள் பெறுகின்ற அறிவு, அனுபவங்கள், நமக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச் சொன்னதன் மூலம் குடும்பத்திலே அவர் எவ்வளவு பற்று வைத்திருக்கிறார் என்பதையும் அவரது இல்லத்தரசியிடம் அவர் எந்த அளவிற்கு இதயபூர்வமான பாசப் பிணைப்புடன் பழகிக் கொண்டிருக்கிறார் என்பதையும் புரிந்துகொண்டதற்குப் பிறகு, அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன், அந்த வகையில் நீங்கள் எனக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறீர்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நானும் அப்படி எனது துணைவியாரோடு இதற்கு முன்னால் ஒரு முறை யுனைடெட் அரப் ரிப்பப்ளிக் சென்று அந்தப் பகுதியிலே இருக்கிற பழங்கால புராதனச் சின்னங்களையெல்லாம் பார்த்து, அவைகளையெல்லாம் பசுமையாக நினைவிலே தேக்கி மறந்துவிடக் கூடாது என்பதற்காக புகைப் படங்களையும் பிடித்து, தாயகத்திற்குத் திரும்பிய பிறகு அந்த நைல் நதி ஓரத்தில் நின்று கொண்டு கடந்த காலத்தில் ஊடுருவி கவனித்த என் கண்கள் எந்தெந்த அளவிற்கு வரலாற்றையே உலுக்கிய நிகழ்ச்சிகள் அந்தப் பகுதியிலே நடைபெற்றது என்பதை எண்ணிப்பார்த்து, அங்கு நடைபெறுகிற அரசியல் முறையைத் தெரிந்துகொண்டதற்குப் பிறகு நாட்டுக்கு வந்து, வீட்டிலே உட்கார்ந்து புத்தகத்தை எழுத வேண்டுமென்று நான் எண்ணியது உண்டு. ஆனால் இறுதியில் எப்படி மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஏமாந்தார்களோ அதேபோல் நானும் ஏமாந்து போனேன் என்பதை இன்றைக்கு நினைவூட்டுவதோடு, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியது போல், அங்கு சென்று திரும்பி வந்த உடன் அந்தக் குறிப்புகளை எழுதிக்கொள்ளுங்கள் என்று கேட்[illegible] அதற்கு மாறாக பார்த்துவிட்டு தங்க வருகிற அறையிலேயே அங்கேயே [illegible] அதை கையோடு இங்கே கொண்டு வந்து, காலம் கனியும்[illegible] புத்தகங்களை வெளியிடுவேன் என்ற உறுதியையும் நான் இந்தச் சந்[illegible]

(பிற்பகல் 6.30)

எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அதற்கிடையில் நிலைமைகள் மாறும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்[illegible] மாறாத தன்மையுடைய நிலைமைகளும் இருக்கின்றன. சோவியத் பூங்காவைப் பொறுத்தவரையில், சமதர்மப் பூங்காவாக அது உயர்ந்து[illegible] நாளில் இருந்து இந்த நாள்வரை அது உலக அரங்கில் தனக்[illegible]

வைத்திருக்கின்ற ஒரு தனி அந்தஸ்த்தை யாராலும் சிதைக்க முடியவில்லை என்பதையும் உலக அரங்கத்தில் நடைபெறுகிற எந்த நிகழ்ச்சிகளிலும் சோவியத் ரஷ்யாவுக்குத் தனிப் பங்குண்டு என்பதையும் அதை மறுதலிப்பதற்கும், மறுப்பதற்கும் முயன்றவர்கள் அத்தனை பேரும் மூனை மழுங்கிப் போனார்கள் என்பதையும் இங்கே எனக்கு முன்னாலே பேசிய நான் தம்பி என்று பெருமையோடு, ஆசையோடு நம்புகின்ற திரு. இராசா முகமது அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதே கருத்தைத்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் எடுத்துக் கூறினார்கள். மொத்தத்தில், தலைவர் அவர்களே, தாங்கள் என்னைப் பாராட்டியதற்குப் பிறகு நான் உணர்கிறேன், தமிழ் என்னைப் பாராட்டிற்று, அனைத்துக் கட்சியினரும் என்னைப் பாராட்டியதற்குப் பிறகு என்று நான் உணர்கிறேன். தமிழ் உலகம் என்னைப் பாராட்டிற்று. எந்தவிதமான பேதமும் இல்லாமல் என்னை எல்லோரும் பாராட்டியானதற்குப் பிறகு கட்சிக்கு அப்பாற்பட்ட முறையிலே என்னைக் கொண்டு நிறுத்தி வைத்திருக்கிறீர்கள் என்ற பெருமை எனக்கு இப்போது இருக்கிறது என்று உணர்கிறபோது, நான் இப்போது கட்சிக்கு அப்பாற்பட்டவனாக நின்று கொண்டு பேசுகிறேன் என்ற உணர்வைப் பெறுகிறேன் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவோ மனமாச்சரியங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும், கடுமையான கருத்துக்கள் நமக்குள்ளே பரிமாறப்பட்டிருக்கக்கூடும். ஆனால், நல்ல வேளை இந்த அவையைப் பொறுத்த வரையில், எனக்கு அந்த அனுபவம் கிடைக்கவில்லை. ரொம்ப ஆவேசமாகப் பேசி, கோபத்தை உருவாக்க வேண்டுமென்றால், அது மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமியினாலேதான் முடியும். ஆனால் அவரே என்னிடம் இவ்

...கொள்கி அன்பாகப் பழக ஆரம்பித்த பிறகு, நான் இங்கே உட்கார்ந்திருக்கிற
கிறார்கள். ...தனை பேரையும் பார்க்கிறேன். நீங்கள் எல்லாம் எந்த அளவுக்குக் கனி
விஷயமல்ல. ...ளை கவனிக்கிறீர்கள், பாசத்தோடு என்னை அணுகுகிறீர்கள்
என்பதை என்னுடைய வளர்ச்சியிலே எவ்வளவு அக்கறையுள்ளவர்களாக இருக்
உ... ...ன்பதை நான் ஒவ்வொருவர் முகத்தைப் பார்க்கும்போதும் புரிந்து

கொள்ள முடிகிறது. நன்றாகச் சென்றுவிட்டு வாருங்கள், கற்று வாருங்கள், தெளிந்து வாருங்கள், அறிவோடு வாருங்கள் என்றெல்லாம் நீங்கள் பாராட்டும் போது, ஒரு தாய் ஒரு தனையனை வழியனுப்பும்போது அந்த மகனுக்குத் ...கூறுகிற அறிவுரையாக நான் இதை ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் பேசும்பிகமாகப் பேசுகிறேன் என்றும், நான் அவையிலே பேசும்போது குறைவாகத் புள்ளத் பேசுகிறேன் என்றும், சொல்லி, வெளிநாடு சென்றதற்குப் பிறகு, ...திரும்பி வரும்போதாவது இந்த அவையில் அதிகமாகப் பேச வேண்டுமென்று

கேட்டுக்கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் உணர்வது இப்போது நான் குறைச்சலாகத்தான் பேசுகிறேன். இனி வெளிநாடு சென்று அதிகப்படியான அனுபவம் பெற்றுத் திரும்பியதற்குப் பிறகு இதைவிடக் குறைந்த அளவு பேசுகின்ற வாய்ப்பைத்தான் பெற முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், கொஞ்சம் சொன்னாலும், அதைத் தெளிவாகப் புரிந்துகொள்கின்ற ஆற்றல் பெற்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய இந்த அவையில் நான் அதிகம் பேசவேண்டிய தேவையில்லாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பது ஒன்று, மற்றொன்று நான் அதிகமாகப் பேசமுடியாத அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி போன்றவர்கள் பெருமளவுக்கு நேரத்தை எடுத்துக்கொண்டு பேசுகின்றபோது, அத்தகைய அருமையான பேச்சுக்களைக் கேட்டு மகிழ்கின்ற வயதைப் படைத்த நான் அதைக் கேட்டு மகிழ்ச்சி பொதுக்கூட்டங்களிலே அதிகமாகப் பேசுகிறேன் என்றும், நான் பிறகு மீண்டும் சந்திப்போம், கருத்துக்களையும் பரிமாறுவோம், என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்களோ அவைகளையெல்லாம் செய்வதற்கும், உங்களது எண்ணங்களை நிறைவேற்றுவதற்கும் நான் தயாராக இருக்கிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லி வாழ்த்திய உங்கள் அனைவருக்கும் என் நன்றியைக் கூறி, அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும், நாளை காலை 10.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-35)

8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and Other Papers.

* 162. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1979 (L.A. Bill No. 25 of 1979), as passed by the Assembly.

* 163. The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1979 (L.A. Bill No. 30 of 1979), as passed by the Assembly.

* 164. The Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1979 (L.A. Bill No. 31 of 1979), as passed by the Assembly.

* 165. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 26 of 1979), as passed by the Assembly.

£ 166. Speech of Hon. Thiru S. Ramachandran, Minister for Electricity, initiating the discussions on the Annual Financial Statements for 1978-79 and 1979-80 and the Supplementary Financial Statements for 1977-78 and 1978-79 of the Tamil Nadu Electricity Board. (Tamil and English).

* Laid on the Table of the House on 25th April 1979.

£ Circulated to all M.L.Cs. on 25th April 1979.

இணைப்பு I.

(168 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க)

சென்னை-12, எம். எஸ். முத்து நகர், சாஸ்திரி நகர் ஆகிய பகுதிகளில் வெள்ள நிவாரண உதவி அளிக்கக் கோரி புரசை-பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன் 5—3—1979 தேதியிலிருந்து தொடர் உண்ணா விரதம் இருந்தனர். இத்தொடர் உண்ணா விரதத்தினை, அப்பகுதி காமராஜ் தேசிய ஜனதா சேவா சங்கம், மக்கள் முன்னேற்ற சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், 'சர்வகட்சி'யினரின் முடிவுப்படி நடத்தினர் எனத் தெரிகிறது.

2. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில் இப்பகுதியில் குடிசைகள் கிடையாது, அங்குள்ள வீடுகள் அனைத்தும் தீப்பிடிக்காத வீடுகள் ஆகும், அவை வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை. ஆதலின் சாஸ்திரி நகரிலுள்ள 530 குடும்பங்களுக்கும், எம். எஸ். முத்து நகரிலுள்ள 640 குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிக்கப்படவில்லை என அறிவித்துள்ளார்.

3. முதல் சில நாட்களுக்கு, தொடர் உண்ணா விரதத்தில் மூன்று பேரிலிருந்து நாற்பது பேர் வரை பங்கேற்றனர். 12—3—1979 தேதிக்குப் பின் மூன்று பேர்களே தொடர் உண்ணா விரதத்திலிருந்தனர். இவர்களில் ஒருவர் பெண்களாகும். இந்த உண்ணா விரதத்தை 27—3—1979 அன்று முடித்து விட்டனர் என்றும், நிவாரணம் கோரி வட்டாட்சியரிடம் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இணைப்பு II

(169 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசு ஆணை எண். 41, நிதி 11—1—1977 இல் தற்காலிக அரசு ஊழியர்கள் 1—1—1974-க்குப் பின்பு ஒரு வருட பணி முடித்திருந்தால் அவர்களுக்கு அவர்களது ஓராண்டு பணி முடியும் இறுதி காலாண்டின் முதல் தேதியிலேயே ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கலாம் என்று ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் தற்காலிக அரசு ஊழியர்கள் அரசின் விதிகளில் கோரப்பட்டுள்ள அப்பதவி களில் முறையாக நியமிப்பதற்கான முழுத்தகுதிகள் பெற்றிருந்தால் மட்டுமே அவர்களது பணியை ஊதிய உயர்வுக்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளலா மெனவும் ஆணையிடப்பட்டுள்ளது. வேறு துறையில் அதிக ஊதிய விகிதம் பெற்று தற்காலிகமாகப் பணியாற்றும் அரசு ஊழியர்கள், தமிழ்நாடு பொதுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அப் பதவிகளில் அவர்கள் வரன்முறை செய்யப்படாமலிருந்தாலும், ஊதிய உயர்வுக் காக அவர்களது தற்காலிகப் பணியினைக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாணையில் அளிக்கப்பட்டுள்ள வசதிகள் 1—1—1974-ல் இருந்துதான் அமுலாக்கப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாடு கல்விச் சார்பு பணியின் தனி விதிகளின்படி பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது தகுதிகாண் பருவம் நிறைவு பெறுவதற்கு கீழ்க்காணும் இரண்டு துறைத் தேர்வுகளில் அவர்கள் தேர்ச்சி பெற வேண்டும் :—

1. பள்ளித் துணை ஆய்வாளர்களுக்கான துறைத் தேர்வு.

2. சார்பு நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு—பாகம் 1. விஷயமாயாக நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இத்துறைத் தேர்வு என்பதில் தேறியிருத்தல் வேண்டுமாதலால், அரசு ஆணை (நிலை) எண். 41, நிதி, 11—1—1977 இல் பிறப்பிக்கப்பட்டுள்ள சில சலுகைகள் அவர்களுக்குப் பொருந்தாது. தற்காலிக ஆசிரியர்களுக்கு மட்டுமே அவ்வாணை பொருந்தும்.

(3) பட்டதாரி ஆசிரியர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குட்பட்டதால், அக்குழு தேர்ந்தெடுக்கும் நபர்களையே முறையாக நியமனம் செய்ய இயலும். அரசு ஆணை நிலை எண் 2635, கல்வித்துறை, நாள் 21—12—1977 -ல் 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலும், 1973-74 ஆம் ஆண்டில் அரசினர் 'ஏ' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலும் தற்காலிகமாக

நியமனம் செய்யப்பட்டு பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் நேரடி நியமனத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் களின் பணியினை அவர்கள் தற்காலிகமாக பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து வரன்முறை செய்ய வேண்டுமென்றும் வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து அவர்களது ஊதிய உயர்வு நிலுவைத் தொகை முழுவதையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்துள்ளது.

(4) அரசுப் பள்ளிகளிலுள்ள தற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் 1973-74 ஆம் ஆண்டுகளில் தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஓராண்டு முடிந்ததும் இதர ஊழியர்களுக்கு வழங்குவது போல் முதல் ஊதிய உயர்வு வழங்கலாம் எனவும், இரண்டாவது மற்றும் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் அந்தந்த தேதிகளில் ஏற்பளிக்கப்பட்டு, அதனால் ஏற்படும் நிதி அனுகூலத்தை அவர்கள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்ற நாளிலிருந்து வழங்கலாம் என தனது சார்நிலை அலுவலர்களுக்குப் பள்ளிக் கல்வி இயக்குநர் சுற்றறிக்கை பிறப்பித்துள்ளார். தமிழ்நாடு கல்விச் சார்புப் பணி விதிகளின்படி அச் சுற்றறிக்கை சரியானதே. ஆகையினால் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத பட்டதாரி ஆசிரியர்கள், அவர்கள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, அவர்களுக்குத் தகுதிகாண் பருவம் நிறைவு பெற்று ஆணை வெளியிடப்பட்டதும் அவர்களுக்குச் சேர வேண்டிய ஊதிய உயர்வுகள் வழங்கப்படும்.

இணைப்பு III

(171 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குள்ளான காட்டூர் பகுதியில் காட்டூர் மகாஜன தொடக்கப்பள்ளி என்ற பெயரில் ஒரு தனியார் பள்ளி பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருந்தது. 1975-ம் ஆண்டில் அப்பள்ளியின் அங்கீகாரம் கல்வித் துறையினரால் ரத்து செய்யப்பட்டது. அதே ஆண்டில் அந்தப் பகுதியில் நகராட்சியால் நடத்தப்பெறும் ஒரு புதிய பள்ளியை ஏற்படுத்த நகராட்சி, கல்வித்துறையின் அனுமதியை நாடியது. பள்ளிக் கல்வி இயக்குநர் 4—6—1975 நாளிட்ட தனது நடவடிக்கை டி.டி. எண் 102486/75-ல் இந்தப் பள்ளியை நகராட்சி தொடங்க அனுமதி வழங்கி ஏற்கனவே மகாஜன தொடக்கப்பள்ளி மூடப்பட்டதால் வேலையிழந்த ஆசிரியர்களை அவர்கள் ஏற்கெனவே பெற்றுவந்த சம்பளத் தொகையில் குறைவு ஏதும் இல்லாமல் எடுத்து நடத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி அளித்தார். அதன்படியே மகாஜன பள்ளியில் வேலை பார்த்து வந்த எழு ஆசிரியர்கள் (வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒருவர் உட்பட) ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

அந்த வருடத்திற்கான தணிக்கை தடைகளில் மேற்கண்ட ஏற்பாடு குறித்தும் ஏற்கெனவே பணி நீக்கம் செய்யப்பட்ட ஒரு ஆசிரியரையும் சேர்த்து எடுத்துக் கொண்டதைக் குறித்தும் குறிப்புரைகள் தெரிவிக்கப்பட்டு எல்லாவற்றிற்கும் அரசினரின் பின் ஏற்பு ஆணைகள் பெறவேண்டுமெனக் குறிக்கப்பட்டன. ஆகவே அந்த ஆசிரியர்களுக்குரிய வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஆசிரியர்கள் பெற்றுவந்த சம்பளங்களை மூன்றாவது ஆணைக்குழுவின் புதிய சம்பள விகிதத்தின் அடிப்படையில் மாற்றி அமைத்து மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

தணிக்கைத் தடையில் வேண்டப்பட்டுள்ளபடி அரசின் அங்கீகார ஆணையை வெளியிட்டு ஆசிரியர்களின் பின்னிட்ட வருடங்களுக்கான வருடாந்திர உயர்வுகளையும் அதற்குரிய பாக்கித் தொகைகளையும் கணக்கிட்டு அளிக்கத் தக்கதாக அறிவுரைகளும் வழங்கப்பட இருக்கின்றன.

இணைப்பு IV

(173 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தொழிலாளர் நலத் துறை ஆணையரின் முன்னிலையில் 18—5—1977 அன்று தொழிற் தகராறு சட்டம் 1947-ன் பிரிவு 12 (3)-ன் கீழ் சேர்வராயன மலைப்பகுதி நீங்கலாக மற்ற காப்பி மற்றும் தேயிலைத் தோட்டங்களின் நிர்வாகத்தினர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் 3வது ஷரத்தின்படி ஒவ்வொரு ஏக்கர் நிலத்திற்கும் எத்தனை தொழிலாளிகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை ஆராய ஓர் தனி அலுவலரை நியமிக்கும்படி நிர்வாகமும் தொழிலாளிகளும் கேட்டுக் கொண்டனர். அக்கோரிக்கையை ஏற்று அரசு, எண். 408, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை தேதி 9—5—1978 அரசாணையில் "சேர்வராயன் மலைப்பகுதி நீங்கலாக" எனக் குறிப்பிட்டது. எனினும் சேர்வராயன் மலைப்பகுதி தோட்டங்களையும் தொழிலாளர்களையும் நிவ, தொழிலாளர் விசாரணையில் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கருதி அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, தனி அலுவலர் 1979-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரித் திங்களில் ஏற்காட்டுக்குச் சென்று தொழிலாளர் பிரதிநிதிகளையும் தொழிற் சங்க பிரதிநிதிகளையும் 12—1—1979, 26—2—1979 ஆகிய தேதிகளில் சந்தித்து அவர்களது ஆலோசனைகளையும் கேட்டு அறிக்கையும் சேகரித்துள்ளார். அவ்விதம் தோட்டங்களில் தனி அலுவலரை சந்தித்து நிலம்-தொழிலாளர் விகிதம் சம்பந்தமாக ஆலோசனைகள் தந்த தொழிற் சங்கங்களும் தொழிலாளர் பிரதிநிதிகளும் பின்வருமாறு:—

(1) திரு. எஸ். கந்தசாமி, உதவிச் செயலர், சேலம் டிஸ்ட்ரிக்ட் நேஷனல் ஒர்க்கர்ஸ் யூனியன், மஞ்சக்குட்டை அஞ்சல், ஏற்காடு.

(2) திரு. கே. சுந்தரராஜன், தலைவர், தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், ஏற்காடு.

(3) திரு. இ. எஸ். மணி, செயலர், சேர்வராயன் மலைத்தோட்டத் தொழிலாளர் சங்கம், ஏற்காடு.

(4) திரு. வி. எம். கலைமான், பொதுச் செயலர், சேர்வராயன் மலைத் தோட்டம் தொழிலாளர் சங்கம், காவேரி ரோடு, ஏற்காடு.

(5) திரு. ஆர். ராகவேந்திரன், பிளான்டேஷன் ஒர்க்கர்ஸ் யூனியன் டாக்டர் சுப்பராயன் ரோடு, சேலம்-1.

(6) திரு. அங்கமுத்து, சேலம் ஜில்லா தேசியத் தொழிலாளர் சங்கம், ரெவ்தான் எஸ்டேட், மஞ்சக்குட்டை அஞ்சல், ஏற்காடு.

(7) திரு. வி. கே. நல்லமுத்து, செயலர், நீலமலை பிளான்டேசன் ஒர்க்கர்ஸ் யூனியன், ஏற்காடு.

ஆகவே தோட்டங்களில் தனி அலுவலர் சிபாரிசில் சேர்வராயன் மலைப் பகுதியையும் சேர்த்துக் கொள்ளப்படும். இதற்கான திருத்தம் விரைவில் வெளியிடப்படும்.

இணைப்பு V.

(176 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கைகளையும் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதி நிலை அறிக்கைகளையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும், ஆண்டு நிதி நிலை அறிக்கையை நிதியாண்டின் மத்தியில் பேரவைமுன் வைப்பது வழக்கமாக உள்ளது. இதற்கிணங்க 1978-79 ஆம் ஆண்டின் அறிக்கை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாளன்று அவை முன் வைக்கப்பட்டது. ஆனால் இப்போது 1979-80 ஆம் ஆண்டின் அறிக்கை நிதியாண்டின் தொடக்கத்திலேயே மாண்புமிகு உறுப்பினர்களின் முன்னிலையில் உள்ளது.

2. தமிழ்நாடு மின் வாரியம், தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின்வாரியம் செயல்படுவது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை அரசும் வாரியமும் கவனத்தில் கொள்ளும். மின் வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றி இந்த அவையில் நடைபெற்ற விவாதத்தின் போது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின் மொத்த நிறுவுத் திறன் 2,509 மெகாவாட் ஆகும். இது 1977-78 ஆம் ஆண்டைக் காட்டிலும் 85 மெகாவாட்டும், 1976-77 ஆம் ஆண்டைக் காட்டிலும் 145 மெகாவாட்டும் உயர்ந்துள்ளது. 18 புனல் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் 1,369 மெகாவாட் மின் உற்பத்தியும் இரண்டு அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் 540 மெகாவாட் மின் உற்பத்தியும், மத்திய அரசு நிறுவனமான நெய்வேலி அனல் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் 600 மெகாவாட் மின் உற்பத்தியும் இதில் அடங்குகிறது. இது, தென் வட்டாரத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவுத் திறனில் சுமார் 40 சதவீதமாகும்; நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவுத் திறனில் 9 சதவீதமாகும்.

1978 ஆம் ஆண்டு நவம்பரில் மின்சார உச்சத் தேவை 1,779 மெகாவாட் அளவை எட்டியது; இது 1977-78 இல் 1,641 மெகாவாட் ஆகவும் 1976-77-இல் 1,313 மெகாவாட் ஆகவும் இருந்தது. தென் வட்டாரத்தில் மின்சார உச்சத் தேவையானது 1978 நவம்பரில் 4,004 மெகாவாட் ஆகவும் 1977-78 இல் 3717 மெகாவாட் ஆகவும் இருந்தது. தமிழ்நாட்டின் மின் இணைப்பின் உச்சத் தேவை தென் வட்டாரத்தின் உச்சத் தேவையில் சுமார் 44 சதவீதமாகும்.

1977-78-ல் மொத்த மின் உற்பத்தி 9,448 மில்லியன் யூனிட்டுகள் ஆகும்; இதில், வாரியம், உற்பத்தி செய்த மின்சாரம் 5,620 மில்லியன் யூனிட்டுகள். நெய்வேலி, கேரளம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கிய மின்சாரம் 3,828 மில்லியன் யூனிட்டுகள். 1976-77-ல் வாங்கப்பட்டது உட்பட 8,350 மில்லியன் யூனிட்டுகள் இருந்தது. 1977-78-ல் மொத்த மின் உற்பத்தி, தென் வட்டார மின் உற்பத்தியில் சுமார் 42 சதவீதமாகும். இம்மாநிலத்தின் மின்சார உச்சத் தேவை, மின் உற்பத்தி ஆகியவை நாட்டின் உச்சத் தேவையிலும் உற்பத்தியிலும், முறையே, 10.00 சத வீதமும் 9.57 சதவீதமும் ஆகும். மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி 34.09 இலட்சமாகும். அந்த எண்ணிக்கையில், விட்டுப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 18.58 இலட்சமும், வேளாண்மைப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை 8.06 லட்சமும், தொழில் மற்றும் எஞ்சிய பல்வகைப் பணிகளுக்காக, மின்சாரத்தைப் பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை 1.41 லட்சமும் ஆகும். நாளொன்றுக்கு செய்யப்படும் உயர்ந்தளவு மின் உற்பத்தி 32.67 மில்லியன் யூனிட்டுகள். வேளாண்மைத் துறையால் 24.0 சதவீத மின்சாரமும், தொழில் துறையால் 47 சதவீத மின்சாரமும், விட்டுப் பணிகளுக்காக 7 சதவீத மின்சாரமும், ஏனைய வகைப் பணிகளுக்காக எஞ்சிய சதவீத மின்சாரமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் மின் தொடர்புகள் உள்ளன. 2.94 இலட்சம் கிலோ மீட்டர் நீளத்திற்கு மின்சாரம் அனுப்பும் கம்பித் தொடர்களும் 324 கூடுதல் மிக உயர் அழுத்த/உயர் அழுத்த துணை மின் நிலையங்களும், 43,650 பங்கீட்டு மின் அழுத்த மின் மாற்றிகளும் இங்கு உள்ளன. மொத்த கிராமங்களில் சிற்றூர்களில் 98 சதவீதத்திற்கு மேற்பட்டு அதாவது 64,198 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும், 24,526 அரிசன குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு உயர்ந்தளவு எண்ணிக்கையான 8.43 இலட்சம் விசையேற்றங்களுக்கு மார்ச்சு 1979 வரை மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இது நாட்டில் உள்ள விசையேற்றங்களில் 24.57 சதவீதத்திற்கு ஒப்பாகும்.

4. மின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கான அவசியம் மாநில அரசின் கவனத்தில் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பெற்று வருகிறது. தற்போதுள்ள மின் நிலையங்களில் விரிவாக்கப்பணி, குந்தா மின் நிலையத்தின் 4ஆவது கட்டத்தின்கீழ் அண்மையில் முடிவடைந்தன. இதனால், மின் இணைப்பின் உச்ச திறன் 110 மெகாவாட் சேர்ந்துள்ளது. இவ்வாண்டு திட்டமிட்டபடி சுருளியாற்றில் 35 மெகாவாட் நிறுவுத் திறனுடன் ஒரு புதிய மின் நிலையம் ஒன்றும் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டத்தின் முதற் கட்டப் பணிகள் முன்னேற்றக் கட்டத்தில் உள்ளன. முதல் பிரிவு, இவ்வாண்டில் செயல்படத் தொடங்கும்.

5. 1978 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி, சுமார் 10,580 மில்லியன் யூனிட்டுகளாக உள்ளது. இது 1977 ஆம் ஆண்டில் இதே காலத்தில் 8,892 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது 18.98 சதவீத உயர்வினைக் காட்டுகிறது.

வருகிற ஆண்டுகளில் இம்மாநிலத்தில் 10லிருந்து 15 சதவீத மின்சக்தி அதிகரிப்புக்கான வாய்ப்பு உள்ளது. இந்த அம்சம் இந்திய அரசு அமைத்துள்ள 11ஆவது ஆண்டு மின் ஆய்வுக் குழுவின் ஒப்புதலுக்காக வலியுறுத்தப்படும்.

6. அமைக்கப்பட்டு வரும் மின் உற்பத்தி நிலையங்கள், செயல்பட்டு வரும் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்தையும் செயல் திறனையும் ஆய்வு செய்வதற்கென எனது தலைமையின்கீழ் அண்மையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அனல் மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தியை எந்த அளவு உயர்த்த இயலுமோ அந்த அளவுக்கு உயர்த்துவது பற்றி வாரியமும், அரசும் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றன. 450 மெகாவாட் திறனுள்ள எண்ணூர் அனல் மின் உற்பத்தி நிலையம், சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட பிறகு, தன் செயல் திறனைப் பெருக்கியுள்ளது. இந்த மின் உற்பத்தி நிலையத்தில் 1978ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாளன்று மின் உற்பத்தி மிக உயர்ந்த அளவான 440 மெகாவாட்டை எட்டியது. 1977-78ஆம் ஆண்டில் மின் உற்பத்தி 1,430 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. 90 மெகாவாட் திறனுள்ள பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தின் பழைய பிரிவுகளைப் புதுப்பித்ததன் மூலம் மேம்பாடுகள் செய்யப்பட்டு, 1977-78 ஆம் ஆண்டில், மின் உற்பத்தி அளவு 76.5 மெகாவாட் அளவை எட்டியது.

7. தூத்துக்குடி அனல் மின் திட்டம் (3 X 210 மெகாவாட்); சேர்வலாறு புனல்மின் திட்டம் (20 மெகாவாட்) ; காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் (4 X 100 மெகாவாட்); கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் (120 மெகாவாட்); சென்னை அணுமின் திட்டம் (2 X 235 மெகாவாட்) போன்ற நடந்தேறி வரும்

திட்டங்களை முடிப்பதன் மூலம் மாநிலத்தின் மின் உற்பத்தி நிலைமை மேலும் மேம்பாட்டையும், மாநிலத்தின் நீண்டகால மின் தேவையைக் கருத்தில் கொண்டு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட ஆறு திட்டங்களை நிறைவேற்றுவது தவிர 6-வது வரைவு திட்டத்தில் (1978-83) 17 புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தொடர்ந்து நிறைவேற்றி வரும் நான்கு திட்டங்களும் இந்த காலத்தில் முடிக்கப்படும். சென்னை அணுமின் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்க அனல் மின் நிலையம் ஆகிய இரண்டு மத்திய திட்டங்களும் மாநிலத் திட்டத்தில் அடங்கா. மேற்சொன்ன திட்டங்களின் மொத்த நிறுவனத் திறன் 5,503 மெகாவாட்டாகும். இதில் 2,095 மெகாவாட் திறன் 6-வது திட்டத்தில் சேர்க்கப்படும். எஞ்சிய 3,408 மெகாவாட் 6 ஆவது திட்டத்திற்குப் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும்.

8. திட்ட ஆணைக் குழுவிடமிருந்து இசைவு கிடைக்கப் பெறுவதை எதிர்பார்த்து, கீழ் மேட்டூர் புனல்மின் திட்டப் பணிகள் (120 மெகாவாட்) எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேல் அமராவதி புனல் மின் திட்டம் (30 மெகாவாட்), சண்முகாநதி புனல் மின் திட்டம் (30 மெகாவாட்) ஆகியவற்றிற்காகத் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதல் விரைவில் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9. ஆறாவது, ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரத்தை அனுப்புதல்-வழங்குதல் திட்டத்தின் கீழ் 100-க்கு மேல் கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களை நிறுவக் கருதப்படுகிறது. இவற்றில் 400 கே. வி. திறன் கொண்ட 730 கிலோ மீட்டர் தூரம் உள்ள 6 மின் கம்பித் தொடர்களும், 230 கே. வி. திறன்கொண்ட 1,040 கிலோமீட்டர் தூரம் உள்ள 20 மின் கம்பித் தொடர்களும் அடங்கும். மாநிலத்தில் முதன் முதலாக 400 கே. வி. திறன் கொண்ட மின் கம்பித் தொடர்கள் அமைக்கப்படும். இவை உபரியான மின்சாரத்தை ஆந்திரப் பிரதேசத்திலிருந்து பெறுவதற்கு நமக்கு உதவி புரிவதோடு, இயக்குதலை நிலைப்படுத்தவும் இது உதவும். 400 கே. வி. திறன் கொண்ட 5 மின் நிலையங்கள், 230 கே. வி. திறன் கொண்ட 27 மின் நிலையங்கள் உட்பட பல கூடுதல் உயர் அழுத்த மின் நிலையங்கள் அமைக்கப்படும்.

10. மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல்-வழங்குதல் பணிகளைச் செவ்விய முறையில் வலுப்படுத்துவதற்கான தேவையைக் கருத்தில்கொண்டு, அண்மையில் மூன்று புதிய வட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒன்று 400 கே. வி. மின் திட்டத்திற்கான அமைப்பாகும். புதிய மின் பகிர்ந்தளிப்பு... புதிய மின் பங்கீட்டுத் திட்டம் ஒன்று புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

[1979 எப்ரல் 26

11. மின்சாரத் திட்டங்களுக்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு 1,095 ரூபாய் ஆகும். அதன் விவரம் பின் வருமாறு :—

	(ரூபாய் கோடியில்)
மின் உற்பத்தி	708
மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல் வழங்குதல்.	225
கிராமப்பகுதி மின் இணைப்புத் திட்டங்கள்	125
ஏனையவை	37
மொத்தம் ..	1,095

12. 1977-78 ஆம் ஆண்டிற்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு 89.64 கோடி ரூபாய் ஆகும். ஆனால், 1978-79-ல் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு 118.86 கோடி ரூபாய் ஆகும். 1979-80 ஆம் ஆண்டுக்கு 152.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. இதன் விவரம் பின் வருமாறு :—

இனங்கள்.	1977—78 (கணக்குகள்).	1978—79 திருத்த மதிப்பீடு.	1979—80 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கக் கருதியுள்ள மொத்த நிதி ஒதுக்கம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் கோடியில்)		
மின் உற்பத்தி ..	55.90	66.00	86.00
மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல் —வழங்குதல்	19.75	30.00	47.00
கிராமப்பகுதி மின் இணைப்புத் திட்டங்கள்	13.76	20.00	19.00
ஏனையவை	0.25	2.86	..
மொத்தம் ..	89.64	118.86	152.00

1979 எப்ரல் 26]

13. 1979-80 ஆம் ஆண்டில், மின் உற்பத்தித் திட்டங்களின்கீழ் அதிக அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் திட்ட இரண்டாவது நிலைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது 47 கோடி ரூபாய் ஆகும். மூலதனச் செலவு 152 கோடி ரூபாய், அரசிடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 90 கோடி ரூபாய், வெளியிலிருந்து கிடைக்கும் கடன் தொகையான 40 கோடி ரூபாய், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 7.70 கோடி ரூபாய், கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 2.66 கோடி ரூபாய் ஆகியவற்றைக் கொண்டும், எஞ்சியுள்ள தொகையை வாரியத்தின் உள் நிதி வாயில்களிலிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் பெறுவதன் மூலமும் சரிக்கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

14. 1977 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களுக்கு வரப்பெற்ற நீரின் அளவு 3,801 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தி உற்பத்திக்குரிய அளவாகும். ஆனால், 1978 ஆம் ஆண்டில் வரப்பெற்ற நீரின் மொத்த அளவு 4,051 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்திக்குரிய அளவாகும். 1977 ஆம் ஆண்டில் ஜூன், அக்டோபர், டிசம்பர் ஆகிய திங்கள்களின் முதல் நாளில் நீர்த் தேக்கங்களில் இருந்த நீர் அளவு முறையே 140 மில்லியன் யூனிட்டுகள், 1,003 மில்லியன் யூனிட்டுகள், 1,532 மில்லியன் யூனிட்டுகள், மின் உற்பத்திக்குரிய அளவு ஆகும். ஆனால், இதற்கு நிகரான கால அளவில் 1978-ல் நீர்த் தேக்கங்களில் இருந்த நீர் அளவு முறையே 226 மில்லியன் யூனிட்டுகள், 1,363 மில்லியன் யூனிட்டுகள், 1,643 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்திக்குரியதாகும்.

15. தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாடு 1978 ஆம் ஆண்டு கோடைக் காலத்தை மின்வெட்டு எதுமின்றி சமாளிக்க முடிந்தது. இது முந்தைய ஆண்டில் இருந்த நிலைமைக்கு எதிரிடையானதாகும். 1971-72-லிருந்து ஜூன் 1977 வரை தொழில் துறைகள் மீது அதிக அளவிற்கு மின் வெட்டு செய்யப்பட்டது. 1975-ல் தொழில், வணிக நிறுவனங்களின் மீது 75 சதவீதம் வரையில் மின்வெட்டுச் செய்யப்பட்டது.

சோதனை அடிப்படையில் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளிலிருந்து வேளாண்மைக் காரியங்களுக்காகவும், கிராமத் தொழில்களுக்காகவும் வழங்கப்படும் மின் சுமையில் தொகுப்புக் கட்டுப்பாடு விதிப்பதை நீக்கப்பட்டது. குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மீது விதிக்கப்பட்டிருந்த காலை நேரத்து உச்ச சுமை கட்டுப்பாடு

தளர்த்தப்பட்டது. இருப்பினும், கன்னியாகுமரி, இராமநாதபுரம், தருமபுரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மின் வழங்கு திட்டங்கள் நீங்கலாக ஏனைய மின் வழங்கு திட்டங்கள் அனைத்திலும் இக்கட்டுப்பாட்டை, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் நாளிலிருந்து மீண்டும் கொண்டுவர வேண்டியதாயிற்று. ஆனாலும் மின் உச்சத் தேவையில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் முதல் உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழில்களில் தொடர்ந்து மின்சாரம் பயன்படுத்தும் தொழில்களுக்கு 15 சதவீதமும், தொடர்ந்து மின்சாரம் பயன்படுத்தா தொழில்களுக்கு 30 சதவிதமும் உச்சத் தேவை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பயன்படுத்தும் மின்சார அளவில் வெட்டு ஏதும் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை.

16. அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறுவதற்குச் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கருநாடக மாநிலத்தில் மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளதால் 1978 மே திங்களிலிருந்து கருநாடக மாநிலமும் தமிழ்நாடும், கேரளா மாநிலத்திலிருந்து கிடைக்கப்பெறும் உபரியாக உள்ள மின்சாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. கருநாடக மாநிலத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் இடையே 230 கே. வி. திறன் கொண்ட மின் கம்பித் தொடர் புதிதாக அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. கேரளத்திலிருந்து வாங்குவதற்காகத் தமிழ்நாட்டிற்கும், கேரளத்திற்கும் இடையே செய்து கொண்ட மூன்றாண்டுக் கால ஒப்பந்தம் 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாளில் முடிவடைந்து விட்டது. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12 ஆம் நாளிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கான ஒரு புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை 16 காசுகள்; தவிர மின்சாரத்தின் மீதான மத்திய ஆயத்தீர்வை இரண்டு காசுகள். 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 1979 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் வரையுள்ள காலத்தில் தன்னிடம் உபரியாகும் என கேரளா மதிப்பிடு செய்துள்ள மின்சாரத்தின் அளவு 1,500 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். இதில் 1,200 மில்லியன் யூனிட்டுகளைத் தமிழ்நாட்டிற்குத் தர கேரளா ஒத்துக் கொண்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாளுக்குப் பிறகு தமிழ்நாட்டிற்குத் தருவதற்காக உள்ள உபரி மின்சாரம் பற்றி விரைவில் மதிப்பாய்வு செய்யப்படும்.

ஆந்திரப் பிரதேசம் திங்கள் ஒன்றுக்கு 20 மில்லியன் யூனிட் வீதம் 6 திங்களுக்கு 1979 ஜுன் முடிய வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. ஆந்திரப் பிரதேச மாநில மின்சார வாரியத்திற்குத் தேவைப்படும் E.G. தர அலுமினியத்தை மால்கோவிடமிருந்து வழங்குவதற்குப் பதிலாகவே இந்த மின்சாரம் பெறப்படுகிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் இராமகுண்டம் உயர் அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்திலிருந்து நியாயமான பங்கு அளவைப் பெறுவது குறித்து இந்த அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டுள்ளது.

17. தமிழ்நாட்டில் 12 இலட்சம் வேளாண்மைக் கிணறுகளுக்கு உரிய மின்சார விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குதல் என்று திட்டமிட்டதில் சுமார் 8.43 இலட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரி வந்த விண்ணப்பங்களில் 2.5 இலட்சம் விண்ணப்பங்கள் குறித்து இன்னும் மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. இத்தேக்கத்தை விரைவாகப் போக்கும் நோக்கோடு, விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்து கொள்கைகள் நடைமுறைகளை வாரியம் திருத்தி அமைத்துள்ளது. இதுவரையில், மின் இணைப்பு வழங்குவதற்கான திட்டங்களின் பேரில் 10 சதவீத வருவாய் கிடைக்க வேண்டும் என்று வாரியம் வலியுறுத்தி வந்தது. இது, வாரியத்தின் சில பணியாளர்களிடையே விரும்பத்தகாத குறிப்பிட்ட சில நடைமுறைகளை ஊக்குவித்ததால், வாரியம் வேளாண்மைத் துறைக்கு இயலுகின்ற எல்லா ஊக்கத்தையும் அளிக்கும் நோக்கத்துடன், மேற்சொன்ன இந்த வரையறையை வருங்காலத்தில் வலியுறுத்துவதில்லை என்று தற்போது தீர்மானித்துள்ளது. 1978 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் உள்ள விண்ணப்பங்கள் அனைத்தும் நிறுவன நிதி உதவி பெற்ற விண்ணப்பங்கள் வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களின் கீழ்வரும் விண்ணப்பங்கள் ஆகியவற்றிற்கு, உயர் முன் உரிமை வழங்கப்படுவதற்கு உட்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படும். 1978 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 1 ஆம் நாளிலிருந்து புதிய விண்ணப்பங்கள் அனைத்தும் மனு செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு முடிவு செய்யப்படுகிறது. இருப்பினும், கம்பம் நடுதல், மின் மாற்றிகளின் திறனை அதிகரித்தல், பீடர்களை இரட்டித்தல், கண்டக்டர்களை வலுப்படுத்துதல், கம்பித் தொடரை விரிவாக்குதல் முதலிய பணிகள் இல்லாமல் இருக்கும் மனுக்கள் தனியாக பதிவு செய்யப்பட்டு, மின் இணைப்பு நேரடியாக வழங்கப்படும்.

18. 1978-79-ல் 2,35.16 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்றும், 1,94.56 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்றும், மதிப்பிடப்பட்டது. நெய்வேலி மின்சக்திக்கு 61.39 கோடி ரூபாய் செலவாகும் என்றும் கேரளத்திலிருந்து வாங்கப்படும் மின்சாரத்திற்கு 26.32 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அனல் மின் நிலையங்களுக்கு தேவைப்படும் எரிபொருள்களுக்கு 31.28 கோடி ரூபாய் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டது. இயக்குதல், பராமரித்தல், நிறுவுதல் ஆகியவை குறித்து மொத்தம் 76 கோடி ரூபாய் செலவாகும். தேய்மான சேமநிதி 21.53 கோடி ரூபாய், 3.16 கோடி ரூபாய் நிலுவைத் தொகையில் 0.04 கோடி ரூபாய் பொது சேமநிதியாக வரையறை செய்யப்பட்டது. அரசுக்குச் சேரவேண்டிய 22.22 கோடி ரூபாய் வட்டித் தொகையை வருவாய் கொண்டு சரிக்கட்ட இயலாது. 1979-80-ல், வருவாய் ரூபாய் 2,54.38 கோடி மற்றும் செலவு ரூபாய் 2,30.61 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மின்சார வாரியம் தனது கடன்களின் பேரில் செலுத்த வேண்டிய வட்டி பொருப்புகளுக்கும், பொது தேய்மான சேமிப்பு நிதிகளுக்கு செலுத்தவேண்டிய நிதி ஒதுக்கீடுகளை செய்தால் ரூபாய் 48.66 கோடி துண்டு விழும்.

19. அண்மை ஆண்டுகளில் மூலப் பொருட்களின் விலை திடீரென உயர்ந்ததன் காரணமாக, வாரியத்தின் நிதிநிலை பாதிக்கப்பட்டுள்ளது. 1972-73-ல் டன் ரூபாய் 76 ஆக இருந்த நிலக்கரி விலை தற்போது டன் ரூபாய் 137 ஆக உயர்ந்துள்ளது. 1972-73-ல் கிலோ லிட்டர் ரூபாய் 304 ஆக இருந்த எரி எண்ணெய் விலை தற்போது கிலோ லிட்டர் ரூபாய் 1,017 ஆக உயர்ந்துள்ளது. 1972-73-ல் யூனிட் 8.1 காசாக இருந்த நெய்வேலி மின்சக்தி கட்டண வீதம் தற்போது யூனிட் 16.12 காசாக உயர்ந்துள்ளது. நெய்வேலியில் எண்ணெய் மூலம் எரியூட்டப்பட்டு உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியின் விலை யூனிட் ஒன்றுக்கு 42 காசாகும். 1972-73-ல் யூனிட் ஒன்றுக்கு 6.25 காசாக இருந்த கட்டண விதத்தை ஒப்பிடுகையில், 1979ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் அன்று முடிவடைந்த ஒப்பந்தம் ஒன்றின்கீழ் கேரளா வழங்கிய மின் சக்திக்கான கட்டண விதம் யூனிட் ஒன்றுக்கு 12.5 காசாக இருந்தது. இனி வரும் ஆண்டுகளில் நம்முடைய மின் இணைப்பு ஏற்பாட்டின்கீழ் கிடைக்கும் அனல் மின் சக்தியின் பங்கு அளவு அதிகமாகவே இருக்கும். அதன் விளைவாக மின் உற்பத்திக்கான செலவு உயர்ந்தே இருக்கும். யூனிட் ஒன்றுக்கு 2 காசு என்னும் விதத்தில் மின் உற்பத்திக்காக இந்திய அரசு விதித்த மத்திய ஆயத் தீர்வையும் இந்த வாரியம் செலுத்தி வருகிறது. இவ்வாறு செலுத்தப்படுகிற ஆயத் தீர்வை ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய்க்கும் அதிகமாகிறது. இவ்வாறு மின் உற்பத்திச் செலவு பெருமளவில் உயர்ந்திருப்பினும் மாநில அரசு

பின்பற்றும் கொள்கையின் காரணமாக, விவசாயிகள், மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்தும் தொழிற்சாலைகள், வீட்டுப்பயனீட்டாளர்கள் ஆகியோருக்குக் குறைந்த கட்டணத்தில் வாரியம் மின்சாரம் வழங்கி வருகிறது.

20. இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்னர், வேளாண்மைக் காரியங்களுக்காக மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு 1975 செப்டம்பர் திங்கள் 1ஆம் நாள் முதல் மின்சக்திக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 16 காசாக உயர்த்தப்பட்டிருந்தது. விவசாயிகளின் இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, யூனிட் ஒன்றுக்கு 16 காசாக இருந்த மின் கட்டணத்தை 1977 ஜூலை 1ஆம் நாளிலிருந்து சிறு விவசாயிகளுக்கு 14 காசாக இந்த அரசு குறைத்தது. இதனை மேலும் பரிசீலனை செய்து, வேளாண்மைத் துறைக்குக் கணிசமான அளவிற்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு மின் கட்டணத்தை 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாளிலிருந்து சிறு விவசாயிகளுக்கு 14 காசிலிருந்து 12 காசாகவும், ஏனைய விவசாயிகளுக்கு 16 காசிலிருந்து 14 காசாகவும் இந்த அரசு குறைத்துள்ளது. வேளாண்மை பம்பு செட்டுகளுக்கான மீட்டர் வாடகை மாதமொன்றுக்கு ரூபாய் 5லிருந்து ரூபாய் 4 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகைகள் வகையில் வாரியத்திற்கு ஆண்டொன்றுக்குத் தோராயமாக 7 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்படுகிறது.

தற்சமயம் 130 குதிரைத் திறனுக்கு அதிகமான மின்பளு, உயர் அழுத்தமாக கருதப்படுகிறது. இதற்கிணங்க மாநிலத்தில் உள்ள 130 குதிரைத் திறனுக்கு அதிகமாக மின் பளுகொண்ட நீரேற்று பாசன கூட்டுறவு சங்கங்களுக்கு உயர் அழுத்த மின் கட்டணம் II விதிக்கப்படுகிறது. இதன்படி இச்சங்கங்களுக்கான மொத்த யூனிட் கட்டணம் 35 காசு முதல் 37 காசு வரையாகும் ஆனால் இச்சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கான சலுகை கட்டணத்தின் நன்மை கிடைக்க வேண்டுமென அரசு கருதுகிறது. இதற்கிணங்க 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் முதல் இச்சங்கங்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 14 காசு என்ற வீதம் அறிவிக்கப்பட்டுள்ளது.

21. மின் கம்பித் தொடரில் ஏற்படும் மின்சக்தி இழப்புகள் அனைத்து மின் வாரியங்களுக்கும் ஒரு தொல்லை தரும் பிரச்சினையாக இருக்கிறது. இந்த மின்சக்தி இழப்புகளை மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கும் பொருட்டு இந்த வாரியம் போராடிக்கொண்டு வருகிறது. மின்கடத்தி மின் பங்கீடு ஏற்பாடு முறையில் மேம்பாடுகள் செய்வதன் மூலம், தொழில் நுட்ப வகையில்

[1979 ஏப்ரல் 26

ஏற்படும் இழப்புகள் சரி செய்யப்படுகின்றன. மின்சாரம் திருடுவதையும் மின் கட்டண மோசடியையும் கண்டுபிடித்துத் தடுக்க மின் இணைப்புகள் குறித்து முறையான திடீர்ச் சோதனைகள் நடத்துவது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில், 35.58 இலட்சம் சோதனைகள் செய்யப்பட்டன. மின் சக்தி திருடுபோதல், மின் கட்டண மோசடி ஆகியவற்றைக் கண்டுபிடித்த வகையிலே ரூபாய் 33.31 இலட்சம் வருவாய் ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டது. இந்த நடவடிக்கைகளால், 1973-74-ல் 21.4 சதவீதமாக இருந்த மின்கம்பித் தொடர் மின்சக்தி இழப்புகள் 1977-78-ல் 18.6 சதவீதமாகக் குறைந்துள்ளன. நமது நாட்டிலேயே தமிழ்நாடு மின்வாரியம் மிகப் பரந்த மின்கம்பித் தொடர்களைக் கொண்டுள்ளது என்பதனால் ஏனைய பிற மாநிலங்களில் உள்ள நிலையுடன் ஒப்பிடுகையில் மின் சக்தி இழப்புகளில் நமது நிலை நியாயமான அளவிலேயே உள்ளது. ஆனாலும் வாரியம் தன் முயற்சிகளில் ஓய்ந்திருக்கப் போவதில்லை.

22. வாரியத்தை எதிர்நோக்கியுள்ள வேறு இரண்டு பிரச்சினைகள் என்னவெனில், மின்சுமை ஏறும் உச்ச கட்ட நேரங்களில் குறைந்த வோல்டேஜ்களும், இரவு நேரங்களில் அதிக வோல்டேஜ்களும் ஏற்படுகின்றன. கூடுதலாக உயர் அழுத்த துணை மின் நிலையங்களில் உடனடியாக மாறக்கூடிய மின் அழுத்த மாற்றி இயந்திரங்களை நிறுவும் பணியை வாரியம் தொடங்கியுள்ளது. கூடுதல் உயரழுத்த மின் நிலையங்கள் அனைத்திலும் மின் அழுத்த மாற்றிகளை அமைப்பதற்கு, முறையான படிப்படியாக அமைந்த திட்டமொன்றுள்ளது. ஏற்கெனவே இந்த மின் அழுத்த மாற்றிகள் 43 துணை மின் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 77 துணை மின் நிலையங்களில் மின் அழுத்த மாற்றிகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது குறைந்த மின் அழுத்த நிலைமை இருப்பதை இது மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின்சாரம் அடிக்கடி நின்று மின் தடைகள் ஏற்படுவதைக் குறைக்கும் பொருட்டுப் பல்வேறு நிலைகளில் மின் கம்பித் தொடர்களையும் உபகரணங்களையும் நன்கு பராமரித்து வருவதற்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு மின் ஏற்பாடுகளுக்கான மேம்பாட்டுச் செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

23. மின் வாரியம் தெரு விளக்குகளை நன்கு பராமரித்து வராததுபற்றி உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து தொடர்ந்து பல புகார்கள் வந்ததன் விளைவாகத் தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு, 1977 ஆம் ஆண்டு மே திங்களில் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் நினைவு கூர்தல் வேண்டும். இருப்பினும், தெரு

1979 ஏப்ரல் 26]

விளக்குகளைப் பராமரிக்கும் பணி நன்கு கவனிக்கப்பட வேண்டியுள்ளது. தெரு மின் விளக்குகளின் பராமரிப்பு பற்றி அனைத்து சாத்தியக் கூறுகளையும் பரிசீலனை செய்து புதிய வழிமுறைகளை அரசு தற்போது வகுத்துள்ளது.

பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான பல்புகள் மற்றும் குழல் விளக்குகளை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் வாங்கி வழங்கும். நகராட்சிகளுக்குத் தேவையான பல்பு மற்றும் குழல் விளக்குகளை அவையே வாங்கிக் கொள்ளும். பழுதடைந்த பல்பு மற்றும் குழல் விளக்குகளை மாற்றியமைக்கும் பொறுப்பு மின் வாரியத்தையே சாரும். இவ்வாறு மாற்றியமைக்கும் ஒவ்வொரு பல்புக்கும் 50 காசு விதமும் குழல் விளக்குக்கு ரூபாய் 1 விதமும் பெற மின்வாரிய தொழிலாளிகள் தகுதியுடையவராவர். இந்த மாறுதலுக்குட்பட்டு இவை "பியூஸ் ஆப்-கால்" ஆகக் கருதப்படும். மேற்கண்ட விதத்தில் மின்வாரியத்தின் பிரிவு அலுவலர் மின்வாரிய தொழிலாளிக்கு பல்பு மற்றும் குழல் விளக்குகளை மாற்றி அமைப்பதற்கான தொகையை வழங்குவர். பிறகு இது மின் கட்டண பில்லுடன் சேர்க்கப்படும்.

24. மின்சாரப் பயனீட்டாளர்களிடம், மூன்று திங்களுக்குப் பயன்படுத்தப்படும் உயரளவு மின்சாரத்திற்காகும் கட்டணத்திற்குச் சமமான ஒரு தொகையை பிணைய வைப்பீட்டுத் தொகையாக செலுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை காரணமாக, தொழிற்சாலைகள் சிலவற்றுக்கு இன்னல் விளைந்துள்ளது. இதனால் தொழிற்சாலைகள், கணிசமான அளவு மூலதனத்தை மின்வாரியத்திடம் போட்டு வைக்க வேண்டியுள்ளது. இந்த தொழிற்சாலைகளுக்கு இதனால் ஏற்பட்டுள்ள இன்னல்களைப் போக்கும் கருத்துடன் அரசு, உயரழுத்த மின்சாரப் பயனீட்டாளர்களிடம் முந்தைய 12 மாத கால அளவில் 3 திங்கள் உயரளவு மின் பயனுக்கான கட்டணத் தொகையைப் பிணையமாகக் கேட்பதற்குப் பதிலாக 1½ திங்கள் உயரளவு மின் பயனுக்கான தொகையைப் பிணைய வைப்பீட்டுத் தொகையாக வசூலிக்கலாம் என்று நவம்பர் 1978-ல் ஆணையிட்டது. இத்தகைய தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்ட மின் அமைப்பைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு திங்கள் முடிந்து மூன்று நாட்களுக்குள் பயன்படுத்தப்பட்ட மின் அளவைக் கணக்கிட வேண்டுமென்றும், அந்த இடத்திலேயே மின் கட்டணப் பட்டியல்கள் கொடுக்கப்பட்டு 15 நாட்களுக்குள் பட்டியலுக்குரிய தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த பயனீட்டாளர்களைப் பொறுத்தமட்டில், பிணை வைப்பீட்டுத் தொகையைக் குறைத்ததன் காரணமாக வாரியத்தின் நலன் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இந்த ஏற்பாடு உறுதியளிக்கும்.

25. மின்சாரப் பயனீட்டாளர்கள் பெருமளவிற்கு மனநிறைவு அடைவதற்கு உறுதி செய்யும் பொருட்டு இதேபோன்று அந்தந்த இடத்திலேயே மின் கட்டணப் பட்டியல்கள் கொடுக்கப்படும் முறை, செயலாக்கப்படுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

26. தற்போது மின் சப்ளை பெறுவதற்கு தனித்தனியே மீட்டர் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற விதி இருப்பதால் குடிசைவாசிகள் மின் சப்ளையை பயன்படுத்திக்கொள்ள சிரமமாகக் கருதுகின்றனர். எனவே, குடிசைவாசிகள் விரும்பினால் தனித்தனியே மீட்டர் வைக்காமல் மின்சப்ளையை கொடுத்து ஒத்தவீத அடிப்படையில் மின் கட்டணம் வசூலிக்க அரசு முடிவு செய்துள்ளது. தற்போதைக்கு இத்திட்டம் கிராமப்புறங்களில் மட்டும் செயலாக்கப்படும். இத்திட்டத்திற்கு ஒரு குடிசை என்பது 200 சதுர அடிக்கு அதிகப்படாமல் மண் சுவரும் கீற்றுக் கூரையும் கொண்ட வசிக்கும் இடமாகும். இத்திட்டத் தின்கீழ் ஒரு விளக்கு மட்டும் அனுமதிக்கப்படும். மின் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2-50 (ரூபாய் இரண்டும் ஐம்பது காசும்) ஆகும். வைப்புத் தொகையான ரூபாய் 2-50 (ரூபாய் இரண்டும் ஐம்பது காசும்) வசூலிக்கப் படும். பயனீட்டாளர்கள் விரும்பினால் ரூபாய் 10 வசூலித்துக் கொண்டு குடிசையில் உட்பகுதியில் ஒரு விளக்குக்கான ஒரு முனை ஒயரிங் செய்து ஒரு பல்பும் மின்வாரியம் வழங்கும்.

27. வாரியத்தின் சாதனைகள், மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் களால் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பதிலும், வாரியம் தனது நிர்வாகத் திறமையை வளர்க்கும் வகையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் கருத்துரைகளையும், ஆலோசனைகளையும் பெறவேண்டுமென்பதிலும் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. இவ்வகையில் முதற்படியாக அரசு என்னுடைய தலைமையின்கீழ் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் 21 பேர் கொண்ட மின் சாரம் பற்றிய ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

28. கிராமப்புறங்களுக்கு மின்சக்தி பகிர்ந்தளிப்பதைப் பரவலாக்குதலை. யும், கிராமப்புறங்களுக்கு மின் வசதி வழங்க வகை செய்வதையும், ஒருங் கிணைந்த பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்வதையும் தனது நோக்க மாகக் கொண்ட கிராமப்புற மின்சக்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு, கிராமப்புற மின் வசதிக் கழகம் நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்த அரசு முடிவு செய்து இம்மாநிலத்தில் முன்னோடித் திட்ட அடிப்படையில் இரண்டு கிராமப்புற மின்வசதிக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஆணையிட்டுள்ளது. இச்சங்கங்களில் ஒன்று

கோயம்புத்தூர் மாவட்டம், சூடியலூர் என்னுமிடத்திலும் மற்றொன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணத்திலும் செயல்படும். இச்சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் மூலதனச் செலவாக சுமார் ரூபாய் 150 இலட்சம் செலவாகும். கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து கடனாக ரூபாய் 90 இலட்சம் பெறப்படும். மாநில அரசு ரூபாய் 35 இலட்சம் வழங்கும். மின்சாரவாரியம் ரூபாய் 15 இலட்சம் வழங்கும். உறுப்பினர் களிடமிருந்து ரூபாய் 10 இலட்சம் பெறப்படும்.

29. மத்திய அரசு, 1978-79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1—3—1978 ஆம் நாளிலிருந்து உற்பத்தியாகும் ஒவ்வொரு யூனிட் மின்சாரத் திற்கும் 2 காசு என்ற வீதத்தில் ஆயத்தீர்வை விதிக்க முடிவு செய்திருந்தது. அவ்வாறு தீர்வை விதிப்பதற்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. மின்சாரக் கட்டண உயர்வு மூலமாகக் கிடைக்கும் கூடுதல் வருவாய், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் திட்டங்களுக்கும் மாநிலத் திட்டத் திற்கும் ஒரு நிதி ஆதாரமாக முழு அளவில் கிடைத்து வந்திருந்தது என்றும் புதிதாகத் தீர்வை விதித்ததினால் இந்த வருவாய் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக் காட்டி நமது முதலமைச்சர் இவ்வாறு தீர்வை விதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதமருக்கும், மத்திய நிதி அமைச்சருக்கும் கடிதம் எழுதினார். மத்திய அரசு மாநிலங்களுக்குக் கூடுதலான நிதி ஆதாரங்களை மாற்றவேண்டும் என்று மாநிலங்களெல்லாம் வற்புறுத்தி வருகின்ற நேரத்தில் இவ்வாறு தீர்வை விதிப்பதனால், அந்த நிலை மாறி, மின்சார வாரிய நிதி ஆதாரங்கள் மத்திய அரசுக்கு செல்கின்றன என்பதையும் முதல் அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மத்திய அரசு இந்த முறையீடுகளுக்குச் செவிசாய்த்து, மின்சார உற்பத்தியின் மீதான ஆயத்தீர்வையின் மூலம் கிட்டும் நிகர வருவாயை மாநிலங்களுக்கு மாற்றுவதென தற்போது முடிவு செய் துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனினும் 1—3—1978 முதற்கொண்டு மேற்கண்டவாறு ஆயத் தீர்வை விதிக்கப்பட்டு வருகின்றபோதிலும், அதன் மூலம் கிடைக்கும் நிகரவருவாய் 1—4—1979-லிருந்துதான் மாநிலங்களுக்கு மாற்றப்படும் என்று தெரிகிறது. இந்த முடிவை மறு பரிசிலனை செய்ய வேண்டுமெனக் கேட்டும் 1—3—1978-லிருந்தே அதனைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டுமெனக் கோரியும் நமது நிதி அமைச்சர் அவர்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதி யுள்ளார்கள்.

30. மின்சாரக் கட்டணப் பாக்கி காரணமாக மின்சார வாரியம் கடுமை யான இக்கட்டுக்குள்ளாகியுள்ளது. அவற்றை வசூலிக்க சிவில் நீதி மன்றங் களில் வழக்குத் தொடர்வது அலைக்கழிப்பதாக இருப்பதுடன், நீண்ட

காலமும் ஆகிறது. மின் இணைப்புத் துண்டிக்கப்படும் என்ற அச்சுறுத்தல் போதிய பலன் அளிப்பதில்லை. அதுவுமில்லாமல், பொது நன்மையைக் கருதிப் பார்க்கும்போது அவ்வாறு துண்டிப்பது எல்லா சமயங்களிலும் சாத்தியமும் அல்ல. இந்த நிலையை மாற்றிச் சீர்படுத்துவதற்காக வரி வசூல் சட்டத்தின் விதிமுறைகளைப் பயன்படுத்த வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மின்சார வாரிய (பாக்கித் தொகையை வசூலித்தல்) சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

31. தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) சட்டத்தின்கீழ் அறிவிப்புகள் வெளியிட்டு மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டணமும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான பல்வேறு வரைமுறைகளும் கட்டுப்பாடுகளும் அவ்வப்போது அரசால் வரையறுக்கப்பட்டு வந்தன. மின்சார உற்பத்தியின் மீது மத்திய அரசு ஆயத்தீர்வை விதித்தபோதும், இதற்குக் கடந்த ஒரு தேதியிலிருந்து செயல் வடிவம் கொடுத்து, தீர்வை விதிக்கப்படுகின்ற நாளிலிருந்து நுகர்வோருக்கு மாற்ற வேண்டிய அவசியம் வாரியத்திற்கு ஏற்பட்டபோதும், ஒரு தனிச் சட்டம் இல்லாமல், கடந்த ஒரு தேதியிலிருந்து கட்டணம் வசூலிக்கவியலாது எனத் தெரிய வந்தது. எனவேதான், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைக்க தற்போது விதிக்கப்படுகின்ற எல்லாக் கட்டணங்களையும் குறிப்பிட்டு விரிவானதொரு சட்டமாக இயற்றியது. இதற்கிடையில், தற்காலிகச் சட்டமான தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப்பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) சட்டம் 1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 25 ஆம் நாளுடன் காலாவதியாகி விட்டது. எனவே, இந்தச் சட்டத்தை நிரந்தரமானதாக்கி, அரசு, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த அவசரச் சட்டத்தை (4/1979) அதிகார முறையில் வெளியிட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அதே அடிப்படையில் ஒரு சட்டம் தற்போது இயற்றப்பட்டுள்ளது.

32. மின்சார வாரியம் அதன் பணியாளர்களுக்கு 1977 டிசம்பர் திங்களிலிருந்து பல்வேறு சலுகைகளையும் நன்மைகளையும் வழங்கி வந்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில், 8.33 சதவீத ஊதியக்கொடை வழங்கப்பட்டது. 1975-76 ஆம் ஆண்டில் சட்டப்படி ஊதியக்கொடை எதுவும் வழங்கப்பட வேண்டியதில்லை யானாலும் ஊதியத்தில் 4 சதவீதம் பணியாளர்களுக்கு கருணைத்

தொகை வழங்கப்பட்டது. அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களை ஊக்குவித்து செயல் திறனை மேம்படுத்துவதற்காக, ஊக்கப்படி, ஊதியத் கொடைத் திட்டம் ஒன்று 1978 ஆம் ஆண்டு எப்ரல் திங்களிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சுருளியாறு நீர்மின் திட்டத்தை, திட்டமிட்ட நாளுக்கு முன்பாகவே தொடங்கியியலும் வகையில் ஆற்றிய நல்ல பணியினை பாராட்டும் வகையில் அத்திட்டத்தில் பணிபுரிந்த பணியாளர் அனைவருக்குமே ஒரு மாதத்திற்குரிய ஊதியமும் அகவிலைப்படியும் வழங்கப்பட்டது.

33. எனது உரையை முடிக்கும் முன்னர், இவ்வரசு மத்திய அரசுடன் விவாதிக்கக் கருதியுள்ள முக்கியமானதொரு கொள்கைபற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மாநில மின்சார வாரியங்களின் அமைப்பு, பணிகள், அதிகாரங்கள், மாநில அரசுக்கும் அவற்றுக்கும் இடையேயான உறவு ஆகியவை தற்போது 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டம் என்னும் ஒரு மத்தியச் சட்டத்தினால் நெறிப்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தைத் திருத்த மாநில அரசுக்கு அதிகாரமில்லை. இச்சட்டம், மாநில அரசு, மின்சார வாரியம் ஆகியவற்றின் பங்கை தனித்தனியே வரையறுத்துக் கூறுகிறது மின்சார வாரியம் சரியான முறையில் இயங்குதல், திறம்படச் செயல்படுதல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், மாநிலச் சட்ட மன்றத்திற்கும் பொது மக்களுக்கும் மாநில அரசு கொண்டுள்ள உள்ளார்ந்த பொறுப்புகளுக்கு ஏற்ப இச்சட்டம் அமையவில்லை. இது இன்றுள்ள நிர்வாக நடைமுறைகளுக்கு சிறிதுகூட ஏற்றதல்ல. பொது நிறுவனங்களை நடத்துவதில் அரசு மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகளுக்கும் உகந்ததல்ல. மாநில அரசின் அதிகாரங்களை இவ்வாறு மத்திய அரசு வைத்துக் கொண்டிருப்பது அகற்றப்பட வேண்டும் என்பது இவ்வரசின் ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும். மத்தியச் சட்டத்தில், மாநில மின்சார வாரியங்களின் அமைப்பை நெறிப்படுத்துகின்ற விதிமுறைகள் ரத்து செய்யப்பட்டு, மாநில அரசின் ஏனைய பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பாகச் செய்யப்படுவது போலவே, மின்சார வாரியங்கள் அமைப்பு, அவற்றின் பணிகள், பொறுப்புகள், மின்சார வாரியங்கள்மீது மாநில அரசின் கட்டுப்பாடு மேற்பார்வை ஆகியவற்றிற்கு வகை செய்யும் புதிய சட்டங்களைச் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே இயற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

34. மின்சார வாரியம் செயல்படுகின்ற விதத்தைச் சீரமைப்பதற்கான கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு அவையினரனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

I.

தமிழ்நாட்டில் மின் வளர்ச்சி.

விவரங்கள்.	திட்ட காலங்களில்							
	முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி).	முதலாவது திட்டம் 1951–56.	இரண்டாவது திட்டம் 1956–61.	மூன்றாவது திட்டம், 1961–66.	வருடாந்திர திட்டம் (1966–69) மூன்று ஆண்டுகள்,	நான்காவது திட்டம், 1969–74.	ஐந்தாவது திட்டம் (1974–78).	1978–79 தோராயமாக.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
மின் உற்பத்தி.								
1. நிறுவப்பட்ட திறனளவு (மெகா வாட்டுகளில்).	156	256	571	+300* 1,070	+400* 1,070	+600* 1,654	+600 1,824	+600 1,909
2. மின்சக்தி உச்சத் தேவை (மெகா வாட்டுகளில்).	110	172	381	717	997	1,207*	1,641	1,779
3. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்).	630	1,053	2,214	4,041	5,260	6,948*	9,448	10,503
மின் அனுப்புதலும் வினியோகித்தலும்.								
1. கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்).	6,936	11,479	24,194	39,806	48,336	68,737	72,516	73,45[illegible]
2. குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்).	5,728	13,055	35,352	73,198	104,977	197,017	221,700	227,900
3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள்	31	48	70	98	119	146	175	191
4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள் ..	25	41	73	103	114	125	149	156
5. [illegible]ன் பங்கீட்டு நிலையங்கள்	1,591	3,773	10,004	17,360	22,842	37,453	43,650	45,00[illegible]
6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்).	2·5	4·5	7·7	13·6	18·22	27·07	34·09	35·80
7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்).	12	21	60	92	116	127	162	175
கிராம மின் வசதி.			தமிழ்நாட்டில் மின் வளர்ச்சி.					
1. மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை.	1,813	3,543	18,760	22,137	31,727	61,072	63,339	63,395
2. மின் வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப்பு[illegible]ர் எண்ணிக்கை.	..		..	..	6,280	23,768	24,797	25,526
3. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசை யேற்றங்களின் எண்ணிக்கை.	14,373	32,440	117,695	256,594	410,119	681,205	809 606	843,046
செலவும் வருவாயும்.								
1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்) ..	23·82	54·01	133·21	293·28	356·07	552·20	826·68	941·67
2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்) ..	3·18	5·94	15·82	34·67	50·22	114·28	223·14	235·14

**தீவிர மின்வெட்டின் விளைவாக குறைக்கப்பட்ட அளவு : 1,326 மெகாவாட்டு, 1,528 மெகாவாட்டு முறையே பதிவு பெற்றது 1971–72 மற்றும் 1975–76.

*நெய்வேலி.

†அரசு உதவித் தொகை சேர்த்து.

இணைப்பு II.

தமிழ்நாடு மின் வாரியம்.

1974-75 முதல் 1977-78 முடிய 5-வது திட்டக் காலத்தில் மின் திட்டங்களின் பேரிலான செலவும், 1978-79ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடும்.

வரிசை எண், மின் திட்டத்தின் பெயர்.	ஏற்பட்ட செலவு. 1974-75.	1975-76.	1976-77.	1977-78. [தோராயமாக]	1978-79 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	(ரூபாய் இலட்சத்தில்)				
1. அ. தொடர்ந்து வரும் திட்டங்கள்.					
1 குந்தா நீர்மின் திட்டம் 3-ம் நிலை	(—)36.25	3.20	(—)4.02	0.26	(—)6.70
2 பரம்பிக்குளம்-ஆளியாறு மின் திட்டம் ..	12.10	1.39	(—)8.78	17.09	7.87
3 கோதையாறு நீர்மின் திட்டம்	74.86	84.63	143.68	(—)5.20	30.81
4 சென்னை மின் திட்டம் விரிவாக்கம் 4-ம் நிலை.	6.77	2.03	11.59	0.33	0.20
5 எண்ணூர் அனல் மின் திட்டம்	57.09	25.16	(—)47.14	30.23	18.24
6 எண்ணூர் விரிவாக்கம்	508.33	218.22	152.83	82.70	(—)15.43
7 பாண்டியாறு புன்னம்புழா மின் திட்டம் ..	(—)0.09	0.24	115.00	(—)20.42	1.00
8 குந்தா நீர்மின் திட்டம் 4-ம் நிலை	148.29	428.02	129.03	72.66	(—)8.84
9 பேஸின் பிரிட்ஜ் மின் நிலையம் மேம்பாட்டுத் திட்டங்கள்	..	..	..	..	..
ஆ. புதிய திட்டங்கள்.					
10 நடுவட்டம் நீர்திருப்பு திட்டம்	82.85	57.02	(—)8.38	26.12	1.78
11 எண்ணூர் மேம்பாடு திட்டம்		160.76		69.07	149.33
12 காடம்பாறை நீர்மின் திட்டம்	148.46	60.20	(—)88.17	41.71	310.00
13 சேர்வலார் நீர்மின் திட்டம்	81.84	34.26	13.19	42.99	99.73
14 நெல்லித்துறை நீர்மின் திட்டம்	1.68	(—)4.74	0.31	(—)2.68	0.15
15 சுருளியாறு நீர்மின் திட்டம்	174.06	242.90	563.77	515.77	317.00
16 தூத்துக்குடி அனல் மின் திட்டம்	100.37	1,173.37	3,428.27	4,281.29	4,577.00
17 தூத்துக்குடி 2-ம் நிலை	..	..	—	406.71	1,027.00
18 மேல்கொடுமந்து லோன் பள்ளத்தாக்கு 1-ம்நிலை.	0.28	5.58	32.28	26.06	(—)0.51
19 மேல்கொடுமந்து லோன் பள்ளத்தாக்கு 2-ம் நிலை.	..	..	..	0.20	46.63
20 பேஸின் ப்ரிட்ஜ் மின் நிலைய மேம்பாடு திட்டங்கள்.	..	..	..	5·24	45.00
21 மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாடு திட்டம் (இடுக்கி 2-ம் நிலை).	..	..	..	..	..
22. புதிய திட்டங்கள் பேரில் முன்னோடி நடவடிக்கைகள்—					
I. துணை கூடுதல்/மின் உற்பத்தி	1,360·64	2,492·25	4,443·46	5,590·22	6,600·30
II. மின் அனுப்புதல், பங்கீடு செய்தல் ..	90·00	1,790·28	1,302·74	1,975·38	3,000·00
III. கிராம மின் வசதி	935·00	1,392·77	1,786·38	1,373·57	2,000·00
IV. மின் நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் ..	0·03	0·03	..	0·83	260·00
V. புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு	14·18	16·55	18·61	19·92	20·00
VI. மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள்	1.98	2.67	4.17	4.01	6.40
மொத்தக் கூடுதல் ..	3,627.22	5,694.51	7,545.36	8,963.93	11,886.76

வரைவு VI திட்டச் (1978—83) செயற் குறிப்புகள் (மின்சாரம்).

வரிசை எண்ணும் மின் திட்டத்தின் பெயரும்.	இடம் (மாவட்டம்).	பயன். மெ.வா./எம்.யூ.	மதிப்பிடப் பட்டுள்ள செலவு (கோடி ரூபாய்).	இலக்கு ஆண்டு.	VI திட்டத்தில் பெறப் படும் பயன்கள்.	VI திட்டத்திற்கு அப்பால் பெறப் படும் பயன்கள். மெ.வா./எம்.யூ.	கருத்துரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
அ. தொடர்ந்து வரும் திட்டங்கள் :—							
1. குந்தா நீர்மின் திட்டம் நான்காம் நிலை.	கோயமுத்தூர்	50/34	11·64	78—79	50/34	..	1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உற்பத்தி தொடங்கப் பட்டது.
2. சுருளியாறு நீர்மின்திட்டம்	மதுரை	35/114	25·05	78—79	35/114	..	1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் உற்பத்தி தொடங்கப்பட்டது.
3. லோன் பள்ளத்தாக்கு நீர்மின் திட்டம்.	நீலகிரி	—/27	1·49	79—80	—/27	..	நீரைத் திருப்பி விடும் திட்டம்.
4. தூத்துக்குடி அனல் மின்திட்டம் I-ஆம் நிலை.	திருநெல்வேலி	420/2520	152·30	79—80	420/2520	..	
அ. மொத்தம்		505/2695	190·48		505/2695	..	
ஆ. ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள் :—							
1. சேர்வலாறு நீர்மின் திட்டம்	திருநெல்வேலி	25/7[illegible]	21·57	82—83	20/75	..	(திட்டத்தினை நிறைவேற்றி முடிப்பதற்கான) இலக்கு ஆண்டு 1981—82ஆக இப்போது திருத்தப்பட்டு உள்ளது.
2. தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் II-வது நிலை.	,,	210/1260	71·21	80—81	210/1260	..	
3. காடம்பாரை நீரேற்று மின் திட்டம் I நிலை நீர்த்தேக்கம்.	கோயமுத்தூர்	200/	54·00	82—83	100	100	(திட்டத்தினை நிறைவேற்றி முடிப்பதற்கான) இலக்கு ஆண்டு 1982—83 ஆகத் திருத்தப்பட்டு உள்ளது.
4. காடம்பாறை நீரேற்று மின் திட்டம் சச-வது நிலை நீர்த் தேக்கம்.	,,	200/79	19·40	VI திட்டத்திற்கு அப்பால்.	..	200/79	
5. நெல்லித்துறை நீர்மின் திட்டம்	,,	50/109	18·15	,,	..	50/109	கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.
6. பாண்டியாறு—புன்னம்புழா நீர் மின் திட்டம்.	நீலகிரி	100/391	73·90	82—83	100/391	(100/391)	மாநிலங்களிடையிலான பிரச்சினை இத்திட்டத்திற்கு உள்ளது. VIவது திட்டத்திற்கு அப்பால் இருக்குமாறு நிறைவேற்றி முடிப்பதற்கான இலக்கு திருத்தப்பட்டுள்ளது.
ஆ. மொத்தம்.		780/1914	258·23	..	935/4421	350/188	
மொத்தம் (அ+ஆ)		1285/4609	448·71	..	935/4421	350/188	

வரைவு VIவது திட்டச் (1978—83 செயற் குறிப்புகள் (மின்சாரம்)— தொடர்ச்சி.

வரிசை எண்ணும் மின் திட்டத்தின் பெயரும்.	இடம் (மாவட்டம்).	பயன் மெ.வா./ எம்.யூ.	மதிப்பிடப் பட்டுள்ள செலவு. (கோடி ரூபாய்)	இலக்கு ஆண்டு.	VI திட்டத் தில் கிடைக்கும் பயன்கள்.	VI திட்டத் திற்கு அப்பால் கிடைக்கும் பயன்கள். மெ.வா. எம்.யு.	கருத்துரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
இ. மத்திய அரசின் திட்டம் :—							
1. கல்பாக்கம் அணு மின் நிலையம்	செங்கல்பட்டு	470/1500		1979—80 1980—81	470—1500	முதல் பிரிவு இரண்டாவது பிரிவு.	தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் மின்சாரம் (300—400 மெ.வா.)
மொத்தம் (அ+ஆ+இ)		1755/6109			1405/5921	350/188	இறுதியாகக் கிடைக்கும் மின்சாரம் 2600 மி.யுனிட்(1985-86).
1. மேட்டூர் அனல் மின் திட்டம் ..	சேலம்	420/2310	147.28	1982 83	210/1155	210/1155	திட்டம் அறிக்கை மத்திய மின் ஆணைக் கழகத்திற்கு அனுப்பட்டுள்ளது' திட்டத்தை நிறைவேற்றி முடிப்பதற்கான இலக்கு 1983-84 ஆகத் திருத்தப்பட்டுள்ளது'
2. மேல் நீராறு திட்டம் ..	கோயமுத்தூர் ..	30/153	13·66	1983-84		30/153	திட்டம் ஆய்வில் உள்ளது
3. நீராறு நல்லாறு திட்டம் ..	கோயமுத்தூர் ..	153/373	18,33			155/373	
4- பார்சன் பள்..த்தாக்குத் திட்டம்	நீலகிரி	20/53	5,94	1984-85	.. ..	20 53	(மத்திய மின் ஆணைக் கழகத்தின்) ஒப்புதல் எதிர்ப் பார்க்கப்படுகின்றது
5. பைகாரா இறுதி நிலைத் திட்டம்	நீலகிரி	100/270	14.58	1984-85	.. ..	100/270	திட்டம் ஆய்வில் உள்ளது.
6. கீழ் மேட்டூர் திட்டம்	சேலம்	120/537	83·60	1987-88	120/537		திட்டத்திற்கு மத்திய மின் ஆணைக் கழகத்தின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.(திட்டத்தை நிறைவேற்றி முடிப்பதற்கான) இலக்கு 1981 -82 ஆக திருத்தப் பட்டுள்ளது.
7. மேல் அமராவதி திட்டம் ..	மதுரை	30/104	13·30	1986-87		30/104	(மத்திய மின் ஆணைக் (கழகத்தின்) ஒப்புதல் விரைவில் கிடைக்கும் என எதிர் பார்க்கப் படுகின்றது.

1979 ஏப்ரல் 26]

வரிசை எண்ணும், மின் திட்டத்தின் பெயரும்.	இடம் (மாவட்டம்).	பயன் மெ. வா/ மி. யூனிட்.	மதிப்பிடப் பட்டுள்ள செலவு (கோடி ரூபாய்).	இலக்கு ஆண்டு.	VI-வது திட்டத்தில் கிடைக்கும் பயன். மெ. வா மியூ.	VI-வது திட்டத்திற்கு அப்பால் கிடைக்கும் பயன்.	கருத்துரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
8. மேல் தாமிரபரணி திட்டம் ..	திருநெல்வேலி	165/462	85·36	1988–89	..	165/462	(மத்திய மின் ஆணைக் கழகத்தின் ஒப்புதல்) எதிர்பார்க்கப் படுகின்றது.
9. பரளியாறு திட்டம்	கன்னியாகுமரி ..	35/100	11·17	1987–88	..	35/100	(மத்திய மின் ஆணைக் கழகத்தின் ஒப்புதல்) எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய மின் ஆணைக் கடிதம் இத் திட்டத்திற்கு அனுசரணையாக இல்லை.
10. சண்முக நதித் திட்டம்	மதுரை	30/125	5	-87-88	..	30/25	விரைவில் (மத்திய மின் ஆணைக் கழகத்தின்.) ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
11. சோழாத்திப்புழாத் திட்டம் ..	நீலகிரி	* 30/112	†10.93	1987-88	..	30/112	கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.
12. வட சென்னைத் திட்டம் ..	செங்கல்பட்டு	630/3700	210.00	1987-88	..	630/3700	ஆய்வில் உள்ளது.
13. கியாஸ் டர்பைன்ஸ் திட்டம் ..	மூன்று இடங்கள் ..	213/1278	60.00	1979-80	..	213/1278	ஒப்புதல் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. விரிவான திட்ட அறிக்கை அனுப்பப்பட விருக்கிறது.
14. எண்ணூர் விரிவு	செங்கல்பட்டு	210/1260	60.00	1983-84	..	210/1260	ஆய்வில் உள்ளது.
15. ஹொகெனக்கல் நீர் மின் திட்டம்.	தர்மபுரி	* 250/864	† 75.00	1985-86	..	250/864	கர்நாடக மாநிலத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகின்றது.
16. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம்—இரண்டாவது சுரங்கம் வெட்டுதல்—I நிலை ..	நெய்வேலி தென்னார்க்காடு மாவட்டம்.	@ 630/2525	358.45	1985-86	† 420/1684	@210/842	திட்டத்திற்கு (மத்திய அரசு) ஒப்புதல் தந்துள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் கோரப் பட்டுள்ளன.
17. நெய்வேலி பழுப்புக் நிலக்கரிக் கழகம்—இரண்டாவது சுரங்கம் வெட்டுதல்—II நிலை.	ஷை	@ 630/2525			..	@ 630/2525	350 மெகா வாட் அளவிற்கு தமிழ் நாட்டிற்கு மின்சாரம் கிடைக்கும்.
மொத்தம்		3688/16751	1187.75		750/3376	2948/13376	

* மாநிலங்களிடையிலான திட்டமாதலால் தமிழ்நாட்டின் பங்கு.

† இரண்டாவது சுரங்கம் வெட்டுதல் : கிடைப்பதற்கான வாய்ப்புள்ள மின்சாரத்தின் அளவு —3400 எம். யூ.

@ சுரங்கச் செலவையும் உள்ளடக்கியது.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1979 ஏப்ரல் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Expenditure on Government Advertisements.

* 361 *Q.*—THIRU ARCOT VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state:

(*a*) the expenditure incurred for the Government Advertisements on behalf of the Information and Publicity Department during the President's Rule in Tamil Nadu;

(*b*) the names of the newspapers to which advertisements were given; and

(*c*) the amount paid to each newspaper for the advertisement?

அரசு விளம்பரங்களுக்கான செலவு.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது செய்தி, விளம்பரத் துறையின் சார்பாக அரசாங்க விளம்பரங்களுக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) எந்தெந்த பத்திரிகைகளில் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன?

(உ) ஒவ்வொரு பத்திரிகைக்கும் விளம்பரத்திற்காகக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : 1—4—1976-லிருந்து 30—6—1977 வரை மட்டும் உள்ள விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

Making Korkai Port a Tourist Centre.

* 362 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state:

(*a*) whether the Members of the Korkai Tamil Sangam have made any representation to the Government that the Port area at Korkai, Srivaikundam Taluk, Tirunelveli District, should be developed into a Tourist Centre; and

(*b*) if so, the action taken thereon?

கொற்கைத் துறைமுகத்தை சுற்றுலா மையமாக மாற்றுதல்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், கொற்கைத் துறைமுகப் பகுதியை சுற்றுலா இடமாகச் செய்ய வேண்டுமென்று கொற்கைத் தமிழ்ச் சங்கத்தார், அரசுக்கு முறையீடு ஏதும் செய்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஆம்.

(இ) தற்போது கொற்கைத் துறைமுகப் பகுதியை சுற்றுலா இடமாக மாற்ற அரசுக்கு உத்தேசம் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொற்கைத் துறைமுகம் மிகப் பழமை வாய்ந்தது. சங்க இலக்கியங்களி லெல்லாம் பேசப்படுகிற சிறப்பிடத்தைப் பெற்றது. பிற நாட்டவர்கள் அந்தத் துறைமுகத்துக்கு வந்து வாணிபம் செய்ததாக சங்க இலக்கியக்

@ 336 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

குறிப்புக்கள் இருக்கின்றன. அப்பகுதி தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் இருக்கிறது. தற்போது கொற்கை ஒரு துறைமுகமாகச் செயல்படாவிட்டாலும்கூட, முன்பு அங்கே ஒரு சிறந்த துறைமுகம் இருந்தது என்பதற்கு அடையாளமாக மரங்களும், கோயில்களும் மற்ற அமைப்புகளும் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு முன் காலத்தில் கொற்கை துறைமுகப் பகுதியாக இருந்தது என்பதைக் காட்டுகிற சான்றுகளாக இருக்கும் தொன்மை வாய்ந்த இந்த மரங்களையும் கோவிலையும் மீண்டும் புதுக்கிட வேண்டும். ஸ்ரீவைகுண்டம் பகுதியில் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் உள்ள கோயிலைப் பார்ப்பதற்கு பலர் வருகிறார்கள். அதையொட்டி இந்தப் பகுதியையும் மக்கள் வந்து பார்ப்பதற்கு வசதியாக இதனை ஒரு சுற்றுலாச் சிறப்பிடமாக மாற்ற வேண்டும். இதன் மூலம் சுற்றுலாத்துறையும் வளர்ச்சியடையும் என்பதால் இதனை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொற்கையை சுற்றுலா இடமாக மாற்றும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லையென்றுதான் நான் தெரிவித்திருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், தொல் பொருள் ஆய்வுத் துறைக்குச் சம்பந்தப்பட்ட அந்தப் பகுதியை, நம்முடைய பழம்பெரும் சரித்திர வரலாற்றை எடுத்துக்காட்டுகிற அந்தப் பகுதியை, நம்முடைய மக்களெல்லாம் சென்று பார்க்கிற இடமாக மாற்ற வேண்டுமென்பதுதான் இந்த அரசின் திட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தை மிகச் சிறந்த, உலகப் புகழ் பெற்ற சுற்றுலா மையமாக மாற்றுகிற முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது. மைய அரசுக்கும் அந்தப் பகுதியை வளர்ச்சியுறச் செய்ய வேண்டுமென்றுதான் ஒதுக்கித் தந்திருக்கிறோம். அதையொட்டி நெல்லை மாவட்டத்தில் அமைந்திருக்கிற இப்படிப்பட்ட பகுதிகளும் எடுத்துக் கொள்ளப்படும். எனவே அப்படிப் பட்ட நிலைமை வரும்போது அரசாங்கம் இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Criminal Cases

* 363 *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state:

(*a*) whether there is any proposal to ensure that Criminal cases are disposed of in the trial Court within two months from the date of appearance of the accused in such cases; and

(*b*) the number of Criminal cases in which the accused have appeared in person, but are pending for over (i) two months, (ii) six months, and (iii) one year in Madras City and in each of the Districts as on 16th October 1978?

குற்றவியல் வழக்குகள்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் வந்திருந்த நாளிலிருந்து இரண்டு திங்களுக்குள் விசாரணை நீதிமன்றத்தில் அவை முடிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் நேரடியாக வந்திருந்து, ஆனால் 16—10—1978 அன்றுள்ளவாறு சென்னை மாநகரத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், (i) இரண்டு திங்களாக (ii) ஆறு திங்களாக, (iii) ஒரு ஆண்டாக முடிவுறாமல் உள்ள குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : (அ) & (இ) சட்ட மேலவையில் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்கள் பதிலில் நீதி மன்றங்களில் சார்ஜ் ஷீட் ஃபைல் (Charge Sheet file) செய்யப்பட்ட பிறகு ஏற்படுகிற கால தாமதத்தைப்பற்றியும் அதைக் குறைப்பதற்கான வழிவகைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பல வழக்குகளில் எப்.அய்.ஆர். (F.I.R.) போட்டு முடிந்தவுடனே அந்த ஸ்டேஜைத் தாண்டி கோர்ட்டுக்கு அனுப்பப்பட்ட பிறகு, தொடர்ந்து பல வாய்தாக்களுக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அல்லது குற்றவாளியாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறவர்கள் மாதக் கணக்கிலும் ஆண்டுக் கணக்கிலும் நீதிமன்றங்களுக்கு வந்து போகிற நிலையிருக்கிறது. எனவே அதைத் தடுக்க, ஃஎப்.அய்.ஆர். ஃபைல் செய்த பிறகு, ஒரு குறிப்பிட்ட கால கெடுவுக்குள் அந்த வழக்குபற்றிய புலன் விசாரணையை முடித்தாக வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

@ 336-338 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The suggestion of the hon. Member will be taken into consideration and necessary instructions will be given. Any useful suggestions assuming practical form are welcome from the hon. Member Thiru Ramamoorthi.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : பல மாதங்களுக்கு மேல், சில நேரங்களில் ஓராண்டுக்கு மேலாக பல வழக்குகள் முடியாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதற்கு ஏதாவது காரணம் உண்டா ? ஏதாவது காரணம் உண்டென்றால், அதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY: This Government can only make a request to the High Court to expedite the pending cases as mentioned or described by the hon. Member Thiru Venkatesan.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நீதிமன்றங்களில் அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்கள் மூலமாக வழக்குகளைத் துரிதமாக நடத்தி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். அவர்களின் ஒத்துழைப்போடு காவல் துறையினரும் சீக்கிரமாக சாட்சிகளைக் கொண்டு வந்தால், வழக்குகள் நிச்சயமாக சீக்கிரமாக முடியும். எனவே அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: This suggestion will be implemented by issuing suitable instructions to the Superintendents of Police who will, in turn, give instructions to the Assistant Public Prosecutors.

திரு. ம. சங்கரலிங்கம் : ஒரு வருடத்திற்கும் மேலாக முடிவு பெறாத கிரிமினல் வழக்குகளின் மொத்த எண்ணிக்கை—அனைத்து மாவட்டங்களையும் சேர்த்து—3,418 என்று அமைச்சர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். கிரிமினல் வழக்குகளில் சார்ஜ் ஷீட் கொடுத்த பிறகு வழக்குகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்பதுதான் தற்போதைய விதி. அந்த அடிப்படையில்தான் நாட்டில் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒருவேளை நீதிமன்றங்கள் அல்லது கிரிமினல் வழக்குகளை விசாரிக்கிற நீதிபதிகள் தேவையான அளவுக்கு இல்லாத காரணத்தால் அல்லது பப்ளிக் பிராசிகியூட்டர்கள் போதிய அளவுக்கு இல்லாத காரணத்தால், இந்த நிலை ஏற்பட்டதா என்பது ஆய்வு செய்யப்பட்டதா? அப்படிப்பட்ட காரணங்களிருந்தால், இனி கூடுதலாக நீதிபதிகளையும் பப்ளிக் பிராசிகியூட்டர்களையும் நியமிக்க அரசு முன்வருமா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY: Specific reasons for this delay are not identified in the light of what the hon. the Leader of the Opposition has stated. If any defects by reason of the want of personnel to prosecute these offences emerge from the further investigation of this matter, certainly this Government will rectify those defects.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கிரிமினல் வழக்குகளில் பொதுவாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீதி மன்றங்களுக்குச் செல்லும்போது, ஓராண்டுக் காலத்திற்கும் அதிகமாகவே அதனுடைய பாதிக்கட்டுகளை ஏற்பது என்பது ஒரு வருந்தத்தக்க விஷயமாகும். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால் இரண்டு மாதங்களுக்கு மேலாக முடிவடையாமல் இருக்கும் வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 18,000-க்கும் அதிகமாக இருக்கிறது. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மட்டும், 3,000-க்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. எனவே, எந்தக் கிரிமினல் வழக்காக இருந்தாலும், 6 மாத காலத்திற்குள் அதை நீதி மன்றங்கள் விசாரித்து முடிக்க வேண்டும் என்று பொதுவாக ஒரு வேண்டுகோளினை உயர் நீதிமன்றத்திற்கு விடுக்க முன்வருமா?

The Hon. Thiru K. NARAYANASWAMY: I may personally confess or make it plain that I have been one who has been asking even on public platforms and pleading for the expeditious disposal of cases at all levels and in all Courts. I have been an unrepentant critic of the backlog of these cases. Time and again I made my pronouncements on public platforms criticising a kind of lethargy in the matter of disposal of back-cases. In fact, I have pleaded and voiced my suggestions for the dissolution of the backlog of cases. The Government can only request the High Court. The High Court has got the full control over the composition, control, discipline and personnel of all the Subordinate Courts by virtue of the Constitutional provision.

Pay Scales of Judicial Officers

*364 Q.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Law be pleased to state:

(*a*) whether any representations have been received by the Government that the scales of pay fixed by the Third Tamil Nadu Pay Commission for Sub-Judges, District Munsifs and Magistrates are unreasonably low; and

(*b*) if so, the action taken or proposed to be taken thereon?

நீதித்துறை அதிகாரிகள் சம்பளங்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாடு மூன்றாவது ஊதியக்குழு துணை நீதிபதிகள், மாவட்ட முன்சீப்கள், குற்றவியல் நீதிபதிகள் ஆகியோருக்கு நிர்ணயித்த சம்பள விதங்கள் நியாயமற்ற வகைகளில் மிகவும் குறைவாக உள்ளதென அரசுக்கு முறையீடுகள் எவையேனும் வந்ததா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுத்த, அல்லது எடுக்கக் கருதியுள்ள, நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: (அ) ஆம், அய்யா.

(இ) கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. பி. ஆர். தாமஸ்: நீதியை எளிதில் பெறுவதற்கும், நேர்மையாகப் பெறுவதற்கும் ஏற்றவகையில் நீதிபதிகளின் ஊதியத்திற்காகவும் அவர்களின் பராமரிப்பிற்காகவும் அரசு அதிகப் பணம் செலவழிக்கும் நிலை இருந்தால் தான், நீதி முறையாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. அதாவது Judges must be costly. அந்த அடிப்படையில் நீதிபதிகளின் ஊதியத்தை உயர்த்துவதற்கான கோரிக்கை மீது அரசு விரைவில் ஆணை பிறப்பிக்க முன்வருமா?

The Hon. Thiru K. NARAYANASWAMY: I agree with the noble sentiment expressed by the hon. Member Thiru Thomas that, after all, Judges must be paid dearly and fairly. Even these factors are being taken into consideration in respect of the proposals now under examination of this Government.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நீதிபதிகளுக்கு இப்போது நீதி கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. குறிப்பாக நீதி விஷயத்தில் பரிதாபத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். நான் முன்பே குறிப்பிட்டதைப்போல் இங்கே தலைமைச் செயலகத்தில் கூட 'Department of Justice' இல்லை. Law Department தான் இருக்கிறது. நீதிபதிகளின் குறைகளைக் கவனிக்க ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி ஒன்றை நியமித்து அதில் இந்த சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களையும், ஓய்வு பெற்ற நீதிபதிகளையும் மற்றும் வேறு சிலரையும் தேர்ந்தெடுத்து இடம் பெறச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: In regard to the constitution of what is called the Department of Justice and secondly, in regard to the constitution of a Consultative Committee for the Department of Law and Justice, I plead with my hon. Friend Thiru Venkatesan to prefer a memorandum in a very persuasive tone and voice and persuade the Hon. the Chief Minister to accept his proposals. It will not only give me great happiness but will also facilitate centralising the entire work.

திரு. க. இராமமூர்த்தி : குற்றவியல் துறையில் இருக்கும் நீதிபதிகள், சப்-மாஜிஸ்ட்ரேட் போன்றவர்களுக்கு மிகக் குறைவான சம்பளத்தை வழங்குகிறார்கள். அவர்களெல்லாம் வேலைப் பளு மிக அதிகமாக இருப்பதாலும், அவர்கள் பல்வேறு இடங்களில் பணியாற்ற வேண்டிய நிலை வருவதாலும், அவர்களுடைய குழந்தைகளை முறையாகப் படிக்க வைக்க முடியாத அளவுக்கு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அதிகமான சம்பளம் வேண்டுமென்ற அவர்களுடைய கோரிக்கையை தனியாக அரசு பரிசீலிக்க முன்வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY: This Government will certainly examine these representations and I may straightway submit to this House that the memorandum submitted by the Tamil Nadu State Magisterial Service Association is under the examination of this Government.

Teachers Training School Buildings.

* 365 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the number of Teachers Training School buildings that are not in use in the State;

(*b*) whether there is any proposal with the Government to utilize these buildings for other purposes; and

(*c*) if so, the details thereof?

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக் கட்டிடங்கள்

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாநிலத்தில் பயன்படுத்தப்படாமல் உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக் கட்டிடங்கள் எத்தனை உள்ளன ?

(இ) இந்தக் கட்டிடங்களை வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) வேதாரண்யத்திலுள்ள மூடப்பட்ட ஆண்கள் பயிற்சிப் பள்ளியின் கட்டிடங்களில் சில பகுதிகளும், இராணிப்பேட்டையிலுள்ள பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியின் விடுதிக் கட்டிடமும், ஆடுதுறையிலுள்ள அரசினர் ஆண்கள் பயிற்சிப் பள்ளியின் கட்டிடங்களில் சில பகுதிகளும் வேறு வகையில் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

(இ) ஆம்.

(உ) வேதாரண்யத்திலுள்ள மூடப்பட்ட பயிற்சிப் பள்ளியின் பயன்படுத்தப்படாத கட்டிடங்களை அரிசன நலத்துறை விடுதி நடத்த மாவட்ட ஆட்சியாளரும், தங்கள் பள்ளியின் சில வகுப்புகளை நடத்த கஸ்தூரிபாய் காந்தி கன்யா குருகுலப் பள்ளியினரும் கேட்டுள்ளார்கள். இவை ஆய்வில் உள்ளன. ராணிப்பேட்டையிலுள்ள பெண்கள் பயிற்சிப் பள்ளியின் விடுதிக் கட்டிடத்திற்கு ஆற்காட்டிலுள்ள அரசினர் ஆண்கள் பயிற்சிப் பள்ளியை மாற்ற ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆடுதுறையிலுள்ள பயிற்சிப் பள்ளியின் கட்டிடங்களை வேறு வகையில் பயன்படுத்த தக்க நடவடிக்கை இயக்குநரால் எடுக்கப்படுகிறது.

(முற்பகல் 10.40)

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவர் அவர்களே, வருகிற ஆண்டுகளில் இத்தகைய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மீண்டும் துவங்குவதற்கு, அல்லது ஏற்கெனவே நடந்து வருகிற பள்ளிகளில் மேலும் மாணவர்களைச் சேர்க்க

அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதா? தற்போது 25 மாணவர்கள் பயில வேண்டுமென்று இருக்கிற விதி முறையைத் தளர்த்தி அந்த எண்ணிக்கையை உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது சேர்க்கப்படுகிற மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கிற உத்தேசம் அரசுக்கில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இளநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குகின்ற வகையில் எஸ்.சி.ஈ.ஆர்.டி. மூலமாகப் பயிற்சி அளிக்கிற திட்டத்தை கல்வியமைச்சர் அவர்கள் 11—4—1979 அன்று அறிவித்தார்கள். அவர்களுக்கு நாங்கள் நன்றி கூடத் தெரிவித்திருக்கிறோம். அந்தப் பயிற்சி அளிக்கிற திட்டத்தின் கீழ் முதலில் அஞ்சல் வழியில் பாடத்தை போதித்து, பிறகு நேரடிப் பயிற்சி அளித்து இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குகிற திட்டத்தை இயக்குநர் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட திட்டத்திற்கு இந்தப் பயிற்சிப் பள்ளிகளின் கட்டிடங்களைப் பயன்படுத்துகிற முறையிலே அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசியில் பெரிய பயிற்சிப் பள்ளி நடந்துகொண்டிருந்தது. அங்கே நிறைய கட்டிடம் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அந்தக் கட்டிடங்கள் எந்தத் துறைக்குத் தரப்பட்டிருக்கின்றன? அப்படித் தரப்படாமல் இருந்தால், ஹையர் செகண்டரி பிரிவை அங்கே ஆரம்பிக்கக் கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவினாசி பயிற்சிப் பள்ளி பற்றிய விவரங்கள் இல்லை. அங்கே பயிற்சிப் பள்ளி நடந்து கொண்டிருக்குமென்று கருதுகிறேன். அதைப் பற்றி இங்கே விவரம் இல்லாததால், ஒன்றும் சொல்லுவதற்கில்லை. பயிற்சிப் பள்ளிகளை நடத்தாமல் விணாகிக் கொண்டிருக்கிற கட்டிடங்களை, ஆசிரியர்களின் மறுமலர்ச்சிக்காகவும், வேறு பல காரியங்களுக்காகவும் பயன்படுத்தும் திட்டத்தை இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

Incentive Increment

*366 Q.—THIRU M. SANKARALINGAM, THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) and THIRU C. R. LAKSHMIKANDHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that incentive increments as per G.O. Ms. No. 42, Education, dated 10th January 1969 are not being paid to many teachers, who have secured Post-Graduate Degree in Third Class in various Universities, other than those in Tamil Nadu and working in Tamil Nadu; and

(*b*) if so, whether the Government will come forward to give incentive increments to those teachers also?

ஊக்க ஊதிய உயர்வுகள்.

திரு. ம. சங்கரலிங்கம்:

திரு. பி. ஆர். தாமஸ்

(திரு. டி. சந்தோஷம் சார்பில்):

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அல்லாத பிற மாநில பல்கலைக் கழகங்களில் முதுகலைப் பட்டத்தை மூன்றாம் வகுப்பில் பெற்று, தமிழ்நாட்டில் பணிபுரியும் பல ஆசிரியர்களுக்கு 10—1—1969-ஆம் நாளிட்ட கல்வித்துறை அரசு ஆணை எம்.எஸ். எண் 42-ன்படி ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அத்தகைய ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) வெளிமாநில பல்கலைக் கழகங்களில் மூன்றாம் வகுப்பில் முதுகலைப்பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அரசாணை நிலை எண் 42, கல்வி, நாள் 10—1—1969-ன்படி ஊக்க ஊதிய உயர்வு அளிக்கலாமா என்பதை அரசு பரிசீலனை செய்து, அவர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு அளிக்கலாம் என அரசாணை நிலை எண் 530, கல்வி, நாள் 24—3—1979-ல் ஆணையிட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 27

திரு. ம. சங்கரலிங்கம் : அந்த ஆணையின்படி, முதுகலைப்பட்டம் பெற்ற நாளிலிருந்து ஊக்க ஊதியத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறதா? இல்லையென்றால், அப்படிக் குறிப்பிட்டு ஆணையிடப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மூன்றாம் வகுப்பில் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அளிக்கப்பட்ட ஊக்க ஊதியம் சரியல்ல என்பதால், அளித்தவர் களிடமிருந்து ஊக்க ஊதியத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆணையிடப்பட்டது. பின்னர் அவ்வாறு இடப்பட்ட ஆணையைச் செயல்படுத்துவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. முந்தைய பள்ளிக் கல்வி இயக்குநர் வெளிமாநிலங்களின் பல்கலைக் கழகங்களில் குறைந்தது 45 சதவீதம் மதிப்பெண் பெற்று மூன்றாம் வகுப்பில் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியத்தை அளிக்கப் பரிந்துரைத் தார். தற்போதைய இயக்குநர் வெளி மாநிலங்களின் பல்கலைக் கழகங்களில் மூன்றாம் வகுப்பில் முதுகலைப்பட்டம் பெற்ற எல்லா ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதியத்தை அளிக்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளார். இந்த அடிப்படையிலே நாம் அந்தப் பழைய ஆணையைத் திரும்பப் பெற்றிருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்தும் இதோடு சேர்த்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இத்தகைய கேள்விகளுக்கு விடையளிக்கும் போது அதற்குச் சம்பந்தப்பட்ட ஆணையினுடைய நகல்களையும் இணைத்துக் கொடுத்துவிட்டால், உறுப்பினர்கள் தெளிவான விளக்கத்தைப் பெற வசதியிருக்கும். ஆகவே அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பில் முதுகலைப்பட்டம் பெற்றவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எவால்யுவேஷன் (Evaluation) செய்யப்படுகிறது என்ற முறையில் இன்னும் அவர் களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது. ஊக்க ஊதியம் அளிக்க 'மூன்றாம் வகுப்பு' அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் முதுகலைப் பட்டம் பெற்றவர்களாக இருந்தால், இந்தப் பயனை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. பி. ஆர். தாமஸ் : மேல்நிலை வகுப்புகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தனியான ஊதிய விகிதம் இருக்கிறதென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு மேல் முதுகலைப் பட்டம் பெறும்போது, அவர்கள் இரண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடையவர் களாக ஆகிறார்கள். தற்சமயம் அது மறுக்கப்படுகிறது. ஆகவே முதுகலைப் பட்டம் பெற்று ஏற்கெனவே மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்கள் மேலும் முதுகலைப் பட்டம் பெற்றால், அவர்களுக்கு இரண்டு ஊக்க ஊதியத்தை வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட யோசனையில்லை.

Medical Facilities to Teachers of Aided Schools

* 367 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Question No. 25, on the Floor of the Council, on 27th August 1977—

(*a*) whether the Government have arrived at any decision over the proposed to extend all the medical facilities enjoyed by N.G.Os. to the teachers in Aided Schools; and

(*b*) if so, when they will be extended?

மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதிகள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 27—8—1977 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் 25 ஆம் எண் வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையை ஒட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ வசதிகள் அனைத்தும், மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்கு நீட்டிக்கப்படுமா என்ற செயற்குறிப்பு குறித்து அரசு ஏதாவது முடிவெடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அந்த வசதிகள் நீட்டிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கூடிய விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ் : அநேக ஆண்டுகளாக தனியார் பள்ளிகளிலும், உள்ளாட்சித் துறைப் பள்ளிகளிலும் பணியாற்றுபவர்களுக்கு மருத்துவ வசதி உண்டு என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் நடைமுறையிலே அநேக மருத்துவ மனைகளிலே அது மறுக்கப்படுகிறது. ஆகவே என்.ஜி.ஜி.ஓ.-வினருக்கு வழங்குவது போன்ற அடையாளச் சீட்டை கல்வித் துறையிலே உள்ளவர்களுக்கும் வழங்கினால், அதைக் காட்டி மருத்துவமனைகளிலே சிகிச்சையைப் பெற வசதியாக இருக்கும். அந்த முறையிலே அடையாளச் சீட்டை வழங்க கல்வித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தச் சலுகை அவர்களுக்குத் தரப்பட்டதற்குப் பிறகு, அதற்கான விவரங்களைத் தயாரிக்கிறபோது செய்யப்பட வேண்டிய ஒன்று இது.

திரு. செ. முத்துசாமி : நீண்டகாலமாக பல்வேறு சலுகைகளெல்லாம் தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், மெடிக்கல் ரீ-இம்பர்ஸ்மென்ட் வசதி மட்டும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. அவர்கள் மருத்துவ விடுப்பிலே செல்லலாம், மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவம் செய்துகொள்ளலாம், மருந்துகளைக் கடைகளில் வாங்கினால் பில்களைக் காசாக்கிக் கொள்ளும் இந்தச் சலுகை மட்டும் வழங்கப்படவில்லை. ஆகவே இந்தச் சலுகையையும் நீட்டித்துத் தர அரசு ஆணையைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பரிசீலனையில் இருக்கிறதென்று முன்பே சொல்லியிருக்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : பள்ளிகளிலே பணியாற்றுகிற பியூன், குப்பை கூட்டுகிறவர்கள் போன்றவர்களுக்கெல்லாம் போதுமான சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு அளிப்பதைப் போல இந்த வசதியை ஏற்படுத்தித் தர அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் அல்லாதவர்களுக்கும் தரப்படுவதற்கான கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது.

(முற்பகல் 10.59)

Orientation Course

* 368 Q—Thiru C. R. LAKSHIMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) the number of teachers who participated in the Orientation Course conducted for the Higher Secondary School teachers during June, 1978, subject-wise; and

(b) the amount spent for this Course?

மறுபயிற்சி வகுப்புகள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978, ஜூன் மாதத்தில் நடத்தப்பட்ட மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான மறுபயிற்சி வகுப்புகளில் (Orientation Course) *கலந்து கொண்ட ஆசிரியர்கள் பாடவாரியாக மற்றும் மாவட்ட வாரியாக எத்தனை பேர் ?*

(இ) இப் பயிற்சிக்குச் செலவான தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) விவர அறிக்கை @ அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அறிவியல், கணிதம் ஆகிய பாடங்கள் எடுத்தவர்கள், பொருளாதாரம், உளவியல், சமூக இயல் போன்ற பாடங்களை எடுத்துப்படித்த பி.ஏ. பட்டம் பெற்றவர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறுபயிற்சி நடத்த வேண்டியது, அளிக்கப்படவேண்டியது அவசியமான ஒன்று. அவர்களுக்கு மறுபயிற்சி நடத்துவதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்து செயல்படுத்தியிருக்கிறதா ? அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொருளாதாரப் பாட ஆசிரியர்கள் மறுபயிற்சி அளிப்பது குறித்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மற்றவற்றைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

@ 339 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த மறுபயிற்சித் திட்டம் வரவேற்கப் படுகின்ற ஒரு திட்டம். ஆனால் அவ்வாறு மேல்நிலைப் பள்ளிகளிலே நியமிக்கப் பெற்ற பி.எஸ்.சி. பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர் களையும் தகுதி உள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்பதற்காக சென்னை பல்கலைக்கழகம், ஓராண்டுக் காலத்திற்கு ஒரு பயிற்சி வகுப்பு நடத்தி அதில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறது. அது இப்போது நம்முடைய அரசினால் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்ற வகுப்புக்களை ஆசிரியர்களுடைய நன்மைக்காகத் தொடங்க வேண்டுமென்று அரசு, பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கு அறிவித்திருக்கிறதா? அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பயிற்சி என்பது இரண்டு வகையாக இருக்கிறது. ஒன்று அவர்கள் சொல்லித்தருகிற பாடங்களைப் பொறுத்து இருக்கிறது. அது ஒருவகைப் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி என்று நாப்படுவது பி.டி. பயிற்சி. அதற்கு அந்தப் பயிற்சி போது மானது என்ற அளவிலேதான் இருக்கிறது. பி.ஏ, பி.எஸ்சி. பட்டம் பெற்ற வர்கள் அந்தப் பாடத் திட்டத்தில் பயிற்சி பெற்றுக்கொள்கின்ற வாய்ப்புகளை அதிகரிக்கும்படியாக பல்கலைக் கழகத்திற்கு நாம் யோசனை சொல்லியிருக் கிறோம்.

திரு. பி. ஆர். தாமஸ் : மேல்நிலைப் பள்ளிகளிலே இப்போது பாடங்கள் அதிகமாக இருப்பதாகவும், அது மிகவும் கடினமாக இருப்பதாகவும் பேசப் படுகிறது. அந்த ஆசிரியர்களுக்கு இப்போது அளிக்கின்ற பயிற்சியைவிட இன்னும் கூடுதலான பயிற்சியை, போதிப்பதற்குரிய பயிற்சியை, தரத்தை வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ப பயிற்சி அளிக்க வேண்டும் என்ற நிலைமைகள் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே இந்தப் பயிற்சிக் காலத்தை மேலும் அதிகப்படுத்தி, கல்வியினுடைய தரத்தை வளர்ப்பதற்கு வாய்ப்பு வசதிகளை அரசு வழங்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது தரப்படுகின்ற இந்த மறுபயிற்சியைத் தவிர, தொடர் பயிற்சிக் கேந்திரங்களை இப்போது சென்னை, கோவை, காரைக்குடி, மதுரை ஆகிய 4 இடங்களிலே ஆரம்பித் திருக்கிறோம். வேறு நான்கு இடங்களில் ஆரம்பிக்கின்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடங்களிலே மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சியை 4 நாட்கள் 5 நாட்கள் இடைவெளி விட்டு தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். வருடம் 365 நாட்களும் பயிற்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு அந்த மையங்கள் செயல்படுகின்றன.

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற குறைபாட்டைப் போக்க இந்த மையங்கள் பெரு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: இப்போது மறு பயிற்சிக்காக ரூ. 5,83,610 செலவு செய்யப்பட்டிருக்கிறது. மாவட்டத்தில் 5 நாட்கள், 6 நாட்கள் என்று வரை யறுத்து பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிப்பவர்களை, கல்லூரியில் உள்ள பேராசிரியர்களை அழைத்துக் கொண்டு வருகிறார்கள். இப்போதுள்ள கணித பாடம் வேறு. இப்போது சேர்க்கப்பட்டிருக்கின்ற பாடத் திட்டத்திலே உள்ள அமைப்பு 15 ஆண்டுகளுக்கு முன்பு பட்டம் பெற்றவர்களுக்குப் பாட மாக இல்லை. ஏனென்றால் இப்போதுள்ள பாடத்திட்டத்தில் பெரும் மாற்றம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின்படி ஒரு கணிதப் பேராசிரியர் அவர்களால் அதைப் பயிற்றுவிக்க முடியாது. ஆனால் கடந்த ஆண்டு எம்.எஸ்ஸி. படித்த ஒருவரால் கணிதப் பயிற்சி அளிக்க முடியும். அப்படிப்பட்ட நிலையில் தவறுகள் ஏற்படாமலிருக்க, அந்தப் பாடத் திட்டத்தை, தெரிந்தவர்களை வைத்து, தற்காலத்திலே படித்தவர்களைக் கொண்டு பயிற்றுவிக்க அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குறைபாடுகளைப் போக்கு வதற்காகத்தான், முதலிலேயே அவர்களுக்குப் பயிற்சி அளித்து அதற்குப் பிறகுதான் பள்ளிக்கு அனுப்புகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Housing Facilities for Conductors

* 359 Q—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTHOSHAM): Will the Hon. The Minister for Transport be pleased to state:

(a) whether any representations have been received by the Government from the Association of Conductors, that they be provided with housing facilities near the bus termini; and

(d) if so, the action taken thereon?

நடத்துனர்களுக்கு வீட்டு வசதிகள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிப்பார்களா?

(அ) பேருந்து நிலையங்களுக்கு அருகில் நடத்துனர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தரக் கோரி நடத்துனர்கள் சங்கத்திடமிருந்து அரசிற்கு முறையீடுகள் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பொதுவாகவே இரவு நேரங்களில் பேருந்து நிலையங்களிலே நடத்துநர்கள், வண்டி ஓட்டுநர்கள் இவர்கள் எல்லாம் தங்குவதற்கு சரியான இடவசதி இல்லாத காட்சியை நானே நேரிலே பார்த்திருக்கிறேன். முறையான மனு வாராவிட்டாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனுடைய முக்கியத்துவம் கருதி இந்தத் திட்டத்தைக் குறித்து பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூல வினா, பேருந்து நிலையங்களுக்கு அருகிலே நடத்துநர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படுமா என்பதுதான். அதுபற்றி எந்தச் சங்கமும், அரசுக்கோ, போக்குவரத்துத் துறைக்கோ எந்தக் கோரிக்கையையும் அனுப்பவில்லை. பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பது என்பது இயலாத காரியம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே குடியிருப்பு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார். அனைத்துப் பேருந்துக் கழகங்களிலும் பணியாற்றுகின்றவர்களுக்கு வசதி செய்துகொடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்தப் பேருந்து ஓட்டுநர்கள் இரவு நேரத்திலே உறக்கத்தோடு இருக்கிறார்களா என்பதை அறிவதற்கு ஏதாவது கருவி இருக்கிறதா? அதைக் கண்டுபிடிப்பதற்கான முறைகள் கையாளப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இரவு நேரத்தில் பேருந்து ஓட்டுநர்கள் மட்டுமல்ல அனைவருமே உறங்கவேண்டிய நேரத்தில் உறங்கத்தான் வேண்டும். இரவு நேரத்தில் வேலை செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தால் அவர்கள் பகல் நேரத்தில்தான் உறங்கியாக வேண்டும். குறிப்பிட்ட ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில், பகலிலும் வேலை கொடுத்து, இரவிலேயும் வேலை கொடுத்து அவர்களை தொந்தரவுக்குட்படுத்துகின்ற நிலையால் பல சிக்கல்கள் ஏற்படும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில், அந்தப் பிரச்சினை இல்லை. தனியார் போக்குவரத்து, தனியார் பேருந்துகள் அல்லது தனியார் சரக்கு உந்துகளில்தான் இந்தப் பிரச்சினை எழுகிறது. அதைத் தடுப்பதற்கு இரண்டு ஓட்டுநர்கள் லாரிகளில் இருக்க வேண்டும் என்று ஒரு உத்தரவைப் போட்டு அரசு இதை நடைமுறையில்

கொண்டுவர இருக்கிறது. நெடுந்தூரம் பயணம் செய்யும்போது, இரண்டு ஓட்டுநர்கள் இருக்க வேண்டும் என்று கொண்டுவர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பேருந்து நிலையத்திற்கு அருகிலே ஓட்டுநர்களுக்கு வீட்டுவசதி இல்லை என்று சொன்னார்கள். சமீபத்தில் இல்லாவிட்டாலும் கொஞ்சம் தூரமாக உள்ள இடங்களில் வீட்டுவசதிகளை அரசு ஓட்டுநர்களுக்குச் செய்து கொடுக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வசதி ஓட்டுநர்களுக்கு மட்டுமா கண்டக்டர்களுக்கும் உண்டா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசினுடைய எண்ணம், அந்தந்தப் பேருந்து நிலையங்களுக்கு அருகில் அவர்களுக்கு வீட்டுவசதி செய்துதர வேண்டுமென்பதுதான். அந்த அடிப்படையிலேதான் ஏற்கெனவே குரோம்பேட்டை, கோவை ஆகிய பல பகுதிகளிலும் அந்தந்தப் பேருந்து நிலையப் பணி மனைகளுக்கு அருகிலே குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இது ஓட்டுநர்களுக்கு மட்டும் என்பதல்ல. போக்குவரத்துத் துறையிலே உள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் படிப்படியாக வீட்டு வசதியைச் செய்துதர வேண்டும் என்று இருக்கின்றோம். நாளடைவில் செய்துதர இருக்கிறோம். போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகின்ற 45,000 தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்து தரப்படவேண்டுமென்ற நோக்கத்தோடுதான், நடப்பாண்டிலிருந்து 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது என்று முடிவு செய்திருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Road Accidents

* 370 Q. —Thiru K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for transport be pleased to state:

(a) the number of road accidents which took place in the past five years around Meenambakkam Airport;

(b) the number of persons who died in these accidents; and

(c) the value of the loss to property?

சாலை விபத்துக்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மீனம்பாக்கம் விமான நிலையத்தைச் சுற்றிலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த சாலை விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இந்த விபத்துக்களில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) சேதமடைந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) 134.

(இ) 16.

(உ) வாகனங்களுக்கு ஏற்படும் இழப்பு பற்றி காவல்துறையால் மதிப்பிடப்படுவதில்லை. எனவே, இதுபற்றிய விவரங்களில்லை.

திரு. க. இராமமூர்த்தி: சென்னை விமான நிலையத்தை ஒட்டியிருக்கின்ற பகுதிகளில் மிக அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாதையைக்கூட வேறு வகையிலே அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து அந்தப் பகுதியிலே சாலை விபத்துக்கள் பெருவாக ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதையொட்டி, அதற்கென்று ஒரு தனிக் குழுவை ஆகஸ்ட் 1977-லே அமைத்தோம். அப்படி அமைக்கப்பட்ட அந்தக் குழு ஆய்ந்து என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது பற்றி ஆய்ந்து வருகின்றன. இந்தக் குழுவிலே, நெடுஞ்சாலைத் துறை இயக்குநர் அவர்களும், போக்குவரத்துத் துறை இயக்குநர், காவல் துறை துணை ஆணையர் மற்றும் பல்லவன் போக்குவரத்துத் துறை புறநகர் பிரிவு மேலாளர் ஆகியோர் இருக்கிறார்கள். மிக அதிகமான வாகனங்கள் அந்தப் பகுதியிலே செல்கின்றன என்ற காரணத்தினாலும், அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் எடையை ஏற்றிச் செல்கின்றன என்ற காரணத்தினாலும், சாலைகளிலே நடந்து செல்பவர்கள் சாலை விதிகளை அனுசரிப்பதில்லை என்ற காரணத்தினாலும், ஊர்தி ஓட்டுநர்கள் சாலை விதிகளை நன்கு புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலும், பேருந்துகளை ஓட்டுகின்றவர்கள் உறக்கமின்றி ஓட்டுகிறார்கள் என்ற காரணத்தினாலும் சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அவர்கள் பல காரணங்களை இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஆய்ந்து பார்த்து, பிறகு என்னென்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று பார்ப்போம். குறிப்பிட்ட இந்தச் சாலையில் விரைவுப் பேருந்துகளை மட்டும் போக அனுமதிக்கலாமா என்பதுபற்றி ஆய்ந்து வருகிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த விபத்துக்களுக்கு இன்னொரு காரணம் கூட சொல்லலாம். விமான நிலையத்திற்குச் செல்கின்றவர்கள் பல நேரங்களில் அவசரமாகச் செல்கின்ற நிலை இருப்பதால், அந்தப் பகுதியிலே சாலை

யினுடைய ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குச் சென்று திரும்பும் போது விபத்துக்கள் ஏற்படும். பாதை நெடுஞ்சாலையாக இருப்பதால் இந்த மாதிரிப் பாதைகளில் லாரிகளும், பஸ்களும் வேகத்தைக் குறைத்துக்கொண்டு போவதற்கு அவசியமில்லாததால், அவர்கள் வேகமாக வருகின்றார்கள். அதனால் இது போன்ற விபத்துக்கள் அதிகமாக இந்த இடத்தில் நடைபெறுகின்றன. அதைத் தவிர்ப்பதற்கு ஒரு பிரிட்ஜோ (Bridge) சப்வேயோ (Sub-way) அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவ்விடத்திலே உள்ள குறைபாடுகளைக் களைவதற்காக காவல் துறை அதிகாரிகளை தற்போது அதிகமாக பணியில் அமர்த்தி, இந்தக் குறைபாடுகளைக் களையலாம் என்று இருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனையைக்கூட பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. ச. எஸ். வெங்கடேசன்: அந்தப் பகுதியிலே ஸ்பீட் பிரேக்கர்ஸ் அமைத்தும், சப்-வே அமைத்தும், விபத்துக்கள் இல்லாமல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஸ்பீட் பிரேக்கர்ஸ் அமைத்து வேகத்தைக் குறைப்பதென்றால், பல்வேறு சாலைகளிலே அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். அது அவ்வளவு உகந்ததாக இருக்குமா என்பது ஐயமாக இருக்கிறது. ஆனால் டேக்கோகிராப்களைக் கட்டாயமாக நடைமுறைக்குக் கொண்டுவரும்போது விபத்துக்கள் குறையும். அரசு போக்குவரத்துக் கழகம் ஒன்றிலே டேக்கோகிராப்கள் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு, அது நடைமுறைக்கு வரும்போது, இந்தக் குறைபாடுகள் களையப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: ஸ்பீட் பிரேக்கர்ஸ் அமைப்பதே எத்தனையோ விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கிறதென்பதை அரசு அறியுமா? விபத்துக்களில் இறந்தவர்கள் 16 பேர்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு அரசு, நஷ்ட ஈட்டை எந்த முறையில் கொடுத்தது அல்லது கொடுக்கவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஸ்பீட் பிரேக்கர்ஸைப் பொறுத்த வரையில், அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று தகவல் இல்லை. விபத்திலே மாண்டவர்கள் 1973, 1974, 1975 1976 ஆகிய ஆண்டுகளில் 16

பேர்கள். எந்த அளவிற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதென்ற தகவல் இல்லை. ஆனாலும், மோட்டார் வாகனச் சட்டப்படி மோட்டார் ஆக்சிடென்ட் கிளெயிம் டிரிபியூனல் இருக்கிறது. அதன்மூலம் வழக்குத் தொடர்ந்து, நஷ்ட ஈடு பெறக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. தனியார் உந்துகளாக இருந்தால் எம்.ஏ.சி.டி. மூலமாகத்தான் நஷ்ட ஈடு கிட்டும். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதாக குறிப்பு இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : குறிப்பாக விமான நிலையத்தின் அருகில், வாகனங்கள் விமான வேகத்தில் வருவதால், குறிப்பிட்ட இடத்திலேயே இந்த விபத்துக்கள் நடக்கின்றன. வெளிநாடுகளில், விபத்து நடக்கும் இடங்களில், 'இங்கே விபத்து நடந்திருக்கிறது' என்று போர்டை வைக்கிறார்கள். அது போன்ற ஏற்பாட்டைச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குறிப்பிட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் நடந்த விபத்துக்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு, தமிழ் நாட்டில், விபத்துக்களால் 2,351 பேர்கள் மாண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 14,291 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் விபத்து ஏற்படுகிறது என்பதை ஆய்ந்து, அங்கே அந்த போர்டுகளை வைப்பது கடினம். விபத்துக்களுக்கு ஓட்டுநர், வாகனத்தின் தன்மை போன்றவை காரணமாக இருப்பதால், இது தேவையில்லை.

திரு. சி. இராமலிங்கம் : மீனம்பாக்கத்திற்கும் பல்லாவரத்திற்கும் இடையில், அநுக்காளைத்தம்மன் கோவில் என்று இருக்கிறது. சக்தி வாய்ந்த அந்த அம்மன்தான் இந்த விபத்துக்களுக்குக் காரணம் என்று பேசுகிறார்கள். எனவே அந்தக் கோவிலுக்கு பூஜை செய்து . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பகுத்தறிவுத் தந்தை பெரியார் வழியில் வந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் கருத்துப் பிரச்சாரம் செய்யலாம்.

Relief Fund.

*42 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(*a*) whether contributions have been received on behalf of the Government in any other way apart from public contributions towards the Chief Minister's Flood Relief Fund, to set right the damages caused by cyclone and flood during last year;

(*b*) whether it has come to the notice of the Government that individuals, political parties and journals have collected funds for the same cause; and

(*c*) whether the Government have received full information about these collections?

நிவாரண நிதி.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கடந்த ஆண்டில் நிகழ்ந்த புயல், வெள்ள பாதிப்புகளைக் களைய, பொது மக்களிடமிருந்து நன்கொடை பெற்ற முதல் அமைச்சர் நிவாரண நிதி நீங்கலாக, அரசின் சார்பில் வேறு எந்த வகைகளிலேனும் நன்கொடை ஏற்கப்பட்டதா ?

(இ) தனியார்கள், அரசியல் கட்சிகள், பத்திரிகைகள் இதே காரணத்திற்காக நன்கொடை வசூல் செய்தது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(உ) இந்த வசூல் பற்றி முழு விபரங்கள் அரசுக்குக் கிடைத்ததா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு அன்றைக்கே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இப்போது நான் இவற்றை மட்டும் சொல்கிறேன். ஏதாவது விட்டுப் போனால், கேட்டால் மற்ற விவரங்களையும் சொல்கிறேன். நன்கொடையாக வரப்பட்ட மொத்தத் தொகை 8,63,57,000 ரூபாய் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதில், செலவினங்கள் செய்தது பற்றி நீண்ட அறிக்கை இருக்கிறது. அதிகமாகச் செலவு செய்யப்பட்டது, சென்னை மாநகராட்சியில் உணவுப் பொட்டலங்கள் கொடுத்ததில் செலவு 6,69,950 ரூபாய் என்று தெரி

[1979 ஏப்ரல் 27

வித்துக் கொள்கிறேன். அதைப்போல, மக்களுக்கு இருமுறை கைத்தறி ஆடைகள் கொடுக்கப்பட்டது, 2,62,29,722.80 ரூபாய் மதிப்புடையது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தது, ஆளுநர் அவர்கள் மூலமாக நன்கொடை வசூலிக்கப்பட்டதா என்று கேட்கப்பட்டபோது, வசூலிக்கப்பட்டதென்று தெரிவித்து, எவ்வளவு தொகை என்று கேட்கப்பட்டதற்கு, அவர் மூலமாக அரசுக்கு வந்தது 49,61,239.47 பைசா என்றும், அந்தத் தொகை பூராவும் வந்துவிட்டதென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேட்கப்பட்ட கேள்விகளில், தணிக்கை செய்யப்பட்டதா என்றும் கேட்கப்பட்டது. உள்ளாட்சி நிதி தணிக்கைக் குழு, 1976 ஆம் ஆண்டு வரையிலும் தணிக்கை செய்து முடித்துவிட்டது. அதற்குப் பிறகு 1—7—1976-லிருந்து 31—12—1978 வரையிலும் அண்மையில் தணிக்கை முடித்திருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, வெள்ளப் பாதிப்புகளைக் களைவதற்கான நிதி வசூலில், மற்ற மாநிலங்கள்—மராட்டிய மாநிலம், குஜராத் மாநிலம்—போன்ற மாநிலங்களிலிருந்து முதலமைச்சர் நிதிக்கு வந்தது போலவே, ஆளுநர் அவர்கள் பல இடங்களில் நிதி கோரி, பல லட்சம் ரூபாய் அளிப்பதாக உறுதிமொழி வந்தது. அந்த உறுதிமொழிக்கேற்ப அந்த அரசுகள் நிதி உதவியை அளித்தார்களா அல்லது சொல்லியதோடு நின்றுவிட்டார்களா? இடையிலே நின்றிருந்தால், அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மற்ற மாநிலங்கள் என்று சொல்லும்போது, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாரதப் பிரதமரிடமிருந்து—அரசிடமிருந்து வருவது வேறு, புயல் நிவாரண நிதிக்காகக் கொடுக்கப்பட்டது வேறு—1,53,50,000 ரூபாய் வரப்பெற்றிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல மற்ற மாநிலங்களிலிருந்து, அவர்கள் சொன்ன தொகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு கணக்கு இருக்கிறது. முழு விபரமும் படிக்க வேண்டுமென்றால் படிக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நிதி வந்ததற்கான விரிவான கணக்கைப் படிக்க வேண்டாமென்றாலும், ஆளுநர் அவர்கள் மூலமாக வசூல் செய்த நன்கொடைத் தொகை முழுமையாக அரசின் மூலமாகச் செலவிடப்பட்டதா, அது அரசின் கணக்குக்கு வந்திருக்கிறதா அல்லது அரசு சிபாரிசு செய்த நபர்களின் மூலமாக, சர்வீஸ் இன்ஸ்டிடியூஷன்ஸ் மூலமாக செலவு செய்யப்பட்டதா அல்லது ஆளுநர் அவர்கள் சிபாரிசு செய்த சர்வீஸ் இன்ஸ்டிடியூஷன்ஸ் மூலமாகச் செலவு செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். நேரடியாக இந்த

1979 ஏப்ரல் 27]

அரசோ முதலமைச்சரோ உத்தரவிடாத நிலையில், பொது நிறுவனங்கள் மூலமாக அந்த நன்கொடைத் தொகையைச் செலவு செய்யும் நிலை ஏற்பட்டால், அதில் அரசியல் கலந்துவிடுமென்ற நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : புயல், வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணமாக வருகிற நிதிகளெல்லாம் அரசுக்கு வந்துவிட்டு, முறையாகச் செலவிடப்படுகிறது. எதிர்காலத்திலும் அப்படிச் செலவிடப்படும். ஆனால் இந்த நாட்டின் பிரஜை என்ற முறையில் எங்கே பாதிப்பு இருந்தாலும், அதைச் சுட்டிக் காட்டுவதற்கு எல்லோருக்கும் உரிமையிருக்கிறது. ஆளுநர் அவர்களுக்கு மற்ற முறையில் உரிமையிருந்தாலும், இன்னாருக்குக் கொடுங்களென்று சொல்ல அதிகாரமில்லை. அவரிடம் வந்தால், அவைகளை அரசிடம் அனுப்ப உரிமை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

அறநிலையத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அறநிலையத்துறை அமைச்சர் கூறிய சில கருத்துக்கள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு உரிமைப் பிரச்சினையாகும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவரவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையை அனுமதிக்கலாமா என்ற அடிப்படையிலே, 'பிரைமாஃபேசி கேஸ்' இருக்கிறதா என்பதை அறிய, அவையிலே உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கு முன்பு, தாங்கள் அதை அனுமதிப்பதற்கு முன்பு, ஒன்றை அறிய விரும்புகிறேன். தங்களுடைய மேலான உரிமைகளிலோ, தாங்கள் விதிக்கின்ற தீர்ப்பிலோ நான் குறுக்கிடவில்லை. ஆனால் எந்த விதிகளின்கீழ் மாண்புமிகு உறுப்பினரவர்கள் உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தந்திருக்கிற குறிப்புகளிலிருந்து என்னால்

[திரு. இராம. வீரப்பன்] [1979 ஏப்ரல் 27

(முற்பகல் 11.10)

தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்த அவையிலே பெயர் சொல்லப்படாமல், பெயர் குறிப்பிடப்படாமல் இந்த அவைக்குத் தரப்பட்ட தகவல் ஒன்றை அடிப்படையாக வைத்து, வெளியிலே இருக்கிற ஒருவருக்காக, அவருடைய பெயரையும் குறிப்பிடாமல் இங்கே ஒரு அவை மீறல் பிரச்சினை என்று கொண்டுவருகிறபொழுது, அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிற தகுதியை அந்தப் பிரச்சினை பெற்றிருக்கிறதா என்பதை, இப்பொழுதுதான் எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறபடியால், தங்கள் மேலான முடிவுக்கு வைக்கிறேன். தாங்கள் முடிவைத் தெரிவித்து விட்டால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய மேலவை விதி 157-ன் கீழ் நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் 20-4-1979 அன்று நடைபெற்ற அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் மீது சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் ஒரு தவறான தகவலை அரசியல் நோக்கத்தோடு வேண்டுமென்றே அதுவும் ஒரு முன்னாள் அமைச்சர் மீது களங்கம் கற்பிக்கக்கூடிய வகையில் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்ற காரணத்தால், அது அவையினுடைய உரிமை மீறிய செயலாகும் என்பதற்கான சில கருத்துக்களை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் வேண்டுமென்றே கொடுத்திருக்கிறார், அல்லது உள்நோக்கத்தோடு சொல்லியிருக்கிறார் என்பதை அமைச்சருடைய பேச்சிலிருந்து உறுப்பினர் புரூவ் பண்ண வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்தப் பிரச்சினை வரும். இப்பொழுது சொல்லுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் எல்லாவிதமான ஆதாரங்களையும் பெறக் கூடிய இடத்தில் இருக்கிறார்கள். அவர் பேசுகின்ற நேரத்தில் தெளிவாக காஞ்சீபுரத்திலுள்ள முன்னாள் அமைச்சர் ஒருவர் 16 ஏக்கர் கோயில் நிலம் வைத்திருக்கிறார் என்றும் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் கேட்டதற்கு நேராக பதில் சொல்லுங்கள். உங்களுக்கு இதை எப்படி எடுத்துக்கொள்வதற்கு உரிமை இருக்கிறது என்று அமைச்சர் கேட்கிறார். வெளியிலே இருக்கிற ஒருவரைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. நீங்கள் இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்பதை விளக்குங்கள்.

1979 ஏப்ரல் 27]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இதிலே உரிமை என்ன இருக்கிறது என்று கேட்டால், முன்னாள் அமைச்சர் என்று ஒருவரைக் குறிப்பிட்டு அது பத்திரிகையில் எல்லாம் வந்திருக்கிறது. அந்த அமைச்சர் யார் என்று பெயர் கூட . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உங்களுக்கு அதை எழுப்புவதற்கு எப்படி உரிமை இருக்கிறது என்பது தான் இங்கே பிரச்சினை. அதை மட்டும் விளக்குங்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அமைச்சர் அவர்கள் முன்னாள் அமைச்சருடைய பெயரைச் சொல்லாதபொழுது, பத்திரிகையில் அவர்களாக முன்னாள் அமைச்சருடைய பெயரைப் போட்டிருந்தால் பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினையை வேண்டுமானால் கொண்டு வரலாம். இங்கே அமைச்சர் பேசிய பொழுது, இன்னார் தான் வாங்கினார் என்று பெயரைக் குறிப்பிட்டாரா? சாதாரணமான மரபே ஒருவர் மீது ஏதாவது புகார் சொல்கிறபோது, அவர் இந்த அவையிலே இல்லையென்றால், அவருடைய பெயரைக் குறிப்பிடக் கூடாது என்பது நம்முடைய மரபு. அது அதிகாரிகளாக இருந்தாலும், முன்னாள் அமைச்சர்களாக இருந்தாலும், பொருந்தும். அந்த அடிப்படையில் அந்த மரபைக் காக்கின்ற வகையிலேதான் அமைச்சரவர்கள் பெயரைக் குறிப்பிடாமல் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் கேட்பது எந்த அடிப்படையில் உறுப்பினர் இதை உரிமை மீறலாகக் கொண்டு வந்திருக்கிறார் என்பதுதான். அதுதான் மிக முக்கியமான விஷயம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்காக ஒரு விளக்கம் சொல்கிறேன். அமைச்சரவர்கள் பேசினார்களே அப்பொழுது தாங்கள் எழுந்து எந்த அமைச்சரைப் பற்றிச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டிருக்க வேண்டும். ஒரு வினாவை எழுப்பி அந்த வினாவுக்கு அவரிடமிருந்து விடை பெற்றிருந்தால், இந்தப் பிரச்சினைக்கு இடம் இருக்கிறது. அப்படியும் அன்றைக்கு நடக்கவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் குறிப்பிடும் பொழுது, காஞ்சிபுரத்திலுள்ள முன்னாள் அமைச்சர் என்று சொன்னார். நான் அவைக்கு ஒன்றை மிக்க பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்,

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் வேண்டுமென்றே பெயரை அவாயிட் பண்ணியிருப்பதிலிருந்து உள்நோக்கம் இல்லை என்று தெரிகிறது அல்லவா ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: காஞ்சிபுரத்திலிருந்து 2 பேர் இருவரை அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். ஒருவர் பேரறிஞர் அண்ணா. உண்மையிலேயே பேரறிஞர் அண்ணா மீது இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் சொல்ல வாய்ப்பு இல்லை. இரண்டாவதாக அங்கே அமைச்சராக . . . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: பேரறிஞர் அண்ணா அவர்கள் மீது குற்றச்சாட்டு சொல்ல வாய்ப்பு இல்லை என்பது அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்களை உறுப்பினர் இதிலே சம்பந்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : காஞ்சிபுரம் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தாலே, காஞ்சிபுரத்திலே அமைச்சர்களாக இருந்தவர்கள் இரண்டு பேர்கள்தான்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : காஞ்சிபுரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள் என்றால் அண்ணா அவர்கள் முதல்மைச்சராக இருந்தார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்களை உங்களுக்காக இங்கே ஏன் இழுத்துக்கொண்டிருக்கிறீர்கள் ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அவை முன்னவர் அவர்கள் இன்னும் உதவி செய்கிறார்கள். காஞ்சிபுரத்திலே என்று சொன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். ஆகவே அமைச்சராக இருந்தவர் என்று சொன்னால் ஒருவர் தான் காஞ்சிபுரத்திலிருந்து அமைச்சராக இருந்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : முன்னாள் அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்திலே இருக்கிறார் என்று தெரிவித்ததாகத்தான் குறிப்பேட்டிலே இருக்கிறது. மேலும் எந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது, எவ்வளவு ஜாக்கிரதையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, யாரையும் புண்படுத்தக் கூடாது என்பதற்காக சபைக்குத் தகவல் தர வேண்டிய கடமை உணர்வின்பால் தரப்பட்டிருக்கிறது என்பது வேறு விஷயம். முன்னாள் அமைச்சர்களில் பலர் இப்பொழுதுகூட காஞ்சிபுரத்திலே குடியிருக்கலாம். அதிலே யாராவது

ஒருவர் இருக்கலாம். ஆகவே யார் என்று தெரியாமல் ஆட்டுக் குட்டியை, தண்ணீருக்குள்ளே போட்டுக்கொண்டு விலை பேசுவதென்பார்கள்—அதைப் போல எப்படிப் பேச முடியும் என்பதுதான், என் கேள்வி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : காஞ்சிபுரம் விஷயம் ரெக்கார்டில் இருக்கிறது. ஆனால் உறுப்பினர் கொண்டு வந்திருக்கக்கூடியது எப்படி உரிமை மீறலில் வருகிறது என்பதை மட்டும் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : காஞ்சிபுரம் என்ற ஊர் இருப்பதை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தைப்பற்றி அமைச்சரும் இங்கே பேசியிருக்கிறார். காஞ்சிபுரத்திலே இப்பொழுது குடியிருக்கிற முன்னாள் அமைச்சர்களில் ஒருவராக இருக்கலாம் என்று நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைத் தலைவராகிய எனக்கு உறுப்பினர் தருகின்ற இந்தத் தகவல் மட்டும் போதாது. அங்கே வேறு யாரும் கிடையாது என்கிற தகவலுக்கு நான் போக வேண்டிய அவசியமில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி நான் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்தால், என் மீது கூட தாங்கள் நடவடிக்கை எடுக்கலாம். அமைச்சர் அவர்கள் எந்த அளவிற்கு தவறான தகவலை அவைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர் தி.மு.க.-வில் இருக்கிறார். இது கழகத்தைக் களங்கப்படுத்த . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுபற்றி எனக்குக் கவலையில்லை. சட்டப்படி என்ன உரிமை மீறல் நடந்திருக்கிறது என்பதுதான் பிரச்சினை. நீங்கள் இரண்டு பேரும் ஒரே கட்சியில் இருக்கிறீர்கள் என்பது அவைக்குப் பிரச்சினை அல்ல.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அவைக்கு என்ன பிரச்சினை என்றால், ஒரு முன்னாள் அமைச்சர் மீது—யாராக இருந்தாலும் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், இப்பொழுது இருக்கக் கூடிய அமைச்சர் களங்கம் கற்பிக்கக் கூடாது என்ற அடிப்படையில் இந்த உரிமைப் பிரச்சினையை நான் கொண்டு வருகிறேன். காஞ்சிபுரத்திலே இருக்கக்கூடிய முன்னாள் அமைச்சர் குத்தகை எடுத்து பாக்கி செலுத்தவில்லை என்று அமைச்சர் சொன்னது அவர்களுடைய பத்திரிகையில் . . . .

[1979 ஏப்ரல் 27

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். அதை அன்றைக்கு அமைச்சர் சொன்னபோது, கேட்க விட்டிருந்து, நீங்கள் தான் பொறுப்பு. அன்றைக்கு அவர் சொன்னபொழுது, அது யார் என்பதைப்பற்றி வினா எழுப்பியிருந்தால், அதையும் அவர் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். அப்படி ஏற்படுகிறபொழுது, அவைக்குத் தப்பான தகவலா, இல்லை பர்ட்டிகுலர் நேம் கிடைக்கிறதா என்பது தெரிந்து விடும். அது இல்லாதபோது, கொஞ்சம் ஐயப்பாடு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பிரைமா பேசி கேசுக்கு அது எப்படி அடிப்படையாக முடியும் ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நாங்கள் குறுக்கிடாததற்குக் காரணம் நாங்களும் விவரங்கள் தெரியாமல் தவறான தகவலை அவைக்குத் தரக்கூடாது என்ற காரணத்தினால்தான். அதனால்தான் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, யாரைப்பற்றிச் சொல்லுகிறார் என்கின்ற விவரங்களை நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். பிறகு விவரங்களையெல்லாம் சேகரித்து இந்த அவைக்கு உண்மையான தகவலைத் தருவதன் மூலம்—அண்ணா அவர்கள் கூட முதலமைச்சராக இருந்தபோது ஒருமுறை தவறான தகவலைச் சொல்லிவிட்டு அவரே மறுபடியும் அவைக்கு ஓடோடி வந்து நான் தவறான தகவலைக் கொடுத்து விட்டேன் . . .

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அவைக்குத் தவறான தகவலைத் தருகிறார்கள் என்று இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரிந்தால், அதுவும் வெளியிலே இருக்கிறவர்களைப்பற்றிச் சொல்வதாகத் தெரிந்தால், இங்கே எத்தனையோ தடவை விவாதங்களின்போது பல பேர் குறுக்கிட்டு எதிர்க்கட்சிக்காரர்கள் மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறார்கள். ஆகவே தவறான தகவல் என்றால், அதை மறுப்பதற்கு யாருக்கும் உரிமை இருக்கிறது. அதற்கு இப்படிப்பட்ட ஒரு உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வருவதற்கு எங்கே விதிகளில் இடம் இருக்கிறது ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தவறான தகவலா இல்லையா என்பது விசாரணைக்குப் பிறகு முடிவாக வேண்டிய விஷயம். உறுப்பினர் இரண்டு விஷயங்களை நிரூபிக்க வேண்டும். ஒன்று இன்னாரைத்தான் இது குறிப்பிடுகிறது, ஆகவே அவருக்கு அவையிலே இது ஒரு பெரிய அம்சம். இரண்டாவது இதில் உறுப்பினர் சம்பந்தப்படுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது ?

979 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அப்படி அமைச்சர் அவர்கள் சான்னது பத்திரிகையில் வந்ததற்குப் பிறகு, யாரை அமைச்சர் குறிப்பிட் ருக்கிறார் என்று உறுப்பினர் சொல்லுகிறாரோ அவரே ஒரு மறுப்பு காடுத்திருந்து, அந்த உண்மைகளை எடுத்து வைத்துக்கொண்டு சொன்னால் ட பொருள் இருக்கிறது. உறுப்பினர் இங்கே அந்தச் செய்தியை சகரித்தாரா ? சம்பந்தப்பட்டவர் இன்னும் மறுப்பு கொடுக்கவில்லை. அவர் றுப்பு கொடுத்திருந்து, அது பத்திரிகையில் வந்திருந்தால் கூட, ஒரு வேளை ந்த அடிப்படையிலே வந்திருந்தால் கூட . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது எப்படி ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சம்பந்தப்பட்ட இரண்டு . . . தாரமாக இருக்கலாம் அல்லவா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு விஷயங்கள் தான் எனக்குத் தளிவாகத் தெரிய வேண்டும். சம்பந்தப்பட்டவர் யார் என்பது இன்னும் யப்பாட்டுக்குரியதாக, வினாவுக்குரியதாக இருக்கிறது. இது ஒன்று. ரண்டாவதாக சம்பந்தப்பட்டவர் யாராக இருந்தாலும் அவர் மீது சான்னது உண்மைதானா என்பது. இந்த இரண்டும் உறுப்பினரால் தரிவிக்கப்பட வேண்டிய விஷயங்கள். இந்த இரண்டையும் நிரூபிக்க றுப்பினர் என்ன பண்ணப் போகிறார்கள் ?

திரு. ம. சங்கரலிங்கம் : இந்தப் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் சான்ன ஒரு கருத்து இவரைத்தான் இப்படிக் குறிக்கிறது என்பது ஒன்று; வர் எழுப்புவதற்கு இது எப்படி உரிமையாக வருகிறது என்று இரண்டு னாவை உறுப்பினரைக் கேட்கிறீர்கள். இந்த அவையிலே தவறான தகவலைத் ந்தாலே அது உரிமைப் பிரச்சினையாக ஆகிறது. அது இந்த உறுப்பினரைத் ான் குறிக்க வேண்டும் அல்லது வெளியிலே இருக்கின்ற ஆளைத்தான் குறிக்க வண்டும் என்கிறதில்லை. தவறான தகவலா இல்லையா என்பதைப்பற்றிப் பசுவதற்கு உறுப்பினருக்கு அனுமதி கொடுத்தால் தானே அவர் விளக்கம் தர முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைத் தான் விளக்குங்கள் என்று றுப்பினரிடம் நான் சொல்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் அவர்கள் என்ன தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால்—காஞ்சிபுரத்திலிருந்து முன்னாள் அமைச்சர் யாரும் அரசாங்கத்தினுடைய நிலத்தை அவர் குறிப்பிட்ட இந்த 3 ஆண்டு காலத்தில் குத்தகைக்கு எடுக்கவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சம்பந்தப்பட்டவர் ஏதேனும் அறிக்கையாவது விட்டிருந்தால் சரி. நீங்கள் சொல்லுவதை மட்டும் வைத்துக் கொண்டு நான் எப்படி பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப முடியும் ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் இருக்கிறது என்று சொல்லி விட்டால், நானும் ஒத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்துழைக்க வேண்டும். இவ்வளவு சின்ன சந்தேகத்திற்கு இடம் வருகிறது என்பதற்காக மட்டும் இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னால், எப்படி அனுப்ப முடியும் ? விஷயம் இது தான். அவர் சொல்லியதில் 'பேட் மோட்டிவ்' இல்லை என்பது தெரிகிறது கூடுமான வரையில் பெயரை அவர் 'அவாய்ட்' பண்ண முயற்சி பண்ணியதிலிருந்து 'பேட் மோட்டிவ்' இல்லையென்று தெரிகிறது. தகவல் தவறானதா என்றால், அது தவறானது என்று உறுப்பினர் புரூவ் பண்ணுவதற்கு என்ன 'எவிடென்ஸ்' இருக்கிறது ? உறுப்பினர் உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு என்ன 'எவிடென்ஸ்' வைத்திருக்கிறார் ? அந்த 'எவிடென்ஸ்' அவைக்குத் தேவை. இந்த அவைக்கு 'எவிடென்ஸ்' இல்லாமலேயே எல்லாவற்றையுமே சந்தேகத்தில் வைத்துக்கொண்டு எப்படி பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப முடியும் ?

(முற்பகல் 11-20)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நானே அவரைச் சந்தித்து அவரிடத்திலே ஆதாரங்கள் கேட்டு வந்திருக்கிறேன். நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். நானும் இந்த அவையிலே உறுப்பினராகத்தான் இருக்கிறேன். நான் சொல்வதிலே தவறு இருந்தால், எனக்கு அளிக்கும் தண்டனையை ஏற்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீங்கள் தயவு செய்து . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அவர் 1965 ஆம் ஆண்டு அமைச்சராக இல்லாத நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பிலே இல்லாத நேரத்தில், குத்தகைக்கு பொது ஏலத்திலே எடுத்தார்கள். 1974 ஆம் ஆண்டு மே மாதம் அமைச்சராகும்போது . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த விவரங்கள் எல்லாம் தேவையில்லை. அவர் சொல்லியிருக்கிறார், குறிப்பாக எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது, குடக்கூலி வரவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆனால், அந்த விஷயத்திற்கு உரியவர் யார் என்று சொல்லவில்லை. எனக்கு இரண்டு விஷயத்திற்கு உரியவர் யார் என்று சொல்லவில்லை. எனக்கு இரண்டு விஷயங்கள் 'ப்ரூவ்' ஆக வேண்டும். ஒன்று, அவர் யார் என்பது 'ப்ரூவ்' ஆக வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : யார் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்கிறது. காஞ்சிபுரத்திலே இருக்கிற முன்னாள் அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள். அவர் இல்லை, வேறொருவர் என்று சொன்னால், நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்லவேண்டியதைச் சொல்லியாயிற்று. பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

3. அரசின் தீர்மானங்கள்.

(1) மேலவை விதி 42 (5), அதிலுள்ள வரம்பைப் பொறுத்தவரையில், நிறுத்திவைக்கப்படுதல் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி, அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி, அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு.

(1) கோவிலாங்குளம் விவசாயக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் அடகு வைத்திருந்த ரூ. 2 இலட்சம் பெறுமானமுள்ள நகைகள் திருட்டுப் போனதால் சங்க உறுப்பினர்கள் படும் இன்னல் குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): தலைவர் அவர்களே,

"இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுகாவிலுள்ள கோவிலாங்குளம் விவசாய கூட்டுறவு நாணயச் சங்கத்தில் அடகு வைத்திருந்த சுமார் இரண்டு இலட்சம் பெறுமானமுள்ள நகைகள் 1978-ஆம் ஆண்டு மே மாதம் திருடு போனதாலும், இலட்சக் கணக்கான மதிப்புள்ள நகைகள் சங்கத் தலைவரால் கையாடல் செய்யப்பட்டுள்ளதாலும், நகைகளை அடகு வைத்துள்ள உறுப்பினர்கள் படும் இன்னல்கள் குறித்து",
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(2) அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் சில்லரைச் செலவின ஊழியர்களுக்கு ஜனவரி மாதத்திற்கான ஊதியம் தரப்படாதது குறித்து.

மாண்புமிகு திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் சில்லரைச் செலவின ஊழியர்களுக்கு ஜனவரி மாதத்திற்கான ஊதியம் தரப்படாததால் அந்த ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து"
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை † ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 340–341 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.
† 341 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(3) தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினத்திலுள்ள ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினத்திலுள்ள ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர்கள், பஞ்சப்படி உயர்வு மற்றும் பல கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்ததால் ஏற்பட்டுள்ள நிலவரம் குறித்து",
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை *ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, அந்த ஆலையில் வேலை செய்யும் 'கேசுவல் லேபரர்'களுக்கு நிவாரணம் அளிப்பது சம்பந்தமாக அந்த ஒப்பந்தத்தில் ஏதாவது வகை செய்யப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நாகப்பட்டினத்திலுள்ள ஸ்டீல் ரோலிங் மில்லைப் பொறுத்தவரையில், ஒரு விசித்திரம் என்னவென்றால், ஒரே பெயரில் இரண்டு யூனியன்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஏ.ஐ.டி.யூ.சி. எங்களுக்குச் சொந்தம் என்றார்கள். சி.ஐ.டி.யூ. இல்லை, எங்களுக்குத்தான் சொந்தம் என்றார்கள். இரண்டு சாராரையும் அழைத்து ஒரு ஒப்பந்தம் செய்து நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் ஒர்க்கர்ஸ் யூனியனாக இப்போது ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அந்த ஒப்பந்தத்தின் நகல் வேண்டுமென்று சொன்னால், சி.ஐ.டி.யூ. தலைவரிடமிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தம் மட்டுமே இரண்டு பக்கங்களுக்கு மேல் இருக்கும்.

திரு. ஆ. நல்லசிவன்: 'கேஷீவல்' லேபரராக இருப்பவர்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு அந்த ஒப்பந்தத்திலே ஏதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், அங்கே இருக்கிற ஏ.ஐ.டி.யூ.சி.-க்கும் சி.ஐ.டி.யூ.-க்கும் உள்ள சண்டைக்குக் காரணம் என்ன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். நான் கேட்பதற்குக் காரணமே இதர கோரிக்கைகளை தொழிலாளர் சங்கங்கள் வலியுறுத்தவில்லை என்று போட்டிருக்கிறார்கள். அக்ரிமெண்ட்லே ஆறாவது ஷரத்தாக ஒரு பிரச்சினையை வேஜ் கமிஷனருக்கு விடுவது என்று

---

* 341–342 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன. நான் குறிப்பிலே இருப்பதைத்தான் எடுத்துக்காட்டினேன். அதைச் சொல்வதற்குப் பதிலாக அங்கே போய் கேள் என்பது எப்படி முறை? அடுத்தபடியாக, 24—1—1979-ஆம் நாளன்று வேலைநிறுத்தம் ஆரம்பித்து, 20—3—1979 ஆம் நாளன்று முடிந்திருக்கிறது. ஏறக்குறைய இரண்டு மாத காலம் ஸ்ட்ரைக் நடந்திருக்கிறது. ஆகவே, லேபர் டிப்பார்ட்மென்ட் இன்னும் துரிதமாக இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சில தகவல்கள் தரும்போது அதைப் புறக்கணிப்பதற்கில்லை. ஒரு பெக்கூலியர் பொசிஷன் இருப்பதை எடுத்துக்காண்பித்தேன். ஒரே பெயரில் இரண்டு சங்கங்கள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தாங்கள் ஒரு தொழிற் சங்கத் தலைவராக இருந்ததால் அந்த நினைப்பு ஏற்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எனக்கு வேதனையாக இருக்கிறது. அவர்கள் கோர்ட் வரைக்கும் போயிருக்கிறார்கள். எது உண்மையான சங்கம் என்று நிர்ணயிப்பதற்கு, இரண்டு சாராருக்கும் வம்பு வேண்டாம் என்று கையெழுத்துப் போடுங்கள் என்று கேட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறோம். 20—3—1979 அன்று ஒப்பந்தம் ஏற்பட்டது. 22—3—1979 முதல் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். 26—3—1979 முதல் உற்பத்தி தொடங்கியது. நிலைமை தற்போது மிகவும் சுமுகமாக உள்ளது.

3. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. க. இராமமூர்த்தி, திரு. ஏ. ஆர். தாமோதரன், திரு. கோ. சி. மணி, திரு. ஆ. நல்லசிவன் ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற (1) டாக்டர் எச். வி. ஹாண்டே, (2) திரு. க. இராமமூர்த்தி, (3) திரு. ஏ. ஆர். தாமோதரன், (4) திரு. கோ. சி. மணி, (5) திரு. ஆ. நல்லசிவன் ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்து எடுக்கப்படவேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"1979-80-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற (1) திரு. பி. ஆர். தாமஸ், (2) திரு. வி. ஆர். பெரியண்ணன், (3) திரு. என். சுந்தரேசத் தேவர், (4) திரு. இரத்தின பாலகுருசாமி, (5) திரு. டி. வி. டி'மான்டி ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்'
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற (1) திரு. பி. ஆர். தாமஸ், (2) திரு. வி. ஆர். பெரியண்ணன், (3) திரு. என். சுந்தரேசத் தேவர், (4) திரு. இரத்தின பாலகுருசாமி, (5) திரு. டி. வி. டி'மான்டி ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) சட்டப்பேரவையில் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற (1) திரு. டி. சந்தோஷம், (2) திரு. ஆ. பால சுப்ரமணியம், (3) திரு. பி. எல்லமந்தா, (4) திரு. கே. எஸ். அப்துல் வகாப்,

(5) திரு. எச். எல். முருகேசன், ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் ”

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை —

“ 1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற (1) திரு. டி. சந்தோஷம், (2) திரு. ஆ. பாலசுப்ரமணியம், (3) திரு. பி. எல்லமந்தா, (4) திரு. கே. எஸ். அப்துல் வகாப், (5) திரு. எச். எல். முருகேசன், ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் ”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

(5) சட்டப் பேரவையின் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே,

“ 1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற (1) திரு. சி. இராமலிங்கம், (2) திரு. கு. மா. பாலசுப்பிரமணியம், (3) திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர், (4) திரு. ப. மாணிக்கம், (5) டாக்டர் இரா. சனார்த்தனம் ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் ”

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

“ 1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற (1) திரு. சி. இராமலிங்கம், (2) திரு. கு. மா. பாலசுப்பிரமணியம், (3) திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர், (4) திரு. ப. மாணிக்கம், (5) டாக்டர் இரா. சனார்த்தனம் ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் ”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. தனி உறுப்பினர் தீர்மானங்கள்.

மேல் உயர்நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம் பற்றி ஆராய குழு அமைப்பது குறித்து விவாதம்—தொடர்ச்சி.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் சென்ற ஆண்டு புதிதாகப் புகுத்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளின் செயல்களையும், அங்கு கற்பிக்கப்படுகிற கல்வி நிலையையும் அதில் என்னென்ன திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதையும் ஆராய்வதற்காக இந்த அவையின் 7 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நான் சென்ற ஆண்டு கொண்டு வந்தேன். அது பல காரணங்களால் மாற்றிப் போடப்பட்டு, இப்போது வந்திருக்கிறது. ஆனால், இதை விவாதிப்பதற்கு தக்க நேரம் இதுதான் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், புதுத் திட்டத்தைக் கொண்டுவந்து இப்போது ஓராண்டு ஆகியிருக்கிறது. இன்னும் ஓராண்டு இருக்கிறது. எனவே, பாதியளவு கடந்த பிறகு இந்தத் திட்டம் எந்த அளவுக்கு பயனுடையதாக அமைந்திருக்கிறது, எந்த அளவுக்கு இதை இன்னும் பயனுடையதாக மாற்றலாம்; அதற்கு நாம் என்னென்ன வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று ஆராய்வது மிகவும் இன்றியமையாதது. அப்படி ஆராய்கிற நிலையில் ஒரு குழுவை அமைத்து அதனை ஆராய வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அந்தத் தீர்மானத்தையொட்டி எனது கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

நமது கல்வித் திட்டத்தில் மாற்றங்கள் வேண்டுமென்பதை இன்று நேற்றல்ல, சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலிருந்தே பலரும் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். 1917 ஆம் ஆண்டு முதலே இந்தக் கருத்து நிலவி வந்தது. 1929 ஆம் ஆண்டில் ஆர்டாக் குழு ஒரு அறிக்கையைத் தந்தது. அதற்குப் பிறகு 1934-ல் சாப்ரு குழு கல்வி பற்றிய ஒரு அறிக்கையைத் தந்தது. அதற்குப் பிறகு 1944 ஆம் ஆண்டில் சார்ஜெண்ட் குழு ஒரு அறிக்கையைத் தந்தது. இப்படி நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே 3 குழுக்கள் கல்வி முறையில் மாற்றம் வேண்டுமென்று தங்கள் அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். நாடு விடுதலையடைந்ததற்குப் பிறகு 1952 ஆம் ஆண்டில் டாக்டர் எ. லட்சுமணசுவாமி முதலியார் தலைமையில் அமைந்த குழு, கல்வி முறையில் மாற்றம் வேண்டுமென்று சொன்னது. இப்படி தொடர்ந்து இந்த நான்கு குழுக்களும் கல்வி முறையில் மாற்றம் வேண்டுமென்று வற்புறுத்தின.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 27]

மிடில் ஸ்கூல்களை நடுநிலைப் பள்ளிகள் என்கிறோம். ஹைஸ்கூல்களை இடை நிலைப் பள்ளிகள் என்கிறோம். இடைநிலைப் பள்ளியின் தரத்தில் மாணவர்களுக்குத் தொழிற் கல்வியை அளிக்க வேண்டுமென்று அவை வற்புறுத்தின. மாணவர்களுக்கு வெறும் படிப்புத் திட்டம் மட்டுமிருக்கக் கூடாது. அதாவது அகெடமிக் சிஸ்டம் அடிப்படையிலான கல்வி மாத்திரம் போதாது. எட்டாவது வகுப்போடு பொதுப் படிப்பை நிறுத்தி விட்டு, இடைநிலைக் கல்விக்கு மாணவர்கள் வருகிறபோது, அவர்களுக்குத் தொழிற் கல்வியை அளிக்க வேண்டுமென்ற கருத்தை அவர்கள் வற்புறுத்தி யிருக்கிறார்கள். டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் குழு தமது அறிக்கையில் தொழிற் கல்விப் பிரிவை எஸ்.எஸ்.எல்.சி.க்குப் பிறகு உறுதி யாகக் கொண்டு வர வேண்டும்—அதாவது ஹையர் செகண்டரியில் தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. அதை யொட்டி 1964 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கோத்தாரி கல்விக் குழு எல்லா வற்றையும் தெளிவாக ஆராய்ந்து, பல ஆய்வுகளைச் செய்து, அதற்குப் பிறகு 10 ஆண்டு உயர்நிலைக் கல்வி, 2 ஆண்டு மேல்நிலைக் கல்வி, அதற்குப் பிறகு 3 ஆண்டு கல்லூரிக் கல்வி என்று வரையறை செய்தது. அதையொட்டி 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய குழுவும் கல்வி சீர்திருத்த அமைப்புக் குழுவும் சேர்ந்து அளித்த அறிக்கையில் நாடு முழுவதும் ஒரு சீரான கல்விமுறை இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியது.

மாநில கல்வியமைச்சர்கள் மாநாடு டெல்லியில்கூட அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டது. அந்த முறையில் சென்ற ஆண்டு தமிழகத்தில் மேல் நிலைக் கல்வி முறையை நாம் புகுத்தியிருக்கிறோம். இதற்காக 1973 ஆம் ஆண்டிலிருந்தே முயற்சிகளை மேற்கொண்டு 11 ஆண்டுக் கல்வியை பத்து ஆண்டுக்குள் சேர்த்து, அதனால் எந்த விதத்திலும் தரம் தாழ்ந்துவிடாமல் பாடத் திட்டங்களின் தரத்தை உயர்த்தி, இறுதியில் சென்ற ஆண்டு மேல் நிலைப் பள்ளிகளைத் தமிழகத்தில் துவங்கினோம்.

இவ்வாறு தொடங்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் கடந்த ஓராண்டுக் கால மாகச் செயல்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் 912 பள்ளிகளில் மேல் நிலைக் கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாம் எந்த நோக்கத்தோடு மேல்நிலைப் பள்ளிக் கல்வி முறையைக் கொண்டு வந்தோமோ அந்த

1979 ஏப்ரல் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

நோக்கத்தில் அவைகள் செயல்படுகின்றனவா என்று தற்போது ஆராய வேண்டியது அவசியம் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களுக்கும் அவருடைய துறையினருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றிய கால கட்டத்தில் தமிழ் நாட்டில் எழுந்த பல்வேறு மாறுபட்ட கருத்துக் களைப் பார்த்தால், நமது கல்வி அமைச்சரைத் தவிர வேறு ஒருவர் இங்கே கல்வியமைச்சராக இருந்திருந்தால், அதனால் அவருக்கு ஒரு சஞ்சலம்கூட ஏற்பட்டிருக்கும். வேறு ஒருவர் கல்வி அமைச்சராக இருந்திருந்தால் ஒரு பாதி கல்லூரியிலும் ஒரு பாதி பள்ளிகளிலும் இருக்கட்டும் என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கும். அந்த அளவுக்கு மாற்றுக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஆனால் நமது கல்வியமைச்சர் அவர்கள் அதில் ஒரு முடிவான கருத்தோடு இருந்தார்கள். 'எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்பதற்கு ஏற்ப அவர்கள் செயல்பட்டார்கள். இவ்வாறு 1917 ஆம் ஆண்டிலிருந்து இப்படிப்பட்ட சிந்தனை தோன்றி, அதற்குப் பிறகு ஏற்பட்ட கல்விக் குழுக்கள் பலவாற்றாலும் வலியுறுத்தப்பட்டு இறுதியாக 1972-ல் முடிவெடுக்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டு முதல் உயர்நிலைக் கல்வி படிப்பை 10 ஆண்டுக்கால படிப்பாக மாற்றி, அதற்கான முறையில் பாடத் திட்டங் களையும் மாற்றி செயல்படுத்திய பிறகு, பாதி வழி வந்த பிறகு, கப்பலையும் பாய் மரத்தையும் மாற்றுவதுபோல் இருக்கக்கூடாது. உயர்நிலைப் பள்ளி களில்தான் இந்த மேல்நிலைக் கல்வி வகுப்புகள் இருக்க வேண்டும், கல்லூரியில் இருக்கக்கூடாது என்ற உறுதியான, தெளிவான முடிவை எடுத்து, இன்றைய தினம் இந்தக் கட்டத்தை அடைந்திருக்கிறோம். அதற்காக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதோடு அவர்களோடு துணையிருக்கிற, உறுதியான கொள்கையோடு இருந்து செயல்படுகிற கல்வி இலாக்காவினரையும் நான் பாராட்டுகிறேன். அந்தத் துறையின் அனைத்து அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர்கள் இந்தப் பாராட்டில் மயங்கிவிடக்கூடாது. இதற்குப் பின்னாலே செய்ய வேண்டிய அனைத்துப் பணிகளையும் அவர்கள் செய்ய வேண்டு மென்பதற்காகத்தான் முதலிலே எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்ன? வெறும் ஏட்டுப்படிப்பைப் படித்துவிட்டு பட்டம் பெற்ற வாலிபர்கள் எல்லாம் நல்ல இளங்காளைகளாக, 20 வயதாகிறபோது நல்ல சட்டையைப் போட்டுக்கொண்டு அதிலே பேனாவை வைத்துக்கொண்டு வேலை தேடித்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 27

தரும் நிலையங்களை நாடிச் செல்லுகிற நிலையைக் காண்கிறோம். அவர்கள்தான் இன்றையதினம் சமுதாயத்தில் அடிமைகளாக வாழ்கிறார்கள். இதில் சந்தேகமே வேண்டாம். சாதாரண படிக்காத கட்டிடம் கட்டுகிற கொத்தனார் வேலை பார்க்கிறவரையும், அங்கே கையாளாக வேலை பார்க்கிறவரையும் இன்றைய தினம் நம்மால் விரட்ட முடியாது. ஏதாவது கேட்டால் 'என்னய்யா, சரிதான் போய்யா' என்பார்கள். ஆனால் பி.ஏ., எம்.ஏ. படித்த பட்டதாரிகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஏசலாம். அவர்கள் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். பி.ஏ., பி.டி. யைத் திட்டலாம். எஞ்ஜினியரிங் கிராஜுவேட்டையும் ஏசலாம், மெடிக்கல் கிராஜுவேட்டையும் ஏசலாம். அவர்களின் நிலையைப் பல இடங்களில் பார்க்கிறபோது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஒரு அறிவுமில்லாமல், சமுதாயத்தில் எந்தவிதமான அந்தஸ்தும் இல்லாதவர்களிடம் படித்த பட்டதாரிகள் வேலை தேடிச் செல்லும்போது இழைக்கிற அவமானத்தைப் பார்க்கிறபோது, இவர்களெல்லாம் எவ்வளவு தன்னம்பிக்கை இழந்தவர்களாக இருக்கிறார்கள் என்று என்னாலே அறிய முடிகிறது. இதற்குக் காரணம் அவர்களுக்குப் படிப்பைத் தவிர வேறு தொழில் செய்து பிழைப்பு நடத்தும் தன்னம்பிக்கை இல்லாததுதான். அப்படிப் படித்த பட்டதாரிகளை யாராவது திட்டும்போது 'தங்களை யாராவது பார்க்கிறார்களா' என்றுதான் அஞ்சுகிறார்கள். யாரும் பார்க்கவில்லை என்றால், எவ்வளவு வேண்டுமானாலும் திட்டிக் கொள்ளுங்கள் என்றிருக்கிறார்கள். கொஞ்சம் பேர் பார்த்தால், அவர்களுக்குக் கேட்காமல் ஏசுங்கள் என்கிறார்கள். இப்படி வெறும் ஏட்டுப்படிப்பை மட்டும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, தொழில் கல்வி என்றால் என்னவென்றே தெரியாமல் இருக்கச் செய்து, நாடெங்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கொண்டு வந்து, இந்தப் படித்த பட்டதாரிகளை வாழ முடியாத மக்களாக, ஆக்கியிருக்கிறோம். அவர்களுக்கெல்லாம் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மையை உருவாக்கியிருக்கிறோம். இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்த, அவர்கள் மத்தியிலிருக்கும் இந்த அடிமைத் தனத்தை நீக்க, 9 ஆம் வகுப்பிலிருந்தே தொழில் செய்யும் மனப் போக்கை உருவாக்கி 10 ஆம் வகுப்புப் படிப்பு முடிந்ததும் 11, 12 ஆம் வகுப்புகளில் தொழிற் கல்வியை உறுதியாகக் கொடுத்து அந்தத் தொழிலை அவர்கள் செய்து வாழ முடியும் என்று சொல்லுகிற கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தோம். அந்த முயற்சியை நாம் தொடங்காமலிருந்திருந்தால், நம் நாட்டிற்கு நாம் அனைவரும் தெரிந்திருந்தே துரோகம் செய்கிற நிலைக்கு வந்திருப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

இந்த நிலையில் மேல்நிலைக் கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டன. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அவரது துறையினரையும் நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வாறு துவங்கிய பிறகு, நாம் எதிர்பார்த்த இலட்சியத்தில் இக் கல்வியைக் கொண்டு சேர்ப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்கிற கால கட்டத்தில் இருப்பதால், நான் எனக்குத் தெரிந்த அளவில், என் அறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்த கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், இந்த மன்றமும் எனது கருத்துக்களை நல்ல முறையில் கவனித்து பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பரிசீலனை செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

தற்பொழுது தமிழகம் முழுவதுமாக 912 பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் எந்தெந்தப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன, எவையெவை சிறப்பாகச் செயல்படவில்லை என்ற மதிப்பீட்டை அரசாங்கம் செய்ய வேண்டும். மேல்நிலைக் கல்விப் பயிற்சி அளிப்பதில் இந்தப் பள்ளிகளில் சில சரியாக அல்லது சிறப்பாகச் செயல்படவில்லை என்றால், அத்தகைய பள்ளிகளுக்கு 'ஹையர் செகண்டரி' வகுப்பு நடத்தும் உரிமையை கேன்சல் செய்ய வேண்டும். அடுத்த ஆண்டு அவர்கள் 12-வது வகுப்பை மட்டும் நடத்திக் கொள்ளலாம். காரணம் 11-வது வகுப்பில் தேறியவர்கள் வேறு இடத்தைத் தேடி வெளியே போக முடியாது. அப்படிச் செய்தால், பிரச்சினைகள் உருவாகும். ஆகவே அவர்கள் 12-வது வகுப்பை மட்டும் நடத்தலாம். 11-வது வகுப்பை நடத்த அனுமதி தரக் கூடாது. அரசாங்கம் கொண்டு வந்த திட்டத்திற்கு ஏற்ப பள்ளிகளில் வசதிகளைச் செய்யவில்லை, முறையாக அந்தப் பள்ளிகளை நடத்தவில்லை யென்றால், அவைகளைத் தொடருவதில் பலன் இல்லை. இந்த ஆண்டு மீண்டும் 11-வது வகுப்பை நடத்த அனுமதித்தால், அவர்கள் புதிதாக இன்னும் இரண்டு ஆசிரியர்களையும் நியமித்துவிடுவார்கள். பிறகு ஆசிரியர்கள் பிரச்சினையும் சேர்ந்து விடும்.

(முற்பகல் 11-40)

நாம் இந்தச் சந்தர்ப்பத்திலே சில முக்கியமான பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும். மேல்நிலைப் பள்ளிக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறபோது, நாம் அதை தனியாகக் கொண்டு வரவில்லை. ஏற்கெனவே இருந்த உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டு வந்தோம். அதற்குக் காரணம், மேல்நிலைக் கல்வியைக் கொண்டு வருவதன் மூலமாக எழக்கூடிய ஆசிரியர்

களின் பிரச்சினைதான். மேல்நிலைக் கல்வியை செப்பரேட் என்வைரன்மென்டில் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். பதினோராவது வகுப்பை எடுப்பதால் அய்ந்தாயிரம், ஆறாயிரம் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டு வேலையை இழக்க நேரிடும். ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிட்டால், அது ஒரு சமுதாயப் பிரச்சினையாக மாறும். ஆகவேதான் அந்தப் பிரச்சினையை நாளாவட்டத்திலே தீர்த்து அதே சமயத்தில் மேல்நிலைக் கல்வித் திட்டத்தையும் புகுத்த வேண்டுமென்ற நிலையிலே மேல்நிலைக் கல்வியை வைத்திருக்கிறோம்.

முதலில் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு பள்ளி என்ற விதத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்களுக்கு 374 பள்ளிகள் என்றும், நகரங்களில் இரண்டு மூன்று பள்ளிகள் என்றும் முதலில் 500 பள்ளிகளை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லி திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு 912 பள்ளிகளில் இந்தக் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஒரு முறை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் அளித்தது நினைவில் இருக்கிறது. "மேல்நிலைக் கல்வியை நாங்கள் நல்லெண்ணத்தோடு கொடுத்தோம். நீங்கள் சொல்லியிருந்தாலும் கொடுப்போம். ஊரில் உள்ளவர்கள் யார் கேட்டாலும் கொடுத்தோம். பள்ளி நிறுவனங்கள் யார் கேட்டாலும் கொடுத்தோம்" என்று சொன்னார்கள். அப்படிக் கொடுத்ததிலே தவறு இல்லை. ஆனால் இந்த அனுமதியைப் பெற்றவர்கள் ஏமாற்றிப் பெற்றிருக்கிறார்கள். மேல்நிலை வகுப்புகளை ஏற்படுத்தியிருக்கிற 912 பள்ளிகளும் திறமையான நல்ல கல்வியைக் கற்பிக்கிற பள்ளிகள்தானா என்று பரிசீலனை செய்யவில்லை. அப்படிப் பரிசீலனை செய்வதற்குரிய கால அவகாசம் இல்லை. குறுகிய கால கட்டத்திலே இதைப் புகுத்தி விட்டோம். அப்போது பள்ளி திறக்கும் காலம், ஆகவே உடனடியாக இந்தக் கல்வி முறையை ஆரம்பித்து விட்டோம்.

காப்பி அடிப்பதையே தொழிலாகக் கொண்ட பல பள்ளிகள் மேல்நிலைக் கல்வி வகுப்புகளைப் பெற்றிருக்கின்றன. நான் அரசாங்கப் பள்ளிகளைச் சொல்லவில்லை. மேல்நிலைக் கல்வி 408 அரசுப் பள்ளிகளில்தான் இருக்கின்றது என்று நினைக்கிறேன். அரிசன நலத் துறையிலும், பின்தங்கிய நலத் துறையிலும் உள்ள பள்ளிகளையும் சேர்த்தால்கூட, 450 பள்ளிகள்தான் வருமென்று நினைக்கிறேன். அரசுப் பள்ளிகளைத் தவிர மற்ற பள்ளிகள் எல்லாம் தனியார் பள்ளிகள். இதிலே மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் இருக்கின்றன. தவறுகள் நடப்பதெல்லாம் தனியார் பள்ளிகளில்

தான். அங்கேதான் கல்வியையே தொழிலாக ஆக்குகிறார்கள். அவர்கள் இப்போது கல்வியை பெரிய வியாபாரமாக ஆக்குகிறார்கள். எம்.ஏ., எம்.எஸ்சி. படித்தவர்கள்கூட, "பத்தாயிரம் ரூபாயைத் தரத் தயாராக இருந்தாலும் வேலை இல்லையென்று சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலும் கொடுக்க அங்கே ஆள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்" என்று சொல்லக்கூடிய நிலையில் இன்று பணம் கொடுத்து வேலையை வாங்குகிற கால கட்டத்தை அடைந்திருக்கின்றோம். எம்.ஏ., எம்.எஸ்சி. படித்தவர்கள் இந்த அளவுக்கு வியாபாரப் பொருளாக ஆசிரியர் வேலையை வாங்கக் கூடிய சூழ்நிலை வந்துவிட்டது. இதைவிட அந்தத் தொகைக்கு அவர்கள் வேறு பொருள்களை வாங்கி வியாபாரம் செய்தாலும் சம்பாதிக்கலாம். இப்படி எல்லா தனியார் பள்ளிகளும் இருக்கின்றன என்று நான் சொல்லத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட பள்ளிகள் குறைந்தது மாவட்டத்திற்கு ஐந்தாவது இருக்கும். இப்படி மாநிலம் முழுவதற்கும் குறைந்தது 60 பள்ளிகளாவது இருக்கும். இப்படிப்பட்ட பள்ளிகளை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். முதலிலே யார் தவறு செய்கிறார்கள் என்று அடையாளம் கண்டு கொண்டால், பிறகு தவறுகளைக் களைய முடியும்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை நடத்துகிறபோது, "மாஸ் காப்பி" என்ற முறையில் ஹெட்மாஸ்டர், ஸ்டாப் ஆகியவர்கள் கூட இருந்து உதவி செய்தார்கள் என்பதற்காக மூன்றாண்டுகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு சென்டராக இருந்து, நிறுத்தப்பட்ட பள்ளிகள்கூட மேல்நிலை வகுப்புகளைப் பெற்றிருக்கின்றன.

ஆசிரியர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு நியமித்துவிட்டு, இரண்டாண்டுகளுக்குப் பிறகு அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, மீண்டும் பணம் பெற்றுக் கொண்டு வேறு ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள் என்று பொதுமக்கள் தங்களுடைய முறையீடுகளை எந்தப் பள்ளியைக் குறித்து அனுப்பியிருக்கிறார்களோ, அந்தப் பள்ளிகளில் கூட மேல்நிலை வகுப்புகள் நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மேல்நிலைக் கல்வித் திட்டத்தை நான் குறை சொல்லவில்லை. நோக்கம் நல்ல நோக்கம்தான். நல்ல நோக்கத்தைத் தவறாகப் பயன்படுத்திவிட்டார்கள் சிலர். அவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்து, இன்னின்ன குறைகள் அவர்களுடைய பள்ளிகளிலே இருக்கின்றன என்று இந்த ஆண்டே தெரிவித்து,

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 27

அக்குறைகளை நிவர்த்தி செய்து மாற்றினால்தான், அடுத்த ஆண்டிலிருந்து 12-வது வகுப்பை ஆரம்பிக்க முடியுமென்று சொல்ல ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும். இந்தக் கமிஷனுக்குத் தலைவராக சி.ஈ.ஓ.வைப் போடக் கூடாது. அவருக்கு இருக்கிற நிர்வாக வேலைப் பளுவின் காரணமாக அவர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர்களை அனுப்பி பிறகு அவர் சொல்வதைக் கேட்பார். ஹையர் செகண்டரி கல்வியைப் பற்றி நன்கு அறிந்த நிபுணர்கள் அடங்கிய குழுவை அனுப்பி தவறு செய்கிற பள்ளிகளை அடையாளம் கண்டு தனியாகக் கவனிக்க வேண்டும்.

சில பள்ளிகள் தவறு செய்யாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் எந்த வித மேம்பாட்டையும் செய்திருக்க மாட்டார்கள். பள்ளிக்கு வேண்டிய இடம் இல்லாமல் இருக்கும். லேபாரட்டரி, எக்விப்மெண்ட் போன்றவை இருக்காது. அது போன்ற பள்ளிகளையும் அரசு கவனிக்க வேண்டும். 150 பள்ளிகளுக்குக் குறைவில்லாமல் 200 பள்ளிகளுக்குள்ளாக இப்படி தகுதியற்ற நிலையைப் பெறும். அத்தனையும் தனியார் பள்ளிகள்தான்.

அரசுப் பள்ளிகளிலும் தகுதியற்ற பள்ளி இருக்கிறது. ஆனால் அரசாங்கம் நினைத்தால் அதைச் சரி செய்ய முடியும். உதாரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில், சங்கரன்கோவில் தாலுக்காவில், வண்ணிக்கோனேந்தல் என்ற இடத்தில் ஒரு பள்ளி இருக்கிறது. இது சாலையின் ஓரத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட மிகப் பின்தங்கிய மக்கள் வாழ்கிற பகுதியில் மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்தியது பாராட்டுக்குரியது. அங்கே கட்டிடம் கட்ட இடம் தாராளமாக இருக்கிறது. ஆனால் பனை ஓலையினால்தான் கூரை வேயப்பட்டிருக்கிறது. அரசாங்கம் இரண்டு இலட்சம் ரூபாய் சேங்ஷன் பண்ணினால், அங்கே இரண்டு மாடி கொண்ட அழகிய புதிய கட்டிடத்தைக் கட்ட முடியும். ஆனால் அங்கே தவறுகள் செய்யப்படவில்லை. சூழ்நிலையின் காரணமாகத் தகுதியற்றிருக்கிறது. ஆகவே தவறு செய்யக்கூடிய தனியார் பள்ளிகளை அடையாளம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

912 மேல்நிலைப் பள்ளிகளுள் 202 பள்ளிகளில் வெறும் அகடெமிக் பிரிவை மட்டும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தொழில் பிரிவை நடத்துவதில்லை. தொழில் பிரிவை மட்டும் நடத்திக் கொண்டிருக்கிற பள்ளியும் ஒன்று இருக்கிறது. அகடெமிக் பள்ளியையும், தொழில் பிரிவையும் சேர்த்து நடத்துகிற பள்ளிகளும் இருக்கின்றன. நம்முடைய நோக்கம் தொழில் கல்வியைப்

1979 ஏப்ரல் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

பெருக்க வேண்டும் என்பதுதான். பொதுக் கல்வியறிவைப் பெற பத்தாம் வகுப்பே போதும். அதைவிட கல்வித் தரத்தை உயர்த்தியிருக்கிறோம். மேல் படிப்புக்குப் போக வேண்டுமென்றால், பத்தாவது வகுப்புப் படித்துவிட்டு மேலும் இரண்டு வகுப்புகளைப் படிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் ஒருவன் தனது 16வது வயதிலே பள்ளியைவிட்டு வெளியேறிவிட்டால், அவன் ஏதாவது தொழிலில் ஈடுபடுகிற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் எல்லோரையும் ஹையர் செகண்டரி கல்விக்குக் கொண்டு வருகிற நிலையை ஏற்படுத்தி, அதற்கு ஊக்கம் தருகிற வகையில் தமிழில் படித்தால் கல்வி இலவசம் என்றும் வைத்திருக்கிறோம். அவர்களும் தொழிற் பிரிவிலே வருகிற நிலையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் நாம் இந்தக் கல்வித் திட்டத்தில் வெற்றி காண முடியும்.

மேலும் மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தியாக வேண்டிய நிலை இருக்கிறது. 47 ஊராட்சி ஒன்றியங்களில் மேல்நிலைப் பள்ளிகள் இல்லையென்று புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. இந்த 47 ஊராட்சி ஒன்றியங்களுள், 33 ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பக்கத்திலே ஐந்து மைலுக்குள்ளாக மேல்நிலைப்பள்ளி இருக்கக்கூடிய நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட இடங்களில் மேல்நிலைப் பள்ளிகளை இப்போது ஏற்படுத்தத் தேவையில்லை. இந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று உள்ளே புகுந்துவிட்டோம். இனி மேல்தான் 'கன்சாலிடேட்' பண்ண வேண்டும். படிப்படியாகத்தான் செய்ய வேண்டும். மாவீரன் அலெக்சாண்டர் இந்தாலியில் புறப்பட்டு மாசிடோனியா வழியாக சிந்து சமவெளி வந்தடைந்தான். இங்கேயிருந்து மீண்டும் திரும்பப் போவதற்குள் அவனுடைய சாம்ராஜ்யத்தின் பல பகுதிகள் அவனிடமிருந்து போய்விட்டன. அதைப்போல் அல்லாமல், நாம் ஆரம்பிக்கக் கூடிய திட்டத்தை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும். இது ரொம்பவும் முக்கியம். ஆகவே புதியதாக ஆரம்பிக்கும்போது, தவிர்க்க முடியாத இடங்களில் மட்டும், அதாவது ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்தில் ஐந்தாறு மைல்களுக்கு இடையே மேல்நிலைக் கல்விக்கான பள்ளி இல்லாமல் இருந்தால் அங்கே ஏற்படுத்தலாம்.

நகரங்களிலே கூட சிறப்பான தொழிற் பிரிவை ஆரம்பிக்க யாராவது முன் வந்தால், அவர்களுக்கும் அனுமதி கொடுக்கலாம். அகடெமிக் கல்வியை மட்டும் ஆரம்பிக்க முன்வந்தால், அவர்களுக்கு அனுமதி கொடுக்கத் தேவையில்லை. சில மில் அதிபர்கள் நிரம்ப மூலதனம் வைத்துக்கொண்டு பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் மேல்நிலைப் பள்ளியை நடத்த விரும்புகிறார்கள். ஆனால் நாம் சில விதிமுறைகளை வைத்திருக்

கிறோம். ஆகவே அவர்கள் மேல்நிலைப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டு மானால், இரண்டு, மூன்று இலட்சம் ரூபாய் ஆகுமென்று சொல்லி வாளா இருந்துவிட்டார்கள்.

(பிற்பகல் 11-50)

ஆரம்பிக்கலாம் என்று சொல்லிக்கொண்டு இருந்துவிட்டு, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டு, இப்போது ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் விவரங்களைத் தெரிந்தவர்கள், முந்திக் கொண்டு அனுமதி வாங்கிக்கொண்டு போய் விட்டார்கள். நல்லவர்கள் ஆரம் பிக்க முடியாமல் பின் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு பெரிய ஆலைகள், பாக்டரிகள் சொந்தமாக இருக்கின்றன. அந்த மாதிரி சில செல்வர்கள், தாங்களே பள்ளிகளை நடத்துகிறார்கள். சங்கர் நகரில் மேல்நிலைப் பள்ளி வைக்க முயற்சிக்கிறார்கள். சங்கர் நகரில் சிமின்ட் தொழிற்சாலை வைத்திருக் கும் அதிபர் அவர்கள் பக்கத்திலேயே ஒரு தொழிற்கூடம் வைத்திருக்கிறார்கள். பெரிய பாக்டரி இருக்கிறது. அதற்கு ஒரு தொழிற்கூடம் அந்த இடத்தில் இருக்கிறது. சிமின்ட் தொழிலையே அந்தப் பள்ளியில் பாடமாக வைத்து, தொழிற் பிரிவாக வைத்து, அதற்கு மேல்நிலைப் பள்ளி நிலை வேண்டும் என்று கேட்கிறார்கள். அது எவ்வளவு தூரம் இருந்தாலும் போகலாம். அந்தக் கல்வி பெறலாம். நம்முடைய நோக்கமெல்லாம், மாணவர்களுக்கு தொழிற் கல்வியைக் கொடுப்பது. அதிலே அவர்களுக்கு நம்பிக்கை வரவேண்டும். அதை ஏற்படுத்த ஆதாரங்கள் தயாராக இருக்க வேண்டும். அதற்குப் பிரஷர் வருகிறது. அந்த பிரஷரிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். எத்தனை பேர்கள் அதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்? அப்படியிருக்கும்போது, நம்மிடம் பெர்மிட்டுக் காக வருகிறார்கள். அவர்களிடம் முடியாது என்று நாம் சொல்ல முடியாது. அப்படிச் சொல்லி விட்டால், 5 வருடம் கழித்து அவரிடம் சென்றால் அவர் என்ன சொல்வார்? நம்முடைய வாக்குவாதங்கள் எல்லாம் பட்ஜெட்டிலேதான். எல்லாம் இங்கேதான். நாங்களும் ஏதாவதுக்காக, அவர்களிடம் பெர்மிட்டுக்குப் போவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளிப்படையாகவே சொல்கிறீர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: நல்ல முறையிலே இருப்பதைத்தான் சொல் கிறேன். நாம் [illegible] கொண் டிருக்கிறோம் [illegible]. நாம் எல்லாம் [illegible] சொல்லாமல்

போனாலும் நாடு கெட்டுப் போய்விடும். அதனாலேதான் சொல்கிறேன். இந்தமாதிரி பிரஷரைத் தாங்கும் பிடிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பாதுகாவல் படை அமைத்துக்கொண்டு, அரண் அமைத்துக்கொண்டு செயல்பட வேண்டும். அவர்கள் சில முறைகளை இதற்காக வகுத்துக்கொண்டு, யார் வந்து சொன்னாலும் இந்த ஒரு இலக்கணத்திற்குள்ளே இருக்கிறதா என்று பார்த்துச் செய்ய வேண்டும். நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைக்க லாம். அதிகாரிகள் அல்லாத, அரசியல்வாதிகள் அல்லாத நல்ல நிபுணத்துவம் அடங்கிய ஒரு கமிஷன் அமைத்து, அவர்கள் அந்த இடங்களுக்குச் சென்று பார்த்து, ஆய்ந்து ஒரு அறிக்கை கொடுத்த பிறகு, தேவைப்பட்டால் நாமும் சென்று பார்த்துவிட்டு, அந்த ரிப்போர்ட்டை அனுசரித்து அனுமதி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். நாம் 50 இடங்கள்தான் என்று கொடுக்க ஆரம்பித்தால், அது 500 என்ற அளவில் வந்து நிற்கும். அந்த நிலைக்குப் போகாமல் இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள் கிறேன்.

அடுத்து, தொழில் பிரிவு எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்கலாம். அந்த அகாடமிக் ஸ்ட்ரீமில் அவ்வளவு தவறு இல்லை. அதிலே கோர்ஸ் பாடத்தைக் கட்டியிருக்கிறோம். பழைய இண்டர்மீடியட்டிலே 2 வருடம் என்பதில் தேர்ட் பார்ட்டில் 3 பாடம் இருந்தது. இப்போது பி.யு.சி.-யில் 3 பாடங்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் புதிய திட்டத்தில் 4 பாடங்கள் என்று வைத்திருக்கிறார்கள். அதிலே என்னுடைய கருத்து, இப்போது 2 வருடம் இருப்பதால் மாணவர்கள் கூடுதல் பாடங்கள் படிப்பதிலே தவறு இல்லை என்பதுதான். இரு வருடத்திலே அந்த 3 பாடங்களைக்கூட படித்திருக்கிறார் கள். இண்டர்மீடியட் 2 வருடத்தில் 3 பாடங்கள் படித்தார்கள். இந்த நாளில் கற்பிப்பதிலே இருக்கக்கூடிய நவீன முறைகள் முன்னாலே இருந்ததை விட அதிகம். நவீன கருவிகள் எல்லாம் வந்திருக்கின்றன. வெளிநாடு களிலே உபயோகிக்கும் நல்ல கருவிகளை நாம் பார்க்கவில்லை. புரொஜக்டர் இல்லாத பள்ளிகளே இல்லை என்று இருக்க வேண்டும். பிலிம் மூலமாக பள்ளிக் கல்வியைக் கற்பிக்கலாம். பள்ளிகளில் பாடங்களைக் கற்பிக்க என்று ஒவ்வொரு ஆசிரியர், ஒவ்வொரு வகுப்பு என்று இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கருவிகள் உதவியால் சொல்லிக்கொடுக்கலாம். சொல்லும் திறன் இப்போது குறைந்துகொண்டு வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும். முன்னாலே எல்லாம் திறமையான ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களுடைய சொல்லாற்றலால், செயலாற்றலால், ஒழுக்கத்தினால், உண்மையால், உயர்வால் மக்களைக் கவர்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற

ஆசிரியர்கள் எப்படி இருக்கின்றார்கள், அந்த ஆசிரியர்கள் வந்து நின்ற உடனே, மாணவர்கள் அவரைப்பற்றிச் சொல்வார்கள், ஆசிரியர் எப்படி காலையில் இருந்தார், சாயந்திரம் எப்படி இருந்தார் என்பதையெல்லாம் சொல்வார்கள். அதனால் அவன் பேரிலே ஆசிரியருக்கு ஒரு வெறுப்புகூட இருக்கும். அவருடைய சொல்கின்ற திறன் படுமோசமாக இருக்கும். அந்த நேரத்திலே அவரைப் பார்த்துக்கொண்டே இருப்பான். மாணவனுக்குக் கல்வி எப்படி வரும்? ஆகவே இந்த நிலைமைகளை நாம் ஓவர்கம் பண்ண வேண்டும். நல்ல சான்ஸ் நமக்கு வந்திருக்கிறது. இனி திறமையான ஆசிரியர்களைத்தான் நியமிக்க வேண்டும். அவர்கள் பயிற்றுவிக்கும் பாடங்களில் அவர்களுக்கும் பயிற்சி கொடுத்து அனுப்ப வேண்டும். டெலிவிஷனை வைத்துக்கொண்டு அதன் மூலமாகவும் சொல்லிக் கொடுக்கலாம். அங்கே இருந்துகொண்டே நல்ல விளக்கங்களையெல்லாம் அளிக்கலாம். அந்த அளவுக்கு இப்போது வசதிகள் இருக்கின்றன. மேலை நாடுகளில் இப்படியெல்லாம் இருக்கின்றன. இதெல்லாம் நம் நாட்டிலே எப்போது வரும், எவ்வளவு நாட்கள் ஆகும் என்று தெரியவில்லை. நாம் முன்னோடியாக இருந்து ஒரு மாவட்டத்திற்கு ஒரு பள்ளியிலேயாவது அப்படி கொண்டு வர வேண்டும். ஒரு மாதிரி அமைப்பை நாம் கொண்டு வரவேண்டும்.

இப்போது நான்கு பாடங்கள் இருக்கின்ற பாடத்திட்டம் வருவதைப்பற்றி எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அது என்னைப் பொறுத்தவரையில், அதிகமாகத் தெரியவில்லை. மேத்ஸ் பாடம் படிக்காமல் சயன்ஸ் படித்து என்ன பிரயோசனம் இருக்கிறது? இப்போது சயன்ஸ் குரூப்புக்கு வருகின்றவர்கள் தற்காலத்தில் விஞ்ஞான அறிவு பெறுவதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். மேத்ஸ் பாடம் சேர்ந்து 4 பாடங்கள் வரவேண்டியது மிகவும் இன்றியமையாதது. கேள்வி நேரத்திலேகூட சொன்னேன். எங்களுடைய கல்லூரியினுடைய பேராசிரியர் ஒருவரை, ரீ ஓரியன்டேஷன் கோர்சுக்கு கன்னியாகுமரியிலே உள்ள ஒரு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்றுவிக்க அழைத்தார்கள். அவர்களுக்கு லெஸன்கள் கொடுத்தார்கள். அவர்களைத் தப்புச் சொல்ல முடியாது. "21 வருடங்களுக்கு முன்னால் நான் படித்தது. அன்றைக்கு இருந்த பாடத் திட்டம் வேறு, இன்றைக்கு இருக்கின்ற பாடத் திட்டம் வேறு. அந்த ஹையர் செகண்டரி பாடத் திட்டத்தை நான் படிக்கவில்லை. அப்போது எம்.எஸ்சி. மேத்ஸ் பாடத் திட்டம் வேறு. நான் அதைப் படிக்கவில்லை" என்றார்கள். இதிலிருந்து நாம் ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம். நாம் கல்வித் துறையிலே எவ்வளவு வேகமாக முன்னேறிக்கொண்டு

வருகிறோம் என்று. போன ஆண்டு கல்லூரியிலே மேத்ஸ் படித்துவிட்டு, அசிஸ்டெண்ட் புரொபசராக இருக்கிறார்களே, அவருக்கு நன்றாகத் தெரியும். இதை அந்த புரொபசர் ஒத்துக்கொண்டார். "என்னை அனுப்பினால் நான் என்ன சொல்வேன்? சினிமாவைப்பற்றிச் சொல்வேன். வேறு ஏதாவது பேசிவிட்டுத் தான் வருவேன்" 'என்று சொன்னார்கள். அதே நேரத்தில் என்னை விட்டு விட்டு வேறு யாரை அனுப்புவது என்று கேட்கின்ற புரொபசர்களும் இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பேராசிரியர், "எனக்குத் தெரியாது. அசிஸ்டெண்ட் புரொபசரையே அனுப்புங்கள்" என்று சொன்னார்கள். அதன் பிறகு அவரையே நான் அனுப்பினேன். அந்த புரொபசர் 'நான் போனால் என்ன செய்வேன்? பயணப்படி மட்டும் தான் வாங்கிக்கொண்டு வருவேன்' என்றும் சொன்னார்கள். அதனால் அசிஸ்டெண்ட் புரொபசரையே அனுப்பினேன். இப்போது இந்த விஞ்ஞானத்தைக் கற்பிப்பதிலேகூட சிக்கல்கள் இருக்கின்றன. இப்போது இருக்கின்ற ஆசிரியர்கள் வேலை இழந்துவிடக் கூடாது. சீனியர் போஸ்ட் ஆசிரியர்கள், பி.டி. படித்தவர்கள், 15, 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் எல்லாம் இப்போது படிப்பது என்பது முடியாது. எம்.ஏ.,எம்.எஸ்சி. படித்தவர்கள் இப்போது வந்திருக்கிறார்களே, அவர்கள் படிக்க வேண்டும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும். ஓரிரு ஆண்டுகள் பொறுத்துக்கொள்ள வேண்டும். அவசரப்படக்கூடாது. தேன் கூட்டிலே போய் கையை விட்டது மாதிரியாகிவிடும். இருப்பவர்கள் அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். இனிமேல் நியமிக்கப்படுபவர்கள் தரமான ஆசிரியர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தரமான கல்வியை பாடப் பிரிவிலே கொடுக்க வேண்டும். அகாடெமிக் கல்வியிலே ஒன்றுமில்லை. அதிலே குறையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வொக்கேஷனல் ஸ்ட்ரீம், படுதோல்வி அடைந்திருக்கிறது என்றுசொன்னால், அது தவறல்ல. இதற்கு முன்னாலே 316 பள்ளிகளிலே பைஃபர்கேட்டட் கோர்ஸ் என்று இருந்தது. இருகூறாக்கப்பட்ட பள்ளி இருந்தது. அந்தப் பள்ளிகளிலேதான் சரியாக இல்லை. சிறப்பாக நாம் ஒரு 15 பள்ளிகளை நடத்தலாம். பள்ளிகளிலே நடப்பது எல்லாம் வெறும் கண் துடைப்பு மாதிரி தான். மேல்நிலைப் பள்ளிகளிலே தொழில் பிரிவு நடப்பதெல்லாம் வெறும் பேருக்குத்தான் இருக்கும். காரணம் அவர்கள் ஏமாற்றுகிறார்கள் என்பதல்ல. அவர்களுக்கு வசதி இல்லை. அதுதான் காரணம். நாம் இதிலே சிந்தித்துச் செயல்பட வேண்டியதாயிருக்கிறது. 316 இரு கூறாக்கப்பட்ட பள்ளிகளில் சில மிகச் சிறப்பாக நடப்பதற்குக் காரணம் தொழில் பிரிவு கோர்ஸ், பைபர்கேட்டட் கோர்ஸ் என்று இரு பிரிவாக இருந்தது. வேளாண்மை

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 27

இருந்தது. அதற்குப் பிறகு பட்டறை வைத்து நடத்தினார்கள். டிப்ளமோ இன் என்ஜினியரிங் படிப்பை அவர்கள் எல்லாம் 10, 15 ஆண்டுகளாகவே நடத்தி வருகிறார்கள். அதை நன்கு வளர்த்து வைத்திருக்கிறார்கள். அங்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் எல்லாம் டெக்னிக்கல் கோர்ஸ், என்ஜினியரிங் கோர்ஸ் பாஸ் செய்தவர்கள். அவர்களைத்தான் நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தலைமை ஆசிரியர்களைவிட சம்பளம் கூடுதலாகத் தருகிறார்கள். இன்ஜினியரிங் பிரிவிலே இருக்கக்கூடியவர்கள், டிப்ளமோ இன் இன்ஜினியரிங் படித்திருக்கிறார்கள். தலைமை ஆசிரியர்களைவிட கூடுதலாக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். சில தனியார் பள்ளிகள் அங்கே சிறப்பாக நடக்கின்றன. அவர்கள் அங்கே தொழிற்கூடங்களைச் சிறப்பாக அமைத்திருக்கிறார்கள். நாமும் அரசுப் பள்ளிகளில் தொழிற்கூடங்களை அமைக்க வேண்டும்.

நான் ஒரு ஸ்கூலுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு பெசிலிடை, தொழில் பிரிவிலே வைத்திருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடியவர்கள் டி.எம்.இ. குவாலிபிகேஷன் பெற்றவர்கள். அவர்களிடம் தற்காலத்தில் உள்ள மெஷினைப் பற்றிக் கேட்டேன். அவர் அந்த மெஷினைப் பற்றிச் சொல்லும்போது, நான் அதைப் பார்க்கவேயில்லை என்று சொல்கிறார்கள். அங்கே மெஷினிஸ்ட் கோர்ஸ் என்று ஒரு கோர்ஸ் இருக்கிறது. அந்த கோர்ஸ் பல்லாவரத்திலே இருக்கிறது, திருக்கழுக்குன்றத்திலே இருக்கிறது. அதற்குத் தகுந்த அளவுக்குக் கருவிகள் இருக்க வேண்டும். அது பல இடங்களிலே இருக்கிறது. அந்தத் தொழிற்கூடத்திற்கு தேவை மெஷின். கிரைண்டிங் மெஷின் வேண்டும், மில்லிங் மெஷின் வேண்டும். ஷேப்பிங் மெஷின் வேண்டும்; டிரில்லிங் மெஷின் வேண்டும், ஸ்லாட்டிங் மெஷின் வேண்டும், ஹாக்ஸா மெஷின் வேண்டும். இப்படிப்பட்ட மெஷின்களையெல்லாம் வைத்துக்கொண்டு, பயிற்றுவிக்க வேண்டும். இப்படி எல்லா மெஷின்களும் இருந்தால்தான், சொல்லிக்கொடுக்க முடியும். ஆனால் இங்கு லேத்கூட இல்லாமல் இருக்

1979 ஏப்ரல் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

சொல்லிக்கொடுக்க முடியும். ஆனால் இங்கு லேத்கூட இல்லாமல் இருக்கிறது. இந்த நிலைமை மாற்ற வேண்டும். சாதாரணமாக ஸ்பான் போன்ற மேகசைன்கள், பத்திரிகைகளில் உள்ள லேத் படங்களை வைத்து, இப்படி வெட்ட வேண்டும், அப்படி வெட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். **போர்டில்** படம் போட்டுக் காட்டி விட்டுப் போகிறார்கள். ஆகவே தொழில் கல்விக்கு **போதுமான நிதி** ஒதுக்கீடு செய்யவேண்டும். கட்டடத்திற்கு **என்று 2 கோடி** ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளிலே 1½ லட்சம் ரூபாயிலே நல்ல விஞ்ஞானக் கூடங்களை அமைத்துக் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். அதில் பள்ளிகளில் விஞ்ஞானக் கருவிகள் வாங்குவதற்கு ரூபாய் 2,400 ஒதுக்கப்படுகிறது. நிறுவனம் கொடுப்பது 40 சதம், அரசு கொடுப்பது 60 சதம். அவர்கள் சிறப்புக் கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் 50 சதம் கொடுப்பதாகவும், அவர்கள் 50 சதம் வசூலித்துக்கொள்வதாகவும் மாற்றி அமைக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படியே செய்தாலும்கூட, 10 ஆண்டுகள் ஆகும். சிறப்பான ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்கு அவ்வளவு காலம் ஆகும் என்று சொல்லிக் கொள்கிறேன். அப்படித்தான் வரமுடியும். கொஞ்சம் கொஞ்சமாகவே வரட்டும்.

தொழில் பிரிவுகள் நடத்துகின்ற இடங்களில் எல்லாம் பார்ட் டைம் ஆசிரியர்களைப் போடுகிறார்கள். ஒரு நர்சிங் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அங்கு ரூ. 150-க்கு ஒரு பார்ட் டைம் ஆசிரியர் போட்டால் யார் வருவார்கள்? டாக்டர் யார் வருவார்கள்? சீனியர் நர்ஸ் வருவார்களா? வர மாட்டார்கள். பார்ட் டைம் டீச்சர் என்று இருப்பதை மாற்றி, ஃபுல்டைம் ஆசிரியர்கள் என்று நியமிக்க வேண்டும். இப்போது 11 வருடம், 12 வருடம் என்று ஆகிவிட்டது. முதல் வருடம் முதல் இதுவரையில் பார்ட் டைம் ஆசிரியர்கள் போட்டிருக்கிறோம். அதை இப்போது மாற்றிக் கொள்ளலாம். "ஃபுல் டைம் ஃபுல்லி குவாலிபைட்" டீச்சரைப் போட்டு அவர்களுக்கு முழு அளவுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே முழு அளவுக்குக்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 27

தகுதி உள்ளவர்களை நாம் நியமிக்க வேண்டும். அனுபவம் உடையவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இப்போது டீ. எம். ஈ. படித்த ஒருவரை நியமிக்கலாம். தொழிற் பட்டறையில், மோட்டார் ஒர்க்ஷாப்பில் நல்ல அனுபவம் உள்ளவர்களை, தகுதியில்லை என்று அவர்களை டெமான்ஸ்ட்ரேட்டராக அல்லது டெக்னிஷியனாக நியமிக்கிறார்கள்.

அப்போதெல்லாம் நாம் மானிட்டர்கள் என்று வைத்திருப்போம். பழைய காலத்திலே அவர்களை சட்டாம்பிள்ளை என்று சொல்வார்கள். அன்றைக்கு அவருக்கு அந்தப் பெயரை கொடுத்திருந்தார்கள். அவர் சட்டாம்பிள்ளையோ அல்ல. சட்டாம் பிள்ளைத் தத்துவம் வேறு. இது வேறு. சட்டாம்பிள்ளை என்பவர் டிசிப்பிளினை மெயின்டெயின் பண்ணுவதற்காக நியமிக்கப்பட்டவராக இருந்தார். முன்னாலே எல்லாம் பள்ளிகளிலே சட்டாம் பிள்ளை வைத்திருந்தால், அவர் ஆசிரியர் இல்லாத நேரத்திலே, பாடம் சொல்லிக்கொடுப்பதற்காக வைக்கப்படவில்லை. பள்ளிகளிலே டிசிப்ளின் இருப்பதற்காக அவர்கள் இருந்தார்கள். மாணவர்களிடம் வகுப்புகளை ஒப்படைத்திருந்தார்கள். இப்போது மாணவர்கள் கமிட்டி எல்லாம் வேண்டும் என்று சொல்வார்கள். சட்டாம்பிள்ளை முறையெல்லாம் பழைய காலத்திலேயே இருந்தது. அப்போது சட்டாம்பிள்ளைதான் வகுப்பை கவனித்துக் கொண்டிருந்தார். அதாவது சட்டத்தை அமுல்படுத்துகின்ற பிள்ளையாக அவர் இருந்தார். ஆசிரியர்கள் இல்லாதபோழுது ஒவ்வொரு வகுப்புக்கும் மானிட்டர்கள், சட்டாம்பிள்ளைகள் வைத்து அந்த முறையை அமுல் படுத்தினார்கள். ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் சொல்லி விட்டுப் போய்விடுவார்கள், பிட்டை வைத்து விட்டுப் போவார்கள். அப்போது சட்டாம்பிள்ளைகள் கவனித்துக் கொள்வார்கள். ஆசிரியர்கள் முழு நேரமும் அங்கேயே இருப்பதில்லை. அப்படிப் பண்ணுவது தப்பில்லை. அவர்கள் அழகாக ஆசிரியர்கள் இருக்கிற இடத்திலே வந்து இருந்துகொண்டு பார்த்துக் கொள்வார்கள். சரியோ தப்போ பார்ப்பார்கள். மேஜைக்குப் பக்கத்திலே இருந்துகொண்டு ரொம்ப அழகாகப் பார்த்துக்கொள்வார்கள்.

1979 ஏப்ரல் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

(நண்பகல் 12-00)

பையனுக்கு ஊக்கம் கொடுப்பது நல்லதுதான். அவன் அப்படியே இருக்கட்டும். நல்ல முறையிலே அந்த வகுப்புகளை நடத்த டெக்னிகல் அசிஸ்டண்டுகள் இருக்க வேண்டும். பட்டறையில் இருக்கக்கூடிய ஒருவரைப் போட்டு 100 ரூபாய் கொடுக்க வேண்டும். புல் டைம் டீச்சரைப் போட்டு, முழுச் சம்பளத்தையும் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

தொழில் பிரிவில் கன்பெக்ஷனரி, உணவு, பிஸ்கட் போன்றவற்றைத் தயார் செய்வதற்கான சிலபஸ் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் சரியாக நடக்கவில்லை. ஆனால் பெண்கள் பள்ளியில் சரியாக நடக்கிறது. ஒருவர் என்னிடம் வந்தார். எனக்கு வேலை கிடைக்கும், அதற்கு நீங்கள் ஒரு சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். என்ன சர்ட்டிபிகேட் என்று கேட்டபோது, எனக்கு ரொட்டி செய்யத் தெரியுமென்று சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். தெரியுமா என்று கேட்டேன். சர்ட்டிபிகேட் கொடுத்தால் போதும், வேலை கிடைத்துவிடுமென்று சொன்னார். அப்படிப்பட்ட முறையில், தனியார் பள்ளிகளில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நியமித்தால் பயனில்லை. இருக்கிற கோர்ஸ்களில், கட்டிடம் பராமரித்தல் என்பதும் இருக்கிறது. கட்டிடங்கள் கட்டுவதைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். இன்றைக்கு கொத்தனார்கள் ஒரு நாளைக்கு 15 ரூபாய் கூலியாக வாங்குகிறார்கள். சென்னையில் 20 ரூபாய் வாங்குகிறார்கள். எனவே மேல்நிலைப் பள்ளி படித்துவிட்டு வரும்போது, அதைக் கற்றுக்கொண்டு வெளியே வரட்டும். வொகேஷனல் ஸ்டிரீமில் கட்டிடம் கட்டுதல், பராமரித்தல் போன்ற பல பாடத் திட்டங்களைப் புகுத்தி, அதைத் திறமையாகப் படித்துவிட்டு, பள்ளியை விட்டு வெளியே வரும்போது, நேரடியாக வேலை செய்கின்ற அளவிற்குப் பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் விரிவாக அவையிலே சொல்ல முடியாது. எனவே அவைகளைப்பற்றி அறிய ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 27

ஆய்வுக் கூடங்களைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளிகளில் சிறப்பாக வரவில்லை. அரசுப் பள்ளிகளில் வந்து கொண்டிருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளில் நூலகம் சிறப்பாக இருக்க வேண்டும். இப்போது ஆசிரியர்களுக்கே டிக்ஷனரி பார்க்கத் தெரியவில்லை. ஆசிரியர் பிரதிநிதி அப்படிச் சொல்லலாமா என்று நினைக்கலாம். உள்ளதைச் சொன்னால் தப்பில்லை. மனம் திறந்து சொல்கிறேன். நம்முடைய எதிர்காலத்தினை உருவாக்கும் திட்டம் இது. டிக்ஷனரி பார்க்கத் தெரியாத ஆசிரியர்கள் இருக்கிறார்கள். என்னுடைய கல்லூரியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லுகிறேன். எம்.எஸ்.சி. படித்தவர், கெமிஸ்டிரி டிப்பார்ட்மெண்டில் 5, 6 வருடங்களாக வேலை பார்க்கிறார். இன்கிரிமென்ட் வாங்குவதற்காக, ஆப்ஷன் எழுதிக் கொடுக்கச் சொன்னேன்.

"I express my *consent* to receive the increment on such and such date.'

என்பதற்குப் பதிலாக சென்னை யூனிவர்சிடியில் படித்து, எம்.எஸ்சியில் முதல் வகுப்பு பெற்றவர் எழுதித் தருகிறார், 'I hereby express my concern' என்று

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதுதான் அன்னிய பாஷை என்பது. தமிழில் திறமையாக எழுதுவார்.

திரு. ம. சங்கரலிங்கம்: 'ரொம்ப வருத்தப்படுகிறேன்' என்று எழுதித் தருகிறார். உடனே டிக்ஷனரியை எடுத்துப் பார்க்கச் சொன்னேன். அவருடைய நிலை ரொம்பப் பரிதாபகரமாக இருந்தது. டிக்ஷனரியில் அவருக்குப் பார்க்கத் தெரியவில்லை. ஆனால் எனக்கு ஆச்சரியமாக இல்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே, சென்னை உயர்நீதி மன்றத்திலே, நீதிபதி இஸ்மாயில் அவர்கள் அளித்த தீர்ப்பு ஒன்றைப் பத்திரிகையில் என்னால் படிக்க முடிந்தது. எம்.ஏ. (லிட்டரேச்சர்) எழுதி, ஒருவர் தேர்வில் தோற்று விட்டார். அவர், நான் நன்றாகத்தான் எழுதியிருக்கிறேன், பேப்பர் திருத்தியவர்கள் செய்தது தப்பு என்று வழக்கு போட்டார். அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி இஸ்மாயில் அவர்கள், எம்.ஏ. லிட்டரேச்சர் தேர்வுக்கான சேர்மேன் எழுதிய கடிதத்தில், 3, 4 வார்த்தைகளை அண்டர்லைன் பண்ணி, இப்படிப்பட்டவர்கள் சேர்மேனாக இருந்தால் எப்படி என்று தீர்ப்பு எழுதியிருக்கிறார்கள்.

'I shudder to think how gross spelling mistakes are found in report நான் திடுக்கிட்டுப் போனேன் என்று எழுதியிருக்கிறார். எம்.ஏ. (லிட்டரேச்சர்) பட்டத்தை வழங்கும் தலைவர் பற்றி அப்படிக் கூறியிருக்கிறார்.

1979 ஏப்ரல் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே ஜட்ஜ்மென்ட் வந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே ஆங்கிலத்தை வைத்திருக்க முடியாதுதான். எனக்கு ஒரு ஆங்கிலப் பேராசிரியர் இருந்தார். ஷேக்ஸ்பியர் எல்லாம் படித்தவர், சத்திய வாகீஸ்வரய்யர் என்பது அவருடைய பெயர். வெள்ளைக்காரனுக்கு ஒரு உண்மை தெரியாமல் போய்விட்டது, அவர்கள் ஆங்கில மொழிப் பற்று அதிகமாக உள்ளவர்கள், இப்படி நாம் ஆங்கிலம் எழுதுவோமென்று தெரிந்தால், உடனே ஓடிப்போயிருப்பான், போராட்டமே தேவைப்பட்டிருக்காது என்று அவர் சொல்லுமளவிற்கு ஆங்கிலத்தின் தரம் போய்விட்டது. எனவே எல்லாக் கல்வியையும் தாய்மொழியிலேயே கொண்டு வர வேண்டும். தொழிற் கல்வி, மேல்நிலைக் கல்வி எல்லாவற்றையும் தாய்மொழியிலேயே கொண்டுவர வேண்டும். ஆங்கிலத்தில் படிக்க வேண்டுமென்றால், 20 ரூபாய் கொடுங்கள் என்று அரசு சொல்லியிருக்கிறது. அதை இன்னும்கூட கூட்டினால் நல்லது தான். எனவே அந்த அளவிற்குத் தமிழில் படிக்க வசதிகளைச் செய்ய வேண்டும். நூலகங்களை நல்ல முறையில் பயன்படுத்தும் முறை வர வேண்டும். பல பள்ளிகளில் நூலகங்களே இல்லை. அப்படி நூலகம் இருக்கிற பள்ளியிலும், அதை யாரும் பயன்படுத்துவதில்லை. ஆசிரியர்களே நூலகங்களைப் பயன்படுத்தவில்லை என்றால், மாணவர்கள் எப்படிப் பயன் படுத்துவார்கள்? ஒவ்வொரு பள்ளிக்கும் தனியாக நூலகம் இருக்க வேண்டும். நூலகக் கல்வி படித்தவர் அதன் பொறுப்பாளராக இருக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல உதவியாளர்கள் இருக்க வேண்டும்.

அடுத்து, தேர்வு குறித்து ஒரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தேர்வு இந்த ஆண்டுக்கு வேண்டாமென்று சொல்லியிருக்கிறோம். அது தவறு. இந்த ஆண்டு அப்படித்தான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை. சில பள்ளிகளில் ஆசிரியர்கள் போடவில்லை, பாடப்புத்தகங்கள் வரவில்லை. செப்டம்பர் மாதத்திற்குப் பிறகுதான் நிலைக்கு வந்தோம். இப்போது ஒரு நிலைக்கு வந்துவிட்டோம். இப்போது, மாடர்ன் திங்கிங் என்னவென்றால், 6 மாதங்களுக்கு ஒரு தேர்வு நடத்த வேண்டுமென்பதுதான். செமஸ்டர் பரிட்சை என்பது தற்கால விஞ்ஞான ரீதியான சிந்தனை. இண்டர்மீடியட் வகுப்பு இருந்தபோது, இரண்டு ஆண்டுக்குப் பிறகுதான் தேர்வு இருந்தது. முதலாண்டு கல்லூரித் தேர்வு இருக்கும், அடுத்த ஆண்டு பல்கலைக் கழகத் தேர்வு இருக்கும். இப்போது சிலபசை ஏர் டைட் கம்பார்ட்மென்ட்டாகப் பிரித்து, 6 மாதத்திற்கு ஒரு பரிட்சை வைக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. இந்த ஆண்டு அப்படிச் செய்ய முடியாது. அடுத்த ஆண்டு, ஒரு முறை தேர்வு வைத்துவிட்டு, அதற்கடுத்த ஆண்டு முதல் 6 மாதங்களுக்கு ஒரு

தேர்வு என்று வைக்க வேண்டும் அல்லது 3 செமஸ்டரில் இரண்டு வருடங்களையும் கொண்டுவர சிந்திக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான விஷயம். சென்னையிலே அந்தப் பிரச்சினை அதிகமாக இல்லை. பள்ளிகளிலே 1 முதல் 12 வகுப்பு வரை இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் தவிர மற்ற பள்ளிகளில் சில பள்ளிகளில் 9 முதல் 12 வகுப்பு வரையும், சில பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு வரையும், தனியார் பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்புகள் வரையும் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் மேல்நிலைக் கல்வி அளிக்கும் 12ஆம் வகுப்புவரை இருக்கின்றது. மேல் நிலைக் கல்வியை, தனிப் பள்ளியில் வைப்பதுதான் நல்லது. ஹையர் செகண்டரிக்கு தனியான போர்ட், தனிப் பள்ளிகள் இருந்தால், நல்லது. அதை இப்போது செய்ய முடியாது. 10 ஆண்டுகளுக்குச் செய்ய முடியாது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை அப்சார்ப் செய்யும் பிரச்சினை தீர வேண்டும். அதுவரை இப்போது இருப்பதுபோலத்தான் இருக்க வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளை தனிப் பள்ளியாக்கும் முயற்சியை பிறகு எடுக்க வேண்டும். ஆரம்பப் பள்ளிகளையும் பிரித்தாக வேண்டும். ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் அவ்வாறு பிரிக்க வேண்டும். பல்கலைக் கழக மானியக் குழு புகுமுக வகுப்பு கல்லூரிகளில் இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டது. அதேபோன்று நடுநிலைக் கல்வி வரை உயர்நிலைப்பள்ளிகளில் இருக்கக்கூடாது. அதைச் சொல்லிக் கொடுக்கும் முறை, இதைச் சொல்லிக்கொடுக்கும் முறை தனியானது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-10)

ஆசிரியர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. முதலில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களை எல்லாம் போட்டோம். இப்போது அதிலே பலர் பிற பல்கலைக் கழகங்களில் மூன்றாவது வகுப்புப் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சம்பள விகிதம் கிடையாது. 25 ரூபாய் மாத்திரம் வாங்கிக் கொண்டிருப்பவர்கள் என்று சொல்லுகிறார்கள். அது மிகத்

தவறு. மேல்நிலைப் பள்ளிகளுக்கு என்ன ஸ்டேஜ் கொடுத்திருக்கிறோமோ அதை முதுநிலைப் பட்டதாரி அத்தனை பேருக்கும் கொடுக்க வேண்டும். இதுவரை நியமித்திருப்பவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம். அவர்களை வெளியேற்றினால் பிரச்சினைகள் வரும். முதுகலைப் பட்டம் பெற்றவர்களை நியமிக்கச் சொல்லியிருக்கிறோம். நியமித்தும் இருக்கிறார்கள். பகல்பூர் யூனிவர்சிட்டியில் படித்து வந்தவர்களையெல்லாம் கூட நியமித்திருக்கிறார்கள். அங்கேயெல்லாம் படித்துவிட்டு வருகிறவர்கள் 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். சென்னை பல்கலைக் கழகத்தில் படித்து வந்தவன் 10 ஆயிரம் ரூபாய் அல்லது 7 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறான். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் நியமிப்பதைப் பொறுத்தவரை, இன்னின்ன விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டும். இதுவரை நியமிக்கப்பட்டிருப்பவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டதாரிகளாக இருந்தால், அவர்களுக்கும் அந்தச் சம்பள விகிதத்தைக் கொடுக்க வேண்டும். பி.ஏ.,பி.டி., ஆசிரியர்களுக்கெல்லாம் 25 ரூபாய் கொடுக்கிறோம். அவர்களுக்கு 25 ரூபாய் போதுமானதல்ல. 50 ரூபாயாவது குறைந்தது கொடுக்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் இப்போதுள்ள விடுமுறை காலத்தின்போது, 3 மாதப் பயிற்சியும் அடுத்த விடுமுறையின்போது 3 மாதப் பயிற்சியும் அளிக்க வேண்டும். மொத்தத்தில் அவர்களுக்கு 6 மாதப் பயிற்சி அளிக்க வேண்டும்.

உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். இப்பொழுது மேல்நிலை அக்காடமிக் பாடப்பிரிவில் எக்கனாமிக்ஸ் வைத்திருக்கிறார்கள். மேத்ஸ் இல்லாமல் எக்கனாமிக்ஸ் இல்லை. எக்கனாமிக்ஸ் பற்றிதான் இப்பொழுது நாம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். முன்னாலே எக்கனாமிக்ஸ் எம்.ஏ. படித்தவர்கள் எல்லாம் யார் என்றால் மேத்ஸ் படிக்க லாயக்கு இல்லாதவர்கள்தான். அப்படி மேத்ஸ் படிக்க லாயக்கு இல்லாதவர்கள் எல்லாம் எக்கனாமிக்ஸ் எடுத்துப் படிப்பார்கள். நான்காவது பாரத்தில்கூட மேத்ஸ்-ல் பூச்சியம் எடுப்பவர்கள், பிறகு எப்படியாவது 18 மார்க்குகள் எடுத்து பாசானவர்கள் தான் பி.ஏ. எக்கனாமிக்ஸ் எடுப்பார்கள். இப்பொழுது இருக்கிற சிலபசைப் படிக்க வேண்டுமானால், பி.எஸ்.சி. மேத்ஸ் படித்திருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு படிக்காதவர்கள். அவர்களுக்கு இன்னும் 10 ஆண்டு சேர்விஸ் இருக்கிறது. அவர்களை வெளியே போகச் சொல்லவும் முடியாது. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு 6 மாதப் பயிற்சி அளிக்க வேண்டும். இப்பொழுது வேண்டாம். கோடைக் காலத்தில் ஒரு 3 மாதப் பயிற்சியும்,

பிறகு ஒரு 3 மாத காலம் பயிற்சியும் கொடுக்க வேண்டும். மாவட்டந்தோறும் பயிற்சி வைத்தால் அது பயன் தராது. மாவட்டந்தோறும் அப்படி அப்படி வைத்ததை நான் பார்த்தேன். ஓரியன்டேஷன் கோர்ஸ் நடைபெற்ற போது, ஒன்றிரண்டு சென்டர்களுக்கு நான் போய்ப் பார்த்தேன். யாரை யாவது கல்லூரிகளில் இருப்பவர்களைக் கூப்பிட்டுப் பேசச் சொல்லுகிறார்கள். அவர்கள் ஒன்றும் படிக்காமல் ஏதாவது 2 மணி நேரம் பேசிக்கொண்டு போகிறார்கள். ஓரியன்டேஷன் கோர்ஸ் என்ற வகையில் நல்ல ஆசிரியர் களுக்கு நல்ல பயிற்சியை கோடை காலத்தில் 3 மாதம் கொடுப்பது பற்றி நாம் நிர்மானிக்க வேண்டும்.

எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்தவர்களுக்கு நாம் வசதி செய்து கொடுக்கிறோம். ஆனால் தமிழைப் பொறுத்தவரையும் தமிழ் பி.ஏ. படித்துவிட்டு, வித்வான் படித்துவிட்டு, எம்.ஏ. படித்திருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுக் கிறோம். அதுபோல் பி.எஸ்ஸி. படித்துவிட்டு எம்.ஏ. ஹிஸ்டரி படித்தவர் களுக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடாது. ஹிஸ்டரியில் அவர்களைப் போட்டால், அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. பேசிக் பி.எஸ்சி. என்றால் என்ன என்று தெரியாது. 4 கோஸ்டியனைப் படித்து எம்.ஏ. பாஸ் பண்ணி யிருப்பான். ஆகவே பி.ஏ. ஹிஸ்டரியிலிருந்து பி.ஏ. எக்கனாமிக்ஸ்-ம் எம்.ஏ. எக்கனாமிக்ஸ்-ம் பாசானவன் அது போல பி.ஏ. எக்கனாமிக்ஸிலிருந்து எம்.ஏ. ஹிஸ்டரி பாசானவன் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் அவன் இல்லையானால்தான் மற்றவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். நியமனம் செய்யும்போது அப்படிப்பட்ட ஒரு திட்டத்தையும் நாம் வகுத்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறேன். இது பெரிய கடல் போன்ற பெரிய திட்டம். ரொம்ப நுணுக்கமாக ஆராய்ந்து செய்ய வேண்டிய விஷயங் கள் இவை. இதில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முழு அளவில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன், கல்வித் துறையும் அதற்கு நல்ல முறையில் ஒத்துழைக்கிறது. அதற்காகவும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்ன கருத்துக்கள் எல்லாம் தவறான வைகளாக வந்துவிடக்கூடாது என்பதற்காகவும், நல்ல நிலையில் வர வேண்டும் என்பதற்காகவும் எல்லாப் பள்ளிகளிலும் தொழில் பிரிவை அதிக மாக ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகவும், தொழில் பிரிவுகளிலும் பலனுடைய தொழிற் பிரிவுகள் வர வேண்டும் என்பதற்காகவும் அந்தத்

தொழில் பிரிவு மாணவர்கள் தங்கள் பயிற்சியை முடித்த பிறகு, வேலை தேடித் தாருங்கள் என்ற நிலைக்கு வரக்கூடாது என்பதற்காகவும் அந்த இரண்டு ஆண்டுக் காலம் படித்து முடித்த பிறகு முதல் வருடத்திலிருந்தே அவர்கள் சம்பாதிப்பதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஒரு தொழில் பிரிவிலே மெக்கானிக்கல் செக்ஷன் ஒன்று இருக்கும். அங்குள்ள இன்ஸ்ட்ருமென்ட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தால், வருமானம் வரும். உற்பத்தி செய்ய வேண்டும். அப்படிப் பயிற்சி பெறும்போதே, பொருள்களை உற்பத்தி செய்கிறபொழுது, வருகிற பொருள்களை விற்று அதிலிருந்து வருகின்ற பணத்தை அவர்களுடைய பாஸ் புக்கில் கணக்கு வைக்க வேண்டும்.

2 ஆண்டுகள் மெஷினிஸ்ட் கோர்ஸ் முடித்து வருபவன் அங்கே 2 ஆயிரம் ரூபாயாவது சம்பாதித்திருக்க வேண்டும். அவன் பட்டமும் பெற வேண்டும். இந்த இரண்டாயிரம் ரூபாயுடன் அரசாங்கம் 5 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுத்து அவர்கள் சொந்தமாகத் தொழில் நடத்த மெஷின் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

அதுமாதிரி அக்ரிகல்சர் படிக்கிற ஒரு மாணவன் 10 ஏக்கரிலாவது உற் பத்தி பண்ணியிருக்க வேண்டும். அவன் உற்பத்தி செய்கின்ற விளை பொருள் களை விற்று அந்தப் பணம் அவனுடைய அக்கவுண்டுக்குப் போய்ச் சேர்கிற மாதிரி ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைத் தவிர மாணவர்கள் நர்சரி ரெயிஸ் (raise) பண்ணலாம். அதைத் தவிர மாணவர்கள் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வரலாம். உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து அவர்களே சம்பாதிக்கலாம் என்பதையும் சொல்லி, இதைப்போன்ற பல திட்டங்களை விரைவாகக் கொண்டு வருவதற்கு ஆலோசனை செய்ய வேண்டும். 7 பேர் கொண்ட குழுவில் இன்னும் வேண்டுமானால் ஸ்பெஷலிஸ்டுகளையும் சேர்த்து அமைக்க வேண்டும். ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு சில பள்ளிகளுக்குச் சென்று ஆராய்ந்து நல்லதொரு அறிக்கையைத் தந்து அந்த அறிக்கையை அரசு ஆராய்ந்து அமுல்படுத்த வேண்டியவைகளை எல்லாம் அவர்கள் அமுல் படுத்துவதற்கு உதவியாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தத் திர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தனி உறுப்பினர் தீர்மானத் தின் மீது இன்னும் 5 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒரு மணியோடு உறுப்பினர்களுடைய விவாதத்தை முடித்து அதற்கு மேல் கல்வி அமைச்சர்

அவர்கள் அரை மணி நேரம் பேச இருக்கிறார்கள். ஆகவே இனிமேல் பேசு கிற உறுப்பினர்கள் குறைவாகப் பேசுவதன் மூலம் மற்ற உறுப்பினர்களுக்கு வழி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் பெரு மதிப்பிற்குரிய சங்கரலிங்கனார் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தின் சார்பாக, மேல்நிலைக் கல்வியிலே செய்யப்பட வேண்டிய முன்னேற்றகரமான கருத்துக்களுக்கு . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் 19 நிமிடங்கள் பேசுவதன் மூலம் அடுத்த உறுப்பினர்கள் பேச வழி ஏற்படும். எவ்வளவுக் கெவ்வளவு கூட நேரம் எடுக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு மற்ற உறுப்பினர் களுக்கு, ஒருவர் அல்லது இருவருக்கு பேச வாய்ப்பு இருக்காது.

திரு. பி. ஆர். தாமஸ்: தீர்மானத்தை முன்மொழிந்த மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அநேக பிரச்சினைகளைக் கூறியிருக்கிறார்கள். ஒரு சில பிரச்சினைகளை மட்டும் நான் சுட்டிக்காட்டி முடித்து விடுகிறேன். பொதுவாக மேல்நிலைப் பள்ளிகளிலே அறிவியல் கூடங்கள் எந்த அளவு இருக்கின்றன என்று நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

பொதுவாக கல்வித் துறையானது கல்லூரி இணைப்புத் திட்டமாக காலேஜ் காம்ப்ளக்ஸ் என்ற முறையைப் புகுத்தியிருந்தால்கூட, நடைமுறையிலே அநேக பள்ளிகள் காலேஜ் காம்ப்ளக்ஸ் என்று இணைந்திருந்தாலும் கூட, எந்தவிதமான நன்மையையும் பலனையும் பெற முடியாத நிலையில் தான் இருந்துகொண்டிருக்கின்றன என்கிற கருத்தை நான் முன்வைக்கின்றேன்.

எனவே அறிவியல் பாடப் பிரிவுகளைப் பொறுத்தவரை, நல்ல தரமான, தகுதியான பாட போதனையைச் செயல் முறையிலே பெற முடியாத ஒரு அவல நிலையில் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் இருந்துகொண்டிருக் கிறார்கள். வேண்டுமென்றால் ஒருசில பள்ளிகளில் தகுந்த சாதனங்கள், வாய்ப்புகள், ஆய்வுக் கூடங்கள், கருவிகள், இரசாயனப் பொருள்கள் எல்லாம் இருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்ளலாம். எனவே இதற்கு நம்முடைய அரசு இப்பொழுது ஈட்டு மானியம் என்ற அடிப்படையில் 40 விழுக்காடு அந்த நிறுவனமும், 60 விழுக்காடு அரசும் கொடுக்கக் கூடிய அளவில் திட்டமிடப் பட்டுள்ளது. அதிலே 75 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான அளவில் குறியீடு வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொதுவாக நிதிநிலை அறிக்கையில் எப்படி

வழங்கப்பட்டது என்றால், ஒரு பள்ளிக்கு 2½ இலட்சம் ரூபாய் என்றும், நிர்வாகம் என்றால் 1 இலட்சம் ரூபாய் என்றும் அரசு 1½ இலட்சம் ரூபாய் என்றும் வழங்கப்பட்டது. அரசுப் பள்ளிகளைப் பொறுத்த அளவிலே 2½ இலட்சம் ரூபாயையும் அரசே பொதுவாக வழங்குகிறது. தனியார் பள்ளிகளைப் பொறுத்த அளவிலே தனியார் 40 விழுக்காடு, அரசு 60 விழுக்காடு என்று அமைந்திருக்கிறது. ஆனால் இருகூறாக்கப்பட்ட பாடத் திட்டம் அமைந்த காலத்திலேயே 18, 20 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அரசே தொழிற் கூடங் களுக்கும், சாதனங்களுக்கும் முழுமையாக மானியத்தை வழங்கியது. அந்த முறையிலே வழங்கினால் நிச்சயமாக இந்தத் திட்டம் வெற்றி பெற நல்ல வாய்ப்பு உண்டாகும் என்கின்ற கருத்தினை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அறிவியல் கூடங்களைப் பொறுத்த அளவில், அறிவியல் சிறப்புக் கட்டணத்தைப் பொறுத்த அளவில், அறிவியல் பாடம் கற்பவர்களுக்கெல்லாம் சிறப்புக் கட்டணம் உண்டு. ஒவ்வொரு மாணவனும் 20 ரூபாய் கட்ட வேண்டி யிருக்கிறது. ஆனால் அதில் இரண்டு வகையான பிரிவுகள் இருக்கின்றன. 'ஏ' பிரிவிலே கணித பாடம் சேர்ந்திருப்பதால், அறிவியல் சிறப்புக் கட்டணம் என்று வசூல் செய்யப்படுவதில்லை. ஆனால் 4 பாடங்களும் அறிவியல் பாடங் களாக இருந்தால், அவர்களிடமிருந்து 20 ரூபாய் வசூல் செய்கிறார்கள். இது ஒரு முரண்பாடான நிலை.

இதற்கு அடுத்ததாக பாடத் திட்டத்தின் அடிப்படையையே மாற்ற வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறோம். 1980ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளி களை முடிக்கக் கூடிய 12வது வகுப்பு மாணவர்கள் பொறியியல் அல்லது மருத்துவக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பார்க்கும்போது, அவர்கள் இரண்டு சாராரும் நிச்சயமாக கணித பாடத்தைப் படித்திருக்க வேண்டும். அப்படி கணித பாடத்தைப் படிக்க வேண்டுமென்ற நிலை இருக்குமென்றால், இப்போதே அந்தப் பாடத் திட்டத்தில் 4 பாடங்களுக்குப் பதிலாக ஒரு பாடம் கட்டாயமாக, அறிவியல் பகுதியைப் பொறுத்த அளவிலே கணித பாடம் அமைய வேண்டும்.

அதே சமயத்தில் பொறியியல் துறையில் சேர்ந்து படிக்கக் கூடிய மாணவர் களுக்கு, 4 பாடங்களிலே 3வது பிரிவிலே ஒன்று பவுதீகமாக இருக்கலாம் அல்லது கணிதமாக இருக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் பொறியியல் துறையைப் பொறுத்த அளவிலே இந்த இரண்டு பாடங்களைப் கற்பித்தால், ஒரு பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிக்க அவர்களுக்கு முடியும். மேலான நிலையில் தரமான கல்வி பயில வேண்டும் என்றால், பொறியியல், எஞ்ஜினியரிங்

(பிற்பகல் 12-20)

கோர்சைப் பொறுத்தவரையில், ஃபிசிக்ஸ், மேத்தமாட்டிக்ஸ் கண்டிப்பாக இருக்க வேண்டும். They must take Physics and Mathematics. Without taking Physics and Mathematics, they cannot continue their studies and they cannot perform well in the engineering college ஆகவே, பொறியியலில் 'அல்லைட் சப்ஜெக்ட்' என்ற முறையிலே இரண்டு பாடங்களும் படிக்க வேண்டும். அதற்கேற்றவாறு தொழில் கல்விப் பிரிவை மாற்றியமைக்க வேண்டும். மொத்தம் 20 பாடங்கள் இருக்கின்றன. அதிலே 6 பாடங்களை மட்டும் சேர்த்து 'அல்லைட் சப்ஜெக்ட்' என்ற முறையிலே ஒவ்வொரு பாடமாகப் படிக்கிறார்கள். இரண்டு பாடங்கள் படிக்க வேண்டுமென்றால், குறைந்தது 12 பாட நிலை வேண்டும். அதற்கேற்றவாறு பாட நிலைகளை மாற்ற வேண்டும். நடப்பாண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிக முயற்சி எடுத்து 'சிட்கோ' நிறுவனம் மூலமாக பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களை இணைச் செயலாளராக வைத்து 1 கோடி ரூபாய் மதிப்புள்ள அறிவியல் கூடப் பொருட்களையும், சாதனங்களையும் வழங்க இருக்கிறார்கள். ஆனால், அரசுப் பள்ளிகளுக்குத்தான் இவைகளை வழங்க இருக்கிறார்கள். இவைகள் தனியார் பள்ளிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். பொதுவாக அறிவியல் சாதனங்களை வழங்குவதில் ஒரு விதி முறை இருக்கிறது. ரெக்கரிங், 'நான்-ரெக்கரிங்' என்று இருக்கிறது. ரெக்கரிங் எக்ஸ்பண்டிச்சர் 2/3 ஆக இருக்க வேண்டும் என்றும், 'நான்-ரெக்கரிங் ½ தான் வாங்க வேண்டும் என்றும் இருக்கிறது. இந்த விதிமுறை தலைமையாசிரியர்களைக் கட்டுப்படுத்துகிறது. ஒரு பள்ளியில் 'நான்-ரெக்கரிங்'-ஆக வாங்க வேண்டுமென்றால், 100 ரூபாய்க்கு மேலாக வாங்க வேண்டுமென்றால், அல்லது அந்த ஆண்டு வசூலில் 1/3க்கு மேல் வாங்க வேண்டுமென்றால் மாவட்டக் கல்வி அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டும். மாவட்டக் கல்வி அதிகாரியின் அனுமதியைப் பெறுவதில் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அறிவியல் பாட போதனை மிகச் சிறப்பாக இருக்க வேண்டுமென்றால், அந்த விதிமுறையை மாற்றி, தலைமையாசிரியருக்கு முழு உரிமையும் வழங்க வேண்டும். அண்மையில்கூட, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்களைக் கலந்தாலோசிக்காமல், தலைமையாசிரியர்கள் இயங்கலாம் என்று கூறினார்கள். இஜந்த அடிப்படையிலே, விதிமுறைகளை அனுசரித்து பள்ளியின் தேவையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட தலைமையாசிரியர்களை அனுமதிக்க வேண்டும். அதோடு, எல்லா சிறப்புக் கட்டணங்களிலும் தேங்கியுள்ள தொகையை (அக்யூமுலேஷனாகியுள்ள தொகையை) தலைமையாசிரியர்கள் அறிவியல் சாதனங்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தலாம் என்று சென்ற ஆண்டு ஒரு ஆணை வந்தது. சென்ற ஆண்டு மட்டும் 5 ஆயிரம் 6 ஆயிரம் ரூபாய் என்று சிறப்புக் கட்டணத்திலே தேங்கியிருக்கிறது. தலைமையாசிரியர்கள் முன் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையினால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. அக்யூமுலேஷன் ஆன தொகையை வைத்து தலைமையாசிரியர் அறிவியல் சாதனங்களை வாங்கலாம் என்று ஒரு ப்ளாங்கெட் ஆணையை வழங்கிவிட்டால் போதாது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில், பாடத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. 4 பாடங்கள் என்ற அளவிலே, முதலிலே ஏ-1, ஏ-2 பிரிவுகளிலே கணித பாடம் சேர்க்கப்பட்டது. தொழில் பிரிவைப் பொறுத்தவரையில், இரண்டு பாடங்கள் படிக்க வேண்டும். அல்லைட் சப்ஜெக்ட் என்று பொறியியல் துறையைப் பொறுத்தவரையில், கட்டாயமாக கணிதமும், பௌதிகமும் படித்தால்தான், மாணவர்கள் சிறந்து விளங்குவார்கள். பொதுத்துறைப் பாடங்களைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே 'கைட் புக்ஸ்' வழங்கப்பட வேண்டும் என்று சொல்லியிருந்தும் கூட, 'கைட் புத்தகங்கள்' பள்ளிகளுக்கு இன்னும் வந்து சேரவில்லை. சென்ற ஆண்டும் வரவில்லை. இந்த ஆண்டும் வந்து சேராவிட்டால், பாடப் புத்தகங்கள் தொழில் பிரிவுக்குத் தேவை என்பது அர்த்தமற்றதாகிவிடும். 'கைட்' இருப்பதால்தான், பாடப் புத்தகங்கள் தேவையில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் அதிகமான காலதாமதம் ஏற்படுவதால், பாடங்களை சரியான முறையில் போதிக்க முடியவில்லை. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் மாற்றப்பட்டபோது, ஒரு கருத்து கூறப்பட்டது. இயக்குநர் அலுவலகத்திலே 'மேப்' (map) ஒன்றை வைத்துக்கொண்டு, மாநிலத்திலே எங்கெங்கு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்று பார்த்து, அங்கெல்லாம் முதுகலைப் பட்டதாரிகளை அனுப்பலாம் என்று சொன்னார்கள். இதன் விளைவாக, பல குடும்பங்கள் பிரிக்கப்பட்டு, பல இடங்களிலே இரண்டு, மூன்று மாவட்டங்கள் தள்ளிச் சென்று பணியாற்றக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகள் மாற்றப்பட்டு, ஆசிரியர்களின் குடும்பங்கள் இணைந்து வாழும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். ஏராளமான பணியிடங்களை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளி வந்த காரணத்தினாலே, சென்ற ஆண்டு ஏறத்தாழ 1,300 நேல்நிலைப் பள்ளிகளுக்குப் பணியிடங்களும், இந்த ஆண்டு 1,740 பணியிடங்களும் மொழியாசிரியர்களுக்கு என்று வழங்கியிருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்கிறேன், அந்தப் பணியிடங்கள் மொழியாசிரியர்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். சில இடங்களில் பி.டி. ஆசிரியர்கள் மாற்றப்பட்டு, ஏற்கெனவே பதவி உயர்வு பெற்ற பல ஆசிரியர்கள் பணியிழக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. அப்படி இருக்கக்கூடாது. பி.டி. ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிக்கப்பட வேண்டும். எப்படி சென்னைப் பல்கலைக் கழகம் 8 மாதம் பயிற்சி அளித்து, தலைமையாசிரியர் பணிக்கோ அல்லது பாட போதனை ஆசிரியர் பணிக்கோ தகுதியானவர்கள் அல்லது பி.ஜி. கோர்ஸ்க்குத் தகுதி படைத்தவர்கள் என்று தெரிவித்ததோ அதே நிலை பி.டி. ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். சில இடங்களிலே, ஏற்கெனவே முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இருந்தும் கூட, முதன்மைக் கல்வி அலுவலர்கள் அவர்களுடைய பணியை எடுத்துக் கொள்ளாது, நேரடியாகத் தேர்வு நடத்தி எடுக்கிறார்கள். ஆனால், இந் நிலையை உடனடியாக பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு எழுதின உடனே, அவர்கள் சென்னையிலிருந்து ஆணை பிறப்பித்தார்கள். அம்மாதிரி நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் நிலை மாற்றப்பட வேண்டும். அரசுப் பள்ளிகளிலும், 'பி' லிங் பள்ளிகளிலும் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். தகுதியான ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

பாடத் திட்டங்களைப் பொறுத்தவரையில், எந்தப் பிரிவில் பற்றுடையவர்களாக இருக்கிறார்களோ அந்தப் பாடம் அந்தப் பகுதிகளிலே புகுத்தப்படுகிறது. பூகோள பாடத்திலே பற்றுடையவர்களாக இருந்தால், அந்தக் கல்வித் திட்டத்திலே அதைப் புகுத்துகிறார்கள். ஆகவே, மற்ற பாடங்களைப் படிக்கும் வசதி இல்லாமல் போய்விடுகிறது. உதாரணமாக மதுரை மாவட்டத்திலே, எத்திக்ஸ், சைக்காலஜி, சோஷியாலஜி போன்ற பாடங்களுக்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மாணவர்கள் எந்தெந்தப் பாடங்களை விரும்புகிறார்கள் என்ற நிலைமையில்லாது, அந்த இடங்களில் இருக்கும் கல்வி அலுவலர்கள் எந்தப் பாடங்களை விரும்புகிறார்களோ அந்த அடிப்படையிலேயே பாடத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இந்த முறை தடுக்கப்பட வேண்டும்.

'பைஃபர்கேட்டட் கோர்ஸ்' ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், எஞ்ஜினியர்கள் இருக்கிறார்கள். அதுபோல 'செக்ரட்டேரியல்' பிரிவு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் டி.டி.சி. பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சில சமயங்களிலே முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களாக இருக்கும்போது, மேல்நிலைப் வகுப்புகளிலே அவர்களுக்கு 25 ரூபாய் சிறப்புப் படி வழங்கப்படவில்லை. இருகூறாக்கப்பட்ட பாடத் திட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட பொறியியல் பிரிவு ஆசிரியர்களுக்கும் இது வழங்கப்படவில்லை. அவர்களுக்கும் இந்தச் சிறப்புப் படி வழங்கப்பட வேண்டும். பி.டி. பட்டம் பெறா

விட்டாலும், ஒரு பி.காம்., டி.டி.சி. என்று இருந்தால், அவர்களை பி.டி. பட்டம் பெற வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தக்கூடாது என்ற அளவிலே அரசைக் கேட்டுக்கொண்டு, இந்த அளவு பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி, மேலும் கருத்துக்கள் கூற வேண்டியிருந்தாலும் கூட, நேரம் இல்லாத காரணத்தாலே நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல்நிலைக் கல்வி ஓராண்டு நடந்தேறியிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, அதிலே காணக்கூடிய குறைகளைக் களைவதற்காக 7 உறுப்பினர்கள் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து, அது ஆராய்ந்து ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிப்பதற்காக நம்முடைய சபையின், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து பிரேரேபித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை நான் முழு மனத்துடன் வரவேற்கிறேன். அந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பு, வேறொரு கருத்தை நான் கல்வி சம்பந்தமாகச் சொல்வது பொருத்தமாகும். சில நாட்களுக்கு முன்பு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றியும், நபிகள் நாயகத்தைப் பற்றியும் பாடப் புத்தகத்திலே தவறான ஒரு கருத்து இருக்கிறதென்றும் அதை நீக்க வேண்டுமென்றும் கோரிக்கையை விடுத்தேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அறிக்கை ஒன்றை வாசித்தார்கள். மறுநாள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்தேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சபையிலே இல்லை. ஆகவே, அந்த நன்றியை அவருக்கு மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சியிலே அரசாங்க சார்பிலே நடத்தப்படும் சையத் முர்த்துசா ஸ்கூல் சம்பந்தமாக ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினைபற்றி சில நாட்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும், அதிகாரிகளிடத்திலேயும் நான் சமர்ப்பித்தேன். அந்தப் பிரச்சினைகள் களையப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். அந்தப் பிரச்சினைகளைக் களைவதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு என்னிடத்திலே தகவல் சொன்னார்கள். அது என்னவென்று விவரமாக நான் சொல்லக் கூடாது என்ற முறையிலே இந்த அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் திருச்சியிலே வாழ்கின்ற இஸ்லாமிய மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 ஏப்ரல் 27

(பிற்பகல் 12.30)

பிளஸ் இரண்டு என்ற பாடத் திட்டமுறையை நாம் புதிதாகக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னாலேயே நான் ஒரு கருத்தைச் சொன்னேன். அது என்னுடைய திட்டவட்டமான கருத்தாகும். இந்த பிளஸ் இரண்டு வகுப்புகளை கல்லூரியில்தான் சேர்த்திருக்க வேண்டுமே தவிர, ஹைஸ்கூலில் அல்ல. இந்தப் புதிய பாடத் திட்டத்தைத் துவங்குவதற்கு முன்னாலே குறிப்பிட்ட இந்தக் கருத்தை நான் இப்போதும் வலியுறுத்த விரும்புகிறேன். நடைமுறையில் ஓராண்டுக் காலமாக இந்தப் பாடத் திட்டம் செயல்படும் முறையைக் கவனித்துப் பார்த்த அளவிலும், என்னுடைய கருத்து சரியான கருத்து என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இப்போதாவது அந்த வகுப்புகளை உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து எடுத்து, கல்லூரிகளோடு சேர்க்க வேண்டும். அதுதான் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிளஸ் இரண்டு கல்வித் திட்டத்தின் அடிப்படையில் உயர்நிலைப் பள்ளிகளில் இந்த மேல்நிலை வகுப்புகளைச் சேர்த்ததால் ஏற்பட்டிருக்கிற நிலைமைகளையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் காரணமாக கல்லூரிகளிலிருந்த பி.யு.சி. வகுப்புகள் எடுக்கப்பட்டுவிட்டன. சாதாரணமாக ஒரு கல்லூரியில் இதற்கு முன்னால் 2,000 மாணவர்கள் படித்து வந்தார்கள் என்றால், அதில் 1,000 பேர் பி.யு.சி. மாணவர்களாகவும் மற்ற 1,000 பேர் ஹையர் எஜுகேஷன் என்று சொல்லுகிற பி.ஏ., எம்.ஏ., எம்.எஸ்ஸி., வகுப்பு மாணவர்களாவும் இருந்து வந்தார்கள். இப்போது கல்லூரிகளில் பி.யு.சி. எடுக்கப்பட்டுவிட்டதால் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 1,000 என்று குறைந்து விட்டது. இதன் காரணமாக அந்தக் கல்லூரிகளில் உபயோகப்பட்டு வந்த இடத்தில் பாதி இடம் காலியாகிவிட்டது. காலேஜ் கட்டிடத்தில் பாதிக் கட்டிடம் காலியாக இருக்கிறது. அங்கே இருக்கிற லேபரேட்டரியில் உள்ள அப்பேரட்டஸ்களில் பாதிக்கு மேல் வேலையில்லாமல் இருக்கிறது. அதைப் போலவே பாதி கல்லூரி ஆசிரியர்களுக்கும் வேலையில்லாமல் இருக்கிறது. முன்பெல்லாம் பி.யு.சி. அட்மிஷன்போது ஃபீஸ் வாங்கி எப்படியோ கல்லூரியை நடத்திக்கொண்டு வந்தோம். இனிமேல் கல்லூரிகளை நடத்துவது என்பது கஷ்டம்தான் என்று கல்லூரி பிரின்சிபால்களே என்னிடம் அவர்களின் அவல நிலையைச் சொல்லியிருக்கிறார்கள்.

கல்லூரிகளில் நிலைமை இப்படியிருக்கும்போது உயர்நிலைப் பள்ளிகளில் ஹையர் செகண்டரி வகுப்புகள் வந்ததால் அங்கேயிருக்கிற நிலைமையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஹைஸ்கூல்களில் போதிய இடவசதியில்லை

1979 ஏப்ரல் 27] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

இதன் காரணமாக அங்கே புதிய கட்டிடங்கள் கட்டும் நிலை உருவாகியிருக்கிறது. தற்போது மாணவர்கள் தாழ்வாரங்களில் உட்கார்ந்து கல்வி கற்கும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் போதிய லேபரட்டரி வசதியோ, லைப்ரரி வசதியோ கிடையாது. அவைகளையெல்லாம் இப்போது புதிதாக வாங்க வேண்டியிருக்கிறது. ஒரு பக்கம் காலேஜ்களில் இவைகள் மிச்சப்படுகின்றன என்ற நிலை இருக்கும்போது, ஹையர் செகண்டரி பள்ளிகளில் இவைகள் இல்லாத நிலை, பற்றாக்குறை நிலை இருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களில் பாதிப் பேருக்கு வேலையில்லை என்ற நிலை இருக்கும்போது, இங்கே உயர் செகண்டரி பள்ளிகளில் ஆசிரியர்களாக வேலை செய்ய தகுதிபடைத்த ஆசிரியர்கள் இல்லை என்ற நிலை இருக்கிறது. இவைகளெல்லாம் விரும்பத்தக்க நிலைகளல்ல. இதனால் காலேஜ்களுக்கும் நஷ்டம், ஹையர் செகண்டரி பள்ளிகளுக்கும் நஷ்டம் என்ற நிலை இருக்கிறது. ஹையர் செகண்டரி பள்ளிகளில் புதிதாகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கம் மான்யமாகக் கொடுப்பது என்ற முறையில் சுமார் 10, 20 கோடி ரூபாய்க்குக் குறையாமல் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த மேல் நிலை வகுப்புகள் அனைத்தும் கல்லூரிகளுக்குப் போயிருந்தால், இந்தச் செலவெல்லாம் ஏற்பட்டிருக்காது. இதற்காகச் செலவிடப்படும் பணத்தையெல்லாம் வேறு பல நல்ல திட்டங்களுக்குச் செலவிட்டிருக்க முடியும். இதன் காரணமாகவே மேல்நிலைக் கல்வி வகுப்புகளை கல்லூரிகளுக்கு மாற்றுவதுதான் சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இப்போதும் வலியுறுத்த ஆசைப் படுகிறேன்.

மேல்நிலை வகுப்புகள் கொண்டுவரப்பட்ட பள்ளிகள் ரூ. 25,000 டெப்பாசிட் கட்ட வேண்டும் என்று அரசு நிர்ணயித்தது. இதற்கு அப்போது சொல்லப்பட்ட காரணம் என்னவென்றால், தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கையில் எப்போதும் ரூ. 25,000 இருந்தால், அதிலிருந்து சரிக்கட்டிக் கொள்ளலாம் என்றார்கள். இப்போது அரசாங்கம் முழுக்க முழுக்க தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஊதியத் தொகையைக் கொடுப்பதால், தனியார் பள்ளிகளில்கூட அந்தக் கஷ்டமில்லை.

அரசாங்கத்தின் சார்பில் நடத்தப்படும் பள்ளிகளுக்கும் ரூ. 25,000 டெப்பாசிட் கட்ட வேண்டுமென்று வற்புறுத்துவது எனக்கு பொருத்தமானதாகத் தெரியவில்லை. இந்தப் பணத்தை வசூலிக்க 'பேரண்ட்ஸ் அசோசியேஷன்' என்று வைத்துக்கொண்டு வசூல் செய்கிறார்கள். ரூ. 25,000

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 ஏப்ரல் 27

வசூலிக்கச் சொன்னால், அவர்கள் ரூ. 50,000 என்றும் ரூ. 1,00,000 என்றும் வசூலிக்கிறார்கள். சில பள்ளிகளில் அதிலும் குறிப்பாகத் தனியார் பள்ளிகளில் இந்தப் பணத்தில் துஷ்பிரயோகம் நடக்கிறது.

குறிப்பாக, தனியார் பள்ளிகளில் அட்மிஷன் சமயத்தில் டொனேஷன் என்று சொல்லி பணம் வசூலிக்கிறார்கள். அந்த வாய்ப்பு அரசாங்கப் பள்ளிகளுக்குக் கிடையாது. அவர்களைப் பார்த்து ரூ. 25,000 டொனேஷன் பணம் சேர்க்க வேண்டுமென்றால், அவர்கள் மிகவும் திணறுகிறார்கள். சில பள்ளிகளில் சேர்த்து விடுகிறார்கள்; பல பள்ளிகளில் இந்தப் பணத்தை வசூலிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இதுபற்றி என்னிடம் நிறைய பேர் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். சென்னையில் ஹோவர்ட் ஸ்கூல் என்ற பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அவர்களால் ரூ. 25,000 கட்ட முடியாமல் இருக்கிறது. இந்தப் பள்ளிக்கு ரூ. 25,000 கட்டுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கப் பள்ளிகளில் அதிகப்படியான அளவில் வசூலித்த பணத்தை வேறு பல நல்ல வேலைகளுக்கு ஒதுக்கினால் அதை நான் வரவேற்பேன், பாராட்டுவேன்.

தமிழகத்தில் மொத்தம் 912 பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளைத் தொடங்கியிருப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். ஆனால் இதுவே போதவில்லை என்ற காரணத்தால் வேறு பல பள்ளிகளும் தங்கள் பள்ளிகளை ஹையர் செகண்டரி பள்ளிகளாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருவல்லிக்கேணியிலிருக்கும் இஸ்லாமியர் ஓரியண்ட்டல் ஸ்கூலில் 1,200 மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கே பிளஸ் இரண்டு வகுப்புகளைத் துவங்க வேண்டுமென்று கோரி வருகிறார்கள். அதை அரசாங்கம் பரிவுடன் கவனித்து அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிளஸ் இரண்டு வகுப்புகளுக்குத் தேவையான புத்தகங்கள் அத்தனையும் புதிதாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அந்தப் புத்தகங்கள் உரிய நேரத்தில் கிடைக்கவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. அரசாங்கம் இதில் சரியான நடவடிக்கையை மேற்கொண்டு புத்தகங்களை சரிவரக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 27]

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேல்நிலைக் கல்வியினுடைய வெற்றியைக் குறித்துப் பாராட்டியும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பெரிதும் பாராட்டியும் இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அமைச்சர் அவர்களைப் பாராட்டிப் புகழ்ந்ததற்கான காரணம் இந்த சபையில் அதன் மூலமாக இந்தத் தீர்மானம் நிறைவேறும் என்று எண்ணுவதுதான் என்று நான் கருதுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு உறுப்பினர் இந்தத் தீர்மானத்திற்கே ஒரு நோக்கத்தைக் கற்பிக்கின்றார்கள். உண்மை அதுவல்ல. நான் இங்கே உண்மையைச் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன் என்ற முறையில்தான் அவைகளைக் குறிப்பிட்டேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பாராட்டியதை நான் எப்படி எடுத்துக்கொள்கிறேன் என்றால், மேல்நிலைக் கல்வியில் இருக்கிற சிரமங்களைப் போக்குவதானால் ஒரு திறமைமிக்க கல்வியமைச்சரான மாண்புமிகு திரு. அரங்கநாயகம் அவர்களால்தான் முடியும் என்று சொல்லியிருப்பதாகக் கருதுகிறேன்.

எப்போதும் பேசுவதில் ஒரு நயம் உண்டு. இருக்கிற கருத்து சரியாக இல்லையென்றால், அந்தத் துறையினுடைய அமைச்சரின் உண்மையான பெருமைகளை எடுத்துச் சொல்லி, அதைச் சரி செய்ய வேண்டும் என்கிற போக்கில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அமைச்சர் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அவர் பாராட்டியதைவிட அதிகமாக என்னால் பாராட்ட முடியும். அந்தத் திறமை எனக்கு இருந்தாலும், இன்றையதினம் நான் ஆளும் கட்சியில் இருக்கிற காரணத்தால், நான் அவரை அதிகமாகப் பாராட்ட விரும்பவில்லை.

இன்றையதினம் மேல்நிலைக் கல்வி வெற்றி பெற்றிருக்கிறது என்பதற்கான அடிப்படைக் காரணமாக இருப்பது, இந்தக் கல்வியில் இருக்கிற அகடமிக் கோர்ஸ் அல்ல, அதாவது ஏட்டுப் பாடங்கள் அல்ல. பாடங்களைப் பொறுத்த வரையில், 3 ஆக இருந்தவற்றை இப்போது நான்காக மாற்றியிருக்கிறோம். அல்லது இரண்டாக இருந்ததை நான்காக மாற்றியிருக்கிறோம். விஞ்ஞானத் துறையிலும், கலைத் துறையிலும் பாடங்கள் அதிகமாகியிருக்கின்றன. ஆனால் மேல்நிலைக் கல்வியில் இருக்கிற தொழிற் கல்வி வாய்ப்புதான் இந்த மிகப் பெரிய வெற்றிக்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்பதை

வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிற் கல்விதான் அதன் அடிப்படையான நோக்கம் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களும் கல்வித் துறையாளர்களும் சொல்லி வருகிறார்கள். வெளி நாடுகளில், குறிப்பாக வளர்ந்து வருகிற நாடுகளில் மேல்நிலைக் கல்வி என்பது எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி யுனெஸ்கோவினரும், யு.என்.ஓ.வினரும் அறிக்கை தந்திருக்கிறார்கள். அதிலும் அவர்கள் இந்தக் கல்வியின் நிலைபற்றி நன்கு ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

மேல்நிலைக் கல்வியிலும் இடை நிலைக் கல்வியிலும் தொழிற் கல்வியைக் கொண்டுவந்ததன் காரணமாக கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்குப் பெரும் நன்மையைச் செய்திருக்கிறோம் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நமது நாட்டைத் தவிர மற்ற வளர்ந்திருக்கிற நாடுகளில் என்ன நிலைமை இருக்கிறது என்றால், கிராமப்புறங்களில் கிடைக்கின்ற தொழிற் கல்வியின் காரணமாக அங்கேயிருக்கிற மக்களை நகர்ப்புறங்களை நோக்கி ஓடவைக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.40)

நம்முடைய கல்வித் திட்டத்தில் விவசாயம் சம்பந்தப்பட்ட தொழிற் கல்வி அமைந்திருக்கிறது. கிராமப்புறத்து மக்கள், நகர்ப்புறத்திற்கு வரத்தக்க தொழிற் கல்வி தரப்படுவதை நான் ஆட்சேபிக்கமாட்டேன். ஒருவேளை நகர்ப்புறங்களிலே உள்ள மக்கள் கிராமப்புறத்திற்குச் செல்லக் கூடிய வகையில் விவசாயத்தை வலுவுள்ளதாக ஆக்குகிற சூழ்நிலையை உருவாக்கினால், நிச்சயமாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கல்வித் துறையிலே என்னென்ன செய்ய வேண்டுமென்று சென்ற முறையே நான் எடுத்துச் சொன்னேன். இரண்டு நாட்களுக்கு முன்னால் கல்வியமைச்சர் அவர்கள், வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் ஆகியோர் சைதாப்பேட்டையில் இருக்கிற மாடல் ஹைஸ்கூலில் ஹையர் செகண்டரி பள்ளிக் கட்டிடத் திறப்பு விழாவிற்குச் சென்று வந்திருக்கிறார்கள். அந்த விழா சிறப்பாக நடைபெற்றதென்று சொன்னார்கள். அன்று மேல்சபை நடந்ததால், என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. மேல்சபை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடையத்தக்க முறையிலே அந்த விழா நடைபெற்றிருக்குமென்றால், சென்னை மாநகரத்து ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையிலே என்னைக்கூட பேச அழைத்திருக்கலாம். என்னை அழைக்காமலே அந்த விழா நடைபெற்றிருப்பதிலிருந்து, கல்வி வளர்ச்சியைப் பற்றிய பல செய்திகள் எனக்குத் தெரியாமலே போயிற்று. ஆனால், அவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அறிவீர்கள், தங்கள் தொகுதியில் நடைபெறுகிற விழாக்களுக்கு அழைக்கவில்லையானால்,

பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான கோபம் கொள்ளுவார்கள் என்று. ஆனால் மேல்சபை உறுப்பினர்கள் இதற்காக வெல்லாம் அதிகமாகக் கவலை கொள்வதில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நாங்கள் உட்பட அல்லவா?

திரு. க. அறிவழகன்: துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் உட்பட என்றால் பொருத்தமாக இருக்கும். காரணம், எப்போதும் விலக்கி வைத்திருக்கிறார்கள் என்பதால், இப்போது புதிதாக விலக்கி வைத்திருப்பதற்காக வருத்தப்படுவதில்லை.

மேல்நிலைக் கல்விக்காக பயிற்சிக் கூடங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், தொழிற் கூடங்கள் ஆகியவைகள் வேகமாக உருவாகி வருகின்றன. மேல் நிலைக் கல்வியிலே பல காரியங்களைக் கண்டிப்பாகச் செய்தாக வேண்டுமென்று சென்ற முறை பேசியபோது கேட்ட காரணத்தாலே, கல்வியமைச்சர் அவர்கள், "நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. அறிவழகன், மேல் நிலைக் கல்விக்காக கண்டித்துப் பேசுகிறார்களே" என்று குறிப்பிட்டார்கள். அப்போது நேரமில்லாததால், சில கருத்துக்களைச் சொல்ல முடியாமல் போய் விட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தற்போதும் நேரம் அதிகமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. க. அறிவழகன்: ரொம்ப மகிழ்ச்சி. விட்டுப்போனவற்றில் சிலவற்றை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

நம்முடைய தமிழ் நாடு மதிப்பீட்டுக் குழு 1973-ஆம் ஆண்டிலே ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறது. அந்த அறிக்கையிலே, "நம்முடைய நாட்டிலே இருக்கிற மாவட்ட சீப் எஜுகேஷனல் ஆபீசர்களுக்கு அதிகாரம் மிக அதிகமாக இருக்கிறது. அவர்கள் அதைப் பயன்படுத்துவதை அவ்வப்போது சரி செய்வதற்கேற்ற அதிகாரமுள்ள குழுக்களை அமைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை அப்படியே படிக்க நேரமில்லாததால், படிக்க முடியவில்லை. பல நேரங்களில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், சென்னை நகரத்திலே உள்ள சி.இ.ஓ. உட்பட, அவர்கள் ஜனநாயக அரசின் கீழே அலுவலர்களாக இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டு, ஆசிரியர்களுடைய கோரிக்கைகளையும், ஆசிரியர் பிரதிநிதிகளுடைய

கோரிக்கைகளையும், பேரவை, மேலவை உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் மிக அலட்சியமாக நோக்குகிறார்கள். ஆகவே அவர்களுடைய அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். பரவலாக்க வேண்டுமென்றால், அவர்கள் செய்கிற அதிகாரங்களைக் கேள்வி கேட்கக்கூடிய அதிகாரிகள் உள்ள குழுக்களை அமைக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான், மேல்நிலைக் கல்வி வளர்வதற்கு உதவி செய்ததாக இருக்க முடியும். அக் குழுக்களில் பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், தலைமையாசிரியர்கள் ஆகியவர்களுடைய பிரதிநிதிகளும், மேல்நிலைக் கல்விக்கான பிரதிநிதிகளும் அமைகிற முறையில் இருக்க வேண்டும்.

நீண்ட நாட்களாக நான் ஒன்றைச் சொல்லிக் கொண்டு வருகிறேன். பிரிட்டிஷ் கல்வி முறையை நாம் ஏற்றுக்கொண்டோமே தவிர, அவர்கள் கல்வித் துறையை எப்படி நிர்வகிக்கிறார்களோ அதைப்போல் இன்றைய தினம் நாமும் கல்வித் துறையை நிர்வகிக்கவில்லை. எத்தனையோ அதிகாரிகள் இலண்டனுக்குப் போய் வந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அங்கேயிருக்கிற நிர்வாக முறையை இங்கே கொண்டுவர வேண்டுமென்பதிலே அக்கறை காட்டவில்லை. அங்கே ஒவ்வொரு மாவட்டத்தினுடைய கல்வித் துறை அதிகாரமும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் குழுக்களால் செயல் படுத்தப்படுகிறது. அங்கே லோகல் எஜுகேஷன் அத்தாரிட்டி என்ற அமைப்பு இருக்கிறது சென்னை நகரத்திற்கு அப்படியொரு அத்தாரிட்டியை ஏற்படுத்த வேண்டுமென்றால், "தி கிரேட்டர் மதராஸ் அத்தாரிட்டி" என்று ஏற்படுத்தலாம். அப்படிப்பட்ட 'அத்தாரிட்டி' இங்கே இல்லையா என்றால், இருக்கிறது. ஒன்று லோக்கல் லைப்ரரி அத்தாரிட்டி என்று இருக்கிறது. இன்னொன்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் பொறுப்பிலே 'மெட்ரோபாலிடன் அத்தாரிட்டி' என்று இருக்கிறது. இதைப் போலவே கல்விக்காக ஒரே ஒரு அத்தாரிட்டியைப் போடலாம். கல்விப் பணிகள் அத்தனையையும், டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் அவர்களின் மீது பெருஞ்சுமையாகச் சுமத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கிருக்கிற நெறியாளர் திறமையானவர், எதையும் பேசுகிறவர் என்ற நிலை இருப்பதால், ஒருவேளை அந்தத் துறையிலே இருக்கிற பிரமங்கள் குறைந்திருக்கலாம். ஆனால் மாவட்டந்தோறும் அதிகாரமுள்ள அதிகாரக் குழுக்களை நியமித்தால், அதிகாரிகள் செய்யக்கூடிய பணிகளைக் கண்காணிக்க வாய்ப்பாக இருக்கும்.

முன்பு கல்வியமைச்சராக இருந்த நாவலர் அவர்கள் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்த பின்னர், "அங்கே யாரும் தனிப்பட்ட முறையில் பெட்டிஷன்களை கல்வியமைச்சரின் கையில் கொடுப்பதில்லை

அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள்" என்று சொன்னார்கள். இங்கே நம்முடைய கல்வியமைச்சரைச் சுற்றி ஆசிரியர்கள் கூட்டமே நிற்கிறது. அவ்வளவு பேர் அமைச்சரைத் தேடி வரக் காரணம் என்ன? ஆங்காங்கே பிரச்சினைகளைத் தீர்க்க ஆள் இல்லை. இருக்கிற ஆட்களும் சரியாகச் செய்வதில்லை. இது நீண்டகாலமாக இருக்கிற நிலைமை. ஆகவே நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே உண்மையான மகிழ்ச்சியோடு உட்கார வேண்டுமென்றால், இங்கு கேட்கக்கூடிய கேள்விகளுக்கு மிகுந்த ஆர்வத்துடனும், பெருமகிழ்ச்சியுடனும் பதில் சொல்ல வேண்டுமென்றால், கல்வித் துறையிலே இத்தகைய குழுக்களை ஏற்படுத்தியே ஆக வேண்டும்.

துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் நேரமில்லையென்று எப்போது சொன்னீர்களோ, அப்போதே நான் எந்தப் பிரச்சினையைச் சொல்ல வேண்டுமென்று கருதினேனோ அதை விட்டுவிட்டு வேறு சில பிரச்சினைகளைச் சொல்ல ஆரம்பித்துவிட்டேன். (சிரிப்பு)

மேல்நிலைப் பள்ளிக்கு வரவேண்டுமென்றால், மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களை, பிரின்சிபால் (முதல்வர்) என்று அழைக்க வேண்டும். நான் படித்த இராஜமன்னார்குடி ஃபின்லே ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டரை 'பிரின்சிபால்' என்றே அழைத்தார்கள். காரணம் அங்கே இன்டர்மீடியட் வகுப்பு இருந்தது. பிரின்சிபால் என்று அழைப்பதிலே மதிப்பு இருக்கிறது. இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் 11-வது 12-வது வகுப்புகளை ஏற்படுத்திவிட்டோம். ஆகவே உயர்நிலைப் பள்ளிகளில் உள்ளவர்களை ஹெட்மாஸ்டர் என்றும், மேல்நிலைப் பள்ளிகளில் உள்ளவர்களை 'பிரின்சிபால்' (முதல்வர்) என்றும் அழைக்கலாம்.

இந்த ஆண்டு ஜுலை மாதத்திலேயே தேர்வுக்கான மாதிரி வினாத்தாள் மாணவர்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு, மூன்று நிமிடங்களிலே முடிக்குமாறு வேண்டுகிறேன்.

திரு. க. அறிவழகன்: மேல்நிலைக் கல்விக்கான பாடங்கள் படித்துத் தேர்வு எழுதக்கூடிய நிலையில் அமையவில்லை. பாடங்கள் கடல் போன்று பரந்து கிடக்கின்றன. ஆகவே கேள்வி என்ற தோணி கிடைத்தால்தான், தேர்வு என்ற புயலிலிருந்து மாணவர்கள் தப்ப முடியும். ஆகவே மாதிரி வினாத்தாள்களை அரசு வெளியிட நிச்சயமாக முயற்சிக்க வேண்டும்.

[திரு. க. அறிவழகன்] [1979 ஏப்ரல் 27

மேல்நிலைப் பள்ளிகளிலே எத்தனை ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன, நூலகங்கள் எத்தனை இருக்கின்றன, அவைகளிலே வசதிகள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதையெல்லாம் நிச்சயமாக ஆராய வேண்டும். ஆய்வுக் கூடங்களைப்பற்றிச் சொல்லுகிற நேரத்தில், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதிருக்கிற பெரும்பாலான ஆய்வுக் கூடங்களில் இருக்கின்ற அத்தனை பொருள்களும் கடந்த காலத்திலே, அதாவது 1973, 1975, 1976 ஆகிய ஆண்டுகளில் வாங்கப்பட்டு உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்பப்பட்டிருந்ததாலே தகுதியுள்ளவைகளாக, ஸ்டாண்டர்டாக அமையவில்லை. ஆகவே அதைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்த வேண்டும். ஆய்வுக்கூடங்களில் அட்டெண்டர்கள் கூட இல்லை. அவர்களை நியமிக்க அரசு முன்வர வேண்டும்.

தொழிற் கல்வி வெற்றிபெற அடிப்படையிலே என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி யுனஸ்கோவினுடைய அறிக்கையிலே 192-வது பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே "தொழிற் கல்வி ஆறாவது வகுப்பிலே யிருந்து சொல்லித் தர வேண்டும். தொழிற் கல்வி நம்முடைய மாணவர் களுடைய கைத்திறனையும் மற்றும் உடல் திறனையும் வளர்ப்பதாகும்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தொழிற் கல்வியை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிற பெருமுயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறைதான் ஓவியமும், கைத்தொழிலும் கற்றுக் கொடுக்கிறார்கள். வாரத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ கற்றுக் கொடுக்கிற முறையிலே இதை மாற்றியமைக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தனி உறுப்பினர் தீர்மானம் 1.00 மணிக்கு முடிய வேண்டும். இன்னும் 10 நிமிடங்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடித்துக்கொண்டால் இன்னொரு உறுப்பினர் பேச முடியும்.

திரு. க. அறிவழகன் : இந்த அளவிலே முடித்துக்கொண்டு பேச நல்ல சந்தர்ப்பமளித்த தங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசவேண்டும். அங்கத்தினர் அவர்கள் ஒரு மணி ஆவதற்குள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 27]

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, மேல்நிலைக் கல்வியை அமுல் நடத்துவதற்காக என்று ஒரு குழுவை நியமித்து, அது தற்போது நல்ல முறையில் செயல்படுகின்ற முறையை ஆய்ந்து மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்குரிய வாய்ப்புகளைப் பெறவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துரைத்த அத்தனை கருத்துக்களையும் நான் வழிமொழிகிறேன். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் மிகப் பெரிய புரட்சியைச் செய்திருக்கிறார்கள். குக்கிராமங்களிலே உள்ள குழந்தைகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். குக்கிராமங்களிலே உள்ள மாணவர்கள் மிக நீண்ட தொலைவிற்குச் சென்றுதான் மேல்நிலைக் கல்வி பெற வேண்டுமென்ற நிலைமை இருக்கின்றது. இன்றையதினம் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை உயர்நிலைப் பள்ளிகளிலே கொண்டு வந்ததன் மூலமாக கிராமப்புறங்களில் உள்ள மக்கள் அங்கேயே மேல்நிலைக் கல்வியைப் பயின்று கொள்கின்ற வாய்ப்புகளை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இது இந்தக் காலத்தில் நடைபெறுகின்ற மிகப் பெரிய புரட்சி என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் ஒரு நல்ல சாதனையைச் செய்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு பி.யூ.சி.யில் 75 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இப்போது இந்தத் திட்டத்தின் மூலமாக மேல்நிலைக் கல்வியைப் பரவலாக ஆக்கியதன் வாயிலாக, இந்தக் கல்வியைக் குக்கிராமங்களில் இருப்பவர்கள் பெறுவதற்கு கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டுமென்று இருந்த நிலையை மாற்றி யமைத்ததன் காரணமாக, கிட்டத்தட்ட 1.15 லட்சம் பிள்ளைகள் இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததன் மூலமாக ஏறத்தாழ 40 ஆயிரம் அதிகமான மாணவர்கள் இந்த ஆண்டு உயர் கல்வி பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஆகவே கல்வி அமைச்சரவர்களை மிக அதிகமாகவே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சென்ற ஆண்டு தொடங்கிய பள்ளிகளின் எண்ணிக்கை 912. அதிலேயும் பல பள்ளிகள் தகுதியற்றவைகளாக இருக்கின்றன. அவைகளுக்குக்கூட அனுமதி அளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். குக்கிராமங்களில் இன்னும் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டியதாக இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளைத் தொடங்க ஆர்வம் உடையவர்கள் பலர் இருக்கிறார்கள், நிறுவனங்களும் பல இருக்கின்றன. தகுந்த வாய்ப்புகள், வசதிகள் உடைய, மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவை யான அனைத்து வசதிகளும் உடைய பள்ளிகளும் இருக்கின்றன. அவர்கள்

எல்லாம்கூட அனுமதி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கல்வி அமைச்சர் அவர்கள் இத்தோடு நிறுத்திவிடுவது என்று இல்லாமல், வருகின்ற கல்வியாண்டிலே 912 பள்ளிகள் என்ற எண்ணிக்கை ஆயிரம் பள்ளிகள் என்ற எண்ணிக்கையை அடைகின்ற வகையில் இன்னும் பள்ளிகள் தொடங்கினால் ஆயிரம் பிறைகண்டவர் என்று சொல்வார்களே, அது போல ஆயிரம் பள்ளிகள் கண்டவர் என்ற பெயர் அவருக்கு ஏற்படும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆயிரம் மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்திலே பாடங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். தற்காலத்திலே அந்தப் பாடங்களைப் போதிப்பதற்கு அந்த ஆசிரியர்களுக்கு திறன், ஆற்றல் விரிவாக்கப்பட வேண்டும். அந்த ஆற்றலைப் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். அந்தப் பாடங்களைப் போதிப்பதில் அந்த ஆசிரியர்களை இன்னும் தரமுடையவர்களாக ஆக்குவதற்கு, அந்தப் பாடங்களைப் போதிப்பதற்கு மேலும் பயிற்சிபெறும் வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய பள்ளிகளை, அவைகளை மேல்நிலைப் பள்ளிகளாக்கித் தருகின்ற நேரத்தில், தனியார் துறைகளுக்குத் தராமலிருக்க வேண்டும். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் தனியார் பள்ளிகளிலே ஏற்படுகின்ற தொல்லைகளை நன்றாக உணர்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அவர்களுக்கு அந்த அனுமதியைத் தராமலிருக்க வேண்டும்.

குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளியினர் அந்தப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவைகள் அரசுப் பள்ளிகள். அதில் ஒரு பள்ளிக்குக் கூட மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதியளிக்கப்படாமல் இருக்கின்றது. ஆனால் அங்குள்ள ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பள்ளிகளுக்கே அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற பள்ளிகளில் கல்வியை மட்டும் போதிப்பதில்லை. நமது பாரதப் பிரதமர் அவர்கள் இங்கே வந்திருந்தபோது, ஒன்றைச் சொன்னார்கள். அதைப்போல கிறிஸ்துவர்கள் நடத்துகின்ற அந்தப் பள்ளிகளிலே, பாடத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதைவிட, அவர்களுடைய மத போதனையை

வளர்ப்பதற்கு அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். பள்ளி நேரம் தவிர மற்ற நேரங்களையெல்லாம் அதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, சிறுபான்மையினர் பள்ளி என்று சொல்லிக்கொண்டு, அவர்களுக்கு அனுமதி தருவதன் காரணமாக உரிய காலத்தில் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி தராமல் அரசுப் பள்ளிகளிலேயே, தாமாக நடந்துகொண்டிருக்கின்ற பள்ளிகளுக்கு அனுமதி தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் சொல்கிறேன். பாடப் பிரிவுகள் 4 இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அது ஒரு தனி குரூப். எல்லாப் பள்ளிகளிலும் எல்லாவிதமான பாடத்திட்டமும் இல்லாத காரணத்தினாலே, குறிப்பிட்ட சாருக்குச் சிக்கல் ஏற்படுகின்றது. அரசு ஊழியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது மற்றவர்கள் குழந்தைகள், ஒரு பிரிவை எடுத்துப் படிக்க விரும்புகின்றவர்களுக்கு, செல்லும் இடங்களில் அந்தப் பிரிவு இல்லாததால், சேர முடிவதில்லை. அரசு ஊழியர்களுக்கு, மற்றும் ஆசிரியர்களுக்கு மாறுதல் வரும்போது, அவர்கள் குழந்தைகளை, வேறு பள்ளிகளிலே சேர்க்க வேண்டுமென்றால், அங்கே அந்தப் பாடப் பிரிவு இல்லை என்ற நிலை இருக்கின்றது. அதனால், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றவர்கள் எல்லாம் சிரமப்படக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கேற்ப மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது இங்கே ஒன்றைச் சொன்னார்கள். தனியார் பள்ளிகளைப்பற்றிச் சொன்னார்கள். நான் அது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கூட கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அது குறித்து இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தனியார் பள்ளிகளுக்கு அனுமதி தருவதினாலே ஏற்படுகின்ற தொல்லைகளைப்பற்றி நான் சொல்லித்தான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிய வேண்டுமென்ற அவசியத்தில் அவர் இல்லை. இந்த நகரத்திலேகூட பி. கே. பழனிசாமி உயர்நிலைப் பள்ளி என்று ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே இப்போது இருக்கக்கூடிய ஆசிரியர்களின் பெரும்பான்மையோருக்கு 1—5—1979-க்கு மேலே வேலை இல்லை. அவர்களுடைய பணி தேவையில்லை என்று வேலை நீக்க நோட்டீஸ் தந்திருக்கிறார்கள். அதிலே 24 ஆண்டுகள் பணியாற்றியவர் இருக்கிறார். விதவையாக இருப்பவர் பணியில் இருக்கிறார். ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். அங்கு

9-வது, 10-வது வகுப்புகளை நாங்கள் மூடப் போகிறோம் என்று சொல்லி, அவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் கொடுத்து வீட்டுக்கு அனுப்புகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மணி ஆவதற்கு இன்னும் மூன்று நிமிடங்கள் தான் இருக்கின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இப்படிப்பட்ட சூழ்நிலையில் தனியார் துறையிலே ஆசிரியர்கள் வேலை போகப் போகிறதே என்ற அச்சத்துடன் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைமை ஆசிரியர்கள்தான் பி. எல். தரவேண்டும். ஆனால் இப்பள்ளியில் கரெஸ்பாண்டெண்ட்தான் தரவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்திருக்கிறார்கள் மாணவர்களிடத்திலே நிர்வாகத்தினர் அபராதம் வசூலிக்கிறார்கள். வசூல் செய்த பணத்தை ஆசிரியர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று நிர்வாகத்தினர் பிரச்சாரம் செய்கிறார்கள். மாணவர்கள் மத்தியிலே வைத்து ஆசிரியர்களை அவமானப்படுத்துகிறார்கள். இப்படியெல்லாம் செய்வதை எதிர்த்துக் கேட்ட காரணத்தினாலேயே இருக்கின்ற ஆசிரியர்களை வீட்டுக்குச் செல்லும்படியாக அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பத்திரிகையிலே எல்லாம் வந்திருக்கிறது. இவைகளைத் தடுக்க எந்த அளவுக்கு ஆர்வமாக, அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும், அது நடைபெறுவதில்லை என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்டுவதோடுகூட, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், நாம் சென்று சுற்றிப் பார்த்து, அங்கே இருக்கக்கூடிய சாதகபாதகஙகளை கண்டறிந்து, நாஙகள் சொல்லியவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று வந்துள்ள இந்தத் தீர்மானம் மிக முக்கியமானது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவன் ஆவேன்.

இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இவைகளை ஆய்வதற்கு அதிகாரிகள் எல்லாம் அதிகாரிகளாக இல்லை. பெரும்பாலான. அதிகாரிகள் நல்ல அதிகாரிகளாக இல்லை. அவர்கள் நிர்வாகத்தினருக்கு உடந்தையாக இருக்கக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். பெரும்பான்மையானவர்கள் அப்படி இருக்கிறார்கள். அவர்கள் நிறுவனங்களில் உள்ள குறைகளை எடுத்துத் தெரிவிப்பதில்லை. அதற்காகத்தான் கல்வியிலே நாட்டம் உடைய குழுவை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னர் பேசிய அங்கத்தினர் திரு. அறிவழகன் அவர்கள்கூட ஒன்றைச் சொன்னார்கள். எல்லா மாவட்டங்களிலும் முதன்மைக் கல்வி அதிகாரிகள்

இருக்கிறார்கள். அவர்கள் அதிகமாக அதிகாரங்களை வைத்துக்கொண்டு ஏதேதோ தொல்லைகள் தருகிறார்கள் என்று சொன்னார்கள். சென்னை உட்பட என்று சொன்னார்கள். ஆனால் சென்னையைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளிகளிலே நடக்கின்ற இந்த ஊழல்களையெல்லாம் தடுப்பதற்கு இங்கே இருக்கின்ற முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் மிகத் தீவிரமாகப் பாடுபடுவதை என்னாலே நேரடியாகவே அறிய முடிந்தது. அப்படிப்பட்ட அதிகாரியுடைய நடவடிக்கைகளுக்கு, கீழே இருக்கின்ற அதிகாரிகள், மேலே இருக்கின்ற அதிகாரிகள், அவர்களுக்கு இடையூறாக இருக்கக்கூடிய சூழ்நிலைகூட இருப்பதாக நான் அறிகிறேன். அப்படியில்லாது அவருக்கு உதவிகரமாக இருப்பதற்கும், நல்ல முறையிலே அந்தப் பணியை அவர் தொடர்ந்து நடத்துவதற்கும் அரசு உதவ வேண்டும். அவ்வதிகாரி ஆசிரியர்களுக்குச் சாதகமாக இருக்கிறார்கள்; நியாயத்தை நிலை நாட்ட முயற்சிக்கிறார்கள். அந்த அதிகாரிக்கு ஏற்படும் இடையூறுகளை அரசு தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி மற்ற அதிகாரிகளும் இருக்க வேண்டுமென்ற ஒரு சுற்றறிக்கையைக்கூட மாவட்ட அனைத்துக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்ப நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்கலாம் என்ற ஆலோசனையை இந்த நேரத்தில் கூறி இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்து அமைகிறேன்.

(பிற்பகல் 1.00.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் பாடப் புத்தகங்கள், தகுந்த கல்வித் தகுதியுடைய ஆசிரியர்கள், தக்க ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருப்பதால், மேல்நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம் பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வழங்க, மேலவை உறுப்பினர்கள் ஏழு பேர் அடங்கிய ஒரு குழு அமைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முன் மொழிந்திருக்கிறார்கள். அதன்மேல் அவர்களுடைய மேலான கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே பேசுகின்றபோது, புதிய கல்வியைக் கொண்டு வந்து அமுல்படுத்துகின்ற பாங்கினைப்பற்றிப் பாராட்டி, அவர் தன்னுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பாராட்டுவது என்பது, அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அப்படி அவர்கள் பாராட்டுகின்ற நேரத்தில், நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வது என்பது, என்னுடைய கடமை உணர்ச்சியைக் குறிப்பதாகும். அந்த வகையிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவோடு அவருடைய பேச்சை ஒப்புக்கொள்ளாமல், இங்கே எதம்

காக அனுமதிக்கப்பட்டு, அந்தத் தீர்மானம் விவாதிக்கப்படுகிறதோ அதனுடைய அடிப்படையைப் புரிந்துகொண்டு, அவர் அவருடைய பேச்சிலே எடுத்துச் சொன்ன குறைபாடுகளையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்வோமென்பதை இங்கே ஒரு நம்பிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரவர்களைப் பின்தொடர்ந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு அச்ச உணர்வுகளை, ஐயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் எச்சரிக்கையோடும் பக்குவ உணர்வோடும் ஆழ்ந்து சிந்தித்து, நல்ல முறையில் ஆய்ந்து பார்த்து, மேற்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று துணிவாக இருக்கின்றேன் என்று சொல்லிக்கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வஹாப் அவர்கள் பேசுகின்றபோது, "நான் இன்னும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் கல்லூரியில் இருக்கவேண்டுமென்ற கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை, அதை இன்றும் வலியுறுத்துகிறேன்" என்று இங்கே சொன்னார்கள். மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்து ஓராண்டுக் காலமாகிறது. தமிழகத்திலே நடைபெற்று வருகிற முறைதான் தலை சிறந்தது என்று எல்லோராலும் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, இந்த முறையை எல்லா மாநிலங்களிலும் பின்பற்ற வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. எனவே இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றுதான். "கல்லூரிகளில் இருக்கின்ற வசதிகளைப் பார்த்தேன், பி.யூ.சி. வகுப்பை எடுத்ததற்குப் பின்னாலே வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்களைப் பார்க்கிறேன், லேபரட்டரிகளைப் பார்க்கிறேன், நூலகங்களைப் பார்க்கிறேன் விரிவுரையாற்றும் கூடங்களைப் பார்க்கிறேன், அதே நேரத்தில் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள வசதிக் குறைவுகளைப் பார்க்கிறேன், இவைகளையெல்லாம் பார்த்ததற்குப் பிறகு, நான் மறுபடியும் என்னுடைய பழைய கருத்தை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்" என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பார்த்ததை 'இல்லை' என்று சொல்லவில்லை அவர்கள் பார்க்காமல் இருந்ததும், பார்த்ததற்குப் பிறகு, அதைச் சொல்ல மறுத்ததையும் கூற விரும்புகிறேன். கல்லூரிகளில் கூடங்கள் இருக்கின்றன ஆசிரியர்கள் இருக்கிறார்கள், லேபரட்டரி இருக்கிறது, நூலகம் இருக்கிறது அதிலே புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால் கடந்த 4 ஆண்டுகளாக கல்லூரிகள் எவ்வாறு செயல்படுகின்றன, எந்த அளவிற்குக் கல்லூரிகள்

நடைபெற்றன, எந்த அளவிற்கு மாணவர்கள் படித்தார்கள், அதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு புகுமுக வகுப்பில் 80,000 இடங்கள் இருக்கின்றன. ஆனால் 67,000, 68,000 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். மேற்கொண்டு இருக்கிற 12,000 இடங்களில் மாணவர்கள் சேர வரவில்லை. அவர்களைச் சேர்ப்பதற்குப் பெற்றோர்கள் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பி.ஏ., பி.காம்., பி.எஸ்சி. பட்டப் படிப்புகளுக்கு 51,000 இடங்களை அனுமதித்திருக்கிறோம். எல்லாவற்றையும் பொது மக்களின் வரிப் பணத்தில் நடத்திக் கொண்டிருக்கிறோம். பட்டப் படிப்பில் 41,000 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். பி.காம். பட்டப் படிப்பில்கூட, சில கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, பெற்றோர்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளுக்கு அனுப்ப மறுக்கிறார்களா என்று யோசித்துப் பார்க்கும் கடமை இருக்கிறது. இந்த உண்மைகளையெல்லாம் சரிவர உணர மறுக்கக்கூடாதென்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நாம் அப்படிப் பார்க்கும்போது, அனைத்துப் பிரச்சினைகளையும், அனைத்துச் சூழ்நிலைகளையும் ஆராய்ந்து பார்த்தால், இன்றைக்கு எடுத்திருக்கிற இந்த நடவடிக்கை சாலச் சிறந்தது என்பதை ஏற்றுக்கொள்வீர்களென்று நான் கருதுகிறேன்.

25,000 ரூபாய் கட்ட வேண்டியது பற்றிக் குறிப்பிட்டார்கள். 25,000 ரூபாயை, மேல்நிலைப் பள்ளிகளுக்காகக் கட்ட வேண்டுமென்று சொன்னது, புதிய நிபந்தனைபோல் அவர்கள் பேசினார்கள். மற்றவற்றை அவர்கள் பார்க்க மறந்துவிட்டார்களென்று கருதுகிறேன். தொடக்கப் பள்ளி ஆரம்பிப்பதாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதாக இருந்தாலும், கல்லூரி ஆரம்பிப்பதாக இருந்தாலும், சில நடைமுறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்கவும் இந்த நிபந்தனையை வைத்திருக்கிறார்கள். 50,000 ரூபாய் கட்ட வேண்டுமென்றிருந்ததை 25,000 ரூபாய் என்று குறைத்திருக்கிறோம். 25,000 ரூபாயை அட்மிஷன் காலத்தில் வசூலிக்கக்கூடாது. அதை தலைமை ஆசிரியர் வசூல் செய்யக்கூடாது. பள்ளியின் கரெஸ்பான்டென்ட் வசூலிக்கக்கூடாது. பெற்றோர்கள்-ஆசிரியர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவர்கள்தான் 25,000 ரூபாயை வசூலிக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் வசூலித்து, அந்தப் பணத்தைக் கட்ட வேண்டும். அப்படிக் கட்டவில்லை என்றாலும், அனுமதி மறுக்கவில்லை. அதை மிகப் பெரியதொரு நிபந்தனையாக வைத்துக்கொள்ளவில்லை. அதை வலியுறுத்தக் காரணம், பெற்றோர்களுடைய ஈடுபாடு பள்ளியில் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான். அரசுப் பள்ளிகளுக்கு ஏன்

என்று கேட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், அரசுப் பள்ளிக்குத்தான் பெற்றோர்கள் ஈடுபாடு மிக மிகத் தேவையாக இருக்கிறது. அந்தப் பள்ளிக்கும் நிர்வாகம் இருக்கிறதென்ற உணர்வை உண்டாக்க வேண்டிய ஆசிரியர்-பெற்றோர் சங்கம், ஒவ்வொரு அரசுப் பள்ளியிலும் கட்டாயம் இருந்து தீர வேண்டும். சாதாரண பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரிகள் வரைக்கும், அரசு நிர்வாகத்தில் இருக்கும் அரசுப் பள்ளியானாலும், அரசுக் கல்லூரியானாலும், எந்தக் கல்வி நிறுவனமானாலும், இப்படிப்பட்ட அமைப்பு தேவை என்பதை நாம் இன்றைக்கு மிகவும் கூர்மையாக உணர்ந்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு பிரச்சினைகள், அரசு சார்பாக நடத்தப்படும் கல்வி நிலையங்களில் இருக்கும் குறைபாடுகள் ஆகியவற்றைப் போக்க, இது நல்ல கருவியாகப் பயன்பட்டு வருகிறதென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். பெற்றோர்களிடம் அக்கறை, ஆர்வத்தைத் தூண்டுவதற்காகத்தான் இதைக் கருவியாகப் பயன்படுத்துகிறோமே தவிர, 25,000 ரூபாய்க்காக அல்ல. இன்றைக்கு 25,000 ரூபாய் கட்டியிருந்தாலும், கட்டாவிட்டாலும், அத்தனை அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் 1,65,000 ரூபாய் செலவில் சிறந்த ஆய்வுக் கூடங்களைக் கட்டியிருக்கிறோம். இந்த அளவிற்கு, 400-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இந்த வசதிகளை, ஓராண்டுக் காலத்திற்குள் கல்வித் துறை செய்து கொடுத்துள்ளது. இந்த ஆண்டும் அந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முக்கியமானதொரு கருத்தைச் சொன்னார்கள். வொகேஷனல் கோர்ஸ் என்ற பிரிவு ஏற்படுத்துவதை எட்டாம் வகுப்பிலிருந்து வைத்துக்கொள்ளலாமென்று சொன்னார்கள். அதை இப்போது பத்தாம் வகுப்பிலிருந்து வைத்திருக்கிறார்கள். எட்டாம் வகுப்பிலிருந்து தொழிற் கல்வியைத் தர வேண்டுமென்பது மட்டுமல்ல, ஒன்றாம் வகுப்பிலிருந்தே தொழிற் கல்வியைத் தர வேண்டுமென்ற கருத்தை காந்தியடிகள் போன்றவர்கள், இன்னும் முற்போக்குக் கருத்து கொண்டிருக்கிற அத்தனை பேரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எந்த மாணவனாக இருந்தாலும், அந்த மாணவன் கை அழுக்குப் படாமல், எந்த அறிவை, ஆற்றலைப் பெற்றாலும், அது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு நிச்சயமாகப் பயன்படாது என்ற கருத்தை அனைத்துத் தரப்பினரும் சொல்கிறார்கள். அதில் வேறுபாடு கிடையாது. ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பத்தாம் வகுப்பு வரைக்கும் அத்தனை பேருக்கும் ஒரு பொதுக் கல்வி தர வேண்டும், அதற்குப் பிறகு அவர்கள் இஷ்டப்பட்ட பாடத்தைப் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்கிற கருத்தைக் கல்வி நிபுணர்கள்

வற்புறுத்துகிறார்கள், வலியுறுத்துகிறார்கள். அதற்குப் பிறகுதான், பத்தாம் வகுப்பிற்குப் பிறகுதான் அவர்கள் இஷ்டப் பாடத்தை எடுத்துக் கொள்ளும் முறையைக் கடைப் பிடிக்க வேண்டுமென்று சொல்லும்போது, இந்த அடிப்படையில் பிரச்சினைகளைப் பார்க்கும்போது, இப்போதிருக்கும் சூழ்நிலைக்கேற்ப 10. ஆம் வகுப்புக்குப் பிறகு அந்த நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-10)

. தொழிற் கல்விக்குத் தேவையான வசதிகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்த வசதிகள் இல்லை என்பதால் பல்வேறு தொழில் பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டும் என்று நாம் பல்வேறு குழுக்களை நியமித்து அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கைகளைப் பார்க்கின்றபோது, இந்தத் தொழில் பிரிவுகளை ஆரம்பிக்கின்ற ஆசிரியர்கள் கூட கைவிடக் கூடிய அளவுக்கு அவர்கள் ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். சில தொழில்களை ஆரம்பிப்பதற்கு நான்கு இலட்சம், 5 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்குக் கூட அவர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள். ஆகவே, மிகக் குறைந்த வருமானமுள்ள ஒரு அரசு, அதே நேரத்தில் மிகப் பெரும்பான்மையான மக்கள் கல்வியினுடைய பயனைப் பெறாத நிலையில் இருக்கின்ற ஒரு சமுதாயம், இந்தச் சூழ்நிலைகளில் நாம் வசதி வாய்ப்புகளைப் பற்றிப் பேசிக்கொண்டு, குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் இந்தக் கல்வியினுடைய பயனைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிப்பதா அல்லது இருக்கிற வேறு வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு சமுதாயத்திலே இருக்கிற பெரும்பான்மையான மக்களுக்கு அந்தக் கல்வியினுடைய பயனை அளிப்பதா என்கின்ற நிலைமை இருக்கிறது. எங்களைப் போன்றவர்கள், இருக்கின்ற எந்த வசதியாக இருந்தாலும், அதைப் பெற்று, பயன்படுத்தி, சமுதாயத்தில் பெரும்பான்மையான மக்களுக்கு—நகரத்திலே இருக்கின்றவர்களுக்கு மட்டுமல்ல, கிராமங்களிலே இருக்கின்றவர்களுக்கும்—கல்வி அளிக்கக்கூடிய ஒரு வகையில் முயற்சி எடுப்பதை எங்களுடைய வாழ்க்கையின் இலட்சியமாக, அல்லது நோக்கமாக அல்லது மிக முக்கியமான கடமையாக நினைத்துக்கொண்டிருக்கிறோம். இது ஒருபுறம் இருந்தாலும், அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் பார்க்கிறேன். பல்வேறு கல்வித் துறை நிபுணர்கள் கல்வித் திட்டங்களைக் குறை கூறுகிற நேரத்தில், அல்லது முக்கிய பெரியவர்கள் குறை கூறுகிற நேரத்தில், இந்தக் கல்வித் திட்டத்தினாலே சமுதாயத்திற்கு என்ன பயன் அல்லது கல்வியைப் பெறுகின்ற மாணவனுக்கு என்ன பயன் அல்லது இந்தக் கல்வி வாழ்க்கைக்குத் தேவையானதா அல்லது இந்தக் கல்வி வாழ்க்கையோடு இணைந்திருக்கிறதா என்கிற அடிப்படையில் விமர்சனம் செய்வதை நாம் பார்க்கிறோம். எட்டுச்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 ஏப்ரல் 27

சுரைக்காய் கறிக்குதவாது—பள்ளிப் படிப்பு புள்ளிக்குதவாது. இந்தப் பழமொழியை நாம் எத்தனை ஆயிரம் தடவை பேசியிருக்கிறோம்? நம்மால் கூட எத்தனை ஆயிரம் தடவை பேசப்பட்டு வருகிறது? இப்பொழுதும் பேசப்படுகிறதா இல்லையா?

ஆகவே இந்த விமர்சனத்தினுடைய அடிப்படையை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கிறபோது, கல்வி வாழ்க்கையோடு இணைக்கப்பட்டதாக வேண்டும், கல்வி வாழ்க்கையோடு தொடர்பு பட்டே ஆக வேண்டும், வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றாக இருந்தே தீர வேண்டும் என்கிற அடிப்படையிலேதான் கல்வித்துறைச் சீர்திருத்தத்தையும் நாம் அணுக முயற்சி செய்கிறோம். இப்பொழுது இருக்கிற 11-வது வகுப்பு அல்லது பி.யு.சி. என்கிற அடிப்படையிலே மேல்நிலைப் பள்ளிகளை நீங்கள் பார்க்கிற போது, நான் ஒரு உறுதிமொழியை உங்களுக்குத் தர விரும்புகிறேன். பி.யு.சி.ஐ விட இந்தப் புதிய திட்டம் இம்மியளவும் குறைபாடு உடையதல்ல. அதைவிட ஒரு சதவிகிதம் அல்லது 2 சதவிகிதம் உயர்ந்துதான் இருக்குமே தவிர, எந்த விதத்திலும் குறைந்ததல்ல, தாழ்ந்ததல்ல என்கிற நம்பிக்கையை நான் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இங்கே தர விரும்புகிறேன். இன்றைக்கு இந்தத் திட்டத்தை நாம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையே நாம் இதை நடத்திக்கொண்டு வருகிறோம். அவைகளை எப்படி நடத்துகிறோம் என்கிற அந்த நிலையை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரும்போது, அதை அவர்கள் ஏற்றுக்கொள்கிற நேரத்தில் அல்லது அதிலே இருக்கின்ற நிலைமையிலே திருப்தி கொள்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இதற்கு மேலும் கூடுதலாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே ஒன்றை நான் சொல்கிறேன்.

உதாரணத்திற்கு இங்கே வைக்கப்பட்ட அறிக்கையிலே கூட நான் சொல்லியிருந்தேன். இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவ்வை இல்லத்தை ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதே இடத்தில்தான் கேன்சர் இன்ஸ்டிட்யூட் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவர்களுடைய பள்ளியிலே நர்சிங் கோர்சை ஆரம்பித்திருக்கிறார்கள். நர்சிங் கோர்சை நடத்துவதற்குத் தேவையான வசதிகள், கட்டட வசதி உட்பட அந்தப் பள்ளியிலே கிடையாது. ஆகவே வசதிகள் இருந்தால்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளியிலே ஆரம்பிக்க முடியாது. ஆனால் இன்றைக்குப் பக்கத்திலே இருக்கிற மருத்துவ மனையிலோ அல்லது அவர்களுடைய நிர்வாகத்தில் இருக்கிற மருத்துவ மனையிலோ இருக்கிற வசதிகளைப் பயன்படுத்தலாம் என்று நாம்

1979 ஏப்ரல் 27] [திரு. செ. அரங்கநாயகம்]

அனுமதிக்கின்ற காரணத்தினால், அவர்கள் நிர்வாகத்தில் இருக்கின்ற கேன்சர் இன்ஸ்டிட்யூட்டை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். முழு நேர ஆசிரியர்களைப் போடுவது என்றால் அந்த முழு நேர ஆசிரியர் அந்தத் தொழிலோடு தொடர்புடையவராகவும் இருக்க வேண்டும், இங்கே அறிவைத் தருபவராகவும் இருக்க வேண்டும். அவர் அங்கே இருக்கின்ற ஆசிரியர்களைப் போல் பத்தோடு பதினொன்றாக மாறிவிடுவாரானால், அவர் தருகின்ற அந்தக் கல்விப் பயிற்சி உயர்ந்ததாக இருக்க முடியாது என்பதை நாம் உணர்கிறோம்.

இங்கே கூட நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சாதாரணமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்களை "டெக்னிக்கல் அசிஸ்டெண்ட்" ஆகப் போட வேண்டுமென்று சொன்னார்கள். நான் நிச்சயமாக அந்தக் கருத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அந்த அடிப்படையில்தான் நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே பார்ட்-டைம் டீச்சராகப் போட்டுக்கொள்ளலாம். அதற்கு 150 ரூபாய் தரலாம் என்று சொல்லியிருக்கிறோம். முழு நேர ஆசிரியர் என்றால், ஆஸ்பத்திரியில் பணியாற்றுவதற்கு வருவதற்கு பதிலாக வேலையில்லாமல் இருக்கின்ற ஒருவர் வந்து அமர்ந்து கொள்வார் என்றாலும் அவரை வைத்துக்கொண்டு வசதியற்ற நிலைமையிலே நாம் என்ன பயிற்சியைப் பெற முடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆனால் பார்ட்-டைம் டீச்சரை வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமையிலே கேன்சர் இன்ஸ்டிட்யூட்டில் இருக்கிற ஒரு நர்ஸ் பணியாற்ற முடியும். கேன்சர் இன்ஸ்டிட்யூட்டில் இருக்கிற ஒரு டாக்டர் பணியாற்ற முடியும். இந்த மாணவிகள் அங்கே போய் அந்தப் பயிற்சியைப் பெற முடியும். இன்றைக்கு அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நைட் டியூட்டி என்று சொல்லக் கூடிய அந்தப் பயிற்சியைக்கூட அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆர்வத்தோடு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். நல்ல தரமான பயிற்சியைப் பெறுகிறார்கள்.

அப்பொழுது இன்னொரு கேள்வியை இங்கே கேட்கலாம். சரி, இங்கே சரியாக நடைபெறுகிறது என்றால், அதைப்போல மற்ற இடங்களிலும் நடைபெற முடியுமா என்று கேட்டால், இந்த இடத்திலே நான் உங்களுடைய சிந்தனைக்குக் கொண்டு வரக்கூடிய ஒரே ஒரு கருத்து என்னவென்றால் வாய்ப்புகள், வசதிகள் ஒரு பள்ளிக்கூடத்திற்கு இருந்தால்தான் ஆரம்பிக்க முடியும் என்ற கருத்து சரியல்ல என்கிற ஒரு முடிவுக்கு நாம் வருவோமேயானால் எப்படி எல்லாம் வசதி வாய்ப்புகளை நாம் பெற முடியுமோ அப்படி

பெற்றால் இந்தப் பயிற்சியினைத் தாலாமென்ற நிலைமைக்கு வந்தால், நாம் அந்த வசதிகளைத் தேடுவோம். எங்கெங்கு இருக்கிறது என்பதை நம்மாலே தேடிப் பெற முடியும்.

நான் ஸ்ரீபெரும்புதூருக்குப் போனேன். அங்கே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் ஒரு சிறந்த மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவ மனையைப் பயன்படுத்தி நல்ல முறையிலே ஒரு தொழில் கல்வியைத் தர முடியும். தாவில்லையென்றால், நாம் இந்தக் கருத்தை இன்னும் பரவலாகப் புரிந்துகொள்ளவில்லை என்ற குறைபாட்டைத்தான் தெரிந்துகொள்ள முடியும். இதை இன்னும் நன்கு புரிந்துகொண்டால், அப்படிப்பட்ட பள்ளிகளில் தகுந்த தொழில் கல்வியை ஆரம்பிக்கலாம். அப்படி ஒரு 10 பள்ளிகளில் ஆரம்பிக்கட்டும். இந்த அடிப்படையிலே நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

குறைபாடு இருக்கத்தான் செய்யும். இருக்கும். ஆனால் அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கான முயற்சிகளை நாம் எல்லோரும் சேர்ந்து எடுப்போம் என்கிற ஒரு உறுதியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி பல்வேறு முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டு வருகிறோம். அவைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களுடைய பயிற்சியினைப்பற்றி இங்கே பேசப்பட்டது. அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். மேல்நிலைப் பாடத் திட்டத் தாம் உயர பட்ட மேல் படிப்பு தகுதியுடைய ஆசிரியர்களை நியமித்து, அவர்களால் தான் கற்பிக்கப்பட்ட வேண்டுமென்று அரசு கருதுகிறது. இவ்வாசிரியர்களுக்குத் தனிப்பட்ட சம்பள விகிதங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பட்ட மேற்படிப்பு உள்ள ஆசிரியர்கள் அறிவியல், கணிதம் போன்ற பாடங்களைப் பொறுத்தவரை, தேவையான அளவுக்குக் கிடைக்காததால், தற்போது உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் பட்டப் படிப்பு படித்த பட்டதாரி ஆசிரியர்களை ஈடுபடுத்த வேண்டியதாயிற்று.

தற்போது பொறுக் கல்விப் பிரிவினை நடத்தி வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 7,941 ஆகும். அரசுப் பள்ளிகள் 3,747. உள்ளாட்சி மன்றப் பள்ளிகள் 352. மானியம் பெறும் பள்ளிகள் 3,842. 7,941 ஆசிரியர்களில்

2,742 ஆசிரியர்கள் மட்டுமே பட்ட மேற்படிப்பு பட்டதாரிகளாவர். எனவே முழுத் தகுதி பெறாத இவ்வாசிரியர்களுக்கு புதிய பாடத் திட்டத்தை நன் முறையில் கற்பிக்க வகை செய்து, அவர்களுக்கு குறுகிய கால மறு பயிற்சி 21 நாட்களுக்கு அளிக்கப்பட்டது. மறு பயிற்சி நடத்துவதற்கான ஆசிரியர்களைப் பொறுத்தவரை, மாவட்ட அளவில் மறு பயிற்சி நடத்துவதற்காக அரசு மற்றும் தனியார் கல்லூரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத் திட்ட வல்லுநர்களால் 3 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

1978-79-ல் பயிற்சி வகுப்புகள் 7. அதைத் தவிர பயிற்சி நடத்துவதற்கான ஆசிரியர்கள் 147. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 5,316. பயிற்சி பெற்ற பாடங்களின் பெயர்கள் கணக்கு, இயல்பியல், வேதியல், காலவியல், விலங்கியல், பொருளியல், மனவியல். 1979-80ல் பயிற்சி வகுப்புகள் 7. மறு பயிற்சிக்கான ஆசிரியர்கள் 147. ஆசிரியர்கள் 5,316. மே மாதம் நடத்தப்பட உள்ளது.

1979-80ஆம் ஆண்டில் இவ்வாசிரியர்களுக்கு அளிக்க ரூபாய் 17.5 இலட்சம தேவைப்படும். தொழில் பிரிவு ஆசிரியர்களுக்கு மறு பயிற்சியைப பொறுத்தவரை, புது டில்லியில் உள்ள கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி தேசிய நிறுவனம் 6 பயிற்சி வகுப்புகளை இவ்வாண்டு மே மாதம் நடத்த திட்டமிட்டு 1.3 இலட்சம் ரூபாய் செலவழிக்க முன் வந்துள்ளது.

மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பயிற்சியைப் பொறுத்த மட்டில் 1978-79 ஆம் ஆண்டில் 3 முறை தலைமையாசிரியர்களை அழைத்து கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்குகளில் மேல்நிலைக் கல்வியில் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது. 1979 மே மாதத்தில் கோயம்புத்தூரில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி குறித்து ஒரு சிறப்பு மாநாடு நடத்த ஏற்பாடாகி வருகின்றது. இதில் தலைமையாசிரியர்கள், கல்வித் துறை அலுவலர்கள் பங்கு கொள்வர். இம்மாநாட்டில் 12 வது வகுப்பினை அடுத்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளில் புகுத்துவது குறித்து பல நிலைகளில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதித்து ஆராய முடியும்.

(பிற்பகல் 1-20)

ஆசிரியர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்காக 4 தொடர் கல்வி நிலையங்கள் 1978-79-ம் ஆண்டில் திறக்கப்பட்டன. 1979-80-ம் ஆண்டில் அரசு மேலும் 4 தொடர் கல்வி நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி

அளித்துள்ளது. இந்நிலையங்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தும். இதனால் இத்திட்டம் முழு வெற்றி பெறும்.

ஆசிரியர்கள் நியமனம்.—1979-80ம் ஆண்டில் மேலும் ஆசிரியர்களை நியமிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. பட்ட மேற்படிப்பு ஆசிரியர்கள் 1,700, உடற்பயிற்சி ஆசிரியர்கள் உடற்பயிற்சி இயக்குநர்களாக பதவி உயர்வு பெறும் ஆசிரியர்கள் 400, தொழில் பாட பகுதி நேர ஆசிரியர்கள் ஒரு பாடத்திற்கு இருவர், மேலும் 9, 10 வகுப்புகளில் கற்பிக்க தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை பற்றி ஆராயப்பட்டு வருகின்றன. இவைகள் ஆசிரியர்களைப் பற்றி நாம் எடுத்துக்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளாகும்.

கட்டிடங்கள், சாதனங்கள்.—அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் அறிவியல் கூடம் அமைப்பதற்கும் மற்றும் வகுப்பு அறை ஒன்றை ஓரேயாண்டில் அமைப்பதற்கும் அரசு முடிவு எடுத்துள்ளது. இது கல்வித்துறை வரலாற்றிலேயே முதன் முதலாக எடுத்த சீரிய முயற்சியாகும். இத்திட்டத்தின் கீழ் முதற்படியாக, 133 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் வகுப்பறை ஒன்றும் பல்நோக்கு சோதனைக் கூடம் ஒன்றும் கட்ட பள்ளிக்கு 1.57 லட்சம் வீதம் ரூபாய் 2 கோடி செலவுக்கான திட்டம் ஒன்று 1977-78-ல் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கட்டிடங்களில் பெரும்பாலானவை கட்டி முடிக்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 274 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் இத்தகைய சோதனைக் கூடங்களும் வகுப்பறைகளும் 1979-80-ம் ஆண்டில் அமைத்துக் கொடுக்கப்படும். பெரும்பாலான கட்டிட வேலைகள் 1979-ம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகப் பொதுப்பணித் துறையில் சிறப்பு பணியாளர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைந்து பணி செய்கின்றனர். நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கும், தனியார் மேல்நிலைப் பள்ளிகளுக்கும், பள்ளி ஒவ்வொன்றுக்கும் 75 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் 40 விழுக்காடு அரசு மானியமும், 60 விழுக்காடு நிர்வாகத்தினர் பங்குத் தொகையும் ஏற்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசு இணை மானியம் வழங்கும் திட்டம் ஒன்று உள்ளது. இதற்காக 1979-80-க்கான நிதி ஒதுக்கீட்டில் 1 கோடி 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பழைய 11-ம் வகுப்பு நீக்கப்பட்டதால், 1978-79-ம் ஆண்டில் இடப்பிரச்சினை அவ்வளவாக ஏற்படவில்லை. ஆனால் இந்தப் பிரச்சினை வருமாண்டில் ஏற்படலாம். எனவே, தேவைப்

படும் இடங்களில் எல்லாம் 'ஷிப்ட்' முறையைப் பின்பற்ற நிர்வாகங்கள் அனுமதிக்கப்படும். புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மானியம் அளிக்கும் திட்டங்களாலும் இப்பிரச்சினை தீரும்.

அறிவியல் கருவிகள்.—1978-79-ம் ஆண்டில் 200 அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு 1 கோடி ரூபாய் மதிப்புள்ள முதலாம் ஆண்டுக்குரிய அறிவியல் கருவிகள் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 207 பள்ளிகளுக்கும் 95 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள முதலாம் ஆண்டு கருவிகளை அடுத்த கல்வியாண்டு தொடங்குவதற்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 407 அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கும் ரூபாய் 195 லட்சம் பெறுமானம் உள்ள இரண்டாவது ஆண்டுக்கான அறிவியல் சாதனங்கள் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது. 1979-80 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அறிவியல் கருவிகளுக்காக 250 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் வாங்குதல்.—உரிய காலத்தில் அறிவியல் கருவிகள் வழங்க மிகச் சிறந்த முறைகள் கையாளப்பட்டபோதிலும் ஓரளவு காலதாமதம் ஏற்பட்டது. ஏனெனில் பெரும்பாலான கருவிகள் வட மாநிலங்களில் இருந்து வரவழைக்கப்பட்டன. தமிழ்நாட்டு நிறுவனங்கள் முகவர்களாக மட்டுமே செயல்பட்டு வந்தன. அறிவியல் கருவிகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் அவற்றை வாங்க புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. உள்ளூரிலே அறிவியல் கருவிகளை வாங்க, 1979-80-ம் கல்வி ஆண்டு தொடங்கும் முன், 407 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வழங்க சிறு தொழில் வளர்ச்சிக் கழகமும், கல்வித் துறையும் இணைந்து அயராது செயல்பட்டு வருகிறது. இதற்கான புள்ளிவிவர ஒப்பந்தங்கள் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தால் பெறப்பட்டு ஒவ்வொரு கருவிக்கான ஒரு விலை, இதற்காக அமைக்கப்பட்டுள்ள தனிக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. இக்குழுவில் சிறு தொழில் வளர்ச்சிக் கழக அலுவலர்களும், கல்வித் துறை அலுவலர்களும், அங்கம் வகிக்கின்றனர். புள்ளி விவரங்கள் முடிவு செய்யும் பொருட்டு கருவிகளின் மாதிரிகள் வல்லுநர் குழுவின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்பட்டுள்ளன. 1979 மே முதல் வாரத்திற்குள் முடிவாக ஆணை பிறப்பிக்கப்படும். தனியார் பள்ளிகள் நகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பள்ளிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு அறிவியல் கருவிகளுக்கு ஆகும் செலவில் 40 சதவிதத்தை அரசு மானியமாகத் தர முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சிக் கழகமும் மற்ற கல்வி இலாக்காவினால் ஒப்புதல் அளிக்கப்

படும் கருவிகளை தனியார் மற்றும் நகராட்சிப் பள்ளிகளுக்கும் பரிந்துரை செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது. தொழில் கல்வி பாடங்கள் கற்பிக்க மிக இன்றியமையாத கருவிகளையும் பள்ளிகளுக்கு வழங்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நம்முடைய மாநிலத் தொழில் வளர்ச்சிக்கு இந்த முயற்சி ஓரளவிற்குத் துணை புரியும் என்ற நம்பிக்கையும் நமக்கு இருக்கிறது. பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில், மேல்நிலைப் பள்ளி களுக்கான பாடத் திட்டங்களை சீரான முறையில் செயல்படுத்த பாடப் புத்த கங்கள் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும், மாணவர்களுக்கு மிக முக்கிய மான நூலாகவும் அமையும். 1978-79-ம் ஆண்டில் முதலாண்டுக்கான பாடப் புத்தகங்களில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் 41 தலைப்புக் களில் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் பொது படிப்புக்கான புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. இப்புத்தகங்கள் சிறந்த பேராசிரியர்களையும், அனுபவ முள்ள பள்ளியாசிரியர்களையும் கொண்ட குழுக்களால் தயாரிக்கப்பட்டும், பரிசீலிக்கப்பட்டும் உள்ளன. புத்தகங்கள் வெளியிடுவதில் இடர்ப்பாடுகளை நீக்க, குறைந்த அளவிலே தேவைப்படும் புத்தகங்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிடாமல் தனியார் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள 95 தலைப்புகளில் வெவ்வேறு பாட குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்டு பாடப் புத்தகங்களாக வைக்கப்பட்டுள்ளன. இரண்டாவது ஆண்டுக்கும் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் 41 தலைப்பு களிலும் புத்தகங்கள் வெளியிட உத்தேசித்துள்ளது. மிகவும் குறைந்த என் ணிக்கையில் தேவைப்படும் மொழி மற்றும் பாடங்கள் ஆகியவைகளுக்கான புத்தகங்களுக்கு 100 தலைப்புக்களில் தற்போது கிடைக்கக்கூடிய புத்தகங் களை அந்தந்தக் குழுக்களின் சிபாரிசுகளின் பேரில் வைப்பதற்கான நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் அடங்கிய பட்டியல் அரசாங்க அச்சகத்திற்கு அரசு இதழில் வெளியிடுவதற்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. தேசியமயமாக்கப்படாத புத்தகங்களின் பட்டியல் படிவம் ஒன்று மே மாதம் பள்ளிகளுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும். இவ் வாண்டு பள்ளி கூட்டுறவு சங்கங்களின் மூலம் புத்தகங்களை விநியோகிக்க தனியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தனி உறுப்பினர் தீர்மானங் களை 1-30 மணிக்கு முடிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும். அவையின் அலுவல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிக்கும்வரை நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கூட்டுறவு சங்கங்கள் துவங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சார்நிலை அலுவலர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள். கூட்டுறவு துறையும் அதிக அளவில் பள்ளிகளில் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்த மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் கூட்டுறவுத் துறை ஆகியவைகளின் ஒத்துழைப்பாலும், பாட புத்தகங்கள் முன்கூட்டியே குறிப்பிட்ட நேரங்களில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. வழிகாட்டி புத்தகங்களைப் பற்றி இங்கே குறிப்பிட் டார்கள். மேல்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் தொழில் பாடங்களுக்கான வழிமுறை நூல்களை வெளியிட முடிவு செய்து அதன்படி அவர்கள் 'ரோடோ' முறைப்படி அச்சிட்டும், நகல்கள் எடுத்தும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு வெளியிடுவது நமது மாநிலத்திலேயும், இந்தியாவி லேயும் இதுதான் முதல் தடவையாகும். அதுபற்றிய விவரங்கள்:

மேல்நிலை கல்வியில் தொழில் பாடங்களுக்கான மொத்த வழிமுறை நூல்களின் எண்ணிக்கை முதலாண்டு 37, இரண்டாண்டுமா 37.

அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட வழிமுறை நூல்களின் எண்ணிக்கை தொழில் பாடங்களுக்கு முதலாண்டு 10, இரண்டாமாண்டு 1.

தொழில் பாடங்களில் வழிமுறை நூல்களுக்கான பொருட்கள் தலைமை கல்வி அலுவலர்களுக்கு விநியோகிக்கப்பட்டு அவர்கள் மூலம் பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டவை. ஏற்கனவே நகல் எடுக்கப்பட்டு தலைமை கல்வி அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டவை முதலாண்டு 8. நகல் எடுக்கப்பட்டு இன்னும் தலைமைக் கல்வி அலுவலர் மூலம் விநியோகிக்கப் பட இருப்பவை முதலாண்டுக்கு 9, இரண்டாமாண்டுக்கு 14. இன்னும் அலுவலகத்தில் ஆய்வில் உள்ள வழிமுறை நூல்களின் எண்ணிக்கை முதலாண்டு 10 இரண்டாமாண்டு 22. இந்த வழிமுறை நூல்கள் பாராட்டு பெற்று அகில இந்தியாவுக்கும் இதை அனுப்ப என். சி. ஆர். டி. நம்மிடம் காப்பி-ரைட் கேட்டிருக்கிறது. வொக்கேஷனுக்கு டிரைனிங் டெக்ஸ்ட்-புக் கிடையாது. ஆசிரியர்களுக்கான கைட் புக்குகளை மட்டுமே நாம் இன்றைக்கு விநியோகிக்கிறோம். இந்தக் கருத்துக்களை இந்தத் தீர்மானம் கொண்டு வந்த மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதற்குக் காரணம் நான் ஏற்றுக்கொண்டிருக்கிற பல்வேறு முயற்சிகள் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எப்படி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 ஏப்ரல் 27

அடுத்தபடியாக புதிய வொக்கேஷனல் கோர்சை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நடத்திக்கொண்டிருக்கிற பல்வேறு பிரிவுகளைத் தவிர இன்றைக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லப்படுகிற பல்வேறு பிரிவுகளில் விவசாயத்திலே ரூரல் கன்ஸ்ட்ரக்ட்டிவ் டெக்னாலஜி அண்டு சாயில் கன்சர்வேஷன் என்ற ஒரு பிரிவை ஆரம்பிக்கலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஹோம் சயன்ஸ்லே 'பேக்கிங் அண்டு கன்பெக்ஷனரி கேட்டரிங், இன்டீரியர் டெக்கரேஷன், டிசைனிங், டையிங் அண்டு பிரிண்டிங் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு மிகவும் தேவையானவை. கேட்டரிங் வித் ஸ்பெஷல் ரெஃபரென்ஸ் டு ஹோட்டல் மேனேஜ்மெண்ட். இந்தப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காமர்ஸ் பிரிவில் இன்ஷூரன்ஸ், மெடீரியல் மேனேஜ்மெண்ட் என்கிற பிரிவுகளை ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறார்கள். என்ஜினியரிங் டெக்னாலஜியில் சங்கர் சிமெண்ட் பாக்டரி பற்றி சொன்னார்கள். அவர்களைப் போன்றவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக சிமெண்ட் டெக்னாலஜி அதற்குப் பிறகு பிரிண்டிங் அண்டு கம்போசிங், அதற்குப் பிறகு சித்தட்டிக் ஜெம் கட்டிங் போன்ற கோர்ஸ் வேண்டும் என்று கேட்டார்கள். ஹெல்த்தைப் பொறுத்த வரையில் ஈ. ஈ.ஜி., ஈ.சி.ஜி. ஆருடியோமெட்ரிக், ஆப்தால்மிக் டெக்னிக், டெண்டல் மெக்கானிக், டெண்டல் ஹைஜீன், ஆர்த்தலோஜிக்கல் சயன்ஸ் இது போன்ற பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதைத் தவிர டூரிஸ்ட் கைட், அதற்குப் பிறகு பார் அசோசியேஷனிலே இருந்து வக்கீல் குமாஸ்தாக்களுக்கு பயிற்சி தருகின்ற வசதிகள் இப்போது எந்தக் கட்டத்திலேயும் இல்லை என்று சொன்னதற்கேற்ப அட்வகேட் கிளார்க் என்ற பிரிவு சில பள்ளிகளிலே வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதோடு சித்த வைத்திய முறையினைப் பற்றியும் ஒரு பயிற்சி தரலாம் என்ற கருத்தை மத்திய சித்த வைத்தியக் குழுவைச் சார்ந்த நண்பர்கள் யோசனையாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் நாம் ஆராயத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தக் கருத்துக்களை இந்த அளவோடு நிறுத்திக் கொண்டு, கல்வி ஆலோசனைக் குழு என்று ஒன்றை அமைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஆலோசனைக் குழு மே மாதத்தில் கூட இருக்கிறது. அதில் இந்தக் கருத்துக்களையெல்லாம் ஆலோசிக்கக்கூடிய வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன என்று தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் பதிலுரையும், மற்ற தனியார் தீர்மானங்களும் அடுத்த தனி உறுப்பினர் நாளன்று எடுத்துக் கொள்ளப்படும்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1·30)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

147. Notification issued in G.O. Ms. No. 1865, Rural Development and Local Administration, dated the 4th December 1978, in regard to division of wards and reservation of seats for Scheduled Castes and Women in the Padmanabhapuram Municipal Council in Kanyakumari District. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

148. The Audit Report and the Annual Accounts of the Tamil Nadu Agricultural University, Coimbatore, for the year 1976-77 together with the comments of the Government. [Laid on the table of the House under section 33(3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971)].

B. Reports, Notifications and Other Papers.

167. An Economic-*cum*-Functional Classification of the Tamil Nadu Government Budgetary Transactions, 1979-80. (English).

இணைப்பு I

[242 ஆம் பக்கத்தில் வினா 361-க்கான விடையைக் காண்க.]

(அ), (இ) & (உ) 1—4—1976-லிருந்து 30—6—1977 வரை உள்ள விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது :—

1. இந்து	15,17,738
2. இந்தியன் எக்ஸ்பிரஸ் (அனைத்துப் பதிப்புகளும்)	7,08,966
3. மெயில்	1,86,369
4. தினத்தந்தி	4,16,295
5. தினமணி	1,94,715
6. மாலை முரசு	71,848
7. தினமலர்	1,13,747
8. அலை ஓசை	32,432
9. மக்கள் குரல்	39,454
10. தென்னகம்	37,069
11. நவ இந்தியா	4,486
12. செய்தி	11,306
13. சுதேசமித்திரன்	53,409
14. முரசொலி	4,105
15. நவசக்தி	8,874
16. பிற மாநிலங்கள் மற்றும் பிற மொழிப் பத்திரிகைகள்.	10,00,398

இணைப்பு II

[244 ஆம் பக்கத்தில் வினா 363-க்கான விடையைக் காண்க.]

(அ) விசாரணை நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை கூடிய மட்டிலும் விரைவாக முடிவு செய்வதற்காகக் கட்டளைகள். ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்தக் கட்டளைகளைச் செயல்படுத்தும்பொருட்டு குற்ற வழக்குகள் பற்றிய விவர அறிக்கை ஒன்றை மாவட்டங்களில் **பணியாற்றும் மாஜிஸ்ட்ரேட்டுகள் நீதித்துறைத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டு**

களுக்கும், சென்னையில் பணியாற்றும் மாஜிஸ்ட்ரேட்டுகள் மாநகரத் தலைமை மாஜிஸ்ட்டிரேட்டுகளுக்கும் அனுப்ப வேண்டுமென்று உயர்நீதி மன்றம், வரையறை செய்துள்ளது. குற்ற வழக்குகள் பற்றிய விவர அறிக்கையில் நாட்குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி நகலுடன் கூடிய குற்றவழக்குப் பட்டியல், குற்றச்சாட்டு கொடுக்கப்பட்ட நாளிலிருந்து கால அளவைக் கணக்கிட்டு, முடிவு எடுக்க இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட வழக்கு அனைத்திலும் அளித்த தீர்ப்புகளின் நகல் ஆகியவற்றை மாஜிஸ்டிரேட்டுகள் அனுப்பவேண்டும், அவறிக்கைகளை மதிப்பாய்வு செய்யும் அதிகாரிகள் சரிபார்க்கின்றனர்; இது குறித்து மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு தகுந்த கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. வழக்கு, பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் முடிவு செய்யப்படாத ஒவ்வொரு வழக்கிற்கும் தாமதத்திற்கான விளக்கங்கள் அனுப்பப்பட வேண்டுமென்று கூட உயர்நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது! மேற்சொன்ன கட்டளைகளினால் குற்ற வழக்குகள் இரண்டு மாத காலத்திற்குள் விரைவாக முடிவு செய்வது உறுதிப்படும்.

(இ) குற்றஞ் சாட்டப்பட்டவர் வழக்குக்கு வந்திருந்து, 16—10—78 ஆம் நாள் விவரப்படி மாவட்டவாரியாக முடிவு செய்யப்படாத குற்ற வழக்குகளைக் காட்டும் விவர அறிக்கை:

மாவட்டங்களின் பெயர்.	இரண்டு மாதத்திற்கு மேலாக முடிவு செய்யப்படாத வழக்கு.	ஆறு மாதத்திற்கு மேலாக முடிவு செய்யப் படாத வழக்கு.	ஓராண்டுக்கு மேலாக முடிவு செய்யப்படா வழக்கு.
	எண்ணிக்கை.	எண்ணிக்கை.	எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
வடார்க்காடு	1,559	589	211
தென்னார்க்காடு	1,743	465	66
செங்கற்பட்டு	1,402	395	457
கோயம்புத்தூர், நீலகிரி	2,021	457	257
தருமபுரி	319	170	96

கன்னியாகுமரி	953	439	254
மதுரை	1250	772	120
புதுக்கோட்டை	333	114	16
இராமநாதபுரம்	897	219	40
சேலம்	878	149	39
தஞ்சாவூர்	933	389	116
திருச்சிராப்பள்ளி	3283	1,843	957
திருநெல்வேலி	1147	867	285
சென்னை	2053	708	504
மொத்தம்	18,771	7,576	3,418

இணைப்பு — III

[255 ஆம் பக்கத்தில் வினா 368க்கான விடையைக் காண்க.]

1978 ஜூன் மாதத்தில் நடத்தப்பட்ட மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான மறுபயிற்சி (Orientation Course) கலந்து கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடவாரியாகவும், மாவட்ட வாரியாகவும் பின்வருமாறு :

வரிசை எண்	மாவட்டம்	கணிதம்	இயல்பியல்	வேதியல்	தாவரவியல்	விலங்கியல்	செலவுத் தொகை ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	சென்னை ..	79	52	60	46	60	39,587.40
2.	செங்கல்பட்டு ..	49	42	45	45	45	40,241.60
3.	தென் ஆற்காடு ..	47	45	51	49	47	35,108.10
4.	வட ஆற்காடு ..	71	40	69	55	70	51,736.80
5.	தஞ்சாவூர் ..	71	60	69	43	56	46,405.45
6.	திருச்சிராப்பள்ளி ..	65	61	64	62	64	55,766.40 (6, 7)
7.	புதுக்கோட்டை ..	16	16	16	16	16	
8.	சேலம் ..	6[illegible]	62	68	58	65	77,296.15 (8, 9)
9.	தர்மபுரி ..	32	32	31	31	31	
10.	கோயம்புத்தூர் ..	100 (10, 11)	77	82	81	89	69,488.41
11.	நீலகிரி ..						
12.	மதுரை ..	72	62	66	64	57	47,666 77
13.	இராமநாதபுரம் ..	57	46	51	37	57	43,001.54
14.	திருநெல்வேலி ..	72	60	63	57	58	45,578.15
15.	கன்னியாகுமரி ..	45	41	40	44	36	31,734.13
		840	696	765	688	751	5,83,610.54

[1979 ஏப்ரல் 27

இணைப்பு IV

[34 ஆம் பக்கத்தில் இனம் 4(1) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கோவிலாங்குளம் விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கத்திலுள்ள இருப்புக்களை சரிபார்க்கச் சென்ற அலுவலர் சுமார் ரூ. 2.05 இலட்சம் மதிப்புள்ள நகைகள் பாதுகாப்புப் பெட்டகத்தில் இல்லை என்பதை 18—5—1978-ல் கண்டு பிடித்தார். தகவல் அறிந்த இராமநாதபுரம் மத்திய வங்கியின் தனி அலுவலர் மேற்படி சங்கத்திற்கு விரைந்து சென்று இருப்பு சரிபார்க்கும் அலுவலருடைய அறிக்கையைப் பெற்று காவல்துறையிடம் புகார் ஒன்று கொடுத்தார். சங்கத்தின் துணைவிதிகளின்படி தலைவர் மற்றும் செயலர் இவர்கள் இருவருடைய கூட்டுப் பாதுகாப்பில் இந்த நகைகள் வைக்கப்பட வேண்டும். மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலருடைய புகார் கிடைத்ததும் மேற்படி சங்கத்தின் தலைவர் மற்றும் செயலர் இருவரையும் காவல் துறையினர் கைது செய்து பின்னர் வரம்புக்குட்பட்ட பிணையில் விடுவித்தனர். தனி அலுவலர் சங்கச் செயலரைப் பணியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்துள்ளார். கூட்டுறவு சங்கச் சட்டவிதி 65-ன் கீழ் செயலர் மீது விசாரணை நடத்தும்படி திருவில்லிப்புத்தூர் துணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். சங்கத்தின் தலைவர் மற்றும் செயலர் இருவருடைய சொத்துக்களையும் வரம்புக்குட்பட்ட ஜப்தி செய்யத் தேவையான நடவடிக்கையும் தனி அலுவலர் எடுத்துள்ளார்.

காணாமற்போன நகைகள் யாவும் 28—5—1978-ல் மீளப்பெறப்பட்டன. மீளப்பெற்ற நகைகளின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து காவல்துறையினர் விருதுநகர் முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதியின் முன்னால் 1—6—1978-ல் தாக்கல் செய்தனர். நீதிமன்றம் தேவைப்படும் போதெல்லாம் நகைகளைத் தாக்கல் செய்வதாகப் பொறுப்பேற்றுக் கொண்டு மத்திய கூட்டுறவு வங்கி நகைகளைத் திரும்பப் பெற்று விருதுநகர் கிளை வங்கியில் பாதுகாப்பாக வைத்திருக்கிறது. காவல் துறையினரின் புலன் விசாரணை இன்னும் முடிவு பெறாததால் குற்றவாளிகளின் மீது குற்றப் பத்திரிகை இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை.

கோவிலாங்குளம் கூட்டுறவு சங்கத்தின் அன்றாட அலுவல்கள் இப்போது மத்திய கூட்டுறவு வங்கியால் நியமிக்கப்பட்ட மேலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நீதிமன்றம் தேவைப்படும் போதெல்லாம் நகைகளைத் தாக்கல் செய்வதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் கடன் பெற்ற உறுப்பினர்களுடைய நகைகளைத் திருப்பித் தர இயலாத நிலையில் இச்

1979 ஏப்ரல் 27]

சங்கம் உள்ளது. இருப்பினும் கடன்கள் முழுவதையும் திருப்பிச் செலுத்தி விட்ட உறுப்பினர்கள், நீதிமன்றம் தேவைப்படும் போதெல்லாம் நகைகளைத் தாக்கல் செய்வதாகப் பொறுப்பேற்றுக் கொண்டால் நகைகளை அவர்களிடம் ஒப்படைத்து விடலாமா என்பது பற்றிய சட்ட நுணுக்கங்களை மத்திய வங்கி ஆராய்ந்து வருகிறது.

இணைப்பு V

[34 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

செய்யாறு கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து சில்லரை செலவின ஊழியர்களுக்கும் சென்ற டிசம்பர் 1978 வரையிலான ஊதியம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. சென்ற ஜனவரி மாதத்திற்கான ஊதியம் போதிய நிதியின்மையால் உரிய காலத்தில் அளிக்கப்படவில்லை. 1979-80 நிதியாண்டில் எஞ்சியுள்ள காலத்திற்கு சில்லரை செலவின ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க தேவையான கூடுதல் நிதி வட ஆற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. செய்யாறு மாவட்ட கல்விப் பகுதியில் உள்ள 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகள், மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் முழுநேர ஊழியர்கள் மற்றும் பகுதிநேர ஊழியர் அனைவருக்கும், ஜனவரி மற்றும் பிப்ரவரி 1979 மாதங்களுக்கு ஊதியத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு VI

[35 ஆம் பக்கத்தில் இனம் 4(3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

நாகப்பட்டினத்திலுள்ள "தி இண்டியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட்" என்னும் உருக்கு உருட்டாலையில் சுமார் 475 தொழிலாளர்கள் (காசுவல் தொழிலாளர்கள் நீங்கலாக) பணிபுரிகின்றனர். தொழிலாளர்கள், நாகப் பட்டினம் தொழிலாளர்கள் ஒர்க்கர்ஸ் யூனியன் என்னும் ஒரே சங்கத்தைச் சேர்ந்த எ.ஐ.டி.யு.சி. மற்றும் சி.ஐ.டி.யு. என்னும் இரு பிரிவினரால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். 3—9—1976 அன்று நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கத்தினருக்கும் இடையே தொழிலாளர்களுக்கு பஞ்சப்படியாக கொடுக்க வேண்டிய தொகையைப்பற்றி 1947 ஆம் வருடத்திய தொழிற் தகராறுச் சட்டம் பிரிவு 18 (1)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தம், 31—12—1977 முடிய அமுலில் இருந்தது. 1978 ஆகஸ்ட் மாதத்தில், தொழிலாளர்கள் பஞ்சப்படி, உற்பத்தி போனஸ், என்ஜினியரிங்

வேஜ் போர்டு சிபார்சுகள் அமுலாக்கம், சமவேலைக்கு சம சம்பளம், கான்டீன் அலவன்ஸ் மற்றும் 1977-78-க்கு போனஸ், ஆகிய கோரிக்கைகளை எழுப்பினர். இவற்றின் மீது தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தை நடந்தது. அதன் பயனாக 1977-78-க்கான போனஸ் பிரச்சினை, அவருடைய 13—10—1978 நாளைய, ஆலோசனையின் அடிப் படையில் 8,33 சதவிகிதம் 1977-78-க்கு போனஸாக, கொடுக்க வேண்டுமென்று முடிவு ஏற்பட்டது. மற்ற கோரிக்கைகள் அவர் முன்பாக பேச்சு வார்த்தையில் இருந்தன. இதற்கிடையில் நிர்வாகத்தினர் தங்களுடைய 16—12—1978 அறிவிப்பில் 'ஒயர் பிளாண்ட்' பிரிவின் பொருளாதாரா நிலைமை சீர்படாத தால் அப்பிரிவை 1—3—1979 முதல் மூடப் போவதாக அறிவித்தனர். ஏ.ஐ.டி.யு.சி. பிரிவைச் சார்ந்த தொழிற்சங்கம் 'ஒயர் பிளாண்ட்' பிரிவு மூடுவதை ஆட்சேபித்து 28—12—1978 அன்று ஓர் வேலை நிறுத்த அறிக்கை கொடுத்தது. மேலும் தொழிலாளர்கள் 24—1—1979 முதல் வேலை நிறுத்தம் செய்தனர்.

தொழிலாளர் துறை, இணை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக, அகவிலைப்படி, சிற்றுண்டிப்படி, ஊக்கப்படி ஆகிய கோரிக்கை களை அடக்கிய ஒரு ஒப்பந்தம் தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 12 (3)-ன் கீழ் 20—3—1979 நாளன்று ஏற்பட்டது. இதர கோரிக்கைகளை, தொழிலாளர் சங்கங்கள் வலியுறுத்தவில்லையென சம்மதித்தன. நிர்வாகமும், 'ஒயர் பிளாண்ட்' பிரிவை மூடப் போவதாக 16—12—1978 நாளன்று கொடுத்திருந்த அறிக்கையை அமுலாக்குவதில்லையென சம்மதித்தது. தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தை உடனே கைவிட்டனர். தொழிலாளர்கள் 23—3—1979 முதல் வேலைக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டு 26—3—1979 முதல் உற்பத்தி தொடங்கியது. நிலைமை தற்பொழுது சுமுகமாக உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1979 ஏப்ரல் 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

Cattle Thefts.

12 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representation has been received from the Revenue Officials' Co-operative Building Society Limited, Yagappa Nagar, Thanjavur, during April 1978, regardig recurrent cattle thefts in the extension areas; and

(*b*) if so, the action taken by the Government in the matter?

ப.—(அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் நகரை ஒட்டி அமைந்துள்ள காலனிகளில் கால்நடைகளை திருடி வைத்துக்கொண்டு பணயத் தொகை கோரும் சம்பவங்கள் நடைபெறுவது பற்றி யாகப்பா நகர் வருவாய்த்துறை அலுவலர்கள் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் செயலாளரிடமிருந்து 15—4—1978 அன்று முறையீடு ஒன்று வந்தது. இது சம்பந்தமாக தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் மனுவில் குறிப்பிட்டவாறு நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள காலனிகளில் வசிப்பவர்களிடமிருந்து கடந்த மூன்றாண்டுகளாக கால்நடைத் திருட்டு குறித்து அல்லது கால்நடைகளைத் திருடிச்சென்று வைத்துக் கொண்டு பணயத் தொகை கோருவது குறித்து புகார்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிய வந்தது. யாகப்பா நகர் வருவாய்த்துறை அலுவலர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கச் செயலாளரிடம் விசாரித்தபோது அவர், பிப்ரவரி 1978-ல் மேய்ச்சலுக்கு விட்டிருந்த தமது பசுவைக் காணவில்லை எனவும், அதை யாரேனும் களவாடிச் சென்றிருப்பார்கள் என நினைப்பதாயும், அது குறித்து காவல் துறையினரிடம் புகார் செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவங்களைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையில் தகவல் தெரிவிப்பவர்களை நியமித்து துப்புகளைப் பெற்று,

கால்நடைகளைத் திருடிச் செல்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதில் தீவிரகவனம் செலுத்துமாறு காவல் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. மேலும், அந்தப் பகுதியில் வசிப்பவர்களுடன் தொடர்பு கொண்டு, கால்நடை திருட்டு பற்றியும், கால்நடைகளை திருடி வைத்துக் கொண்டு பணயத்தொகை கேட்பது பற்றியும் தகவல்களை சேகரிக்கும்படியும், ஏற்பாடு செய்து, இவ்வித குற்றங்களைத் தடுத்து நிறுத்தும்படியும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Raping Incidents.

13 *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Chief Minister be pleased to state the number of incidents of rape, attempt to rape and molestation of women while in remand or custody, between 15th June 1977 and 30th April 1978 ?

ப.—மேற்கூறிய கால அளவில், அத்தகைய சம்பவங்கள் இருமுறை நிகழ்ந்துள்ளன.

கோஷ்டி மோதல்கள்.

14 கே.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் 1—7—1977 முதல் 20—5—1978 ஆம் நாள் வரை கோஷ்டி மோதல்களில் நடைபெற்ற கொலைகள் எத்தனை?

(இ) கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டதற்குக் காரணங்கள் யாவை?

ப.—(அ) ஏதுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Visit to New Delhi by Ministers.

15 *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Chief Minister be pleased to state the number of trips that each of the present Ministers made to New Delhi from the date of his|her assuming office to 4th October 1978?

ப.—

அமைச்சர்கள்.	டெல்லி பயண விபரங்கள்.
முதல் அமைச்சர்	18
நிதி அமைச்சர்	9
மின்துறை அமைச்சர்	5
வருவாய்த்துறை அமைச்சர்	3
உணவுத்துறை அமைச்சர்	2
செய்தி, அறநிலையத்துறை அமைச்சர்	3
சட்ட அமைச்சர்	2
கல்வி அமைச்சர்	3
உள்ளாட்சித்துறை அமைச்சர்	1
தொழிலாளர்நலத்துறை அமைச்சர்	1
போக்குவரத்துத்துறை அமைச்சர்	1
விவசாய, நீர்ப்பாசன அமைச்சர்	7
கிராமத் தொழில் அமைச்சர்	1
சமூகநலத்துறை அமைச்சர்	4
கைத்தறித்துறை அமைச்சர்	1

Line Loss in Electricity.

16 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the specific steps taken by the Government and the Electricity Board to reduce the line loss in electricity; and

(*b*) whether the line loss is on the increase or decrease?

ப.—(அ) மின்சக்தி இழப்பைக் குறைப்பதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) புதிதாக மின்சக்தி கடத்திகளையும் துணை மின்நிலையங்களையும் நிறுவும் பொருட்டு ஓர் பெருந் திட்டம் தயாரித்து அவற்றை வரிசையாகத் திட்டமிட்டபடி நிறைவேற்றல்.

(2) மின்சக்தி இழப்பு அதிகமாகவுள்ள மிகை உயர் மின் அழுத்தம் மற்றும் உயர்மின் அழுத்தக் கடத்திகளைக் கண்டறிந்து அவற்றைத் தேவைக் கேற்றபடி பலப்படுத்துதல்.

(3) மின்சக்தி கடத்திகளில் பளுவைக் குறைப்பதற்காக உயர் மின் சக்தி அழுத்தக் கெப்பாசிட்டர்களும், சிங்கரனஸ் கன்டென்ஸர்களும் நிறுவுதல்.

(4) மின்சக்தி மாற்றிகளில் மின்சக்தி அளவுக் கருவிகளைப் பொருத்தி மின்சக்தி இழப்பைக் கண்டறிந்து அதனைக் குறைப்பதற்குத் தேவையான மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றுதல்.

(5) மின்சக்தி சாதனங்களிலும் மின்சக்தி கடத்திகளிலும் உள்ள மின்சக்தி பளுவைக் குறைக்க, குறைந்த அழுத்தக் கெப்பாசிட்டர்களை வாங்கி, விவசாய மின்சக்தி இணைப்புதாரர்களுக்குத் தங்கள் மின்சக்தி இணைப்புகளில் நிறுவுவதற்காக, சுலபத் தவணைகளில் வழங்குதல்.

(6) தொழிற்சாலைகளில் உள்ள மின்சக்தி இணைப்புகளில் குறைந்த அழுத்த கெப்பாசிட்டர்களை நிறுவும்படி மின்சக்தி இணைப்புதாரர்களை வற்புறுத்தல்.

(7) மின்சக்தி திருட்டையும், இதர குற்றங்களையும் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டு கோட்ட, உபகோட்ட மற்றும் பிரிவு அளவுகளிலுள்ள குறைந்த அழுத்த மற்றும் உயர் அழுத்த மின்சக்தி இணைப்புகளில், ஆய்வுக்குழுக்களைக் கொண்டு, திடீர் ஆய்வுகள் நடத்துதல்.

(8) வாரியத்தில் தலைமைக் கண்காணிப்பு அலுவலரின்கீழ் திடீர் ஆய்வுகளை நடத்தும் பொருட்டும் மற்றும் தேவைப்படும்போது இத்தகைய ஆய்வுகளை விஸ்தரிக்கும் பொருட்டும், மின்சக்தி திருட்டுத் தடுப்புக் குழு ஒன்று நிறுவப்பெற்றுள்ளது.

(இ) 1974-75 ஆம் ஆண்டு 21.45 சதவிகிதம் ஆக இருந்த மின் இழப்பு, 1977-78-ல் 18.5 சதவிகிதம் ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

Financial Assistance for Acquiring Ownership of Lands.

17 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to approach the Government of India, for financial assistance to help the tenants acquire ownership of lands; and

(*b*) if so, the details thereof?

ப.—(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுவிலக்குக் குற்றங்கள்

18 கே.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்து சிறைச் சாலைகளில் மதுவிலக்கு குற்றங்களுக்காக 1978 ஆம் ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் வரையிலான மாதங்கள் ஒவ்வொன்றிலும் அடைக்கப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

ப.—விபரங்கள் இணைப்பில் @ தரப்பட்டுள்ளன.

@ 475-76 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Children's Theatres.

19 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Ministe for Information and Hindu Religious Endowments be pleased t state—

(*a*) whether the Government of India are granting any sul sidy for the construction of Children's Theatres in the State; and

(*b*) if so, whether the Government will take steps for th construction of such theatres in all the District Headquarters, on time-bound programme ;

ப.—(அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

Children's Films.

20 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Ministe for Information and Hindu Religious Endowments be pleased t state—

(*a*) whether there is any proposal with the Government t produce children's films ; and

(*b*) whether any subsidy will be given to private persons t produce such films?

ப.—(அ) இல்லை.

(இ) இவ்வாண்டில் திரு. சாந்தாராமை தலைவராகக் கொண்டுள்ள குழந்தைகள் திரைப்படக் குழுவிற்கு தமிழில் மூன்று குழந்தைகள் திரைப்படம் தயாரிக்கவும், நான்கு குழந்தைகள் திரைப்படங்களைத் தமிழி "மொழியாக்கம்" செய்யவும், ரூ. 4 இலட்சம் உதவி அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகள் திரைப்பட தயாரிப்பை ஊக்குவிக்க சிறந்த குழந்தைகள் திரைப்படத்திற்கு ரூ. 25,000 ரொக்கப் பரிசும், ஒரு வெள்ளிப் பதக்கமும் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது இவைகளைத் தவிர தனிப்பட்ட குழந்தைகள் திரைப்படத் தயாரிப்பாளர் களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் எதுவும் இல்லை.

Eighth Standard Common Examinations.

21 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that students studying in Higher Elementary Schools have to go long distances to attend Eighth Standard Common Examinations, which are being held in High Schools ; and

(*b*) if so, the reason for holding such examinations in High Schools, instead of in the respective Higher Elementary Schools?

ப.—(அ) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் பள்ளி மாணவர்கள் வசதிக்கேற்ப அருகாமையிலுள்ள அங்கிகாரம் பெற்ற உயர்நிலைப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பின் இறுதியில் பொதுத் தேர்வு நடைபெற்று வருகிறது. இவ்வாறு பொதுத் தேர்வு நடத்த உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, மாணவர்கள் அங்கு செல்ல வசதியான போக்குவரத்துகள் உள்ளனவா என்றும், மிக எளிதில் அப்பள்ளிகளுக்குச் செல்ல எந்த ஒரு இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதை உள்ளத்தில் கொண்டு பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

(இ) வினாத் தாள்களை ரகசியமாக வைத்துக் கொள்ளவும் ஒழுங்கீனச் செயல்களைத் தவிர்க்கவும் இத்தேர்வு அந்தந்த நடுநிலைப் பள்ளிகளில் நடத்தப்படுவதில்லை.

Pay Fixation for Government College Teaching Staff.

22 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the orders issued in G.O. Ms. No. 2029, Education Department, dated 13th November 1978, regarding refixation of pay to the Tutors, Demonstrators and Assistant Professors of Government Colleges appointed from 'B' Wing Schools, have not, so far, been implemented;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action proposed to be taken for early implementation?

ப.—(அ) இல்லை.

அரசாணை நிலை 2029, கல்வி, நாள் 13—11—1978-ன் நகல் கல்லூரிக் கல்வி இயக்குநரால் அரசு கல்லூரி முதல்வர்களுக்கு தகுந்த நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Sericulture.

23 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) the progress made in the extension of sericulture in the various Districts, especially in Thanjavur district ; and

(*b*) the number of persons, to whom the above scheme is expected to give employment in the State?

ப.—(அ) இம்மாநிலத்தில் 20,052 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை வளர்ப்பு நடைபெறுகிறது. அதன் விவரம் மாவட்ட வாரியாக கீழே தரப்படுகின்றது.

மாவட்டத்தின் பெயர்.	முசுக்கொட்டை பயிரின் பரப்பு (ஏக்கர்)	எதிர்பார்க்கும் பட்டுக்கூடுகள் உற்பத்தி (லட்ச கிலோக்களில்).
தர்மபுரி	6664	10.39
கோயம்புத்தூர்	8839	6.74
சேலம்	2161	4.32
வட ஆற்காடு	1056	2.09
மதுரை	406	0.81
ராமநாதபுரம்	109	0.20
திருநெல்வேலி	235	0.47
திருச்சிராப்பள்ளி	197	0.39
தென்னாற்காடு	92	0.18
செங்கற்பட்டு	80	0.16
தஞ்சாவூர்	213	0.42
	20052	26.17

(இ) மாநிலம் முழுவதும் பட்டுத் தொழிலினால் சுமார் 1 லட்சம் மக்களுக்கு கிராமப் புறங்களில் வேலை கிடைக்கின்றது.

Advisory Committees in Hospitals

24 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleasel to state—

(*a*) whether it is a fact that the Advisory Committees have not been functioning for many months in the Hospitals attached to the Thanjavur Medical College;

(*b*) if so, the reasons for the non-constitution of the Committees by the Government ; and

(*c*) the action proposed to be taken thereon ?

[1979 ஏப்ரல் 28

ப.—(அ), (இ) & (உ) கீழ்க்கண்ட இரண்டு மருத்துவமனைகள் தஞ்சை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளாகும் :—

(1) அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை.

(2) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

இவ்விரு மருத்துவமனைகளில் ஆலோசனைக் குழுக்கள் 11—9—1974-ல் திருத்தி அமைக்கப்பட்டு அன்றைய தேதியிலிருந்து தன்னுடைய மூன்று வருட கால வரம்பாகிய 10—9—1977 வரை தொடர்ந்து இருந்தன. மருத்துவ கல்வி இயக்குநர் மூலமாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து மேற்கூறப்பட்ட மருத்துவமனைகளின் ஆலோசனைக் குழுக்களை திருத்தி அமைப்பதற்கான கருத்துருக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. வரப்பெற்றவுடன் திருத்தி அமைக்கப்படும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசின் தீர்மானங்கள்.

கேள்வி நேரம் கைவிடப்படல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மேலவைத் தலைவர் அவர்களே, "மேலவை விதி 22-ன் கீழ், 28—4—1979 மற்றும் 30—4—1979 ஆகிய தேதிகளில் கேள்வி நேரம் கைவிடப்படலாம்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—
"மேலவை விதி 22-ன் கீழ், 28—4—1979 மற்றும் 30—4—1979 ஆகிய தேதிகளில் கேள்வி நேரம் கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

3. உரிமைப் பிரச்சினை.

அறநிலையத்துறைக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது அறநிலையத்துறை அமைச்சர் தெரிவித்த சில கருத்துக்கள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார். அதில் அவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "காஞ்சிபுரத்திலுள்ள முன்னாள் அமைச்சர் ஒருவர் ஆலய நிலங்களை வளைத்துப் போட்டுக் கொண்டு குத்தகை கூட கட்டாமல் இருக்கிறார்" என்று மன்றத்தில் 20—4—1979 ஆம் தேதி பேசியது உண்மைக்குப் புறம்பான தகவல் என்றும் இது அவை உரிமை மீறிய செயல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அறநிலையத் துறைக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது அறநிலையத் துறை அமைச்சர் தெரிவித்த சில கருத்துக்கள் குறித்து 35.

1979 ஏப்ரல் 28] [மேலவைத் தலைவர்]

27—4—1979 ஆம் தேதியன்று இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள், "இந்த அவையில் பெயர் சொல்லப்படாமல் பெயர் குறிப்பிடாமல் இந்த அவைக்குத் தரப்பட்ட தகவல் ஒன்றை அடிப்படையாக வைத்து வெளியிலே இருக்கும் ஒருவருக்காக இங்கே அவை உரிமை மீறல் பிரச்சினை எழுப்புவது சரிதானா" என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் 'முன்னாள் அமைச்சர் ஒருவர்' என்று ஜாக்கிரதையாக வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளதாகவும், யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை என்றும் குறிப்பிட்டார்.

திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், ஒரு முன்னாள் அமைச்சர் மீது அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், களங்கம் கற்பிக்கக் கூடாது என்பதால் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருவதாகக் கூறினார்.

"அவையின் உரிமை", இந்த அவைக்கும், அவையின் உறுப்பினர்களுக்குமே உரியது. இந்த அவையின் உறுப்பினர், அவையில் ஆற்றும் பணிக்காக அவரை அச்சுறுத்துவதோ, களங்கம் கற்பிப்பதோ அல்லது தடை செய்யப்படுவதோதான் அவை உரிமை மீறின செயலாகும். இந்த அவையில் இல்லாத ஒருவருக்குக் களங்கம் கற்பிப்பதாக அமையும் பேச்சு, அவை உரிமை மீறிய செயல் ஆகாது.

இந்த அவை உறுப்பினர் குறித்து தகவல் தரும்போது அது தவறாக இருந்தால், அந்த உறுப்பினர் மறுத்தால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அவையில் இல்லாத, பெயர் குறிப்பிடாத, ஒருவரைப் பற்றி அமைச்சர் பொதுப்படையாகப் பெயர் கூறாமல் குறிப்பிடும்போது, அது 'இவரைத்தான் குறிக்கிறது' என்றும், 'அந்தத் தகவல் தவறு' என்றும் கூறும்போது, உறுப்பினர் கூறுவதுதான் சரி என்று எடுத்துக்கொள்ளவும் இயலாது.

அப்படியே அந்தத் தகவலை தவறு என்று எடுத்துக்கொண்டாலும், அதை தவறு என்று தெரிந்து, அவைக்கு வேண்டுமென்றே அந்தத் தகவலை அமைச்சர் கொடுத்துள்ளார் என்று நிரூபிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் தான் கெட்ட நோக்குடன் இதைச் சொல்லவில்லையென்றும், யாருக்கும் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் சொல்லவில்லை என்றும் கூறியுள்ளார். எனவே இதில் அவை உரிமை மீறல் பிரச்சினை எதுவும் இல்லையாதலால் இதை எழுப்ப என் அனுமதியை மறுக்கிறேன்.

4. மேலவை விதி 82-ன்படி அமைச்சரின் விளக்க உரை.

வினா எண் 56-க்கான ஒரு துணைக் கேள்விக்கு அளித்த பதிலுக்குத் திருத்தம் குறித்து.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 9—9—1978 அன்று சட்டமன்ற மேலவையில் சட்டமன்ற மேலவை வினா எண் 56 (பழைய எண் 927)-ன் மீது திருமதி சி. தமிழரசி, எம்.எல்.சி. மற்றும் திரு. ஏ. பாலசுப்ரமணியம், எம்.எல்.சி, ஆகியவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாக்களுக்கு, வேலை கிடைக்காமல் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு வயது உச்ச வரம்பை தளர்த்தியுள்ளதாகவும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 30 முதல் 35 வயது வரை உச்சவரம்பை உயர்த்தியுள்ளதாகவும் கூறப்பட்டது. ஆனால் சரியான நிலவரம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது :—

வேலையில்லாமல் வேலைவாய்ப்பக பதிவேடுகளில் காத்திருப்பவர்களின் வயது வரம்பை இவ்வரசு உயர்த்தவில்லை. ஆனால் வேலையில்லாத ஆசிரியர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதாலும், அவர்கள் இன்னும் சில ஆண்டுகள் வேலைக்காக காத்திருக்க வேண்டியிருக்கும் என்ற காரணத்தினாலும், அவர்களை அரசு பள்ளிகளில் ஆசிரியர் பதவிகளில் நியமனம் செய்வதற்காக வயது வரம்பை 30-லிருந்து 35 ஆண்டுகளாக இவ்வரசு உயர்த்தியுள்ளது.

2. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) மேலவை விதி 42 (5)-ஐ அதில் கண்டுள்ள வரம்பைப் பொறுத்தவரையில் நிறுத்திவைத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்படவேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(1) ஈரோட்டிலுள்ள செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தினர் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்காதது குறித்து.

*** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" ஈரோட்டிலுள்ள செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தினர் அப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்காததால் மேற்சொன்ன பள்ளியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஈரோட்டிலுள்ள செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் நிரந்தர ஆசிரியர்களது மானியம் மேலே உள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டவாறு சட்ட விதிகளை மீறியதற்காக ஈரோடு மாவட்ட கல்வி அலுவலரால் நிறுத்தி வைக்கப்படவில்லை. ஆனால் அய்ந்து உபரி ஆசிரியர்கள் குறித்து கோவை முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து விளக்கம் (கிளாரிஃபிகேஷன்) வாராமைக்காக நிறுத்தி வைக்கப்பட்டன. மேற்படி ஆசிரியர்களுக்குத் தற்பொழுது நிலுவைத் தொகையுடன் மானியம் வழங்கப் பட்டுவிட்டது.

திரு. பி. ஆர். தாமஸ் : மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு இந்த ஆசிரியர்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த இடைக்காலத் தடையை வாங்கிய அநேக நிர்வாகங்கள் பள்ளிக் குழுக்களை அமைக்காமல் ஆசிரியர்களுக்குத் தொல்லைகளைக் கொடுக்கின்றன. அரசு இந்தத் தடையை நீக்காத காரணத்தால், சில நிர்வாகங்கள் இதைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். விசாரணை வந்த காலத்திலே, குறிப்பிட்ட பள்ளியினுடைய

வழக்கறிஞர் நீதி மன்றம் செல்லாது வெளியே இருந்ததால் அந்தத் தடை தொடர்ந்திருக்கிறது. ஆகவே அந்த இடைக்காலத் தடையை நீக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

(2) அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி நூலகங்கள், அறிவியல்கூடங்கள், மனை அறிவியல் ஆகிய பிரிவுகளில் பணியாற்றுகின்ற பதிவேட்டு எழுத்தர்களுடைய ஊதியத்திலிருந்து ஏழு ஆண்டுகளாக பிடித்தம் செய்யப்படுவது குறித்து.

திரு. பி. ஆர். தாமஸ் : மேலவைத் தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"இம்மாநிலத்தில் உள்ள அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள், அறிவியல்கூடங்கள், மனை அறிவியல் பிரிவுகள், ஆகியவற்றில் தற்போது பணியாற்றி வருகிற பதிவேட்டு எழுத்தர்களிடமிருந்து அவர்களது சம்பளத்தில், ஏழு ஆண்டு காலமாக (2—10—1970 முதல் நாளது தேதிவரை) பிடித்தம் செய்யப்படுவதன் விளைவாக, நூற்றுக் கணக்கான பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசாணையின்படி இந்தப் பணியாளர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேறிய காரணத்திற்காக இரண்டு ஊதிய உயர்வுகள் சிறப்பாக வழங்கப்பட்டன. ஆனால் அந்தச் சலுகை வழங்கப்பட்ட போது, "பதிவு எழுத்தர்கள்" என்று குறிப்பிடப்பட்டதே தவிர "அலுவலகத்தில் பணியாற்றுபவர்களுக்கு மட்டும்" என்று விளக்கம் தரப்படவில்லை. எனவே அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 வரை அய்ந்து ஆண்டுகளுக்கு இந்த ஊதிய உயர்வைப் பெற்றிருக்கிறார்கள். இப்போது திடீரென்று நிறுத்தப்பட்டதால், அவர்கள் பெரிய இழப்புக்கு ஆளாகிறார்கள். இதைக் குறித்து மறுபரிசீலனை செய்யப்படவேண்டியதாகக் கூறப்படுகிறது. ஆகவே அவர்களுக்குக் கொடுத்த ஊதியத்தைப் பிடித்தம் செய்வதை நிறுத்தி, மீண்டும் அவர்களுக்கு அதை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையை வெளியிடுவார்களா ?

@ ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற ஓர் ஆண்டுக்கு முன்னதாக இந்த மன்றத்திலேயே இதைப்பற்றிய பிரச்சினை வந்தது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதைப் பற்றி அதிகமாக வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விரைவிலே முடிவு எடுப்போம் என்று கூறினார்கள். அந்த உறுதியை விரைவாக நிறைவேற்றி இந்தப் பணியாளர்களுக்குச் சலுகைகள் வழங்க அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

(3) அரசுப் பள்ளிகள் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு இரண்டையும் இணைத்து தமிழ்நாடு அரசு ஆணையை செயல்படுத்தவிடாமல் 'ஏ' பிரிவினர் நீதி மன்றத்திற்குச் சென்று ஆணைக்குத் தடைபெற்றதால், 'பி' பிரிவைச் சார்ந்த சுமார் 45,000 ஆசிரியர்கள் அலுவலர்களின் பணி நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும் நீதி மன்றம் மூலம் மேல் நடவடிக்கை எடுப்பது குறித்தும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர்கள் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. ஏ. பாலசுப்ரமண்யம் அவர்கள் முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் படித்தால் போதும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"அரசுப் பள்ளிகள் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு இரண்டையும் இணைத்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட ஆணையினை செயல்படுத்த விடாமல் 'ஏ' பிரிவினர் சிலர் நீதி மன்றத்திற்குச் சென்று ஆணைக்குத் தடை பெற்றிருப்பதால் கல்வித்துறையில் நிர்வாகச் சீர்குலைவு ஏற்பட்டு அன்றாட நிர்வாகம் செயலற்றுப் போகக்கூடிய நிலைமை தோன்றியிருப்பதால் 'பி' பிரிவைச் சார்ந்த சுமார் 45,000 ஆசிரியர்கள் அலுவலர்களின் பணி நிலைமை பாதிக்கப்

பட்டிருப்பதாலும், இதனால் எழுந்துள்ள சிக்கலான நிலைமை குறித்தும் தமிழ்நாடு அரசு நீதிமன்றத்தின் மூலம் மேல் நடவடிக்கை எடுப்பது குறித்தும்".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு ஆணை எண் 1968, கல்வி, நாள் 2—11—1978-ல் 'ஏ' 'பி' பிரிவு பணியாளர்களை ஒருங்கிணைத்து அரசு ஆணையிட்டது. இவ்வாணைப்படி 'ஏ' 'பி' பிரிவினர்களிடையே மாநில அளவில் இணைப்புப் பட்டியல் தயார் செய்து, ஒருங்கிணைப்பு ஆணையில் குறிப்பிட்டுள்ள விகிதாச்சாரப்படி பதவி உயர்வு அளித்து காலி பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும். இது தொடர்பாக கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வந்தார். சில 'ஏ' பிரிவு பணியாளர்கள் ஒருங்கிணைப்பு ஆணைக்கு எதிராக ரிட் மனுக்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். உயர்நீதி மன்றம் 1—3—1979 அன்று, ரிட் மனுக்கள் பரிசிலனையில் இருக்கும்போது ஒருங்கிணைப்பு ஆணையில் குறிப்பிட்டுள்ள விகிதாச்சாரப்படி தற்காலிக பதவி உயர்வு அளிக்கலாமென்றும், இவ்வாணை வெளியிடுவதற்கு முன்பு பதவி உயர்வு அளிக்கப் பட்டவர்கள் எவரும் பணி இறக்கம் செய்யப்படக்கூடாது என்றும் ஆணையிட்டது. தற்போது சில 'ஏ' பிரிவினர் டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஒருங்கிணைப்பு ஆணையை எதிர்த்து ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர். டெல்லி உச்சநீதி மன்றம் ஒருங்கிணைப்பு ஆணை செயல்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறு இடைக்கால தடை உத்தரவும் பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, நான் சொல்கின்ற செய்தியைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. 11—1—1979-ல் இந்த ஆணைக்கு . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றிப் பேசும்போது, அமைச்சர் அவர்கள் வருத்தப்படுகின்ற மாதிரி உறுப்பினர் அவர்களும் பேசக்கூடாது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 11—1—1979-ல் 'ஏ' பிரிவில் ஒரு சிலர் நீதிமன்றத்தில் தடை வாங்கினார்கள். அதற்குப் பிறகு அந்தத் தடையை நீக்குவதற்கு கல்வித்துறை அதிகாரிகள், அரசினுடைய கொள்கையைக்

காப்பாற்ற வேண்டிய அதிகாரிகள் நீதிமன்றத்தின் மூலமாக அந்த நடவடிக்கையை எடுக்கவில்லை. ஆசிரியர்கள் சார்பாக முயற்சி எடுத்து 1—3—1979-ல் உயர்நீதி மன்றத்தின் மூலமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக சுப்ரீம் கோர்ட் 29—3—1979-ல் தீர்ப்பு வழங்கியது. அதற்கு இடைப்பட்ட காலத்தில் இந்த 28 நாட்களில் ஏன் தலைமையாசிரியர் பதவியை நிரப்ப 'ஏ' பிரிவு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை? இது பாரபட்சம் ஆகாதா ? இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் சொல்லப் போகிறார்கள் ? இந்த 28 நாட்களில் என்ன நடந்தது ? உயர்நீதி மன்றம் அனுமதி கொடுத்த பின்பும் ஏன் 'பி' பிரிவு தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வு செய்வதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு விளக்கம அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்பதல்ல. 28 நாட்களுக்குள்ளாக, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோல, ஏன் விரைவாகச் செயல்படவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். அவர்கள் எதிர்பார்த்தது போல் விரைவுப்படுத்தவில்லை என்று சொல்லலாம்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** விரைவாகச் செயல்படவில்லை என்று சொல்வதைவிட, இவ்வாறு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவதற்கு அவர்கள் தனியாகத் தூண்டுதல் செய்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. என்னுடைய இரண்டாவது விளக்கம். 2—11—1978-ல் அரசு வெளியிட்ட ஆணைக்கு நிரந்தரப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில் Statutory protection கொடுக்கின்ற வகையில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டால் தான் அது நிலையாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? சுப்ரீம் கோர்ட்டினுடைய தடையை நீக்குவதற்காக அரசின் சார்பாக என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன ? வருகின்ற ஜூன் மாதத்திலிருந்து இவ்வாறு 'ஏ' பிரிவு அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துகொள்வதை எதிர்த்து 'ஏ' பிரிவு அதிகாரிகளை 'பி' பிரிவு பள்ளிக்கூடங்களுக்குள் அனுமதிக்கக்கூடாது என்ற நிலைமை உருவாகி வருகிறது. மிகக் கொந்தளிப்பான நிலைமைகள் இருக்கின்றன. ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கமான,

தெளிவான பதிலைச் சொல்ல வேண்டும். என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். அமைச்சர் 'பி' பிரிவில் பணியாற்றியவர். ஆதலால் 'பி' பிரிவினருக்குச் சலுகைகள் தரப்படுகின்றன என்று தவறான பிரச்சாரம் நடைபெறுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அங்கத்தினர் அவர்கள் தொடர்ந்து மொத்தமாகக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: உண்மையிலேயே 'பி' பிரிவு ஆசிரியர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் எத்தகைய பலனும் பெறவில்லை. அது ஒரு தவறான குற்றச்சாட்டு. தவறான பிரச்சாரம் வெளியிலே நடைபெறுகிறது. இது குறித்தெல்லாம் நான் அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நீதி மன்றத் தீர்ப்பைப் பொறுத்த வரையில், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதையெல்லாம் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. 'பி' பிரிவு ஆசிரியர்கள் மட்டும் பதவி பெறாமல் இல்லை. இப்போது இருக்கின்ற தடை உத்தரவின் காரணமாக பதவி உயர்வுகளையே நிறுத்தி வைத்திருப்பதாகத்தான் நான் அறிகிறேன். எல்லோரையும் பாதிக்கக்கூடிய நிலைமை சீக்கிரத்திலே நீங்கி, யார் யார் பதவி உயர்வு பெறவேண்டுமோ அவர்கள் எல்லோரும் பதவி உயர்வு பெற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) தமிழ்நாடு பால்வள நிறுவனம் சார்பில் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற இடங்களில் முன்பணம் கட்டி. பால் வழங்கும் கார்டுகள் வாங்கியவர்களுக்கு கொடுக்கப்படாமல் கூடுதல் விலை வாங்கிக்கொண்டு காசு கொடுத்தவர்களுக்குப் பால் வழங்கப்படுவது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" தமிழ்நாடு பால்வள நிறுவனம் சார்பில் பால் விநியோகம் செய்யப் பட்டு வருகின்ற இடங்களில் பால் பெறுவதற்கு, முன்னால் பணம் கட்டி பால் வழங்கும் கார்டுகள் வாங்கியவர்களுக்கு கொடுக்கப்படாமல், கூடுதல் விலை வாங்கிக்கொண்டு காசு கொடுத்தவர்களுக்கு பால் வழங்கப்படுவதினால் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து ".

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அறிக்கையிலே " அந்தந்த பால் விற்பனை நிலையத்தில் அன்றாடம் கார்டைப் பதிவு செய்து கொண்ட பின்னர் உரிய அளவு பால் கார்டுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒரு சில நாட்களில் பால் விற்பனை நேரத்திற்குள் பாலை வாங்கிக்கொள்ளாவிட்டால், அத்தகைய பால் மட்டும் விற்பனை உதவியாளரால் மற்றவர்களுக்கு ரொக்கத்திற்கு விற்கப்படுகிறது " என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே பால் விநியோகம் செய்கின்ற இடத்திலேயே ரொக்கத்தில் விற்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கை யிலேயே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 9-ம் தேதி ஏப்ரல் மாதம் முதல் பக்கத்திலேயே வந்திருக்கிறது. 'ராக்கெட்டிரிங் இன் சிடி மில்க் பூத்ஸ்' Racketeering in City milk booths) என்று செய்தி வெளிவந்திருக்கிறது. அந்தச் செய்தியிலே பல இடங்களில் கார்டு உள்ளவர்கள் கியூவிலே நிற்கும்போது அவர்களை அப்படியே விட்டுவிட்டு பால் கொண்டு வருகின்ற வேன்களிலேயே இருந்து கடைக்காரர்களுக்கும், டீ கடைக்காரர்களுக்கும் விற்பனை செய்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதிலும் குறிப்பாக பங்குனி திருவிழாவை ஒட்டி 3 நாட்கள் முன்னால் மைலாப்பூர், ராயப்பேட்டை, திருவல்லிக்கேணி என்ற இடங்களில் அப்படி நடந்ததாகச் சுட்டிக்காட்டப் பட்டது. பூத் நெ. 91 ஆடம்ஸ் ரோடு, மந்தவெளியிலே பால் இப்படிக் கொடுக்காமல் இருந்ததால், கியூவில் நின்றவர்கள் கிளர்ச்சி செய்ததாகவும் அதன் காரணமாக பூத்தை அடைத்துவிட்டு அவர்கள் ஓடிவிட்டதாகவும் சொல்கின்றார்கள். இதுபோன்று பல விவரங்கள் அடங்கிய செய்தி தரப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியை அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறேன். இது பற்றி அரசின் கவனத்திற்கு வந்ததா ? அரசு என்ன நடவடிக்கை எடுத்தது ?

@477-479 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் சார்பில் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற இடங்களில் முன்பணம் கட்டி பால் வழங்கும் கார்டுகள் வாங்கியவர்களுக்கு கொடுக்கப்படாமல் கூடுதல் விலை வாங்கிக்கொண்டு காசு கொடுத்தவர்களுக்குப் பால் வழங்கப்படுவது குறித்து

[1979 ஏப்ரல் 28

***மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பால் விற்பனை நிலையத்தில் பாலை வாங்கிக்கொள்ள கார்டு வைத்திருப்பவர்கள் நேரத்திற்குள் வரவில்லை என்றால், அந்தப் பால் ரொக்கத்திற்கு விற்கப்படுகிறது· என்ற அறிக்கையை நான் கொடுத்திருக்கிறேன். அதை ஒத்துக்கொண்டதற்கு நன்றி என்று சொன்னார்கள். அதை மறுத்திருந்தால்தானே ஒப்புக்கொண்டதாக பிரச்சினை வரும். நடைமுறை என்ன என்பதைத்தான் நான் இங்கே சொன்னேன். அதன்படி அரசின் சார்பிலே விவர அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. திருமணம் போன்ற காலங்களிலே, கூடுதல் பால் வேண்டுமென்று கேட்டால் அல்லது ஓரிரண்டு நாட்களுக்கு முன்பே சொல்லியிருந்து பணம் கொடுத்துவிட்டால், அவர்களுக்கும் தருகிறோம். இப்படி பொதுமக்களுடைய நன்மையைக் கருதி, சில நேரங்களிலே ஒரு மாதத்திற்கு முன்பணமாகக் கட்டி தேவையான பாலை வாங்க முடியாமல் அவசரத் தேவை ஏற்படுகின்றவர்களுக்கு அந்த வாய்ப்பு வசதிகளைக் கொடுத்திருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, குறிப்பிட்ட சில இடங்களில் முறைகேடுகள் நடந்தன என்று அரசினுடைய கவனத்திற்கு வந்தது. குறிப்பிட்ட அந்த மந்தைவெளி பகுதியில் நடந்த சம்பவங்கள் அரசினுடைய கவனத்திற்கு வந்து அந்த இடத்திலே பணியாற்றியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக நம்முடைய சென்னை நகரத்திலே 400-க்கு மேற்பட்ட இடங்களிலே பால் விநியோகம் செய்து வருகிறார்கள். இதிலே ஒன்று இரண்டு பேர்கள் பணியாற்றக்கூடிய பார்ட் டைம் சேல்ஸ் அசிஸ்டென்ட்ஸ் சில சோரிக்கைகளை வைத்து அவர்கள் அவ்வப்போது சட்டவிரோதமான வேலை நிறுத்தங்களில் ஈடுபடும்போது, இப்படிப்பட்ட தவறுகள் நடந்துவிடுகின்றன. இனிமேல் அப்படி நடக்காமல் இருப்பதற்கு யோசித்துப் பார்த்து, இந்த சூழ்நிலையிலே பால் விநியோகத்தில் பால் கார்டு வைத்திருக்கின்றவர்களுக்கு பால் கிடைக்காத சூழ்நிலை ஏற்படக்கூடாது என்ற அளவுக்குச் செய்யலாம். இப்போது இந்த அரசு மாறுதலான முடிவை எடுத்திருக்கிறது. இன்னும் 10 நாட்கள், 15 நாட்கள் அல்லது ஒரு மாத காலத்திலே அதை செயலுக்குக் கொண்டு வரலாம். பாம்பே, டெல்லி போன்ற நகரங்களில் எவ்வளவு போராட்டங்கள் நடந்தாலும், பால் விநியோகத்திலே குழப்பம் இல்லாமல் அங்கே விநியோகம் செய்கிறார்கள். இந்த முறையில் சென்னை நகரத்திலே மாற்றியமைக்கப்படும். அதற்குப் பிறகு இத்தகைய புகார் வராது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் சார்பில் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற இடங்களில் முன்பணம் கட்டி பால் வழங்கும் கார்டுகள் வாங்கியவர்களுக்கு கொடுக்கப்படாமல் கூடுதல் விலை வாங்கிக்கொண்டு காசு கொடுத்தவர்களுக்குப் பால் வழங்கப்படுவது குறித்து

1979 ஏப்ரல் 28]

திரு. ம. சங்கரலிங்கம்: பால் விநியோகம் செய்கின்ற பூத்களிலே ஒரு மாதம் முன்பணம் கட்டணம் கட்டி பால் வாங்கமுடியாதவர்களுக்கு விற்பனை செய்ய வாய்ப்பு இருப்பது நல்லதுதான். ஆனால் பணம் கட்டி கார்டு வாங்கியவர்களுடைய வீட்டிலேயே பால் விநியோகம் செய்கின்ற முறையை அரசு பரிசீலனை செய்து, அதற்குச் சற்று கட்டணம் உயர்த்தியாயினும் கொடுக்கலாம். அவர்கள் பூத்திலே நின்று, க்யூ வரிசையிலே நின்று வாங்குவதை விட அவர்களுடைய டோர் நம்பர்களைக் குறித்து வைத்துக்கொண்டு அங்கேயே கொண்டுபோய் கொடுக்கலாம். பால் பெறுகின்றவர்களிடம் கொஞ்சம் கட்டணத்தைக் கூட வாங்கிக்கொண்டு அப்படி ஒரு புதிய முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தால், இத்தகைய தவறுகள் வராது. வாங்குகின்றவர்களுக்கு நன்மையாக இருக்கும். தவறுகளுக்கும் வழி இருக்காது. இதைப் பரிசீலனை செய்து அதற்குரிய திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : வீட்டிற்குச் சென்று பாலை வழங்குவது என்பதிலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். இதை யார் மூலம் வழங்குவது என்ற பிரச்சினை வரும்போது, பாலில் மேலும் கலப்படம் ஏற்பட வாய்ப்பு ஏற்படாதா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். குறிப்பிட்ட இடத்தில், பொது மக்கள் வரிசையில் நிற்கும்போது, லாரியிலிருந்து பால் இறக்கப்படுகிறது. ஒவ்வொரு கார்டிலும் பதிவு செய்து, பாலைக் கொடுக்கிறார்கள். அப்போதே பால் கலப்படம் செய்யப்படுகிறது, அதிலே எலி விழுந்திருக்கிறதென்றெல்லாம் சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க வேண்டும். இருக்கின்ற இடத்திலே, அட்டை வைத்திருக்கிறவர்கள் உரிய நேரத்தில் வந்தால், நல்ல பால் கிடைக்க, பாதுகாப்பான முறையில் பால் கிடைக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களின் யோசனைப்படி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால், பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்று சொல்லுகிறார்கள். அது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். இது குறித்து பொது மக்களுக்கு சிரமங்கள் இருந்தால், அதை அரசு கவனத்தில் கொள்ளும்.

 தமிழ்நாடு பால்வள நிறுவனம் சார்பில் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற இடங்களில் முன்பணம் கட்டி பால் வழங்கும் கார்டுகள் வாங்கியவர்களுக்கு கொடுக்கப்படாமல் கூடுதல் விலை வாங்கிக்கொண்டு காசு கொடுத்தவர்களுக்குப் பால் வழங்கப்படுவது குறித்து

திரு. ம. சங்கரலிங்கம் : பாலை பாலிதின் பாக்கெட்டில் கொடுக்கிறோம். இன்னும் கொஞ்சம் 'ஆல் ப்ரூஃப்' ஆகப் பேக் செய்து, சீல் வைத்து, தவறுகள் செய்ய வாய்ப்பில்லாமல் கொடுத்தால், நல்ல பலன் கிடைக்கும். பலருக்கு வேலையும் கிடைக்கும். கியூவில் நிற்கும் தொல்லையும் குறையும். சில பேர்கள் ஆட்களை வைத்திருக்கிறார்கள். எனவே வாங்குகிறவர்களின் நலன் குறித்தும், வேலை வாய்ப்பு கிடைக்குமென்ற நிலை இருப்பதாலும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் விநியோக முறைகளில் இருக்கும் தவறுகளைக் களைய வாய்ப்பு ஏற்படும். பம்பாயில் அப்படிக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த முறையில் அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: சென்னை மாநகரில் பொது மக்களுக்கு இடர்ப்பாடு இல்லாத அளவிற்கு, தூய்மையான பாலைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக எந்தெந்த முறைகளைப் பின்பற்றலாமென்று ஆய்வு செய்கிறார்கள். டெல்லியில் பின்பற்றப்படுகிற முறை, கல்கத்தாவில் பின்பற்றப் படுகிற முறை, ஹைதராபாத்தில் பின்பற்றப்படுகிற முறை, பம்பாயில் பின்பற்றப்படுகிற முறை போன்று பல முறைகளை ஆய்வு செய்கிறோம். அதிலே, ஒரு சிறந்த முறையை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அந்த அளவிற்கு கொள்கை ரீதியாக முடிவு எடுத்திருக்கிறோம். அடுத்து, வேலை வாய்ப்பு. பல பணிப் பெண்கள், பல வீடுகளிலே பணியாற்றக்கூடிய பணிப் பெண்கள்—சர்வென்ட்-மெய்ட் என்று சொல்லுவார்கள்—காலையிலே முதல் வேலையாகச் செய்வது பூத்திலே வந்து நின்று, பாலை வாங்கிக் கொடுப்பது தான். நாம் இப்போதிருக்கும் முறையை மாற்றி அமைக்கும்போது, அவர் களுக்கு வேலையில்லாமல் போய்விடுமோ என்பதையும் கவனிக்க வேண்டும். அடுத்து, பால் பல இடங்களில் பாலிதின் பைகளில் கொடுக்கப்படுகிறது முழுவதையும் அப்படி விநியோகிப்பதில்லை. பாட்டில்களிலும் கொடுக்கிறோம். இதற்கு முன்னால் அந்தப் பைகளைச் செய்வதற்கான கிரான்யுவல்ஸ் கிடைக்காமல் இருந்தது. இப்போது அதை இந்தியாவிலேயே தயாரிப்பதால் பால் முழுவதையும் பாலிதின் பைகளிலேயே கொடுக்க முடியும். அப்படிக் கொடுத்தால், கலப்படம் செய்கிறார்கள் என்று சொல்லும் குற்றச்சாட்டு வராது. அதையும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே எல்லா இடங்களிலும் பாலிதின் பைகளிலே பாலைக் கொடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

2. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(3) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி தளர்த்தப்பட்டு, இம் மன்றம், 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி தளர்த்தப்பட்டு, இம் மன்றம், 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டு களுக்கான நிதிநிலை அறிக்கைகள், 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டு களுக்கான துணை நிதிநிலை அறிக்கைகள் ஆகியவற்றின்மீது விவாதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை இன்றும், 30—4—1979 அன்றும் நடைபெறும். காலை, மாலை இரண்டு வேளைகளும் நடைபெறும். எனவே பகல் 1 மணிக்குள் முடித்தால்தான் மாலையில் வர முடியும். இதில் உறுப்பினர்கள் கண்டிப்பாக ஒத்துழைக்க வேண்டும். மாலையும் மேலவை கூடுவதால், பிற்பகல் 1 மணிக்குள் மின் வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை முடித்தால்தான், மாலையிலே வர வசதியாக இருக்கும். எனவே எல்லோரும் சுருக்கமாகப் பேசி, ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : பகல் 1 மணிக்குள் விவாதத்தை முடிக்க வேண்டுமென்று தலைவரவர்கள் சொல்லுகிறார்கள். அதில் அமைச்சரவர்களுடைய பதிலுரையும் அடங்கியிருக்கிறதென்று கருதுகிறேன். எனவே உறுப்பினர்கள் 12-30 மணிக்குள் முடிப்பது நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விவாதத்தை முடிப்பதென்றாலே, அமைச்சர் பதிலும் சேரும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தயவு செய்து, தலைவரவர்கள் பகல் 1-30 மணிவரை நேரமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சியிலே இருக்கிற எங்களுக்கு நேரத்தைக் குறைக்கக்கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 28

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மற்றவர்களுக்கு நேரத்தைக் குறைத்து, உங்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன் :** மேலவைத் தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கைகள் மிகவும் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகளையும், ஓராண்டுக்கான அட்மினிஸ்டிரேடிவ் ரிப்போர்ட்டையும் சேர்த்து, நாம் விவாதிக்க வேண்டியதாக இருக்கிறது. இவ்வளவு தூரம் காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் இருக்கிறது. மின் வாரிய நிதிநிலை அறிக்கை, ஒவ்வொரு ஆண்டும் சட்ட மன்றத்தினுடைய அங்கீகாரம் பெற வேண்டுமென்ற சட்டக் கட்டாயம் இல்லாததால்தான், அரசு நினைத்தபோதெல்லாம், இதைப் பற்றி விவாதிக்கலாமென்று எண்ணி நினைத்தபோது, அறிக்கையைச் சமர்ப்பிக்கும் நிலையைப் பார்க்கிறோம். போன ஆண்டு செப்டம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதை, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்கு சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சமர்ப்பிக்க வேண்டியதை, ஏப்ரலிலேயே சமர்ப்பித்துவிட்டோமென்று சமாதானம் சொல்லுகிறார்கள். எந்தவிதமான சட்டபூர்வமான கட்டாயமும் இல்லை என்ற நிலை வரும்போது, இந்த அறிக்கையிலே அரசின் சார்பிலே கூறப்பட்டுள்ள ஒரு கருத்தை நான் வரவேற்கிறேன். 33-வது பாராவிலே சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசு தன்னுடைய வருமானத்திலிருந்து, தமிழ் மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவிட்டு, உருவாக்கிய மின்சார வாரியத்தின்மீது அரசுக்கு எந்தவிதமான கன்ட்ரோலும்—அதிகாரமும்—இல்லாத அளவிற்கு, சென்ட்ரல் எலக்ட்ரிசிட்டி சப்ளை ஆக்ட் கட்டுப்படுத்துகிறது. அந்த ஆக்டிலே, மாநில சட்டசபைகளிலே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வைத்து, அங்கீகாரம் வாங்க வேண்டியதில்லை என்றிருக்கிறது. சட்டமன்றத்தின் அதிகாரத்தை சென்ட்ரல் ஆக்ட் பறித்தது மட்டுமல்ல, நம்முடைய பணத்தை வைத்து ஆரம்பிக்கும் மின்சார வாரியத்தை மாநில அரசு கட்டுப்படுத்த முடியவில்லை. அந்த அதிகாரம் திரும்பக் கிடைக்க, ஒரு முயற்சி செய்ய வேண்டுமென்று, முதல் தடவையாக தமிழ்நாடு அரசு இந்த அறிக்கையிலே வற்புறுத்தியிருக்கிறது. அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். பொதுவாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பதைவிட, மாநிலங்களுக்குள்ள அதிகாரங்கள் எந்தெந்த முறையில் பறிக்கப்பட்டிருக்கின்றன, பிடுங்கப்பட்டிருக்கின்றன என்பதையும்

1979 ஏப்ரல் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

அதன் காரணமாக மாநில மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய முடியவில்லை என்பதையும் ஸ்தூலமாகச் சொல்லி, ஸ்தூலமாக வாதிட்டு, அவைகளைப் பெறுவது நல்லது. அதில் ஒரு அம்சமாக இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையையும் கூற விரும்புகிறேன். மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட மட்டிலும், சட்டங்கள் சரியாக இல்லை. யார் எதைச் செய்யலாம் என்பதற்கு வரையறையில்லை. ஒரு விஷயத்தை நான் சொல்லும்போது எல்லோரும் ஆச்சரியப்படலாம். சர்க்காரியா கமிஷன் அறிக்கையில், சமயநல்லூர் உற்பத்தி நிலையத்தை விற்றது பற்றி ஒரு பகுதி கூறப்படுகிறது. சமயநல்லூர் மின் நிலையம் 55 லட்சம் ரூபாய் சொச்சத்திற்கு விற்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு அதை வாங்க வேண்டுமானால், அதன் மதிப்பு நான்கு கோடி ரூபாய் பெறுமென்று சொல்லப்படுகிறது. அதை எப்படி 55 லட்சம் ரூபாய்க்கு விற்றார்கள், அதற்கு யார் பொறுப்பு என்றால், யார் மீதும் பொறுப்பை 'பிக்ஸ்' பண்ண முடியவில்லை. அதை விற்றது போர்டு. சர்க்கார் அதில் தலையிடவில்லை என்று சொல்லி, சர்க்கார் கை விரிக்கிறது. அங்கேயுள்ள மெஷின்களை விற்க, அரசிடம் கேட்க வேண்டாமென்று விதி இருக்கிறதென்று போர்டு கூறுகிறது. உற்பத்தி நிலையத்தை எப்படி விற்கலாமென்றால், கட்டிடத்தை விற்கவில்லை, மெஷின்களைத்தான் விற்றோமென்று சொல்லுகிறார்கள். அப்படி அரசுக்குப் பொறுப்பில்லாமல் 4 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஒரு மின் உற்பத்தி நிலையத்தை 55 லட்சம் ரூபாய்க்கு விற்றதற்கு, யார் பொறுப்பு என்பதை யாராலும் நிர்மாணிக்க

(முற்பகல் 11-00)

முடியவில்லை. எந்த அளவுக்கு மின்சாரத் துறையிலே மாநில அரசுக்குப் பொறுப்பிருக்கிறது? அதுபோல் மின்சாரத் துறையிலே எலெக்ட்ரிசிட்டி போர்டுக்கு என்ன பொறுப்பிருக்கிறது? சட்டத்திலே ஏதாவது சிக்கல் இருக்கிறதா? இவ்வளவு காலமாக இதைப்பற்றி நிர்ணயிக்க முடியவில்லையா?

மத்திய எலெக்ட்ரிசிட்டி சப்ளை ஆக்டைத் திருத்த வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கோரியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இப்படி மத்திய அரசு அதிகாரம் கொடுக்கவில்லை என்று குறை கூறுகிற மாநில அரசைப் பொறுத்தவரை, எந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய அரசிடமிருந்து நமக்கு வர வேண்டிய அதிகாரம் வரவில்லை என்பது வாஸ்தவம்தான். மத்திய அரசு தனக்கு அதிகாரம் தரவில்லை என்று மாநில

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 28

அரசு கூறுகிறது. இந்த அரசு, குறிப்பாக இங்குள்ள மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது மாநில அரசிடமும், எலெக்ட்ரிசிட்டி போர்டிடமும் இருக்கக்கூடிய அதிகாரத்தை, வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரத்தையே சட்டபூர்வமாக, தார்மீக ரீதியாக எப்படிச் செயல்படுத்தப் போகிறீர்கள்? ஏன் கேட்கிறேன் என்றால், மாநில அரசு மத்திய அரசிடம் அதிகாரம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்வதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் மாநில அரசு ஒரு எக்சிகியூட்டிவ் என்ற முறையில் இந்த வரையறுக்கப்பட்ட அதிகாரத்தைக் கூட சரியாகப் பயன் படுத்துகிறதா? எதிர்க் கட்சியினர் சொல்கின்ற கருத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டுமென்று சொல்வதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கைகள் குறித்தும் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதி நிலை அறிக்கைகள் குறித்தும் இரண்டு நாட்களுக்குள் விவாதம் முடியுமாறு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு தலைவரவர்கள் 1 மணிக்கு முன் விவாதத்தை முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 4 வருட பட்ஜெட்டுகளையும் பற்றி எங்களுக்கு பேசத்தான் அதிகாரம் இருக்கிறது. முடிவெடுக்கிற அதிகாரம் இல்லை. ஆனால் இப்போது பேசுவதற்குப் போதிய நேரம் இல்லை.

இந்த அரசு தனக்கு அதிகாரம் வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்கிறது. ஆனால் போன ஆண்டு மின்சார வாரியத்தின் பட்ஜெட்டை இந்த அவையில் வைக்கவில்லை. சட்டமன்றத்தில் இவர்கள் போன வருடம் வைக்க முடியாமல் போனதற்கு ஆயிரம் காரணங்கள் சொல்லலாம். நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த மன்றத்திலே பேசுகின்ற பொது மக்களுடைய பிரதிநிதிகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்க் கட்சி உட்பட இந்த மன்றத்திலுள்ள பொதுக் கருத்து அதுதான். 250 கோடி ரூபாய் அளவு மின்சார வாரியத்தின் பட்ஜெட் வருகிறது. நம்முடைய மாநில அரசின் பட்ஜெட் ஏறக்குறைய 850 கோடி ரூபாய். ஒரு மாநில பட்ஜெட்டில் 30 சதவிகித அளவுக்கு மின்சார வாரியத்தின் பட்ஜெட் இருக்கிறது. மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக் களுக்கு இந்த அரசு எவ்வளவு 'ரெஸ்பெக்ட்' கொடுத்திருக்கிறது?

1979 ஏப்ரல் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

நான் என்ன சொல்கிறேன் என்றால், அங்கேயிருந்து அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிற நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு முதலில் மதிப்புக் கொடுக்க வேண்டும். மத்திய அரசிடம் கேட்கும்போதே, நான் மன்றத்தின் கவனத்திற்கு ஒரு கருத்தைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இங்கே சில பிரச்சினைகள் மீது வலுவான கருத்துக்கள் இருக்கின்றன. அரசு அவைபற்றி அக்கறைப்படவேண்டும். இப்பொழுதெல்லாம் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது.

போக்குவரத்துத் துறையில் நஷ்டம் ஏற்பட்டதால், அந்த நஷ்டத்தைச் சரிப்படுத்தி இலாப நிலைக்குக் கொண்டு வர போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பெரு முயற்சி எடுத்தார்கள். அதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இம்மன்றத்திலேயே கூட அவரைப் பாராட்டிப் பேசினார்கள். ஏழு போக்குவரத்துக் கழகங்கள் நஷ்ட நிலையில் ஓடிக் கொண்டிருந்த நிலை இன்றையதினம் மாறி, அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளன. அதுமட்டுமல்ல. இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் கூட பொதுத் துறை நஷ்டத்தில் இயங்கக் கூடாது என்கின்ற கருத்தினை வலுவாகச் சொன்னார்கள்.

மின்சாரத் துறையை நஷ்டத்திலே ஓட்டுவதிலே இன்பம் கொள்கிறதோ எலெக்ட்ரிசிட்டி போர்ட் என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது. மின்சார வாரியத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தைக் குறைக்கின்ற கவலை இந்தத் துறைக்கு இருப்பதாகத் தெரியவில்லை. 1979-80 ஆம் ஆண்டு 48.66 கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே 1978-79 ஆம் ஆண்டு 45.75 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரை, நிதி நிலையில் துண்டு விழுவதற்கு 3 காரணங்கள் இருக்கின்றன. மாநில அரசுக்கு அவர்கள் 22 கோடி ரூபாய்க்கு மேல் வட்டி கொடுக்கக் கூடிய நிலை இருக்கிறது. இது ஒரு காரணம். டெப்ரிசியேஷன் 21 கோடி ரூபாய்க்கு மேல் வருகிறது. இது இரண்டாவது காரணம். மூன்றாவது காரணம் டேரிப் முறையிலே கையாளப் படுகிற சப்சிடி. இம் மூன்றும்தான் நஷ்டம் வர காரணங்கள் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள், ஒப்புக்கொள்கிறார்கள்.

வட்டியைப் பொறுத்தவரை, ஒரு நிர்மானமான கருத்து இருக்கிறது. வெளியே ஒருவன் கடும் வட்டி கேட்கிறான் என்றால், அரசு தடைச் சட்டம் போடுகிறது. அரசு ஏன் வட்டிக்கடைக்காரன் மாதிரி நடந்துகொள்ள வேண்டும்? ஊரில் உள்ளவர்களிடம் கடும வட்டி போடக் கூடாது என்று சொல்லக்கூடிய அரசு நாட்டின் வளர்ச்சிக்காக, மக்களின் வளர்ச்சிக்காக பாடுபடுகிற இந்த மின்சார வாரியத்திடமிருந்து ஏன் வட்டி வாங்க வேண்டும்? ஏற்கெனவே எதிர்க் கட்சி உறுப்பினர்களாலும் மற்றும் உள்ள உறுப்பினர்களாலும் கிளப்பப்பட்ட பிரச்சினை இது. இன்றைக்கு இது ஒரு பெரிய பிரச்சினையாக அரசின் முன் இருந்துகொண்டிருக்கிறது. அரசு கொடுத்துள்ள கடனை மூலதனமாக மாற்றுங்கள்.

தேய்மானத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு தேய்மான நிதி மூலதனத்தை விட பல மடங்கு அதிகமாக இருக்கிறது. அதே சமயத்தில் மூலதனம் எவ்வளவு மடங்கு ஆகியிருக்கும் என்பதையும் பார்க்க வேண்டும். 25 கோடி ரூபாயை தேய்மானம் வகைக்கு ஒதுக்கி அதில் நஷ்டம் என்று காட்டுகிறார்கள். எடுக்க வேண்டிய அளவுக்கு டெப்ரிசியேஷன் எடுத்தாகி விட்டது. இன்னும் அதிலேயிருந்து எடுக்கக் கூடாது. எடுக்க வேண்டிய அளவுக்கு அதிகமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

சப்சிடியைப் பொறுத்தவரை, மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டமன்றப் பேரவையிலே பல தொழில்களுக்கு ரேட்டை உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். பொதுவாக தொழில்களுக்கு சப்சிடி கொடுக்கக் கூடாது என்று நான் சொல்ல விரும்பவில்லை. இந்தியாவிலுள்ள இதர மாநிலங்களுடன் போட்டி போடவேண்டிய அளவுக்கு ஒரு தொழில் இருக்கும்போது, அது கால் ஊன்றி நிற்க மின்சாரத் துறை உதவ வேண்டும். நான் என்ன கேட்கிறேன் என்றால், மின்சார வாரியம் எவ்வளவு சப்சிடி கொடுக்கிறது? இந்த அரசு மட்டுமல்ல, பழைய அரசுக்குக் கூட இந்தப் பிரச்சினை வந்தது.

டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரிக்கு ரேட்டை உயர்த்தியிருக்கிறீர்கள். இது எவ்வளவோ லாங் ஓவர் டியூ ஆயிற்றே. இது லாங் ஸ்டான்டிங் தொழில் என்பதுடன், தமிழ் நாட்டுக்கு மூலாதாரமான தொழில் ஆயிற்றே. இன்றைக்கு இதிலேயிருந்து சம்பாதித்த பணத்தை ஏகபோக முதலாளிகள் மானோபோலியாக வேறு தொழில்களுக்குக் கொண்டு போய் முதலீடு செய்கிறார்கள். அதிலே பெரும் பணம் சம்பாதிக்கிறார்கள். இவ்வளவு காலமாக டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரிக்கு சப்சிடி கொடுத்திருக்கிறீர்களே இதை எப்படி அரசு கொடுத்தது? நிர்பந்தத்தின் காரணமாகத் தானே?

பவர்புல் பொருளாதார சக்திகள் நிர்ப்பந்தம் கொடுத்தன. அரசு என்ற முறையில் தானே கொடுத்தது? இதை இன்றைக்கு நிர்மானிக்கிற அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது. சட்டசபையின் அங்கிகாரம் கூட இதற்கு இல்லை. அந்தச் செல்வாக்கை செலுத்தி டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரிக்கு இவ்வளவு தூரம் கன்செசன் சென்ற காலத்தில் எல்லா மாநில அரசுகளும் கொடுத்திருக்கின்றன.

குடிசைக்கு ஒரு விளக்குக்கு 2½ ரூபாய் போட்டிருக்கிறீர்கள். இதெல்லாம் முன்னரே செய்யப்பட வேண்டியது. ஜனநாயக சக்திகள் பலமாக இல்லாததால் இவ்வளவு நாட்கள் தாமதமாகிவிட்டது. டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரிக்கு கன்செசன் கொடுக்க வேண்டிய தேவையில்லை. அதற்குக் கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய டாரிப் பாலிசி சரியில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். டேரிப் பாலிசியின் மூலம் அதை முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சீக்கிரம் முடிவுக்கு வாருங்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: இந்தப் பிரச்சினையிலும் வளமான, வலுவான கருத்து ஒன்று தமிழ்நாட்டில் இருக்கிறது, உதாரணமாக மின்சக்தி 8 பர்சன்ட் தான் டொமெஸ்டிக் கன்சம்ஷனுக்கு மின்சார வாரியத்திலிருந்து பயன்படுத்தப்படுகிறது. டொமெஸ்டிக் பர்பசுக்கு உபயோகிக்கிறவர்கள் வருவாயில் 11 பர்சன்ட் கொடுக்கிறார்கள். கமர்சியல் பர்பசுக்கு பயன்படுத்துகிறவர்கள் 7 பர்சன்ட் தான் பயன்படுத்துகிறார்கள். ஆனால் வருவாயில் 15 பர்சன்ட் கொடுக்கிறார்கள். ஆனால் அடிக்கடி இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் சொல்வது மாதிரி, கைத்தறிக்காரன் ராத்திரி உபயோகப்படுத்தும் விளக்குகளுக்கு 45 காசு வசூலிக்கப்படுகிறது. அதுவும் கமர்சியல் பர்பஸ் என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. ஏழு பர்சன்ட் அவர்கள் உபயோகப்படுத்திவிட்டு 15 பர்சன்ட் கொடுக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் பெரிய தொழில் அதிபர்கள் 46 சதவிகிதம் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருவாயில் 33 சதவிகிதத்தைத் தான் கொடுக்கிறார்கள். இந்தவிதமாக இந்த

(முற்பகல் 11-10)

'டாரிப் பாலிசி' அமைக்கப்பட்டிருப்பது சரியில்லை. அட்மினிஸ்ட்ரேஷன் பண்ணும்போது இந்த மாதிரியான கருத்துக்கள் பல இருக்கின்றன. ஆகவே, 'எலக்ட்ரிசிட்டி போர்டை' கன்ட்ரோல் பண்ண நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் [illegible]

இல்லை என்பது மட்டுமல்ல, இப்பிரச்சினையில் இந்த அமைச்சரவையை இந்த சென்ட்ரல் எலக்ட்ரிசிட்டி சப்ளை ஆக்ட் மூலமாக கட்டுப்படுத்த இந்தச் சட்டமன்றத்திற்கும், அதிகாரம் இப்போது இல்லை. ஆகவே, உங்களுடன் சேர்ந்து சப்போர்ட் பண்ணும் காரணம் என்னவென்றால், எலக்ட்ரிசிட்டி போர்டு மீது இந்த அமைச்சரவைக்குப் பூரண கன்ட்ரோல் இருக்க வேண்டும். இந்த அமைச்சரவை மீது சட்டமன்றத்திற்கு கன்ட்ரோல் இருக்கும் வகையில் இந்த சென்ட்ரல் ஆக்ட் திருத்தப்படவேண்டும் என்ற அளவிலே கடைசி பாராவை நான் வரவேற்கிறேன். அடுத்தபடியாக, நமது கேப்பாசிட்டியைப் பொறுத்தவரையில் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்தபடியாக என்று போய்க் கொண்டிருக்கிறீர்களே, இப்போது 15 நிமிடங்களுக்கு மேலே ஆகிவிட்டது. இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது. ஏழு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவேண்டும். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். இன்றைக்கு ஒத்துழையுங்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : நம்முடைய கேப்பாசிட்டி தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் விவசாயத்திற்கு 2½ லட்சம் கனெக்ஷன்கள் கொடுக்க முடியாமல் இருக்கிறது. இன்டர்-ஸ்டேட் சமாச்சாரத்திலே நமக்கு ஒரு சிக்கல் இருக்கிறது. ஒகேனக்கல் புனல் மின்சாரத் திட்டமோ, பாண்டியாறு புன்னம்புழாவோ, நெல்லித்துறையோ இந்த மூன்றில் சம்பந்தப்பட்ட அரசுகளின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற ஒரு பிரச்சினை இருக்கிறது. இது சம்பந்தமாக அந்த அரசாங்கங்களோடு நடத்தும் பேச்சுவார்த்தைகள் எந்த அளவிலே இருக்கின்றன? நாம் நடத்தும் பேச்சுவார்த்தைகள் மூலமாக பலன் இல்லாவிட்டால் மத்திய அரசைக் கொண்டு எல்லோரையும் கூட்டி வைத்துப் பேசி சீக்கிரமாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு பணமெல்லாம் ஒதுக்கியிருக்கிறோம். வேலை நடக்கவில்லை. மத்திய அரசின் உதவியோடு இதில் சீக்கிரமாக சமரசத்திற்கு வந்து முடிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். நாம் சிமெண்ட் கொடுத்துவிட்டு கரன்ட் வாங்குவது போல, தண்ணீர் வாங்குவதற்கும் ஏதாவது வழி இருக்கிறதா என்று மத்திய அரசின் உதவியோடு பார்க்க வேண்டும். இன்னொரு முக்கியமான விஷயம் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : போய்க்கொண்டே இருக்கிறதே . . .

திரு. ஆ. நல்லசிவன் : இந்த ஒரு பாயிண்டோடு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தயவு செய்து முடிவுக்கு வாருங்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : இப்போது நிலக்கரியை ரயில்வேக்கு உபயோகப் படுத்துகிறார்கள். ரயில்வேயில் ஒரு குறிப்பிட்ட அளவு நிலக்கரியை உபயோகப்படுத்தினால், அதிலிருந்து 3.5 பெர்சன்ட் பவர் தான் உற்பத்தி பண்ண முடியும். ஆனால் அதே குவாண்டிட்டியை மின்சாரத்திற்கு உபயோகப்படுத்தினால், 38 பெர்சன்ட் பவர் உற்பத்தி பண்ண முடியும் என்ற அளவுக்கு நிலக்கரியின் நிலைமை இருக்கிறது. ரயில்வேயில் நிலக்கரி உபயோகப் படுத்துவதை சீக்கிரமாக நிறுத்தி, அந்த நிலக்கரியை மின்சாரத்திற்கு உபயோகப்படுத்த மத்திய அரசோடு பேசி மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, தமிழ் நாட்டிலே ஓடுகிற ரயில்வேயிலேயாவது, ஆந்திராவிலோ, கர்நாடகத்திலோ இருக்கிற எக்ஸ்ட்ரா எலக்ட்ரிசிட்டியை வாங்கி, ரயில்வே ட்ராக் பூராவும் எலக்ட்ரிஃபை பண்ணி அதன்மூலமாக தமிழ்நாட்டிலே ரயில்வேக்குப் பயன்படுத்தப்படும் நிலக்கரியை மிச்சப்படுத்தி, தமிழ் நாட்டிலே உள்ள அனல் மின்சார நிலையத்திற்குப் பயன்படுத்தும் வகையில் மத்திய அரசிடம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையையும் கொஞ்சம் பாருங்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1978-79, 1979-80-க்கான நிதிநிலை அறிக்கையிலும், 1977-78, 1978-79-க்கான துணை நிதிநிலை அறிக்கையிலும் மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் பேச பங்குபெறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தத் துறையின் அறிக்கையின் மீது பேசுவதற்கு முன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். காரணம், பொதுவாக சட்டமன்றங்களுக்கு நாங்கள் வரும்போது பல்வேறு கருத்துக்களைக் கூறுகிறோம். பல கோரிக்கைகளை வைக்கிறோம். பல பிரச்சினைகளைக் கொடுக்கிறோம். ஆனால் சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள குறிப்புரையிலே உறுப்பினர்கள் கொடுத்த கருத்துரை என்றும் அதன் மேலே குறிப்புரை என்றும் கொடுத்து எந்தெந்த உறுப்பினர்கள் என்னென்ன கருத்துக்களைக் குறித்து தங்களுடைய கருத்துக்களைக் கூறினார்கள், அதன் மேலே மின்சாரத்துறை என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்றும் தந்திருப்பதைப் பார்க்கும் போது, மற்ற துறைகளிலும் இத்தகைய ஒரு முறையை கையாண்டால், எங்களைப்போன்ற உறுப்பினர்கள் பல காலமாகத் தொடர்ந்து பல பிரச்சினைகளை எழுப்பும்போது "அவைகளுக்குத் தீர்வுகாணப்பட்டிருக்கின்றனவா? இங்கே கூறியதால் ஏதாவது பலன் இருக்கிறதா? இல்லையா?"

என்ற பெருத்த அய்யப்பாடு நீங்கக்கூடிய வகையிலே, மற்ற துறைகளிலேயும் இத்தகைய முறையைக் கையாண்டால், அது எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் என்ற கருத்தைக் கூறி, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். இந்திய நாட்டிலே உற்பத்தியாகும் மின்சாரத்திலே ஏறத்தாழ 9 விழுக்காடு நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியானாலும், நமது மாநிலம் தன்னிலை பெற்றிருக்கிறதா, இல்லையா என்று பார்க்கும்போது, நம்முடைய எதிர்காலம், தொழில், தொழில் வளம், சிறப்பு, தொழில் நுட்பம், வளர்ச்சி, வேலைவாய்ப்பு, மக்கள் தொகை, மக்களுக்குத் தேவைப்படும் வசதிகள் இவைகளை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், நாம் அதிகமாகப் பின்னேறியிருப்பது மட்டுமல்ல, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நாம் அண்டை மாநிலங்களையும் நம்பிக்கொண்டிருக்கிறோம் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகமான அளவில் மின்சாரம் உற்பத்தி செய்ய பல முன்னேற்றமான திட்டங்கள் இருந்தும் கூட, இவைகள் எல்லாம் எந்த அளவுக்கு வெற்றிபெறும் என்ற அய்யப்பாடு இருக்கிறது. காரணம் ஒவ்வொரு உற்பத்தி நிலையத்தையும் பார்த்தால், அது நீர்மின் உற்பத்தி நிலையமாக இருந்தால், நம் தமிழ் நாட்டில் பருவமழையின் கோளாறினாலும், நிலக்கரியை எடுத்துப்பார்த்தாலும், அவைகள் செம்மையாகச் செயல்பட இயலாத நிலையில் இருக்கின்றன. நிலக்கரியைப் பொறுத்தவரையில், உலக அளவிலே பார்த்தால் கூட, ரஷ்ய நாட்டிலேதான் நிலக்கரி அதிகமாகக் கிடைக்கிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில், நெய்வேலியில் நிலக்கரி இருந்தால் கூட, நம்முடைய அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், அவைகள் பீஹார், வங்காளம் போன்ற மாநிலங்களைத்தான் சார்ந்திருக்கவேண்டிய நிலையிருக்கிறது. உலக அளவில் பார்த்தால் கூட கிடைக்கும் நிலக்கரி 100 அல்லது 200 ஆண்டுகளிலே முழுமையாகத் தீர்ந்துவிடும் நிலைதான் இருக்கிறது. அனல்மின் நிலையங்களுக்கு நிலக்கரி பெற முடியுமா என்ற சங்கடம் இருந்துகொண்டே இருக்கிறது. பெட்ரோலையும், டீசலையும் எடுத்துக்கொண்டால் கூட, வரும் 100 ஆண்டுகளிலே அவைகள் இல்லாது போகும், அவைகளுக்கு மாற்று நிலை உண்டாக்க வேண்டும் என்ற கருத்தும் இருக்கிறது. இந்த அடிப்படையிலே, சென்ற ஆளுநர் உரையிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் நான் கலந்து கொண்டு பேசும்போது, கடல் நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். நம்முடைய மாநிலத்திலே ஆயிரம் கிலோமீட்டர் தூரம் கடலோரம் இருக்கிறது. கடலை மூலமாகக் கொண்டும் மின்சாரம் உண்டுபண்ணலாம். வெப்பசக்தியைக் கொண்டும் மின்சாரம் உண்டாக்கலாம். மேலும், மேற்குப் பகுதியிலே கேரளாவிலே உள்ள தண்ணீர்

உபரியாக கடலிலே சென்று சேர்கிறது. அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்துவிட்டால் என்ன என்ற ஒரு கருத்து கூறப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறினார்கள். அந்தத் தண்ணீரை மலையைக் குடைந்து தமிழகத்திற்குக் கொண்டு வந்தால், அந்த மலைப்பகுதிகளிலே ஏராளமான நீர்மின் உற்பத்தித் திட்டங்களை அமைத்து மின்சார உற்பத்தியைப் பெருக்கலாம். 'இந்து' பத்திரிகையிலே சில மாதங்களுக்கு முன்னால் ஒரு கட்டுரை வந்தது. இந்தக் கருத்துக்களைத் தவிர இப்போது இன்னொரு கருத்து. ரோல்ஸ் ராய்ஸ் 583 ஒலிம்பஸ் எஞ்ஜின், கன்கார்டியா என்ற சூப்பர் சானிக் ஆகாயவிமானம் இங்கிலாந்து, பிரான்சு ஆகிய இரு நாடுகளின் ஒத்துழைப்பினால் செயல்பட்டுவருகிறது. அந்த ஆகாயவிமானத்தில் பயன்படுத்தும் ரோல்ஸ் ராய்ஸ் 583 ஒலிம்பஸ் எஞ்சினைப் பயன்படுத்தி தொழில் துறையிலே ஏராளமான மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்ற கருத்து இருக்கிறது. 1980 ஆம் ஆண்டிலே உலகத்திலே ஒரு சிறந்த சாதனையாக இதைப் பல நாடுகளிலும் பயன்படுத்தும் நிலை இருக்கிறது. இந்த அடிப்படையிலே நம்முடைய மாநிலத்திலே கூட இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி, தொழில் துறைக்கு அதிகமாக மின்சாரம் வழங்கக்கூடிய முயற்சியை ஒரு ஆராய்ச்சிக்காக, ஒரு ஆய்வாக நம்முடைய மாநிலத்திலே உள்ள வல்லுநர்களைப் பயன்படுத்திச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 8.13 லட்சம் மின் மோட்டார்கள் இதுவரை இணைப்பு பெற்றிருக்கின்றன. நடப்பாண்டிலே அது 12 லட்சமாக உயர்த்தப்பட இருக்கிறது. அநேக மின் மோட்டார்களிலே பல பகுதிகளில் "வோல்ட்டேஜ் ட்ராப்" ஏற்படுகிறது. ஆகையால் பல மின் மோட்டார்கள் தானாகவே எரிந்து போகின்றன. இதைத் தடுக்க மின்சாரத் துறை தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மின்சாரம் அதிகமாக நகரங்களிலே திருடப்படுகிறது. இயற்கையாகவே பழமையான கட்டிடங்களிலே மின்சார கடத்திகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதனால் அதிக அளவில் மின்சார இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, பழமையான மின் இணைப்புகள் உள்ள கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். புதுப்பிக்கப்படாவிட்டால், அதன்மூலமாக மின்சார இழப்பு ஏற்படுகிறது. குடியிருப்பவர்கள் மின்சாரக் கட்டணங்கள் ஒழுங்காகக் கட்டினாலும் கூட, தனிப்பட்ட முறையில் அப்படி இழப்பு ஏற்படுகிறது. இதற்கெல்லாம் மின்சாரத் துறை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று

(முற்பகல் 11-20)

கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் பல நகராட்சிகளும், மாநகராட்சிகளும், தாமே மின்துறையை இயக்கி வருகிற நிலையைக் காண்கிறோம். அநேக நகராட்சிகள் நல்ல நிலைமையில் செயல்படுவதற்குக் காரணம் மின்சாரத் துறையைத் தங்கள் பொறுப்பிலே வைத்து நடத்திக் கொள்வதும் அதன் மூலம் அதிகமான லாபம் பெறுவதும்தான். மதுரை மாநகராட்சியில் நிர்வாகம் நல்ல முறையில் செயல்படுவதற்குக் காரணம் இந்த மின்துறையின் மூலமாக மிக அதிகமான வருவாய் மாநகராட்சிக்கு வருவதுதான் என்கிறார்கள். இப்படி 'முனிசிபல் அண்டர்டேக்கிங்ஸ்' என்ற முறையில் மின்சாரத் துறையை நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் கொடுப்பதை நிறுத்தி விட்டு இந்தப் பணியை தமிழக மின் வாரியமே ஏற்று அவைகளை என் மேற்கொள்ளக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அவ்வாறு அவைகளை மின்வாரியமே மேற்கொள்ளுமானால், அவைகளின் மூலம் அதிகமான லாபம் மின் வாரியத்திற்கு வரும். அப்படி அதிகமாகக் கிடைக்கும் பணத்தை வேறு சில மின் உற்பத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என்பதோடு, மின் வாரியத்தில் கொடுக்கப்படும் சலுகைகள் தற்போது நகராட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மின்துறை ஊழியர்களுக்கு வழங்கப்படாத நிலை இருக்கிறது. அதையும் மாற்றி அவர்களுக்கு மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்குவதைப் போன்ற ஊதியமும் சலுகைகளும் வழங்கப்படலாம் என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே மின் வாரியமே இந்த அண்டர்டேக்கிங்ஸ் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் வாரியம் சுதந்திரமாகவும் நிறைவாகவும் செயல்பட வேண்டு மென்றால், மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இந்த மின்வாரியச் சட்டம் ஏற்படுத்தும் முறை இருப்பதை மாற்றி மாநிலமே மின்வாரியத்தைப் பொறுத்த தேவையான சட்டத்தை உருவாக்கும் உரிமை பெற வேண்டுமென்ற கருத்து இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். அதோடு மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், நம் மாநிலம் தன்னிறைவைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், பிற மாநிலங்களுக்கும் கொடுக்கக் கூடிய அளவில் தனது உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது பேசுவதற்கு முன்பாக நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்)

சட்டம் என்ற சட்டத்தின் அடிப்படையில் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழு செயல்பட்டு வருகிறது. அக்குழுவில் இன்றைய தினம் இம் மின்சாரத் துறையின் அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்களும் நானும் உறுப்பினராக இருந்திருக்கிறோம் என்பதையும் அப்போது அவர் பல நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக் கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அந்தச் சட்டத்தைத் திருத்தி அந்த ஆலோசனைக் குழுவில் இருக்கின்ற உறுப்பினர்களோடு சட்டமன்றத்தின் மேலவை மற்றும் பேரவை உறுப்பினர் களையும் தேர்ந்தெடுத்து அவர்களும் மின் வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உரிய முறையில் அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்தச் சட்டத்தை மத்திய அரசு தான் திருத்த வேண்டும்.

திரு. க. அறிவழகன் : அப்படிப்பட்ட திருத்தத்தை மத்திய அரசுதான் செய்ய வேண்டுமென்றால், அதற்கான ரெசல்யூஷனையாவது, தீர்மானத்தை யாவது நாம் போட்டு அனுப்ப வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்படியெல்லாம் செய்ய வேண்டு மென்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தை மாநில அரசே நிறைவேற்றி அதன் மூலம் மின்சார வாரியத்தை நிருவகிக்க வேண்டுமென்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறேன். தற்போதைய நிலையில் ஒரு சிறு முன்னேற்றத்தைக்கூட கொண்டு வருவதற்கான ஒரு வழி நமக்கில்லாத நிலை தான் இருக்கிறது.

திரு. க. அறிவழகன் : அமைச்சர் அவர்களின் நல்ல விளக்கத்திற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நானும் அந்த ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருந்தபோது, கனிவோடு பல பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது செயலாளர்—உறுப்பினராக இருந்தவரேகூட அந்த ஆலோசனைக் குழுவுக்கு வருவதில்லை என்ற நிலை இருந்தது. அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாத வகையில் அந்த ஆலோசனைக் குழுவை மாற்றியமைக்க வேண்டும் என்பது என்னுடைய முதற் கோரிக்கையாகும்.

இரண்டாவது, மின்சார வாரியத்தை நடத்துகின்ற முறையிலும் பல நல்ல மாற்றங்களை நல்ல நோக்கத்தோடு உருவாக்கி, இன்றையதினம் அதனுடைய தலைவராக இருக்கிறவர் மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதையும் அவர் எல்லோருமே பெரும் திருப்தியும் மகிழ்ச்சியும் பெறத் தக்க வகையில் பணியாற்றி வருகிறார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வாரியத்தின் அமைப்பு முறையில் பல்வேறு துறைகளுக்கும் பல சிப் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். பல்வேறு துறைகளுக்கும் தலைவர்கள் இருக்கிறார்கள். அக்கவுண்ட்ஸ் செக்ஷன் என்றால் அதற்கும் ஒரு தலைவர் இருக்கிறார். அவர்களெல்லாம் மின்சார வாரியத்தின் உறுப்பினராக இருக்கத் தக்க வகையில் நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும். அதைப் போலவே மின்வாரியத்தின் ஊழியர்களுடைய பிரதிநிதிகளும் அந்த வாரியத்தின் உறுப்பினராக இருக்கத் தக்க நிலையை உருவாக்க வேண்டும். மத்திய அரசிடம் சொல்லி இந்தச் சட்டத்தைத் திருத்துகிற அதிகாரம் பெறுகிற நேரத்தில், நான் மேற்சொன்ன வகையில் அனைவரும் வாரியத்தின் உறுப்பினர்களாக இடம் பெறத் தக்க வகையில் சட்டத்தைத் திருத்தி ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் நீர் மின்விசை நிலையங்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்றும் சிறு சிறு பகுதிகள்தான் பாக்கியிருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்கள். அத்தகைய சிறு சிறு பணிகளையும் தற்போது மேற்கொண்டிருக்கிறோம் என்றும் சொல்லப்பட்டது. அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், புதிது புதிதாக நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அவைகளெல்லாம் எந்த அளவுக்குச் சிறப்பாக நடக்கின்றன என்பதை ஆய்வு செய்வதற்கு மின்சார வாரியத்தைச் சாராதவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அதை ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குச் சட்டத்தில் எப்படி இடம் கொடுக்க முடியும் என்பதையும் அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், அவைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்றும் எவ்வாறு செயல்பட வேண்டுமென்றும் ஆராய்வதற்காக மத்திய அரசு 1975 ஆம் ஆண்டில் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழுவில் மின்சாரத் துறையைச் சாராத வேறு பல நிபுணர்களையும்

எஞ்சினியரிங் துறையில் பணியாற்றுகின்றவர்களையும் இடம் பெறச் செய்தார்கள். அதைப் போல நமது அரசும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்காகத் தாங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறீர்கள் . . . (சிரிப்பு)

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்ட கருத்தைப்பற்றியும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்கள் வீட்டில் மின் விளக்கு எரிந்தாலும், அதை வியாபார ரீதியில் கொண்டுவந்து அதற்கான கட்டணத்தை வசூலிக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார். இது எந்த வகையில் நியாயம் என்பது எனக்குத் தெரியவில்லை. சின்னஞ்சிறு கிராமங்களில் உள்ள டீ கடைகளில் எரிகிற மின் விளக்குகளுக்குக்கூட வியாபார ரீதியில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்கிற நிலை இருக்கிறது. என்னுடைய சொந்த ஊரில்—மாயவரத்தை அடுத்த எலந்தங்குடி என்கிற ஊரில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. டீ கடைகளில் எரிக்கப்படும் மின் விளக்குகளுக்கு உயர்ந்த கட்டணம் வசூலிக்கும் முறை இன்றைக்கு இருக்கிறது. இதன் காரணமாக பெரும்பான்மையான இடங்களில் மின்சார விளக்கே வேண்டாம் என்று சொல்லுகிற நிலையும் இருக்கிறது. எனவே வியாபார முறை என்பது எது என்பதை நிர்ணயிக்க புதிய அணுகுமுறையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய கிராமத்தில் பல நேரங்களில் மின்சார சப்ளையில் ஏற்படுகிற மின் அழுத்தக் குறைவு காரணமாக பம்புசெட்டுகளுக்கு ஏற்படுகிற கோளாறுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய சொந்த ஊரான எலந்தங்குடியில் இருக்கிற பல நண்பர்கள் இந்தக் குறைபாட்டைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மின் அழுத்த வேறுபாடு காரணமாக அங்கே இருக்கிற பல்வேறு பம்புசெட்டுகள் பாழாகிற நிலைமை இருக்கிறது. எனவே மின் வாரியம் மின் அழுத்தத்தை ஒழுங்குபடுத்தி விநியோகிக்கிற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கல்பாக்கம் மின்னணு உலையை மிக விரைவில் முடிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று . . .

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்களே எனக்குப் பிரதிநிதியாக இருந்து கருத்துக்களைச் சொல்லும்போது வேறு பிரதிநிதி எனக்குத் தேவையில்லை என்று எடுத்துக்கூறி தங்களுக்கும் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பல விவரங்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்துப் பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களும் கிராமங்களில் இருக்கிற கடை வரை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பெரிய அளவில் உள்ள காரியங்களைப் பார்ப்பதற்கு என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவருக்குத் துணையாக மின்வாரியத்தின் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. கடல் தண்ணீரிலிருந்து நல்ல தண்ணீர் எடுக்கலாமா என்பதைப்பற்றியும் நல்ல தண்ணீரை உப்புத் தண்ணீராக ஆக்கலாமா என்பதைப் பற்றியும் ஆராய்வதற்கு பல லட்சக் கணக்கான ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிற அதிகாரிகள் இருக்கிறார்கள்.

கலைப்பைக் கட்டுவது கூட சரியாகத் தெரியாத நான் வந்து இந்த அவை உறுப்பினர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் யோசனை சொல்லி, அந்த யோசனையை அவர்கள் கேட்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் எனக்குத் தெரிந்த சில விவரங்களை மட்டுமே நான் இங்கே சொல்வதற்கு முன்வருகிறேன்.

கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், எங்களுக்கு நல்ல முறையில் மின்சாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதில் ஏதாவது கோளாறு வந்தாலும், அதை நாங்கள் அதிகாரிகளுக்குச் சொல்லி நிவர்த்தி செய்து கொண்டு வந்தோம்.

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் உபயோகிக்கும் மின்சாரத்திற்காக மீட்டர் வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். மீட்டர் வைத்துக் கொடுத்துவிட்டால், கூட இருந்தாலும் குறைவாக இருந்தாலும்

பணம் கட்டிவிடுகிறோம் என்றார்கள். சரி என்று அரசாங்கத்தில் அதற்கு சம்மதித்து மீட்டர் வைத்தார்கள். இப்போது என்ன நிலைமை என்றால், 2 நாட்களுக்குக்கூட சேர்த்தாற்போல் அங்கே பல்புகள் எரிவதில்லை. தொடர்ந்து ஒரு வாரத்திற்கு தெருக்களில் லைட் எரிகிறதா என்றால், இல்லை. பஞ்சாயத்துக்களிடம் இந்த மின்சார விளக்கெரிக்கும் பொறுப்பை ஒப்படைத்த பிறகு, பஞ்சாயத்தில் இருப்பவர்களுக்கு எவ்வளவு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமோ அதைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டார்கள். இது அமைச்சர் அவர்களுக்கோ, சேர்மன் அவர்களுக்கோ தெரியாது என்று நான் நினைக்கவில்லை. இதற்கெல்லாம் டெல்லியில்தான் அதிகாரம் இருக்கிறது என்று எங்களுக்குக் கைகாட்டிவிடக் கூடாது. எங்களைப் பொறுத்தவரை, அமைச்சர்தான் எங்களுக்குப் பொறுப்பு.

உள்ளாட்சித் துறை இந்தப் பொறுப்பைத் தங்களிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டதால்தான் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இது ஒரு கெடுதலான யோசனை. எங்கே பார்த்தாலும், 3 நாளைக்கு மேல் விளக்கு எரியாத நிலைதான் இருக்கிறது. சில பஞ்சாயத்துக்களில் பல்பு வாங்கக்கூட பணமில்லை. ஆகவே அவர்கள் அப்படியே விட்டுவிட்டார்கள். அனுபவம் மிகுந்த அமைச்சர் அவர்களும், மின்சார போர்டு சேர்மன் அவர்களும் இதற்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

கிராமங்களில் ரொம்பக் கஷ்டப்படுத்துகிறார்கள். எங்கள் மாவட்டத்தில் பம்புசெட்டுகள் இல்லை. கிழக்கு இராமநாதபுரத்திலே யாராவது ஒன்றிரண்டு பேர் வைத்திருப்பார்கள். பஞ்சாயத்துக் தொந்தரவு அதிகமாக இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்துக்களிடம் மின் விளக்குப் பிரச்சினையை விடுவதைவிட மின்சார வாரியமே அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாக இந்த விஷயத்தில் எங்களுக்கு அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன. அதை எங்களால் தாங்க முடியவில்லை. ஆகவேதான் மின்சாரத் துறையே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுகிறேன்.

கிராமங்களில் முன்பெல்லாம் விளக்குகளே கிடையாது. கிராமங்களெல்லாம் நல்ல முறையிலே இருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அதற்குண்டான லைட்டுகளை 1958, 1959 ஆகிய ஆண்டுகளில்தான் ஏற்படுத்தினார்கள். 1959 ஆம் ஆண்டில்தான் கிழக்கு இராமநாதபுரத்தில்

லைட் போடப்பட்டது. அதற்கு முன் இரண்டு மூன்று ஊரில் லைட்கள் இருந்தன. தேவகோட்டை முனிசிபல் நகரத்திலும், சண்முகானந்தபுரத்தில் ஒரு செட்டியார் வீட்டிலும்தான் லைட்கள் இருந்தன. அதைத் தவிர திருவாடானை தாலுக்காவில் எந்த ஊரிலும் லைட் இல்லை. இப்போது அங்கெல்லாம் லைட் எரிகிறது. ஆனால் இப்போது லைட்டை எரிய விட்டு, பஞ்சாயத்துக்களுக்குக் கெட்ட பெயர் உண்டாக்கத்தான் அதை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதை உடனடியாக மின்சாரத் துறையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். பஞ்சாயத்துக்களிடம் இருந்தால், அது தற்கொலைக்கு ஒப்பாகும்.

கிராமங்களிலே இருக்கிற மின்சார அதிகாரிகள் தங்கள் வேலையைச் சரியாகச் செய்வதில்லை. எல்லா அதிகாரிகளும் நல்ல முறையிலே வேலை செய்யவில்லையென்று நான் சொல்லவில்லை. ஒரு சிலர் நல்ல முறையிலே வேலைகளைச் செய்பவர்களாக இருக்கலாம். மைக் செட்டுகளுக்காக மின்சாரத்தைக் களவாடுகிறார்கள் என்று இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். இதையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு எங்களுக்கு அதிகாரமில்லையென்று சொன்னால் நல்லதல்ல.

முனிசிபாலிடிகளில் பைப்புகளுக்கு மீட்டர் வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். தண்ணீர் இறைக்காமல், காற்று அடித்தாலே அந்த மீட்டர் ஓடும். இப்படி ஓடினால் பாமர விவசாய மக்கள் எப்படி கட்டணத்தைக் கட்டுவார்கள்? அவர்கள் தவறான முறையிலே மின்சாரத்தைப் பயன்படுத்த மாட்டார்கள். ஆகவே மக்கள் கட்டணத்தைக் கட்ட முடியாமல் கிளர்ச்சி செய்கிறார்கள், உண்ணாவிரதம் கூட இருக்கிறார்கள். இதையெல்லாம் உண்டுபண்ணுகிறவர்கள் யாரென்றால் இங்கே இருப்பவர்கள்தான். இங்கேதான் அந்த மீட்டர்களையெல்லாம் உற்பத்தி செய்கிறார்கள். அதற்காக ஒரு நான்கு பேர் இருப்பார்கள். இப்படி தண்ணீர் இறைக்காமல், காற்று அடித்தால் மீட்டர் ஓடி ஒவ்வொரு வீட்டுக்கும் எழுபது, எண்பது ரூபாய் கட்டணம் வந்தால், கிராமத்திலே உள்ளவன் என்ன செய்வான்? எப்படிக் கட்டுவான்? ஆகவே இந்த நிலைமையை மாற்ற வேண்டும். கிராமங்களில் எல்லாம் இப்போதுதான் படிப்பு வந்திருக்கிறது. அதற்குள்ளாகவே விஞ்ஞான முறைகளைக் கொண்டுவந்து மீட்டர் வைத்தால், அவர்களால் எப்படிச் சமாளிக்க முடியும்? ஒருவன் எவ்வளவு ஏக்கர் வைத்திருந்தாலும், அவனுக்கு மீட்டர் வைத்துக்கொடுப்பதில்லை. புதிதாகக் கேட்பவனுக்கு மீட்டர் வைத்துக்

கொடுக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. ஆண்டவனுக்குத்தான் தெரியும். இல்லையென்றால் அமைச்சருக்குத் தெரியும், சேர்மனுக்குத்தான் தெரியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்த சேர்மனுக்குத் தெரியாது.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியுமென்று சொல்லவில்லை. எலெக்ட்ரிசிட்டி போர்டு சேர்மனுக்குத் தெரியுமென்று சொல்லுகிறேன். உங்களுக்கும் தெரியுமோ என்னவோ, எனக்குத் தெரியாது. நீங்கள் பட்டணவாசி. பைப்புகள் போட்டால் எல்லோருக்கும் போட வேண்டும். அதுவும் முன்னாலே கேட்டவர்களுக்குக் கிடையாது, பின்னாலே கேட்டவர்களுக்குக் கிடையாதென்றால் எப்படி? அதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பார்கள். காற்று அடித்தால் மீட்டர் ஓடுவதும் சரியல்ல. ஆகவே அதையும் ரத்து செய்ய வேண்டும். இவைகளையெல்லாம் சீக்கிரமே நல்ல முறையிலே செய்ய வேண்டும். பஞ்சாயத்து லைட் பிரச்சினையை மின்சாரத் துறையே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

* **திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய வேண்டுகோளின்படி சுருக்கமாக என்னுடைய உரையை மூன்று நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளுகிறேன். மணி அடிக்கிற சந்தர்ப்பம் இருக்காது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இல்லாவிட்டால் உங்களை இங்கே உட்கார வைத்து மணி அடிக்கப்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மின்சாரத் துறை திறமை மிக்க அமைச்சர் தலைமையில் இயங்குவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஏற்கனவே அவர் மின்சாரப் பொறியாளராக இருந்திருக்கிறார் என்ற காரணத்தாலும், அவருடைய திறமையாலும், இந்தத் துறை மிகச் சிறப்பாக இயங்குகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவருக்கு உறுதுணையாக மின்சார வாரியத்தின் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். மின்சார வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடிய திரு. சொக்கலிங்கம் அவர்களை ஏற்கனவே எனக்குத் தெரியும். புதுக்கோட்டையிலே நான் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த நேரத்தில் அவர் திருச்சி மாவட்ட ஆட்சியாளராக இருந்தார். ஆகவே நேரிடையாக அவரை எனக்குத் தெரியும்.

அவருடைய நேர்மையும், நிர்வாகத் திறமையும் எனக்கு நன்கு தெரியும். இந்தத் துறையைச் சிறப்பாக நடத்த அவர் அமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பார் என்பதும் எனக்குத் தெரியும். திறமை மிக்க அவர்கள் இந்த வாரியத்தில் செயல்படுவதால் நிச்சயமாக மக்கள் பெரிதும் பயனடைவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அன்பான, பண்பான, திறமையான நடவடிக்கைகளால் மக்களுடைய பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நேரம் குறைவாக இருப்பதால், ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத் திருட்டு, மின்சாரத் தடை, மின்சாரத் தடங்கல், மின்சாரப் பற்றாக்குறை, மின்சாரக் கட்டண பில்கள் ஆகியவைகளைப்பற்றி ஓரிரு வார்த்தைகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மின்சாரத் திருட்டு வெகு பரவலாக நடைபெறுகிறது. மின்சார வாரியத்தைச் சேர்ந்த பணியாளர்கள் கூட இதற்கு உதவியாக இருக்கிறார்கள் என்று அறிகிறேன். நான் நீதிபதியாக இருந்த காலத்திலே பல வழக்குகள் என்னிடம் வந்திருக்கின்றன. மின்சாரத் துறையில் இருப்பவர்கள் வழக்குகளைத் திறமையாக நடத்துவதற்கு முயற்சிப்பதில்லை. அதன் காரணமாக பல வழக்குகள் தோல்வியடைந்திருக்கின்றன. அவ்வாறு தவறு செய்கிறவர்களைக் கண்டுபிடித்து வழக்குகளைத் திறமையாக வழக்கு மன்றத்திலே நடத்தி, தவறு செய்பவர்களைத் தண்டிக்க, தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சாரத் தடையால் கெடுதல் உண்டாகி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதை மனதிலே கொண்டு மின்சாரத் தடை ஏற்படாமல் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சாரக் கட்டண பில்களைத் தயாரிப்பதிலும், மீட்டர் ரீடிங் எடுப்பதிலும் பல தவறுகள் ஏற்படுகின்றன. சரியான முறையிலே கணக்குகள் வருவதில்லை. மீட்டர் ரீடிங் எடுப்பவர்களில் சிலர் வீடுகளுக்குச் செல்லாமலே ஒரு உத்தேசமாகக் கணக்கை எழுதுகிறார்கள். இதனால் மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே அதைத் தடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சாரம் சரியாக வராமல் அடிக்கடி தடங்கல் ஏற்படுகின்றது. சிலசமயம் வீடுகளில் உள்ள விளக்குகள் அணைந்துவிடுகின்றன. பல மணி நேரம் கழித்தும் மின்சாரம் வருவதில்லை. சில நேரங்களில் தெரு விளக்குகள் எரியும், ஆனால் வீடுகளில் விளக்குகள் எரியாது. சில நேரங்களில் வீடுகளில் விளக்குகள் எரியும், தெருக்களில் விளக்குகள் எரியாது. சில நேரங்களில் இரண்டு இடங்களிலும் எரியாமல், அந்தப் பகுதி முழுவதும் இருட்டிலே மூழ்கிக் கிடக்கும். மின்சாரத் தடங்கல் ஏற்பட்டால், அதை நிவர்த்திப்பதற்காக, ஒரு மொபைல் வேனை அனுப்பி எவ்வளவு சிக்கிரம் அதைச் சரி செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, பல திட்டங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. அந்தத் திட்டங்களை விரைவிலே நடைமுறைப் படுத்துவதற்கு, அவற்றைச் சுறுசுறுப்பாக இயங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக ஒகனேகல் திட்டம் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூன்று நிமிடங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் நான் மணி அடிக்கப் போவதில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்திலே முடித்துக்கொள்ளுகிறேன்.

தருமபுரி மாவட்டத்திலே நான் குற்றவியல் தலைமை நீதிபதியாக இருந்தபோது, ஒகேனகல்லுக்குப் போவதுண்டு. அங்கே மின்சாரத் திட்டம் ஏற்படுத்துவது நல்லதென்று எனக்குத் தோன்றும். திட்டத்தை உருவாக்க அறிகுறிகள் கூட அங்கே இருக்கின்றன. ஆகவே அதை சிக்கிரமே நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் சேர்வலாறு, புன்னம்புழா, நெல்லித்துறை, சண்முகா நதி நீர் மின் திட்டங்களையும், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம், வட சென்னை அனல் மின் திட்டம் ஆகிய திட்டங்களையும் சிக்கிரம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கெனவே நேரம் அதிகமாகிவிட்டதென்று சொல்லுவதால், இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-40)

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அறிக்கையின் மீது நான் சில கருத்துக்களை இங்கே வைப்பதற்கு விழைகிறேன். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மின்சாரத் துறையிலேயே பொறுப்பு மிக்க ஒரு பணியிலிருந்து விடுபட்டு இருக்கின்ற காரணத்தினாலேயே பலியானவர்களின் சார்பிலே வேறு சிலர் அவர்களை நெருங்கி

பரிந்துரை செய்து அதன்பேரில் அவர்கள் பணியாளர்களுக்குச் செய்ய வேண்டிய நிலையிலே இருக்கமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்ற பணியாளர்களுக்காக வாதிடுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற நான், இங்கே சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டவனாவேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8.33 சதம் ஊதியத் தொகையையும், 4 சதம் கருணைத் தொகையையும், ஊக்க ஊதிய கொடைத் திட்டத்தையும், சுருளியாறு நீர் மின் திட்டப் பணியாளர்களுக்காக ஒரு மாத சம்பளத்தையும், அகவிலைப்படியும் இது போன்ற பல சலுகைகளையும் எல்லாம் வழங்கி பணியாளர்களுடைய நெஞ்சத்திலே இடம்பெற்றிருக்கிறார்கள். அந்த வகையிலே அவரைப் பாராட்டுகிறேன். 1977 ஆம் ஆண்டு பண்டிகை முன்பணம் வேண்டுமென்று கோரி, தொழிலாளர்கள், பணியாளர்கள் போராட்டம் நடத்திய காலத்திலே போட்ட வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். அதற்காகவும் நான் நன்றி தெரிவிக்கிறேன். ஆனால் அந்தப் போராட்டத்திலே பங்கேற்று முன்னோடியாக நின்றவர்களில் ஒரு நூறு பேரை என்னூர் அனல் மின் நிலையத்திலிருந்து வேறு நிலையத்திற்கு மாறுதல் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது இருந்த வழக்கையும் திரும்பப் பெற்றுக்கொண்ட அந்த நல்ல பண்போடு, அந்த நல்ல எண்ணத்தோடு மாறுதல்கள் செய்யப்பட்ட அந்த ஊழியர்களை மீண்டும் பழைய இடத்திற்கே மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்கு முறைப்படி வழங்க வேண்டிய பதவி உயர்வுகளையும் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே மின் இலாகாவிலே பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதற்காக நான் பாராட்டுகிறேன். மகாராஷ்டிராவிலே மருத்துவப்படியினை வழங்குகின்றார்கள். இங்கே உள்ள ஊழியர்களும் அதைக் கேட்கிறார்கள். எங்களுக்கு மாதந்தோறும் ரூ. 50 ஆவது தாருங்கள் என்று கேட்கிறார்கள். அந்தக் கோரிக்கையைப் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பீகாரிலே வாரிசுகளுக்கு வேலைவாய்ப்புத் தருகிறார்கள். பீகாரிலே இருக்கக்கூடிய மின் துறையில் உள்ள எல்லா ஊழியர்களுடைய வாரிசுகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறார்கள். இங்கே 20 ஆண்டுகள் பணியாற்றி முடித்தவர்களுடைய குழந்தைகளுக்காவது அந்த வேலை வாய்ப்பை அளிக்கின்ற திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடகத்திலே களப்பணியாளர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் தருகிறார்கள். அந்த சைக்கிள் அலவன்ஸ் இங்கேயும் தரவேண்டும்.

அந்த சைக்கிள் அலவன்ஸ் மாதத்திற்கு ரூ. 15 வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவிலே ஜீப் ஓட்டுகின்றவர்களுக்கு அலவன்ஸ் வழங்குகின்றார்கள். இங்கேயும் அப்படிப்பட்ட ஊழியர்களுக்கு ரூ. 20 வரையிலும் அலவன்ஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடகத்திலே வாரிய ஊர்தி ஓட்டுநர்களுக்கெல்லாம் சிறப்பூதியம் வழங்குகிறார்கள். அந்தத் திட்டத்தையும் இங்கே அமுல்படுத்த வேண்டும். இங்கே ரூ. 30 சிறப்பூதியமாக வழங்க வேண்டுமென்றும் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மற்ற துறைகளிலே உள்ளது போல, ரெயில்வேயில் வேலை செய்கின்றவர்களுக்கு, அவர்கள் குடும்பங்களுக்கு ரெயிலில் கட்டணமின்றி போக வசதி கொடுத்திருப்பது போல, மின்சார ஊழியர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ 30 யூனிட்டாவது மாதத்திற்கு வழங்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் அந்த ஊழியர்களுடைய குடும்பங்களுக்கு உண்டு என்ற அந்தத் திட்டத்தை இப்போது அமல் படுத்துகிறார்கள். அவர்களிடம் ஒரு ரூபாய் பிடிக்கிறார்கள். ஒரு ரூபாய்க்குப் பதிலாக 10 ரூபாய் பிடித்துக்கொண்டு அவர்கள் ஓய்வு பெறுகின்றபோது 10,000 ரூபாய் கொடுக்கும் திட்டத்தையும் அமுலுக்குக்கொண்டுவந்தால் உங்களை அந்த குடும்பங்கள் என்றைக்கும் மறக்காது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சீருடைப்படி, சலவைப்படி ஆகியவை அவர்களுக்குத் தரவேண்டும் என்றும் வீட்டுவசதியை அவர்களுக்குச் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஒரு லட்சம் ஊழியர்களிலே 5 சதவிகிதம் பேருக்குத்தான் வீட்டுவசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இன்று ஆரம்பித்தால்கூட ஆண்டுக்கு பத்தாயிரம் வீடுகள் கட்டுவதாக ஒரு குறியீட்டை வைத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தைச் செயலாக்கினால், இன்னும் 10 ஆண்டுக்காலத்திலே நிறைவு செய்யலாம். அந்த வேலை உங்கள் காலத்தில் தொடங்கவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். வீடு கட்ட கடன் வசதி வழங்க வேண்டும். தொழிலாளர்கள் குழந்தைகளுக்குக் கல்விக் கடன் வசதி வழங்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மின்வாரிய அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கே அடிப்படை வசதிகள்கூட இல்லை. குடிநீர் வசதி இல்லை. ஆண்டுக்கொண்டு நிதி ஒதுக்கி புதிய கட்டிடங்கள் கட்டினால்,

விரைவிலேயே எல்லா அலுவலகங்களிலும் போதிய அளவில் அலுவலகங்கள் கிடைத்துவிடும். அது சிக்கனமாகவும் இருக்கும். வசதியாகவும் இருக்கும். அதைப்பற்றிப் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் கம்பங்கள் செய்வதை காண்ட்ராக்டுக்கு விடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். கடந்த காலத்தில் கம்பம் தயாரிப்பதை தனியாரிடத்திலே அதிகமாகத் தரவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அரசே அதைச் செய்தால், கம்பங்களுடைய தரம் நன்றாக இருக்கும். லாபம் அரசுக்குக் கிடைக்கும். ஊழியர்களுக்கும் வேலை கிடைக்க வாய்ப்புக்கள் இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் நிறைய பட்டியல் வைத்திருக்கிறார்கள் போல் இருக்கிறது. சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பட்டியல் இருக்கிறது. நான் அதைப் பேச்சாகப் பேசவில்லை. அதில் உள்ளதை விரைவு சுருக்கமாகப் படிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நேரம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், பேச்சாகப் பேசாமல் அதில் இருப்பதையே சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

மின்சாரத் திருட்டைப்பற்றிப் பேசினோம். அந்த மின்சாரத் திருட்டிலே ஈடுபடுகின்றவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கும் வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். இப்போதுள்ள சட்டத்தை அதற்காகத் திருத்தம் செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அதன் மூலமாக அரசுக்கு வருவாய் அதிகமாகும். எனவே அதற்குரிய சட்டத்தை உருவாக்கலாம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். கம்பி மூலம் வழங்கப்படும் மின்சாரம் விரயமாவதைத் தடுப்பதற்கு உரிய பயிற்சியைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு என்று தனிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது தற்போதுள்ள நிலுவையைக் கட்டுவதற்கு ரிபேட் தந்தால், அனைவரும் காலத்தில் பணம் கட்டுவார்கள். அவர்களுக்குப் பணம்

கட்ட ஆர்வம் இருக்கும். அதனால் நிலுவை நிற்காது. என்று யோசனை சொல்லக் கடமைப்பட்டவன் ஆவேன். மின்சார ஊழியர்கள் வேலைக்குச் சேர்கின்றபோதே ஒரு 3 மாதமாவது பயிற்சி கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அளவுக்கு பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. இரத்தின பாலகுருசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மின்சார நிதிநிலை அறிக்கையின் மீது நானும் எனது கருத்துக்களைச் சொல்வதற்கு இடமளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நிதுகாரும் இல்லாத அளவுக்கு, இந்த அரசு கிராம மக்களை முன் வைத்து நடைபெறுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக கிராம மக்களிடமிருந்து 10 ரூபாய் வசூலித்துக்கொண்டு ஒரு விளக்கும் ஒயரிங்கும் செய்துகொடுத்து, கட்டணம் ரூ. 2.50 வாங்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இதுவரையிலே 64,998 கிராமங்களுக்கும் 24,526 அரிஜன குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட மின்சாரக் குறையில்லாமல் இந்த ஆண்டுகூட கோடைக்காலத்தில், நம்முடைய அரசு, புரட்சித் தலைவர் அரசு, மின்வெட்டு இல்லாமல் சமாளித்து நல்ல பெயரை வாங்கியிருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக அதனுடைய தலைவர் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அண்டை மாநிலங்களிலிருந்து, குறிப்பாக கேரளாவிலிருந்து, மின்சாரம் பெற பெப்ரவரி மாதம் 11 ஆம் நாள் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருக்குள்ள நுண் அறிவின் காரணமாக ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அவர்கள் கேரளா அரசையும் கர்நாடக அரசையும் கலந்து பேசியிருக்கிறார்கள். அவர்களை ஈர்க்கின்ற முறையிலே ஒரு திட்டத்தை ஒத்துக்கொள்ளச் சொல்கின்ற வகையிலே அவருடைய திறமையைக் காட்டி அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இங்கேகூட நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. வெங்கடேசன் அவர்கள் தெரிவித்தார்கள். ஹொகேனக்கல் மின்சாரத் திட்டத்தை இங்கே சீக்கிரமாக விரைவுபடுத்தினால் தமிழ் நாட்டின் குறைகள் ஓரளவுக்குத் தீரும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது மேற்குநோக்கி ஓடுகின்ற ஆறு கேரளாவில் இருப்பது பற்றி எடுத்துச்சொல்லப்பட்டது. நம்முடைய மேட்டூர் அணையைப் பொறுத்தவரையில், 280 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. அதேபோல் 2,000 டி.எம்.சி. தண்ணீர் கெட்டுப்போகிறது

என்று சொன்னார்கள். குறைந்த செலவிலே நீர்மின் திட்டத்திலே மின் உற்பத்தி செய்யலாம் என்ற அடிப்படையிலே அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். நம்முடைய அரசு அதிலே கவனம் செலுத்தி அந்த நீர் மின்சாரத் திட்டத்தைத் தொடங்கி தண்ணீர் கீழே நோக்கிப் பாய்கின்ற அளவுக்கு அந்தத் திட்டத்தைப் போட்டு மின் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலே எரிகின்ற விளக்குகள் இருக்கின்றன. எரியாத விளக்குகள் இருக்கின்றன என்று எடுத்துச்சொல்லப்பட்டது. குறைகள் ஓரளவுக்கு நீக்கப்பட்டுவிடும். இந்த நிதிநிலை அறிக்கையிலே இங்கே எடுத்துக்காட்டப்பட்டு உள்ளது. ஆலோசனைக்குழு என்ற பேரில் ஒரு 21 பேர்கள் அடங்கிய குழுவை நம்முடைய மின்சார வாரியம் அமைத்திருக்கிறது. அதன்மூலம் அங்கத்தினர்களுடைய கருத்தை அறிந்து வேண்டிய திட்டங்கள் இந்த அறிக்கையின் மூலம் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு குறை இதிலே என்ன இருக்கிறது என்றால், பல்புகளை பஞ்சாயத்து யூனியனே அதனுடைய பணத்தில் வாங்கி அவர்கள் பொருத்திக்கொள்வது என்பதைவிட... ஏற்கெனவே இருந்ததைப் போல மீட்டர் திட்டம் போட்டு, அந்த மீட்டர் பொருத்தப்பட்டுவிட்டது; பொருத்தப்பட்ட மீட்டரை மின்சார வாரியமே எடுத்துக் கொண்டு வசூலிக்கின்ற வகையிலே நிர்வகித்தால் நலம் பல பயக்கும் என்று

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-50)

நான் கருதுகிறேன். அதற்குக் காரணம், மின்சார வாரியத்திலிருந்து நாம் பல்புகளை வாங்கிக் கொடுக்காமல், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற ஆணையாளர் அவர்களே தாக்கீது தருகிறார்கள். அதன் பிறகு பல்புகளை வாங்குகிறோம். அது முதல் நாள் எரிகிறது, மறுநாள் எரியாமல் போகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் வளர்வதால், பஞ்சாயத்துக்களுக்கு அதிக நஷ்டம் வருகிறது. அப்படி ஊராட்சிகளுக்கு அதிக நஷ்டம் வருவதைத் தடுக்கும் முறையில், மின்சார வாரியமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அவர்களே அந்தப் பணியைச் செய்து, பணத்தையும் வசூல் செய்து கொள்வது நல்லது. மின்சார வாரியத்தின் வாயிலாக இந்தக் காரியத்தைச் செய்தால்தான், எந்தக் காரணத்தால் கோளாறு ஏற்படுகிறது என்பதை, நாம் எடுத்துச் சொல்லலாம். அவர்களே வந்து பார்த்து, பொறுப்பாகச் செய்வார்கள் என்று கூறி இந்த அளவில் அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக மின்சார வாரியத்தின் கடந்த 20 ஆண்டுக்கால வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில், இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் இருப்பதைக் காண்கிறோம். அப்படி முதலிடத்தில் இருப்பதற்கு யார் யார் காரணம் என்று கவனிக்கும்போது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்தத் துறையின் வளர்ச்சியில் காட்டிய அக்கறையையும், தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் துறை வளர வேண்டுமென்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே இந்தத் துறையின்மீது செலுத்திய தனிக் கவனமும் இந்தத் துறை பெற்ற வளர்ச்சிக்கு முக்கியமான காரணங்கள் என்பதோடு அந்த இலாக்காவிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய இன்றைய தலைவராக இருந்தாலும் அல்லது பொறுப்பாளராக இருந்தாலும், அல்லது மின்சாரத் துறை அமைச்சர் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களானாலும் இந்தத் துறை வளர்வதிலே எப்போதும் ஆர்வம் காட்டக்கூடியவர்கள். அதிலே அதிக ஈடுபாடு கொண்டவர்கள் என்பதைக்கூட எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். நானும் அந்த இலாகாவிலே இருந்தவன் என்ற அடிப்படையிலே, இங்கே சொல்லுகின்ற கருத்துக்கள், நம்முடைய அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் உதவியாக இருக்குமென்ற காரணத்தாலே, சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்போதுமே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் நிதானத்தோடும், தெளிவோடும், அதே நேரத்தில் ஆக்கபூர்வமாகவும் போகக்கூடியவர்கள். என்ன காரணத்தாலோ சட்டமன்றப் பேரவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கொஞ்சம் மறைமுகமாகக்கூட தாக்கிப் பேசியதைப் பத்திரிகையில் பார்த்தேன். எதிர்க் கட்சிகள், எப்போதும் ஆளும் கட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்ட இருக்கும் அமைப்புகளே தவிர, ஆளும்கட்சி எதைச் செய்தாலும், வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதை, அமைச்சரவர்களே விரும்பமாட்டார்கள். எனவேதான் நேற்றையதினம் பேசும்போது, புழுதி வாரித்தூற்றி, மாலைப் பத்திரிகையில் செய்தி வர வேண்டு

மென்று நினைக்கிறவர்கள் இல்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் காலத்திலிருந்து சட்ட மன்றத்தைப் பார்ப்பதாகச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் காலத்தில் மட்டுமல்ல, அதற்கு முன்பாக இருந்த எந்தக் காலமாக இருந்தாலும், எதிர்க் கட்சிகள் எப்படி நடந்திருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள், குறிப்பாக மின்சாரத் துறை அமைச்சரவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்த போது இன்றையதினம் ஆளும் கட்சியில் இருக்கும் பல உறுப்பினர்கள், அமைச்சரவையில் இருக்கும் சிலரும்கூட, அன்றையதினம் முன்னேற்றக் கழகத்தின் மீது புழுதி வாரித் தூற்றியபோது, எதிர்க் கட்சிகள் புழுதி வாரித் தூற்றிய நேரத்தில், சொல்லிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை, ஆணித்தரமான விவாதத்தால் முறியடித்திருக்கிறார்கள். இப்போதைய ஆளும் கட்சிக்காரர்கள் வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புழுதி வாரித் தூற்றியிருக்க முடியும், நம்பப்படுகிறது, பேசப்படுகிறது என்று சொல்லியிருக்க முடியும். ஆனால் முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், நல்லதொரு எதிர்க் கட்சியாக இருந்து, ஆளும் கட்சிக்கு ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறோமென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின் வாரியம் எந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், தமிழ் நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின் மொத்த நிறுவுத் திறன் 2,509 மெகாவாட் என்றும், 1977-78 ஆம் ஆண்டைக் காட்டிலும் 85 மெகாவாட் கூடுதலாக இருக்குமென்றும் அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆண்டாண்டுதோறும் இந்தத் துறை வளர்ந்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகக் காணப்படுகிறது. அதைப் போலவே 1978 ஆம் ஆண்டு நவம்பரில் மின்சார உச்சத் தேவை 1,779 மெகாவாட் என்று சொல்லியிருப்பதிலிருந்து நம்முடைய நாட்டில் மின்சாரத்தின் தேவை இன்றையதினம் பட்டிதொட்டிகளிலிருந்து பட்டினக்கரைவரையில் வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். மேலும் தங்கள் தேவைகளை உணர்ந்து, மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய ஆர்வமும், தொழில்களை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வமும் இன்றைக்கு அதிகமாக வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். எனவே கிராமப் பகுதிகளிலே விவசாய உற்பத்தியிலே அதிக கவனத்தைச் செலுத்த வேண்டுமென்ற ஆர்வம் நாட்டு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு மின்சாரம்தான் அடிப்படைக் காரணம் என்பதை அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்கள். அந்த முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை, 1978, மார்ச் 31 ஆம் நாள் நிலவரப்படி 34.09

இலட்சமாகும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, 1979 மார்ச் 31 ஆம் தேதிவரையில், அந்த எண்ணிக்கை 28.35 லட்சமாக இருந்தது என்று பார்க்கும்போது, 34.09 லட்சமென்பது கணிசமான வளர்ச்சிதான் என்றாலும், கழக ஆட்சிக் காலத்திலேயே இந்தத் துறை வேகமாக வளர்ச்சி பெற்றிருந்தது என்ற விவரத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மைப் பணிகளுக்காக, இன்றையதினம் 8.6 லட்சம் பேர்களுக்கு விசை ஏற்றங்களுக்காக மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்தக் காலம்வரையில், 7.40 லட்சம் மின்சாரப் பம்ப் செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டதென்பதையும் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலே, தமிழ் நாட்டில் தான், விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் அதிகமான மின் இணைப்புகள் விசையேற்றங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஆண்டுதோறும் 20,000 பம்ப் செட்டுகள், 25,000 பம்ப்செட்டுகளுக்கு இணைப்புகள் கொடுக்க வேண்டுமென்று இருந்த திட்டத்தை, பேரறிஞர் அண்ணா அவர்கள் மாற்றி, 40,000 பம்ப்செட்டுகளுக்கு ஆண்டுதோறும் இணைப்பு கொடுக்கப்பட்டது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற நாடு என்பதால், விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டுமென்பதற்காக, எவ்வளவு தொகை இதனால் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று சொல்லி, ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது 40,000 பம்ப்செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தார்கள். தொடர்ந்து கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி, அந்த எண்ணிக்கையை 63,000 என்று உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் சட்டமன்றத்தில் பேசுகின்ற நேரத்தில், இன்னும் 2½ லட்சத்திற்கும் அதிகமான பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பங்கள் காத்திருக்கின்றன என்று சொன்னார்கள். பொதுவாக, இன்றையதினம், நாட்டிலுள்ள விவசாயிகளைப் பொறுத்தவரையில், மின்சாரத் தேவை அதிகமாகியிருக்கிறதென்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். இந்த நிலையில், கழக ஆட்சி எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து, இந்த அரசாங்கமும் ஆண்டாண்டுதோறும் மின் இணைப்பு கொடுத்த விசையேற்றங்களின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறதென்று சொன்னாலும், இந்த ஆண்டு நம்முடைய அமைச்சரவர்கள் புதிய முறையை அறிவித்திருக்கிறார்கள். எந்தத் தேதியில் மின்சாரம் தேவை என்று விண்ணப்பிக்கிறார்களோ,

அதை அடிப்படையாக வைத்து, அந்த சீனியாரிட்டியை வைத்து, மின்சார இணைப்புகள் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இது, உண்மையிலேயே வரவேற்கக்கூடிய கருத்துதான். கீழ் மட்டத்தில் தவறு செய்கிறார்கள், வேண்டியவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளைத் தவிர்க்கக்கூடிய வகையில், நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்த இலாக்காவில் அனுபவப்பட்டவர்கள் என்பதால், இந்த முறையைப் புகுத்தி இருக்கக்கூடுமென்று நினைக்கிறேன். ஆனால் இது குறித்து என்னுடைய கருத்து ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட முறையைப் புதிதாக மின்சாரம் தருகிற கிராமங்களுக்கு அல்லது பகுதிகளுக்கு வேண்டுமானால் பின்பற்றலாம், ஏற்கனவே மின்சார வசதி பெற்ற கிராமங்களுக்கு, அதுவும் ப்ரையாரிட்டி போட்டு, 10 அல்லது 15 மின்சார இணைப்புகள் கொடுக்க வேண்டுமென்றால், அதில் சீனியாரிட்டி என்ற முறையை விட்டுக் கொடுத்து, அப்படிப்பட்ட கிராமங்களுக்கு தேவையான மின்சாரத்தை உடனடியாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக வட. ஆர்காடு மாவ-

(நண்பகல் 12.00)

டத்தில் இன்றையதினம் அப்படிப்பட்ட நிலை இல்லை. ஏற்கனவே நூற்றுக்கு நூறு என்று சொல்லக்கூடிய அளவுக்கு கிராமங்கள் அங்கு மின்சாரத்தைப் பெற்றிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே கிராமத்தில் ஒரு 100 பேர் அல்லது 150 பேர் மின் இணைப்பு பெற்றிருந்தாலும் கூட, புதிதாக ஒரு 10 அல்லது 15 பேர் தான் கூடுதலாக மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம், விவசாயம் செய்யலாம் என்று எண்ணி விண்ணப்பம் போடுகின்றவர்களுக்குக்கூட இன்றையதினம் இந்த சீனியாரிட்டியை அடிப்படையாகக் காட்டி "நீங்கள் 1978 ஆம் ஆண்டில் தான் விண்ணப்பம் கொடுத்திருக்கிறீர்கள், அல்லது இந்தக் கால கட்டத்தில்தான் கொடுத்திருக்கிறீர்கள். இத்தனை ஆண்டுக் காலமாக விண்ணப்பங்கள் பெண்டிங்கில் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் கொடுத்து விட்டுத் தான் உங்களுடைய கிராமத்திற்குக் கொடுப்போம்" என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. மேலும் அசிஸ்டெண்ட் எஞ்சினியர்கள் அல்லது அசிஸ்டெண்ட் டிவிஷனல் எஞ்சினியர்கள் என்று சொல்லக் கூடிய அந்த அளவிலே கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அதைத் தவிர்த்து எங்கெங்கெல்லாம் மின்சாரத்தைக் கொடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் புதிய இணைப்புகளைக் கொடுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்

களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைப் போலவே இன்றையதினம் தமிழகம் எங்கும் இருக்கின்ற கிராமங்களை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் இந்த ஆண்டுவரையில் 64,198 கிராமங்களுக்கு மின்சார இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். கழக ஆட்சியில் கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில் 61,217 கிராமங்கள் மின்சார வசதியைப் பெற்றன.

அதைப்போலவே அரிசனங்கள் காலனியைப் பொறுத்தவரை, 24,526 அரிசன காலனிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தைப் பார்த்தாலும், கலைஞர் ஆட்சியில் 24,004 அரிசன காலனிகளுக்கு மின்சார இணைப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன என்பதை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கூட அதை மறுக்க மாட்டார்கள். தமிழகம் ஒளிமயமாக ஆக வேண்டுமென்று எண்ணிய நம்முடைய அரசியல் தலைவர்களுடைய எண்ணங்களுக்கொப்ப கலைஞர் ஆட்சிக் காலத்திலே தமிழ் நாட்டிலே மின்சாரம் இல்லாத கிராமங்கள் இருக்கக் கூடாது என்ற ஒரு முனைப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். அதற்காக எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை, ஆனால் ஒரு கால கட்டத்திற்குள்ளாக அத்தனை கிராமங்களுக்கும் மின்சார வசதியைச் செய்து தர வேண்டுமென்று எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இன்றைய தினம் இந்தப் புள்ளிவிவரங்களை பெருமிதத்தோடு இங்கே குறிப்பிட்டு மகிழ்ச்சியடையத் தக்க அளவுக்கு இந்தத் துறை வளர்ந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சில நேரங்களில், மன்றங்களில் அல்லது, எப்போதுமே ஆளும் கட்சி எப்படி அவர்களுடைய சாதனைகளைச் சொல்கிறார்களோ அதுபோல சில நேரங்களில் எதிர்க்கட்சியைக் குறை சொல்வதில் தவறு இல்லை. அதைப் போலவேதான் எதிர்க் கட்சிகளும் சில நேரங்களில் ஆளும் கட்சியைக் குறை சொல்வது என்பது சம்பிரதாயமாக நாட்டிலே ஆகி விட்டிருக்கக் கூடும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே திட்டங்களே போடாதது போலவும் அதிலே அக்கறை காட்டாதது போலவும் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் உண்மையில் கழக ஆட்சியில் எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, பல ஆண்டுக் காலமாக வற்புறுத்தப் பட்டு வந்த திட்டங்கள் இன்றைக்கு அனுமதி பெற்று திட்ட வேலைகள் நடந்து வருகின்ற நிலைமைகளை நாம் பார்க்கின்றோம்.

தூத்துக்குடி அனல் மின் திட்டமாக இருந்தாலும் சரி, சேர்வலாறு நீர்மின் திட்டமாக இருந்தாலும் சரி, கீழ்மேட்டூர் மின் திட்டமாக இருந்தாலும் சரி, சென்னை அனு மின் திட்டமாக இருந்தாலும் சரி இந்தத் திட்டங்களையெல்லாம் கழக ஆட்சியிலே நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று இன்றையதினம் வேலைகள் நடந்து வருகின்றன. கழக ஆட்சியிலே எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்துதான் இந்த ஆட்சியிலும் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கனவே ஒரு எஞ்சினியராக இருந்த காரணத்தாலே, இன்னும் இந்தத் துறையிலே மின்சார உற்பத்திக்கு என்னென்ன திட்டங்களைத் திட்டலாம் என்று எண்ணிப் பார்த்து, பல புதிய திட்டங்களை மத்திய அரசுக்கு இன்றையதினம் அனுமதி பெறுவதற்காக அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதிலே பல திட்டங்கள் 1984-85 ஆம் ஆண்டிலே தான் நிறைவேறும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற அறிக்கையிலே 33, 34-வது பக்கங்களிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அதிலே குறிப்பாக மேட்டூர் அனல் மின் திட்டம் 147.28 கோடி கொண்ட திட்ட அறிக்கை ஒன்று மத்திய மின் ஆணைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர்களுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே பார்சன் பள்ளத்தாக்குத் திட்டம், மேல் தாமிரபரணித் திட்டம், மேல் அமராவதி திட்டம், பரளியாறு திட்டம், சண்முகாநதித் திட்டம் ஆகிய திட்டங்கள் எல்லாம் இன்றையதினம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அவைகள் மத்திய அரசினுடைய மத்திய மின் ஆணைக் கழகத்தினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக காத்துக்கொண்டிருக்கின்றன. நாம் அவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாகப் பேசி காரியங்களைச் சாதிப்பதில் வல்லமை படைத்தவர்கள். மத்திய மின் ஆணைக் கழகத்திடம் நம்முடைய அமைச்சரவர்கள் நேராகச் சென்று இந்தத் திட்டங்களுக்கு கொஞ்சம் வேகமாக ஒப்புதல் பெற்றுத் தர வேண்டும். விரைவில் அதைத் தர வேண்டுமென்று நேரில் சென்று வற்புறுத்துவார்களேயானால் விரைவில் கிடைக்கும். அப்படி கிடைத்தால் இன்றையதினம் நாம் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக கேரளத்திற்கும், ஆந்திராவிற்கும், கருநாடக மாநிலத்திற்கும் படையெடுக்கின்ற நிலையைத் தவிர்க்க முடியும். அப்படி அந்த மாநிலங்

களுக்கு படையெடுப்பதற்கு பதிலாக ஒரே தடவையாக டெல்லிக்குப் படையெடுத்து அந்தத் திட்டங்களை விரைவு படுத்துவதன் மூலம் இன்னும் 5 அல்லது 6 ஆண்டு காலத்திற்குள்ளாக பற்றாக்குறையைப் போக்கி விடுவோம் என்பதற்கு மாறாக இன்னும் 2 அல்லது 3 ஆண்டு காலத்திற்குள்ளாகவே தமிழகம் மின்சாரத் துறையிலே தன்னிறைவு பெறக்கூடிய ஒரு வாய்ப்பை, சூழ்நிலையை நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் உருவாக்கக்கூடும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் துறை வளர்வதற்கு இப்படி பல திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்தில் மின்சாரத் திட்டங்களுக்காக இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏறக்குறைய 1,095 கோடி ரூபாயை ஒதுக்கம் செய்யப் போவதாகவும் அதிலே மின் உற்பத்திக்கு மட்டும் 708 கோடி ரூபாய் என்றும், மின்சாரத்தைக் கொண்டு செல்லுகின்ற தலைப்பின்கீழ் 125 கோடி ரூபாய் செலவைக்குத் திட்டம் என்றும், ஏனைய செலவுகளுக்காக 37 கோடி ரூபாய் செலவாகும் என்றும் ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 1979-80 ஆம் ஆண்டுக்கு 152 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு அதிலே உற்பத்திக்காக 86 கோடி ரூபாய் இங்கே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் 1979-80 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற இந்தப் புள்ளி விவரங்களிலே 30-வது பக்கத்தில் தூத்துக்குடி அனல் மின் திட்டம், திருநெல்வேலி 1 ஆம் நிலை இவற்றுக்காக மட்டும் திட்ட மதிப்பீடு 152.3 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே லோன் பள்ளத்தாக்கு நிலகிரி நீர்மின் திட்டத்திற்கு 1.49 கோடி ரூபாயை நிரைத்திருப்பி விடுவதற்காக ஒதுக்கி திட்டம் தீட்டியிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே ஒரு பக்கத்திலே 152 கோடி ரூபாய் என்று சொல்லுகிறார்கள். இன்னொரு பக்கத்திலே தோராயமாக 154 கோடி ரூபாய் என்கிற அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய அமைச்சரவர்கள் அந்த சந்தேகத்தை விளக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

எப்படி இருந்தாலும் இந்தத் துறைக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை நாம் பார்க்கின்ற நேரத்தில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் கூட வருத்தப்பட்டுக் கொண்டார். இது துண்டு விழக்கூடிய நிதி நிலை அறிக்கையாக இருக்கிறது. அதற்கான காரணங்களை எடுத்துப் பார்க்கின்ற நேரத்தில் அவர்களுக்குத் தெரிந்த

சில காரணங்களையும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதிலே குறிப்பாக 1979-80 ஆம் ஆண்டில் இந்த வாரியத்தினுடைய வருவாய் 254.38 கோடி ரூபாய் என்றும் 230.61 கோடி ரூபாய் செலவு என்றும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், 23.77 கோடி ரூபாய் இலாபம் காட்டுவதைப்போல் பட்டவில் இருக்கிறது. ஆனால் இந்த இலாகா அரசாங்கத்திடம் வாங்கிய கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் தேய்மானங்களுக்கு ஒதுக்க வேண்டிய நிதி இவற்றை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் 48.66 கோடி ரூபாய் துண்டு விழும். ஆனால் உண்மையில் துண்டு விழுகிறதா என்று **கேட்டால் இல்லை.**

தேய்மானம் என்றால் அதற்காக தொகையை ஒதுக்குகிறோமே தவிர, அக்கவுண்ட் ரிஸ்டத்தில் வேண்டுமானால் அந்த நிதியை ஒதுக்குகின்றோமே தவிர, தேய்மானத்திற்காக அந்த நிதியை நாம் பயன்படுத்தப் போவதில்லை. 48.66 கோடி ரூபாய் என்பது நடப்பு ஆண்டிலே நமக்குத் துண்டு விழுவதாக இல்லாவிட்டாலும், செலுத்த வேண்டிய வட்டியை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், நமக்குத் துண்டு விழுகிறது என்கின்ற ஒரு கணக்கை இங்கே சொல்லி ஒரு கருத்தையும் கூடவே சொன்னார்கள். இது மக்களுக்காகச் சேவை செய்கின்ற ஒரு இலாகாவாக இருக்கின்ற காரணத்தால், அரசாங்கம் கொடுக்கின்ற முதலுக்கு வட்டிக்கடைக் காரர்களைப் போல் வட்டி விகிதங்களை அதிகமாக்கி வட்டி வாங்க வேண்டுமா என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 12-10)

நான் அப்படிச் சொல்லத் தயாராக இல்லை. ஏனென்றால் அரசாங்கமே **கூட** மத்திய அரசிடம் கேட்டு வாங்கக்கூடும். ஆனால் வட்டி விகிதங்களைப் பொறுத்தவரையில், நாட்டிலே தொழில் வளர்வதற்காக மத்திய அரசும் சில குறிப்பிட்ட இனங்களுக்கு 4 சதவிகிதம் என்று வட்டி வசூலிக்கிறார்கள். அதைப்போல மின்சாரத்துறைக்குக் கொடுக்கப்படுகின்ற கடன்களுக்கு குறைந்த வட்டிவிகிதங்கள் தான் வாங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி, இந்தத் துறைக்கு மாநில அரசு கொடுக்கின்ற கடன்களுக்கும் குறைந்த வட்டி வசூலிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1 மணிக்கு அவை முடிய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 45 நிமிட நேரம் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய விஷயங்

கள் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 12-45-க்கு தான் முடிப்பதானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிக்க 1-45 மணி ஆகி விடும். ஆகவே, தயவு செய்து சிக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : 12-30 மணிக்கு முடித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஒருவன் தான் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ½ மணி நேரத்திற்குள் முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இப்படிச் சொன்னால்தான் 12-30-க்காவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முடிப்பார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்த இலாக்காவில் அதிகமான அளவுக்கு இழப்பு ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1972-73-ல் நிலக்கரி ஒரு டன் 76 ரூபாயாக இருந்தது இப்போது 137 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எரியெண்ணெய் கிலோ-லிட்டர் 304 ரூபாயாக இருந்ததை 1,017 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். நெய்வேலி மின்சக்திக் கட்டண வீதம் 1972-73-ல் யூனிட் ஒன்றுக்கு 8.1 காசாக இருந்தது இன்றையதினம் 16.12 காசாக உயர்த்தப்பட்டிருப்பதும், அதைப் போலவே கேரளாவிலிருந்து வாங்கிய மின் சக்திக்கு கட்டணமாக 1 யூனிட்டுக்கு 6.25 காசு கொடுத்ததற்கு மாறாக 12.25 காசு கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நிலக்கரியினுடைய விலை ஒரு டன் 76 ரூபாய் என்று இருந்தது 137 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய மின் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்தான். அவர் தான் இந்தத் துறைக்கும் அங்கே அமைச்சராக இருக்கிறார். அவர்கள் தான் இன்றையதினம் நிலக்கரிச் சுரங்கங்களுக்கும் அமைச்சர் பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கிறார். நான் வேண்டுகோள் விடுப்பது நம்முடைய அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மத்திய அமைச்சர் அவர்களோடு கலந்து பேசவேண்டும். நிலக்கரியினுடைய விலை ஒரு டன்னுக்கு 76 ரூபாய் என்று 1972-73-லே இருந்ததை இன்றையதினம் 137 ஆக உயர்த்தி இருக்காவும்

அதிலே பல கட்டணங்கள் அடங்கியிருந்தாலும், போக்குவரத்துச் செலவுகள் உயர்ந்திருந்தாலும் கூட, மின்சார வாரியத்திற்கு நிலக்கரி கொடுக்கின்ற நேரத்தில் ஒரு கன்செஷன் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி மத்திய அரசோடு நமது அரசு பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எரியெண்ணெய் விலை ஒரே தடவையாக 350 சதவிகிதம் உயர்ந்திருக்கின்ற போது, எரியெண்ணெய் விலையைக் குறைப்பது குறித்தும், அதேநேரத்தில் நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சக்திக்கான கட்டணத்தை இன்றைய தினம் 100 சதவிகிதத்திற்கும் அதிகமாக உயர்த்தியிருப்பதைக் குறைப்பது குறித்தும், நம்முடைய பொருளாதார நிலையைச் சுட்டிக்காட்டி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பு கிடைக்கும்போது மத்திய அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றுநேற்றல்ல, பல ஆண்டுக் காலமாக கேரள அரசு நம் மாநிலத்திற்கு மின்சாரம் கொடுப்பதிலேயும், அவர்களிடமிருந்து நாம் மின்சாரம் பெறுவதிலேயும் பழக்கப்பட்டிருக்கிறோம். கேரளாவிலே அதிகமான அளவிலே நீர்வளம் இருக்கிறது. இந்தியாவிலே அதிகமான அளவிலே மின்சாரத்திற்குச் செலவு செய்யாத மாநிலம் கேரள மாநிலம். அவர்கள் 6.25 காசுகளுக்குக் கொடுத்ததை, இன்றையதினம் 100 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். அதையும் குறைக்க முடியுமா என்பது குறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாநிலத்தினுடைய அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு யூனிட் ஒன்றுக்கு 2 காசு என்று மத்திய அரசு ஆயத்தீர்வை போட்டு வசூலித்தது. அதுவே, ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய் வரும் என்று சொல்லப்பட்டது. அதுபற்றிய ஒரு சட்டமுன்வடிவு வந்தபோது எல்லாக் கட்சிக்காரர்களும் சொன்னார்கள். நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும், இது நம்முடைய மாநிலத்தைப் பெரிதும் பாதிக்கும் என்று சொன்னார்கள். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாகக் கடிதம் எழுதியிருப்பதாகக்கூட சொல்லப்பட்டது. கடிதம் எழுதியிருக்கிறார்கள். நல்லவேளையாக மத்திய அரசு அந்தப் பணத்தை மாநில அரசுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு 1978-79-ம் ஆண்டுக்கான கட்டணத்தைத் திருப்பிச் செலுத்தவில்லை. அந்த வருவாய் வரும் வாய்ப்பும் இருக்கிறது. மேலும், நம்முடைய மாநிலத்தினுடைய வருவாயும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. 15 கோடி ரூபாய் இன்னும் கூடுதலாக வருவாய் பெருகக் கூடிய

வாய்ப்பு இருக்கும் இந்தச் சூழ்நிலையில், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் புதிதாக சில வரிகளையும், மின்சாரக் கட்டணத்தில் மாறுதல் செய்தும் அறிவித்திருக்கிறார்கள். இப்படி ஒரு பக்கத்தில், மத்திய அரசு ஆயத்தீர்வையை மாநில அரசுகளுக்குத் திருப்பிக் கொடுப்பதன் மூலம் வருகின்ற பணத்தை வைத்துக்கொண்டு நம்முடைய மின்சாரத் துறை இன்னும் முன்னேற்றமான திட்டங்களை வகுத்து, விவசாயிகளுக்கும் சலுகை அளிக்க முடியுமா என்பதையும் சிந்திக்க வேண்டும். விவசாயிகள் அவர்களுக்கு உயர்த்திய மின்சாரக் கட்டணத்தை எதிர்த்து போராட்டம் நடத்தினார்கள். குறிப்பாக திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் இருக்கக்கூடிய சங்கம் கடந்த 1½ ஆண்டு காலம் தமிழகத்தில் ஒரு பூகம்பம் வெடிப்பதைப்போலவும், புயல் வீசுவதைப் போலவும் விவசாயிகளுடைய போராட்டத்தை உச்சகட்டத்திற்குக் கொண்டுபோய், நம்முடைய அரசாங்கம் அதைக் காலத்திலே அணுகியிருக்குமானால் அந்தப் போராட்டமே கூட வந்திருக்காது என்ற அளவிலே போராட்டம் நடத்தினார்கள். மற்ற துறையைச் சேர்ந்தவர்கள் திரு. நாராயணசாமி நாயுடுவினுடைய கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதில் காலம் தாழ்த்தினாலும் அவர்களுடைய பல கோரிக்கைகளுக்கு மின்சாரத் துறை செவி சாய்த்து ஏற்றுக்கொண்டு அறிவிப்புகள் செய்திருக்கிறது. குறிப்பாக இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாக மின்சாரக் கட்டணம் செலுத்தாத விவசாயிகள் இந்த மாதம் பில் கட்டினால், பழைய பாக்கியை எதிர்காலத்திலே கட்டலாம் என்ற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது. ஆனால் அப்படி சலுகைகளை அறிவித்திருக்கிற நேரத்தில், சிறு விவசாயிகளுக்கு 14 காசிலிருந்து 12 காசாகக் குறைத்திருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், சிறு விவசாயிகள் என்று போடப்பட்டிருப்பதில் எத்தனை பேர் உண்மையாகப் பயனடைகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். 8 லட்சம் பம்புசெட் இருப்பதிலே, 7 லட்சம் பம்புசெட் ஏதோ சிறு விவசாயிகள் வைத்திருப்பதைப் போலவும், மீதி பம்புசெட் வைத்திருப்பவர்கள் மைனாரிட்டியாக இருப்பதைப் போலவும் அதனால் பெரிய சலுகை விவசாயிகளுக்குச் செய்துவிட்டதைப்போலவும் காட்டுகிறார்கள். சிறு விவசாயிகள் என்பதற்கு கொடுக்கப்பட்டிருக்கிற டெஃபனிஷன் என்ன? சிறு விவசாயிகள், தாங்கள் சிறு விவசாயிகள்தான் என்பதை நிரூபிப்பதற்காகத் தரவேண்டிய அத்தாட்சிகளில் எவ்வளவு இன்னல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதைப் போக்கக்கூடிய வகையில் தெளிவாக 5 ஏக்கருக்குக் குறைவாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் சிறு விவசாயிகள், அவர்களுக்கு

இந்தச் சலுகைகள் உண்டு என்று அறிவிக்க வேண்டும். அதைப்போல 5 ஏக்கர்களுக்கு அதிகமாக வைத்திருப்பவர்களை வேண்டுமானால் மற்ற வகையிலே சேர்ப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அதுமட்டுமல்ல, பம்ப்செட் உபயோகப்படுத்துவதிலும் இடத்திற்கு இடம் வேறுபாடு இருக்கிறது. கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய விவசாயிகள் தண்ணீருக்கு 100 அடிக்குக் கீழே போக வேண்டும். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலே இருக்கின்ற விவசாயிகள் 50 அடிக்குக் கீழேயிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். சிறு விவசாயிகள் என்று சொன்னால், கிணறு எடுப்பதற்கு 1 லட்சம் ரூபாய் முதலீடு இட முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம், இந்தச் சலுகையை விஸ்தரிப்பதிலே சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்பதற்குப் பதிலாக, வேறு கண்ணோட்டம் செலுத்த முடியுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

மீட்டர் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து ரூபாய் என்று இருந்தது 4 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மின்சார இலாகாவாலே 20 ஆண்டுகளுக்கு முன்னாலே வாங்கிய மீட்டர்கள்தான் அவை. இன்றையதினம் சென்னைக்குப் பக்கத்திலே அம்பத்தூரிலே இருக்கக்கூடிய இந்தியா மீட்டர்ஸ்-லே இருக்கும் மீட்டர்களை வாங்குகிறோம். மீட்டரின் விலை 60 ரூபாய்க்கு அதிகமாக இருக்காது. இவ்வளவு மூலதனம் போட்டு வாங்கிய மீட்டருக்கு விவசாயிகளிடத்திலே மாதக்கட்டணமாக 4 ரூபாய் என்று வசூலித்தால், வசூலிக்கும் வட்டி விதத்தைப் பார்க்கும்போது, மார்வாடிக் கடையிலே இருக்கும் வட்டியோடு கூட ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு

(பிற்பகல் 12-20)

அதிகமாக இருக்கிறது. முன்பு 1 ரூபாய் என்றிருந்ததை 2 ரூபாயாக உயர்த்தினார்கள். இப்போது 4 ரூபாயாகி இருக்கிறது. எனவே மீட்டர் வாடகை நான்கு ரூபாய் என்பதைக் குறைக்க முடியுமா என்பதைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டும். அப்படிக் குறைக்க முடியவில்லையென்றால், இந்த மீட்டர்களை விவசாயிகளே வாங்கிப் பொருத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான ரூபாயை முதலீடாகப் போட்டு பம்புசெட்டு வாங்கிக் கொள்ளும் விவசாயிகள் தங்களுடைய செலவில் ஒரு மீட்டரையும் வாங்கி வைத்துக்கொள்ளத் தயாராக இருப்பார்கள். இதை நான் சொல்லுவதற்குக் காரணம், மழைக் காலங்களில் வடஆற்காடு மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் இருக்கிற விவசாயிகள் மினிமம் கரண்டைக்கூட உபயோகிப்

பதில்லை. அப்படிப்பட்ட நேரத்தில் அவர்களுக்கு மீட்டர் வாடகை ரூ. 4 அல்லது 5 என்று போடுவது நியாயம்தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகளின் நிலைமையைப்பற்றி இங்கே எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பொறுப்பை மீண்டும் மின்சார வாரியத்திடமே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில், நமது மாநிலத்தில் நம் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் மின்சார வாரியமே பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டும். அதன் மூலம் நமக்குத் தேவையான டியூப் லைட் மற்றும் ஆர்டினரி லைட்களை உற்பத்தி செய்ய வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம் இதன் மூலம் நல்ல தரமான பல்புகளை உற்பத்தி செய்ய முடியும். ஆகவே மின்சார வாரியமே கிராமங்களுக்கு விளக்குகளைப் போடக்கூடிய வாய்ப்பை உண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசாங்கம் ஒரு புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன். அதாவது கிராமப்புறங்களில் 200 சதுர அடிக்கு அதிகப்படாமல் மண் சுவரும் கீற்றுக் கூரையும் கொண்ட குடிசைகளுக்கு மாதம் ரூ. 2.50 மின் கட்டணத்தில் ஒரு விளக்கு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளபடியே இது நல்ல திட்டம். தமிழ்நாட்டில் லட்சக் கணக்கான வீடுகளில் வாழ்கிறவர்களுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். இவர்களுக்கெல்லாம் மாதத்திற்கு ரூ. 4 மீட்டர் வாடகை என்று போடுவதைவிட ஒரு விளக்கை மட்டும் எரிக்க அனுமதிப்பது எவ்வளவோ சிறந்ததாகும். அதோடு ரூ. 10 கட்ட வேண்டுமென்றும் அதில் சொல்லியிருக்கிறார்கள். இந்த 10 ரூபாயை வசூலிக்க வேண்டுமா என்பதையும் அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 10 ரூபாய் ஆண்டுதோறும் வசூலிக்கப்படுவதில்லை. மின் வாரியத்தின் சார்பில் ஒயரிங் செய்து கொடுத்து, மீட்டருக்குத் தேவையான டீக் வுட் போர்டு வைத்து, ஸ்விட்சு வைத்து, ஹோல்டர் வைத்து விளக்குப் போட்டுக் கொடுக்கிற காரணத்தால் ரூ. 10 வசூலிக்கப்படுகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்தச் சலுகையை 200 சதுர அடி கொண்ட ஓட்டு வீடுகளுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் ஓட்டு வீடுகளில் இருப்பவர்கள் எல்லாம் பணக்காரர்கள் அல்ல

அங்கே மண் சுவரை வைத்துக்கொண்டு மேலே மட்டும் ஓடு போட்டிருப்பார்கள். எனவே கீற்றுக் கூரை வீடு என்றில்லாமல் ஓட்டு வீடுகளுக்கும் இந்த ஒரு பல்பு போட்டுக் கொடுக்கும் சலுகையை விஸ்தரிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அல்லது ஒரு விளக்குப் போட்டுக் கொடுத்தால் போதும் என்று விண்ணப்பிக்கிற அனைவருக்கும் ஒரு சலுகையாக விஸ்தரிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மால்கோ பிரச்சினையைப்பற்றி பலமுறை பேசியாகி விட்டது. என்றாலும் அவர்களிடமிருந்து மின்சார வாரியத்திற்குப் பணம் வந்த பாடில்லை என்று இங்கே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று நமது அட்வகேட்-ஜெனரல் அவர்கள் இந்த வழக்கில் இருக்கிற 'ஸ்டே'-யை 'வெகேட்' செய்ய முடியவில்லையா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். வேறு எந்தெந்த கேஸ்களுக்கோ போய் அப்பியர் ஆகிற அட்வகேட்-ஜெனரல் இந்த வழக்குக்குப் போய் வழக்கை முடிக்க முடியவில்லை என்றால், ஆச்சர்யமாக இருக்கிறது. இங்கே பேசும்போது, இந்த ஆட்சியாளர்கள் மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்துவோம் என்று பேசுகிறார்கள். ஆனால் இவர்கள் ஆட்சியில் இருக்கிற அட்வகேட்-ஜெனரல் பாண்டிச்சேரியில் மதுக்கடைகளை மூடக் கூடாது, அங்கே மதுக்கடைகள் வேண்டுமென்று நீதிமன்றத்திலே போய் வாதாடுகிறார். அவருக்கு அதற்கெல்லாம் நேரம் இருக்கிறதே தவிர, மால்கோ கம்பெனியார் போட்ட வழக்கில் 'ஸ்டே'-யை 'வெகேட்' செய்ய நேரமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல நிறுவனங்கள் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தாமல் இருக்கின்றன. அவர்களிடம் வசூலிக்க வேண்டிய பணத்தை வசூலிப்பதற்கு மின் வாரியம் விரைவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வழக்குகளில் உள்ள ஸ்டேக்களை வெகேட் செய்யும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியம் தொழிலாளர்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது என்று சொன்னாலும், இன்னும் சிலவற்றை மின்வாரியம் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்ப நலத்திட்டத்தின் கீழ் மின்வாரிய ஊழியர்கள் தங்களின் பணிக் காலத்தில் இறந்தால், 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று கழக ஆட்சியின் போது அறிவிக்கப்பட்டது. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ் துறை மான்யத்தில் பேசும்போது, 'வீர மரணம் அடைகிற காவல்

துறையைச் சார்ந்தவர்களுக்கு அதிகமாக ரூ. 10,000 தரப்படும்' என்று அறிவித்திருக்கிறார்கள். அதைப் போலவே, மின்வாரியத்தில் பணியாற்றும் எஞ்சினியர்கள் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் தங்களுடைய பணிக் காலத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது, எலெக்ட்ரிகல் ஃபால்ட் அல்லது ஷாக் போன்ற காரணங்களால் உயிரிழக்க நேரிட்டால், அவர்களுக்கும் போலீஸ் துறையில் இருப்பவர்களுக்கு அளிக்க இருப்பதைப்போல் கூடுதலாக ரூ. 10,000 அளிக்கப்படும் என்று அறிவிக்க வேண்டுகிறேன். மற்றும் மின்வாரிய ஊழியர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பல சலுகைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். அவைகளை நான் திரும்பத் திரும்பக் குறிப்பிட விரும்பவில்லை. இருந்தாலும். ஒருசிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மற்ற துறையில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு அளிப்பதைப்போல், மின்வாரிய ஊழியர்களின் பள்ளிப் பிள்ளைகள் அல்லது கல்லூரியில் படிக்கும் பிள்ளைகளுக்கு படிப்புக் கடன் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஒரு விஷயம் தெரியும். தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனமும், மாநிலக் கணக்காயர் சம்மேளனமும் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கீகாரம் பெற்றவை. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே அவையிரண்டும் இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே ஒரு முறையான தேர்தல் வைத்து முறையாக அவைகளுக்கு அங்கீகாரம் தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னாலே பெற்ற அங்கீகாரத்தை வைத்துக்கொண்டு எப்படியெல்லாம் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்பதைக் குறித்து நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்வாரிய அதிகாரிகளைத் தனியாக அணுகி அவர்கள் எந்த அளவுக்கு நிருவாகத்தில் தலையிடுகிறார்கள் என்று கேட்டாலே போதும். அவர் சரியான முறையில் அதைத் தெரிந்துகொள்ளமுடியும். அப்படித் தெரிந்துகொள்வது அவருக்கும் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பலவற்றைச் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பினாலும், நேரமில்லாத காரணத்தால் சிலவற்றை மட்டுமே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். யார்யாரோ இருக்கிற

கோபத்தின் காரணமாக அதைச் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தற்போது தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக உயர்த்தியிருக்கிறது. இதையே மின்சார வாரியத்திற்கும் நீட்டிக்கப்போகிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதற்கான செயற்குறிப்புகள் மிக வேக வேகமாகத் தயாராவதாக நான் கேள்விப்படுகிறேன். இங்கே நான் ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஆதாரம் தேவைப்படாது என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது இன்றைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அப்போது எஸ்டிமேட் கமிட்டி சேர்மன் ஆக இருந்தார்கள். அந்த நிலையில் அவர் மின்வாரிய சேர்மெனுக்கு எழுதிய கடிதத்தை நான் இங்கே படித்துக் காட்டவிரும்பினாலும், அது அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்த ஒன்றாக இருக்கிற காரணத்தால், அதைப் படிக்க விரும்பவில்லை. அதன் விவரத்தை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கடிதத்தில் ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அப்போது வலியுறுத்தியிருக்கிறார்கள். அதாவது 58 வயதிலிருந்து ஓய்வு பெறுவதை 55 வயதாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார். இப்போது அரசாங்க ஊழியர்களுக்கு 58 வயது நிர்ணயித்திருப்பதைப்போல் மின்வாரிய ஊழியர்களுக்கும் நிர்ணயிப்பது என்பது எற்கெனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிற நிலையில் இருக்கிறது, இங்கே அதை இன்னும் தீவிரமாக்கும். வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை இன்னும் பெரிதாக வளரத்தான் இது உதவும் என்ற காரணத்தால், மின் வாரியத்தைப் பொறுத்தவரை, ஓய்வு வயது 55 என்பதை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களே முன்னாலே எஞ்சினியராக இருந்தவர்கள். தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் எஞ்சினியர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே முன்னாலே வாதாடியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தமிழக மின்வாரியத்தில் இருக்கும் எஞ்சினியர்களின் சம்பளம், அண்டை மாநிலங்களில் பணியாற்றும் எஞ்சினியர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மிகக் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, அவர்களின் சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்து எந்தக் கருத்தைச் சொல்லி எஞ்சினியர்களுக்காக வாதாடினாரோ அவரே அமைச்சராக இருக்கும்போது, இங்கே மின்வாரியத்தில் பணியாற்றும் எஞ்சினியர்களின் சம்பளம் எப்படி இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் மின்வாரியத்தில் பணியாற்றும் எஞ்சினியரின் அடிப்படைச் சம்பளம் 370 ரூபாய். கேரளத்தில் ரூ. 600. கருநாடகத்தில் ரு. 670. ஆந்திரத்தில் 550. இந்த நிலையில் நான் தெரிவித்துகொள்ள விரும்புவதெல்லாம் வரும் டிசம்பர் 1 ஆம் தேதி சம்பளக் குழு விவாதிக்கிற நேரத்தில் குறைந்தபட்சம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாலே வாதிட்டதைப்போல் அண்டை மாநிலங்களில் பணியாற்றும் மின்வாரிய எஞ்சினியர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதமாவது நமது தமிழக மின்வாரிய எஞ்சினியர்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய முன்வருவாரா என்பதுதான்.

மின்வாரியத்தைப் பொறுத்தவரையில், இதற்கு முன்பெல்லாம் 3, 4 ஆண்டுக் காலத்தில் எஞ்சினியர்களுக்குப் பதவி உயர்வு கிடைத்து வந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ இப்போது ஒரு அசிஸ்டென்ட் எஞ்சினியர் அசிஸ்டென்ட் டிவிஷனல் எஞ்சினியராகப் பதவி உயர்வு பெற 8, 9 ஆண்டுக் காலத்திற்கு மேலாகிறது. பணித் தேக்கம் போன்ற பல காரணங்கள் இருக்கலாம். எது காரணமாக இருந்தாலும் அவர்களுக்கு விரைவில் பதவி உயர்வு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றாலும், குறைந்தபட்சம் ஒரு டைம்-ஸ்கேல் போட்டுக் கொடுக்கவாவது மின்வாரியம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, மின்வாரியத்தின் பொறியாளர்கள் மேலை நாடுகளுக்குச் செல்ல வேண்டும், அங்கே சென்று தங்கள் பொறியியல் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும், புதிய பயிற்சிகளைப் பெற வேண்டும், புதிய திட்டங்களைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டால் அவர்களுக்கு விடுமுறையும் அனுமதியும் வழங்கப்பட்டன. ஆனால் இன்றையதினம் என்ன காரணத்தாலோ அப்படிப்பட்ட பல விண்ணப்பங்கள் வாரியத்தில் தேங்கிக் கிடக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. கேரளத்தில் உள்ளதைப்போல் ஐந்தாண்டுக் காலத்திற்கு மேல் படிப்பிற்காக லீவு அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தி. மு. க. ஆட்சியின்போது மின் வாரியத்தில் பணியாற்றக் கூடிய எஞ்சினியர்களுக்கு எம். எஸ். சி. (எஞ்சினியரிங்) போன்ற மேல்பட்டப் படிப்பிற்கு அனுப்பக்கூடிய வாய்ப்பிருந்தது. அதைப் போலவே எம். பி. ஏ. படிப்பிற்கும் அனுப்பப்பட்டார்கள். இன்றையதினம் அத்தகைய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி முன்பு இருந்துவந்த வாய்ப்பினை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

கடைசியாக, இந்த மின் வாரியத்தில் பொதுவான ஒரு கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதாவது மின்வாரியத்தில் ஏற்படுகிற காலியிடங்களுக்கு அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு முதலிடம் தந்து அந்தப் பதவிகளுக்கு கீழே இருப்பவர்களைப் போட வேண்டும். ஆனால் என்ன காரணத்தாலோ புதுமையான ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அந்தப் புரோசிடிங்சைப் படிக்க விரும்புகிறேன்.

"Board's Proceedings No. 843, dated 31st May 1978 ;

S. Venkatesan, retired Public Relations Officer, Rural Development and Local Administration Department, Government of Tamil Nadu is appointed as Publicity Officer in the Tamil Nadu Electricity Board. . . ."

(பிற்பகல் 12-30)

அங்கேயில்லாத பப்ளிசிட்டி ஆபிசர்களா? அதற்குத் தகுந்த திறமை படைத்தவர்களே இல்லையா? அங்கே அனுபவம் வாய்ந்தவர்கள் நிறைய இருக்கும்போது, ஓய்வு பெற்ற ஒருவரை அங்கே போடுவது அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களுடைய உற்சாகத்தைக் குறைக்கும் ஆகவே அப்படிப்பட்ட முறைகளை எதிர்காலத்தில் பின்பற்றக்கூடாது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே சில புதிய கட்டண விகிதங்களை அறிவித்திருக்கிறார்கள். அதனால் 16 கோடி ரூபாய் வருமானம் அதிகமாகுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அது எப்படியென்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக நம்முடைய நாட்டிலே தொழில்கள் வளர்வதில்லையென்ற குறைபாடு இருக்கிறது. இந்த அரசாங்கம் தொழில் அதிபர்களை ஊக்குவிப்பதில்லையென்று காரணம் சொல்லுகிறார்கள். நான் இப்படிச் சொல்லுவதால், முதலாளிகளுக்காக நான் வாதாடுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் கருதமாட்டார்கள் என்று நம்புகிறேன். இன்றைய தினம் காஸ்டிக் சோடா, கால்சியம் கார்பைட் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில்களுக்கெல்லாம் முன்பு 11 முதல் 14 காசு வரை இருந்த மின்சாரக் கட்டணத்தை 21.5 காசாக உயர்த்தியிருக்கிறார்கள். அலுமினியத்திற்கும் கட்டணத்தை உயர்த்துவதை நான் ஆட்சேபிக்கவில்லை.

உர உற்பத்தித் தொழிலுக்கு 19 முதல் 21 காசு வரை இருந்த மின்சாரக் கட்டணம் 23½ காசாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உரம் தயாரிக்கிற ஆலைகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதால் தயாரிப்பாளர்கள் உர விலையை உயர்த்தப் போகிறார்கள். இதன் விளைவாகப் பாதிக்கப்படப்

போவது விவசாயிகள்தான். மின்சாரக் கட்டணத்தை மாற்றியமைக்கிறபோது, இப்படிப்பட்ட விவசாயிகள் பாதிக்கப்படாமல், கட்டணத்தை உயர்த்துவதாக இருந்தால் நான் ஆட்சேபிக்கவில்லை. மின்சார வாரியத்திற்கு நிதி வேண்டுமென்பதை நான் உணருகிறேன். பெரும் பயனீட்டாளர்களுக்கு 30 காசிலிருந்து 35 காசாக உயர்த்தியிருக்கிறார்கள். பல்க் சப்ளை என்ற காரணத்தால் அவர்கள் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் செலவழித்துக் கருவிகளை வாங்கி மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற நேரத்தில் அவர்களுடைய தலையில் இப்படிப்பட்ட உயர்ந்த கட்டணங்களைச் சுமத்த வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பஞ்சாலைகள் இன்றைக்கு இலாபத்திலே இருக்கின்றன. ஆகவே இப்போது அவர்கள் கட்டிவிடுவார்கள். பஞ்சாலைகள் எப்போதும் இலாபத்தில் இயங்குவதில்லை. இந்த ஆண்டு பஞ்சாலைகளுக்கான மின்சாரக் கட்டணத்தை 5 காசு உயர்த்துவதன் மூலம் பஞ்சாலைத் தொழில்கள் பாதித்துவிடுமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. அதைப் போலவே ஏற்கெனவே சிமெண்ட் கிடைக்கவில்லையென்று மக்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மேலும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதால் சிமெண்டின் விலை மேலும் உயர்ந்துவிடுமோ என்ற அச்சம் தமிழ் நாட்டு மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பொருள்களினுடைய விலைகள் எல்லாம் ஏறாமல் பார்த்துக்கொள்ளுவோம் என்ற வாக்குறுதியோடு மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதாக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அரசின் செயல்களை வரவேற்கத் தயாராக இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, அன்றைக்கு எதிர்க் கட்சியாக இருந்த இன்றைய ஆளும் கட்சியினர் மின்சார வாரியத்தில் 5 சீப் என்ஜினியர்கள் இருப்பதைக் குறித்து புகார் செய்தார்கள். அதுவே ஒரு ஊழல் என்று கூட குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு 9 சீப் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். இது போதாது, இன்னும் உயர்த்த வேண்டுமென்று சொன்னாலும், ஒத்துக்கொள்ளுகிறோம். கடந்த 20 ஆண்டுக் காலத்திலே இந்த இலாக்கா பெற்றிருக்கிற வளர்ச்சியைப் பார்க்கிறபோது, தேவையான பதவிகளை நிரப்புவதில் தவறில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்போது குறைசொன்னார்களே என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இதை மேலும் உயர்த்துவதற்கு முயற்சிப்பதாகச் சொல்லிவிட்டேன். இந்த இலாக்கா இன்னும் சிறப்பாகச் செயல்பட [illegible] அமைச்சர் அவர்களும், இந்த இலாக்காவினுடைய

தலைமைப் பொறுப்பிலேயுள்ள பொறியாளர்களும் எப்போதும் பாடுபட்டதைப் போல இப்போதும் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் துறை மேன்மேலும் வளர்வதற்கு நான் கூறிய பல்வேறு ஆலோசனைகள் பயன்படுமென்ற முறையில் இந்தத் துறையை வாழ்த்தி விடைபெற்றுக் கொள்ளுகிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேலவையில் தமிழ்நாடு மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு நல்ல ஆலோசனைகளையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக எனது நன்றியறிதலை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இங்கே பல்வேறு பிரச்சினைகளை எடுத்துப் பேசினாலும், ஒரு சிலவற்றை மட்டும் தொகுத்து அவற்றிற்கு நான் பொதுவாக பதில் அளிக்க முன் வந்திருக்கிறேன். மற்ற பிரச்சினைகளுக்குப் பதில் அளிக்கவில்லையென்றால், அவற்றைப் புறக்கணிப்பதாய் மாண்புமிகு உறுப்பினர்கள் கருதிக்கொள்ளத் தேவையில்லை என்பதையும், அவைகளைப்பற்றி மின் வாரியம் தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "எதெற்கெடுத்தாலும் மேற்கு வங்கத்தைப் பாருங்கள், அதைப் பார்த்துப் பாடம் பெறுங்கள் என்று சொல்லுவார்கள், ஆனால் இதிலே அப்படிச் சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன்" என்று அவர்கள் ஆரம்பித்தார்கள். அப்படி என்னதான் மேற்கு வங்கத்திலே நடந்தது என்பதைப்பற்றி அறியலானேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னார். ஆகவே மேற்கு வங்கத்திலே என்ன நடந்தது என்று பார்த்தபோது, மேற்கு வங்க முதல்வரே கூட அங்கே மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார் என்று அறிந்தபோது, உண்மையிலேயே நான் அனுதாபப்பட்டேன். ஏனென்றால் ஒரு முதலமைச்சருக்கு இந்த நிலை வந்திருக்கக்கூடாது என்பதற்காக. இருந்தாலும் எனக்கு ஒரு மனநிறைவு, அந்த அளவுக்கு நம்முடைய நிலைமை மோசமாகாமல் பார்த்துக் கொண்டோமேயென்று. மேற்கு வங்கத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை, ஒரு மின் நிலையத்தைத் துவக்கி வைக்கிறபோது, மிக அழகாகக் குறிப்பிட்டார்கள். அவர்

பேசிய வாசகம் மிகவும் பொருத்தமானதென்ற காரணத்தால், அதைத் தங்களுடைய அனுமதியோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

" While speaking on the occasion of the foundation-stone laying ceremony of the Fitaghur Power Plant of the Calcutta Electric Supply Corporation, he said : 'There was nothing like management in the two State power agencies, the West Bengal State Electricity Board and the Durgapur Projects Limited."

அதாவது நிர்வாகம் என்பதே இல்லை என்று மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் அவர்களே வருத்தப்பட்டுக் கூறியிருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது, அப்படியென்ன அங்கே நடந்துள்ளது என்பதைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஒரு அழிவோ, தோல்வியோ ஏற்படுமானால், அதற்கான காரணம் என்னவென்பதை ஆராய்ந்து அதிலிருந்து நாம் பாடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்கு வங்கத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமை நமக்கு ஏற்படக்கூடாது என்று கருதுகிறபோது, அந்த நிலைமைக்குக் காரணம் என்னவென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதனாலே மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, "இந்தப் பிரச்சினையிலும் நாம் மேற்கு வங்கத்தைப் பார்க்கத்தான் வேண்டும். அதிலே ஏதேனும் பாடம் இருந்தால், அதையும் தெரிந்து கொள்ள வேண்டும்" என்பதுதான். இந்தப் பிரச்சினையைப்பற்றி ஒரு கட்டுரையிலே மிக அழகான வாசகம் வருகிறது:

" The adamantness of bureaucrats, political interference, rivalry among Labour Unions with different political affiliations and indiscipline among labour have all brought chaotic conditions resulting in a complete breakdown of power generation and distribution."

இந்த நான்கு வகைக் காரணங்கள். 1. பியுராகிரடிக் இன்டர்ஃபிரயன்ஸ், 2. அரசியல்வாதிகள், 3. அங்குள்ள பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சங்கங்கள், 4. கட்டுப்பாட்டின்மை இது எந்த அளவுக்குச் சென்றிருக்கிறதென்றால், அங்குள்ள தலைமைப் பொறியாளர்கள் சிலர் இராஜினாமா செய்கிற அளவுக்கு நிலைமைகள் வந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் நாம் கவனித்துக் கொண்டிருந்தால் தமிழக மின் வாரியத்திற்குப் பல நல்ல பலன்கள் கிடைக்கும். அந்த வகையிலே மேற்கு வங்கம் நிச்சயமாகப் பாடமாக அமையுமென்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். முதலாவதாக பணியாற்றுகிறவர்களைப்பற்றிப் பேசிவிடுவது சரியாக இருக்குமென்று கருதுகிறேன். அவர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும், மற்றும் பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு ஆலோசனைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. இந்த ஆண்டு ஊதிய ஒப்பந்தத்தைப் போடவிருக்கிறோம். ஆகவே, ஊதிய ஒப்பந்தம் போடுகிறபோது, இதுபற்றி நிச்சயமாக சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களோடு சேர்ந்து பேசி முடிவுகள் எடுக்கப்படும். மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள் இன்றுமொன்றைக் குறிப்பிட்டார்கள்.

திரு ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பள விகிதங்களைப்பற்றி உரிய சங்கங்களோடு பேசுவதாகச் சொன்னார்கள். நேற்றையதினம் கூட சட்டசபையிலே பேசியிருக்கிறார்கள். அதிலே மத்திய சங்கங்களோடு, ஐ.என்.டி.யு.சி. மற்ற சங்கங்களோடு பேசுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தக் காரணத்தினாலே திராவிட முன்னேற்றக் கழகப் பேரவையோடு இணைந்திருக்கின்ற தொழிற்சங்கங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை? துணைத் தலைவர் அவர்களே, அப்படிப் பேச்சு வார்த்தை நடத்தும்போது, பேரவையோடு இணைந்திருக்கின்ற சங்கங்களையும் அழைத்துப் பேசுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எப்படி இதைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. மத்திய சங்கங்களை வைத்துக்கொண்டு, அந்த மத்திய சங்கங்களோடு இணைந்த மின்வாரிய சங்கங்கள் என்கின்றபோது, தொழிலாளர் முன்னேற்ற சங்கமும் இடம் பெறும், அண்ணா தொழிற் சங்கம் இடம் பெறும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் தவறாகப் புரிந்துகொள்ளவில்லை. நேற்று அவர்கள் பேசியதாக 'தினமணி' பத்திரிகையிலே இன்று வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகையிலே பார்த்ததால், அந்தச் சந்தேகம் வருகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படிக் கேட்கிறபோது நான் அந்த முழு விவரத்தையும் சொல்கிறேன். மத்திய அமைப்பு சி.ஐ.டி.யு.-வைச் சேர்ந்த சங்கங்கள் 12, முன்னேற்றச் சங்கப் பேரவையோடு சேர்ந்தது 2, ஐ.என்.டி.யு.சி.-யோடு சேர்ந்தது

3, அண்ணா தொழிற் சங்கப் பேரவை 1, ஜனதா தொழிற் சங்கம் 1, ஆக மொத்தம் 19 அமைப்புகளோடு பேச்சு வார்த்தைகள் நடைபெறும். அது மட்டுமல்ல, ஓய்வு பெறுகிற வயதுபற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு நான் நேற்றையதினம் இதைப்பற்றிக் கேட்டேன். மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், என்ன முடிவு எடுப்பது என்பது பற்றிக் கேட்டேன். பொதுவாக பே கமிஷன் என்பது மின் வாரியத்திற்குச் செல்லாது. மின்வாரியத்தைப் பொறுத்தவரையில், ஊதியங்கள் தனியாகத்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. மின்வாரியம் இப்போது தனி அமைப்பு. அரசுப் பணியாளர்களுக்கு 55 வயதிலே ஓய்வு பெறுகின்ற நிலைமைகள் இருந்த காரணத்தினாலே, அவர்கள் வற்புறுத்தி 58 வயது என்று உயர்த்திப் பெற்றிருக்கிறார்கள். மின்வாரியத்தைப் பொறுத்த வரையிலே, எல்லாவற்றையும் கலந்து பேசி, ஆராய்ந்த பிறகு முடிவு எடுக்க வேண்டுமே தவிர, அவசரப்பட்டு 58 என்று முடிவு எடுப்பது இல்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின் உற்பத்தியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மின் உற்பத்தியைப் பொறுத்த வரையிலே, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு நம் உச்சத் தேவை சுமார் 2,000 மெகா வாட் ஆக இருக்கிறது. அதனாலேதான் பல கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறோம். கட்டுப்பாடுகளே இல்லாமல் நாம் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்றால், நிறுவனத்திறன் 3,200 மெகா வாட் தேவைப்படும். ஆனால், இன்று இருப்பது 2,500. ஆகவே 700, துல்லியமாக 691 மெகாவாட் இப்போதே பற்றாக்குறை உள்ளது. அதனாலே தான் இந்தச் சங்கடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, மின் உற்பத்தித் திட்டங்கள் போடப்பட்டதெல்லாம் கடந்த ஆட்சிக்காலத்திலே, ஆனால், அவற்றைப் பற்றிச் சொல்கின்றபோது, ஏதோ இந்த ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்களாகச் சில இடங்களில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று மிகவும் நாகரிகமாகக் குறிப்பிட்டார்கள். திட்டங்கள் போடப்பட்டது பற்றி நான் குறை சொல்லவில்லை. ஆனால் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டனவா என்பதுதான் முக்கியம். திட்டங்களுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்பதுதான் முக்கியம். ஆயிரம் திட்டங்கள் வேண்டுமானாலும் போடலாம். அந்தத் திட்டங்களையெல்லாம் நிதி ஒதுக்கி நிறைவேற்றினோமா என்பதைப் பார்ப்பது மிகமிக அவசியம்.

நான் இப்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1969 லிருந்து 1976 வரை, மின் உற்பத்திக்கான, ஜெனரேஷனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 113.72 கோடி. 1976-77 ஆண்டில், ஆளுநர் ஆட்சிக்காலத்தில் 44.33 கோடி ரூபாய். 1969-76 வரை 7 ஆண்டுகளில் ரூபாய் 113.72 கோடிதான் ஒதுக்கினார்கள். 1977-78-ல் ரூபாய் 56 கோடி. 1978-79-ல் ரூ. 68.16 கோடி. ரூபாய் 124 கோடி கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் அதைத்தான் குறிப்பிடுகிறேன். ஏழு ஆண்டுகளுக்கு 113.72 கோடி. இரண்டு ஆண்களில் ரூபாய் 124.06 கோடி. இந்த ஆண்டு 1979-80-ல் ரூபாய் 85.97 கோடி என்று ஒதுக்கியிருக்கிறோம். இதனுடைய விளைவு என்ன என்று எப்படிப் பார்க்கலாம் என்றால், உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

குந்தா நான்காவது திட்டம் ரூபாய் 1.98 கோடியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம். இந்தத் திட்டம் அனுப்பப்பட்டது 1965 ஆம் வருடத்தில். திட்டம் அங்கீகரிக்கப்பட்டது 1967 ஆம் வருடத்தில். வேலை தொடங்கப் பட்டது, 1973 ஆம் வருடத்தில். வேலை முடிந்தது, 1978 ஆம் வருடத்தில். இப்போது எவ்வளவு செலவாகியிருக்கிறது என்றால், ரூபாய் 11.64 கோடி. ரூபாய் 1.98 கோடியிலிருந்து ரூபாய் 11.64 கோடிக்கு வந்திருக்கிறது. செலவு அதிகமானது மட்டுமல்ல, கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன, இத்தகைய சாதாரண திட்டங்களை நிறைவேற்றக்கூட.

அதைப் போலவே, சுருளியாறு திட்டம். மே 1970-ல் திட்டம் போட்டு, 1973-ல் அங்கீகரிக்கப்பட்டு, 1975-ல் வேலை தொடங்கப்பட்டது. 1978-ல் முடிக்கப்பட்டது. ரூபாய் 6 கோடிக்குப் போடப்பட்ட திட்டம், ரூபாய் 25 கோடிக்கு வந்திருக்கிறது.

அதைப் போலவே சேர்வலாறு திட்டம். இப்படி திட்டங்களைப் போடுவது என்பது மட்டுமல்ல, திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கலாம், ஒதுக்குகிறோம் என்பதுதான் முக்கியம். அந்த வகையிலே பார்க்கிறோம். இந்த ஆண்டு களிலே மின் உற்பத்திக்கு நிறைய நிதி ஒதுக்குகிறோம். அந்த நிதியை ஒதுக்குவதன் மூலம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழி செய்கிறோம். குறிப்பாக கீழ்மேட்டூர் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு மத்திய மின் ஆணைக் குழு அனுமதி அளித்திருக்கிறது. திட்டக் குழு இன்னும் அனுமதி அளிக்கவில்லை. இருந்தாலும்கூட நாம் அதைத் தொடங்கிவிட் டோம். அதன் மூலம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழி செய்கிறோம்.

குறிப்பாக கீழ் மேட்டூர் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு மத்திய மின் ஆணைக் குழு அனுமதி அளித்திருக்கிறது. திட்டக் குழு இன்னும் அனுமதி அளிக்கவில்லை. இருந்தாலும்கூட நாம் அதைத் தொடங்கி விட்டோம். அனுமதி அளிப்பார்கள் என்ற நம்பிக்கையை வைத்துத்தான் தொடங்கி விட்டோம். அப்போதுதான் சீக்கிரம் திட்டங்களை நிறைவேற்று வதற்கும் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நமக்கு வாய்ப்பு ஏற்படும். அந்த வகையில், திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதில் இந்த அரசு கவனமாக இருக்கிறது என்று சொல்கிறோம். உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் எடுத்துச் சொல்வோமே தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் திருவாளர்கள் தாமஸ் அவர்களும், இரத்தின பாலகுருசாமி அவர்களும் சொன்னார்கள். கேரளாவிலே இருக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்தி நாம் இன்னும் பலன் பெறக்கூடாதா என்று எடுத்துச் சொன்னார்கள். சென்ற முறை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் நானும் கேரளாவிற்குச் சென்றிருந்தபோது, கேரள முதல்வரோடு இந்தப் பிரச்சினைபற்றிப் பேசியிருக்கிறோம். பாண்டியாறு, நெல்லித்துறை திட்டம் பற்றியும் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். நம்முடைய தமிழக அரசு சார்பில் இன்னொரு யோசனையும் கேரளாவிற்குச் சொல்லப்பட்டிருக்கிறது. கேரளாவிலே நல்ல நீர்மின் திட்டங்கள் இருக் கின்றன. ஆனால் அவர்களிடம் நிதி இல்லை. நாம் நம்முடைய சார்பிலே சொன்னது இந்தத் திட்டத்தை ஏற்க முன்வருவார்கள் என்றால், செலவு செய்வதற்கு நாங்கள் பணம் தரத் தயாராக இருக்கிறோம் என்று சொன் னேன். நீண்ட கால அடிப்படையிலே இவ்வளவு மின்சாரம் தருகிறோம் என்ற அளவுக்கு ஒத்துக்கொண்டால், கேரளாவிலே நீர் மின் உற்பத்தித் திட்டங்களைக்கூட நம்முடைய அரசின் மூலம் நாம் பணம் கொடுத்து நிறை வேற்றத் தயாராக இருக்கிறோம் என்ற கருத்தை கேரள முதலமைச்சரோடு பேசும்போது எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்து குறித்து கேரள முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய மந்திரிசபையைக் கலந்து கொண்டு அரசாங்கத்திலேயும் அதைப்பற்றி ஆராய்ந்து, தமிழக அரசோடு தொடர்பு கொள்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். எங்கேயோ இருக்கின்ற வெளிநாட்டுக்காரர்கள் நம் நாட்டிலே வந்து மூலதனம் போட்டு, அவர்கள் தொழில் நடத்தி சம்பாதிக்கின்றபோது, அண்டை

மாநிலத்தில் இருக்கின்ற செல்வத்தை இன்னொரு மாநிலமாகிய தமிழகம் பயன்படுத்துவது நியாயம் இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் ஒரு ஆண்டிலே தண்ணீர் இவ்வளவு வீணாகிறது என்றால், அந்தத் தண்ணீர் மூலமாக எப்போதுமே மின்சாரம் உற்பத்தியாவது இல்லை. இப்படி ஆண்டுதோறும் வீணாகின்ற தண்ணீரைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு கேரள அரசோடும் பேசி நம்முடைய கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களானால், நிச்சயமாக அது கேரளத்திற்கும் நன்மை, தமிழகத்திற்கும் நன்மை, இந்தியாவிற்கும் நன்மை. ஆகவே விரைவில் கேரள அரசு அதிலே உதவி செய்வார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே பேசுகின்றபோது, மின்சார இழப்பைப்பற்றிப் பேசினார்கள். மின் இழப்பு அதிகமாக இருக்கிறது. நிறைய திருடு போகிறது என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மின் வாரியம் அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது. ஓரளவுக்கு மின் இழப்பு மிகுதியாக இருந்தாலும், 20.21 என்று 1972-73-ல் இருந்து, 1973-74-ல் 21 சதம் என்று உயர்ந்து, 1974-75-ல் 21.45 என்று உயர்ந்து, இப்போது 18.59 சதம் என்று குறைந்து இருந்தாலும், இன்னும் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நம்புகிறோம். அதற்கு நிச்சயமாக நம்முடைய மின்வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்று கருதுகிறேன். ஒன்று நாம் போட்டிருக்கின்ற லைன்கள் சரியாக இல்லை. எல்லா இடத்திலேயும் அனுப்பப்படவேண்டிய மின்சாரத்திற்கு ஏற்க திட்டமிடப்படவில்லை, இரண்டாவது சரியாக மீட்டர்கள் கணக்கு எடுக்கப்படுவதில்லை. மூன்றாவது திருடுகள். ஆகவே இந்த மூன்று முனைகளிலே அதைச் சரிப்படுத்த மின் இழப்பைக் குறைக்கத் தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள். சில இடங்களில் 5 ஹார்ஸ் பவர் அல்லது 10 ஹார்ஸ் பவர் என்று வைத்துக் கொண்டிருப்பார்கள். இதன் விளைவாக குறைவான மின் அழுத்தம் ஏற்படுகிறது. நேம் பிளேட்டிலே மோட்டார் 10H.P. என்று இருக்கும். உண்மையில் மோட்டார் 15 ஹார்ஸ் பவராக இருக்கும். அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படிக் கண்டுபிடிக்கின்றபோது, கடுமையான நடவடிக்கை எடுக்க மின் வாரியத்திற்கு சட்டப்படி அதிகாரம் இருக்கிறது. இதனாலேயே குறைவான மின் அழுத்தம், லோ வோல்டேஜ் ஏற்படுவதற்கும் லைன் லாஸ் ஏற்படுவதற்கும் வழி ஏற்படுகின்றது. அதைத் தடுக்க வேண்டும். அதிலே அக்கறை காட்டவேண்டுமென்பதற்கு ஒரு திட்டத்தை தமிழக மின்வாரியம் இப்போது மேற்கொள்ள இருக்கிறது. அதாவது 'வாலண்டரி டிஸ்குளோசர் ஸ்கீம்' என்று ஒன்று வருகிறது.

பயனீட்டாளர்கள் ஒப்பந்தப்படி பயன்படுத்தவேண்டிய மின் சுமைக்குக் கூடுதலாக சில இடங்களில் அங்கீகாரமில்லாமல் பயன்படுத்துகிறார்கள். இவற்றினாலும் மின் அழுத்தத்தில் குறைவு ஏற்படுகிறது. இத்தகைய முறை கேடுகளைத் தவிர்ப்பதற்கு மின் வாரியம் கடும் தண்டனை விதிப்பதென முடிவெடுத்துள்ளது. இதனால் அங்கீகரிக்கப்படாத கூடுதல் மின் சுமையைப் பயன்படுத்துகிறவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாவார்கள். இறுதியாக அவர்களுக்கு ஒரு வாய்ப்பு தரும் வகையில் 31—7—1979-க்கு முன் தாங்கள் உண்மையாகப் பயன்படுத்தும் மின்சுமை பற்றிய விவரங்களை அவர்களாகவே மின் வாரியத்திற்குத் தந்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது. இத்திட்டத்தைப் பயன்படுத்தி, அங்கீகரிக்கப்படாத கூடுதல் மின் சக்தியைப் பயன்படுத்துவோர், மின் சுமைக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். 31—7—1979-க்குப் பின்னர் எந்தக் காரணத்தைக் கொண்டும் எவ்வித சலுகையும் அளிக்கப்பட மாட்டாது.

இந்த அறிவிப்பைப் பயன்படுத்திகொண்டு எங்கெங்கு ஒப்பந்தப்படி இருக்கக்கூடிய மின் சுமைக்கு அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் உடனடியாக முன் வந்து அவர்களே ஹார்ஸ் பவர் எவ்வளவு பயன்படுத்துகிறோம், எவ்வளவு லோட் பயன்படுத்துகிறோம் என்ற விவரத்தை மின்வாரியத்திற்குத் தர வேண்டும். இல்லையானால், மின் வாரியம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் இதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது கட்டணங்கள்பற்றிக் குறிப்பிட்டார்கள். மின் வாரியத்தினுடைய நிதி நிலைமைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். திட்டத்திலே 150 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்கள், ஆனால் தூத்துக்குடி மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், 152 கோடி ரூபாய் என்று இருக்கிறதே என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட இரண்டும் ஒன்றாக இருப்பதால், அந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. மின் உற்பத்தித் திட்டங்களுக்கு, இந்த ஆண்டிற்கு, ஒதுக்கப்படுவது 150 கோடி ரூபாய். ஆனால், அந்தத் திட்டத்தின் 'பர்ஸ்ட் ஸ்டேஜ்'-ன் முதலீடு 152 கோடி ரூபாய். ஆகவே இது கேப்பிடல். அது நம்முடைய ப்ரோக்ராம்: அதில் எந்தவிதத் தவறுமில்லை. மின் வாரியம் நஷ்டத்தில் நடக்கக்கூடாது என்று தெரிவித்ததை நான் வரவேற்கிறேன். அதற்காக ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட [illegible]

கட்டண விகிதங்கள், உயர்வுகள் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் அவற்றை மீண்டும் படித்து, உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. இதனால் தொழில்கள் பாதிக்கப்படுமே என்று சொன்னார்கள். அவருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தோராயக் கணக்குப்படி அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில், மின்சாரம் சிறு பங்குதான், இப்போது உயர்த்துவது அதைவிடச் சிறிய பங்கு. மின்சாரத்தின் அளவு 25 பைசா என்றால், 5 பைசா உயர்த்துகிறோம். அதாவது ஐந்தில் ஒரு பங்கு—20 சதவீதம். உதாரணத்திற்கு சிமென்ட்டை எடுத்துக் கொள்வோமானால், அவர்கள் உற்பத்தி செய்யத் தேவையான பொருள்களில் மின்சாரத்தின் விலை 10 சதவீதம். அதற்கு 20 சதவீதம் உயர்த்துகிறோமென்றால், மேலும் 2 சதவீதம் வரும். அதாவது 12 சதவீதம் ஆகும். இதனால் தொழில்களில் பாதிப்பு வராது அதோடு மட்டுமல்ல. இந்தத் தொழில்கள் சலுகைக் கட்டணங்களில் நடை பெறுகின்றன. ஒரு தொழிலுக்கு ஆரம்பக் கட்டத்தில் ஊக்கம் கொடுக்க வேண்டியதுதான். தொடர்ந்து, அதற்கு 'புட்டிப் பால்' கொடுப்பது சரி யானதல்ல. மனிதன் குழந்தையாக இருக்கும்போது அது தேவையே தவிர, தொடர்ந்து தேவைப்படாது. இதனால் பெரிய தொழில் மந்தம் ஏற்படாது. மேலும் தாங்கக்கூடியவர்களாகப் பார்த்துத்தான் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்களைக் கேட்டால், இன்னும் விவரமாக இதைப்பற்றிச் சொல்லுவார்கள். அவர்கள் சொல்கிறபோது, ' என்று சொன்னார்கள் இவ்வளவு காலமாயிற்றே என்று சொன்னார்கள். அதைப் போலவே குடிசை வாசிகளுக்கு இப்போது விசேஷ மாகத் தருகிற மின்சாரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போதும், It is long overdue என்று குறிப்பிட்டார்கள். அதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், புரட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக வருவது long overdue. அதனால் தான் இது ஏற்பட்டதே தவிர, வேறு ஒன்றுமில்லை. அவர்கள் முன்னாலேயே வந்திருந்தால், நானும் மின்சாரத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருப் பேன். இதுவும் long overdue ஆகியிருக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எதிலே long overdue என்றால், இந்த அரசு வருவதிலே long overdue ஆகிவிட்டதால்தான், இந்த நிலைமை ஏற்பட்டதே தவிர, வேறு ஒன்றுமில்லை. இந்தக் கட்டண விகிதங்கள் சாதாரண மக்களுக்குப் பயன்படும் அதே நேரத்தில், சக்தி படைத்தவர்கள் தங்களுடைய வரு மானத்தைச் சாதாரண மக்களுக்குப் பயன்படுத்தும் அளவிற்கு, பகிர்ந்து

கொடுக்கும் அளவிற்கு, சமதர்மத் திட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் புரிந்துகொள்வார்கள். இருந்தாலும் குறை சொல்ல வேண்டுமென்பது சம்பிரதாயமென்று அவர்களே எடுத்துச் சொன்னதாலும், சம்பிரதாயம் என்பதைப் புரிந்துகொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் அந்த முறையில் சம்பிரதாயமென்று சொல்லவில்லை. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியையும், எதிர்க்கட்சி ஆளுங் கட்சியையும் குறை சொல்லுவது சம்பிரதாயமாகி விட்டதென்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மின்சாரக் கட்டணத்தை சில தொழிற்சாலைகளுக்கு உயர்த்தி யிருப்பதை, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், எதிர்க்க வில்லை. ஆனால் அதே நேரத்தில், அந்தத் தொழிலதிபர்கள் இதைப் பயன் படுத்திக்கொண்டு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களின் விலையை உயர்த்தாமல், இந்த அரசாங்கம் பார்த்துக் கொள்ளுமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சில முக்கியமான பொருள் களுக்கு விலைக் கட்டுப்பாடு செய்யும் அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. உதாரணத்திற்கு அலுமினியம், சிமென்ட் போன்றவைகளின் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. மாநில அரசுக்கு, இந்த அதிகாரம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தா லும், இதற்கெல்லாம் அவசியமில்லை. அவர்கள் லாபத்திலேதான் நஷ்டம். எனவே, இதற்கு அவசியமில்லை என்பதை இங்கே நான் தெரிவிக்க விரும்பு கிறேன்.

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பேசி முடித்த பிறகு, உறுப்பினர்கள் விளக்கங்கள் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொது மக்களுக்குப் பயன்தரத் தக்க விதத்தில் மின்சார வாரியம் பணியாற்ற வேண்டுமென்பதற்காக, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், 'இடப் பட்டியல்' முறையைக் கொண்டுவர இருக்கிறோம். அதற்காக சென்னை மாநகரத்தில் இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு திட்டங்களிலேயும் இது அமுல்

படிக்கப்படும். வீடுகளுக்குச் சென்று மீட்டர் ரீடிங் எடுத்து, பில்லைத் தயாரித்து, வீட்டுக்காரர்களிடம் பில்லைக் கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப் படும். இதனால் பல குறைபாடுகள் நீங்குமென்று நம்புகிறேன். அதற்காக விவரம் தெரிந்து, படித்த மீட்டர் ரீடர்களைப் போடுவதென்று முடிவு செய்திருக்கிறோம். அந்த வகையில் பெரும்பாலான குறைகள் நீங்குமென்று எதிர்பார்க்கிறோம்.

இங்கே விவசாயிகளைப் பொறுத்தவரையில், நான் குறிப்பிட விரும்புவது, தமிழக மின் வாரியத்திலே விவசாயக் கட்டணம்தான் மிக மிகக் குறைவு என்பதைத்தான். ஏற்கெனவே அலுமினியம் பற்றிச் சொல்லிக்கொண்டிருந் தார்கள். இப்போது அலுமினியம்கூட 16 பைசாவிற்குமேலே போய்விட்டது. இனிமேல் 'மால்கோ' பற்றிச் சொல்ல வழியில்லாமல் போய்விட்டது. சிறு விவசாயிகள் இதனால் பயன் பெற்றார்களா என்று கேட்டார்கள். தமிழகத்தில் உள்ள மொத்த மின்சார பம்ப்-செட்டுகளின் எண்ணிக்கை 8,05,614. அதில் சிறு விவசாயிகள் 1,70,764. ஆகவே இதிலே யார் பெரும்பான்மை என்று கேட்டார்கள். இந்த அரசு சிறு விவசாயிகளுக்குச் செய்ததுபோல, செய்து விட்டோம், செய்துவிட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் சிறுபான்மையினர்தானே என்று கேட்டார்கள். அதுகூட அல்ல முக்கியம். இதிலிருந்தே ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம். இந்தக் கிளர்ச்சி யாரால் நடத்தப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். பெரும்பான்மையான விவசாயிகள் நிலப் பிரபுக்கள். அதைத்தான் அரசு திரும்பத் திரும்பச் சொல்கிறது. எனவே இப்போது நடப்பது உண்மையான விவசாயிகள் கிளர்ச்சியல்ல. இது நிலப் பிரபுக்கள் கிளர்ச்சி என்பதற்கு இந்தச் சான்றே போதும். ஏனென்றால் சிறு விவசாயிகள் 1,70,764; பெரு விவசாயிகள் 6,34,852. மின் கட்டணத்தைக் குறைத்து, சலுகை அளிக்கிறோம். அதனால் பயன் பெறுகிறவர்கள் பெரு விவசாயிகள் என்பதை மனதிலே வைத்துக் கொண்டால், திரு. நாராயணசாமி நாயுடு உண்மையான உழவர்களின் பிரதிநிதி அல்ல; பிறர் உழைப்பில் உண்டு வாழ்பவர்களான நிலப் பிரபுக்களின் ஏகபோக பிரதிநிதி என்பதை இந்த மன்றத்தில் இருக்கிறவர்கள் நன்றாக அறிவார்கள். 1,70,764 சிறு விவசாயிகளில் 1,50,260 பேர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள்.

மின்சாரம் வழங்குவதில் கையாளும் முறைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சில இடங்களில்,

உதாரணத்திற்கு, வட ஆற்காடு மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது, ஆகையால் அந்த இடத்திலே 10 பேர்கள் சேர்ந்து மின் இணைப்பு கேட்கிறார்களென்றால், அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டாமா என்று அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரியாததல்ல. ஏனென்றால் அவர்கள் மின்சார வாரியத்தில் நீண்ட நாட்கள் இருந்தவர்கள். மின்சார வாரியத்தில் நானும் இருந்து நல்ல அனுபவத்தைப் பெற்றவன். அந்த வகையில் பார்க்கிற போது, நாம் ஒரு விதியை உண்டாக்குகிறபோது, அந்த விதியிலே கொஞ்சம் லேசாக விலக்குக்கூட கொடுத்தாலும்கூட, எந்த விதியை உண்டாக்கினோமோ அந்த விதியின் தலைவிதி முடிந்து விடுமென்ற நிலை ஏற்படும். அதனால் தான் சிறு விவசாயிகளானாலும், பெரு விவசாயிகளானாலும், முன்னால் வந்தவர்களானாலும், பின்னால் வந்தவர்களானாலும், யாராக இருந்தாலும், தேதிப்படி, மனுப் போட்ட தேதிப்படி முன்னுரிமைப் பட்டியல் வைத்து, அதன்படி மின் இணைப்பு தர வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தால்தான், மேல் மட்டத்திலே மட்டுமல்ல, கீழ் மட்டத்திலே உள்ள லஞ்சத்தை நம்மாலே ஒழிக்க முடியும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதை அடிக்கடி சொல்கிறார்கள். அரசியல்வாதிகள் மட்டத்தில்கூட அது இப்போதில்லை என்று என்னால் கூற முடியும், ஆனால் அதிகாரிகள் மட்டத்தில் இன்னும் சில இடங்களில் இருக்கின்றன, அவை தவிர்க்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் திருப்பித் திருப்பி எடுத்துச் சொல்லி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே, மின்சார வாரியத்திலே புதிதாக பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு வருகிறவர்கள், மின்சாரம் பெற வருகிறவர்கள் எளிதாகப் பெறக்கூடிய வகையில் விதி முறைகளை மாற்றி, நிர்வாகச் சீர்திருத்தத்தை மேற்கொண்டு, சில நடவடிக்கைகளை எடுக்கிறோம். இதன்மூலம் பொது மக்களுக்கு, மின்சாரத்தைப் பெற விரும்புகிறவர்களுக்கு ஏற்படும் கஷ்டம் தீரும். சில இடங்களிலே இருக்கும் லஞ்ச லாவண்யம் நிச்சயமாக நீங்குமென்று கூற விரும்புகிறேன். இந்த அடிப்படையிலே மேலும் சில காரியங்களை மேற்கொள்வதாக இருக்கிறோம். அவற்றை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மின் இணைப்பு அளிப்பதில், கீழ்க்கண்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விவசாயத்தைப் பொறுத்த

(பிற்பகல் 1-00)

வரையில் 1963-64 ஆம் ஆண்டிலிருந்து 1978-79 ஆம் ஆண்டு வரை 2,28,957 மனுக்கள் மின் வாரியத்தின் கைவசம் உள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன என்ற அடிப்படையில் நீரேற்றி

களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் 1963-64 ஆம் ஆண்டு முதல் 1975-76 வரையிலுள்ள மனுக்கள் இந்த அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் இதிலும் மேற்கொண்டு ஒரு குறை தெரிவிக்கப்பட்டது. மூன்று மாதத்திற்குள்ளாக நீரேற்றிகளை வாங்கி வைத்துக் கொள்ளாவிடில், அனுமதி ரத்து செய்யப்படும் என்பதாகும். இதனால் நீரேற்றிகளின் விலை அதிகமானதோடு கிடைப்பதில்லை என்ற புகாரும் வந்தது. இதைத் தவிர்க்கும் பொருட்டு யார் யார் மூன்று மாத காலத்திற்குள்ளாக நீரேற்றிகளை வாங்கி வைத்துக்கொள்ள முடியவில்லையோ அவர்கள் தகுந்த காரணங்களோடு அந்தந்தத் திட்ட மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு மேல் முறையீடு செய்வார்களானால், அத்தகையோருக்கு மேலும் 3 மாத காலம் அனுமதி அளிக்க மேற்பார்வை பொறியாளருக்கு இனிமேல் அதிகாரம் வழங்கப்படும். ஏனென்றால் 3 மாதத்திலே சில பேரால் பம்ப்செட்டுகள் வாங்க முடியவில்லை, குறிப்பாக விவசாயிகளைப் பொறுத்தவரையில்.

இரண்டாவதாக வீடுகளுக்கு மின்சாரம் கோரி வரும் மனுக்கள் இரண்டு வகையாகப் பரிசீலிக்கப்படும். ஒருவகை ஏற்கெனவே இருக்கின்ற மின் கம்பி தொடரிலிருந்து நேராக மின்சாரம் பெறுவதாகும். இரண்டாவதாக புதிதாக மின் கம்பி தொடர் போடப்பட்டபின் மின் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியவை. இந்த இரு அடிப்படையிலும் வீட்டு மின்சாரம் கோரிவரும் மனுக்கள் கிடைக்கப்பெற்ற தேதியின் அடிப்படையில், தனித்தனியே இரு முன்னுரிமைப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, அந்தப் பட்டியலின்படி மின் இணைப்பு வழங்கப்படும். விவசாயத்திற்கும் இந்த முன்னுரிமை, வீட்டுக்கும் இந்த முன்னுரிமை.

மூன்றாவதாக, சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், குறைவழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழில்கள் அனைத்திற்கும் இனிமேல் 10 சதவிகித வருவாய் வற்புறுத்தப்பட மாட்டாது. மின் இணைப்புகளும் மனுக்கள் பெற்ற தேதியின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து வழங்கப்படும். இம்மின் இணைப்புகளுக்கு உள்ளாட்சி மன்றங்களிலிருந்து அல்லது வேறு கட்டத்தில் குறிப்பிட்டுள்ள அதிகாரிகளிடமிருந்து உரிமங்கள் தரப்பட வேண்டும் என்ற விதியும் ரத்து செய்யப்படுகிறது. இதன் மூலம் தமிழகத்தில் சிறு தொழில்கள் ஏராளமாகப் பெருகவும், தொழில்புரட்சி ஏற்படவும் வழி ஏற்படும் என நம்புகிறேன்.

நான்காவதாக, வீதிகளுக்குப் புதிதாக மின் விளக்கு போடுவதற்கும், குடிநீர் விசையேற்றத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கும் இதுவரை கடைப்பிடித்து வந்த 10 சதவிகித வருவாயினை ரத்து செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மின்சாரம் கிடைப்பது துரிதமாக்கப்படும்.

ஆக இந்த அடிப்படையில் மேலும் நிச்சயமாக ஏற்கெனவே இருக்கின்ற நிர்வாகச் சங்கடங்கள் அறவே நீக்கப்படும் என்பதையும் மனுக் கொடுத்த தேதியிலிருந்து முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அது வீடுகளுக்கு மின்சாரமானாலும் சரி, விவசாயத்திற்கு மின்சாரமானாலும் சரி, சிறு தொழில்களுக்கு மின்சாரமானாலும் சரி முறைப்படி மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் இதனாலே மின்சாரம் பெற விரும்புவோர் நிச்சயமாக கஷ்டங்களுக்கு ஆளாகமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்களும் உயர்திரு. வெங்கடேசன் அவர்களும் இங்கே தெரு விளக்குகளைப் பற்றியும் மின் தடைகளைப் பற்றியும் சொன்னார்கள். தெரு விளக்குகளைப்பற்றி உள்ளாட்சி மன்றங்கள் பொறுப்பேற்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசு உத்தரவிட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் அங்கே இப்பொழுது பல்புகளை மாற்றுகிறபொழுது, சாதாரண பல்புகளாக இருந்தால் 50 காசு என்ற வகையிலும், டியூப் பல்புகளாக இருந்தால் 1 ரூபாய் என்ற வகையிலும் மின்சார ஊழியர்களுக்கும் அதிலே ஒரு ஊக்க போனஸ் திட்டம் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அது எப்படி இயங்குகிறது என்பதைப் பார்த்து, அதற்குப் பிறகு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் திரு. வீராசாமி அவர்களும் பல்பு தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். முதலிலே நாம் மேற்கொண்டிருக்கிற, மின் உற்பத்தி, மின்சாரத்தை அமைத்தல், மின்சாரத்தைப் பகிர்ந்தளித்தல் இவைகளில் எல்லாம் மன நிறைவு தருகின்ற வகையில் வேலைகளை முடிப்பதே பெரிய பிரச்சினையாக இருக்கும்பொழுது, இன்னும் பல சுமைகளைச் சுமந்து கொள்வது முக்கியமான இந்த நேரத்தில் ஏற்றதாகாது. இருந்தாலும் இந்த பல்புகள் தரமான பல்புகளா என்பதை உள்ளாட்சி மன்றங்கள் மின்சார வாரியத்தைக் கேட்குமானால் அல்லது மின்சார வாரியத்தினுடைய துணையை

விரும்புவார்களேயானால், குவாலிட்டி இன்ஸ்பெக்ஷன் என்கின்ற வகையில் மின்சார வாரியத்தினுடைய பெசிலிட்டீசை வைத்துக்கொண்டு, தரமான பல்புகளா என்கின்ற விவரத்தை மின் வாரியம் தரத் தயாராக இருக்கிறது என்று கூறி இவற்றோடு என் உரையை முடித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே அதிகாரிகள் மட்டத்திலே தான் லஞ்சம் இருக்கின்றது, அரசியல்வாதிகள் மட்டத்தில் இல்லை என்று எல்லாம் கூட சொன்னார்கள். அதில் கருத்து வேறுபாடு உண்டு. அது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆளும் கட்சியிலே பல தவறுகள் நடைபெறுகின்றன என்றெல்லாம் நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். பலர் ஊழல் செய்கிறார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறோம். அதை இந்த நேரத்தில் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. நான் பேசும் போது ஒரு கருத்தை வெளியிட்டேன். நம்முடைய அமைச்சரவர்கள் நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். மண் சுவரும் கீற்றுக் கூரையும் கொண்ட குடிசைக்கு ஒரு விளக்கு போட்டு விட்டு 2.50 ரூபாய் வசூலிக்கிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். கிராமங்களில் பல வீடுகளில், பல இடங்களில் மண் சுவர் இருக்கும். ஆனால் கீற்றுக் கூரைக்குப் பதிலாக ஓடு போட்டிருப்பார்கள். அப்படி ஓடு போட்ட வீடுகளுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்று கேட்டேன். அதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்துத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதலில் மண் சுவரும் கீற்றுக் கூரையும் போட்டிருக்கிறார்களே, அவர்களை கவனிப்போம். அது எப்படி இருக்கிறது என்று பார்த்துத்தான் மற்றவர்களையெல்லாம், ஓட்டு வீட்டுக்காரர்களைக் கவனிக்க வேண்டி வரும். சாதாரணமாக வெள்ள காலத்தில் கூட நிவாரணம் அளிக்கும்போது, பிரிக் வால் வைத்திருப்பவர்களுக்குக் கொடுப்பதில்லை. அது அரசாங்கத்தில் பின்பற்றப்பட்டு வருகின்ற வழிமுறை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைத்தான் நான் சொன்னேன். மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் மதுரை மாநகராட்சித் தேர்தல் நேரத்தில் பேசும்போது கூட சொன்னார்கள். அரசியல்வாதிகள் மட்டத்தில் லஞ்சம் இல்லையென்று சொல்லிவிட்டு, இன்னும் அவர்கள் சொன்னார்கள். எதிர்க் கட்சிகளைச் சார்ந்த, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பற்றிக் கூட நான் சொல்வேன்,

அப்படி ஒன்றும் தவறு நடக்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இல்லை, இல்லை ஆளும் கட்சிக்காரர்களும் தவறு செய்கிறார்கள், நாங்களும் தவறு செய்கிறோம் என்கின்ற அளவுக்குச் சொல்கிறார். இந்த மனப்போக்குத் தான் இருவரிடையேயும் உள்ள நிலையையும் எடுத்துக்காட்டுகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நாங்கள் தவறு செய்கிறோம் என்று நான் சொல்லவில்லை. எதிர்க் கட்சியைச் சார்ந்த நாங்கள் ஆளும் கட்சியைக் குற்றம் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறோம். குறைகள் இருக்கின்றன. ஆதாரத்தோடு பேச முடியும். அதற்கு இது நேரம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் மிகத் தெளிவாகச் சொன்னேன். அரசியல்வாதிகள் மட்டத்தில் என்னால் சொல்ல முடியும், தவறு நடக்கவில்லை என்று முதலமைச்சர் சொன்னார்கள் என்றால், அவர்களிடத்தில் காவல் துறையை வைத்துக்கொண்டு சொல்கிறார். அரசியல்வாதிகள் மட்டத்தில் ஒன்றும் அவ்வளவாக குறைபாடுகள் இல்லை. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களைப் பற்றிக்கூடச் சொல்ல முடியும் என்று சொன்னார்கள். ஆனால் அதிகாரிகள் மட்டத்திலே இருக்கின்ற நடைமுறைகளின் காரணமாகவும், காலதாமதத்தின் காரணமாகவும் சில இடங்களில் இருக்கின்றன. அவைகளும் பர்ஸ்ட் ஸ்டேஜ், செகன்ட் ஸ்டேஜ் என்கிற வகையிலே தவிர்க்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஏன் கொடுத்திருந்த வாய்ப்பை இப்படி வீணாக்கிக் கொள்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் இன்று பிற்பகல் 4 மணியளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-07)

அவை மீண்டும் பிற்பகல் 4 மணியளவில் கூடியது.

(பிற்பகல் 4-00)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

7. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டப் பேரவையால் நிறைவேற்றப் பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளேன்.

(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 37/1979).

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1979).

(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1979).

(4) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 29/1979).

(5) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1979).

(6) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1979).

8. அரசின் சட்டமுன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1979).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

@ 479 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது முன்மொழியப்பட்ட சட்ட முன்வடிவும், இதற்குப் பின்னால் இருக்கும் மூன்று சட்டமுன்வடிவுகளும் ஒரே விஷயத்தைப் பற்றியதாக இருப்பதால், மொத்தமாக விவாதத்திற்கு வைத்துக்கொள்ளலாம், நிறைவேற்றும்போது ஒவ்வொன்றாக நிறைவேற்றலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னாலே 4 மசோதாக்கள் இருக்கின்றன. மூன்று மசோதாக்கள், ஊராட்சிகள் பதவிக்காலத்தை நீட்டிப்பு செய்வதும், மே 1 ஆம் தேதியிலிருந்து மேலும் 5 மாதங்களுக்கு தேர்தலைத் தள்ளிவைக்கக் கோருவதும், ஒத்திப் போடுவதும், 4-வது மசோதா ஸ்தல ஸ்தாபனங்களுடைய கட்டிடங்கள், தெருக்களிலே உயிரோடு இருப்பவர்களுடைய பெயர் இடுவது பற்றியதும் ஆகும். இந்த நான்கு மசோதாக்களின் மீதும் மொத்தமாகப் பேசப்படுகின்றது.

தேர்தலை ஒத்தி வைப்பதற்காகவும், பஞ்சாயத்து யூனியன் ஸ்பெஷல் ஆபீசர்களுடைய பதவிக்காலத்தை நீட்டிப்பதற்காகவும் கொண்டுவரப் பட்டிருக்கின்ற இந்த மூன்று மசோதாக்களையும் என் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன். இதற்கு முன்னாலே தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்க சட்டம் கொண்டு வந்தபோது, நான் ஏற்கெனவே அதை எதிர்த்திருக்கிறேன். எனக்கு என்ன ஒரு விஷயம் புதிராக இருக்கிறதென்றால், ஒவ்வொரு தடவையும் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சாதுர்யமான காரணத்தைக் கண்டுபிடிப்பதுதான். அது விசித்திரமாகக் கூட இருக்கிறது. போன தடவை நவம்பருக்கு முன்னால் 1978 மே மாதத்தில் இது வந்தபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள், நவம்பரிலே மழை வருமே என்று சொன்னார்கள். அப்போது மழை வந்தாலும் நாங்கள் சமாளிப்போம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பிறகு மழையைக் காட்டியே ஒத்திப்போட்டார்கள். 1979 மே மாதம் வைப்போம் என்று சொன்னார்கள். இப்போது மே மாதம் வந்து விட்டது. இப்போது 21 வயது வந்தவர்களுடைய பெயர் எல்லாம் ஜனவரி 31 வரையிலே இருப்பதால் வோட்டர்ஸ் லிஸ்ட் தயாரிக்க ஏப்ரல் 30 முடிய

@ 479 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 28

ஆகிவிட்டது. ஆகவே, அதற்குப் பிறகு 2 மாதம் வேண்டும் என்று 5 மாதம் கேட்டிருக்கிறார்கள். அப்படியானால் இந்தமாதிரி ஒரு ரோல் தயாரிக்கப்பட்ட பிறகும், 2 மாதம் வேண்டும் என்ற நிலைமை இருந்தால், 1978 டிசம்பர் 31-லே யாருக்கு 21 வயது இருந்ததோ அவருக்கு வோட்டுரிமை அளிக்கலாம். ஜனவரி 31-ல் யாருக்கு 21 வயது பூர்த்தியாகிறது என்று பார்க்க வேண்டிய அவசியமில்லை.

இன்னொன்றும் நான் கேள்விப்பட்டேன். உறுப்பினர்கள் எல்லாம் இப்போதுதான் சட்டமன்றம்' முடிந்து போகிறார்கள், போனவுடனே எலக்ஷனுக்காக என்ன செய்வார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். இதற்காகத்தான் இந்த அவையைக்கூட 30 ஆம் தேதிவரை வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு இப்போது இருக்கிறது. ஏப்ரல் 30 வரை அவைக் கூட்டத்தை வைத்தால் எலக்ஷன் மே மாதம் வைக்க முடியாமல் போகும் என்று வைத்திருக்கிறார்களோ, என்னவோ இது ஒரு பொதுத் தேர்தல் போல வருகிறது. தமிழ் நாட்டிலே உள்ள அத்தனை பேர்களும் கார்ப்பரேஷன், முனிசிபல், பஞ்சாயத்துத் தேர்தல்களைச் சந்திக்கப் போகிறார்கள். ஆகவே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஒரு பொதுத் தேர்தல் போல வருகிறது. இந்தத் தேர்தல்களிலே மக்களுடைய மனோபாவம் எப்படி இருக்குமோ என்றுதான் ஆளும்கட்சிக்காரர்கள் தேர்தலை ஒத்திப்போடுகிறார்கள். ஆனால், அவர்களையும் மீறி பார்லிமென்ட் எலக்ஷன் வந்திருக்கிறது. அதை இவர்களால் ஒத்திப்போட முடியாது. பார்லிமென்ட் எலக்ஷன் மூலம், மக்களின் சிந்தனை எந்த திசையை நோக்கிச் செல்கிறது என்பதைப் பார்க்க காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

(பிற்பகல் 4-10)

அன்று பேசும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 'திரு நல்லசிவன் அவர்கள் திரும்பத் திரும்ப எப்போது எலெக்ஷன் என்று கேட்கிறார். ஒருவேளை பார்லிமெண்ட்டுக்கான எலெக்ஷன் நடைபெற இருப்பதை மனதிலே வைத்துக்கொண்டு, ஜூன் மாதத்திலே உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடக்குமா என்று கேட்கிறார்' என்று குறிப்பிட்டு அவருக்குச் சந்தேகம் வேண்டாம், கண்டிப்பாக ஜூன் மாதத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடக்கும் என்றார்கள். இப்போது பாராளுமன்றத் தேர்தல்களுக்குப் பிறகுதான் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடக்கும் என்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1979 ஏப்ரல் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

ஒருவேளை பார்லிமெண்ட் எலெக்ஷன்களுடைய முடிவு தமிழ் நாடு அரசியல் நிலையில் எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்து, அதற்குப் பிறகு தங்களுடைய எலெக்ஷன் டேக்டிக்சை அமைத்துக்கொள்ள ஆளும்கட்சியினர் செய்கிற ஏற்பாடோ என்றுகூட நான் அய்யப்பட வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கெனவே மதுரையில் அதை நாம் அனைவரும் சேர்ந்து சோதித்துப் பார்த்துவிட்டோம்.

திரு. ஆ. நல்லசிவன் : மதுரையில் சோதித்துப் பார்த்துவிட்டோம். அப்போது நிலைமை வேறு. அப்போது எல்லோரும் சேர்ந்து சோதித்துப் பார்த்தோம். இப்போது சேர்ந்து சோதிக்கப் போகிறோமா இல்லையா என்று தெரியவில்லையே. எதுவும் நிச்சயமில்லாமல் இருக்கிறதே. யார் யார் எங்கே நிற்கிறார்கள் என்று தெரியாமல் இருக்கிறதே. எனவே இந்த முறை எப்படி இருக்கும் என்று இனிமேல்தான் யோசிக்க வேண்டும். இதையெல்லாம் ஆளும் கட்சி யோசிக்க வேண்டியிருப்பதால்தான், ஒவ்வொரு முறையும் ஒரு புதிய காரணத்தை 'இன்ஜீனியசாக' அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டு—நான் உண்மைக்கு மாறானது என்று சொல்ல வரவில்லை—இந்தத் தேர்தல்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறார். எனவேதான் நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன். இது சரியல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பார்லிமெண்ட் இடைத் தேர்தல்கள் முடிந்த பிறகாவது, அவற்றின் முடிவுகள் எப்படி இருந்தாலும், இந்த 5 மாதங்களுக்கு மேல் போகாமல்—செப்டம்பர் மாதத்திற்குள்ளாக—உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இதை செப்டம்பர் வரை தள்ளிப் போடுவதையே நான் அனுமதிக்கத் தயாராக இல்லை. இதையே நான் ஆட்சேபிக்கிறேன். ஆக இந்த 3 மசோதாக்களைப் பொறுத்தவரையிலும், நான் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை பொதுக் கட்டிடங்கள், இடங்கள் போன்றவற்றிற்கு வைக்கக்கூடாதென்ற ஒரு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், இது ஒரு ஆச்சர்யமாக இருக்கிறது. தமிழ் நாட்டு அரசியலில் ஆளும்கட்சிக்கும் பிரதான எதிர்க் கட்சிக்கும் இருக்கிற தகராறு எந்த அளவுக்கு 'புரொஜெக்ட்' ஆகியிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இது இருக்கிறது. நமது நாட்டின் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பலர் பொது மக்களின்

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 2ł

அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய சேவை காரணமாகவோ, தியாகம் காரணமாகவோ அப்படிப்பட்ட தலைவர்கள் தங்களுடைய வாழ்நாளிலேயே போற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் நினைவாக அவர்களுடைய பெயர் பல தெருக்களுக்கும், கட்டிடங்களுக்கும், பொது இடங்களுக்கும் மற்றவற்றிற்கும் வைக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். நமது தேசத்தின் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்தது அது. நமது தேச சரித்திரத்தோடு இணைந்தது அது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அருகில் இருக்கிற ராஜாஜி ஹாலுக்குக் கூட அவர் உயிரோடு இருக்கும்போதுதான் அந்தப் பெயரிடப்பட்டது.

எல்லோரும் ராஜாஜி ஸ்டேச்சருக்கு வந்துவிடுவார்களா என்றால், அப்படி வந்துவிட முடியாது. அது வேறு விஷயம். ராஜாஜி அவர்கள் இந்த தேசம் முழுவதற்கும் தலைவராக இருந்தவர். இப்படி பஞ்சாயத்து யூனியனுக்குள் மக்களுடைய அன்புக்குப் பாத்திரமான ஒருவர், அவர் செய்த சேவை காரணமாக அவருடைய வாழ்நாள் காலத்திலேயே அவர்களுடைய பெயரை அந்தப் பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கோ, தெருக்களுக்கோ வைப்பது என்பதன் மூலமாக மக்கள் தங்களின் மரியாதையை அவர்களுக்குக் காட்ட விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஒருவருடைய வாழ்நாளிலேயே அவரை மரியாதை செய்யும் முறை நமது நாட்டின் பண்பாடாக, தேசிய பாரம்பரியமாக இருக்கிறபோது, அதிலே ஒரு மாற்றத்தை அரசாங்கம் கொண்டுவர விரும்புவது சரியல்ல. அந்தப் பண்பாடு இன்னும் நமக்கு இருக்கிறது என்ற காரணத்தால்தான், பல துறைகளில் விற்பன்னர்களாக இருப்பவர்களுக்கு அரசாங்கத்திலேயே பரிசு வழங்கும் முறைகூட இருக்கிறது. இப்போது இந்த மசோதாவைக் கொண்டு வந்ததன் காரணமாக அரசாங்கம் என்ன எண்ணத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது என்றால், உயிரோடு இருப்பவர்கள் எப்போதாவது தவறு செய்துவிடுவார்கள், பிறகு எதற்கு இவருடைய பெயரை வைத்தோம் என்று வருத்தப்பட வேண்டியிருக்கும் என்று முன்னெச்சரிக்கையாக அவர்கள் பெயர்களை வைக்காமல் இருக்க வேண்டும் என்று எண்ணுவது போல் தெரிகிறது. ஒருவர் இறந்த பிறகு இனிமேல் அவர் தவறே செய்ய முடியாது, ஆகவே அவருடைய பெயரை பொது இடங்களுக்கோ, தெருவுக்கோ, கட்டிடத்திற்கோ சூட்டலாம் என்று எண்ணுவதுபோல் தெரிகிறது. ஒரு சமயத்தில் மிகப் பெரிய மனிதராக இருக்கிறவரின் பெயரை ஒரு முனிசிபாலிடியோ, வேறு எதுவோ தனது கட்டிடத்திற்கோ அல்லது வேறு ஒன்றிற்கோ வைத்துவிட்டு, பிறகு அவர் தப்பு செய்தால் என்ன செய்வது என்று கவலைப்படுவது எந்த வகையிலும் சரியல்ல. யாரும் தவறு செய்ய மாட்டார்கள் என்று கியாரண்டி கொடுக்க

979 ஏப்ரல் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

டியாது. அப்படியானால் இனி ஒன்றைச் செய்ய வேண்டும். இந்த
ரசாங்கம் யாரையாவது பாராட்ட வேண்டுமென்றால், அவர் செத்த பிறகு
ன் பாராட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வர வேண்டும். இது எப்படி
ந்த்தறிவுக்கு ஒத்த காரியமாக இருக்கும் என்று எனக்குப் புரியவில்லை.
மிழ் நாட்டு சர்க்காரின் இந்த நடவடிக்கை அப்படித்தான் இருக்கிறது.
ருக்காவது அரசாங்கம் பட்டம் கொடுப்பது என்பதுகூட இனி இந்த
டிப்படையில் தான் இருக்க வேண்டும் என்று எண்ணுவதைப்போல்
நக்கிறது. இன்றைக்கிருக்கிற ஆளும் கட்சியினர் ஏற்கெனவே இருந்த ஆளும்
சியின்—அதாவது இன்றைய பிரதான எதிர்க் கட்சியின்—தலைவருடைய
யரை எங்கேயும் எந்தப் பொது இடத்திலும் இல்லாமல் செய்ய வேண்டு
ன்று நினைக்கிறார்கள் என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இல்லை
ன்றால் இதற்கு வேறு என்ன 'ரேஷனேலை'-ச் சொல்ல விரும்புகிறார்கள்
ன்று எனக்குத் தெரியவில்லை. இந்தக் காரணமில்லை என்றால், வேறு
ன்ன காரணம் என்பது எனக்குப் புரியவில்லை. எந்த வகையிலும் இது
ாருத்தமானதாகத் தெரியவில்லை.

இதில் இன்னொரு விஷயமும் அடங்கியிருக்கிறது. நாம் மாநில சுயாட்சி
ட்கிறோம். ஆனால் கீழ் மட்டத்தில் இருக்கிற ஸ்தல ஸ்தாபனங்களுக்கு
பர்கள் மட்டத்தில் சில நிதி ஆதாரங்களையும் சுயமாகச் செயல்படுகிற
திகாரத்தையும் கொடுக்க வேண்டிய நிலையில் அவைகளைத் தராமல் மாநில
சே அவற்றை தம் பொறுப்பில் எடுத்துக் கொள்வது என்பது எந்த
வகையிலும் நியாயமாகாது. ஒரு வட்டாரத்தில் இருக்கிற மக்களுக்காகச்
வை செய்கிற ஒருவர் அவர் எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும், அவரை
ந்தப் பகுதி மக்கள் பாராட்ட விரும்பினால் அல்லது அவருடைய பெயரை
பர்களின் பகுதியில் உள்ள தெரு ஒன்றிற்குச் சூட்ட விரும்பினால் அல்லது
டிடம் ஒன்றிற்கு வைக்க விரும்பினால், அதைச் செய்யக்கூடாது என்று
நில அரசாங்கம் அவர்களுக்குக் கட்டுப்பாடு கொண்டு வருவது எந்த
வகையில் நியாயம்? பொதுஜன சேவை செய்தவர்களுக்கு பஞ்சாயத்துக்களோ
ற அமைப்புகளோ மரியாதை செய்யும் வகையில் அவர்களின் பெயர்களை
ற்கும் வைக்கக்கூடாது என்பது எப்படிப் பொருத்தமாகும் என்று
யவில்லை. மதுரை கார்ப்பரேஷனில் ஏற்கெனவே இருக்கிறது என்பதற்காக
தைப் பஞ்சாயத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்கு என்ன அவசிய
நக்கிறது என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன். கார்ப்பரேஷனில்
நப்பதால், அதைப் போல் முனிசிபாலிடிகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும்
ாண்டு வரவேண்டுமென்று 'ரிவர்ஸ் டிரெக்ஷனில்' ஏன் போக வேண்டு

மென்றுதான் கேட்கிறேன். கார்ப்பரேஷனில் அப்படிப்பட்ட விதியை வைத்திருப்பதுதான் தவறாகும். சேவை செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை 'ஆனர்' செய்ய மக்கள் விரும்பினால், அந்தப் பகுதி மக்களுக்கு அந்த உரிமை இருக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற கவுன்சில்களுக்கு அந்த உரிமை இருக்க வேண்டும். தேசியத் தலைவர்களையும் மக்களுக்குச் சேவை செய்தவர்களையும் 'ஆனர்' செய்யும் விஷயத்தில் ஆளும் கட்சி இவ்வளவு 'சப்ஜெக்டிவ்வாக' அக நிலைப்பார்வையோடு அணுக வேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. இதிலெல்லாம் தேசிய பாரம்பரியத்தைக் கவனத்தில் கொள்ளாமல் இந்தக் காரியத்தைச் செய்யக்கூடாது. அரசாங்கத்தின் இந்தக் கொள்கையையும் கொள்கை அளவில் நான் எதிர்ப்பதால், இந்த மசோதாவையும் எதிர்க்கிறேன். ஆக முன்னால் விவாதிக்கப்பட்ட 3 மசோதாக்களையும் இந்த மசோதாவையும் சேர்த்து எதிர்க்கிறேன் என்று சொல்லி முடிக்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், நகராட்சிகள் எப்படி ஆட்சி புரிய வேண்டுமென்ற ஒரு கருத்தை மட்டும் நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதிலும் குறிப்பாக நகராட்சிகளால் நடத்தப்படுகிற பள்ளிகள் மிகச் சிறப்பான பள்ளிகளாக இயங்க வேண்டும். இன்றையதினம் சென்னை நகரத்தில் மாநகராட்சியால் நடத்தப்படும் பல பள்ளிகள் வெறும் ஒதுங்குமிடங்களாகக் கருதத் தக்க நிலையில்தான் செயல்பட்டு வருகின்றன.

நகராட்சிப் பள்ளிகள் என்றாலே, நாட்டில் மிகச் சிறந்த பள்ளிகள் என்று சொல்லுகிற முறையில் அவைகள் நடத்தப்படத்தக்க வகையில் நிறைய நிதி ஒதுக்க வேண்டும். தற்போது 5 மாத காலத்திற்கு ஒத்திப்போடப்பட்டிருக்கிற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் காரணமாகக் கிடைக்கும் இடைவெளியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் இந்த நிலையை அடைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுக் கட்டிடங்களுக்கோ இடங்களுக்கோ உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைப்பதால் ஏற்படுகிற சங்கடத்தை நாம் அறிவோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். உயிரோடு இருக்கிறவர்கள் பல நேரங்களில் சர்ச்சைக்குரியவர்களாக மாறி, அதன் காரணமாக பல பிரச்சினைகளும் ஏற்பட்டு விடுகின்றன. எந்தத் தலைவரின் பெயரை வைத்தாலும், அந்தத் தலைவரைப் பற்றி பலப்படப் பேசிட அதுவே காரணமாகிவிடுகிறது. ஆகவே அரசியல்

தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் செய்கிற நன்மையே, பிரச்சினைக்குரியவராக இல்லாத சூழ்நிலையை உருவாக்குவதாகும். அந்த வகையில் உயிரோடு இருப்பவர்களின் பெயரை வைக்காமல் இருப்பதும், அப்படி வைக்கப்பட்ட இடங்களிலிருந்து அவற்றை எடுப்பதும் நல்லது என்று நான் கருதுகிறேன். ஆக, தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த இரண்டு நிமிடங்களில் நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

திரு. இரத்தின பாலகுருசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் நடத்த இருந்த தேர்தல்களை நடத்துவதற்கு முன்பாக பார்லிமெண்ட் தேர்தல்கள் இடையில் வந்துவிட்ட காரணத்தால், அந்தத் தேர்தல்கள் ஒரு 5 மாத காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட வேண்டுமென்று கோரி, அதற்கு சட்டமன்றப் பேரவையும் சட்டமன்ற மேலவையும் ஒப்புதல் தரவேண்டுமென்று கோரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நிலைமை இப்படி இருந்தாலும், வரும் ஜூன் மாதத்தில் உறுதியாக தேர்தல்களை நடத்துவோம் என்ற உறுதியையும் இந்த மாமன்றத்தில் அவர்கள் அளிக்கவும் இருக்கிறார்கள். மாண்புமிகு நல்லசிவன் அவர்கள் பேசும்போது, தாம் இந்த மசோதாவை எதிர்ப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-20)

இன்னும் பத்துப் பதினைந்து நாட்களுக்குள்ளாக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் எல்லாக் கட்சிகளும் தங்கள் வேலையைச் செய்ய வேண்டிய கடமை இருப்பதால், ஜூன் மாதத்தில் எப்படி ஊராட்சித் தேர்தல்களை நடத்த முடியும் என்பதை பொறுப்போடு உணர்ந்து, பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் முடிந்த பிறகு, ஊராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்தலாம் என்று கருதி, அய்ந்து மாதங்களுக்கு ஊராட்சித் தேர்தல்களை அரசு தள்ளி வைத்திருக்கிறது. அத்தகைய கருத்து நல்ல கருத்தாக இருக்கிறது. இருந்தாலும் அங்கே தனி அதிகாரிகளும், ஆணையாளர்களும், மற்றவர்களும் சர்வாதிகாரம் செய்கிறார்களென்று கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். அத்தகைய போக்கைக் கொஞ்சம் மாற்றி நடத்துவதற்கு இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பது

[திரு. இரத்தின பாலகுருசாமி] [1979 ஏப்ரல் 28

தெரியவில்லை. ஆகவே இரண்டாண்டு, மூன்றாண்டு காலத்திற்கு நாம் இருந்ததைப் போல இன்னுமொரு அய்ந்து மாத காலத்திற்குப் பொறுத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஆகவே தேர்தலைத் தள்ளிப் போடுவதிலே அரசாங்கத்திற்கு எந்த விதமான இலாபமுமில்லை. மக்களாட்சி நடைபெறுகிற நேரத்தில் மக்கள் நலன் கருதி, இந்தத் தேர்தல்களைத் தள்ளி வைத்திருக்கிறார்களே தவிர, வேறு எந்தவிதமான காரணமுமில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட, மேலும் தள்ளிப் போடாமல் ஜூன் மாதத்திலே தேர்தலை உறுதியாக நடத்துவீர்களா என்ற உறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்ட போது, ஜூன் மாதத்தில் கண்டிப்பாகத் தேர்தல் நடந்துவிடும் என்று அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிலிருந்து அவர் பின்வாங்கப் போவதில்லை. தேர்தல் அதிகாரி, பார்லிமெண்ட் தேர்தலை கண்டிப்பாக நடத்த வேண்டுமென்று ஆணை யிட்டதன் விளைவாக எல்லாக் கட்சிகளுக்கும் சௌகரியமாக இருக்கும் நாளைப் பார்த்து இந்த முறை வந்திருக்கிறது. ஆகவே இந்த சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

அதைப் போலவே நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கடன்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது அடுத்த சட்டமுன்வடிவு. அதைப் பற்றி இப்போது பேச வேண்டாம்.

திரு. இரத்தின பாலகுருசாமி : ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்று அமைகிறேன்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை சம்பந்தமான சட்டமுன்வடிவுகளையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தல் நடப்பது மேலும் நீண்ட காலத்திற்குத் தள்ளிப் போகுமோ என்ற சந்தேகமும், பயமும் இப்போது மக்களிடையே பரவ ஆரம்பித்திருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளுக்குச் சற்று மாறான வகையிலே சட்டத் திருத்தம் வருவதும், தேர்தல் தள்ளிப் போகக் கூடிய சூழ்நிலை உருவாவதும் விரும்பத்தக்க சூழ்நிலையல்ல.

நம்முடைய அரசியல் சட்டத்தின் 40-வது பிரிவில் உள்ளாட்சியைப் பற்றி முக்கியமான ஒரு கருத்து இருக்கிறது.

1979 ஏப்ரல் 28] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

The State shall take steps to organise Village Panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as Units of Self-Government.

'Organised' என்பதற்குப் பதிலாக 'Disorganised' என்ற முறையில் கலைப்பதற்குரிய முயற்சிகளையும், கலைத்த நிலையை மேலும் நீட்டிக்கிற நிலையையும் கைக்கொண்டிருந்தால், சுயாட்சி முறைத் தத்துவமே அடிபட்டுப் போய்விடுமென்ற எச்சரிக்கையை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அரசு எப்படியோ ஒரு முடிவிற்கு வந்திருக்கும். எங்களைப் போன்றவர்கள் சொல்லுவதால், தன்னுடைய முடிவுகளை மாற்றுவதற்கான சூழ்நிலையில்லை. ஆகவே என்னுடைய நிலையிலே உடனடியாகச் செய்யப் படுவதற்கு வேண்டிய காரியங்களைச் சொல்லுவது நல்லது என்று நினைக்கிறேன். ஆலோசனைக் குழுக்கள் திறம்பட இயங்க வேண்டும். பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, மாநகராட்சியாக இருந்தாலும் சரி, அதற்காக உள்ள ஆலோசனைக் குழுக்களில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும், சமுதாயத்தின் பொது வாழ்க்கையில் உள்ள பல்வேறு தரப்பிலுள்ளவர்களும் அமைகிற வகையிலே அமைத்துத் திறம்பட நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாதம் ஒரு முறை ஆலோசனைக் குழுக்கள் கூடினால், ஆங்காங்குள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொல்லுவதற்கும், அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும்போது, அவைகளைத் திருத்தக்கூடிய வாய்ப்பும் ஏற்படும் என்பதை வலியுறுத்தி அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பெயரிடும் சட்டமுன்வடிவையொட்டி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். உயிரோடிருக்கிறவர்களுடைய பெயர்களை பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொது இடங்களில் அப்படி பெயர்களை வைப்பதாக இருந்தால், அனுமதி வாங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நான் ஒரு சந்தேகத்தைக் கேட்க விரும்புகிறேன். கிராமங்களில், நகரங்களில், பத்தாயிரம் ரூபாய், இருபதினாயிரம் ரூபாய் என்று நன்கொடையாகக் கொடுத்து நீர்த் தொட்டிகளையும், கட்டிடங்களையும் கட்டுகிறார்கள். அப்படிப்பட்ட கட்டிடங்களுக்கு தங்களுடைய பெயரை நினைவுச் சின்னமாக இட வேண்டுமென்று கோருகிறார்கள். அப்படிச் செய்வதும் இயற்கை. எப்படியாவது நன்கொடையைப் பயன்படுத்தி

கட்டிடங்களைக் கட்டுவதும், நன்கொடையைக் கொடுத்தவர்களுக்கு மரியாதை செய்வதும் இயற்கை. இது நடைமுறையிலே இன்று இருக்கிறது. அப்படி நடைமுறையிலே இலட்சக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாகக் கொடுப்பவர்களுடைய பெயர்களை கல்லூரிகளுக்கும், பொது நிறுவனங்களுக்கும் சூட்டுகிறார்கள். இந்த விஷயத்தில் அரசு என்ன செய்யப் போகிறது ? பெயர்களை சூட்டவில்லையென்றால், அவர்கள் நன்கொடை கொடுக்கமாட்டார்கள். இதற்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

இரண்டாவது, பெயர் சூட்டுவதற்கு ஊராட்சிகளும், நகராட்சிகளும், மாநகராட்சிகளும் மாநில அரசின் அனுமதியைப் பெற வேண்டிய நிலையை நீட்டித்தால், சிகப்பு நாடா முறை நீண்டு கொண்டே போகிறது. மதுரைப் பல்கலைக் கழகம், சென்னை தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவைகளுக்கு தனிப்பட்டவர்களுடைய பெயர்களைச் சூட்டக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு இல்லையென்றும், மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதியைப் பெற வேண்டுமென்றும் நிலைமை இருந்தால், அந்தப் பெயர்களைச் சூட்டுவதில் எப்படி காலதாமதம் ஏற்பட்டிருக்குமோ அதைப் போலவே மாநில அரசின் அனுமதியைக் கேட்டுப்பெற வேண்டிய நிலைமை இருந்தால், அது நாம் சொல்லுகிற சுயாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக அமைகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம், நெருக்கடி தொடர்ந்து வந்ததால், ஏற்பட்டிருந்தாலும், ஜூன் மாதத்தில் நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து இங்கே உள்ள வெற்றிடங்களில் நிறைய ஆட்கள் வந்து சேர்கிற அளவுக்கு இந்த முறை இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இருக்குமென்று கருதுகிறேன்.

குறிப்பாக உள்ளாட்சிப் பேருந்து நிலையங்களிலும், பொது இடங்களிலும் கழிப்பிடங்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பது மிகத் தேவையாக இருக்கிறது. காரணம், பேருந்துகளிலே செல்லுகிறபோது, பேருந்துகள் நிற்கின்ற இடங்களில் பயணம் செய்கிறவர்கள் தவித்துப் போகிறார்கள்.

வெளிநாடுகளில் பேருந்துகளிலேயே இந்த வசதிகளைச் செய்திருப்பதால், இந்தத் தொந்தரவு இல்லை. நம்முடைய ஊரில் பேருந்து நிற்கிற நிலையத்தில் இந்த வசதி இல்லாததால், பெண்கள் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். அதிலும் குறிப்பாக இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இல்லையென்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை நிர்வாகத்தை நடத்துவதால், நிர்வாகத்தை நடத்துகிற நடைமுறை இப்போது அனைவருக்கும் முன்மாதிரியாக அமைந்திருக்கிறது. ஆகவே போதுமான கழிப்பிடங்களை, ஊராட்சிப் பொறுப்பிலே இருக்கிற பேருந்து நிலையங்களில் கட்டி, பேருந்து நிலையங்களை அழகுபடுத்தி வைக்கும்படி இப்போதிருக்கிற அதிகாரிகளுக்கு அமைச்சரவர்கள் ஆணையிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உயிரோடிருப்பவர்களுடைய பெயரை வைக்கக்கூடாதென்பது உன்னதமான யோசனை. இதனால் நன்கொடையைத் தருபவர்கள் தங்களுடைய பெயரை வைக்கவில்லையே என்று வருத்தப்படுவார்கள் என்று எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நன்கொடை கொடுப்பவருடைய பெற்றோர்கள் இருக்கலாம். ஒரு குடும்பத்திலே எல்லோரும் உயிரோடிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவருடைய தந்தை, தாய், தாத்தா, போன்றோர்களுடைய பெயரை வைக்கச் சொன்னால், அது நல்ல உதாரணமாக இருக்கும். நம்முடைய குடும்பச் சூழ்நிலை இருப்பதை நினைத்தால், உயிரோடிருப்பவர்கள் மீது ஆத்திரம் அதிகமாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இறந்து போவதே நல்லது, ஆத்திரம் வராமல் இருப்பதற்கு.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண் மண்ணெண்ணெய் வாங்க பெட்ரோல் பங்கில் நின்றிருந்தாள். இவ்வளவு வசதியாக உள்ள உங்கள் வீட்டிலே மண்ணெண்ணெய் தேவை இருக்காதே என்று கேட்டால், என்னுடைய மாமியாருக்கு உடம்பு சரியில்லை என்று அந்தப் பெண் கூறினாள். ஆகவே அவர்கள் வர முடியவில்லை போலும், இவர்கள் வந்திருக்கிறார்கள் என்று எண்ணினேன். பிறகு, மாமியாருக்கு உடம்பு சரியில்லை, நான்கு நாள் கூட தாங்காது. அப்போது தேடுவது கஷ்டம், ஆகவே முன்கூட்டியே வாங்குகிறேன் என்று சொன்னார்கள். அதைப் போல இருப்பவர்கள் மீது ஆத்திரம்தான் இருக்கும். ஆகவே அந்தக் குடும்பத்திலே இருக்கிறவர்களுடைய பெயர்களை வைப்பது நல்லது.

இப்போது வீதிகள், கட்டிடங்கள் ஆகியவற்றின் பெயரிலே சாதிப் பெயர் இருக்கிறது. இதையெல்லாம் நீக்கிவிட உத்தரவிட்டால், மிகச் சிறப்பாக இருக்கும். உத்தரவிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இது ஒரு சிறந்த காரியம். அப்படிச் செய்வதன் மூலமாக சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

கழிப்பிடங்கள் என்று சொல்லும்போது, கோபர் கேஸ் பற்றியும் சொல்லு கிறார்கள். ஊராட்சிப் பேருந்து நிலையங்களில் கழிப்பிடங்களை வைத்து அதன் மூலம் இந்த கோபர் கேஸ் பிளான்டையும் கட்டி வைத்து மாதிரியாகச் செய்து காட்டினால், மக்களும் அதைப் பயன்படுத்த வசதி ஏற்படுமென்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-30)

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, நமது அவையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய மசோதாக்களை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததிலே ஒரு பெரிய வியப்பு என்னவென்றால், 18 ஆம் தேதி தேர்தல் நடத்திவிடுவேன் என்று சொல்லிவிட்டு, 28 ஆம் தேதி பத்து நாட்களுக்குள்ளாகவே காரணங்களைக் கண்டுபிடித்து, தேர்தல் நடத்தும் காலத்தை மாற்றுவதற்கு அவர்கள் ஒரு மசோதாவை இங்கே கொண்டுவந்து இந்தத் தேர்தல்களைத் தள்ளி வைப்பதற்கு சொல்லப்படுகின்ற காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. தேர்தலை நடத்துவதற்குரிய சூழ்நிலைகள் அவர்கள் சொல்லி யிருக்கின்ற காரணத்தில் கனிந்து உருவாகி வாய்ப்பாக வந்திருக்கிறது என்பது பொருள். ஜூன் மாதம் 17 ஆம் தேதி தஞ்சாவூர், நாகப்பட்டினத்திலே, நாகை நாடாளுமன்றத் தேர்தல் நடக்கிறது என்று சொன்னால், அந்தத் தேர்தலோடு சேர்த்து இந்தத் தேர்தலை நடத்தலாம். அந்தத் தேர்தலை எப்படியும் அவர்கள் தவிர்க்கமுடியாத அளவுக்கு இருக்கிறது. இவர்கள் விரும்பினாலும், இந்த இரண்டு பகுதிகளிலே தேர்தல்களைச் சந்திக்கின்ற வகையில் தேர்தல் கமிஷன் தேர்தல் தேதியை நிர்ணயம் செய்துவிட்டது. வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்குச் செல்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தலில் வோட்டுப் போடச் செல்கின்றார்கள். அத்தோடு பஞ்சாயத்து யூனியனுக்கு, பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் போட்டி வைத்து அதே சமயத்திலே இன்னொரு போட்டியும் வைத்து, ஒரே பூத்தில் 4 தேர்தல்களையும் ஒரே சமயத்தில் நடத்துவது சௌகரியம் அல்லவா ? அதை மாற்றிக்கொண்டிருப்பது தேர்தலைத் தட்டிக் கழிப்பதற் குரிய பொய் காரணமே தவிர . . .

பொய் காரணம் என்று சொல்லிவிட்டேன் அல்லவா. அப்படிச் சொல்லக் கூடாது. மாற்றிக்கொள்ளுங்கள். 'உண்மைக்குப் புறம்பான' என்று வேண்டு மானால் மாற்றிக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இல்லை. கற்பனை காரணமே தவிர என்று வைத்துக்கொள்ளலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : அப்படியே மாற்றிக்கொள்ளுங்கள். அவர்கள் சொல்வது நீதியான, ஏற்றுக்கொள்ளக்கூடிய, நேர்மையான காரணம் அல்ல. இதிலிருந்து ஒன்று தெரிகிறது. இந்த அரசு தானாக விரும்பி ஒரு தேர்தலை கிராமப்புறங்களிலே சந்திக்க அஞ்சுகிறது என்பதை பகிரங்கமாகக் காட்டுகிறது. ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாங்களாக மதுரை மாநிலத்திலே தேர்தல் வைக்கவில்லையா, சந்திக்கவில்லையா, வெற்றி பெற வில்லையா என்று கேட்பார்கள். அரசு ஒரு சாதகமான சூழ்நிலையை வைத்துக்கொண்டு, அங்கே இருக்கின்ற ஒரு பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்றுகிறது. பெயரை மாற்றுவது என்ற தத்துவம் வருகிறது. அங்கே யார் பெயரை வைத்தால் ஓட்டு கிடைக்குமோ என்று தேர்தலுக்கு 5 தினங்களுக்கு முன்னாலே ஒரு பல்கலைக் கழகம் கிட்டே, இன்னொரு பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்து அவருடைய பெயரை வைத்திருக் கிறார்கள். அந்தப் பெரியாருடைய புகழை, அவர் மீது வைத்திருக்கின்ற மதிப்பை எள்ளளவும் நாங்கள் குறைவாக மதிப்பிடுகின்றவர்கள் அல்ல. ஒரு தேர்தல் சூழ்நிலையில் தேர்தலுக்காக ஒரு பெயரை மாற்றியிருக்கிறார்கள். ஒரு அறிவிப்புதான் இருக்கிறது. எப்போதுமே ஜனநாயக ரீதியிலே எதனையும் அணுகாத நிலையில் அங்கே ஒரு அறிவிப்பு செய்துவிட்டு, பிறகு அறிவிப்பின் மூலம் அறுவடையை முடித்துவிட்டு, இங்கே அந்தப் பெயரை மாற்றுவதற்காக சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய சாமர்த்திய முறையை அதற்குப் பின்னால் நம்புவது கூடாது என்று இப்போது கருது கிறார்கள். கேட்டிக்காரன் வித்தை 8 நாட்கள்தான் என்று சொல்வார்கள். அதுமாதிரி ஒரு தடவை ஒரு பகுதியிலே தேர்தலுக்காக ஒரு வித்தையைப் பண்ணிவிட்டார்கள். இனிமேல் அந்த வித்தையைப் பண்ண முடியாது. ஆனால் அவர்கள் இன்னொரு வித்தையைப் பண்ணுவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே அவர்கள் தேர்தல் நடத்த விரும்பினால், தஞ்சாவூர், நாகை தேர்தல் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கின்றது. இந்த மாநிலம் முழுவதும் பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களையும், பஞ்சாயத்துத் தேர்தல்களையும் இரண்டு கட்டமாக அல்லது மூன்று கட்டமாக வைத்துவிட்டு, முதல் கட்டமாக தஞ்சையிலோ, நாகையிலோ தொடங்கியிருக்கலாம்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 28

இதில் பாராளுமன்றத் தேர்தல்களுக்கு இடையிலேயே வைத்திருக்கலாம். நாட்டிலே அரசியல் கட்சிகள், தேர்தல்களை வெற்றி வாய்ப்பு இல்லாத நிலையில் தவிர்ப்பது இயல்பாகவே இருந்தாலும்கூட, தேர்தல் நம் நாட்டில் 30 ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு ஒரு பகைமை உணர்ச்சியையும், கிராமங்கள்தோறும் ஒருவிதமான தொல்லைகளையும் உண்டாக்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, மாதந்தோறும் தேர்தல் அல்லது வருடத்தில் 4 தடவைகள் தேர்தல்கள் என்பதை விட ஒரு இடத்தில் வாய்ப்பு ஏற்படுகின்றபோது, எல்லாத் தேர்தல்களையும் ஒன்றாக வைத்துவிட்டால், விரோதம் எல்லாம் ஒரு நாளைக்கு நடந்து முடிந்துவிடும். அதற்குப் பிறகு கொஞ்ச நாளில் விரோதம் மாறிவிடும். ஒரே குடும்பத்தில் ஒரே வீட்டில் சகோதரர்களுக்குள்ளேயே 3 கட்சியின் சார்பிலே நிற்கின்ற நிலை வருகிறது. மூன்று பேர்களும் தேர்தல் முடிகிறபோது அந்த வீட்டிலே பேசமாட்டார்கள். நாலு நாள் கழிந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பேசுவார்கள். அதற்குப் பிறகு ஒரு நல்ல நிகழ்ச்சியோ, கெட்ட நிகழ்ச்சியோ வீட்டில் ஏற்படுகின்ற போது எல்லோரும் ஒன்றாகிவிடுகிறார்கள். இந்தத் தேர்தல் வீடுதோறும், குடும்பம்தோறும், ஊர்தோறும் ஒரு பகைமை உணர்ச்சியை, வெறுப் புணர்ச்சியைக் கொண்டு வருகின்றது. கால கட்டத்திலே ஒரு பாராளுமன்றத் தேர்தல் நடத்துவதைப் பயன்படுத்திக்கொண்டு, அந்தப் பகுதியிலே எல்லாத் தேர்தலையும் நடத்துவதற்கு மாறாக அந்தத் தேர்தல் ஒத்திப்போடப்படுகிறது என்றால், இது தேர்தலைச் சந்திப்பதற்கு பயப்படுகிற அரசு என்று சொல்லிக்கொள்ளலாம் அல்லது இதை ஒரு ஸ்பெஷல் ஆபிசர் அரசு என்றுகூட சொல்லிக்கொள்ளலாம்.

நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் தொழில் அமைச்சர் அவர்களை 12 (3) அமைச்சர் என்று சொல்லி பெயர் கொடுத்தார்கள். ஸ்பெஷல் ஆபிசர் இலாகா என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பெயர் கொடுக்க விரும்பவில்லை. அதைக் கொடுப்பதானால், இதையும் கொடுப்பதில் தவறு இல்லை. ஊராட்சித் தேர்தலுக்கு 6 தடவை மாற்றம் கொடுக்கப்பட்டது. மற்றதற்கெல்லாம் 4 தடவைகள் மாற்றம் கொடுக்கப்பட்டது. இது ஜனநாயகத்திலே இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லை என்ற கொள்கையை வெளிப்படையாகவே காட்டுகிறது. அதிலும் ஜனநாயக அடிப்படையாக இருக்கவேண்டிய ஆரம்பப் பகுதிகளிலெல்லாம், கிராமப்பகுதிகளிலே எல்லாம் அதனுடைய வளர்ச்சி களைப் பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்றது. அங்கே மக்கள் ஆட்சி இல்லை. இவர்கள் தனிக் குழுவைப் போட்டிருக்கிறார்கள். இந்தத் தனிக் குழுவின்

1979 ஏப்ரல் 28] [திரு. ம. சங்கரலிங்கம்]

காலத்தை நீட்டிப்பதற்கு அதிகாரம் வழங்க வேண்டுமா? இந்தத் தனிக் குழுவும் எப்படி இருக்கிறது என்றால், ஒரு ஊரிலே இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியனுக்கு தனிக் குழு போட்டு, அதிலே 7, 8 பேரை போட்டிருந்தால், 6 ஆள் அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஒரு ஆள் வேறு ஒரு கட்சியிலேயிருந்து போடுவார்கள். அவர்கள் அனைவரும் ஒரு நாள் ராஜிநாமா செய்வார்கள். அங்கே யாருமே இல்லை என்ற நிலை இருக்கும். இந்த ஆறு பேர்களும் அந்த அதிகாரிகள் என்ன சொல்கின்றார்களோ அதற்கு ஏற்ப கை உயர்த்தும் காரியங்களைச் செய்பவர்கள். அவர்களே வந்து அப்படிச் சொல்கின்றார்கள். இந்தக் குழு சரியாக நடைபெறவில்லை, கூட்டம் நடப்பதில்லை. நாங்கள் சொன்ன அதிகாரத்தைக் கொடுக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆக ஜனநாயகத்தின் குரல்வளை, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 1976-ல் குடியரசுத் தலைவர் காலத்திலே பிடித்து நெருக்கப்பட்டு, அந்த நிலை இந்தியா முழுவதும் இருந்தது. இந்த அரசு வந்த பிறகு, கிராம ஜனநாயகத்திலும், ஊராட்சியிலும் இருக்கக்கூடிய ஜனநாயகத்தின் குரல் வளையை மீண்டும் பிடித்துக் கொன்று கொண்டே இருக்கிறதே தவிர வேறு அல்ல.

அதற்கு நாங்களும் உடந்தையாக இருந்துகொண்டிருக்கிறோம். எதிர்த்து வோட்டுப் போட்டுத் தோற்கடிக்க முடியவில்லை. எதிர்த்தோம், எதிர்த்தோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் உங்களை மன்னிக்கமாட்டார்கள், எங்களையும் மன்னிக்க மாட்டார்கள். "என் எதிர்த்துக்கொண்டே இருக்கிறார்கள்? என் புரட்சி செய்யவில்லை? வெளியிலே ஏன் பிரச்சாரம் செய்யவில்லை? என் ஊர் ஊராகப் போய் பிரச்சாரம் பண்ணவில்லை?" என்று எங்களைப் பார்த்துக் கேட்கக்கூடிய காலகட்டம் வந்துவிடும். எங்களை அந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டு, நீங்களும் போராடுகின்ற சூழ்நிலைக்கு வந்துவிடக்கூடாது என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை எங்கள் கட்சியின் சார்பில் ஜனநாயகத்தின் பேரில், கிராம வளர்ச்சியின் பெயரில் நாங்கள் வன்மையாக முழுச் சக்தியோடு எதிர்க்கிறோம்.

இன்னொரு மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது இதைவிட வெட்கக்கேடானது. கிராமங்களிலே, நகரங்களிலே ஒரு தெருவுக்கோ ஒரு கட்டடத்திற்கோ உயிரோடு இருக்கின்ற ஒருவருடைய பெயர் இருந்தால், அதை மாற்றிவிடுவது குறித்தது. அவர் பெயர் போடக்கூடாது. அவர் களுடைய நோக்கம் எல்லாம் இதற்கு முன்னாலே குறிப்பாக அன்றையு

முதல்வர், எங்கள் கட்சியினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயர் இருக்கக்கூடாது என்பது. அப்படி ஒரு மசோதாவை, தீர்மானத்தைக் கொண்டுவந்தால் நாங்களும் வரவேற்கிறோம். ஏனென்றால் உங்களுடைய காழ்ப்புணர்ச்சி மனப்பான்மை அப்படியாவது அடங்குகிறதே என்ற நிலையிலே அதை நாங்கள் வரவேற்று உங்களுடைய மன நிலையை அமைதிப் படுத்துவதற்காக நாங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்தக் காரணத்தைச் சொல்லிக்கொண்டு இந்த நாட்டிலே பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் அந்தந்தப் பகுதியிலே அரசியல் உணர்வோடு ஈடுபடாமல், அந்தந்த வட்டாரத்தின் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றியவர்கள், நல்லவர்கள், உயர்ந்தவர்கள் எல்லாம் இந்த நாட்டில் இருக்கக்கூடாது என்ற வகையில் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் பெயர் இருக்கக் கூடாது என்பதல்ல. அவர்களே இருக்கக்கூடாது. அவர்கள் இருந்தால், அவர்கள் பெயர் வராது. அவர்கள் செத்தால், சீக்கிரம் அவர்கள் பெயர் நாட்டிலே விளங்கும் அல்லது அவர்களுடைய பெயர் போடுவார்கள். அது நிலையான பெயராக இருக்கும். ஏனென்றால் ஒருவர் நல்ல தொண்டாற்று கிறார். அறுபது வயது வரை பொதுப்பணி ஆற்றுகிறார். அதற்குப் பிறகு நோய்வாய்ப்பட்டு 10 ஆண்டுகள் இருக்கிறார்கள். இந்த 10 ஆண்டுகாலத்தில் இவர் செய்த நல்ல பணிகள் எல்லாம் மறந்துபோகும். அதற்குப் பிறகு அந்த வார்டிலே இருக்கின்ற மெம்பர்களோ, நகரத்திலே வருகின்ற ஆட்சி யாளர்களோ இவரை நினைத்திருக்க முடியாது. "பப்ளிக் மெமரி இஸ் வெரி ஷார்ட்" என்று சொல்வார்கள். அதுபோல பொதுமக்களுக்கான பணியைப் பாராட்டுவது என்பது ஒரு பண்பினுடைய நல்ல எடுத்துக்காட்டு. இத்தகைய சட்டங்களைக் கொண்டு வருவது இந்த அரசினுடைய பண்பற்ற போக்கையும், காழ்ப்புணர்ச்சியையும், ஜனநாயக விரோதத் தன்மையையும், எதிர்க் கட்சிகளை மதிக்கத்தெரியாத தன்மையையும் எடுத்துககாட்டுகிறது என்பது தான் பொருள்.

(பிற்பகல் 4-40)

பேரறிஞர் அண்ணா அவர்கள் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்னார்கள். அந்தப் பரம்பரையிலே வளர்ந்தோம் என்று சொல்லிக்கொண்டு, அந்தப் பெயரையும் தாங்கி, அவர் பெயரிலேயே கட்சியையும் வைத்துக்கொண்டு, அவர் எதற்காக அதைச் சொன்னாரோ, எப்படி எதிர்க் கட்சிகளை மதித்தாரோ, அவர் ஆட்சி ஏற்ற பிறகு எப்படி அன்று எதிர்க் கட்சிகளிலே இருந்த முன்னாள் முதலமைச்சர்களை அவர்கள் வீட்டிலே போய் பார்த்து, அவர்களுடைய ஆசிகளைப் பெற்று, ஆட்சி நடத்தி, தமிழகத்திலே ஜனநாயகத்திற்கு ஒரு புதுப் பொருளையும்,

புது நாகரிகத்தையும், புதுப் பண்பாட்டையும் கொண்டு வந்தாரோ, அவற்றை யெல்லாம் ஆளும் கட்சியினர் அழித்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஆளும் கட்சிக்குத்தான் கெடுதல். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதனால், ஆளும் கட்சிக்கும், அரசுக்கும் இழுக்கு வரும். அரசினுடைய நோக்கமெல்லாம், எங்களுடைய தலைவரின் பெயர் மங்க வேண்டுமென்பதுதான். ஒருவேளை அவருடைய பெயர் அகற்றப்பட்டாலும், 4½ கோடி மக்களின் உள்ளத் திலிருந்து அவருடைய பெயரை அகற்ற முடியாதென்று சொல்லி, **அத்தகைய** மசோதாக்களையும் கண்டித்து அமைகி**றேன்.**

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இங்கே அவை முன் வைக்கப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவுகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, ஏதோ 5 மாதக் காலம் அவகாசம் தேர்தல் நடத்துவதற்குக் கேட்கின்ற காரணத்தால், 5 மாதங்களுக்குப் பிறகுதான் தேர்தல் நடக்கும் என்ற உணர்வோடு மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள் என்பதுதான். அவர்களுக்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் தெரிவித்தது போல ஜூன் இறுதிக்குள் தேர்தலை நடத்துவதாக இருந்தாலும், இந்தக் கால அவகாசம், கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டாக வேண்டும். ஏனென்றால் வருகிற 30 ஆம் தேதியோடு ஊராட்சிகளுடைய, ஊராட்சி ஒன்றியங்களுடைய பதவிக்காலம் முடிவடைகிறது. அப்படி 30 ஆம் தேதியோடு முடிவடையும்போது, 1 ஆம் தேதி தேர்தலை நடத்தும் நிலைமையில் அரசு இல்லை. கேட்கப்படக் கூடிய இந்தக் கால அவகாசத்தை நாம் குறைத்துக்கொள்ள வழி இருக்கிற தென்பதையும், தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்துகொண்டிருக்கிறதென்பதையும் மீண்டும் சுட்டிக்காட்டி வலியுறுத்த விரும்புகிறேன். இதற்கிடையிலே அரசு செய்யும் பணிகள், தேர்தல் சீரிய முறையிலே நடக்கத்தக்க வகையில், ஊராட்சிகள் ஒழுங்குற அமையத்தக்க வகையில், பெரிய ஊராட்சிகள் முறையாக, சரியாக பிரிக்கப்படும் வகையில், வாக்காளர் பட்டியலை முழுமையாக்கி, கன்னியாகுமரி மாவட்டம் போன்ற மாவட்டங்களிலுள்ள ஊராட்சி முறையைச் சீர்படுத்தி அமைக்கும் முறைகளை, பல்வேறு செயல்திட்டங்களை, ஜனநாயகம் செழுமையாக உள்ள வகையில், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகக் காரியங்களை மேற்கொண் டிருக்கிறோமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, அமைச்சர் ஒவ்வொரு முறையும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து விடுகிறார், அதை அடிப்படையாகக் காட்டி கால அவகாசம் கேட்கிறார் என்று

குறிப்பிட்டார். நான் கால அவகாசம் கேட்பதற்குக் காரணத்தைக் கண்டு பிடிக்கவில்லை என்றும், காரணம் இருக்கின்ற காரணத்தாலேதான் கால அவகாசம் கேட்கின்ற நிலைமை இருக்கிறதென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தேர்தலைப் பற்றிப் பேசும் போது, இவ்வளவு கால நீட்டிப்பு கூடாதென்பதைப் பற்றி கருத்துக்களைச் சொன்னார்கள். விரைவாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று தெரிவித்தார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அந்த வகையிலே எண்ணத்தை எடுத்துச் சொல்லி, நாடாளுமன்றத் தேர்தலோடு இதையும் இணைத்து நடத்திவிடக் கூடாதா என்று கேட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலோடு இதையும் சேர்த்து நடத்தினால் சரியாக வராது. காரணம், ஊராட்சி உறுப்பினருக்கு ஒரு வாக்குச்சீட்டும், ஊராட்சித் தலைவருக்கு ஒரு வாக்குச்சீட்டும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்கு ஒரு வாக்குச் சீட்டும் என்று இப்போதே மூன்று வாக்குச் சீட்டுக்களை வைத்திருக்கிறோம். எனவே நாடாளுமன்றத் தேர்தலையும், இதையும் இணைப்பது நடைமுறைக்கு ஒத்து வராது என்று அரசு கருதுகிற காரணத்தால், அந்தத் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு, இதை நடத்தலாமென்று அரசு நினைக்கிறது. தேர்தல் என்றால் பகைமை வளரும், தேர்தல் என்றால் காழ்ப்புணர்ச்சி ஏற்படும், தேர்தல் என்றால் ஒரு குடும்பத்திற்குள்ளே ஒருவருக்கொருவர் பிடிக்காமல் போய்விடும் என்று எண்ணத் தேவையில்லை. எதிர்க் கட்சித் தலைவரவர்களைப் போன்றவர்கள், நல்ல ஆரோக்கியமான ஜனநாயக அறிவினை நாட்டிலே வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பகைமையோ, காழ்ப்புணர்ச்சியோ இல்லாமல் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடக்கும் வகையில், நிச்சயமாக அத்தனை கட்சிகளும் ஒத்துழைப்பு கொடுக்கும் நிலை இருக்கிறது. ஆகவே அதைக் காரணமாக எண்ணி அஞ்சிடத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலுக்கான கால நீட்டிப்புப் பற்றிப் பேசும்போது, அவ்வளவு ஆத்திரம் எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு வரவில்லை. ஆனால் இறுதியாக இருக்கின்ற சட்டமுன்வடிவின்மீது பேசும்போது, கருத்துக்களை உணர்ச்சி வசப்பட்டுத் தெரிவித்தார்கள். அவருக்குப் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் அப்படிப் பேசியதற்குக் காரணம், அரசாங்கத்தினுடைய நோக்கத்தை அவர் தவறாகப் புரிந்துகொண்டதுதான். இதற்கு முன்னாலே இடப்பட்ட பெயர்கள் அகற்றப்பட வேண்டும், எந்தத் தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டனவோ, அந்தப் பெயர்கள் அழிக்கப்பட வேண்டும்

என்கின்ற காழ்ப்புணர்ச்சியோடு இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்திலே, இன்றைக்கு உள்ள ஆட்சியாளர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, பதவியைப் பயன்படுத்தி, அவர்களுடைய பெயர்களை ஒவ்வொரு அரசு நிறுவனங்களின் கட்டிடங் களுக்கும் அமைத்து, அதுவே ஒவ்வொரு கால கட்டத்திலும் தொடர்ந்தால், அது நாட்டுக்கு நல்லதல்ல என்கின்ற அடிப்படையிலே தான் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். உயிரோடு இருப்பவர்கள் புகழோடு இல்லையா, சமுதாயத்திற்குப் பணியாற்றியவர்கள் உயிரோடு இல்லையா, தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இல்லையா, தமிழ் நாட்டிற்கும், தமிழுக்கும் தொண்டாற்றியவர்கள் இல்லையா என்றால் இருக்கிறார்கள். இருக்கிற அந்தப் பெரு மக்களுடைய பெயர்களைச் சூட்டுவதிலே அரசுக்கு ஆட்சேபனை இல்லை. இன்றைக்கு இருக்கிற நிலைமையில், ஊராட்சி அமைப்புகளில், ஊராட்சியானாலும், நகராட்சி யானாலும், மாநகராட்சியானாலும், மாநில அளவினாலும், பதவியில் இருக்கிறவர்கள் தங்களுடைய பெயர்களை வைக்கிறபோது, மாற்றுக் கருத்துக்களுக்கு, விமர்சனங்களுக்கு, கண்டனங்களுக்கு ஆளாகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வரக்கூடாதென்று அரசு கருதுகிறது. இறந்து விட்டவர்களுடைய நினைவை மக்கள் மறந்துவிடக்கூடாதென்று கருது கிறோம். உயிரோடு இருப்பவர்கள், அவர்கள் வாழ்நாள் மட்டும் தொண்டாற்ற முடியும். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தெரிவித்ததுபோல், ஒருவர் பெயரை எடுப்பதாலேயே, அவருடைய புகழுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறோ மென்பதாகாது. உள்ளாட்சியிலே ஒரு குறிப்பிட்ட பணியாற்றிய மேலோர்கள், சான்றோர்கள் பெயர்களை வைக்க வேண்டாமா என்று தெரிவித்தார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலோர்கள், சான்றோர்கள், தங்களுடைய பெயர்களை வைப்பதிலே அவ்வளவு அக்கறை காட்டமாட்டார்கள் என்று உறுதியாக நான் நம்புகிறேன். அவர்களைப் பெருமைப்படுத்த என்று எடுத்துக்கொள்ளாமல், பதவியைப் பயன்படுத்தி, போலித்தனமான விளம்பரத்தை உருவாக்க இது சில நேரங்களில் பயன்படும். சில நேரங்களில் நல்லவர்களுடைய பெயர்களை வைக்கப் பயன்பட்டாலும், சில நேரங்களில் நாட்டிற்குப் பணியாற்றியவர்கள் பெயர்களை வைக்கப் பயன்பட்டாலும், வெறும் பதவியின் காரணமாக, பெயர்களைச் சூட்ட விழா நடத்தவும் இது பயன்பெறலாம். இவ்வளவையும் சீர்தூக்கி ஆராய்ந்த பிறகு தான், இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் சொல்கிறேன். இப்படிப்பட்ட சட்டமுன்வடிவு இல்லாமல், அரசு தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ள, ஆட்சியிலே பொறுப்பேற்றுள்ள தலைவர்களின்

[திரு. கா. காளிமுத்து] [1979 ஏப்ரல் 28

பெயர்களை விளம்பரப்படுத்திக்கொள்ள, அமைச்சர்களின் பெயர்களை விளம்பரப்படுத்திக்கொள்ள அல்லது ஆங்காங்கு இருக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்த பெருமக்களுடைய பெயர்களை விளம்பரப்படுத்திக்கொள்ள, இந்தச் சட்டமுன்வடிவு இல்லாமலேயே நிச்சயமாகச் செயல்பட முடியும். ஆக இது ஒரு வகையில் மற்றவர்களுக்குப் பாதுகாப்பாக அல்ல, தன்னுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. போலி விளம்பரம் அதிகமாகும் சூழ்நிலை வரக்கூடாது, அதிகாரத்திற்கு வந்தவுடன் தங்களுடைய பெயர்கள் இருக்க வேண்டுமென்ற மனோபாவம் இருக்கக்கூடாது, பொதுப் பணிக்குச் சூந்தகமாக, இடையூறாக இருந்த கருத்துக்களின் அடிப்படையில் தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுகிறது. எதிர்க் கட்சிகளை இந்த அரசு மதிக்கிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு. மல்லிகைக்கும் மணம் உண்டு என்று போர்டு எழுதி, விளம்பரம் போட்டுத்தான், மல்லிகையின் மணத்தைப் பரப்ப வேண்டுமென்றில்லை. மணத்தை நிச்சயமாக நுகர முடியும். எதிர்க் கட்சித் தலைவரவர்களின் புகழைச் சுருக்க, இப்படிப்பட்ட சட்டமுன்வடிவு கொண்டுவரப்படவில்லை என்பதையும், இது நல்ல நோக்கத்தோடு, தூய நோக்கத்தோடு கொண்டுவரப்படுகிறதென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நன்கொடையாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய பெயர்கள் இடம் பெற வேண்டாமா, அவர்கள் பணிக்கு உற்சாகமூட்ட வேண்டாமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஈா. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனன் அவர்கள் சொன்ன பதில் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். அவர்களுடைய மூதாதையர்களின் பெயர்களைப் பெருமைப் படுத்த, நிச்சயமாக அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்யலாம். இதில் வேறு தவறான நோக்கமில்லை என்பதையும், நல்ல நோக்கத்தோடு இது கொண்டு வரப்படுகிறதென்பதையும், தேர்தல்களை நடத்த இருக்கிறோமென்பதையும், அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். போராட்டம் நடக்கிற அளவிற்கு, புரட்சி ஏற்படுகிற அளவிற்கு எதிர்க் கட்சிகளை விடமாட்டோம் என்பதையும் சொல்லி, இந்த மசோதாவை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 28]

(பிற்பகல் 4-50)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 479-480 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1979).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 38/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 38/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 38/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 38/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1979).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 480-ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(4) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1979).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

@ 480-483 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து எடுத்துக்கொள்ளப்பட இருக்கும் இரண்டு சட்டமுன்வடிவுகள் மீதும் உறுப்பினர்கள் பொதுவாகப் பேசி விடலாம். வாக்கெடுக்கும்போது தனித் தனியே விட்டு விடலாம்.

(5) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1979).

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Debt Relief (Amendment) Bill@, 1979 (L.A. Bill No. 20 of 1979), as passed by the Assembly, be taken into consideration".

By the Tamil Nadu Debt Relief Act, 1976, permanent relief, by way of liquidation of debts due to pawnbrokers, money-lenders and other non-institutional sources of credit who have been charging usurious rates of interest and indulging in other malpractices was given to the weaker sections of the rural community who are connected with agricultural production. Accordingly, the debts due to such pawnbrokers, money-lenders and other non-institutional sources of credit incurred by the said weaker sections before the date of commencement of that Act were deemed to have been wholly discharged. During the actual working of the Act, however, it has been found necessary that certain changes should be effected in the Act so as to make the intention clear.

I commend the Motion for the acceptance of the House.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 20/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

@ 483-486 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் திருத்தத்திற்குரிய காரணங்களை ஓரளவு தெளிவாக விளக்கவில்லை என்று எனக்குப் படுகிறது. இந்த மசோதாவின் மூலம் திருத்தங்கள் வர இருக்கின்றன. இதற்கு முன்பு இருந்த சட்டத்தில் குடும்ப ஆண்டு வருமானம் 200 ரூபாய் என்று பொதுவாக இருந்தது. இப்பொழுது அந்தக் குடும்ப வருமானத்தை 'மொத்த குடும்ப வருமானம்' என்று குறைத்திருக்கிறார்கள். இருநூறு ரூபாய் மாத வருமானத்துக்குக் கீழே உள்ளவர்களுடைய கடன் வசூல் செய்யப்படுகிறது என்கிற முறையிலே 1976 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது "கடன் நிவாரணச் சட்டம்". அந்தச் சட்டம் ஏழைகளுக்குக் கடன் நிவாரணம் என்ற அடிப்படையில் தான் கொண்டு வரப்பட்டது. இருநூறு ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு என்று பழைய சட்டத்தில் இருந்ததை இப்பொழுது மொத்த குடும்ப வருமானம் 200 ரூபாய் உள்ளவர்களுக்கு என்று திருத்தியிருக்கிறார்கள். இப்படித் திருத்தியதன் நோக்கம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக விளக்கவில்லை என்று எனக்குப் படுகிறது. கிராஸ் இன்கம் என்று போடுவதனால் இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் அனுகூலம் பெறக்கூடிய ஏழைகளின் எண்ணிக்கை குறைகிறது.

சாதாரணமாக வருமானம் என்றால் நிகர வருமானம் என்றுதான் கூறுவார்கள். குடும்பத்தில் மொத்தமாக பல தொழிலில் ஒருவர் ஈடுபட்டிருந்தாலும், நிகர வருமானம் 200 ரூபாய்க்கு உட்பட்டவர்களுக்கு முன்பு நிவாரணம் இருந்தது. இப்பொழுது மொத்த குடும்ப வருமானம் என்று போடும்போது 200 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு நிகர வருமானம் 150 ரூபாய்க்குக் கீழேயும் போகலாம். 140 ரூபாய், 150 ரூபாய் நிகர வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இப்பொழுதுள்ள திருத்தத்தின் மூலம் அனுகூலம் கிடைக்கும். பழைய சட்டத்தின் மூலம் அனுகூலம் அடைந்தவர்களின் எண்ணிக்கையை விட இந்தச் சட்டத்தின் மூலம் அனுகூலம் அடைகிறவர்களின் எண்ணிக்கை இதன் மூலம் வெகுவாகக் குறைகிறது. இலட்சக்கணக்கான ஏழையெளிய மக்கள், அவர்களுடைய கடனைப் பொறுத்தவரையில், அடகு வைக்கப்பட்ட பொருள்கள் எல்லாம் திரும்பக் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். இலட்சக்கணக்கான ஏழையெளிய மக்கள், அதாவது கிராஸ் இன்கம் என்பதன் வியாக்கியானத்துக்கு உட்படாத ஏழைகள் மீது, மீண்டும் பான் புரோக்கர்கள் வழக்குக்குப் போகக் கூடிய நிலை இருப்பதால், அவர்கள் வசூல் செய்யக் கூடிய வாய்ப்பை இது கொடுக்கிறது.

ஏற்கெனவே இருந்த சட்டத்தில் இந்தத் திருத்தம் கொண்டு வர வேண்டிய அவசியம் என் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் குறிப்பிட வேண்டும். ஏற்கெனவே இருந்த சட்டத்தில், கடன் பெற்று நகைகளை ஈடாக வைத்திருக்கிற இடத்தில், அடகு வைத்தவர்கள் போலீசாரிடம் அல்லது தாசில்தாரிடம் சென்று, தாங்கள் அடகு வைத்த நகைகள் விற்கப்படுவதாக சந்தேகப்படுவதாகச் சொன்னால், அவர்கள் உடனடியாக அங்கே போய் அதை ஜப்தி செய்து விற்க விடாமல் பாதுகாப்பு கொடுத்தார்கள். இப்பொழுது ஆர்.டி.ஓ.-விடம் எழுத்துபூர்வமாக எழுதிக் கொடுத்த பிறகுதான், தாசில்தாரிடம் போக வேண்டுமென்று இருக்கிறது. அடகு வைத்த நகையின் சொந்தக்காரருக்கு பொருள் விற்கப் படக்கூடிய சந்தேகம் வரக்கூடிய நேரத்தில், முன்பு இருந்த முறைப்படி தாசில்தாரிடம் அல்லது போலீசாரிடம் தெரிவித்தால், அவர்கள் அந்த முயற்சியைத் தடுக்க முற்படுகிற சூழ்நிலை இருந்தது. விற்கப்படக் கூடிய சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்தால், உடனே போலீசார் அல்லது தாசில்தார் சோதனை போட்டு, விற்பனைக்குத் தடை போடக் கூடிய நிலை இருந்தது. அப்படித்தான் பழைய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால்

(பிற்பகல் 5-00)

இப்போது தாசில்தார் போவதற்கு முன்பு ஆர்.டி.ஓ.-விடமிருந்து எழுத்து மூலமாக அனுமதி வாங்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்கு முன்பாக அடகுக்கடைக்காரர்கள் தாசில்தார் வரப்போகிறார் என்று தெரிந்தால், பொருட்களை வேறு இடத்திற்கு மாற்றலாம். அப்படிப்பட்ட நிலைமை இருப்பதால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கமே தோற்றுப் போகிறது. அது மட்டுமல்ல, பழைய சட்டத்தில் இந்த அரசு என்ன குறை கண்டது? இதற்கு விளக்கம் சொல்ல வேண்டும். இங்கே, நடைமுறையில் பொதுவாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. தாசில்தார் போய் என்ன பண்ணினார், எத்தனை அடகுக்கடைக்காரர்களிடம் வம்பு பண்ணினார், என்ற தகவல் வந்திருக்கிறதா? என்ன கெடுபிடிகள் நடந்திருக்கிறது? அதற்கான விவரம் இருக்கிறதா? அடகுக்கடைக்காரர்கள் அநியாயமாக தாசில்தார்களால் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கத்திடம் புள்ளிவிவரம் இருக்கிறதா? ஆதாரங்கள் இருக்கிறதா? ஆதாரம் இல்லையென்றால், ஆர்.டி.ஓ. மூலம் அதிகாரம் வருவதற்கு முன்பு அடகுக்கடைக்காரர்கள் தப்பித்துக்கொள்ள வழி செய்யப்பட்டிருக்கிறது என்று நான் எடுத்துக் கொள்ளக்கூடாதா, அப்படி நோக்கம் கற்பிக்கக்கூடாதா? இன்னொன்று. ஆர்.டி.ஓ.-வுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு 'சஃபிஷன்ட் காஸ்' இருக்கிறது என்று தெரிந்தால்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 28

போதிய காரணம் இருக்கிறது, அடகுக்கடைக்காரர்கள் வீட்டில் போய் சோதனை செய்வதற்கு போதிய காரணங்கள் இருக்கின்றன என்று அவர் திருப்தியடைந்தால்தான், ஆர்.டி.ஓ. தாசில்தாருக்கு அனுமதி கொடுப்பார். அடகு வைத்தவன் 200 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவன், ஒரு வக்கீல் வைத்து ஆர்.டி.ஓ.-வை கன்வின்ஸ் பண்ணி, ஒரு 'ப்ரைமாஃபேசி கேஸ் இருக்கிறது என்று கன்வின்ஸ் பண்ணி, அதற்குப் பிறகு தாசில்தாருக்கு ஆர்.டி.ஓ. அனுமதி கொடுத்து, அதன் பிறகு தாசில்தார் அடகுக்கடைக்காரரிடம் சென்று இந்தச் சொத்து பறிபோகாமல், ஜப்திசெய்யாமல் பாதுகாப்பது என்பது சாத்தியமா என்று பார்க்க வேண்டும். நாம் யாருக்கு உதவி செய்வதாகச் சொல்கிறோமோ, அவர்களுக்கு உண்மையிலேயே அது உபயோகப்படுகிறதா? ஆர்.டி.ஓ.-வை மூவ் பண்ணி தாசில்தாருக்கு 'பெர்மிஷன்' வாங்கிக் கொடுத்து, தாசில்தாரைக் கூட்டிக்கொண்டு போய், அடகுக்கடைக்காரனிடம் இந்த சாதனத்தை விற்கக்கூடாது என்று சொல்ல முடியுமா? ஆகவே, இந்த இரண்டு பேரில், அடகு வைத்திருப்பவர் அடகுக்கடைக்காரர் ஆகிய இருவரில் யார் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவார்கள். பயன்படுத்த யாருக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது? அப்படிப் பார்த்தால், அடகுக்கடைக்காரனுக்கு அனுகூலம் செய்வதற்கான முறையில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே செய்ததை மாற்ற வேண்டிய அவசியம் என்ன? எத்தனை தாசில்தார்கள் அடகுக்கடைக்காரர்களைக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள்? அதற்கு எழுத்து மூலமாக ஆதாரம் இருக்கிறதா? அவர்கள் கோர்ட்டுகளிலே முறையிட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் ஆதாரங்கள் காட்ட வேண்டாமா? இல்லாவிட்டால், அடகுக்கடைக்காரர்களிடம் இந்த அரசுக்கு இருக்கும் பற்றின் காரணமாகத்தான் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? லட்சக்கணக்கான மக்கள், ஏழையெளியவர்கள், ஏற்கெனவே தங்களுக்கு அந்தமாதிரி பாதுகாப்பு இருக்கிறது என்று நினைத்தவர்கள் பூராவும், கோர்ட்டிலே வாபஸ் வாங்கலாம் என்று நினைத்தவர்கள் எல்லாம், மீண்டும் தாங்கள் தொந்தரவுபடுத்தப்படும்போது, இந்த சர்க்கார் மாறிவிட்டது, இந்த அரசு அடகுக்கடைக்காரர்களின் நிர்ப்பந்தத்திற்குப் பணிந்துவிட்டது என்று நினைத்தால், என்ன தப்பு? இந்த ஏழைகளை கன்வின்ஸ் பண்ண என்ன ஆதாரம் இருக்கிறது? ஆர்.டி.ஓ.-விடமிருந்து பெர்மிஷன் வாங்க வேண்டும் என்பதற்கு என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது? ஆகவே, இந்த மசோதா திருத்தப்பட்டிருக்கிற முறை, எந்த அடகுக்கடைக்காரர்களிடமிருந்து ஏழையெளிய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று முன்பு சட்டம் கொண்டுவரப்பட்டதோ, அந்த அடகுக்

1979 ஏப்ரல் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

கடைக்காரர்களின் கரத்தைப் பலப்படுத்த இந்தத் திருத்தத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்று சொல்லி இந்த 20-வது சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

21-வது சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், 500 ரூபாய்க்கு . . .

திரு. ஏ. ஆர். தாமோதரன் : 21-வது மசோதா பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மசோதா பற்றி என்னவென்று படித்தால்தான் ரெக்கார்டிலே வரும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நானே சொல்லிவிட்டேன். இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. பேசும்போது ஒன்றாகச் சேர்த்துப் பேசலாம். பின்னால், நிறைவேற்றும்போது தனித்தனியாக நிறைவேற்றலாம்.

திரு. க. அறிவழகன் : இதே தமிழில் மாண்புமிகு உறுப்பினர் தாமோதரன் அவர்கள் பேசினால் மகிழ்ச்சியாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சரேகூட இப்போது ஆரம்பித்து விட்டார். கொஞ்ச காலம் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் வந்துவிடுவார்.

திரு. ஆ. நல்லசிவன் : 21-வது மசோதாவை நான் எதிர்க்கிறேன். ஐநூறு ரூபாய்க்குக் கீழே கடன்பட்டிருப்பவர்களுக்கு அந்தக் கடன் ரத்து செய்யப்படும் என்றும் 1978 ஆம் ஆண்டு வரையில் 500 ரூபாய்க்குக் கீழே தனியாரிடமிருந்து கடன்பட்டிருப்பின் அது ரத்துசெய்யப்படும் என்றும் பழைய சட்டம் கூறுகிறது. இப்போது அதற்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தின்படி இந்த மாதிரி அவர்களுக்கு கடன் ரத்துசெய்யப்படுவதற்கான சாத்தியக்கூறு இல்லை. கடன்பட்டவர்கள், தாங்கள் வாங்கிய கடனைப்போல 1½ மடங்கு அசலாகவும், வட்டியாகவும் செலுத்தியிருந்தால், அவர்கள் அதற்கு மேல் தரவேண்டியதில்லை என்று இருந்தது. இதிலே என்ன பிரச்சினை என்றால், ஏற்கெனவே, 500 ரூபாய்க்குக் கடன்பட்டிருந்த லட்சக்கணக்கான ஏழையெளிய மக்கள் அந்தக் கடனிலிருந்து தாங்கள் நிவாரணம் பெற்றதாக ஓராண்டுக்கும் மேலாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களின் மேல் உள்ள கேசை ரீ-ஓப்பன் பண்ணலாம், அவர்கள் 1½ மடங்கு அசலும், வட்டியும் தராமலிருந்தால், அவர்கள் மீது வழக்குகளையெல்லாம் ரீ-ஓப்பன் பண்ணி, அவர்களைக் கோர்ட்டுக்கு இழுத்துக்கொண்டு போய், அந்த 1½ மடங்கு வாங்கும்வரை அவர்களை

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 28

அசலைக்கழித்து பணத்தைப் பெறலாம். தராவிட்டால் 1½ மடங்குக்குக் குறைவாக இருக்கிற பணத்தைப் பெறும் வரையில் கேஸ் நடத்தி, 1½ மடங்கு மதிப்புள்ள சொத்தை ஜப்தி செய்யலாம். தமிழ்நாட்டில் இந்தக் கடனிலிருந்து நிவாரணம் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்த லட்சக் கணக்கான மக்களுக்கு அப்படி நிவாரணம் கிடைக்காது என்ற முறையில் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஐநூறு ரூபாய்க்குக் கீழ் உள்ளவர்களுடைய கடன் பூராவும் ரத்துசெய்யப்பட்டது. ஆனால் இப்போது 1½ மடங்கு என்று சொல்கிறார்களே என்ன அடிப்படையிலே? இந்த ஆட்சி வருவதற்கு முன்பே கடன் வாங்கியவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவு அமுலுக்கு வருவதற்கு முன்பே கடன் வாங்கியிருக்கிறார்கள். அவர்களும் 1½ மடங்கு கொடுக்கலாம். ஒன்றரை மடங்கு என்று சொல்கிறீர்களே, முதலைப் போல, அசலைப்போல 1½ மடங்கு வட்டி கொடுத்தாலும் கடன் தீரும் என்று சொன்னீர்களே, என்ன அடிப்படையில்? இரண்டு மசோதாக்களையும் அவசரமாக நிறைவேற்றுகிறீர்களே இவைகள் யாருக்குச் சாதகமாக இருக்கின்றன? கடன்பட்டவருக்குச் சாதகமாக இருக்கிறதா? கடன் கொடுத்தவருக்குச் சாதகமாக இருக்கிறதா? இதற்குப் பெயர் ஏழைகள் கடன் நிவாரணச் சட்டம் என்று ஏன் போடுகிறீர்கள்? கடன் கொடுத்தவனுக்கு நிவாரணச் சட்டம் என்று போடுங்கள். அப்போது கொண்டுவந்தது ஏழைகளுக்கு நிவாரணச் சட்டம். இப்போது கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டம் கடன் கொடுத்தவனுக்கு நிவாரணம் அளிக்கும் சட்டம். அப்படியிருக்க ஏன் இதை இரண்டாவது சட்டம் என்று போடுகிறீர்கள்? எந்த ஏழையெளிய மக்களைப்பற்றிப் பேசுகிறீர்களோ, போராட்டங்கள் வரும்போது எந்த விக்கர் செக்‌ஷனைப் பகடைக்காயாகப் பயன்படுத்தினீர்களோ, இப்போது இந்த வட்டிக்கடைக்காரர்கள், லேவாதேவிக்காரர்களின் நிர்ப்பந்தத்தைப் பார்த்து பயந்து, அந்த லட்சக் கணக்கான ஏழையெளிய மக்களை இவர்கள் கையில் இந்தச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கிறீர்கள். இவைகளையெல்லாம் புரிந்துகொள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு மனப்பக்குவம் கிடையாது என்று நினைக்கிறீர்களா? அப்படி அப்போது கொண்டு வந்ததை ஏன் இப்போது மாற்றுகிறீர்கள்? அப்படி என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று விளக்கிச் சொல்ல வேண்டும். ஏழையெளிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கவில்லை என்று நான் சொல்லும் குற்றச்சாட்டுக்காவது விளக்கம் சொல்ல வேண்டும். இந்த இரண்டு மசோதாக்களும் ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நம்பிக்கையை சிதைக்கின்றன. இந்த அரசு ஆட்சிப்பொறுப்பிலே இருக்க இருக்க, ஆட்சிப்பொறுப்பிலே இருக்கும் நாள் அதிகமாக அதிகமாக, எந்த ஏழைகளினால் ஆட்சிக்கு வந்ததோ அவர்களை மறக்க ஆரம்பிக்கிறது. ஆகவே, இந்த அரசு ஆட்சியிலே

979 ஏப்ரல் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

இருக்கிற காலம் அதிகமாக அதிகமாக ஆட்சிப்பொறுப்பிலே எந்த மக்கள் இந்த அரசைத் தூக்கி வைத்தார்களோ அந்த மக்களின் ஞாபகம் குறைய ஆரம்பிக்கிறது என்று சொல்வதற்குத்தான் இந்த இரண்டு மசோதாக்களும் பயன்படும். இதற்கு முன்பு இருந்த சட்டம் கொண்டுவரப்படாமல் இருந்து, இந்தச் சட்டத்தை இப்போது கொண்டு வந்திருந்தால் கூட, மக்கள் சந்தேகப்பட்டிருக்கமாட்டார்கள். முன்பு கொண்டு வந்த சட்டத்தின் பலனை லட்சக்கணக்கான மக்கள் அனுபவிக்கப் போகும்போது, இப்போது இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் என்ன நடந்தது? சாதாரணமாக ஆட்சியிலே இருப்பவர்கள் மீது ப்ரஷர் கொண்டு வருவார்கள். அப்படிப்பட்ட ப்ரஷர்களுக்கு இந்த அரசு இரையாகிவிட்டதா? இப்படி ஒரு கேள்வி கேட்டால், உங்களுக்கு எவ்வளவு 'எம்பாரசிங்' ஆக இருக்கிறது? இப்படியெல்லாம் சட்டசபையிலே கேட்பார்களே, கேட்டால் அதை சமாளிக்கலாம் என்று துணிந்து கொண்டுவந்திருக்கிறீர்களே, அப்படி துணிந்து கொண்டுவந்திருக்கிறீர்கள் என்றால் என்ன அடிப்படையிலே கொண்டு வந்தீர்கள்? அடகுக்கடைக்காரர்களுடைய நிர்ப்பந்தத்திற்கும், வற்புறுத்தலுக்கும் இரையாகி, லட்சக்கணக்கான மக்களுக்குக் கொடுத்த நிவாரணத்தை வாபஸ் வாங்குகிறீர்கள், அந்த முறையில் இந்த மசோதாக்களைக் கடுமையாக எதிர்க்கிறேன் என்று கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 5-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத் திருத்தத்தையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் திருத்தச் சட்டமானது இந்திய அரசியல் சட்டத்தின் 46-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று முகப்புரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தின் 46-வது பிரிவில் இரண்டு முக்கியமான கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது

"The State shall promote with special care the educational and economic interests of the weaker sections of the people" என்றும் "and shall protect them from social injustice and all forms of exploitation" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

All forms of exploitation என்றால், சமுதாயத்தினுடைய அனைத்துத் தரப்பிலும், அனைத்து மட்டங்களிலும் நடைபெறுகிற சுரண்டல்களாகும். அந்தச் சுரண்டல்களிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்பதுதான் அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற கருத்து.

[திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 28

அந்த வகையில் சமுதாயத்தில் கடன் படுகிறவர்கள் பல்வேறு வகைகளிலும் சுரண்டப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் ஒரு ஆறுதல் அளிக்கும் வகையில்—மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல்—அவர்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர், ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கியவர்களுக்கு மட்டும் பாதுகாப்பு அளிக்கிற வகையில் ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருப்பது அரசியல் சட்டத்தின் 46-வது பிரிவிலிருக்கிற கோட்பாடுகளை முழுமையாக அடைவதாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்ட முன்வரைவில் குறிப்பிட்டுள்ளவாறு 46-வது பிரிவின்படி முழுமையடைய வேண்டுமென்றால், மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதைப்போல், இந்தச் சட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்துமாகும். பல்வேறு தொகையை வாங்கிக் கடன் பட்டவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அனைவருக்கும் பாதுகாப்பளிக்கும் வகையில் இந்தச் சட்டத்தை மேலும் விரிவுபடுத்தினால் தான் மற்ற பிரிவினருக்கும் இதன் மூலம் பலன் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சட்டமுன்வடிவின் மூலம் நாம் கடன்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தாலும் கடன் கொடுப்பவர்கள் நடைமுறையில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு, கடன் பெறுகிறவர்களை எந்த வகையிலாவது முடக்கி, அவர்களைத் தங்கள் பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டியதைச் செய்து கொள்கிறார்கள். ரூபாய் 10 கடன் கொடுக்க வேண்டுமென்றால், அதைவிட பல மடங்கு அதிகமான தொகைக்கு அதாவது 200, 300 அல்லது 500 ரூபாய் பெறுமானமுள்ள அளவுக்குத் தொகையைக் காட்டி எழுதி அவ்வளவு தொகை வாங்கிக் கொள்ளாமலேகூட அவர்களைத் தங்கள் பிடியில் சிக்க வைத்துக் கொள்கிறார்கள். இந்த நிலையைத் தடுக்க நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

தற்போது கடன் நிவாரணம் அளித்தாலும், மேற்கொண்டு அத்தியாவசியமாக கடன் தொகை தேவைப்படுகிறவர்களுக்கு என்ன வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறோம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த வகையில் அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் தம் பதிலில் சொல்ல வேண்டும்.

இந்த மன்றத்தில் நான் முன்பு ஒருமுறை பேசும்போதே ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் கொண்டு வருவதன் மூலமாக லேவாதேவிக்காரர்களும் அடகுக்கடைக்காரர்களும் வேறு

1979 ஏப்ரல் 28] [திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்]

பல தொல்லைகளுக்கு கடன் பெறுகிறவர்களை ஆட்படுத்துகிறார்கள். எனவே மக்களுக்குத் தேவையான அளவுக்குக் கடன் கிடைக்க வேண்டுமென்றால், அரசாங்கம் வேறு மாற்றுத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். தற்போது கூட்டுறவு சங்கங்களிலேகூட ஒழுங்காகக் கடன் கிடைப்பதில்லை. நகையை வைத்துக் கொண்டே பலமுறை அவர்களிடம் நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவாவது மிகத் தாராளமான முறையில், தேவையுள்ளவர்களுக்குப் பணம் உதவி செய்கிற வகையில் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கும் அதற்கும் ஒரு Inter-Relationship தொடர்பு இருக்கிறது. அந்தத் தொடர்பு காரணமாக அரசாங்கம் இதையும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஏதாவது ஒரு பொருளை அடகு வைத்தோ, வேறு வகையிலே எழுதிக் கொடுத்தோ கடன் பெறுகிறார்கள். அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாகச் சிறிதளவு பாதுகாப்புக் கிடைக்கலாம். ஆனால் எழுத்து மூலமாக இல்லாமலும், பொருளை அடகு வைக்காமலும்கூட கடன் கொடுப்பதும் வாங்குவதும் நடக்கிறது. அமைச்சர் அவர்களுக்கேகூட அது தெரியும். அத்தகைய கடன்களில் சிக்கிக் கொண்டிருப்பவர்களுக்குக்கூட இந்தச் சட்டப் பாதுகாப்பு கொடுக்குமா என்ற விளக்கத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும். இறுதியாக அரசியல் சட்டத்தின் 46-வது பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு நிவாரணம் அளிப்பது ஒருபுறம் இருந்தாலும்,

We shall promote with special care the economic interests of the weaker sections of the people and also protect them from social injustice and all forms of exploitation என்ற கருத்தை மனதில் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணத் திருத்தச் சட்டமுன்வடிவின்மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

"கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கடன் பட்டால் எவ்வளவு கலக்கம் ஏற்படும் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இலங்கை வேந்தனுடைய கலக்கத்திற்கு எதை உதாரணமாகச் சொல்லலாம் என்றால் கடன் பட்டவர்களின் மன நிலையைத் தான் சொல்லலாம் என்ற அளவுக்கு கடனால் கஷ்டப்படுகிறவர்களை நினைத்துப் பார்த்தார்கள். அப்படி நினைத்துப் பார்த்த நெஞ்சம்தான் புரட்சித் தலைவருடைய நெஞ்சம். அதன் விளைவுதான் இந்தச் சட்டமுன்வடிவு.

[டாக்டர் இரா. சனார்த்தனம்]   [1979 ஏப்ரல் 28

கடன் பட்டவர்களின் சிரமத்தைப் போக்க இந்தக் கடன் நிவாரணச் சட்டமுன்வடிவின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் இந்தச் சட்டமுன்வடிவை நான் எண்ணிப் பார்க்கத் தலைப்பட்டிருக்கிறேன்.

சமுதாயத்தில் கடன் தருவது என்பது வங்கிகளின் வேலையாகும். அதைத் தனிப்பட்டவர்கள் மேற்கொண்டு சமுதாயத்திற்கு இடையூறு செய்வதைத் தடை செய்வது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். வெளிநாடுகளிலிருந்து நகை தப்பினால் போதும் என்று இங்கிருந்து சென்றவர்கள் ஓடி வந்தார்கள். சிலருடைய நகைகள் மட்டுமே அவ்வாறு திரும்பி வந்தன என்பதும் நமக்குத் தெரியும். அதற்குக் காரணம் இது போன்ற கடன் கொடுத்து அந்த நாட்டு மக்கள் சமுதாய அமைப்பில் செய்த இடையூறுகள் தாமாகும். வங்கிகள்தான் கடன்களைத் தர வேண்டும். தனி மனிதர்களுக்கு அந்த எண்ணம் வரக்கூடாது என்பதுதான் இதன் அடிப்படை நோக்கம். இந்த நோக்கோடு இதைப் பார்க்கும்போது, இந்தத் தொழில் எந்த அளவுக்கு நாட்டில் வளர்ந்திருக்கிறது என்றால், வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, சிறு சிறு தொகைகளை வைத்துக் கொண்டு அதைக் கடனாகக் கொடுத்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற மனோபாவம் மிக அதிகமாக வளர்ந்து விட்டது என்ற நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்றுதான் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இதில் ஒரு முக்கியமான கருத்து என்னவென்றால் தொழில்கள் பெருகப் பெருக குறைந்த ஊதியம் உள்ளவர்கள்கூட கடன் தொல்லையிலிருந்து விடுபடுவார்கள். மலேசியாவில் தொழில் பெருகிய காரணத்தால் வங்கிகள் குறைந்த வட்டியில் கடன் தருகிறோம் என்று விளம்பரப்படுத்துகிற நிலை வந்தது. கடன் பெறுவதற்காக பெரிய குறிப்புகளைத் தரத் தேவையில்லை என்று சொல்லி அவர்களுக்குத் தேவைப்படும் கடனைத் தருகிற அளவுக்கு தொழில்கள் பெருகினால் இயற்கையாகவே இந்தச் சூழ்நிலை உருவாகும். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இருக்கிற சிரமங்களும் இதனடிப்படையில் நீக்கப்படும். அந்த முறையில் நமது அரசு மேற்கொண்டுள்ள தொழில் கொள்கை வழி வகுக்கும் என்று தெரிவித்து இந்தக் கடன் நிவாரணத் திருத்த மசோதாவை ஆதரித்து அமைகிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் பெறுகிற ஏழை மக்கள் பிராமிசரி நோட்டு எழுதித் தருகிறார்கள். அப்படி எழுதுகிறபோது ஒரு ரூபாய் வட்டி என்று எழுதுகிறார்கள். ஆனால்

1979 ஏப்ரல் 28]   [திரு. ஆ. திராவிடமணி]

கணக்குத் தீர்த்து அந்த பிராமிசரி நோட்டை வாபஸ் பெறும்போது ரூ. 2 அல்லது ரூ. 2¼ வட்டி வசூலிக்கிறார்கள். ஏழைகள் வேறு வழியில்லாமல் இந்தக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு அந்த அளவுக்கு வட்டியைக் கொடுக்கிறார்கள். அதிலிருந்து அந்த ஏழைகள் மீள்வதற்கு இந்தச் சட்டத்தில் வழி வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகையை அடகு வைக்கிற ஒரு ஏழை அந்த நகையைத் திரும்பப் பெற முடியவில்லை என்ற நிலையில்—அவனுடைய வயலில் விளையவில்லை என்ற காரணத்தாலோ அல்லது குடும்பத்தில் தொடர்ந்து கஷ்டம் ஏற்பட்டதாலோ, மேலே மேலே பெருகி வந்த துன்பத்தின் காரணத்தாலோ—தனது அன்பு மனைவிக்கு ஆசையோடு வாங்கிப் போட்ட அந்த நகையை மீட்க முடியாத நிலையில், அந்த நகையை ஏலம் விடுகிற நிலை இருக்கிறது. ஏலத்திற்கான நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நகையின் உடைமையஸ்தரை வைத்துக்கொண்டுதான் அந்த நகை விற்பனை செய்யப்பட வேண்டும் என்று சட்டத்திலே ஒரு பிரிவு இருக்க வேண்டும். அந்த நகை 6 பவுன் அல்லது 5 பவுன் இருக்கலாம். ஆனால் அடகுக் கடைக்காரர்கள் ஏதாவது ஒரு விலையை வைத்துக்கொண்டு நகைச் சொந்தக்காரர்களை மோசடி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 5-20)

செய்கிறார்கள். தங்களுடைய நகைகளை அடகு வைத்துவிட்டார்கள் என்பதற்காக அவர்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை. அடகு வைத்தவர்கள் இல்லாமலே நகைகளை ஏலத்திற்கு விட்டுவிட்டு, "உன்னுடைய நகை ஏலத்திலே விற்கப்பட்டுவிட்டது, முதலுக்கும், வட்டிக்கும் சேர்த்து பணத்தை எடுத்துக்கொண்டேன், இன்னும் 25 ரூபாய் பாக்கியிருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு நாளைக்கு வா" என்று மீண்டும் பாக்கியைக் கேட்கிற கொடுமையான நிலைமை இருக்கிறது. உடைமைகளை ஏலம் விடுகிற நேரத்தில் அடகு வைத்தவரை அழைத்து உட்கார வைத்து அவருடைய முன்னிலையில்தான் ஏலம் விட வேண்டும். அப்படியானால் குறிப்பிட்ட விலையிலே வாங்க அவனும் ஒரு ஆளைச் சரிக்கட்டிக் கொண்டுவர முடியும். ஆனால் அந்த வாய்ப்பு அவனுக்கில்லை. ஏதோ பத்திரிகையிலே அறிவிக்கப் படுகிறது. அடகு வைத்தவனுக்குத் தெரியாமலே ஏலத்தில் விடப்படுவதை அரசு மாற்றியமைக்க வேண்டும்.

[1979 ஏப்ரல் 28

நாற்றுக்கு அய்ந்து, பத்து என்று வட்டி வாங்கக் கூடிய கொடுமையும் இருக்கிறது. இதைக் கிரிமினல் குற்றமாக அரசு கருத வேண்டும். நூறு ரூபாயைக் கொடுப்பதாகச் சொல்லி அதிலே 10 ரூபாயை வட்டியாக எடுத்துக் கொள்ளுகிறார்கள். பிறகு நோட் எழுதிக் கொடுக்கிறார்கள். நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டியென்றால், ஒரு வருஷத்திலே 120 ரூபாய் வட்டியும் சேர்த்து 220 ரூபாய் அசலாக ஆகிறது. ஆனால் உண்மையில் அவன் வாங்கிய அசல் 100 ரூபாய்தான். மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் விதம் 12 மாதங்களுக்கு 120 ரூபாய் என்று கணக்கிட்டு, அசலையும் சேர்த்து 220 ரூபாய் வாங்குகிறார்கள். அந்த 220 ரூபாயை நாற்றுக்கு பத்து என்ற விதத்தில் கணக்கிட்டு அதிலே வருகிற தொகையையும் சேர்த்து அடுத்த வருடத்தில் ரூ. 420 என்று அசல் ஆகிறது. இப்படியே ஒருவர் 100 ரூபாயைக் கடன் வாங்கினார், ஆனால் பிறகு அது ஆயிரம் ரூபாயாக ஆகி அவருடைய வீட்டையே விற்கக் கூடிய அளவிற்கு நிலை இருக்கிறது. இது போன்ற நிலையிலிருந்து ஏழைகளை விடுவிக்க வேண்டுமென்றால் நான் மேற்குறிப்பிட்ட மூன்று சிக்கல்களிலிருந்தும் விடுவிக்கக் கூடிய அளவிற்கு சட்டத்திலே சில பிரிவுகளைச் சேர்க்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கடன் நிவாரணச் சட்டத்தைப் பற்றி என்னுடைய கருத்தைச் சொல்லுவதற்கு முன்னால் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பொதுவான ஒரு வேண்டுகோளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பட்ஜெட் தொடர் நடக்கிறபோது, இந்த மாதிரியான சட்டங்களைக் கொண்டு வருவதும், அதுவும் கடைசி நாளில் கொண்டு வருவதும் சரியல்ல. சாதாரணமாக ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதிக்கு மேலே சட்டசபை நம்முடைய மாநிலத்திலே நடந்தது கிடையாது. இந்த முறை ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி வரை வைத்துவிட்டதால், எல்லா உறுப்பினர்களும் ஊருக்குப் போய்விட்டார்கள். இன்னும் கொஞ்ச நாள் நடத்தினால், அநேகமாக எல்லா உறுப்பினர்களும் இராஜிநாமா கூட செய்து விட்டிருப்பார்கள் போலும். அந்த அளவிற்கு சட்டசபையை நடத்தி ஆய்ந்து ஓய்ந்து இருக்கும் நிலையில் எப்படியாவது சட்டம் பாஸ் ஆகட்டும் என்ற நிலையில் இந்த மாதிரியான சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்து ஜனநாயகத்தில் தவறான வழிமுறைகளை வகுக்கிறார்கள். இதைக் குறித்து ஒரு கதையைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேல்சபைத் துணைத் தலைவர் : அவகாசம் நிறைய இருக்கிற தென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1979 ஏப்ரல் 28]

திரு. ம. சங்கரலிங்கம் : நான் இருப்பது சின்ன ஊர். பத்தாண்டுகளுக்கு முன்னாலே அங்கே ஒரு டிரஸ்டியிருந்தார். அங்குள்ள கோவிலில் பூசாரியை நியமிப்பார்கள். அந்தப் பூசாரிக்கு நிறைய சொத்து இருக்கும். கோவிலில் நிறைய ஆபரணங்கள் இருப்பதால், பூசாரியிடமிருந்து ஒரு தொகையை டிபாசிட்டாக வாங்குவதுண்டு. பூசாரிக்கு 25 ரூபாய் சம்பளம் கொடுப்பார்கள். பக்தர்கள் வழிபாடு செய்வதால், அவர்களிடமிருந்து அவருக்கு வருமானம் கிடைக்கும். பூசாரியிடம் ஆயிரம் ரூபாயை டிபாசிட்டாக வாங்கியிருக்கிறார்கள். அவரை மாற்றிவிட்டு பிறகு வேறு ஒரு பூசாரியைப் போட்டார்கள். அந்தப் பூசாரி டிபாசிட் பணத்தை அந்த டிரஸ்டியிடம் கேட்டால், இன்றைக்கில்லை நாளைக்கு வா என்று அடிக்கடி சொல்லுவார். அப்படியே கொடுத்தாலும், 25 ரூபாய், 50 ரூபாய் என்று கொடுப்பார். ஆகவே பூசாரி வந்து என்னிடம் சொன்னார். டிரஸ்டி வயதானவர். அவரைப் பார்த்து, அந்தப் பணத்தை பூசாரிக்குத் திருப்பிக் கொடுக்கக் கூடாதா என்றால், "25 ரூபாய், 50 ரூபாய் கொடுத்து இப்போது வா, நாளைக்கு வா என்று சொல்லி அனுப்பினால், அவன் அயர்ந்து போய் ஒரு நாளைக்கு 500 ரூபாயாவது, அல்லது 100 ரூபாயாவது கொடுத்தாலே போதுமென்ற மனநிலைக்கு வருவான். அந்த மனநிலைக்கு வருகிற நேரம் பார்த்துத் தருவேன்" என்று சொன்னார்.

இந்த மாதிரியான நிலையில்தான் இப்போது சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற இருக்கிறார்கள். சட்டமன்றம் புதியதாகக் கூட்டப்பட்ட நாளில் இவைகளைக் கொண்டு வந்திருக்க வேண்டும். காலையில் சட்ட மன்றத்திலே பாஸ் ஆகி திடீரென்று இங்கே வருகிறது. பெயர் நீக்கம் பற்றிய உள்ளாட்சிச் சட்டம் காலையிலே கொடுக்கப்பட்ட சர்க்குலரில் இல்லை. இங்கே வந்த பிறகுதான் அதைப் படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. நேற்று இரண்டு செஷன்கள் இருந்தன. நேற்று இரவு நேரங்கழித்துத்தான் சென்றோம். ஆகவே, சட்ட முன்வடிவுகளை வேகவேகமாகப் படிக்க வேண்டியிருக்கிறது.

இங்கு கொண்டு வந்துள்ள கடன் நிவாரணச் சட்டத்தை கடன் கொடுப்போர் நிவாரணச் சட்டமாக நினைக்கிறேன். இந்த சட்டத்தைக் குறித்து என்னுடைய கருத்தைச் சொல்லுவதற்கு முன்னால், இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே ஜனநாயகம் பாதிக்கப்பட்டாலும், சில நன்மைகளும் இருந்தன.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 28

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

சர்வாதிகார ஆட்சி தவறு என்றாலும், அதில் அறவே நன்மையில்லையென்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நன்மைகளில், கடன் நிவாரணச் சட்டமும் ஒன்று. அவசரச் சட்டத்தின் மூலமாக, இருக்கக் கூடிய கடன்களை ரத்து செய்து நன்மையை அளித்தார்கள். அதை நாம் நிரந்தரச் சட்டமாகக் கொண்டு வந்து இதற்கு முன்னாலே நிறைவேற்றினோம். அதிலே குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை. அந்தச் சட்டத்திலே நல்ல முறையிலே பாதுகாப்பு இருந்தது. அதற்குப் பிறகு அடகுக் கடைக்காரர்களுக்குப் பாதகமாக இருக்கிறதென்று சொல்லி பத்துப் பதினைந்து பேர் எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு வந்து, சட்ட மன்ற உறுப்பினர்களையெல்லாம் பார்த்து, இந்த சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னார்கள். எங்களிடமும் கடிதங்களைத் தந்தார்கள். அடகுக் கடைக்காரர்களாக இருந்ததால், அதைப் படிக்க வேண்டாமென்று போட்டுவிட்டோம். ஆனால் இப்போது இந்தச் சட்ட முன்வடிவு, இது அடகுக் கடைக்காரர்களுக்குப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவாக இருக்கிறது. முந்தைய சட்டத்திலே 200 ரூபாய் மொத்த வருமானம் என்று இருந்தது. இப்போது நிகர வருமானம் என்பதைப் போல, "செலவு போக வருமானம்" என்று மாற்றியிருப்பதைப் போல தெரிகிறது.

திங்கட் கிழமை ஒரு நாளைக்குத்தான் சபை கூடவிருக்கிறது. ஆனால் ஒரு மசோதா கூட இன்னும் வந்து சேரவில்லை. இன்று இரவு வரவில்லையானால், இன்றிரவு வராத மசோதாக்களுக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் மிக விரிவாக விளக்கம் சொன்னால்தான் அதைப்பற்றி நாங்கள் தெரிந்து கொண்டு மேலும் பேச முடியும்.

விளக்கம் கொடுப்பதில் தவறில்லை. ஆனால், விளக்கம் கொடுக்கும்போது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரைப்பற்றி, அவர் இந்த மேலவைக்குத் தவறான தகவலை அறிவித்தார் என்றும், பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொண்டார் என்றும், அவர் செய்கை கண்டிக்கத்தக்கதென்றும் கூறியுள்ளார்.

அரசியல் சட்டப்படி இம்மன்றத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட பரிபூரண உரிமையுண்டு. உறுப்பினர்கள் விதிமுறைகளுக்கு முரணாகச் சென்றால் அதைத் தடுக்கும் உரிமை தங்களுக்கும் இந்த அவைக்கும்தான் உண்டு. எனவே, இந்த அவையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் பேசியது தவறானது என்றும், இந்த அவையில் அமைச்சர் அவர்கள் நடந்துகொண்ட முறை பொறுப்பற்றது என்றும் சொல்லுவது, வேண்டுமென்றே சொல்வதாகவும், இந்த அவையின் உறுப்பினருக்கு மாசு கற்பிப்பதாகவும், அவருடைய பேச்சுக்கு உள்நோக்கம் கற்பிப்பதாகவும் உள்ளது.

இந்த அவையின் உறுப்பினரை, அவர் அவையில் ஆற்றிய உரை குறித்து கண்டிக்கும் உரிமை இந்த அவைக்குத்தான் உண்டு. ஆனால் ஒரு உறுப்பினர் இந்த அவையில் பேசிய பேச்சுக்கு, வெளியில் உள்ள ஒருவர் கண்டனம் தெரிவிப்பது, அந்த உறுப்பினரை அச்சுறுத்துவதற்கு ஒப்பாகும். அதோடு அவர் இந்த அவையில் ஆற்றும் பணிக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும் உள்ளது.

எனவே இது அவை உரிமை மீறிய செயலாகும். இவ்வவை உரிமை மீறிய பிரச்சினையை முன்னாள் அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் மீதும், முரசொலி ஆசிரியர் மற்றும் பிரசுரகர்த்தர் மீதும் எழுப்புகிறேன்.

இவ்வாறே, சென்னை 28—4—1979 நாளிட்ட ‘அலை ஓசை’ பத்திரிகையும், 27—4—1979 ஆம் நாள் “மாலை முரசு” பத்திரிகையும் இத்தகைய செய்திகளை பிரசுரித்துள்ளதால், இப்பத்திரிகைகளுடைய ஆசிரியர்கள் மற்றும் பிரசுரகர்த்தர்கள் மீதும் இந்த அவையின் உரிமை மீறிய பிரச்சினையை எழுப்புகிறேன். இதனை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது குறித்துத் தீர்ப்பு பின்னால் வழங்கப்படும்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளை எடுத்துக்கொள்வதற்கு காலகெடு குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதை போல கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு அந்தந்த இலாக்காக்களுக்குச் செல்லும்போது, அதற்குரிய பதில்கள் வருவதற்குக் காலதாமதமாகின்றது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக பல பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. சில இலாக்காக்கள் வீண் காலதாமதம் செய்வதை கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இதனால் சில இலாக்காக்கள் வேண்டுமென்றே, தாங்கள் செய்த தவறுகள் வெளிபட்டுவிடுமோ என்று எண்ணி பதில்களைக் கால தாமதப்படுத்தி அனுப்புகிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அதற்கான ஆதாரத்தையும் என்னால் தெரிவிக்க முடியும். ஆகவே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இலாக்காக்களுக்குச் சென்றால், இத்தனை நாட்களுக்குள் பதில் வர வேண்டுமென்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தால், பதில் சீக்கிரம் வருவதில்லையென்றும், காலதாமதம் ஏற்படுகிறது என்றும், குற்றச்சாட்டு என்று சொல்லக் கூடிய அளவுக்கு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தால் 7 நாட்களுக்குள் பதில் வர வேண்டுமென்று விதியிருக்கிறது. 24 ஆம் தேதி கொடுத்துவிட்டு 30 ஆம் தேதி வரவில்லையே என்பது சரியில்லை. அதற்கு முன்னால் கொடுத்ததும் இருக்கலாம். இந்தக் கூட்டத் தொடரிலே மட்டும் எவ்வளவு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்கு முன்பு சட்டமன்ற வரலாற்றிலே இல்லாத அளவிற்கு பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு பதில் மிக விரைவிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. சில நேரங்களில் விதிகளைத் தளர்த்தி இரண்டுக்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஐந்தாறு என்று கூட எடுத்துக்கொண்டிருக்கிறோம். விதிகளுக்குட்பட்டு 2 கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத்தான் எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும் விதியைத் தளர்த்தி அதிகப்படியான அளவிற்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். கால நேர சூழ்நிலையைக் கருதியும், சட்டமுன்வடிவுகளை முறையாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு சில நேரங்களில் கவன ஈர்ப்புத

தீர்மானங்களை எடுத்துக்கொள்ள முடியாமல் இருந்திருக்கலாம். துறையிலே உள்ளவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, மறைக்கிறார்கள் என்றால், அதை அரசு பார்த்துக்கொண்டிருக்காது. தவறுகளைச் சுட்டிக்காட்டுகிற போது, உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஒரு வாரத்திற்குள்ளே பதில் வரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. நான் இந்தக் கூட்டத் தொடரின் முதன் முதலில் கொடுத்தது இன்னும் வராமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு முன்னவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அது தன்மையைப் பொறுத்தது. நினைத்ததையெல்லாம் எடுத்துக்கொண்டு அவையின் நேரத்தை வீணடிக்க முடியாது. எதற்குப் பதில் சொன்னால் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதை அரசு நிர்ணயிக்கிறது. அந்த அளவிலே இந்த அவையில் இந்தக் கூட்டத் தொடரில் அதிகப்படியான எண்ணிக்கையுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, தன்மையைப் பொறுத்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், "அனுமதிக்கப்படுவதற்கில்லை" என்று எழுத்து மூலமாகத் தெரிவிப்பது தான் முறை.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அது அரசால் முடிவு செய்யப் படுவது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தும், மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்ன கருத்தும், கருத்திலே கொள்ளப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுபற்றி விவாதம் ஆக்க வேண்டாமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருப்பது மிக முக்கியமான பிரச்சினை குறித்தது. வெளியே போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, அதைத் தீர்த்து வைக்கிற நல்ல நோக்கத்தோடு தான் ஒத்தி வைப்புத் தீர்மானமாகக் கொடுத்தேன். அதை எடுத்துக்கொள்ளாமல், அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளுவதாகவும், அதுவும் இந்தக் கூட்டத் தொடரிலேயே எடுத்துக்கொள்ளுவதாகவும் சொல்லப்பட்டது. அதன் அடிப்படையிலே இரண்டு நாட்களுக்கு முன் நான்

கேட்டபோது, இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்பட்டது. அந்தப் போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே போராட்டத்தை நிறுத்த அரசு விரும்புகிறதா இல்லையா என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போராட்டத்தைத் தூண்டாமல் இருந்தால் சரி.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கடமையை ஆற்றும்போது, போராட்டத்தைத் தூண்டி விடுவதாகச் சொல்வதை எதிர்த்தும், என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை இன்று எடுத்துக்கொள்ளாததற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்.)

5. கவன ஈர்ப்பு.

(1) மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் 1973 ஆம் ஆண்டிலிருந்து பணிவரன் முறை செய்யப் படாதது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"மதுரை மாவட்டத்தில் உள்ள கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகளில் பணிக் சார்த்தப்பட்டுள்ள பி.டி. ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் ஆகியவர்களது பணி 1973 ஆம் ஆண்டிலிருந்து வரன்முறை செய்யப்படாததன் விளைவாக முறையான ஊதிய உயர்வு, விடுப்பு வசதிகள், புதிய அடிப்படைச் சம்பளம் நிர்ணயித்தல் முதலியவற்றைப் பெறுவதில் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்து."

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையொன்று @ அவையின் முன்வைக்கப் பட்டுள்ளது.

@ 682ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் 1973 ஆம் ஆண்டிலிருந்து பணி வரன்முறை செய்யப்படாதது குறித்து

[1979 ஏப்ரல் 30

(முற்பகல் 9.30)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்கள் மத்திய அரசுடைய உதவியுடன் ஏற்பட்ட 5 லட்சம் பேர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டார்கள். இந்தத் திட்டம் புதிதாக வேலை வாய்ப்பு கொடுக்க மத்திய அரசு உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டம். இதற்காக இனிமேல் பதவியிடங்கள் காலியாகும் என்று காத்துக்கொண்டிருந்தால், எப்போதுமே அவர்களை நியமனம் செய்வதற்கு காலியிடங்கள் ஏற்பட நீண்டகாலம் ஆகலாம். இந்த நியமனம் தமிழ்நாடு தேர்வாணைக்குழு அதிகார வரம்புக்கு உட்பட்டது அல்ல. நம்முடைய இலாகாவே, அதை வரன்முறை செய்துவிடலாம். அப்படி இருக்கும் போது இவர்களை வரன்முறை செய்வதிலே 3, 4 ஆண்டுகள் காலதாமதமானால் அதிலே உள்ள இடர்ப்பாடுகளைக் குறித்து இந்த அறிக்கையிலேயே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இயக்குநரேகூட அவர்களுடைய பணியை வரன்முறை செய்துவிடலாம். அதற்கு அனுமதி அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஏற்கெனவே அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையின்படி, இந்தத் திட்டம், 1973 ஆம் ஆண்டு அமுல்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட திட்டம் என்றாலும் 1974-75 ஆம் ஆண்டு அரசு ஒரு ஆணை பிறப்பித்தது. அதில் எங்கெங்கே ரெகுலர் வேகன்சிஸ், அதாவது நிரந்தரமான காலி இடங்கள் ஏற்படுகின்றனவோ அங்கே தான் இவர்களை அமர்த்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது இருந்தாலும், அதற்கு முன்னாலேயே 46 பட்டதாரி ஆசிரியர்களும், 54 இடைநிலை ஆசிரியர்களும் பணியிலே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். நியமிக்கப்பட்ட பின்னாலே எந்தவிதமான நிரந்தரமான காலி இடங்களும் ஏற்படாததால் தான் அவர்களை இந்த இடங்களில் நிரந்தரமாக்கமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவர்களை உடனடியாக நிரந்தரமாக்க வேண்டும் என்ற ஆலோசனைகளை இந்தத் துறை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

(2) தஞ்சை மாவட்ட வியாபாரிகளுக்கு தஞ்சை விற்பனைக் குழு லெவி நெல்லுக்குப் பல்லாயிரம் ரூபாய் விற்பனைக் குழுக் கட்டணமாகச் செலுத்தவேண்டுமென்று அனுப்பியுள்ள உத்தரவு குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்) : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு தஞ்சை மாவட்ட வியாபாரிகளால் ஏற்கெனவே வழங்கப்பட்ட லெவி நெல்லுக்குப் பல்லாயிரம் ரூபாய் விற்பனைக் குழுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்று தஞ்சை மாவட்ட வியாபாரிகளுக்கு தஞ்சை விற்பனைக் குழு அனுப்பியுள்ள உத்தரவைக் குறித்தும் இதன் தொடர்பாக வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைக் குறித்தும்."

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, 1976-லிருந்து அரசு லெவி கொள்முதல் முறையைக் கொண்டுவந்தது. அப்போது இந்த செஸ் விதிக்கிற முறையில்லை. செஸ் விதிக்கிற முறை கொண்டுவரப்படு வதற்கு முன்னால் அவர்கள் விற்பனைக் கட்டணம் ரூ. 1 விதம் தான் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது ரூ. 3 லட்சத்திற்கு மேற் பட்ட ரூபாய் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் வியாபாரிகளுக்கு அது ஒரு பெரும் கஷ்டத்தையும், தொல்லையையும் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுவிட்டோம் என்று சொல்கிறார்கள். எனவே அவர்களுக்கு இதைத் தள்ளுபடி செய்து கொடுத்து இனிமேல் கொள்முதல் செய்வதற்கு செஸ் விதிப்பது பற்றியும், உதவி வழங்குவதற்கும் அரசு புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, செஸ் என்பது ஏதோ வரி என்று நினைக்கவேண்டிய அவசியமில்லை. இது விற்பனைக் குழுவுக்குக் கட்டணமாகச் செலுத்தப்படுகின்ற ஒரு தொகைதான். ஆகவே அது வரி அல்ல. மேலும் முன்பு ஒரு ரூபாய் கட்டணமாக வசூலிக்க வில்லை: ரூ. 100-க்கு விற்பனை செய்தால், கட்டணமாக 45 காசுதான் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை பாக்கியுள்ளவர்கள் எண்ணிக்கை

@ 683-684 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 402. இதுவரையிலும் ரூ. 12,434.20 மட்டுமே வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் ஏறத்தாழ ரூ. 3,20,000-க்கு மேல் வசூலாக வேண்டியிருக்கிறது. இந்தத் தொகையைத் தள்ளுபடி செய்கின்ற நோக்கம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1979);

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979);

(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979).

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்றும்,

ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு *

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்றும்,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு ** (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்றும் முன்மொழிகிறேன்.

@ 685 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* 686-687 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

** 688-689 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த கண்ணியமிக்க மன்றத்திற்கு முன்பாக 3 சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக எடுத்துக் கொண்டு உங்கள் மேலான கருத்தை அளித்து ஒப்புதல் அளிக்கவேண்டுமென்பதற்காக உங்களுக்கு முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

முதல் சட்ட முன்வடிவு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களுடைய தனி அலுவலர்கள் சட்டம் நடைமுறையிலே இருக்கின்ற அந்தச் சட்டத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டுமென்று கோரி, இந்த மசோதாவை உங்கள் ஆய்விற்கு வைக்கிறோம். 1976 ஜூன் மாதம் 10 ஆம் தேதி இந்தச் சட்டம் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே போடப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக அது தொடர்ந்து நடைமுறையிலே இருந்து வருகிறது. ஜூன் மாதம் 10 ஆம் தேதி இந்தக் காலக்கெடு முடிகின்ற காரணத்தினாலே மேலும் 6 மாத காலத்திற்கு அதைத் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக இந்த மசோதாவை இந்த அவையின் மேலான பரிசீலனைக்கு வைத்திருக்கிறேன். இன்றையதினம் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதனுடைய அடிப்படைக் காரணமே 1961 ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சட்டத்திற்கு ஒட்டுமொத்தமான அடங்கல் திருத்தங்களை உள்ளடக்கிய ஒரு மசோதாவை பேரவையிலே கொண்டுவந்து இன்றைய தினம் பொறுக்குக்குழுவுக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட இருக்கிறது. அந்தச் சட்டத்தின் வாயிலாக ஒரு பெரிய நல்ல திருத்தத்தை கூட்டுறவுத் துறையிலே உருவாக்க முடியும் என்று தமிழக அரசு கருதுகிறது. கடந்த 18 ஆண்டுகளாக கூட்டுறவுத் துறையிலே கூட்டுறவினுடைய வளர்ச்சி துறைகளிலே பெருமளவுக்கு ஏற்பட்டு, சமுதாயத்தினுடைய அனைத்து மக்களுடைய பொருளாதார வாழ்க்கையில் பின்னிப் பிணைந்த ஒரு முயற்சியாக கூட்டுறவு முயற்சி இருந்து வருகிறது.

1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவரையிலே 18 ஆண்டுக் காலம் பொறுப்பிலே இருந்தவர்கள், அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமைகளுக்கேற்ப தனித் தனி நிதிகளுக்கு அவசியம் கருதி மன்றத்திலே திருத்தங்களை உருவாக்கியிருந்திருக்கிறார்களே தவிர, இதுவரையில் ஒட்டுமொத்தமான அடிப்படையில்

மன்றத்திலே அவர்கள் சட்ட முன்வடிவைக் கொண்டுவரவில்லை இன்றையதினம் 1979 ஆம் ஆண்டு வரை உள்ள நிலைமைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கின்ற சில குறைபாடுகளை நீக்கவும், அதே நேரத்திலே வளர்ந்திருக்கின்ற கூட்டுறவுப் பணிகளுக்கு உதவுகின்ற, வேறு சில அம்சங்களையும், விதிகளையும் இதிலே இணைப்பதற்கான எல்லா வகையான புதிய ஆலோசனைகளையும் உள்ளடக்கிய மசோதாவை, காம்பிரிஹென்சிவ் அமென்ட்மெண்ட் பில்லை சட்டப் பேரவையிலே நேற்றைக்கு முன்தினம் அந்த மன்றத்தினுடைய அனுமதியோடு பொறுக்குக்குழுவிற்கு விட்டு இருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பொறுக்குக்குழு அதனுடைய ஆலோசனையை அளித்த பிறகு, சட்ட மன்றத்திலே அதைச் சட்டமாக நிறைவேற்றுகின்ற வரையிலே தனி அலுவலர்களை மேலும் அந்தப் பொறுப்பிலே நீட்டிக்க வேண்டிய ஒரு அவசியமும் நிர்பந்தமும் தமிழக அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே இன்றைக்கு உங்கள் அனுமதியோடு இந்த மசோதாவை இங்கே கொண்டுவந்திருக்கிறோம். குறிப்பாக அந்தப் புதிய சட்டத்தின் வாயிலாக நல்ல பல திருப்பங்களை எல்லாம் கொண்டுவர முடியும் என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 9.40)

ஆனால் இந்த நேரத்தில், சட்ட முன்வடிவு பொறுக்குக்குழுவிற்குச் சென்றிருக்கிற காரணத்தால், அதைப் பற்றி ஆழமாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் நான் பேச விரும்பவில்லை. அப்படிப் பேசுவதும் முறையல்ல என்று கருதுகிறேன். அந்தப் பொறுக்குக் குழுவிலே சட்டப் பேரவையைச் சேர்ந்த 19 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மேலவையின் சார்பாக, அசோசியேட் மெம்பர்ஸ் என்ற முறையில் 6 உறுப்பினர்களை முதல் கட்டத்தில் போடுவதாக முடிவெடுத்து, அவர்களை முறைப்படி நியமித்து, சேர்க்கப்பட இருக்கிறார்கள். ஆக, இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கும், அரசு கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவிலே ஏதாவது தேவைப்பட்டாலும் சரி அல்லது அரசு செய்திருக்கிற பரிந்துரைகளிலே ஏதேனும் நீக்க வேண்டுமானாலும் சரி, அவைகளைப் பற்றிய கருத்துக்களை, **உணர்வுகளை**,

எண்ணங்களை எடுத்துச் சொல்ல போதுமான வாய்ப்பு இருக்கிறதென்று கருதுகிறேன். ஆகவே இவைகளையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு நான், இன்றையதினம் தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டுமென்ற காரணத்தால், இன்றைக்கு இந்த அவையினுடைய மேலான அனுமதிக்கு, தமிழக அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது. தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் தனி அதிகாரிகளுடைய பொறுப்பில் இருக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படவில்லை. நான் பேரவையில் எடுத்துச் சொன்னதைப்போல, அரசைப் பொறுத்தவரையில் **தவிர்க்க முடியாதது** என்பதால், காலத்தின் கட்டாயம் காரணமாக இதைக் கொண்டு **வந்திருக்கிறோமென்பதையும்**, விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை **என்பதையும்** மாண்புமிகு உறுப்பினர்**களின் கவனத்திற்குக்** கொண்டுவர விரும்புகிறேன். உறுப்பினர்கள் கேட்கலாம், **எத்தனை** ஆண்டுகளுக்கு அதிகார வர்க்கத்தின் ஆட்சியில் கூட்டுறவு சங்**கங்கள** இருப்பது; கூட்டுறவு நிறுவனங்களின், இயக்கத்தின் 6 கட்டளை**களில் ஒன்றான**—டெமாக்ராடிக் மேனேஜ்மென்ட்—ஜனநாயக நிலையில்லாமல் **எத்தனை** ஆண்டுகளுக்கு நீடிப்பது என்று கேட்கலாம். எனவே இந்த நேரத்திலே சரிக் கட்டாயத்தையும், நிர்பந்தத்தையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 7, 8 ஆண்டுகளாக, அதற்கு முன்பிருந்தே, இன்னும் சொல்லப்போனால் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் கூட்டுறவு இயக்கம் எந்த **விழுமிய** நோக்கத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்டதோ, அந்த விழுமிய நோக்கத்திற்கான சூழல்கள், சுற்றுச் சார்புகள் அல்லது நிலைமைகள் ஏற்பட்டனவா **என்றால்**, நம்முடைய அனுபவங்கள் அதற்கு மாறாகத்தான் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். 1947-லிருந்து பார்த்தாலும், ஏறத்தாழ 32 ஆண்டுகளாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கூட்டுறவு இயக்கம் மெள்ள **மெள்ள** ஆனால் உறுதியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் போதுமான **அளவிற்கு** வளரவில்லை. அதில் அரசியல் தலையீடு இருக்கிறது. எந்த **விழுமிய** காரணத்திற்காக கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதோ, அந்த குண **நலன்**களைப் பொறுப்பிலுள்ளவர்கள் பெறாதவர்களாக இருந்ததால், அதில் சிதைவுகள், குழப்பங்கள், தடுமாற்றங்கள், சீர்குலைவுகள் ஏற்பட்டதைப் பார்க்கிறோம். ஒரு கட்சிக்

காரர்கள் செய்தார்களா என்றால் இல்லை. ஏதோ ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திலேதான் இப்படி நடந்திருக்கிறதா என்றால், இல்லை. ஒட்டு மொத்தமாக இப்படிப்பட்ட பலகீனங்களை நம்மாலே காண முடிகிறது. கட்சிக் கண்ணோட்டமில்லாமல், கூட்டுறவுத் துறையிலே நல்ல மாற்றங்களைச் செய்ய வேண்டும். கூட்டுறவு ஒன்றுதான் நலிந்தோருக்குக் கேடயமாக இருக்கிறது, ஏழை எளியவர்களுக்கு வாழ்க்கை அளிக்கும் அற்புதமான இடமாக இருக்கிறது என்பதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். எனவே அந்தக் காரணங்களுக்காக, தக்கதொரு சட்ட முன்வடிவை நாம் நிறைவேற்றியாக வேண்டும். தேவையா, இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். முடியுமா, முடியாதா என்பதல்ல பிரச்சினை. அந்தவகையிலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்கள், தேவையா, இல்லையா என்று ஆய்ந்து, தேவை என்று உணர்ந்து, சில அடிப்படை மாற்றங்களை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இதிலே நல்ல மாற்றங்கள் வேண்டுமென்று கருதி, பாடுபட்டார்கள். இதற்காக அகில இந்திய அளவில் ஒரு முதலமைச்சர்கள் மாநாட்டை, கூட்டுறவு அமைச்சர்களையும் உள்ளடக்கி அந்த மாநாட்டைச் சென்னையில் 1968-ல் கூட்டினார்கள். அந்த இயக்கத்தில், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் பலகீனங்கள் என்னென்ன, அதற்குப் பரிகாரம் என்ன என்பதை விருப்பு, வெறுப்பின்றி அந்தக் கூட்டத்திலே ஆய்ந்தார்கள். அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் மனத்திலே ஒரு கருத்து தோன்றியது. நல்ல அறிஞர்கள், பொருளாதார அறிவைப் பெற்ற சான்றோர்கள், கூட்டுறவில் நம்பிக்கை உள்ளவர்கள் ஆகியோர்களைக் கொண்ட குழு அமைத்து, முழுமையாக அவர்கள் அதைப் பரிசீலனை செய்த பிறகு, அவர்கள் பரிந்துரையின்மேல் சட்டத்தைத் திருத்தி, நல்ல இயக்கமாகக் கூட்டுறவுத் துறையை ஆக்கலாமென்று கருதி, திரு. சந்தானம் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார்கள். அண்ணா அவர்கள் புகழாக, இசையாக மாறிய பிறகுதான் அந்தக் குழுவின் அறிக்கை வந்தது. அந்த அறிக்கையை, தொடர்ந்து வந்த அரசு, வேகமாக நிறைவேற்றாத காரணத்தால், அந்த அறிக்கை அப்படியே தேங்கியது. அதற்குப் பிறகு ஒரு குழு

அமைக்க வேண்டுமென்று சொல்லி, நிர்வாகச் சீர்திருத்தக் குழு—அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன்—என்று திரு. வர்கீஸ் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, கூட்டுறவுத் துறையில் சில மாறுதல்களைச் செய்யலாமென்று, சில பரிந்துரைகளை அவர்கள் செய்தார்கள். மேலும் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. கூட்டுறவு இயக்கம் என்பது அகில இந்தியப் பிரச்சினை, தேசியப் பிரச்சினை. எனவே மத்திய அரசு இதில் மிகுந்த கவனம் கொண்டு, அவ்வப்போது மேலேயுள்ள அமைப்புக்களின் வாயிலாக, இது குறித்து வரும் பிரச்சினைகளுக்கு, சிக்கல்களுக்கு, சிரமங்களுக்கு, ஏற்கெனவே இருக்கும் இடுக்கண்களுக்கு, பரிகாரத்தை ஆராய்ந்து, பல அறிக்கைகளை, பல விதி முறைகளை, நெறிமுறைகளை, பொறுப்பிலே இருந்த மாநில அரசுகளுக்கு அனுப்பியிருக்கிறது. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்ற பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணினார்கள். எனவே அந்தச் சட்டத்தில் இருக்கும் பலகீனங்களைப் போக்கி, மக்கள் இயக்கம் மலர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கி, அதற்குப் பிறகு தேர்தலை நடத்தலாமென்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. கடந்த 22 மாத காலமாக அதற்கான முன்பணியில், ஆயத்தப் பணியில் நாங்கள் மனப்பூர்வமாக ஈடுபட்டிருக்கிறோம். சம்பந்தப்பட்டவர்களைக் கலந்தாலோசிக்க சமீபத்திலே ஒரு மாநாட்டைக் கூட்டினோம். இதிலே ஈடுபட்டுள்ள அனைவரையும் கூப்பிட்டு, ஏறத்தாழ 200 பேர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அவர்கள் பரிந்துரைகளைக் கேட்டு, ஒவ்வொரு ஷரத்தாகப் பார்த்து, ஆய்வு செய்யப்பட்டது. பழைய சட்டத்திலே 122 பகுதிகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஆய்ந்த பிறகு, இன்றையதினம் பேரவையின் அனுமதிக்கப் பட்டிருக்கிற அந்தப் புதிய சட்ட முன்வடிவில் 153 விதிகள் இருக்கின்றன. 153 விதிகளிலே, அடிப்படையிலே பல மாற்றங்களை உருவாக்க முனைந்திருக்கிறோம். குறிப்பாக 18 ஆண்டுகளாக நியமனத்திலே . . . இது குறித்து நான் ஆழமாகப் போகவில்லை. ஏற்கெனவே கூட்டுறவுத் துறை குறித்த விவாதத்தின்போது, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், சென்ற ஆண்டு நியமனம் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்த்தேன்.

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1979 ஏப்ரல் 30

அது விவாதத்திற்குரிய பிரச்சினை. பொறுக்குக் குழுவிற்கு சட்ட முன்வடிவு வரும்போது, அந்தப் பிரச்சினை குறித்து ஆழ்ந்து யோசித்து முடிவெடுக்கலாம். இன்றையதினம் 'அபெக்ஸ் பாடி' என்றும், 'சென்ட்ரல் பாடி' என்றும் இருக்கிறது. அதிலே இருக்கின்ற நிர்வாகம் 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு முறைப்படி அமைக்கப்படவில்லை. 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்தச் சட்டங்கள் திருத்தப்பட்டன. நோயைப் போக்குவதற்குப் பதிலாக நோயை அதிகப்படுத்தும் அளவிலே சில நிலைமைகள்—கசப்பான, விரும்பத்தகாத நிலைமைகள்—அந்த அமைப்பிலே உருவாகின. அந்த ஸ்டிரக்சரிலே, அந்த அமைப்பிலே நல்ல மாறுதல்களுக்குப் பதிலாக, விரல் விட்டு எண்ணக்கூடிய ஆதிக்க சக்திகள்—வெஸ்ட்டட் இன்டரஸ்ட்ஸ்—மீண்டும் பலப்படும் அளவிற்கு அந்த நடவடிக்கைகள் பயன்பட்டன. அந்த நடவடிக்கைகளை நீக்கலாமா என்பதை நாங்கள் ஆய்ந்து, உங்கள் மேலான பரிசீலனைக்காக சில விவரங்களை வைத்திருக்கிறோம். ஏற்கெனவே பொறுப்பிலே இருந்த தலைவர்கள் ஒரு வாதத்தை வைத்துக்கொண்டிருந்தார்கள். எங்களுக்குப் பெரும்பான்மை இருக்கிறது, குழு இருக்கிறது, சட்டம் இருக்கிறது, துணை விதிகள் இருக்கின்றன, எனவே துணைவிதிகளின்படிதான் செலவைச் செய்தோம், சட்டத்தின்படிதான் செலவு செய்தோமென்றெல்லாம் சட்டத்தின்படி தவறுகளைச் செய்யும் வகையில் ஏற்கெனவே இருந்தன. அத்தனையையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அரசு விரும்புகிறது. இன்றைக்கு தமிழகத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து, இன்னும் சொல்லப்போனால், 1956, 1957லிருந்துகூட, கலைக்கப்பட்ட—சூப்பர்சீட்—நிறுவனங்களாக இருந்துகொண்டிருக்கின்றன. சட்டத்திலுள்ள பலகீனம் என்னவென்றால் 72 ஆம் விதிப்படி 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நீடித்து வைக்கலாம். மீண்டும் விரும்பினால் 2 ஆண்டுகளுக்கு நீடித்து வைக்கலாம். நான்கு ஆண்டுகள் இப்படி நீடித்து வைக்கலாம். அதற்குப் பிறகு அரசு விரும்பினால், 111 விதிப்படி, அரசு விரும்புகிற வரையில் கூட்டுறவுச் சங்கங்களை தனி அதிகாரிகளின் பொறுப்பில் வைக்கலாமென்ற ஆபத்தான ஷரத்து சட்டத்திலே இருக்கிறது. அதனையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தமிழக அரசு எண்ணுகிறது. அதையும் சட்டத்திட்டத்திற்குக் கொண்டு வந்தாக வேண்டும்.

1979 ஏப்ரல் 30] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

(முற்பகல் 9-50)

ஒரு சங்கத்தை நாம் கலைக்கிறோம் என்றால் முறைகேடுகளுக்காக கலைக்கிறோம். அரசு தலையிட்டு, கூட்டுறவுத் துறை அதில் தலையிட்டு தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கரத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்ற அடிப்படையில் புதிய மாறுதலைக் கொண்டு வர நாங்கள் விரும்புகின்றோம். பழைய சட்டத்திலே அப்படி அல்ல. 10, 15 ஆண்டுகள் தனி அதிகாரிகள் தொடர்ந்து இருப்பதற்கு வழிவகை இருந்தது. நான் ஒரு சம்பவத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் கூட அதுபற்றித் தெரியும் என்று நினைக்கிறேன். தூத்துக்குடியில் டிஸ்ட்ரிக்ட் சப்ளை அன்ட் மார்க்கெட்டிங் சொசைட்டி இருக்கிறது. 1971 ஆம் ஆண்டிலே அது கலைக்கப்பட்டது. தனிஅதிகாரியை அங்கு நியமித்தார்கள். 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கூட அவர் அங்கு தனி அதிகாரியாக இருந்திருக்கிறார். குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் 442 நிறுவனங்களுக்குத் தனி அதிகாரிகள் வந்தார்கள். நெல்லை மாவட்டத்திற்குச் சொந்தமான அந்தச் சங்கம் 1971 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு முதலில் 2 ஆண்டு தனி அலுவலரின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டு, அதன் பிறகு மேற்கொண்டு 4 ஆண்டுகள் பதவிக் காலம் நீட்டிக்கப்படுகிறது. 111வது விதியின் கீழ் பதவி நீட்டிப்பு எல்லையில்லாமல் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, ஜனநாயகத்திற்கு குந்தகம் இல்லாமல் நாங்கள் சொல்லியபடி, 6 கூட்டுறவுக் கட்டளைகளில் ஒன்றாக அதைச் செயல்படுத்த புதிய ஆலோசனைகளை இப்போது புதிய சட்டத்தில் கொண்டு வர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பணியாளர்களைப் பொறுத்தவரை, தகுதியில்லாதவர்கள், எழுச்சியில்லாதவர்கள், கூட்டுறவு உணர்ச்சியில்லாதவர்கள், போதுமான பயிற்சி இல்லாதவர்கள், கல்வித் தகுதியில்லாதவர்கள், கூட்டுறவு நோக்கு இல்லாதவர்கள் இப்படிப்பட்டவர்களையெல்லாம் அன்றையதினம் நியமித்து விட்டார்கள். அன்றைக்குப் பொறுப்பிலே இருந்தவர்களுக்கு அப்படி பயிற்சி இல்லாதவர்களை நியமிக்கின்ற சக்தி இருந்த காரணத்தால், சட்டம் பலவீன

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1979 ஏப்ரல் 30

மாக இருந்த காரணத்தால், தகுதியற்றவர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்த காரணத்தால், கூட்டுறவின் வளர்ச்சியில் சிதைவு ஏற்பட்டது. இதுமாதிரி நியமனங்கள் நடைபெற்றன. இனிமேல் புதிதாக பணியாளர்களை நியமிக்கின்ற போது, தகுதியுடையவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று திட்டவட்டமாக தெளிவாக அய்யத்திற்கு இடமில்லாமல் விதிகளை உருவாக்க வேண்டுமென்ற விழுமிய நோக்கத்தோடு புதிய ஆலோசனைகளை புதிய சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறோம்.

அதுபோல் கூட்டுறவு சங்கத்திலே தலைவர்களாக வந்து விடுவார்கள். மத்திய வங்கியிலிருந்து பணம் வாங்குகிறார்கள். அவர்கள் உரிய காலத்தில் அந்தப் பணத்தைக் கொடுத்து விடுவதில்லை. பினாமி பெயரில் பணத்தைப் பெற்று விடுகிறார்கள். அதனால் அவர்கள் உரிய காலத்தில் பணத்தைக் கட்ட முடிவதில்லை. பணத்தைக் கொடுத்த அந்த மேல் அமைப்புக்கும் சில பொறுப்புக்கள் இருக்க வேண்டும் என்று சில ஆலோசனைகளை இந்தச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நல்ல பல திருப்பங்களையெல்லாம் 1961 ஆம் ஆண்டிலிருந்தே எடுத்துப் பார்த்து பரிசீலனை செய்திருக்கிறோம்.

சந்தானம் குழு, வர்க்கிஸ் குழு, மத்திய அரசு ஆராய்ந்த வழிமுறைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்ததோடு, அப்பால் 21 மாதங்களாக அரசுத் துறை, கூட்டுறவுத் துறை, அனைத்துக் கட்சித் தலைவர்களையெல்லாம் கலந்து ஆலோசித்து 153-வது விதியின் அடிப்படையில் ஒரு திருப்பத்தை கூட்டுறவுத் துறையில் உருவாக்குகின்ற வகையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப் பட்டிருக்கின்றது. இது வந்ததற்குப் பிறகு தான் உண்மையான ஒரு நல்ல நிலையை கூட்டுறவுத் துறையிலே உருவாக்க முடியும் என்ற அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. பேரவையிலே சொன்னது போல், "It is unwanted but it is inevitable" என்று சொல்வது போல், இது தேவையில்லாதது என்பதை நாம் உணர்ந்தாலும் கூட, சில நேரங்களில்

1979 ஏப்ரல் 30] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. பெரிய தீமைகளைக் குறைக்க வேண்டுமென்றால், சிறிய தீமைகளை நாம் ஏற்றுக்கொள்வது நல்லது தான் என்பதை அனுபவம் சொல்லுகின்றது.

6 மாதத்திற்குள்ளாக அப்படிப்பட்ட நல்ல முறைகளைக் கொண்ட சட்டமாக உருவாக்க வேண்டுமென்ற விழுமிய நோக்கத்துடன் இது கொண்டுவரப் பட்டிருக்கிறது. தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இது கொண்டுவரப்படவில்லை என்பதை நான் மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்களுடைய மேலான ஆலோசனைகளை இந்த நேரத்தில் வழங்கலாம். தனி அலுவலர்களின் பதவி நீட்டிப்பின் காரணமாக கடந்த 3 ஆண்டுகளாக இன்னின்ன முறைகேடுகளை அவர்கள் செய்து வருகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அங்கு இருந்தால், நல்ல நன்மைகள் ஏற்படும் என்று உறுப்பினர்கள் சொல்லலாம். உறுப்பினர்களிடம் விவரம் இருக்கிறது. அரசும் அதுபற்றி அறிந்திருக்கிறது. ஏற்கெனவே இதுபற்றி சென்ற ஆண்டு கூட கூறியிருக்கிறார்கள். 12 மாதங்களாக நானும் கூட்டுறவு அமைச்சராக இருந்து நிர்வாகத்திலுள்ள சில குறைபாடுகளை நன்றாக உணர்ந்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தனி அலுவலர்களுடைய அந்தப் போக்கைக் கட்டுப்படுத்த சில வழிமுறைகளை இன்றைக்குச் சொல்லியிருக்கிறோம். கூட்டுறவுத் துறையிலே பொதுவாக நிகழ்கின்ற குறைபாடுகளைப் போக்க வழிவகைகளைச் சொல்லியிருக்கிறோம். வாகனங்களைப் பயன்படுத்துதல், டெலிபோனைப் பயன்படுத்துதல், பினாமி பெயரில் லோன் கொடுப்பது, பெரிய விழாக்கள் என்ற பெயரால் அதிக அளவில் தேவைக்கு மேல் செலவு செய்வது, தலைவர்களுடைய படங்களைத் திறப்பது, கூட்டுறவுக் கட்டிடங்களைக் கட்டுகின்ற நேரத்தில் தனியாருக்கு அதை கான்ட்ராக்ட் கொடுத்துவிட்டு மிகுதியான பணத்தைப் பெறுவது போன்ற பெரும்பான்மையான வீண் விரயத்தைத் தடுக்க விதிமுறைகளைச் சொல்லியிருக்கிறோம். அப்படி ஏதாவது தனி அதிகாரிகள் தவறு செய்தால், அவர்கள் மீது

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்கான அரசாணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை, போதுமான பாதுகாப்பு கொடுத்திருக்கிறோம். மீண்டும் 6 மாதத்திற்கு தனி அதிகாரிகளை அனுமதித்தால், மீண்டும் கூட்டுறவுத் துறை பலவீனப்படும் என்பதால், 6 மாதத்திற்கு ஒரு பாதுகாப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னதால், இந்த அரசு இன்றையதினம் எங்கெங்கு தனி அதிகாரிகள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் "நான் அபிசியல்" கொண்ட அதிகாரப் பற்றற்ற ஆலோசனைக் குழுவை நிறுவுகின்ற பணி மேற்கொள்ளப்படும். கூட்டுறவின் மீது யார் யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ, கட்சி வேறுபாடு இல்லாமல், ஜாதி, மத பேதம் இல்லாத நாணயமானவர்கள், ஓரளவு படித்தவர்கள், கூட்டுறவுச் சங்கங்களை பிளவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடாதவர்கள், கூட்டுறவின் வளர்ச்சியில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இந்த ஆலோசனைக் குழுக்களில் இடம் பெறுவார்கள். இவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடக்கும் வரை தனி அதிகாரி பொறுப்பில் இருக்கும் நிறுவனங்களில், அவருக்கு ஆலோசனை கூறுவார்கள். இந்த ஆலோசனைக் குழு 6 மாதத்திற்குச் செயல்படும். தனி அதிகாரிகள் முறைகேடு செய்யாமல், நிறுவனங்களில் பணியாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலும் அவற்றைச் செம்மைப்படுத்தலாம் என்ற கருத்திலும் இன்றையதினம் தமிழக அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது.

அடுத்த மசோதா வைப்புறுதி கூட்டுறவுத் திட்டத்தில் சில வங்கிகளைச் சேர்க்கின்ற மசோதாவாகும். இன்றையதினம் தமிழகத்திலே மாநில வங்கி ஒன்று உண்டு. 16 மத்திய வங்கிகள் உள்ளன. 131 நகர வங்கிகள் உள்ளன. ஆக மொத்தம் 148 வங்கிகள் உள்ளன. வங்கிகள் இந்த மூன்று இனத்திலும் வருகின்றன. 2,000 ரூபாய், 5,000 ரூபாய் என பொதுமக்களால் இந்த வங்கிகளில் டெப்பாசிட் வைக்கப்பட்டுள்ள தொகை 310 கோடி ரூபாய் ஏற்கெனவே சொன்ன 3 இனத்திலே சென்ட்ரல் ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்க், சென்ட்ரல் கோவாப்பரேட்டிவ் பாங்க், அர்பன் கோவாப்பரேட்டிவ் பாங்க் ஆகியவை வருகின்றன. இவைகளில் தான் 310 கோடி ரூபாய் டெப்பாசிட் வைக்கப்பட்டுள்ளது. நாளையதினம் இந்த வங்கிகளுக்கு

ஏதாவது நலிவு அல்லது சிரமம் ஏற்பட்டு விட்டால், வைப்பு வைத்திருப்பவர்களுக்கு ஏதாவது குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக மத்திய அரசிலே இன்றையதினம் ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி "டெப்பாசிட் இன்ஸூரன்ஸ் ஆக்ட்" என்ற வகையிலே அந்தச் சட்டத்திலே நம்முடைய வங்கிகளிலும் இன்றையதினம் வைப்பு வைத்திருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, ஒரு சட்டத் திருத்தத்தை கூட்டுறவு நிலவள வங்கிச் சட்டத்திலே, கூட்டுறவுத் துறைச் சட்டத்திலே கொண்டு வருகிற மசோதாவை இன்றையதினம் அவையின் மேலான கவனத்திற்கு வைத்திருக்கிறேன். இதனுடைய

(முற்பகல் 10.00)

நோக்கமே நாளையதினம் இது நலிந்துவிட்டாலும், 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று வைப்புத் தொகை வைத்திருப்பவர்கள் பாதிக்கப்படக்கூடாது. அவர்களுக்கு காப்பீட்டுக் கழகம் எல்.ஐ.சி. நிச்சயமாக எந்த அளவிற்குப் பணத்தைக் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்கு, எந்த அளவுக்கு வைப்பாகக் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்கு பணத்தை இறுதியாகக் கொடுத்துவிடுவார்கள். அந்த வசதியை ஏற்படுத்துவதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நிலவள வங்கிச் சட்டத்திலே ஒரு திருத்தம். நிலவள வங்கியைப் பொறுத்தவரையில், நிலத்தினுடைய மேம்பாட்டிற்காக மட்டுமே இதுவரை கடன்களைக் கொடுத்தது. விவசாயத் துறைக்கு மட்டுமே இதுவரை அது பணியாற்றிக் கொண்டிருந்தது. இன்றையதினம் எவ்வளவோ மாறுதல் நடைபெற்றுவிட்டது. வேளாண்மைத் துறையிலே அது நிரம்ப மாறுதலை உருவாக்கியுள்ளது. கோடிக் கணக்கான ரூபாய்களை நிலவளத்திற்காகவும், நிலவள மேம்பாட்டிற்காகவும், நில வளர்ச்சிக்காகவும், விவசாயப் பணிக்காகவும், வேளாண்மைத் துறையிலே விஞ்ஞான பூர்வமாக்குவதற்காக டிராக்டர்கள், வாங்கவும், கிணறுகள் வெட்டுவதற்கும் அதேநேரத்தில் பழைய கடன்களை அடைப்பதற்காகவும், முன்பு நிலத்திற்கு மட்டுமே கொடுத்துவந்த நிலைமைகளைமாற்றி, அந்தப் பணிகளுடைய தன்மையை மாற்ற வேண்டும் என்ற வகை

யிலே, வேறு சில தொழில்களுக்காகவும், குறிப்பாக தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணைகளை நடத்துதல் இப்படிப்பட்ட துணைத் தொழில்களுக்காகவும் நிலவள வங்கி வாயிலாக விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதுவரையிலே நிலத்திற்காக மட்டுமே கொடுத்துவந்த கடன் வசதியை இனி அந்த நிலத்தை வைத்திருக்கும் உழவன் விவசாயத்தை மட்டும் நம்பியிருக்க முடியாது என்ற நிலையில் வேறு தொழிலை, உப தொழிலைச் செய்தால், அதற்கும் சட்டப்படி ...ன் அளிக்க வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறோம். தேனீ வளர்க்கின்ற தொழிலுக்கோ, மீன்வளர்க்கின்ற தொழிலுக்கோ, இந்த மசோதாவிலே எந்தெந்த உப தொழிலுக்கு கொடுக்கலாம் என்று வரையறை செய்யப்பட்டுள்ளதோ அந்தத் தொழில்களுக்குக்கூட இன்றையதினம் நிலவள வங்கி கடன் கொடுக்கலாம் என்ற அனுமதியைக் கோரியும் ஒரு திருத்தம் இந்த மசோதாவில் கொண்டு வரப்பட்டு உள்ளது. தனி அலுவலர்களின் பணிக் காலத்தை மேலும் 6 மாதத்திற்கு நீட்டிப்பு செய்து நிலவள வங்கிகள் இதுவரை விவசாயத்திற்கு மட்டுமே வழங்கிய கடனை, இனி துணைத் தொழில்களுக்கும் வழங்கலாம் என்று வரையறுத்துள்ளோம். இன்றைக்கு மத்திய வங்கி, மாநில வங்கி, நகர வங்கி இவைகளிலே வைப்பீடுகளாக வைத்திருக்கின்ற ஏழையெளிய மக்களுடைய பொருட்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாமலிருப்பதற்காக, காப்பீட்டுக்கழகத்தினுடைய நிதியுதவி பெற்று அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஒரு திருத்தத்தையும் மசோதாவிலே கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தங்கள், கூட்டுறவுத் துறையை நலிந்தவர்களுடைய கேடயமாக ஆக்க வேண்டும், திறமை மிக்கவர்கள், நாணயம் மிக்கவர்கள், அதேநேரத்தில் பொது நலனில் அக்கறை கொண்டவர்கள், இவர்கள் எல்லாம் கூட்டுறவு இயக்கத்திலே பங்குகொண்டு இந்த இயக்கத்தை வளர்க்க வேண்டும், அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஆதிக்க சக்திகளை ஒழிக்க வேண்டும், சுரண்டல் சக்திகளை ஒழிக்க வேண்டும், ஊழல் சக்திகளை ஒழிக்க வேண்டும் என்ற விழுமிய நோக்கோடு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் நல்லெண்ணம் படைத்தவர்கள், சமூக நீதி வேண்டும் என்று கருதுபவர்கள், சமதர்மம் வேண்டுமென்று கருதுபவர்கள், சான்றோர்கள் எல்லாம் இதிலே பங்கு பெற

வேண்டும் என்ற விழுமிய நோக்கத்துடன் தான் இந்தத் திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான பரிசீலனைக்கு வைத்திருக்கிறேன். பரிசீலனைக்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் இவைகளை அனுமதிக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்களின் முன்பாக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கருத்துக்களை அளிக்குமாறு பணிவுடன் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானங்கள் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்";

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்";

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று மசோதாக்களிலும் ஒருமித்து நான் பேசுகிறேன். இதிலே ஒரு மசோதாவை நான் எதிர்க்கிறேன். மற்ற இரண்டு மசோதாக்களையும் நான் ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மூன்று மசோதாக்கள் மீதும் முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இந்த மசோதாக்கள் மீது மொத்தமாகப் பேசலாம். பேசும்போது எதை எதிர்க்கிறீர்களோ அதை எதிர்க்கிறேன் என்றும் எதை ஆதரிக்கிறீர்களோ அதை ஆதரிக்கிறேன் என்றும் பேசலாம். நிறைவேற்றும் போது தனித் தனியாக நிறைவேற்றலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : முதலில் 28-வது சட்டத்தைப் பொறுத்தவரையில், 'ஸ்பெஷல் ஆபீசர் அப்பாயின்ட்மென்ட்' சம்பந்தமாக இருக்கிற பில்லை நான் ஆட்சேபிக்கிறேன், எதிர்க்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காகச் சொன்ன காரணத்தை நான் கூர்மையாகக் கவனித்த பிறகும் கூட, அந்தக் காரணம் எனக்கு 'கன்வின்சிங்'-ஆக இல்லை. 1976 ஆம் ஆண்டுச் சட்டமே, ஸ்பெஷல் ஆபீசர்களை 3 வருஷங்களுக்குப் போடுவது என்று முதலிலே அனுமதித்திருந்தது. படிப்படியாக 3 வருஷங்களுக்குப் போட்டு முடித்துவிட்டார்கள். இப்போது மேலும் 6 மாதம் வேண்டும் என்று கேட்கிறார்கள். எமர்ஜென்ஸி காலத்தில் சட்டம் போட்டவர்களே 3 வருஷம் தான் கேட்டார்கள். ஆனால், இந்த அரசு அதற்கு மேலும் இப்போது 6 மாதம் கேட்கிறது. இவ்வாறு மேலும் நீட்டிப்பதை நான் கடுமையாக ஆட்சேபிக்கும் அதே சமயத்தில், நீட்டிப்பதற்குச் சொல்லும் காரணங்களை, நான் பரிசிலிக்க விரும்புகிறேன். நீட்டிப்பதற்கு குறிப்பாகச் சொல்லப்படுகின்ற காரணம், ஒரு 'காம்பிரிகென்சிவ்' பில் வர இருப்பதால், அதன்மூலம் சட்டத்தை மாற்றியமைத்த பிறகு தேர்தல் நடத்தலாம் என்பது. இந்த அரசு ஆட்சிக்கு வந்து 2 வருஷம் ஆகிவிட்டது. நான் கேட்கிறேன், 2 வருஷமாக காம்பிரிகென்சிவ் பில் கொண்டுவர முயற்சிக்கவில்லையா? ஏன் இந்த காம்பிரிகென்சிவ் பில் கொண்டு வர இன்னும் 6 மாதம் கேட்கிறீர்கள்? இந்த 6 மாதத்திற்குள் இந்த காம்பிரிகென்சிங் பில் செலக்ட் கமிட்டியில் பரிசிலனை செய்யப்பட்டு முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. சாதாரணமாக செலக்ட் கமிட்டிக்குப் போய்; திரும்பவும் அசெம்பிளிக்கு வந்து, அதைச் சட்டமாக 'பாஸ்' பண்ண வேண்டும். அதிலே நிறைய சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, 6 மாதம் மட்டுமல்ல, அதற்குப் பிறகும் இது நீட்டிக்கப்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இன்னொன்று, இந்த காம்பிரிகென்சிங் பில் மூலமாக ஒரு "ஃபூல் ப்ரூப்" ஆக்ட் வரும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. எலக்ஷன் ப்ரொசிஜர், எலக்ஷன் பாடீஸ், கான்ஸ்டிடியூஷன் கமிட்டிஸ் இவைகள் சம்பந்தமாகத்தான் புதிதாக வரும் காம்பிரிகென்சிவ் பில் இருக்கும் என்று சொன்னார்கள். இந்திய சமுதாய அமைப்பிலே என்ன திருத்தங்கள் போட்டாலும் சரி, வசதி படைத்தவர்கள் எலக்ஷனிலே தொடர்ந்து தவறுகள் செய்யத்தான் செய்வார்கள். அந்த அளவுக்கு இந்த அரசு அதை "ஃபூல் ப்ரூஃப்" ஆக்கிவிட முடியாது. "ஃபூல் ப்ரூஃப் ஆக்ட்" கொண்டு வரப்போகிறோம், அதற்கு இன்னும் 6 மாத காலம் ஆகும் என்று சொல்கிறார்கள். அப்படி அந்த ஆக்டைக் கொண்டுவர நடைமுறையிலே 6 மாதத்திற்கும் மேலாகும். ஆகவே, இதை நான் ஆட்சேபிக்கிறேன். பழைய சட்டப்பிரகாரமே எலக்ஷன் நடத்தலாம். எலக்ஷன் நடத்தி ஆங்காங்கே இருக்கக்கூடிய சொசைட்டிகள், சங்கங்களுடைய மகா சபையிலே அவைகளுடைய மெஜாரிட்டி நம்பிக்கையைப் பெற்றவர்கள் நடத்தினால் சரியாக இருக்கும். அப்படி இல்லாமல், ஸ்பெஷல் ஆபீசர்களுடைய கையில் நிர்வாகத்தைக் கொடுத்தால், எந்தவிதமான ஊழலும் இருக்காது என்று சொல்ல முடியுமா? தனியதிகாரிகள் தவறு செய்கிறார்கள். அவர்கள் மீது ஒரு கன்ட்ரோல், மேற்பார்வை இல்லை. இப்படி அந்தத் தனியதிகாரிகள் பணியாற்றும்போது 400, 500 மைல்களுக்கு அப்பால் இருக்கும் தலைமைச் செயலகத்தில் இருந்துகொண்டு அவர்களைக் கண்காணிக்க முடியுமா? தேர்தலை ஒத்திப்போடுவதற்கு இப்படிப்பட்ட காரணங்கள் "கன்வின்சிங்" ஆக இல்லை. இந்த பில்லைக் கொண்டு வருவதற்கான ஒரு பொருத்தமான காரணத்தையே சொல்லவில்லை. இந்த பில் கொண்டுவரப் படுவதற்கான உண்மையான காரணம் என்ன? எப்போதுமே வாழ்க்கையில் ஒரு காரியம் செய்தால், அதற்கான உண்மையான காரணம் ஒன்று இருக்கும், அதற்குப் பொருத்தமான காரணம் வேறொன்று இருக்கும். இதிலே பொருத்தமான காரணம் 'காம்பிரிகென்சிவ் பில்'. ஆனால் உண்மையான காரணம் என்ன? கோஆப்பரேட்டிவ் சொசைட்டிகள், கோஆப்பரேட்டிவ் இன்ஸ்டிட்யூஷன்கள் எல்லாம் real seats of economic power அதன் மூலம் அரசாங்கத்தினுடைய பணங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அப்படி விநியோகம் செய்யப்படும் அமைப்பை கன்ட்ரோல் பண்ணவேண்டிய

(திரு. ஆ. நல்லசிவன்) [1979 ஏப்ரல் 30

வர்கள் சமுதாயத்திலே அரசியலிலே செல்வாக்குப் பெற்றவர்கள் இருக்கும் நிலை இருக்கிறது. அப்படி spheres of local economic power இருக்கிறதே அதிலே எந்தவிதமான தவறுகளும் நடக்கக்கூடாது.

(முற்பகல் 10.10)

நீங்கள் இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டி லிருக்கிற பெரும்பான்மையான கூட்டுறவு சங்கங்களிலும், ஸ்தாபனங்களிலும் நீங்கள் நுழைந்து அவைகளைக் கைப்பற்றுகிற அளவுக்கு பலப்படாமல் இருக்கலாம். ஏற்கெனவே தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரஸ் கட்சி, மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அந்த அமைப்புகளிலெல்லாம் அவர்கள் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். அந்த "seats of power" லிருந்து அவர்களை அகற்றிவிட்டு அந்த இடங்களுக்கு நீங்கள் வருவதற்கு முயற்சிக்கிறீர்கள் என்ற கணிப்பு இருக்கலாம். அப்படி வருவதற்கு முன்பாக, இடைக் காலத்தில் ஆபிசர்கள் மூலமாக ஏற்கெனவே அந்த ஸ்தாபனங்களில் இருக்கும் மற்றக் கட்சிக்காரர்களின் செல்வாக்கைக் களைந்த பிறகு, நீங்கள் வருவதற்கு முயற்சிக்கிறீர்கள் என்று ஏன் நாங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது?

நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், எனக்கு ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட அனுபவத்தை வைத்து, அதனடிப்படையில் சொல்லுகிறேன். என்னுடைய வாழ்நாளில் சுமார் 3¾ மாதம் நான் விக்ரமசிங்கபுரம் கூட்டுறவு ஸ்டோரின் பொறுப்பிலிருந்தேன். இப்போது அது ஸ்பெஷல் ஆபீசர் பொறுப்பில் இருக்கிறது. நான் சுமார் 3¾ அல்லது 4 மாதம் அதன் செகரட்டரியாக இருந்திருக்கிறேன். வருஷத்திற்கு ரூ. 1¾ லட்சம் அளவுக்கு அங்கே வியாபாரம் நடக்கிறது. இப்போது அமைச்சராக இருக்கிற உங்கள் காலத்தில் அல்ல, ஆனால் உங்களுக்கு முன்னாலே இந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர் காலத்தில் அரசியல் தலையீட்டின் காரணமாக அந்தக் கூட்டுறவு ஸ்டோர் கலைக்கப்பட்டது. தலையீடு இருந்தது என்பதற்கு உதாரணமாக இதைச் சொல்ல வருகிறேன். நீங்கள் விசாரணைக்குத் தயாரென்றால், நான் சாட்சிகளை அழைத்து வரத் தயாராக இருக்கிறேன். இந்த ஆட்சி,

1979 ஏப்ரல் 30] (திரு. ஆ. நல்லசிவன்)

பொறுப்புக்கு வந்து 6 மாதத்திற்குப் பிறகு, அங்கே இருக்கும் அ.தி.மு.க கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாகவும், தலையீட்டின் காரணமாகவும் அந்த நிர்வாக போர்டு கலைக்கப்பட்டது. அந்த போர்டு கலைக்கப்பட்டதற்கு எந்தவிதமான நியாயமான காரணமும் இருந்திருக்காது. அதை என்னாலே நிரூபிக்க முடியும். அந்த கூட்டுறவு ஸ்டோர் சரியாக நடைபெறவில்லை என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால், அது முற்றிலும் தவறு. காரணம் நெல்லை மாவட்டத்திலேயே மிக நல்ல முறையில் நடத்தப்பட்ட கூட்டுறவு ஸ்டோர் அதுதான் என்ற வகையில் அங்கே இருக்கும் கூட்டுறவு ஜாயின்ட் ரெஜிஸ்டிராரால் கேடயமே அதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே இந்தக் கூட்டுறவுச் சங்கத்தைக் கலைக்க அரசியல் பயன்படவில்லை என்று நீங்கள் நெஞ்சில் கை வைத்துச் சொல்ல முடியாது. உங்களுடைய ஆட்சியில் இல்லையென்று சொல்லலாம். ஆனால் உங்களுக்கு முன்னால் இருந்த அமைச்சருடைய பொறுப்பில் அது நடந்திருக்கிறது. காரணம் அது எனக்கு நேரடியாகத் தெரியும். நான் அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்தவன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இப்போது குறிப்பிட்ட விக்ரமசிங்கபுரம் கூட்டுறவு அங்காடி போதுமான காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அந்தச் சங்கத்தின் நடவடிக்கையைப்பற்றி அந்தத் தொகுதியின் பேரவை உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சொர்ணம் அவர்கள் எடுத்துச் சொன்ன பிறகு, நானே அதைப் பரிசீலனை செய்து பார்த்தேன் என்பதையும். அது போதுமான காரணங்களுக்காக, முறையான காரணங்களுக்காக, சட்ட ரீதியான காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதன் காரணமாக அங்கே ஒரு தனி அதிகாரியின் பொறுப்பில் அந்தக் கூட்டுறவு அங்காடி செயல்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் கூட்டுறவு அங்காடி எந்தெந்தக் காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டதோ அந்தக் குறைபாடுகளையெல்லாம் ஓரளவுக்கு நிவர்த்தி செய்து வருகிறோம் என்றும், விரைவிலே இன்னும் சில குறிப்பிட்ட குறைபாடுகளைப் போக்க முனைப்போடு தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும், அங்கே யிருக்கிற கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் விரும்புகிற வகையில்,

தக்கவர்கள் விரைவில் பொறுப்புக்கு வருவார்கள் என்றும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, தயவுசெய்து அவர்கள் சிறிய பிரச்சினையைப் பூதாகாரமாகக் காட்டி, பெரிதாக ஆக்க வேண்டாமென்று பணிவன்போடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: அந்தக் கூட்டுறவு பண்டகசாலையைப் பொறுத்த வரையில், சீக்கிரமாகத் தேர்தல் நடத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்ன தற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதில் நான் சொல்ல விரும்புவதென்னவென்றால், அரசியல் தலையீடே இங்கே இல்லை என்று 'ரூல் அவுட்' செய்ய முடியாது என்பதுதான். இதெல்லாம் 'மேட்டர் ஆப் ஒப்பீனியன்'தான். அமைச்சர் அவர்கள் அந்த கூட்டுறவு அங்காடி சட்டபூர்வமான முறையில் கலைக்கப்பட்டிருக்கிறது என்றும், சரியான காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லலாம். ஆனால் குப்பர்சீட் செய்யப்பட்ட பல சங்கங்களுக்குச் சொல்லப் பட்ட காரணங்கள் இதற்குப் பொருந்தாது என்பதை அமைச்சர் அவர்கள் என்னிடம் தனியாகக் கேட்கும்போது அல்லது முழுமையான விவரத்தைக் கேட்கும்போது என்னாலே நிரூபிக்க முடியும். அதைப்பற்றி விரிவாக விவாதிக்க இது மேடையில்லை என்பதை நான் அறிவேன். ஆனாலும், அப்படிப்பட்ட எண்ணத்தை மேற்கொள்ள அந்தக் கலைப்பு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசாங்கம் கொண்டு வர இருக்கிற காம்ப்ரெஹென்சிவ் பில் மூலமாகக்கூட இந்தக் கூட்டுறவு அமைப்புக்குள்—நான் குறிப்பிட்ட ஸ்டோரை விட்டுவிடுங்கள்—பெரிய வசதிபடைத்தவர்கள், உள்ளே புகுந்து இந்த அமைப்புகளில் மேலாதிக்கம் செலுத்த வசதியும் வாய்ப்பும் இருக்கிறது என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னதான் 'காம்ப்ரெ ஹென்சிவ் பில்' கொண்டு வந்தாலும், வசதியுள்ளவர்கள் இந்த அமைப்புக் களுக்குள் புகுந்துகொண்டு அங்கே ஓட்டை போட முயற்சிப்பார்கள். அப்படிப் பட்டவர்களை அந்த அமைப்பிலிருந்து அரசாங்கம் நீக்குவதற்கு சட்டப்படி

முயற்சிக்கலாம். ஆனால் அதுவரை இந்த கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்துவதைத் தள்ளிப் போடுவது சரியல்ல. அதற்கு இங்கே சொல்லப்பட்டிருக்கிற காரணங்கள் 'கன்வின்சிங்' ஆக இல்லை என்றுதான் நான் ஆட்சேபிக்கிறேன்.

மற்ற இரண்டு மசோதாக்களைப் பொறுத்தவரையில், நான் இரண்டையுமே வரவேற்கிறேன். அதாவது கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், விவசாயிகள் பல்வேறு தலைப்பில் தொழில் வளர்ச்சியில் ஈடுபட உதவி செய்யும் முறையில் அதனுடைய 'ஸ்கோப்பை' எக்ஸ்டெண்டு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். இப்படி விஸ்தரிப்பு செய்து தரப்படுகிற கடன்களில் 75 சதவிகிதத்தை சிறு விவசாயிகளுக்கும் நலிந்தவர்களுக்கும் கொடுத்துவிட்டு மற்ற 25 சதவிகிதத்தை நடுத்தர விவசாயி களுக்குக் கொடுக்கும்படி விநியோகத்தைக் கண்காணிக்க வேண்டும்.

எனக்கிருக்கிற பயம் என்னவென்றால் விதி 32 (டி)-ல் என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்றால் . . .

"32 (*d*) purchase of tools, implements, machinery and cattle for use in any of the above purposes." Tools, implements, machinery. . . இவையெல்லாம் வாங்குவதற்கு யாருக்கு சக்தி இருக்கிறதோ அவர்களுக்குக் கொடுப்பது என்றால்—நீங்கள் கொடுக்கிற பணம் ஏற்கனவே குறைவு காரணம் நீங்கள் ரிசர்வ் பேங்கிடமிருந்துதான் வாங்கிக்கொடுக்க வேண்டும்— அதை "மேல் தட்டு" பர்சனுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்றால் அதில் சில வசதிபடைத்தவர்களே வந்துவிடுவார்கள். அதற்குத்தான் நிறைய சாத்தியக் கூறு இருக்கிறது. எனவே மொத்தத்தில் 75 சதவிகிதம் சிறு விவசாயி களுக்கும் நலிந்த பிரிவினருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 25 சதவிகிதத்தை நடுத்தர விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். காரணம் மற்ற வசதிபடைத்தவர்களுக்குப் பணம் தேவையென்றால், அதற்கு எவ்வளவோ வேறு 'பைனான்சியல் இன்ஸ்டிடியூஷன்'கள் இருக்கின்றன. அவர் கள் அங்கே தேவையான பணத்தை வாங்கிக்கொள்ள முடியும். தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அங்கே அவர்களால் தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்ள முடியும். இவர்கள் இங்கே சுலபமாகக் கிடைக்கிறது என்று வந்துவிடாமல் தடுக்கத்தான் நான் மேற்சொன்ன முறையைக் கையாள

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை லேண்டு டெவலெப்மெண்ட் பேங்குகளில் சட்ட ரீதியாக ஏற்பாடு செய்ய முடியாவிட்டாலும்கூட, அதற்குத் தேவையான புரொவிஷன் செய்ய முடியாது என்றாலும்கூட, இதை இம்ப்ளிமெண்ட் செய்யும்போதாவது இந்த வகையில் பிரித்துக் கொடுக்க அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரு மசோதாவை மட்டும் எதிர்த்து, மற்ற இரு மசோதாக்களை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவுகளை யொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்னும் கருத்து உலகெங்கும் பரவி வருகிற நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் விரிவாக இருக்கும் குழப்பங்களையும் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபட்டவர்கள் செய்த மாபெரும் தவறுகளையும் மனதில்கொண்டு இந்த அரசு 1961 முதல் இடையிடையே சில மாற்றங்களையும், திருத்தங்களையும்தான் செய்திருக்கிறதே தவிர, முழுமையான மாற்றத்திற்கும் சங்கங்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் வழி வகுக்க சரியான திட்டம் இதுவரை இல்லாத காரணத்தால், தற்போது அந்தக் குறைபாட்டைப் போக்குகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.

புண்ணுக்குப் புனுகு தடவினால் போதாது, தேவைப்பட்டால் அறுவை சிகிச்சையும் செய்ய வேண்டுமென்ற முறையில்தான் அரசு கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் நியமனத்தை மேலும் 6 மாதகாலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்று இன்றைக்கு அதனைச் சட்டமாகக் கொண்டு வருகிறது. காரணம், சில வலிமை மிக்கவர்கள், வசதி படைத்தவர்கள் இந்த அமைப்புக்குள்ளே நுழைந்து விடுவார்கள், ஆதிக்கம் செலுத்திவிடுவார்கள் என்ற அச்சம் இருப்பதால் அதைத் தடைப்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் அரசு இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சிங்கத்தைக் கூட்டுக்குள் அடைப்பதற்கு முன்னாலே பெரிய அகழி வெட்ட வேண்டும்,

நல்ல கம்பிகளைப் போட வேண்டும் என்பதும், வக்கிர சிங்கமானாலும், வேறு சிங்கமானாலும் அதை முறைப்படி அடைக்கவில்லையென்றால், பிறகு ஆபத்தாக வந்துவிடும் என்ற நோக்கத்தில்தான் அரசு இன்றையதினம் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதால் நான் அதனைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையின் அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பாராட்டுக்குரியன. கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரை இருந்தவர்கள் செய்த தவறுகளைப் பார்த்து நல்லவர்கள் அஞ்சி ஓடாமல் இருப்பதற்கும் அல்லது தவறு செய்ய இதிலே நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்று நல்லவர்கள் அல்லாதவர்கள் வந்து நுழைந்து விடக்கூடாது என்ற வகையிலும் திருத்தங்கள் தேவைப் படுகின்றன என்பதால் அதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் 6 மாதங்களல்ல, மேலும் தேவைப் பட்டாலும் இன்னொரு 6 மாதம் எடுத்துக்கொண்டாவது மிக நல்ல முறையில் இதை வகைப்படுத்திய பிறகே, மற்றவர்களை நுழைய விடுவது சரியாக இருக்க முடியும் என்று கருதுகிறேன்.

ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கட்சியைச் சார்ந்தவர்கள் கூட்டுறவு அமைப்புகளில் எங்கே பொறுப்புக்கு வந்துவிடுவார்களோ என்று எண்ணி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தனி அலுவலர்கள் இன்னும் சிறிது காலத்திற்கு இருக்க வேண்டுமென்று சொல்வதற்குப் பதிலாக, தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடாது என்று சொல்வதற்குக் காரணம் ஆளும் கட்சிக்காரர்களைப் பார்த்து நீங்களும் வந்து இந்த வலையில் விழுங்கள் என்று அழைக்கிறார்களோ என்ற சந்தேகம்கூட எனக்கு ஏற்படுகிறது. 6 மாதம் அல்ல, தேவைப்பட்டால் இன்னும் அதிகமான காலத்தை எடுத்துக்கொண்டாவது, கூட்டுறவுச் சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சமயத்தில் அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு பெரிய மனிதரை அழைத்து வந்து, இவரை எப்படியாவது நீங்கள் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அண்ணா அவர்கள் 'இவ்வளவு பெரியவரா அப்படிப்பட்ட தவறைச் செய்தார்' என்று அயர்ந்து போனார்கள்.

(முற்பகல் 10-20)

அதனாலே அப்போதே அண்ணா அவர்களுக்கு இந்த கூட்டுறவுச் சங்கங் களில் இருக்கிற முறைகேடுகளை மாற்ற வேண்டும், அதிலே இருக்கிற தவறு கள் நீக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அந்த எண்ணத்தின் அடிப்படையிலே, அண்ணா வழியில் இருக்கிற இந்த அரசு, அந்த முறை களிலே சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது.

தனி மனிதனுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை என்னவென் றால், வட்டிக்கு விட்டு பணம் வாங்குகிற மனோ நிலை சிறு குடும்பங்களைச் சேர்ந்த சிறு வசதியுள்ளவர்களுக்குக் கூட வந்திருக்கிறது. யார் யாரோ அதிக வட்டிக்கு பணத்தை வாங்குகிறபோது, தங்கள் கையிலும் இரண்டா யிரம், நான்காயிரம் ரூபாய் இருந்தால், அதை வைத்துக்கொண்டு அதிக வட்டிக்கு தன் பக்கத்து வீட்டுக்காரனுக்குக் கொடுக்கலாமே என்று எண்ணு கிறார்கள். அந்த மனப் போக்கு வளர்ந்திருப்பதை மாற்றி, அவர்களும் வங்கியிலே போட வேண்டும் என்ற நிலையை உண்டாக்க வேண்டும். வட்டிக்கு விட்டு பொருள் சேர்ப்பதைத் தொழிலாகச் செய்ய வேண்டியது வங்கிகள்தான். அந்தக் காரியத்தை தனி மனிதன் மேற்கொள்ளக் கூடா தென்றால், அந்த வங்கியில் அவர்கள் போடுகிற பணத்திற்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். ஏதோ கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிற சிலர் செய்து விடுகிற தவறுகளின் காரணமாக, அவர்கள் போடுகிற இரண்டாயிரம், மூன்றா யிரம் ரூபாய்க்குப் பாதுகாப்பில்லை, போடுகிற பொருள்களை இழந்துவிடுகி றார்கள் என்ற சூழ்நிலை அவர்களுக்கு வரக்கூடாது என்பதற்காக காப்

பீட்டுக் கழகத்தின் (எல்.அய்.சி.) மூலமாக இப்படிப்பட்ட சிறு முதலீடுகளை வைத்துக்கொண்டுள்ளவர்களும் ஏதேனும் வங்கிகளில் போடுகிறபோது, இப்படிப்பட்ட குறைபாடுகளின் காரணமாக தவறுகள் நடந்துவிட்டாலும் கூட, அவர்கள் போட்ட பணத்திற்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்ற முயற்சியிலே இரண்டாவது சட்டத் திருத்த முன்வடிவு தேவை என்பதை உணர்கிறேன்.

அடுத்து, நிலவள வங்கியிலிருந்து நிலத்தை மட்டும் கருதி அதனுடைய முன்னேற்றத்திற்கு மட்டும் பொருள் பெறுகிற நிலையை மாற்றி, நிலத்தோடு ஒட்டிய தொழில்களுக்கும், பயிர் செய்கிறார்கள் என்றால் பயிர் செய்த பொருள்களை எடுத்துச் செல்லுகிற வாகனங்களைப் பெறுவது, பழங்களைப் பயிரிடுகிறார்கள் என்றால், அந்தப் பழங்களைப் பாதுகாப்பதற்காக பழத்தை வைக்கும் குளிர்சாதன வசதிகளைப் பெறுவது, தேனீக்களை வளர்ப்பது, கோழி வளர்ப்பது, பால் பண்ணை, பட்டுத் தொழில், மீன் வளர்ப்பு போன்ற பல்வேறு நிலைகளுக்கும் இந்த நிலவள வங்கியின் முறைகளை ஈடுபடுத்து வதற்காக அந்தச் சட்ட முன்வடிவு வந்திருப்பது பாராட்டுக்குரியது.

கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டுமென்பதும், கூட்டுறவுச் சங்கங்கள் வர வேண்டுமென்பதும், கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் வாழ்விலே பெரும் பங்கு வகிக்கின்றன என்பதும் நியாயமான உணர்வு என்றாலும், அதிலே தவறுகள் வளர்ந்துவிடக்கூடாது என்று இந்த அரசு எண்ணுவது பாராட்டுக்குரியது.

அண்ணா அவர்கள் தெரிவித்ததைப் போல, ஆற்றிலே வெள்ளம் இருந்தால் மட்டும் போதாது, அலை அலை புரண்டு ஓடி ஊரை அழித்துவிடாமல் இருக்க இரு கரைகள் வேண்டுமென்பதைப் போல, நல்ல வீட்டுக்கு சன்னல் கள் இருந்தால் மட்டும்போதாது, சன்னலுக்குக் கதவுகள் வேண்டும், கதவு களுக்குத் தாழ்ப்பாள் வேண்டுமென்பதைப் போல, மாட்டுக்கு சவுக்கு இருந்தால் மட்டும் போதாது, அவற்றை இடதுபுறம், வலது புறம் திருப்ப மூக்கணாங்கயிறு வேண்டுமென்பதைப் போல, இந்த சட்டமுன்வடிவுகளும், இன்னும் பல நல்ல திருத்தங்களும், 1961 ஆம் ஆண்டிலிருந்து ஏதோ ஒரு

முறையிலே போய்க்கொண்டிருந்ததை மாற்றி புதிய நிலைக்குக் கொண்டு வருகின்றன என்ற அளவுக்கு இந்தச் சட்ட முன்வடிவுகளை வரவேற்று அமைகிறேன்.

திரு. இரத்தின பாலகுருசாமி: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சட்ட திருத்தம் எண். 28,22,32 ஆகிய மூன்று சட்டத் திருத்தங்களை இந்த மன்றத்திலே கொண்டு வந்து அதை நிறைவேற்றுவதற்காக அவர் எடுத்துச்சொன்ன காரணங்கள் நல்ல காரணங்களாகும். அவர் பெற்ற அனுபவத்தின் வாயிலாக, கூட்டுறவுச் சங்கத்திலே நடைபெற்ற பழைய முறைகேடுகளை மாற்றி, பல நல்ல முயற்சிகளை எடுத்து, மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்று இந்த அவையிலே சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தற்போதிருக்கிற நிலையில் தேர்தலைக் கொண்டு வந்தால், ஏதோ கட்சியின் அடிப்படையிலே தோற்றுப் போய்விடுவோமென்ற காரணத்தால், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சில உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அரசின் கருத்து அப்படியல்ல. இன்றையதினம் பழைய அங்கத்தினர்கள் அப்படியேதான் இருக்கிறார்கள். புதிய அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். ஆனால் சில இடங்களில் தனி அதிகாரிகள் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யவில்லை என்பதை உணர்ந்து மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூட்டுறவுத் துறைப் பொறுப்பை ஏற்ற பிறகு, எடுத்த சில நடவடிக்கைகளின் காரணமாக தனி அலுவலர்கள் நல்ல பொறுப்போடு, கடமையுணர்ந்து காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னைப் போன்றவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே அப்படிப்பட்ட சட்டத்தை மேலும் ஆறு மாத காலத்திற்குத் தேவையென்று வைத்திருப்பது பொருத்தமானதாகும். இந்த அரசு நன்றாக ஆராய்ந்து தெளிவாகத்தான் இத்தகைய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து முறையாக நிறைவேற்றி, 6 மாத காலத்திற்குப் பிறகு தேர்தலை நடத்தலாம் என்ற முடிவுக்கு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையிலே எடுத்துச் சொல்லியிருக்

கிறார்கள். தனி அலுவலர்கள் மீது நம்பிக்கை இல்லை, அவர்கள் தவறுகளைச் செய்கிறார்கள், முறைகேடுகளைச் செய்கிறார்கள் என்றால், அதைப் போக்குவதற்குரிய முயற்சிகளில் அரசு மேற்கொண்ட ஈடுபட வேண்டும் தவிர, " தவறு செய்கிறார்கள் ", " தவறு செய்கிறார்கள் " என்று எண்ணிக் கொண்டிருந்தால், எப்படியென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இன்றைய தினம் கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள அதிகாரிகள் ரொம்ப நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள், நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை பத்திரிகைகளின் வாயிலாக நான் பார்த்துத் தெரிந்து கொண்டேன். ஓய்வு நேரங்களில் நானே நேரில் சென்று அனுபவபூர்வமாக அவர்கள் என்னென்ன காரியங்களை மக்களுக்காக ஆற்றுகிறார்கள், எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள் என்பதை உணர்ந்து பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் எல்லோரும் கேட்கிறார்கள். விவரம் தெரிந்த எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் கூட, " மத்திய ரிசர்வ் வங்கியிலிருந்து கொடுத்த கடனைத் தள்ளுபடி செய்துவிட்டால், இந்த அரசு நல்ல அரசு " என்று சொல்லுகிறார்கள். விவரம் தெரிந்தவர்களே இப்படிச் சொல்லுகிறார்கள் என்றால், எப்படி பதில் சொல்லுவதென்று தெரியவில்லை. மக்களை ஏமாற்றும் காலம் இந்தக் காலம் இல்லை. ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்ற தொகையை கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்பட்ட கடனை எப்படித் தள்ளுபடி செய்ய முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். வேண்டுமானால் கூட்டுறவுத் துறையிலிருந்து வாங்கிய சிறு சிறு கடன்களை ஒத்திவைக்கிற முறையை இந்த அரசு செய்யலாம். ஆனால் வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டுமென்றால், இது முடிகிற காரியமா ? இது முடியாத காரியம் என்று தெரிந்தும்கூட, இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த உண்மைகளையெல்லாம் பார்த்த இந்த அரசு நாட்டு மக்கள் உணரத்தக்க வகையிலே நல்ல திருத்தங்களைக் கொண்டு வந்து, தனி அலுவலர்களை நியமித்துவிட்டு அதற்குப் பின்னாலே ஆலோசனைக் குழுவையும் இடம் பெறச் செய்து, அந்தக் குழுவில் கட்சிவாரியாக உறுப்பினர்கள்

இல்லாமல் பொதுவாக உறுப்பினர்கள் நியமனம் பெறுவார்கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆலோசனைக் குழுவின் மூலமாக காரியங்களை நல்ல முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த அரசு விரும்புவதை நான் வரவேற்று அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்ட முன்வடிவை யொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த விரிவான சட்டம் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்படவிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதன் காரணமாக, அந்த அமைப்பில் கருத்துக்களை விரிவாக எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பு இருப்பதால், ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி விடைபெற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் கூட்டுறவுப் பயிற்சி அளிப்பதற்காக இருக்கிற நிறுவனங்கள் போதுமானதாக இல்லை. Co-operative Training Institute-பயிற்சி பெற வேண்டியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு பயிற்சி நிலையங்களில் இடமில்லாததால், இத்தகைய பயிற்சி நிலையங்களை அதிகரிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு என்பது முக்கியமான பாடமாக அனைத்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் பெற வேண்டும். தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க வேண்டிய சூழ்நிலையில் கூட்டுறவுத் தத்துவத்தைப் பயில மாணவர்களுக்கு நாம் வாய்ப்புக் கொடுக்காத சூழ்நிலையில், மத்திய அரசு தன்னுடைய National Council for Rural Higher Education . என்ற அமைப்பின் மூலமாக கூட்டுறவுப் பயிற்சியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதில் பயிற்சி பெற்று வருகிறவர்கள் எம்.ஏ. படிப்புக்கு இணையாகக் கருதப்படுகிறார்கள். அதிலே பயிற்சி பெற்றவர்கள்தான் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். அப்படிப்பட்ட முதுகலைப்பட்டம் வழங்கும் வாய்ப்புகளைப்பற்றி நாமும் சிந்திக்க வேண்டும்.

(முற்பகல் 10-30)

பல்கலைக்கழகத்திற்கு நாம் பரிந்துரை செய்ய வேண்டும். இது மிக மிகத் தேவையான கல்வி. சமூகத்திற்குத் தேவையான கல்வி, பள்ளி கல்லூரி அனைத்து மட்டங்களிலும் இது இடம் பெற ஆவன செய்ய வேண்டும். வட்ட அளவிலே, மாவட்ட அளவிலே, அரசு ஊழியர்கள் அல்லது ஆசிரியர்கள், தொழிலாளர்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அந்தச் சங்கங்களைத் தொடங்குவதற்கு அரசு ஆதரவு கொடுக்க வேண்டும், ஊக்கம் கொடுக்க வேண்டும், நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். வட்ட அளவிலே, மாவட்ட அளவிலே இப்படிப்பட்ட சங்கங்கள் எல்லாம் வளருமானால், நாம் கூட்டுறவுத் தத்துவத்திலே வளர்ந்துகொண்டிருக்கிறோம் என்பது பொருள். அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தாராளமாக நிதியுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, அனைத்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தனியார் பள்ளிகளாக இருந்தாலும் சரி, தனியார் கல்லூரிகளாக இருந்தாலும் சரி, அங்கு கூட்டுறவுச் சங்கங்கள் கட்டாயமாக ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள், இதர கல்விப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டுமென்று ஒரு விதிமுறையை அரசு ஆணையாக வெளியிடுமானால், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பொருள் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலமாகக் கிடைக்கின்ற லாபத்தை அங்கங்கேயுள்ள ஏழை மாணவர்களுக்கு அவர்களுடைய கல்வி நலனுக்காகப் பயன்படுத்த முடியும். அது கூட்டுறவுத் தத்துவத்தினுடைய வளர்ச்சியில், கல்வித்துறையில் ஒரு நல்ல வாய்ப்பாக இருக்க முடியும் என்ற கருத்தினை மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களிடம் வற்புறுத்த விரும்புகிறேன். அனைத்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டாயமாகத் தொடங்கப்பட வேண்டும். அப்படித் தொடங்கப்படுவது மட்டுமல்ல, அதற்கு நிதி உதவியும் செய்ய வேண்டும். நிதி உதவி இருந்தால்தான், சங்கம் பலமாக வலுவாக இயங்க முடியும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு வங்கிகளின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் சமுதாயத்தினுடைய நலிந்த பிரிவினருக்கு பொருளாதார உதவி செய்வதுபற்றி நாம் சிந்திக்க வேண்டும். அன்று இதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த போது, அவர்கள், தொடர்புடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். ஆக கடன் நிவாரணச் சட்டம், கடன் கட்டுப்பாடு சட்டம் எல்லாம் கொண்டு வருவதன் மூலமாக கடன் வசதிகள் குறையும். தேவைப்படுகின்றவர்களுக்குக் கடன் வசதிகள் கிடைப்பதற்கு வாய்ப்புகள் குறைக்கப்பட்டிருக்கின்ற நேரத்திலே அரசு தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், வங்கிகள் மூலமாகவும் நலிந்த பிரிவினருக்கு, நலிந்த சமுதாயத்தினருக்கு நாம் உதவி செய்ய வேண்டும். அது குறித்து ஆலோசிக்க வேண்டும். அந்த வசதிகளை அதிகரிக்க வேண்டும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு முறை சொன்னேன். கிராமப்புறத்தில் குடிசைத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு, வேலை வாய்ப்புகள் இல்லாத இளைஞர்கள் சுயமாகத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு, சுயமாகத் தொழில்கள் ஆரம்பித்து குடிசைத் தொழில்கள் எல்லாம் நடத்துகின்றவர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அதிக அளவில் நிதி கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்கள் கொடுத்தார்கள். ஆனால் அது குறைந்த அளவுக்குத்தான் இருக்கிறது. விவசாயத்துக்கு எப்படி அதிக அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உதவி செய்கிறோமோ அந்த அளவுக்கு குடிசைத் தொழில்களுக்கும், கிராமத் தொழில்களுக்கும் உதவி செய்ய வேண்டும். ஆங்காங்கே உள்ள வேலையற்ற இளைஞர்கள் அந்தத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு மிக தாராளமான அளவுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக இந்த மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிலே பணி செய்கின்ற ஊழியர்களுக்கு ஒரு சீரான ஊதிய விகிதம், பணி நிலைமை எல்லாம் தமிழ் நாடு பூராவும் ஒரே மாதிரி

யாக இருக்க வேண்டும். இப்போது அது இல்லை. ஒவ்வொரு இடத்திற்கும் ஊதியத்தில் வேறுபாடு இருக்கிறது, பணி நிலைமையில் வேறுபாடு இருக்கிறது. மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கக்கூடிய இந்த வங்கிகளிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் சீரான வேலை நிலைமைகள், சீரான ஊதியம், பணிப் பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்டு வருகின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. க. அறிவழகன் : மதிப்பிற்குரிய மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையினுடைய பல்வேறு விதமான திருத்தச் சட்ட முன்வடிவுகள் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி நான் என்னுடைய கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துறையினுடைய அமைச்சராக மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பங்கேற்றுக்கொண்டபின், இந்தத் துறை மிக உற்சாகத்தோடும், உத்வேகத்தோடும் பணியாற்றுகின்றது என்பதைக் கூறிக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையின் விழாக்களில் கூட்டுறவுத் துறையினுடைய அவசியம் குறித்து அவர்கள் பேசிய பேச்சுக்களை நான் கேட்டுமிருக்கிறேன், படித்துமிருக்கிறேன். நம்முடைய நாட்டு மக்களிடத்திலே கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிப் பேசி, அந்த இயக்கத்தை வளரச்செய்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நில்வள வங்கிகளை எடுத்துக்கொண்டாலும், அரசு சார்பாக நடத்தப்படுகின்ற கடன் தருகிற கூட்டுறவு வங்கிகள் என்ற நிறுவனங்களை எடுத்துக் கொண்டாலும், அங்குள்ளவர்கள் பணியாற்றுகின்ற முறையில், அது அமைந்திருக்கின்ற முறையில் பல தவறுகள் இருக்கின்றன என்பது என்னுடைய எண்ணமாகும். அவற்றையெல்லாம் பரிசீலிக்க முழுத் திருத்தத்தைக் கொண்டுவருகின்ற முறையிலே ஒரு கூட்டு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருப்பது நாம் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

கிராமப் பகுதிகளில் என்னுடைய மாயவரம் பகுதிகளை எடுத்துக் கொண்டாலும், குறைகள் இருக்கின்றன. அங்கு கூட்டுறவுச் சங்க வங்கிகளிலே கடன் வாங்குகின்றவர்கள் கடன் வாங்குகின்றபோது கஷ்டப்படுகிறார்கள். கடன் வாங்குவதிலே சிக்கல்கள் இருக்கின்றன. சிக்கலை அங்கேயுள்ள ஊழியர்களே ஏற்படுத்துகின்ற காரணத்தால், அவர்கள் முழுக் கடனைப் பெறமுடியாமல் ஒரு பகுதியைத்தான் பெறுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அவர்கள் ஒரு பகுதியை இழக்கவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கடனைத் திருப்பி வசூலிக்கின்ற முறையில், விவசாயிகளுக்கு வருமானம் வருகின்ற நேரத்திலே வசூலிக்காமல், "இந்த" நாள் என்று இவர்கள் குறிப்பிடுகின்ற நாளில் வசூலுக்கு நாடுகின்றார்கள். கடன் திருப்பக் கொடுக்க வேண்டிய நாள் குறிப்பிட்டு அந்த குறிப்பிட்ட நாளில் விவசாயிகளிடம் சென்று கேட்பதால், அவர்கள் கடனைத் திருப்பிக்கொடுக்கமுடியாத சூழ் நிலையில் இருக்கிறார்கள். அதற்காக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. திரு. ராபர்ட் ஓவன் என்பவர் காலத்திலிருந்து கூட்டுறவுத் துறை பற்றி பல கருத்துக்கள் வளர்ந்து வந்திருக்கின்றன. ஒன்று மாத்திரம் நிச்சயமாகத் தெரிகிறது. நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையிலே இன்று பேசியிருக்கிறார்கள். இந்தத் துறையிலே இருக்கின்ற ஊழல்களையெல்லாம் ஒழிக்க வேண்டுமென்று இருக்கிறேன் என்று பேசியிருக்கிறார்கள். ஊழல் எப்படி உருவாகின்றது என்று நாம் பார்க்க வேண்டும். இப்படி ஊழல்கள் உருவாவதற்குக் காரணம் இன்றையதினம் இருக்கின்ற அமைப்பு முறை ஜனநாயகக் கோட்பாட்டின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு வருமானாலகூட, அதைத் திருத்தக்கூடிய முறையில் இல்லை. இதைப்பற்றி சட்ட மன்ற பேரவையிலும், பல முறைகள் பல அங்கத்தினர்கள் கூறி அதைத் திருத்துவதற்கான ஆலோசனைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "செக்ஸ் அன்டு பேலன்ஸ்" என்ற ஒரு முறையை வைத்து, அவ்வப்போது தவறுகளைத் தவிர்க்க வேண்டும். குழுக்கள் கூட்டியாக வேண்டும். அதில் பொதுமக்களுடைய பிரதிநிதிகள், அதைப் பற்றி ஆராய்ந்து பார்க்க

வேண்டும். அங்கே இருக்கின்ற மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற அளவுக்கு திருத்தங்கள் கொண்டு வந்து நிலைமைகளைச் சரியாக்க வேண்டும். அவ்வப்போது ஏற்படக்கூடிய தவறுகளைத் திருத்தக்கூடிய அளவுக்கு வலிமையுள்ள, டைரக்டர்கள் அல்லது நெறியாளர்கள் உடையதாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைய வேண்டும்.

நமக்குத் தெரியும்: கூட்டுறவுத் துறையிலே, தேர்தல்கள் நடக்கின்ற காலத்திலே ஒரு பொதுத் தேர்தல் போல நடத்துகிறார்கள். கவுன்சில் தலைவர் அல்லது நகர சபையினுடைய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சூழ்நிலைகள் இருக்கின்ற காலத்தில், என்னென்ன காரியங்கள் நடைபெறுகின்றனவோ அது போல நடைபெறுகின்றன என்று சொல்கிறார்கள். அப்படியானால், தேர்தல் முறையில் தவறுகள் நடந்து அதன் மூலமாக அங்கே வந்து உட்காருகின்றவர்கள், தேர்தலிலே செலவழிக்கப்பட்ட பணத்தை எப்படியாவது திரும்பப் பெறலாம்' என்று கருதுகின்ற நிலைமைகள் இல்லாமல் இருக்க வேண்டும். 'பெர்ஃபெக்ஷன்' என்று சொல்லத்தக்க அளவுக்கு அங்கே இருக்கின்ற முறையை மாற்றிச் செய்வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்தத் துறை நல்ல வளர்ச்சி பெறுவதற்கான மிக அருமையான கருத்தோட்டத்தைக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மறுபடியும் பாராட்டி அமருகிறேன்.

(முற்பகல் 10-40)

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI :—Hon. Deputy Chairman, while going through the three Bills that have been placed before the House, I was rather hesitant to speak on this subject. But, after listening to Hon. the Minister for Co-operation, I was encouraged to learn that we were going to have a very comprehensive law to see that these loopholes that exist at present in the Co-operative system were reduced. I support all the three Bills that are before us. Since this Co-operation Bill is going to be a comprehensive one, as a co-operator who had given evidence somewhere

in May 1968 before the Santhanam Committee, I thought I could suggest certain points, which though not directly connected with the present matter, would be useful if they were accepted when the comprehensive law should be brought before this House.

Now this Land Development Bank (Amendment) Bill, that is brought before us, is really a very useful law, because there was a rigidity previously and under this, now a lot of assistance would be given under different heads. While this law has come into existence, I feel like reiterating my views and pleading that we should have a Co-operative for House Construction *not under individual ownership but as free institutions*. Under the existing provision, Co-operative Societies give loans only to individuals but there are also institutions which have to do something for the the betterment of their own staff members. If there were such Co-operatives, the slums in private individual areas could be improved through the aid of the Co-operatives. We have some Co-operatives purely run by the women in Maharashtra and other places specially for building construction and these co-operatives have done very good work and the gain they get from them is utilised for other welfare activities. There was a committee under the chairmanship of the brother of the Hon. the Minister for Co-operation when our revered Anna wanted that the slum improvement should be made purposeful to achieve rapid progress and that it was not enough if the slum improvement work was under the direct charge of Government only. Private organisations should also come forward and do something about it. I was also on that committee and I made a proposal that there were a number of private slums where the Government could not go and the conditions there were very insanitary and that if we could have a Housing Co-operative, it could help these private slums and we would have a better City and this was accepted but, it is regrettable that the Committee could not function after Anna passed away. I am sure such Co-operative Societies also could be brought in this particular comprehensive law. The Hon. the Minister for Co-operation mentioned on a previous occasion that a number of Co-

operative canteens were functioning in colleges. For the children in the Primary Schools, we have the Midday Meals Programme. But in the High Schools, there is no scope at present either for running Co-operative canteens or for implementing the Midday Meals Programme. I would like the scheme of running co-operative canteens to be extended to the High Schools also. Many High Schools have now become Higher Secondary Schools. Many half-fed or ill-fed children studying in the High Schools and Higher Secondary Schools would be benefited if co-operative canteens are run in such schools also.

Before concluding, I would like to make another appeal that more and more women should be allowed to take active part in the co-operative system. I have a feeling that in institutions managed by women, many drawbacks can be avoided. Therefore, I request the Hon. Minister kindly to make necessary provisions in the Act on Co-operatives to enable the opening of more and more all-women's co-operatives so that the benefits of the co-operative movement could reach all the people.

Thank you.

திரு. ம. சங்கரலிங்கம்: துணைத் தலைவரவர்களே, அவையின் முன்னால் வைத்திருக்கிற கூட்டுறவுச் சங்கங்களின் தனி அதிகாரிகளின் நியமன காலத்தை நீட்டிக்கிற சட்டத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, விளக்கம் தந்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள், "நியமன அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிக்கிற கருத்துக்கு நான் இசையவில்லை. கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். தேவையற்றது என்றாலும்கூட தவிர்க்க முடியாததாக இது இருக்கிறது. காரணம், ஒரு ஒருங்கிணைந்த கூட்டுறவுச் சட்டம் வரவிருப்பதால், வந்திருப்பதால், அதுவும் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பட்டிருப்பதால், ஆய்வுக் குழு அதை ஆய்ந்து, சட்டமுன்வடிவாக மாறிய பிறகு, அதன் அடிப்படையிலே தேர்தலை நடத்தி, ஜனநாயக ரீதியில்

கூட்டுறவு அமைப்புகளை இயங்கச் செய்ய முடியும். அதுவரை தனி அதிகாரிகள் நடத்துவது தவிர்க்க முடியாததாகிவிட்டது, எனவே இந்தச் சட்டமுன்வடிவை நான் கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொன்னார்கள்.

விடுதலைக்குப் பிறகு நாம் கூட்டுறவு இயக்கத்தில் வெற்றி கண்டிருக்கிறோமா, தோல்வி கண்டிருக்கிறோமா என்பதை விருப்பு வெறுப்பின்றி, அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, ஆயக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆங்காங்கு கிராமப் பகுதிகள், நகரப் பகுதியில் பொருளாதாரச் சீரமைப்புக்கு ஏற்ற நிலையில், கடன் பெற்று, தேவையான விவசாயச் செயல்களையும், தொழில்களையும், சிறு வாணிபத்தையும், மற்றவைகளையும் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாகச் செய்துகொள்வதன் வாயிலாக, பொது நிர்வாகத்தை நடத்தும் பயிற்சியைப் பெறும் வாய்ப்பைப் பார்க்கிறோம். சுதந்திரம் பெற்ற பிறகு, நம் நாட்டில் கூட்டுறவுத் துறை எந்த அளவிற்கு வெற்றி கண்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால், **அந்தக் கட்சிக்காரன், இந்தக் கட்சிக்காரன் என்று சொல்லாமல்,** மொத்தத்தில் சமுதாயமும், சமுதாயத்தில் 'சிவிக் கன்சியன்ஸ்' என்பதை ஓரளவிற்கு வளர்க்காததாலும், தோல்வி அடைந்திருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். அதற்குக் காரணங்கள் பலவாறாக இருக்கலாம். அதை ஆராய்ந்து பார்க்கிறவர்கள் சொல்கிற காரணங்கள் பல கோணங்களில் இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில், அன்றைய கூட்டுறவு அமைச்சரவர்கள் இதற்கு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்தார்கள். ஒரு சாரார் கையிலே கூட்டுறவுத் துறை சிக்கிக்கொண்டிருக்கிறது, கூட்டுறவுத் துறையை ஒரு சாரார் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள், அதை மாற்ற வழி வகைகளைக் காண்கிறோமென்று அவர்கள் சொல்லி, பல சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். இப்போது அவர்கள் ஆளுகின்ற கட்சியினுடைய இயக்கத்தில் இருந்து, நல்ல ஆலோசனைகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் கலந்து, இதில் நல்முறையில் தீர்வு காணலாம். அவர்கள் இந்த அவையிலே ஒரு கருத்தை எடுத்து வைத்தார்கள். கூட்டுறவு இயக்கம் ஒரு சிலர் கையிலே சிக்கிவிட்டது; அதைப் பாவலாக்கும் முறையைக் கொண்டு வருகிறோம், கூட்டுறவுச் சட்டத்தின்கீழ், கூட்டுறவுச் சங்கங்களே விதி

முறைகளை வகுத்துக்கொள்ள முடிகிறது. வேண்டிய ஒரு கூட்டத்தாரைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள், அவர்களை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்துகிறார்கள், ஆகவே மைய அரசும், ரிசர்வ் வங்கியும், இந்த நாட்டிலே விரைவாக சீர்திருத்தங்களைக் கொண்டுவர பெருமளவில் பணம் தந்து, அதைக் கடனாகக் கொடுத்து, வேளாண்மை, தொழில் உற்பத்தி, சிறுதொழில் வளர்ச்சிக்குக் கடன் கொடுக்கச் சொன்னாலும், அந்த அமைப்புகளில் இருக்கிறவர்கள் அவைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள், ஒரு சிலருக்குக் கொடுத்துவிட்டு, அவர்களே பங்கு வைத்துக்கொள்கிறார்கள், அந்த முறையை மாற்ற வேண்டுமென்று சொல்லி, எத்தனையோ திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். நாங்கள் கேட்டுக்கொண்டே இருந்தோம், பார்த்தோம். நிர்வாக போர்டில் ஒரு சாராருடைய ஆதிக்கம் இல்லாமல் இருக்க, வீக்கர் செக்ஷன்ஸைச் சேர்ந்தவர்களை நியமிக்கும் அதிகாரத்தை அவர்கள் பெற்றார்கள். அரசாங்கமோ கூட்டுறவுத் துறையோ ஒவ்வொரு போர்டிலும் ஒரு பெண் உறுப்பினர், ஒரு தாழ்த்தப்பட்ட ஜாதி உறுப்பினர் என்று உறுப்பினர்களை நியமனம் செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட என்று சொல்லப்படுகிற கூட்டத்தினரின் ஆதிக்கத்திலிருந்து கூட்டுறவு இயக்கத்தை விடுபடச் செய்ய, இவைகளைச் செய்திருக்கிறோமென்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த அரசு, நியமன உறுப்பினர்களைப் போடுவதால்தான் தவறுகள் நடந்துவிட்டன என்று கனித்திருக்கிறது. எதிர்க்கட்சியாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியபோது, ஒரு கருத்தைச் சொன்னது. கூட்டுறவுச் சங்கங்களில் நியமன உறுப்பினர்களைச் சேர்த்து, அந்தச் சங்கங்களை தன்னுடைய கைவசப்படுத்தி, அதை ஆளுங் கட்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார்களென்ற குற்றச்சாட்டைச் சொல்லி, நியமன உறுப்பினர்களென்று நியமிப்பதை வன்மையாகக் கண்டித்தார்கள். இப்போதும் அந்தக் கருத்தைக் கொண்டிருப்பார்களென்று நினைக்கிறேன். உண்மையிலேயே

(முற்பகல் 10-50)

அவர்கள் கொண்டிருந்த கருத்து அதுவாக இருந்தால், இப்போது தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு பதிலாக ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்துக்கும் தேர்தலை நடத்தியிருக்கலாம். நியமன

உறுப்பினர்களை எல்லாம் விட்டிருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்சி அரசியலை அவர்கள் புகுத்தி விட்டார்கள் என்பதை அவர்கள் உண்மை என்று கருதுவார்களேயானால்—உண்மை இல்லை என்பதை இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பைல்களை எல்லாம் பார்த்துத் தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். நியமன உறுப்பினர்களை எல்லாம் விட்டு விட்டு தேர்தலை நடத்தியிருக்கலாம். அன்றையதினம் சில சந்தர்ப்பங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தப்பாக உள்ளே வந்து விட்டார்கள் என்பதைத் தெரிந்த உடன் நியமிக்காமல் விட்டு விட்டார்கள். அவர்கள் அன்றைக்குச் சொன்ன தகவல் என்னவென்றால், "ரிசர்வ் வங்கியிடமிருந்து பணம் பெறுகிறார்கள், ஆனால் நாட்டு மக்களுக்கு கூட்டுறவு இயக்குநர்கள் அதைக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அதனால் ரிசர்வ் வங்கியிடமிருந்து வருகிற பணம் தடைப்படுகிறது, நாட்டின் வளர்ச்சி தடைப் படுகிறது. இப்படிச் செய்வதால் பணம் கொடுக்க முடியாமல் போய்விடுகிறது. ரிசர்வ் வங்கியும் இதைச் சுட்டிக்காட்டி மேற்கொண்டு பணம் தரமாட்டேன் என்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமலிருப்பதற்காக இவர்களை நியமிக்காமல் நாங்கள் தடை செய்கிறோம்" என்று சொன்னார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களை மட்டும் இந்த அரசு நிறுத்தி வைத்துவிட்டு தேர்தலை நடத்தியிருக்கலாம். எதிர்க் கட்சியிலிருந்தபோது உணர்ந்து சொன்னதை, ஆட்சிக்கு வந்தபோது, பைல்களை படித்துப் பார்த்த பிறகு, சொன்னதெல்லாம் தவறு என்று நினைத்திருக்கலாம். இப்பொழுது நான் சொல்லுகின்ற தகவல்களில் கூட சில தகவல்கள் தவறாக இருக்கலாம். கிடைத்த தகவலை வைத்துச் சொல்கிறேன். நீங்கள் பைல்களைக் காட்டி நான் சொன்னது தவறு என்று சொன்னால், நான் கூட அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள முடியும். தவறு செய்யாதவர்கள் யாருமே இருக்க முடியாது. இதற்கு மாற்றாக அதிகாரிகளை நியமித்துக் கொண்டு போவது நல்லதல்ல.

இப்பொழுது ஓர் ஒருங்கிணைந்த சட்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். இதை வரவேற்கிறேன், சட்டமாக இந்த ஒருங்கிணைந்த சட்ட முன்வடிவு வந்து நிறைவேறும்போது, அதைச் சிறப்பாகச் செயல் படுத்தலாம்.

நாங்கள் அதற்கு உறுதுணையாக இருப்போம். பதினைந்து நாட்களுக்குப் பிறகு பெரிய விருந்து வருகிறது என்பதற்காக இப்பொழுதே பட்டினி கிடக்க வேண்டியதில்லை. பெரிய சட்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளாக கூட்டுறவு அமைப்பில் ஜனநாயக அமைப்பு முறை செயல்பட முடியவில்லை. கூட்டுறவு இயக்கத்திலே தனி அதிகாரிகளை மட்டும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டுறவுத் துறையிலிருந்த அதிகாரப் பற்றற்றவர்கள் பெரிய தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். தவறு செய்ய வழி நடத்திச் சென்றவர்கள், வழி நடத்தியவர்கள், தப்புக்கு வழி செய்பவர்கள், பெரிய பலன் அடைபவர்கள் எல்லாம் இந்த அதிகாரிகள்தான். இது நேற்று முந்தாநாள் முதல் நடந்து வருவதன்று. திரு. மஜீத் அவர்கள் இங்கே அமைச்சராக இருந்தபோது, 1967 ஆம் ஆண்டுக்கு முன்னால் அவர்கள் ஊரில் உள்ள கடையநல்லூர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அவரை நான் தொடர்புபடுத்திச் சொன்னதாக சட்டமன்றக் குறிப்பில் வரக் கூடாது. அவருடைய ஊரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஆதலால் சொல்கிறேன். அவருடைய உறவினர்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தலையிட்டார்கள், ஈடுபட்டார்கள் என்று சொல்லப்பட்டு வழக்கு போடப்பட்டது. வழக்குக்கு இடமேயில்லை. வழக்கில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சஸ்பென்ட் பண்ணினார்கள். பிறகு மறுபடியும் வேறு கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுமாதிரி சஸ்பென்ட் செய்யப்படுகிறவர்களை டவுன் சொசைட்டி அல்லது கிராம சொசைட்டிகளில் நியமிக்கிறார்கள். அது போன்ற நபர்கள் நாகர்கோவிலில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட அப்படிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

கூட்டுறவுத் துறையிலே இவர்கள் தலையிட முக்கிய காரணம் நாணயமின்மை, சுயநலப் போக்கு, பொது நலமில்லாமை, பொது மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற பற்றற்ற நிலைமை இவைகள் தான் காரணம். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக் கூடாது.

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 ஏப்ரல் 30

நாணயமுள்ளவர்களும், சுயநலமில்லாதவர்களும், பொதுநல நோக்குடையவர்களும், தொண்டுள்ளம் படைத்தவர்களும் தான் கூட்டுறவில் இருக்க வேண்டும். ஆனால் கூட்டுறவில் இன்றையதினம் 85 அல்லது 90 சதவிகிதத்தினர் நாணயமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அந்த நிலையை மாற்ற என்னென்ன முயற்சி எடுக்க வேண்டுமென்று யோசனை செய்ய வேண்டும். ஜனநாயக அமைப்பை அகற்றுவதால் மட்டும் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை. ஜனநாயக அமைப்பு கடந்த 3 ஆண்டுகளாகச் செயல்படவில்லை. தனி அதிகாரிகள் அமைப்புகளில் இருக்கிறார்கள். அவர்கள் தான்தோன்றித்தனமாக நிர்வாகம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான புள்ளி விவரங்களை இன்றையதினம் நீங்கள் பார்க்கலாம்.

ஜனநாயக அமைப்புகளை மாற்றுவதற்கு முன்னால் கார்களை எல்லாம், தொலைபேசிகளை எல்லாம் உபயோகப்படுத்திவிட்டார்கள் என்று சொன்னால் பயனில்லை அதற்குப் பதிலாக கடந்த காலத்தில் எவ்வளவு பேருக்குப் பணம் கொடுத்தார்கள், எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டது, எவ்வளவு பேர் பயனடைந்தார்கள், எவ்வளவு வேகத்தில் கூட்டுறவு வளர்ச்சி பெற்றது போன்ற விவரங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். எவ்வளவு தூரம் திறமையாக அன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டன என்பதையும் பார்க்க வேண்டும்.

மத்திய வங்கியிலிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பணத்தைப் பெற்று, கூட்டுறவுச் சங்கங்களை நன்றாக நடத்திக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது யாராவது தவறு செய்திருந்தார்கள் என்றால், அதற்கு அதிகாரிகள் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்றுதான் பொருள். காரணம் அவர்கள் தானே கூட இருந்தவர்கள்! நாம் சமுதாய நலன் கருதி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மூலம் நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கும்போது நம் அதிகாரிகள் தவறு செய்தாலும் சரி அல்லது தவறு செய்ய உடந்தையாக இருந்தாலும் சரி, அவர்களை தண்டிக்க வேண்டும். தவறு செய்வதை விட தவறுக்கு உடந்தையாக இருப்பது பெரிய தவறு. தவறுக்குத் துணை நிற்பதும் பெரிய தவறு தான்.

1979 ஏப்ரல் 30] (திரு. ம. சங்கரலிங்கம்)

நாட்டு மக்களுடைய வரிப் பணத்தை வாங்கிக்கொண்டு நல்ல திட்டங்களை நிறைவேற்றாமல் அதிகாரிகள் தவறு செய்தாலோ, தவறுக்கு உடந்தையாக இருந்தாலோ, தவறுக்குத் துணையாக இருந்தாலோ, அது மிகப் பெரிய குற்றம். கூட்டுறவு இலாகாவில் அப்படிப்பட்ட தவறுகள் நிறைய இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவுகளை திருத்தச் சட்ட முன்வடிவுகளாகக் கொண்டு வந்தாலும், நாங்கள் கூறிய நல்ல கருத்துக்க…யும் ஆய்ந்து பார்க்க வேண்டும், கவனிக்க வேண்டும்.

ஆய்வுக் குழுவைப் பொறுத்தமட்டில், இந்தக் குழு எல்லா மாவட்டங்களுக்கும் சென்று எல்லா மாவட்ட மக்களுடைய கருத்தையும் ஆராய்ந்து, அவர்கள் பலமுறை கூடி, அதற்குப் பிறகுதான் அறிக்கை தருவார்கள். விவசாய ஆய்வுக் குழுவை ஏற்படுத்தி ஓராண்டு ஆகிறது. நம்முடைய கூட்டுறவு ஆய்வுக் குழுவை ஏற்படுத்தி ஓராண்டு ஆகிறது. நம்முடைய கூட்டுறவு ஆய்வுக் குழுவைப் பொறுத்தமட்டிலும் கூட, அதே நிலைமைதான் இருக்கும். அப்படி இருந்தால் இன்னும் 6 மாதம் கழித்து, நாம் இதுபோல் இன்னும் ஒரு திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து காலத்தை நீட்டிக்க வேண்டி வரும். எப்படியும் ஓராண்டு ஆகும். ஆறு மாதத்திற்குள் முடியாது. அப்படியானால் கூட்டுறவு இயக்கம் என்பது பெயரளவில் ஒரு கட்டிடமாக, ஒரு அலுவலகமாகத்தான் இருக்கும்.

நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இப்பொழுது வரக்கூடிய தேர்தல் முறையால் என்ன கேடு வரும் என்று நீங்கள் கருதுகிறீர்களோ அதை மட்டும் தயவுசெய்து விட்டுவிடுங்கள். நியமிப்பதைப் பொறுத்தமட்டில் விட்டு விடுங்கள். அந்த முறையிலே துணிந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இந்தக் காரணத்தைக் காட்டி, தனி அதிகாரிகளை நியமித்து அவர்களின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே போகக் கூடாது

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் விக்கிரமசிங்கபுரத்திலுள்ள சொசைட்டி பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் ஒரு தகவலை என்னிடம் சொன்னார்கள். கடையநல்லூரில் கிரசன்ட் சொசைட்டி என்ற ஒரு சொசைட்டி இருக்கிறது. அது நல்முறையில் செயலாற்றிக் கொண்டிருந்தது. எந்தவிதமான தவறும் அங்கே நடைபெறுவதில்லை என்று கூட்டுறவுத் துறையிலுள்ளவர்கள் மட்டுமல்ல, ஊரிலுள்ளவர்களும் நம்பிக்கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உணவுப் பொருள்கள் கூட வழங்கப்பட்டு வந்தன. இந்த நிகழ்ச்சி நடைபெற்ற சமயத்தில் உணவுத் துறையையும், கூட்டுறவுத் துறையையும் ஒரே அமைச்சர் கவனித்துக்கொண்டிருந்த காரணத்தால், அன்றைய தினம் தனக்கு வந்த தகவலின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த சங்கத்துக்கு உள்ளே நுழைந்திருக்கிறார். ஒரு தவறும் இல்லாமல் ஊர் மக்களுடைய நற்பெயரைப் பெற்று அந்த சொசைட்டி இயங்கிக் கொண்டிருந்தது. சாதாரணமாக போலீஸ் அதிகாரிகள் ஏதாவது இடத்திற்கு தவறு நடந்திருக்கிறது என்ற அடிப்படையில் புகார் வந்து அங்கு பார்க்கச் சென்றால், அங்கு ஒரு தவறும் நடைபெறவில்லை என்று தெரிந்த பிறகு, அங்கு உள்ளவர்கள் அந்த அதிகாரியைப் பற்றித் தவறாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காக வேண்டுமென்றே 'டேமேஜ் கேஸ்' என்ற அடிப்படையில் 'கேஸ்' போடுவார்கள். அதைப் போல் மாண்புமிகு அமைச்சரவர்கள் அன்றையதினம் உள்ளே நுழைந்து பார்த்ததற்குப் பிறகு தவறு எதுவும் நடைபெறவில்லை என்று தெரிந்த பிறகு, ஏதோ பெயரளவில் சிறிய தண்டனை என்ற பெயரில் உணவுப் பொருள்கள் வழங்குவதை உங்களுக்கு ரத்து செய்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். இன்றைக்கு கன்ட்ரோல் துணிகளைக் கூட அந்தச் சங்கத்தின் மூலம் வழங்குகிறார்கள். ஏதோ அங்கு போனதற்காக வேண்டுமென்றே ஒரு கேஸ் போடுவது, ரத்து செய்வது போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறுவது நல்லதல்ல. இத்தகைய செயல்கள் கூட்டுறவு இலாகாவின் வளர்ச்சியைப் பெரிதும் தடுத்து விடும்.

அடுத்தபடியாக, எங்களுடைய கட்சியின் கருத்து அல்ல, என்னுடைய சொந்தக் கருத்து ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் கட்சி சார்பற்றவராக இருக்க வேண்டும் என்னைப் பொறுத்தமட்டில், கூட்டுறவுத் துறை அமைச்சர் என்று ஒருவர் வந்தால், அப்படித்தான் இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். கூட்டுறவு நிர்வாகக் குழுவினரும் கட்சிப் பற்றற்றவர்களாகத் தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், அவர்களுக்கு ஒரு சார்பாகக் காரியமாற்ற வேண்டுமென்ற நோக்கம் இருக்க வேண்டிய அவசியம் இருக்காது. அப்படி இருந்தால் எந்தவித வித்தியாசமுமின்றி பொதுமக்களின் கருத்துக்களுக்குச் செவி சாய்க்க வேண்டிய சூழ்நிலை வரும். இதை நான் நல்ல எண்ணத்தோடு தான் சொல்லுகிறேன்.

(முற்பகல் 11-00)

இன்னொரு சட்டம் நிலவள வங்கியினுடைய கடன் கொடுக்கின்ற எல்லையை விரிவுபடுத்துவது. அது உண்மையிலேயே பாராட்டத் தக்கது. நிலவள வங்கிகள் எல்லாம் வேளாண்மைத் துறைக்கு சம்பந்தப்பட்ட பணிகளுக்கு மட்டும் கடன் கொடுத்து வந்தது. அதிலே பல கடைகள் இருந்தன. கிணறுகள் வெட்டுவதற்கு இவ்வளவு சதவீதம், நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு இவ்வளவு சதவீதம் என்றெல்லாம் இருந்தது. கிணறு வெட்டி பம்புசெட்டு வைக்க சில இடங்களில் கொடுக்க முடியாத சூழ்நிலையும் இருந்தது. நிலவள வங்கிகளுடைய கடன் கொடுக்கும் எல்லையை விஸ்தரிப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. நிலவள வங்கி என்று இருக்கும் பெயரைக் கூட மாற்றலாம். இவ்வாறு மீன் பிடிப்பதற்காகவும், வளர்ப்பதற்காகவும், ஆடுமாடுகள் வளர்ப்பதற்காகவும் எல்லாம் கடன் கொடுக்கிறோம் என்று சொல்வதைவிட, கிராம அபிவிருத்தி, வட்டார அபிவிருத்தி வங்கி என்றோ, அல்லது வட்டார வங்கி என்றோ மாற்றினால் பெயருக்கும் செயலுக்கும் பொருத்தமாக இருக்கும். ஆகவே, இந்தப் பெயர் மாற்றுவது பற்றியும் சேர்த்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 ஏப்ரல் 30

அடுத்தபடியாக, கூட்டுறவு வங்கிகளில் பணம் போடுகிறவர்களுக்கு ஒரு பாதுகாப்பான நிலை உருவாகின்ற வகையில் காப்பீட்டு உறுதியைப் பெருக்கும் பொருட்டு ஒரு மானியம் வந்திருக்கிறது. அதையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். கூட்டுறவு ஒருங்கிணைந்த சட்டத்திலே பின்னால் நாம் விளக்கவிருந்தாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு நான் சில நல்ல எண்ணங்களைச் சொல்ல விழைகிறேன். நமது மாநிலத்திலே கூட்டுறவுத் துறை சிறப்பாக இருந்தாலும், பிற மாநிலங்களிலே கூட்டுறவுத் துறை எவ்வாறு செயல்படுகிறது என்றும் நாம் ஆராய வேண்டும். அண்மையில் நான் திருவனந்தபுரம் செல்லும்போது பார்த்தேன். ஒவ்வொரு இடத்திலும்—கூட்டுறவு சார்பிலே பல இடங்களிலே பல வார்டுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். திருவனந்தபுரம் உள்ளூர் மருத்துவக் கல்லூரியிலே, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் போய் பார்த்தபோது ஒரு பகுதியில் மட்டும் கோவாப்பரேட்டிவ் வார்ட் கட்டி அதை 'சி'—கிளாஸ் சர்வென்ட்ஸ் வார்ட் என்று போட்டிருந்தார்கள். அதிலே நாள் ஒன்றுக்கு 15 ரூபாய் வசூலித்தார்கள். ஆனால். அதேமாதிரி வார்ட் 'நான் கெவர்ன்மென்ட் ஆபீசர்' களுக்கு என்று வேறொரு கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியிலோ, மருத்துவக் கல்லூரியிலோ இருந்தால், அதற்கு 25 ரூபாய் வசூலிப்பார்கள். கூட்டுறவு இயக்கத்திலே இருந்து அவர்கள் பணம் சம்பாதித்து அந்தப் பணத்தைக்கொண்டு அந்த வார்ட் கட்டுகிறார்கள். அந்த வார்ட் சம்பந்தமாக சில நிபந்தனைகளும் வைத்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலேயிருந்து வந்த நோயாளிகளுக்கு அந்த வார்ட்களிலே முன்னுரிமை அளிக்கிறார்கள். அரசினுடைய இலாக்காக்களிலே இருந்து வருகிறவர்களுக்கு இன்னொரு விதி என்று வைத்து, நாள் ஒன்றுக்கு 15 ரூபாய் வசூலிக்கிறார்கள். அவ்வாறு வசூல் செய்யப்படும் வருமானத்தை மருத்துவக் கல்லூரியினர் கூட்டுறவுத் துறைக்குச் செலுத்துகிறார்கள். கூட்டுறவுத் துறை செலவு செய்த பணம் அனைத்தும் கட்டிமுடித்தவுடன் அந்த வார்ட் மருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமாகிவிடுகிறது. ஆனால் அந்த வார்டிலே கூட்டுறவுத் துறையினுடைய பெயர் இருக்கிறது. சிகிச்சை பெறுபவர்கள் அனுசரிக்கவேண்டிய விதிமுறைகளையும் கூட்டுறவுத் துறையினர் அப்போதைக்கப்போது விதிக்கிறார்கள். அந்த அதிகாரத்தையும்

1979 ஏப்ரல் 30] (திரு. ம. சங்கரலிங்கம்)

அவர்களே வைத்திருக்கிறார்கள். இப்படி நான் அய்ந்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கு போகும்போது இருந்தது. இரண்டாண்டுகளுக்கு முன்னாலே அங்கு போகும்போது 100 படுக்கைகள் கொண்டு இன்னொரு வார்ட் கட்டப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு நான் போகும்போது மேலும் ஒரு வார்ட் கட்டப்பட்டிருந்தது. இதுபோல கூட்டுறவுத் துறையிலிருந்து கல்லூரிகளிலே ஹாஸ்டல் கட்டுகிறார்கள். கூட்டுறவுத் துறையினுடைய செயல்கள் எல்லாத் துறைகளிலும் பயன்படும் அளவுக்கு இன்றையதினம் வளர்ந்திருக்கிறது. சில கல்லூரிகளில் ஹாஸ்டல் கட்ட அரசாங்கத்திடம் பணம் இருக்காது. அங்கே கூட்டுறவுத் துறையிலிருந்து ஹாஸ்டல் கட்டிக்கொடுக்கிறார்கள். ஹாஸ்டல் கட்டியதற்கான செலவை 20 வருஷ காலத்திற்குள்ளாக மாணவர்களிடமிருந்து வசூலித்து கல்லூரி நிர்வாகத்தினர் கூட்டுறவுத் துறைக்குக் கட்டுகிறார்கள். அந்த ஹாஸ்டல் கூட்டுறவுத் துறையால் அமைக்கப்பட்டது என்ற நிரந்தர முத்திரையைப் பொறித்திருக்கிறார்கள். இந்த அளவிலே கூட்டுறவுத் துறை நல்ல வளர்ச்சிபெற்று வேறொரு துறைக்கு உதவி புரியும் நிலைக்கு வளர்ந்து, வலுப் பெற்றிருக்கிறது அண்டை மாநிலங்களிலே. நமது மாநிலத்திலும் பல துறைகளிலேயும் இந்தக் கூட்டுறவுத் துறை இயங்குவதற்கு வழிவகைகள் உண்டா என்று ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது நம்முடைய மாநிலத்தில் ஆங்காங்கு கிராமங்களிலே வங்கிகளும், நகர்ங்களில் வங்கிகளும் கொடுக்கல்—வாங்கல் நடத்தி கடன் கொடுக்கிறார்கள். நிலங்களை வளப்படுத்தவும் கடன் கொடுக்கிறார்கள். ஆனால், பிறகு பல துறைகளில் அதிக ஈடுபாடு காட்டவில்லை. அஹமதாபாத்திலே ஒரு கூட்டுறவுக் கல்லூரி இருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தால் நடத்துகிற ஒரு அக்காடமிக் கல்லூரி அது. இந்தியாவிலேயே அந்தமாதிரி கல்லூரி அது ஒன்றுதான் இருக்கிறது என்று நினைக்கிறேன். நானும் கூட என்னுடைய கல்லூரியை—நான் இப்போது அசல்வாய்மொழியில் நடத்திவரும் அறிஞர் அண்ணா கல்லூரியை 1970-லே தொடங்குவதற்கு பல்கலைக் கழகத்திடம் நான் விண்ணப்பம் செய்தபோது. அதை இயக்குகிற இயக்கம் எது என்று சொல்ல வேண்டும். நான் முதலிலே எழுதிக் கொடுத்தது டீச்சர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைடி என்று. டீச்சர்ஸ் கோவாப்பரேட்டிவ் ஆக அதை ரிஜிஸ்தர் பண்ணுவதற்கு நான்

பதிவாளர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து விதி முறைகளிலே இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மட்டும் அதிலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட வேண்டும் என்றும் வைத்து, ஏ. பி. சி என்று மூன்று பிரிவினராகப் பிரித்து, அதாவது முதலாவதாக, கல்லூரி ஆசிரியர்கள் 1,000 ரூபாய் ஷேர், இரண்டாவதாக, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 500 ரூபாய் ஷேர், மூன்றாவதாக நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் 200 ரூபாய் ஷேர் என்றெல்லாம் விதி முறை வைத்து அனுப்பினேன். அவர்கள் எனக்குப் பதில் அளித்தார்கள். அந்த பதிலில் மாநிலப் பதிவாளர் அவர்கள் 'இது புதிய விதமாக இருக்கிறது, இதை எப்படி நான் பதிவு செய்வது என்பதைப் பற்றி ஆராய வேண்டும், இந்தமாதிரி எங்காவது இருக்கிறதா' என்று கேட்டிருந்தார்கள். நான் உடனே, 'அஹமதாபாத்திலே இருக்கிறது' என்று பதில் அனுப்பினேன். அதற்குள்ளாக பல்கலைக்கழகத்திலேயிருந்து, "அந்தக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டிய காலகட்டம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. நீங்கள் ஆரம்பிக்க வேண்டிய சொசைட்டியை ரிஜிஸ்டர் பண்ணிவிட்டீர்களா?" என்று கேட்டார்கள். ரொம்ப எளிதாக சொசைட்டி ஆக்ட் படி ரிஜிஸ்டர் பண்ணவேண்டும். ஆகவே, கன்னியாகுமரி கல்விச் சங்கம் என்ற சொசைட்டி ஆக்ட்படி ரிஜிஸ்டர் பண்ணிவிட்டு நாளாவட்டத்திலே மாற்றலாம் என்று பார்த்தேன். அப்படிப் பார்க்கும்போது நம்முடைய துறை புதிய இடங்களிலே காலை வைக்க அஞ்சுவது மாதிரி தெரிந்தது. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், கூட்டுறவுத் துறை இப்போது இருக்கிற, கடன் வாங்குதல், கொடுத்தல் என்ற இந்த ஒன்றையே தன்னுடைய தொழிலாக வைத்துக் கொள்ளாமல் பல நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். கூட்டுறவு ஆலைகளை ஆரம்பிக்க வேண்டும். அரசாங்கமே கூட தலையிட்டு அதிக பர்சென்ட் ஷேர் அரசாங்கம் எடுத்து, பாக்கி ஷேர்களை கோவாப்பரேடிவ் சொசைட்டிகளுக்குக் கொடுத்து நடத்தலாம். மேலும், ஒவ்வொரு பிரிவிலும் உள்ள தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டுறவு ஆலையை ஆரம்பிக்க வேண்டும். இப்போது அரசாங்கம் ஆரம்பிக்கிறது. நெசவுத் தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து கூட ஒரு கூட்டுறவு ஆலையை ஆரம்பிக்க வேண்டும். கூட்டுறவு மில்லில் இருப்பவர்கள். சேர்ந்து ஆரம்பிக்க வேண்டும். 10 ரூபாய்

ஷேர் என்று வைத்தால் போதும். ஆயிரக்கணக்கில் சேர்க்க வேண்டும். இப்படி கூட்டுறவு உணர்வுக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றவர்களைக் கண்டுபிடித்து, அவர்களை நாம் தட்டிக் கொடுத்து, இந்தக் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கூட்டுறவுத் துறையில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற உணர்வைக் காட்டாமல், கட்சி சார்புக்கு அப்பாற்பட்டு இந்த இயக்கத்தை வளர்க்க முனைந்தால், இந்த இயக்கம் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் சொல்ல விழைகிறேன். 1967-க்கு முன்னால் நடந்த ஒரு சம்பவம். யாருடைய பெயரையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. சம்பவம் நடந்தது உண்மை. ஒரு பெரிய தலைவர் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே 'டெமாக்கிள்ஸ் ஸ்வோர்ட்' ஆக "தலைக்குமேலே தொங்குகின்ற ஒரு வாளாக" இருந்தார் என்று சொல்லப்பட்டது. சாதாரணமாக கூட்டுறவுச் சங்கங்களிலே பெரியவர்கள் எல்லாம் இருப்பார்கள். அவர்கள் ஏதாவது தப்பு தண்டா செய்தால், அந்த விவரங்கள் எல்லாம் அந்தப் பெரிய தலைவருக்குப் போய்ச் சேரும். அப்போது அவர் கண்டுக்காமல் விட்டுவிடுவார். பிறகு அவர் ஏதாவது காலையோ, கையையோ வெளிப்படையாக நீட்டும்போது, அந்தத் தலைவர் ரிஜிஸ்ட்ராரைக் கூப்பிட்டு அவர் மேல் ப்ரொசீடிங்ஸ் எல்லாம் போட்டு நடவடிக்கை எடு என்று சொல்லி அவரை அவமானப்படுத்தும் நிலைக்கு வரும்போது, அவர் அந்தத் தலைவரின் காலில் வந்து விழும்போது, சரி, சரி இந்த மாதிரி செய்யக்கூடாது என்று சொல்லி, அந்த ப்ரொசீடிங்ஸ்சை எல்லாம் விட்டுவிடும் நிலைமைகளும் இருந்திருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நம்முடைய நாட்டிலே இப்படி பலப்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தன. முழுது முழு அளவு இல்லாவிட்டாலும், 50 சதவீதம் உண்மைதான். நாம் அந்த நிலைமைக்கு வரவேண்டாம். அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் கூட்டுறவு இயக்கத்திலே இருக்க வேண்டும். நாம் எல்லா அரசியல்வாதிகள்; தேர்

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி

தல்களைச் சந்தித்தவர்கள். அரசியலிலே, தேர்தலிலே நாம் உண்மையைச் சொல்லி நேர்மையான முறையில் வெற்றிபெற முடியுமா? நாம் பார்க்கிறோம், ஆயிரம் உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்ல வேண்டும். நம்முடைய நோக்கம் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்பது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அனுபவத்தை வைத்து புத்தகமே கூட எழுதலாமே.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் கூட சொன்னார்கள். அவர்தான் எனக்கு அடியெடுத்துத் தந்தவர்கள். கூட்டுறவுத் துறையிலே தேர்தலிலே வெற்றிபெற்றவர்கள் எல்லாம் வருகிறார்கள். அவர்கள் நிறைய பணம் செலவு செய்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் குறிப்பாக அந்தப் பணத்தை சம்பாதிக்க நினைக்கமாட்டார்களா? நினைக்காமல் இருந்தால், பைத்தியக்காரன், நினைத்தால் புத்திசாலி, வெற்றி பெற்றால் திறமைசாலி, அகப்பட்டுவிட்டால் திறமை குறைந்தவன் என்று பொருள். அகப்படாமல் அதில் வெற்றிபெற்றால், திறமைசாலிகளில் உயர்ந்த

(முற்பகல் 11-10)

இடத்தைச் சார்ந்தவர் என்று அர்த்தம். அகப்படாதவர்களெல்லாம் தவறு செய்யாதவர்கள் என்பதல்ல. அவர்கள் திறமையுடையவர்கள். அகப்பட்டுக் கொண்டவர்கள் கொஞ்சம் திறமை குறைந்தவர்கள் என்பதுதான் பொருள். ஏதோ ஜெனரலைசேஷன் செய்து சொல்வதாகவோ வேடிக்கையாகச் சொல்வதாகவோ நினைக்கக் கூடாது. உண்மையைச் சொல்லுகிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மொத்தமாக ஒரு ஒருங்கிணைந்த சட்டம் கொண்டு வருகிறபோது, அதில் ' அரசியல் கட்சிகளில் தீவிரமாக உறுப்பினராக இருக்கிறவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அல்லது அமைப்புகளில் உறுப்பினராக இருக்கக்கூடாது' என்ற ஒரு ஷரத்தைக் கொண்டு வர முடியுமானால், உண்மையிலேயே இந்த நாட்டில் கூட்டுறவுத் துறையிலேயே

பெரிய புரட்சியைச் செய்தவர்களாகப் பாராட்டப்படுவார்கள். இப்போது இருப்பவர்கள் பாராட்டாவிட்டாலும், எதிர்காலத்திலாவது கண்டிப்பாகப் பாராட்டுவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் அரசியலோடு நின்றுவிடவேண்டும். பிற சமுதாய நலன் பயக்கும் அமைப்புகள் அரசியல் காரணங்களின்றி செயல்பட வழிவகை செய்து கொடுப்போமானால், நாம் நாட்டிற்குச் சிறந்த நன்மை செய்தவர்களாக ஆவோம். அதைச் செய்ய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தனியதிகாரிகள் நியமித்தல் குறித்து அரசாங்கம் எத்தனை காரணங்களைச் சொன்னாலும், ஆயிரமாயிரம் காரணங்களைச் சொன்னாலும், அடுக்கடுக்கான காரணங்களைச் சொன்னாலும், அவைகளெல்லாம் வெறும் காரணங்களாக இருக்குமே தவிர, ஒப்புக்கொள்ளக் கூடிய காரணங்களாகாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலத்தில் " There were so many excuses but there was not a single justification." என்று சொல்வார்கள். அந்த நிலையில் ஆட்சியில் இருப்பவர்கள் எத்தனை காரணங்களைச் சொன்னாலும் நாங்களும், நாட்டு மக்களும் அந்தக் காரணங்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதை ஏற்றுக்கொள்வது என்பது நீங்கள் எவ்வளவு விரைவில் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்துவீர்களோ அதைப் பொறுத்துத்தான் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, மற்ற இரு சட்ட முன்வடிவுகளையும், அவைகள் தேவையானவை என்ற காரணத்தால், ஆதரிக்க விரும்புகிறேன். ஒருங்கிணைந்த சட்டம் கொண்டு வருகிறபோது, இப்போது அது ஆய்வுக் குழுவில் இருந்தாலும், துறையினர் நல்லெண்ணத்தைக் கொண்டு பல திருத்தங்களைக் கொண்டு வர வாய்ப்பு வசதிகளை அமைத்தால்தான், அந்தச் சட்டம் வெற்றிபெற முடியும் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்படிப்பட்ட குழப்பம் பேரவையிலும் ஏற்படுகிறதா? (சிரிப்பு.)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அங்கேயும் சில நேரங்களில் ஏற்பட்டுவிடுகிறது.

இதுவரை இந்த அவையின் 7 மாண்புமிகு உறுப்பினர்கள், அவையின் பரிசீலனையில் இருக்கிற மூன்று சட்ட முன்வடிவுகளைப் பற்றி தங்களின் மேலான கருத்துக்களையெல்லாம் மிகுந்த நல்லெண்ணத்தோடும், நல்ல தாயுள்ளத்தோடு தெரிவித்ததற்கு முதற்கண் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பிட்டுச் சொல்வதானால், இந்த 3 சட்ட முன்வடிவுகளில் நிலவளவங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, மற்றும் வைப்புகள் காப்புறுதி பாதுகாப்பு சட்ட முன்வடிவு ஆகியவைகளை அனைத்து உறுப்பினர்களும் ஒரு மனதோடு வரவேற்றிருக்கிறார்கள். அதோடு மேலும் வலிமைப்படுத்துகிற வகையில் பல நல்ல சிரிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பொறுப்பினை மேலும் 6 திங்களுக்கு நீட்டிக்க வேண்டுமென்ற மசோதாவின்மீது இருவகையான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, இந்தத் தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்ட முன்வடிவை ஆதரிக்க இயலாத நிலையில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். முழுமையான அடங்கல் அடங்கிய திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதன் காரணமாக அந்தச் சட்டம் நிறைவேறுகிற வரையில், இந்த 6 மாத கால அவகாசம் அளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த அரசு கொண்டுவர விரும்புகிற, ஆய்வில் இருக்கிற அடங்கல்

திருத்தச் சட்டம் முழுமையான சட்டமாக இருக்க முடியுமா என்ற ஒரு ஐயத்தையும், வினாவையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களின் கவனத்திற்கு ஒரு விவரத்தைச் சொல்வதை என்னுடைய தார்மீகக் கடமையாகக் கருதுகிறேன். இன்றைய நிலவரப்படி சில போக்குகளையும், நிலைமைகளையும் பரிசீலனை செய்து, அவைகளுக்கெல்லாம் பரிகாரம் காண வேண்டுமென்ற அளவில் முயற்சிகளை மேற்கொண்டு சில பரிந்துரைகளை உள்ளடக்கிய மசோதாவாக இதனைக் கொண்டு வந்திருக்கிறோம். இதுதான் இறுதியான சட்டம், இதுதான் முடிந்த சட்டம், இதற்குப் பிறகு சட்டமே இல்லை என்று நான் சொல்லவில்லை. இது என்ன 'fool proof' சட்டமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைக் கவனப்படுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கூட்டுறவுச் சட்டத்தின் வரலாற்றை இங்கே நினைத்துப் பார்ப்பது நலமென்று கருதுகிறேன். உலகத்திலே 138 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டில் ராக்டெயில் என்ற 14 நண்பர்கள் தொடங்கிய இயக்கம்தான் கூட்டுறவு இயக்கமாக வளர்ந்தது. இந்தக் கூட்டுறவு இயக்கத்தை இந்தியத் துணைக் கண்டத்தில் துவங்கி 75 ஆண்டுகளாகின்றன. அதிலும் தமிழகத்தில் துவங்கி 75 ஆண்டுகளாகின்றன. கூட்டுறவுச் சட்டங்கள்—கோவாப்பரேட்டிவ் லெஜிஸ்லேஷன்—என்று எடுத்துக் கொண்டால், உலகெங்குமாக 5,000 சட்டங்கள் இருக்கின்றன. நான் சொல்வது அனைத்து நாடுகளிலும் உள்ள கூட்டுறவுச் சட்டங்களின் மொத்த எண்ணிக்கை 5,000 ஆகும். இந்த 5,000 சட்டங்களும் அவ்வப்போது அந்தந்த நாடுகளால் திருத்தப்படுகின்றன. இந்தச் சட்டங்கள் அனைத்தும் மாறுதல்களுக்கு உள்ளாகின்றன. அந்தந்தக் காலத்தின் போக்கிற்கும், நியதிக்கும், காலத்தின் கட்டளைக்கும் ஏற்ப இந்தச் சட்டங்கள் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. அவ்வப்போது ஏற்படும் சமுதாய நியதிகளின் அடிப்படையில் இந்த மாற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப இந்தப் படைக்கலன்கள் மாற்றியமைக்கப்படுகின்றன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், ஆரம்பத்தில் இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுடைய கடன் சுமையை நீக்குவதற்காக மட்டுமே தோன்றின. அவ்வாறு ஒரு சிறிய குறிக்கோளுக்காகத் தோன்றிய அந்த இயக்கம் இன்றைக்கு தமிழகமானாலும், இந்தியத் துணைக்கண்டமானாலும் சரி, மிகப் பெரிய அளவில் விரிந்து பரந்து, கூட்டுறவு முயற்சி அல்லது கூட்டுறவு நடவடிக்கையே இல்லாத யொரு வாதார நடவடிக்கை இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

இன்றைக்குப் பயிர்க் கடன் கொடுப்பது என்று எடுத்துக் கொண்டால், அவையின் தகவலுக்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பக் காலத்தில் 5 கோடி ரூபாய்தான் தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர்க் கடனாகக் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு ஏறத்தாழ 140 கோடி ரூபாய் பயிர்க் கடனாகக் கொடுக்கலாம் என்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு துறையில் மட்டும் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி அது, அதைப்போல் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. அனைத்துத் துறைகளிலுமே இப்படிப்பட்ட பரிணாம வளர்ச்சியை நம்மாலே காண முடிகிறது. நிலைமைகள் மாற மாற, சட்டங்களின் சக்திகளும், வலிவும், சட்டங்களின் நோக்கங்களும் வரைமுறைகளும் மாற வேண்டுமென்பதுதான் கூட்டுறவுச் சங்கங்களுடைய மரபாக இருந்திருக்கிறது. இதுதான் வழக்கமாக, வாடிக்கையாக இருந்திருக்கிறது.

அந்த வகையில்தான் 1961 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை உருவாக்கினார்கள். 1979 ஆம் ஆண்டு காலகட்டத்தில் நமக்குக் கிடைத்திருக்கிற அனுபவத்தை வைத்துக்கொண்டு இன்றையதினம் அதிலே சில மாற்றங்களை, மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்—மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்—திரு நல்லசிவன் அவர்கள் பேசும்போது, எனக்கு ஒரு உணர்வு நெஞ்சில் பட்டுத் தெறித்தது. மார்க்சின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று 'Growth creates problem என்பதாகும். அதாவது வளர்ச்சி பிரச்சினையை உருவாக்குகிறது என்பதாகும். எனவே நாம் பிரச்சினையைக் கண்டு அஞ்சக் கூடாது.

கூட்டுறவுத் துறையில் இன்றையதினம் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்ற காரணத்தால்தான், இன்றைய காலக்கட்டத்தில் தக்கவர்களைக் கொண்டு ஆலோசித்து ஒரு அடங்கல் திருத்தச் சட்டத்தை கொண்டுவர இருக்கிறோமேயொழிய இந்தச் சட்டத்திற்கு 1980-ல் திருத்தம் வராதா, 1981 ஆம் ஆண்டு திருத்தம் வராதா என்றால், நிச்சயம் அப்போது வரும். இன்றைய நிலையில் எது தேவை என்று நமக்குப் படுகிறதோ அதன் அடிப்படையில் சட்டத்தைக் கொண்டு வருகிறோம், ஆனால் பின்னால் தேவை ஏற்படுகிறபோது, கண்டிப்பாக இந்தச் சட்டம் திருத்தம் செய்யப்படும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது பல தேவைகளைச் சொன்னார்கள். அதையெல்லாம் பரிசிலித்து சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும். அப்படிப்பட்ட காரியத்தைத்தான் நாம் செய்து வருகிறோம்.

(முற்பகல் 11-20)

அதே போல இன்றைக்கு ஆசிரியர்களுக்காக தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லையென்று சொன்னார்கள். அவை நல்ல உணர்வுகள். சட்டத்திலே அதற்கு வழிவகை இல்லை என்பதற்காக அதை நாம் புறக்கணித்துவிட முடியாது. அதை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்கான சட்டத் திருத்தத்தை இங்கு கொண்டுவந்துதான் ஆகவேண்டும். எங்களைப் பொறுத்தவரையில், எங்களுக்குள்ள அனுபவத்தை வைத்துக்கொண்டும், ஆய்ந்த அறிஞர்கள் சொன்னதை வைத்துக்கொண்டும் இன்றையதினம் திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதுதான் இறுதியான சட்டமென்றும், இதற்குப் பிறகு திருத்தமே இருக்காது என்றும், இதன் மூலம் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியுமென்றும் நாங்கள் கருதவில்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1979 ஏப்ரல் 30.

கூட்டுறவுத் துறையிலே உள்ள அதிகாரிகளைப் பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் எடுத்துச்சொன்னார்கள். ஆனால் இந்த மாமன்றத்தில் உறுதியாக ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிகாரிகளாக இருந்தாலும், பொறுப்பிலே இருக்கிறவர்களாக இருந்தாலும் எதிர்காலத்திலே பொறுப்பிற்கு வரவிருக்கிறவர்களாக இருந்தாலும், 'குற்றம்' என்று கண்டால், அதற்கு ஆதாரங்கள் இருந்தால், அதற்கு அடிப்படை இருந்தால், போதுமான விவரங்கள் இருந்தால் அவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிற அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதுவரை அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லையா என்று கேட்டால், மூன்றாண்டுகளாக பொறுப்பிலே இருந்த தனி அதிகாரிகள் என்னென்ன முறைகேடுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்து அதற்காகப் பல தனி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தனி அதிகாரிகள் என்னென்ன தவறுகளைச் செய்தார்கள், அவர்களுக்கு என்னென்ன தண்டனைகள் கொடுக்கப்பட்டன, மேற்கொண்டு நடவடிக்கைகள் என்னென்ன எடுக்கப்பட்டன என்று சட்டமன்றப் பேரவையில் கேள்விக்குப் பதில் சொல்லும்போது விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதிகாரிகள் தவறே செய்யமாட்டார்கள், அவர்கள் குற்றத்திற்குட்படாதவர்கள் என்ற உணர்விலே இந்த அரசு நிச்சயமாக பிரச்சினையை அணுகவில்லை. ஆகவே அதிகாரிகளாக இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பிலே இருப்பவர்களாக இருந்தாலும், எதிர்காலத்திலே பொறுப்புக்கு வர இருப்பவர்களாக இருந்தாலும், அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் நீதிக் கண்ணோட்டத்தோடு பார்த்து, கூட்டுறவினுடைய மேலான உணர்வுகளைக் காப்பாற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

1979 ஏப்ரல் 30] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

அதைப் போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அறிவழகன், திரு. லெட்சுமிகாந்தன், திரு. இரத்தின பாலகுருசாமி, திரு. சனார்த்தனம், திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்களும் மற்ற நண்பர்களும் இந்தச் சட்டமுன்வடிவிற்கு அப்பால் இருக்கிற பிரச்சினைகளைப்பற்றி விவரமாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச்சொன்ன பரிந்துரைகளை மனதிலே ஏற்றுக்கொண்டு நிச்சயமாக உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது ஒரு விவரத்தைச் சொன்னார்கள். அதற்கு ஒரு சிறு விளக்கத்தைத் தருவது என்னுடைய தார்மீகக் கடமையாகக் கருதுகிறேன். நியமன முறை காரணமாகத்தான் தேர்தலை ஒத்தி வைத்திருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள். அரசினுடைய கவனத்திலே நியமனத்தைப் பற்றி தனக்கென ஒரு கருத்திருக்கிறது. எங்களுடைய உணர்வுகளை இந்த மசோதாவில் விதிகளாகச் சேர்த்திருக்கிறோம். இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப விருக்கிறோம். அப்போது அனைவரும் சொல்லுகிற கருத்துக்களை ஏற்று அரசு நடக்கத்தயாராக இருக்கிறது. அது வேறு பிரச்சினை. நான் கருத்துக்களை ஏற்று அரசு நடக்கத் தயாராக இருக்கிறது என்று முன்னுரையிலே சொன்னது போல, இன்றையதினம் நாங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்திற்குக் காரணம் நியமனத்திலே நாங்கள் கொண்டுள்ள அக்கறை மட்டுமல்ல. சிலபல குறைபாடுகள், விரும்பத்தகாத அம்சங்கள் 1961 ஆம் ஆண்டுச் சட்டத்திலே இருக்கின்றன என்று முன்பே நான் தொகுத்துச் சொன்னேன். அவைகளையெல்லாம் முறைப்படுத்தும் வரையில் நியமன முறை இருக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக தமிழக அரசு விரும்புகிறது. பல பிரச்சினைகளில் நியமன முறை ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்காக மட்டும் இதை விட்டுவிடுங்கள் என்று சொன்னார்கள். ஏற்கெனவே உள்ள சட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிர்வாகத்திற்கு வந்தால், சில முறைகள், கட்டுப்பாடுகள் இல்லாத காரணத்தால், தவறுகள் புரிய வாய்ப்புகள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் பல முறைகேடுகள் நடந்துவிட்டன. கிரிமினல் புரொசிடிங்ஸ்கூட

போட்டிருக்கிறார்கள். "பெரும்பான்மையாக இருந்த குழுக்களில் நாங்கள் தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றினோம். அது தவறு என்றால் அப்போதிருந்த அதிகாரிகள் ஏன் அந்த விவரங்களை எடுத்துச் சொல்லவில்லை?" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் கேட்டார்கள். அவர் கேட்டது உண்மையுங்கூட. இன்றைக்கிருக்கிற சட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவில் உள்ளவர்கள் ஒரு 'செலவினத்திற்காக' ஒப்புதல் அளித்துவிட்டால், அது தவறான காரியத்திற்காக இருந்தாலுங்கூட, அதற்காக நடவடிக்கை எடுக்க முடியாது. இப்படிப்பட்ட நிலைமைதான் இப்போதுள்ள சட்டத்திலே இருக்கிறது. இது போன்ற ஷரத்துக்களை முறைப்படுத்தாமல் மீண்டும் தேர்தலை வைத்தால், நிச்சயமாகத் தவறுகள் நடக்கத்தான் செய்யும். 'old wine in new bottle 'பழைய கள் புதிய மொந்தையில்' என்பதைப் போலத்தான் இருக்கும். ஆகவே பழைய கள் புதிய மொந்தையிலே வரக்கூடாது என்பதற்காக காலதாமதம் ஆனாலும், சில விதிகளைத் திருத்திவிட்டால், பிறகு பொறுப்பிலே வருகிறவர்கள் சட்டப்படி செய்யலாம். பயிற்சி பெற்றவர்கள், விவரம் தெரிந்தவர்கள், பக்குவம் பெற்றவர்கள் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே சில ஆலோசனைகளை உங்களது மேலான பரிசீலனைக்கு வைத்திருக்கிறோம். பெரும்பான்மையாக இருந்தாலும்கூட, தீர்மானத்தை நிறைவேற்றினாலும்கூட, வரையறுக்கப்பட்ட விதிகளை மீறினால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கூட்டுறவுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் ஆலோசனையைச் சொல்லியிருக்கிறோம்.

கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதிக்க சக்திகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவைகளையெல்லாம் கட்டுப்படுத்தும் சில ஆலோசனைகளைச் சொல்லுவது முறையல்ல, மரபல்ல என்று கருதுகிறேன். ஏனென்றால் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்படவிருக்கிறது. நான் கோவைக்குச் சென்ற நேரத்தில் 25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்ற அளவிற்குக் கூட்டுறவுத் தலைவராக இருப்பவர்களைப்பற்றிச் சொன்னார்கள். ஏதோ ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள்தான் நிர்வாகத்தில் இருக்கலாமென்ற வெகு

முற்போக்கான சட்டத்தைக் கொண்டு வரவிருக்கிறீர்களா என்று கேட்டார்கள். அந்த அளவுக்கு கூட்டுறவுத் துறை நிர்வாகத்தை 30 ஆண்டுகளுக்குக் கட்டாயமாக தங்களிடமே வைத்துக்கொண்டு இரண்டு தலைமுறைக்கு இடம் விடாமல் இருக்கிறார்கள். ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால்; அவர்களை நீக்க முடியாமல் சட்டத்திலே பாதுகாப்பு இருக்கக் கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. அத்தகைய ஆதிக்க சக்திகளின் பிடிப்பிலிருந்து விடுபட்டு, கூட்டுறவுச் சங்கங்களை மக்கள் இயக்கமாக ஆக்க வேண்டுமென்றால், சில கசப்பான, சிரமமான நடவடிக்கைகளை எடுத்துத்தான் ஆகவேண்டும். கசப்பான காரியம் என்றாலும்கூட, மக்களின் பெரிய நன்மைக்காக, பரிபூரண முழுத்தன்மை பெற்ற நிலைமைகளை உருவாக்குவதற்காக இத்தகைய தவிர்க்க முடியாத காரியங்களைச் செய்ய வேண்டுமென்றுதான் மேலும் 6 மாதங்களுக்குத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு இந்த அவையினுடைய மேலான ஒப்புதலுக்காக சட்டத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறது.

நிலவள வங்கிகளைப் பற்றியும் பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒட்டு மொத்தமாக கூட்டுறவுத் துறை சம்பந்தமாக ஆக்கபூர்வமான நல்ல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து நிச்சயமாக எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று பாரதிதாசன் அவர்கள் சொன்ன விழுமிய இலட்சியத்தை அடைவதற்கும், கூட்டுறவுத் துறையை நலிந்தோர் கேடயமாகவும், எளியவர்களின் போர் வாளாகவும் ஆக்க கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்த வேண்டுமென்று இந்த அரசு மனதார விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதற்காக இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 28/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.
சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர்வகளே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 28/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 28/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 22/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 22/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 22/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1979)
தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979)
தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நில வள வங்கிகள் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979)

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1978).

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1978) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1978) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவை என் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். இந்த மசோதாவிலே இந்த வரி யார்மீது போடப்படுகின்றது என்ற பிரச்னைதான் முக்கியமானது என்று கருதுகிறேன். நம் நாட்டிலே சாதாரண மக்கள்மீது மறைமுக வரி போடப்பட்டதன் காரணமாக, அவர்கள் அவஸ்தைப்படுகின்றதை நாம் பார்க்கிறோம். ஆனால் இந்த மசோதாவைப் பொறுத்து, வரி கொடுக்கின்றவர்கள் வரி கொடுக்கத்தக்கவர்களாக இருக்கிறார்கள். பசை உள்ளவர்களிடம்தான் வரிவசூலிக்கின்ற அளவுக்கு அவர்கள்மீது வரிபோடுவதற்கான முயற்சியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த முறையிலேயே எதிர்காலத்திலே வரி விதிப்பு எந்த திசையிலே போகவேண்டும், எந்தத் திசையை நோக்கி முன்னேற வேண்டுமென்று வழிகாட்டுகின்ற அளவிலேதான் இந்த விவசாய வருமான வரி திருத்த மசோதா வருகின்றது. அதை நான் வரவேற்கிறேன். நம் நாட்டிலே விவசாய வருமான வரி என்பது மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது. விவசாயம் அல்லாத மற்ற துறைகளிலே இருந்தும் வருமானம் வருகின்றது.

@ 690-695ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போது எடுக்கப்பட்டுள்ள வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு அடுத்ததாக வருகின்ற பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு ஆகிய மூன்று முன்வடிவுகளையும் பற்றி விவாதித்துவிட்டு, அதற்குப் பிறகு அவைகளைத் தனித் தனியாக வாக்கெடுப்புக்கு விடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கத்தினர் முதலில் விவாதத்தை முடித்துவிடலாம். அங்கத்தினர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. ஆ. நல்லசிவன்: விவசாய வருமான வரி ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. நம் நாட்டிலே விவசாயம் அல்லாத வருமானத்தின்மீது ஏராளமான வரி போடப்பட்டிருக்கிறது. போடப்பட்டிருக்கிற வரியில் ஏய்ப்பு என்று இருந்தாலும்கூட, மற்ற துறைகளிலே கணிசமான வரிவிதிப்பு இருக்கிறது. விவசாயத் துறையிலே அந்த வரிவிதிப்புக்கு எதிர்ப்பு இருந்து நடைமுறையிலே அது விதிக்கப்படக்கூடாது என்று தடுக்கப்பட்டு வந்தது.

முதன்முதலாக 1955 ஆம் ஆண்டிலேதான் தமிழ்நாட்டிலே விவசாய வருமான வரி கொண்டுவரப்பட்டது. மாநில அரசாங்கங்களிலே நிலப்பிரபுக்களுடைய பிடிப்பும் செல்வாக்கும் அதிகமாக இருந்ததன் காரணமாக மாநிலத்திற்கு விவசாயிகளிடமிருந்து வரவேண்டிய வருமானம் குறைவாக வருகின்ற நிலைதான் இருந்தது. அது மாநிலத்தின் பட்ஜெட் சரித்திரத்தைப் பார்த்தால் தெரியவரும். 1955 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, இப்போது, தமிழ்நாட்டிலே 55 லட்சம் விவசாயிகளிலே 67 ஆயிரம் பேர்கள்தான் வரி கொடுக்கிறார்கள். இந்த 67 ஆயிரம் பேர்கள் 11 கோடி ரூபாய்தான் 1979, மார்ச் 31 முடிய தந்திருக்கிறார்கள். நம்முடைய மாநில பட்ஜெட் ரூ. 800 கோடிக்கு மேலே போகிறது. விவசாயத் துறையிலே இருந்து வருகிற வருமான வரி என்பது ரூ. 11 கோடியையே எட்டிப்பிடிக்க சிரமப்படுகிறது. இன்றைக்கு இருக்கும் 11 கோடி ரூபாயை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தலாம் என்பதற்காக இந்த அரசு செய்கின்ற முயற்சியாக இது இருக்கிறது. எங்களைப் போன்றவர்களும் கொடுக்கின்ற ஆதரவெல்லாம் பெரிய கூக்குரலை வெளியே எழுப்புகிறது என்பதைப் பார்க்கிறோம். ஏனென்றால் விவசாய வருமான வரியிலே குறைந்த ஏக்கர் நிலமுடையவர்களாக ஆக்கிக்கொள்கின்ற அளவிலே நிலங்களைப் பிரித்துக் கொடுத்திருந்தால், வருமானவரி அதிகமாக வராது என்ற சூழ்நிலைகூட ஏற்பட்டிருக்கலாம். நிலக்குவியல் தமிழ்நாட்டில் இன்றைக்கு இல்லை

என்று யாரும் சொல்லமுடியாது. நில உச்சவரம்புச் சட்டம் அமுலில் இருந்த போதும்கூட நிலக் குவியல் பலர் கையிலே இருக்கிறது, நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக சில லட்சம் ஏக்கர்கூட பகிர்ந்துகொடுக்கப்படவில்லை என்று நாங்கள் இந்த அவையிலே பேசியிருக்கிறோம். இந்த நிலக்குவியல் சிலர் கையிலே இருக்கிறது. உண்மையாக வரி கணக்கிடப்படுமானால், இன்றைக்கு வரக்கூடிய ரூ. 11 கோடியைவிட, அதிகமாக அரசுக்கு வரக்கூடும். அதிலேயும் வரி ஏய்ப்பு இருக்கிறது. இந்த நிலையிலே விவசாய வருமான வரியை ஓரளவுக்கு முறைப்படுத்த வேண்டுமென்ற அளவிலே இந்த மசோதாவைக் கொண்டு வருவதால், இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

இன்னொரு விஷயம் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவை இன்னும் கொஞ்சம் வேகமாக, அரசு நிறைவேற்ற வேண்டுமென்று நான் கருதுகிறேன். 1978-லே கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவிலே சில ஷரத்துக்கள் நடைமுறையிலே தளர்த்தப்பட்டிருக்கின்றன. நிர்ப்பந்தத்தின் காரணமாக நிலமுடையவர்களின் பிரஷர் காரணமாக, அவர்களுடைய 'லாபி' காரணமாக தளர்த்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒரு வருட காலமாகச் செயல்பட்டபோது, பல மாவட்டங்களிலே அவர்கள் செலக்ட் கமிட்டிக்கும் முன்னாலே தங்களுடைய குறைகளை எடுத்துக்கூற வேண்டுமென்றதன் பெயரால் அவர்களுடைய குறைகளை அவர்கள் மிகைப்படுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த ஒரிஜனல் ஆக்டிலே இருப்பதைவிட சில அயிட்டங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், அது நாங்கள் விரும்புகின்ற அளவிலே இல்லை என்பதையும் எங்களுடைய குறையாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

குறிப்பாக நான் ஒன்றை உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். மஞ்சளுக்கு விவசாய வருமான வரி போட்டிருக்கிறார்கள். 10 ஏக்கர் மஞ்சள் போட்டால், ஒரு ஏக்கருக்கு 2,000 ரூபாய் கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே 10 ஏக்கருக்கு, ஒரு வருஷத்திற்கு, 20,000 ரூபாய் கிடைக்கும். இந்தச் சட்டத்தின் மூலம் அவர்கள் அரசுக்கு தரப்போவது 75 ரூபாய்தான். இந்த அளவிற்குக் குறைத்து மஞ்சளுக்கு விவசாய வருமான வரி போடுவது எப்படி நியாயமாக இருக்குமென்பதை அரசு யோசிக்க வேண்டும். 10 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேலுள்ளவர்கள் வரி கட்ட வேண்டுமென்று ஏற்கெனவே இருந்தது. அதை 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரென்று உயர்த்தியிருக்கிறோம். வருஷத்திற்கு 10,000 ரூபாய்க்குமேல் வருமானப்

(திரு. ஆ. நல்லசிவன்) [1979 ஏப்ரல் 30

உள்ளவர்களுக்குத்தான் இந்த வரியே உண்டு. வருஷத்திற்கு 10,000 ரூபாய் என்றால், மாதத்திற்கு 1,200 ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கக்கூடிய ஒரு குடும்பத்திற்குத்தான் விவசாய வருமான வரி என்ற நிலை இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்படுகிறது. மேலும் பல்வேறு பயிர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கிறார்கள். ரப்பர், 6 ஏக்கருக்கு மேலே இருந்தால்தான் வரி உண்டு. கொட்டைப் பாக்குக்கும் அப்படித்தான். 5 ஏக்கருக்கு மேலே இருந்தால்தான் வரி. தேயிலை, காபி, ஏலம் ஆகியவை 8 ஏக்கருக்கு மேலே இருந்தால்தான் வரி. மலைப் பிரதேசங்களில் பயிராகிற பயிர்களுக்கெல்லாம் நிலச் சீர் திருத்த உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் விதி விலக்கு அளித்திருக்கிறார்கள். ஆகவே மலைப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய தோட்டப் பயிர்கள் பயிரிடப் படும் நிலங்கள் பலரிடம் குவியலாக இருக்கின்றன. மலைப் பிரதேசங்களில் பயிர் செய்யும் பயிர்கள் ஏராளமான வருமானத்தைக் கொடுக்கின்றன. அப்படியிருந்தும், அவர்களுக்குச் சலுகை அளித்திருப்பது சரியல்ல. இப்போது உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். மலைப் பிரதேசங்களில் உள்ள நிலங்களை, 20 ஏக்கர் 'கம்பவுன்ட்' பண்ணலாமென்று முன்பு, பழைய மசோதாவில் இருந்தது. இப்போது 100 ஏக்கர் 'கம்பவுன்ட்' பண்ணலாமென்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் யோசனை, அதை 40 ஏக்கராகக் குறைக்க வேண்டுமென்பதுதான். மலைப் பிரதேசங்கள் அல்லாத இடங்களில், 30 ஏக்கர் 'கம்பவுன்ட்' பண்ணலாமென்று முன்பு இருந்தது. இப்போது வரம்பு இல்லாமல், நிலங்களைக் 'கம்பவுன்ட்' பண்ணலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் விவசாய வருமான வரியிலே பணக்கார விவசாயிகளுக்கு, அதிக நிலமுள்ளவர்களுக்குச் சலுகை தரத்தக்க நிலைமைகள் இருக்கும் போக்கை மாற்ற வேண்டும். இப்போது இதை ஆதரிக்க முக்கியமான காரணம் என்னவென்றால், வரி கொடுக்கிற ஆட்கள் எண்ணிக்கை குறைந்தாலும், வரி கொடுக்கிற 67,000 பேர்களில் 20,000 பேர்கள் குறைந்து, 47,000 பேர்கள்தான் வரி தருவார்கள் என்றாலும், வரி அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான். 1979 மார்ச் மாதம் முடிய வந்த வரி அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால், 1980 மார்ச் முடிய 20 கோடி ரூபாய் வரி வர வாய்ப்பு இருக்கிறது என்பதற்காக இந்த மசோதாவை ஆதரிக்கிறோம். மேலும் விவசாய வருமான வரியை அதிகம் பெறுவதற்கான ஆர்வம் அரசுக்குக் கிடைக்கும் முறையில் இதை ஆதரிக்கிறோம். இருந்தாலும், அரசின் உச்ச வரம்புச் சட்டத்திற்கு டிமிக்கி கொடுத்து, நிலத்தைக் குவியலாக வைத்திருக்கும் நிலப் பிரபுக்களுக்குக் கருணை காட்ட வேண்டியதில்லை. ஏற்கனவே 1978-ல் கொண்டு வந்த மசோதாவில் உள்ள ஷரத்துக்களைத்

1979 ஏப்ரல் 30] (திரு. ஆ. நல்லசிவன்)

தளர்த்த வேண்டியதில்லை. மேலும் இந்தச் சட்டம் அமுலாகும் முறையைப் பரிசீலித்து, எதிர்காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகளை ரத்து செய்வதன் மூலம், விவசாய வருமான வரி மூலமாக அதிகமான வரியை அரசு பெற வேண்டுமென்று கூறி, இதை ஆதரிக்கிறேன்.

அடுத்து, கையால் செய்யும் தீப்பெட்டிக்கு அதிக வரி போடுவதை ஆட்சேபிக்கிறேன். கேளிக்கை வரியைப் பொறுத்த வரையிலும், திறந்த வெளி அரங்குகளைப் பொறுத்த மட்டில், பிரச்சினையைத் தீர்க்க முயற்சித்திருப்பதை வரவேற்கிறேன்.

ஒரு மசோதாவை மட்டும் நான் ஆட்சேபித்து—அதாவது கையால் செய்த தீப்பெட்டிக்கு வரியை அதிகரிப்பதை ஆட்சேபித்து, மற்ற மசோதாக்களை வரவேற்று, அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, விவசாய வருமான வரிச் சட்டமுன்வடிவையும், பொது விற்பனை வரி சட்ட முன்வடிவையும், கேளிக்கை வரி சட்ட முன்வடிவையும் ஆதரித்து, அவை குறித்து சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி என்பதுபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களாலே வரவேற்கப்பட்ட விவசாய வருமானவரிச் சட்டத்தைப்பற்றிச் சில கருத்துக்களை முதலிலே சொல்ல விழைகிறேன்.

மொத்தம் பட்டா பெற்ற விவசாயிகள் 55,47,369 பேர்கள். அதிலே வரி செலுத்துவோர்—மலைப் பகுதியிலே இருப்பவர்கள் 3,407 பேர்கள் ; மற்ற பகுதிகளிலே இருக்கிறவர்கள் 63,996 பேர்கள். மொத்தம் வரி செலுத்துவோர் 67,403 பேர்கள். அவர்களை, மொத்த விவசாயிகளோடு கணக்கிட்டுப் பார்க்கிறபோது, 1.55 சதவிகிதம்தான் இருக்கிறார்கள். அதாவது வரி கொடுப்பவர்கள், மொத்த விவசாயிகளிலே 1.55 சதவிகிதம்தான். தற்போது 8,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தி, 10,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள்தான் வரி செலுத்த வேண்டுமென்று சொல்லும்போது, 19,323 பேர்கள் அதிலிருந்து நீக்கம் பெறுகிறார்கள். அதாவது ஏற்கெனவே வரி செலுத்துபவர்களில், 25 சதவிகிதத்தினர் வருமான வரிச் சட்டத்திலிருந்து நீங்குகிறார்கள். இந்தக் கணக்கைப் பார்க்கும்போது, வசதி படைத்தவர்கள், விவசாயத்திலே பெரும் பொருள் பெறுகிறவர்கள்தான் இதனால் பாதிக்கப் படுகிறார்கள் என்பதையும், அந்தப் பாதிப்பு மிகக் குறைந்த அளவிற்குத்தான் இருக்கிறது என்பதையும் கருத்திலே கொள்ளும்போது, அதைப் பாராட்டக்

கடமைப்பட்டிருக்கிறோம். பொருளாதார மேதைகள் எல்லாம் பல துறைகளிலே வரி ஈட்டும்போது, விவசாயத்திலும் பலன் ஈட்டுகிறவர்களிடம் வரி ஈட்டுதல் நல்ல முறை என்று சொல்லியிருக்கிற ஆலோசனையின் அடிப்படையிலேதான், விவசாயத்திலே, குறிப்பாக, ஏலக்காய், கிராம்பு, டீ எஸ்டேட் போன்று வைத்திருப்பவர்களை எல்லாம் மனதிலே கொண்டுதான், பெரும் லாபம் சம்பாதிப்பவர்களை மனதிலே கொண்டுதான் வரி விதிக்க அரசு முயற்சிக்கிறது என்பதைப் பாராட்டுகிறேன்.

தீப்பெட்டி செய்யும் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள், அதற்கு சிங்கிள் பாயின்ட் 2 சதவிகிதம் வரி விதித்திருப்பதைக் குறையாகக் கொள்ள வேண்டியதில்லை. தென் மாநிலங்களில் பார்க்கிறபோது, குறிப்பாக ஆந்திராவில் 3 முதல் 4 சதவிகிதம் சிங்கிள் பாயின்ட் வரி இருக்கின்றதென்பதைப் பார்க்கும்போது, தென் மாநிலங்களில் தமிழகத்தில்தான் குறைந்த அளவிற்கு அந்த வரி விதிப்பு இருக்கிறதென்பதைக் கருத்திலே கொள்ளும்போது, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, கேளிக்கை வரி பற்றி சட்ட முன்வடிவில், திறந்தவெளி திரை அரங்குகளுக்கு என்ன வரி விதிப்பு முறை என்பதுபற்றி வரையறை செய்திருக்கிறார்கள், இணக்க முறை வரி மூலமாக. 'எ' கிரேட், பர்ஸ்ட் கிரேட் நகராட்சிகளுக்கு இதை விஸ்தரிக்க வேண்டுமென்று எல்லோரும் விரும்பியிருக்கிற நிலையில், திறந்தவெளி திரை அரங்குகளில், குறிப்பாக சோமங்கலத்தில் 45 பைசாவாகவும், 75 பைசாவாகவும் டிக்கட் போட்டு, சாதாரண மக்கள் படம் பார்க்க வசதி ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலே திரைப் படங்கள் பெரிய அளவில் சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுத்திருக்கின்றன. ஏழை மக்களுக்கு இருக்கும் ஒரே பொழுதுபோக்கு திரைப்படம்தான். அந்தத் திரைப்படங்களாலே நல்ல அறிவு தென்படுகிறது என்பதையும் திரைப்படங்களிலே நல்ல அறிவைப் புகட்டுபவர்களின் வழியைப் பின்பற்றித் தான் சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்பதையும் பார்க்கும்போது, திறந்தவெளித் திரை அரங்குகள் அதிகமாக ஏற்பட வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன். வெளிநாடுகளிலே திறந்தவெளித் திரை அரங்குகள் எந்த அளவிற்குப் பெருகியிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து, தமிழ்நாட்டில் கொட்டகைகளில் அடைந்து, அங்கு சரியான சுகாதார வசதிகள் இல்லாமல் அவதிப்படுவதைக் காட்டிலும், திறந்த வெளித் திரை அரங்குகளை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டு, அந்த அளவிற்கு உருவாவதற்கான வரி விதிப்பு முறை வகுக்கப்பட்டிருப்பதைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : மேலவைத் தலைவரவர்களே, விவசாய வருமான வரி சட்டமுன்வடிவுபற்றி என்னுடைய கருத்துக்களை அவையின்முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாய வருமான வரி இப்போதுள்ள சூழ்நிலையில் தேவையற்றதென்று நான் கருதுகிறேன். விவசாயிகளிடத்திலே நாம் முறையாக வசூலிக்கின்ற நில வரிகளை வசூல் செய்கிறோம். ஆனால் விவசாயிகளுக்கு வருமானம் என்பது நிரந்தரமாக இருப்பதற்கான சூழ்நிலை இல்லை என்பதை நாமெல்லாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆகவே மக்களுடைய நல்வாழ்விற்காக சில பொருள்களைச் செய்து தரும் தியாகமான தொழிலாகத்தான் அதை விவசாயிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். வயல்களிலும், மலைச் சரிவுகளிலும், வெய்யிலிலும், மழையிலும் கஷ்டப்பட்டு பயிரிடுகிறார்கள். ஆயிரம், இரண்டாயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கும் வாய்ப்பாக அந்தத் தொழிலைக் கொள்கிறார்கள். எனவே இந்தத் தொழிலில் லட்சக் கணக்கில் லாபம் சம்பாதித்து விட முடியுமென்று சொல்லிவிட முடியாது. ஆனால் வியாபாரம் செய்கிறவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. 5 லட்சம் ரூபாய் மூலதனம் போட்டு வியாபாரம் செய்கிறார்கள். ஸ்டாக் வைக்கிறார்கள். அவர்களுக்கு பேங்கில் கடன் கொடுக்கிறார்கள். மூட்டைகள் கொடுமுடியில் இருக்கின்றன. 1,000 மூட்டை வேண்டுமென்று ஒருவர் கேட்டால், அவர் பாங்கில் பணம் கட்டுகிறார். மூட்டை கொடுமுடியிலிருந்து போய்விடுகிறது. லாபம் வியாபாரிகளுக்கு வந்துவிடுகிறது. திடீரென்று கிடங்குகளில் தீப்பற்றிக்கொண்டாலும், அதற்கு இன்ஷ்யூரன்ஸ் இருக்கிறது. அந்த வகையிலும், வியாபாரிகளுக்கு நஷ்டமில்லை. வியாபாரிகள் காமதேனு, கற்பகவிருட்சம் போன்று இருக்க வேண்டுமென்று, அவர்களுக்கு உற்சாகமூட்டுகிறோம். அவர்களிடம் வருமானவரி வாங்குகிறோம். ஆனால்

(முற்பகல் 11-50)

விவசாயம் என்பது மழையைப் பொறுத்துத்தான் நடைபெறுகிறது. மழையைப் பொறுத்துத்தான் விளைச்சல் அதிகரிக்கிறது. மழை பெய்தால் தான் விளைச்சல். விளைச்சல் ஏற்பட்டால்தான், இலாபம். இல்லாவிட்டால் விவசாயமே அழிந்துவிடும். சாதாரணமாக இன்றைக்கு விவசாயிகளுக்கு என்று இருக்கின்ற 2½ ஏக்கரை, 10 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று கணக்கிடுவோம் என்று குறிப்பில் தெரிவித்திருக்கிறார்கள். அதுபோல் 5 ஏக்கர் என்று இருந்தால், அதை 20 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று கணக்கிடுவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலையில் அத்தகையவர்கள் 1,200 ரூபாய் வரி கட்ட முடியுமா? அவர்கள் 1,200 ரூபாய் வரி

கட்ட வேண்டுமென்று இருக்கிறது. இவ்வளவு அதிக வரியை அவர்கள் கட்ட முடியுமா? அவர்களுடைய சூழ்நிலை கட்டும்படியாக இருக்கிறதா? இதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரு போகம், முப்போகம் என்று இருந்த நிலை எல்லாம் இன்றைக்கு பெரு மழையின் காரணமாக மாறிவிட்டது. அவர்களுடைய குறைபாடுகளை எப்படிப் போக்குவது? விவசாயத்திற்குத் தண்ணீர் வேண்டும். தண்ணீர் விவசாயத்திற்கு வேண்டுமே என்பதற்காக அவர்கள் மழையை எதிர்பார்க்கிறார்கள். மழையும் பெய்கிறது. ஆனால் மழை அதிகமாகப் பெய்கிறது. தண்ணீர் வயலில் நிறைந்து பயிர் அழிந்து போய்விடுகிறது. மீண்டும் அவர்கள் புதிதாக நாற்று நட வேண்டும். மீண்டும் களை எடுக்க வேண்டும். மீண்டும்ற உரம் போட வேண்டும். மீண்டும் அவர்களுக்குச் செலவு ஏற்படுவதால், இரட்டிப்புச் செலவு ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, கணக்கெடுக்கக் கூடிய பக்குவத்தை இன்றைக்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் பெற்றிருக்கிறார்களா? இந்த அரசு விவசாயிகளிடம் அதிகாரிகளுக்கு களுக்குக் காட்ட வேண்டுமென்று சொன்னால்,'' பிரச்சினைகள்தான் இன்னும் வரும்.

சோழவந்தான் வட்டாரத்தில் போன முறை நான் சென்றபோது பார்த்தேன். கதிரும் பொதியுமாக இருந்தன. சென்ற முறை நான் பார்த்த போது, மூன்று அல்லது ஒன்றரை மகசூல் வரும் என்று எண்ணியிருந்தேன். இன்றைக்கு நான் அங்கு போய் பார்க்கும்போது, புகையான் என்ற ஒரு நோய் வந்து, பயிர் அப்படியே அழிந்து விட்டிருந்ததைப் பார்த்தேன். மாடு கூட அதைச் சாப்பிடவில்லை. அந்தப் பகுதி முப்போகம் விளைகின்ற பகுதி என்றும், வைகைத் தண்ணீர் பாய்கின்ற வட்டாரம் என்றும் கணக்கிட்டு வரி விதிக்கிறார்கள். அதுபோல் இரும்பாடி என்ற இடத்திலும், சோழவந்தான் வட்டாரத்திலும் இன்றைக்கு 2,500 ஏக்கர் நிலங்கள் புகையான் நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படி வரி கட்ட முடியும்? இதுவரை அந்த நோய்க்கான மருந்தையும் கண்டு பிடிக்கவில்லை. நஷ்டப்பட்டிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு நாம் ஏதாவது பயிர் பாதுகாப்பு என்ற அடிப்படையில் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வந்திருக்கிறோமா? அவர்கள் கடன்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் வரி கட்ட வேண்டுமென்றால் எப்படி கட்டுவார்கள்? ஏற்கெனவே கடன் பெற்று விவசாயம் நடத்திக் கொண்டிருக்கின்ற நிலைமையில் பயிர்களுக்கு நோய் வந்தால், இரட்டிப்பு நஷ்டம் வேறு. இந்நிலையில் அவர்கள் கடன் வாங்கி அரசுக்கு வரி கட்ட முடியுமா? எப்படி அவர்கள்

உற்சாகமாக விவசாயத் தொழிலில் ஈடுபடுவார்கள்? சாதாரணமாக மற்ற தொழில்களைப் பொறுத்தவரை, முதல் போட்டால் உடனே முதலைத் திரும்பப் பெறலாம் என்ற நிலை இருக்கிறது.

30 இலட்சம் ரூபாயை நூற்பாலையில் முதலீடாக ஒருவர் போட்டால், 12 ஆயிரம் ஸ்பின்டில் அதில் நிர்ணயிக்கப்படுகிறது. பஞ்சு உடனடியாக நூலாக வந்து விடுகிறது, நூலிலிருந்து உடனடியாகத் துணி தயாரிக்கப்படுகிறது. 20 பேல் காலையிலேயே உற்பத்தியாகிவிடுகிறது. ஒரு பேலுக்கு 200 ரூபாய் விலை. ஆக, அதிலிருந்து அவர்களுக்கு இலாபம் கிடைக்கிறது. அவர்களுக்கு லோனும் கிடைக்கிறது. மெஷின் வாங்க லோன் கிடைக்கிறது. உற்பத்தியான பொருள்களை வைத்து லோன் பெற முடிகிறது. 12 ஆயிரம் கதிர்களில் தொடங்கிய ஆலை விரைவில் 40 ஆயிரம் கதிர்களைக் கடந்து, இலாப நிலைக்கு வர முடிகிறது.

விவசாயி பருத்தி, மிளகாய் போன்றவைகளைப் போட்டால், 5 மாதம் கழித்துத்தான் விளைச்சலைப் பார்க்க முடியும். கரும்பைப் பொறுத்தவரை, 11 மாதம் பிள்ளையை வளர்ப்பது போல் வளர்க்க வேண்டும். தென்னை மரத்தைப் பொறுத்தவரை, 6 வருஷம் தென்னம் பிள்ளை வளர்ந்து விட்டதா தென்னம் பிள்ளை வளர்ந்து விட்டதா என்று தண்ணீர் விட்டு தண்ணீர் விட்டு தோற்றுவிக்கிறார்கள். 6 வருஷம் கழித்துக் கூட தேங்காய் வருமா என்றால் வராது. குருத்துதான் வரும். 6 வருடங்களுக்கு ஆன செலவு எவ்வளவு? ஆட்களுக்குச் சம்பளம் கொடுத்தது எவ்வளவு? தண்ணீர் எடுத்து விட ஆன செலவு எவ்வளவு? இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். வாழை, கரும்பு, தென்னம்பிள்ளை போன்றவற்றை கடன் வாங்கி வைக்கிறார்கள். இத்தனைக்கும் மத்தியிலே 8 ஆயிரம் ரூபாய் செலவழித்து கிணற்றை வெட்டுகிறார்கள். அப்படி வெட்டியும் தண்ணீர் வரவில்லையென்றால், மீண்டும் 4 ஆயிரம் ரூபாய் செலவு செய்து கிணற்றை வெட்டுகிறார்கள். அதற்குப் பிறகு பம்ப்செட்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறார்கள். இவ்வளவு செலவு செய்து விட்டு ஆட்களை வைக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் இருக்கின்ற விவசாயியிடம் இவ்வளவு வருமான வரி கட்டு என்றால் எப்படி அவன் கட்ட முடியும்? அவர்களுக்கு வரி விதிக்கக் கூடாது. பழைய முறைதான் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு என்னுடைய கருத்தினைக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, திசையன்விளையில் வாழைகள் எல்லாம் சீர்குலைந்து விட்டன. கரும்பு, வாழை இவைகளுக்கெல்லாம், இயற்கை சரியாக இருந்தால் தான், நல்ல விளைச்சலைப் பெற முடியும். அதுபோல் வெற்றிலைக் கொடிக் கால்கள் சரிந்து விட்டன. அவர்களுக்கு எந்தவித வழிவகையும் செய்யப் படவில்லை. அவர்களுக்கு நிவாரணம் என்ற வகையில் எந்தவித உத்தர வாதமும் இல்லை. பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை அவர்களுக்குக் கொண்டு வந்த பிறகு, இயற்கையும் நல்லமாதிரியாக ஒத்துழைத்த பிறகு, நீங்கள் கணக்கு எழுதி வையுங்கள், வருமான வரி கட்டுங்கள் என்று சொன்னால், அர்த்தம் இருக்கிறது. அப்படி இல்லாமல் கணக்கெழுதி வையுங்கள் என்று சொன்னால், எப்படி? தினசரி சித்தியை, கணக்கை சிறு வியாபாரிகளைப் பொறுத்தமட்டில் எழுதலாம். அவர்கள் முதலில் பேரேட்டில் எழுதுவார்கள், அதன் பிறகு குறிப்பேட்டில் எழுதுவார்கள். அவர்கள் வரவு செலவுக் கணக்கை எழுதுவார்கள். விவசாயி களை எடுத்தது இன்ன நாள், அதற்கு இவ்வளவு செலவு, இத்தனை ஆட்கள், நாற்று நட்டது இத்தனை பேர், இவ்வளவு செலவு, நடவுக் கூலி இவ்வளவு, இத்தனை ஆட்கள், தினப்படி கூலி இவ்வளவு என்று எல்லாம் அந்த விவசாயிகள் கணக்கு எழுத வேண்டுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இடையில் குறுக்கிட வேண்டா மென்று உறுப்பினர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். சட்ட முன் வடிவைப் படித்துப்பார்க்காமல் உறுப்பினர் பேசுகிறார் என்று நினைக்கிறேன். காலம் வீணாகிறது என்பதற்காகச் சொல்கிறேன். யாரையும் கணக்கு வைக்கச் சொல்லவில்லை. யாருக்கு வரி போட்டிருக்கிறோம், யாருக்கு வரி போடவில்லை என்பதையெல்லாம் சட்டமுன்வடிவை படித்துப் பார்த்துத் தெரிந்து, அதற்குப் பிறகு பேசியிருக்கலாம். உறுப்பினர் பேசுகிறபொழுது, முதலில் பணக்காரர்களுக்காகப் பேசுவது மாதிரி இருந்தது. நானும் பணக் காரர்களுக்காகத் தான் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து கேட்டுக்கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு விவசாயிகளை கணக்கு எழுத வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது என்று சொன்னதால் தான், நான் இப்பொழுது பதில் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். உறுப் பினர் சட்டமுன்வடிவைச் சரியாகப் படிக்கவில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: பணக்காரர்களுக்காக நான் பேசவில்லை. பேரறிஞர் அண்ணா ஒரு பொன்மொழியை மிகவும் ஜாக்கிரதையாகச் சொன் னார். "ஏழைகளுக்கு வரியைக் குறைப்போம்" என்று சொன்னார். அடுத்து, பணக்காரர்களுக்கு வரி போடவில்லை என்று சொல்லவில்லை. "தாங்கக் கூடியவர்களுக்கு வரியை விதிப்போம்" என்று தான் சொன்னார்.

ஏழைகளுக்கு வரியைக் குறைப்போம் என்றும், தாங்கக் கூடியவர்களுக்கு வரியை விதிப்போம் என்றும்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். சிலர் பார்க்க பணக்காரர்கள் போல் தோற்றமளிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இத்தகைய வரி விதிப்பை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. வெளித் தோற்றத்தில் தான் அவர்கள் பணக்காரர்கள் மாதிரி தோன்றுவார்கள். உள்ளுக்குள்ளே 10 ஆயிரம் ரூபாயை கடன் வாங்கியிருப் பார்கள். வெளியே போகும்போது வெள்ளைச் சட்டை போட்டிருப்பார்கள். பணக்காரர்களைப் போல் தோற்றமளிப்பார்கள். ஆகவே தாங்கக்கூடியவர் களுக்கு வரி விதிப்பு என்று சொல்லும்போது, ஏழையெளியவர்களாக இருந்து அதே நேரத்தில் வெளித்தோற்றத்தில் பணக்காரர்களாக இருக்கின்ற அந்த ஏழையெளிய மக்களை இந்த வரி விதிப்பிலிருந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் மீட்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்து அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1979ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி திருத்தச் சட்டமுன்வடிவை யொட்டி சில கருத்துக்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டமுன்வடிவிலே சிறு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வருகின்ற நோக்கத்தில் சில அம்சங்கள் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து உண்மையிலேயே நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் நான் பாராட் டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

குறிப்பாக இந்த வரி விதிப்பைப் பொறுத்தமட்டில், விலக்கு அளிக்கின்ற தொகை 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரிலிருந்து 20 ஸ்டாண்டர்ட் ஏக்கராக மாற்றப் பட்டிருக்கிறது. அதுபோல் மலைப் பகுதியில் 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரி லிருந்து 100 ஸ்டாண்டர்ட் ஏக்கராக மாற்றியமைக்கப்பட்டிருப்பது குறித்து உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன்.

ஒரு குறை, சாதாரண ஏக்கருக்கு இணையான ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சில ஷரத்துக்கள் இருக்கின்றன. அதிலே புகையிலை பயிரிடக்கூடிய ஒரு சாதாரண ஏக்கர், இரு ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு இணையானது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது என்ன நியாயம்? புகையிலை ஒரு பணப் பயிர். மக்களுக்குக் கெடுதல் செய்யக் கூடிய பயிர். அதுமட்டுமல்ல. உற்பத்தி செய்பவருக்கு ஏராளமான லாபத்தைக் கொடுக்கக்கூடிய பணப் பயிர். என்னுடைய பகுதியிலே இந்தப் பயிர் பயிராகிறது. எனக்கு இது

பற்றிய அனுபவம் உண்டு. சிதம்பரம் பகுதியிலே ¼ ஏக்கர் புகையிலை பயிரிடும் நிலத்தின் மதிப்பு 20 ஆயிரம் ரூபாய். 1 ஏக்கரின் விலை 80 ஆயிரம் ரூபாய். அப்படி இருக்கும்போது, புகையிலை பயிர் செய்யும் ஒரு ஏக்கர் நிலத்தை இரு சாதாரண ஏக்கருக்கு இணையானது என்று குறிப்பிட்டிருப்பது நியாயமா? இதை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, திராட்சை, ஒரு சாதாரண ஏக்கர், 5 ஸ்டான்டர்ட் ஏக்கருக்கு இணையானது என்று போட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், சாதாரண மக்கள் எல்லாம் திராட்சைப் பழத்தை வாங்கிச் சாப்பிடக் கூடாதா? திராட்சைப் பழம் சத்துள்ள பழம். சாதாரண மக்களுக்கு அது கிடைக்க வேண்டும். திராட்சை பயிரிடப்பட்டிருக்கும் 1 ஏக்கர் நிலம் 5 ஸ்டான்டர்ட் ஏக்கருக்குச் சமம் என்று சொன்னால், உற்பத்திச் செலவு உயர்ந்துவிடும். பாமர மக்களுக்குப் பயன் கிடைக்காது. திராட்சை ஏக்கர், 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு இணையானது என்று சொல்லும்போது புகையிலை 1 சாதாரண ஏக்கர் இரு ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு இணை என்று குறிப்பிட்டிருப்பது எப்படி நியாயம்? புகையிலை போன்ற பயிர்கள் பயிரிடக்கூடிய நிலத்தை அதிக அளவு ஸ்டாண்டர்ட் ஏக்கராக உயர்த்த வேண்டும். இதை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேர்க்கடலை. வேர்க்கடலை இன்று ஒரு பணப்பயிர். நல்ல லாபத்தைத் தரக்கூடிய பணப் பயிர். நல்ல தண்ணீர் வசதி உள்ள இடத்தில் இப்பயிர் நல்ல லாபத்தைத் தரும். மானாவாரியாக இருக்கும் இடங்களிலே இழப்பை ஏற்படுத்தும். நல்ல நீர் வசதி இருக்கக்கூடிய இடங்களிலே எங்கெல்லாம் வேர்க்கடலை பயிரிடப்படுகிறதோ அந்த இடங்களிலே எல்லாம் அதனுடைய ஸ்டாண்டர்ட் அளவு அதிகரிக்கப்பட வேண்டும். பொதுவாக ஒரு சாதாரண ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குச் சமம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேர்க்கடலையைப் பொறுத்த வரையில், மானாவாரியாகப் பயிரிடப்படும் வேர்க்கடலை நல்ல தண்ணீர் வசதியுள்ள இடங்களிலே பயிரிடப்படும் வேர்க்கடலை என்று இரண்டாகப் பிரித்து ஸ்டாண்டர்ட் அளவை மாற்றியமைப்பது நல்லது என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில், நிறைய புகார்கள் இருக்கின்றன. திரைப்படக் காட்சிகள் மூலமாக, கொட்டகைகள் மூலமாக, அதிக லாபம் வருகிறது. அப்படி அதிக வருமானம் வரும்போது, எந்த அளவுக்கு அதிகமான வரியைப் போட்டு அரசினுடைய நிதி நிலைமையை உயர்த்த முடியுமோ அதைச் செய்ய வேண்டும். திரைப்பட கேளிக்கை வரியில் அரசின் பங்காகத் திருத்தங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இது வரவேற்கத்தக்கது இந்த வரி அளவை இன்னும் அதிகப்படுத்தி அவர்களுடைய வருமானத்திலிருந்து, அவர்கள் அடைகின்ற லாபத்திலிருந்து அதிகமான அளவுக்கு அரசு வரிகள் மூலமாகப் பெற முடியுமா என்று சிந்திக்க வேண்டும். கேளிக்கை வரியில் பல குறைபாடுகள் இருக்கின்றன. இப்போது கள்ளமார்க்கெட் மூலமாக டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன. டிக்கட்டுகள் எல்லாம் கறுப்புச் சந்தையிலே விற்கப்படுகின்றன. 2 ரூபாய் டிக்கெட் 20 ரூபாய், 40 ரூபாய் என்று விற்கப்படுகிறது. சில சமயங்களிலே 60 ரூபாய், 80 ரூபாய் என்று விற்கப்பட்டதெல்லாம் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. இந்தப் போக்கையெல்லாம் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் செயலை பகிரங்கமாகச் செய்கிறார்கள். அதுவும் வாடிக்கையாகச் செய்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், காவல்காரர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பேரம்பேசி விற்பதைத் தடுப்பதற்கு நாம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்? என்னைக் கேட்டால் நான் சொல்வேன்—அனைத்து திரைப்படக் கொட்டகைகளையும் அரசே மேற்கொண்டு நடத்த வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்தக் கருத்தைத்தான் கூறினார்கள். அரசினுடைய முக்கியமான சீர்திருத்தமாக திரைப்படத் தொழிலை தேசியமயமாக்க வேண்டும் என்று அவர் கூறினார். இதுபற்றி அடிக்கடி கூட்டங்களிலேயும் பேசியிருக்கிறார். அதிக லாபம் தரக்கூடிய இந்தத் தொழிலை அரசே நடத்தினால், அரசின் நிதி நிலையை உயர்த்தலாம் என்று ஆலோசனை கூறி, அதை மிகவும் அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தி, திரைப்படத் தொழில், திரைப்படக் கொட்டகைகளை எல்லாம் தேசியமயமாக்குவதற்கு அரசு ஒரு கொள்கையை வகுப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, நான் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை, இந்த விவசாய வருமான வரி மசோதாவைக் கொண்டு வந்ததற்காக மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்

கிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, எப்போதுமே ஒன்றை நம்மாலே காண முடிகின்றது. கட்சிகளைக் கடந்து நின்று, இந்தச் சட்ட முன்வடிவு மூலமாக வருமான வரி விதிப்பை எதிர்த்து நிற்கின்ற அளவுக்கு எப்போதுமே ஒரு 'வெஸ்டட் இன்ட்ரஸ்ட்' நிரந்தரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. விவசாயத் துறையிலே புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரும்போது, அதை 'டிலே' செய்யும் அளவிலே, தடுக்கின்ற அளவிலே, எவ்வளவு வேகமாக சட்டங்களும் மசோதாக்களும் வருகின்றனவோ, முன்மொழியப்படுகின்றனவோ, அந்த வேகமும், மாற்றமும், புரட்சியும் அந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்படும்போது அநேகமாக அடங்கிப்போகின்ற நிலைமையிலேதான் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கடந்த காலத்திலே எங்களுடைய காங்கிரஸ் கட்சி ஆட்சிப்பொறுப்பிலிருந்தபோது கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டமாக இருந்தாலும் சரி, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டமாக இருந்தாலும் சரி, இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதுவரை கொண்டுவரப் பட்டிருக்கின்ற அல்லது இனி கொண்டு வரவிருக்கின்றோம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற சட்டங்களானாலும் சரி, அந்தச் சட்டங்கள் வருகின்றபோது இருக்கின்ற நோக்கமும் வேகமும் வேறாக இருந்தாலும், அந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தும் நிலை வரும்போது அந்த வேகமும், நோக்கங்களும் அடங்கிப்போகின்றன. நான் உறுதியோடு சொல்ல முடியும், காங்கிரசைப் பொறுத்தவரையில், சட்டங்களைக் கொண்டு வந்தபோதும் நோக்கத்திலே அவர்கள் தெளிவாக இருந்தார்கள். நிறைவேற்றும்போதும், தெளிவாக இருந்தாலும், முதல்முறையாக ஏற்படுகின்ற விவசாயப் புரட்சி என்ற காரணத்தினாலே கொஞ்சம் ஊப்-ஹோல் விட்டுத்தான் செய்தார்கள். முதலிலே மக்களை அதற்குத் தயார் செய்ய வேண்டும் என்ற நிலைமைகள் காங்கிரசுக்கு ஏற்பட்டதால், அதைச் செய்யவேண்டிய அவசியம் வந்தது. அதைப் போலவே குறிப்பாக இன்றைக்கு விவசாய வருமான வரியைப் பொறுத்தவரையில், நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவுக்காவது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்களே என்று நான் பாராட்டு கிறேன். ஆனால், இது போதுமா ? நான் சொல்ல விரும்புகிறேன், நிச்சயமாக இது போதாது. போதாது என்பதோடு மட்டுமல்ல, விவசாயிகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு வந்திருக்கிற மசோதாவிலே குறிப்பிட்டிருக்கிற பயிர்களைப் பயிரிட்டுக்கொண்டிருப்பவர்கள் சரியான முறையிலே விவசாயிகள் என்ற தரத்திலே வர முடியாது. விவசாயிகள் என்பவர்கள் இன்

றைக்கு நாட்டிலே நட்டத்திலே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொண்டிருப்பவர்கள் தான். இதிலே குறிப்பிட்டிருக்கும் பயிர்களைப் பொறுத்தவரையில், இவைகள் எல்லாம் பணப் பயிர். இந்தப் பயிர்களை எந்த அளவுக்கு அதிகமாகச் செய்கிறார்களோ அந்த அளவுக்கு ஆதாயம் என்பதோடு மட்டுமல்ல, இந்தப் பயிர்களைப் பயிரிடுவதற்கு வியாபாரிகள் முதலிலே பணம் கொடுக்கிறார்கள். பயிர் செய்யும்போது, எவ்வளவு வேண்டுமானாலும் பணம் கடன் வாங்கலாம். அநேகமாக வசதியுள்ளவர்கள்தான் இந்தப் பயிர்களைப் பயிரிடுவார்கள். பணத்தை வைத்து, பணத்தைப் போட்டு, முதலீடு செய்து விவசாயம் செய்கிறார்கள். அதிகமாக ஆதாயம் வருகின்றது. இன்றைக்கு இதிலே வந்திருக்கின்ற பயிர்கள் அத்தனைக்கும் 1 ஏக்கர் ஆனாலும் சரி, பூச்சிமருந்துகளிலேயிருந்து, பயிர்களைப் பாதுகாத்து, சரியாக முளைக்கவைத்து, களையெடுத்து, பாதுகாத்து அதிலிருந்து பலன் கிடைக்கின்ற வரையில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் முதலீடு செய்தாக வேண்டும். அப்படி முதலீடு செய்கின்ற வசதி யாருக்கு இருக்கின்றதோ அவர்கள் தான் அந்தப் பயிரைச் செய்ய முடியும். ஆகவே, விவசாயிகள் என்பது வேறு. இந்தப் பொருட்களையெல்லாம் விவசாயத்திலே கொண்டு வர வேண்டுமா என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10.)

உருளைக் கிழங்கைப்பற்றி ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஓர் ஆண்டில் உருளைக் கிழங்கு பயிரிட்டு நஷ்டம் ஏற்பட்டால் அல்லது பூச்சி அரித்துப் பட்டுப்போய்விட்டால், அதைப் பல ஆண்டுகளுக்குச் சமாளிக்க முடியாத நிலை இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் இப்படி விவசாயிகள் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். உருளைக் கிழங்கு அழிந்து விட்டால், அதன் காரணமாக அதைப் பயிரிடும் விவசாயிகள் பெருத்த அளவுக்குப் பாதிக்கப்படுவதை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். எனவே அரசாங்கம் இதையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இப்படிப்பட்ட பயிர்கள் மீது வருமான வரி விதிக்கும்போது, வேறு கோணத்திலிருந்து நோக்குகிற பார்வை அரசுக்கு வேண்டும். விவசாயிகளுக்குச் சலுகை செய்கிறோம் என்று சில சலுகைகளை அறிவிக்கும்போது, பெருமுதலாளிகளும், சாதாரண விவசாயிகள் என்ற போர்வையில் நின்று சலுகை அடைவதை நிறுத்தியாக வேண்டும்.

பல பொருள்களுக்கு விவசாய வருமான வரியை அரசாங்கம் விதித்திருக்கிறது. அப்படி விதிக்கப்பட்ட பொருள்களில் தென்னை போன்ற பயிரும் இருக்கிறது. ஆனால் தென்னையைப் பொறுத்தவரையில், எந்த அளவுக்கு அரசாங்கம் அதற்கு உச்ச வரம்பை விதித்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உச்ச வரம்பு விதித்திருக்கிறது என்கிறபோது இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற அரசாங்கத்தை மட்டும் நான் சொல்லவில்லை. இதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, பின்னாலே வந்த தி.மு.க. ஆட்சியிலும் சரி, இத்தகைய உச்ச வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் வரை எல்லோருமே தென்னைக்கு உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறோம். இதெல்லாம் அவசியம்தானா என்று எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சாதாரணமாக கடந்த காலத்தில் தென்னை வைத்தால், சுமார் 12 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பலன் கிடைக்கும். தற்போது 5 ஆண்டுக் காலத்தில் கூட பலன் கிடைக்கிறது. மிஞ்சிப்போனால் 7 ஆண்டுகளில் பலன் கிடைக்கிறது. அந்த நிலத்திற்குத் தனியான மரியாதை கிடையாது. சாதாரணமாக ஏக்கர் சுமார் ரூ. 500 அல்லது ரூ. 1,000 கொடுத்து நிலத்தை வாங்கி அந்த நிலத்தின்மீது பணத்தைப் போட்டு, வருமானம் இல்லாமல் சுமார் 7 ஆண்டுக்காலம் இருந்தபிறகு, வட்டியும் முதலுமாக இரண்டு மூன்று ஆண்டுகளிலேயே தென்னந்தோப்புக்குச் சொந்தக்காரர்கள் பெற்று விடுகிறார்கள். பிறகு காலமெல்லாம் அவர்களுக்கு அதிலிருந்து வருமானம். உச்சவரம்பிலிருந்து எக்செம்ப்ஷன், வருமான வரியிலிருந்து எக்செம்ப்ஷன். இப்படி பல்வேறு சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. இப்படிப் பணப்பயிர்களை விளைவிப்பவர்களும் விவசாயிகள் என்ற பெயரில், அந்தத் திரையின் பின்னால் நின்றுகொண்டு, மறைந்து கொண்டு இந்தச் சலுகைகளை அனுபவிக்கத் துடிக்கிறார்கள். பல நேரங்களில் அதிலே வெற்றியும் காண்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை இந்த மன்றத்திலே குறுரைத்திருக்கிறார்கள். எங்கேயிருக்கிறார்கள் சொல்லுங்கள், அவர்களை இந்தச் சட்டத்தின் பிடியில் கொண்டு வந்துவிடுகிறேன் என்று. ஆகவே அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்வேன், இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். சொல்லப்போனால் அவர்களின் சொந்த மாவட்டத்தில்தான் இது மிக மிக அதிகம். கடற்கரையோரப்பகுதி நெடுகிலும் இந்தத் தென்னந்தோப்பைத் தவிர வேறு எதுவுமே

கிடையாது. எனது மாவட்டத்திலும் அதிகமாக இருக்கிறது. அங்கெல்லாம் விளைந்தால் சவுக்கு விளைய வேண்டும் அல்லது தென்னை மரம்தான் விளைந்தாக வேண்டும் அல்லது முந்திரி விளைந்தாக வேண்டும். இந்த மூன்று பயிர்களும் நிலத்தில் இருக்கும்போதே பல்லாயிரக்கணக்கான ரூபாயை வீட்டிற்குக் கொண்டு வந்து கொட்டக் கூடிய பயிர்கள் என்பதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே வருமான வரி விதிக்கும்போது, இதைக் கவனத்தில் கொண்டு இவைகளுக்கு ஒரு உச்ச வரம்பையே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னை பயிரிட்டால் முதல் 7 ஆண்டுகளுக்கு பிறகு அல்ல இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு, இத்தனை ஏக்கர் நிலம்தான் வைத்துக்கொள்ள முடியும் என்ற நிலையைக் கொண்டுவர வேண்டும். இதற்கு விதிவிலக்குக கொடுப்பதன் காரணமாகத்தான் ஊரிலுள்ள கறுப்புப் பணத்தையெல்லாம் தென்னந்தோப்புகளை வாங்கப் பயன்படுத்த முடிகிறது. கறுப்புப் பணத்தை மறைத்து வைக்க இது ஒரு பெரிய இடமாக இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே ஏலம், கிராம்பு போன்றவைகள் இருக்கின்றன. கள்ளக் கடத்தல் நிலையிலேயே அவைகளின் விலையை நாம் அறிவோம். இவைகளை இங்கேயே உற்பத்தி செய்யும்போது, எவ்வளவு லாபம் இருக்கும் என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே டீ தோட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். பணம் இல்லாமல் இவைகளெல்லாம் நடக்காது. பல்லாயிரக் கணக்கான, கோடிக்கணக்கான பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான் இத்தகைய தோட்டங்களை வைத்துப் பராமரிக்க முடியும், இந்தத் தோட்டங்களை வாங்க முடியும் என்ற நிலையை நாம் அறிவோம்.

(மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தம்மிடமிருந்த ஒரு காகிதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கொடுத்தார். உறுப்பினர் அதனைப் படித்துப் பார்த்தார்.)

(திரு. க. இராமமூர்த்தி) [1979 ஏப்ரல் 30

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல குறிப்பைத் தந்திருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற கட்சியைச் சார்ந்தவர்கள் உட்பட எல்லோரும் தங்களுடைய கருத்துக்களை எப்படித் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும், அதன் காரணமாக 'டிசெண்டிங் நோட்' கொடுத்திருக்கிறார்கள் என்பதையும், அதன் காரணமாக அரசாங்கம் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

நான் மீண்டும் மீண்டும் இதைத்தான் தெரிவிக்க விரும்புகிறேன். இதில் தான் கோளாறே வருகிறது. சட்டம் வருகிறபோது பல நேரங்களில் இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் வந்து சேருகின்றன. இன்றைய அமைச்சர் அவர்களாவது அத்தகைய நிர்ப்பந்தத்திற்கு ஆட்படாமல் இருப்பார்கள் என்று எண்ணினேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சியிருந்தது. அவர்களெல்லாம் இந்த நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிவிட்டார்கள் என்று இன்றைய அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலப் பிரபுக்கள் நிர்ப்பந்தத்திற்கு இவர்கள் ஆளாகிவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு நிலப் பிரபுக்களின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலே தெளிவான கருத்தை நான் கொண்டிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியின் கருத்தைப் பொறுத்தவரையில், நிலச் சீர்திருத்தங்களில் மிகத் தெளிவான கருத்தைக் கொண்டிருக்கிறது. நடைமுறையில் கட்சி பார்க்கிற கோணம் ஒன்றாக இருக்கலாம், என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் பார்க்கிற கோணம் வேறாக இருக்கலாம். ஆனால் அடிப்படையான உச்ச வரம்புச் சட்டத்தை மாற்றுவதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆகவே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் செலக்ட் கமிட்டியில் என்ன கருத்தைத் தெரிவித்திருந்தாலும் இது சரியான கருத்தல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது அவருடைய சொந்தக் கருத்தாகத்தான் இருக்க முடியும். எனவே இந்த வகையில் எங்கள் கட்சிக் கருத்தை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நடவடிக்கையேகூட போதாது. இன்னும் வேகமாகச் செய்தாக வேண்டும். அதற்கான வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் என்ற பெயரில் விவசாயிகள் அல்லாத முதலாளிகளின் நிர்ப்பந்தத்திற்கு வணங்கிப் போகிற நிலைக்கு இந்த அரசு ஆளாகிவிடக்கூடாது என்ற என் கருத்தைச் சொல்லி உரையை முடிக்கிறேன்.

1979 ஏப்ரல் 30] (திரு. கே. கிருஷ்ணசாமி)

தலைவர் அவர்களே, ஒரு மசோதாவைப்பற்றி மட்டும் நான் பேசியிருக்கிறேன். அடுத்த மசோதாவைக் குறித்தும் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, அவையில் அணில் ஒன்று வந்துபோகிறதே அதுவும் உறுப்பினர்தானா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்கு வோட்டுரிமை இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : கேளிக்கை வரிச் சட்டத்தைப் பொறுத்தவரை ஒரே ஒரு கருத்தைத்தான் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்பாக ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறபோது, ஒரு கருத்தைத் தெரிவித்ததாக நான் அறிகிறேன். அதாவது 'நம்பவுண்டிங் சிஸ்டத்தை' பிற நகரங்களுக்கும் சென்னை நகரத்திற்கும் கொண்டு வருவது அல்லது தமிழகம் முழுவதும் ஒரே சீராக அதை ஆக்குவது என்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்து ஏற்புடைய கருத்துதான் என்றாலும்கூட, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்தத் துறை வளர வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலமாக அந்தத் துறை இன்றையதினம் மிக நல்ல முறையில் வளர்ந்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால் அதற்கு மேல் ஏற்பட்டிருக்கிற நிலைமையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களை லாபம் அடையச் செய்யுங்கள் என்கிறபோது, மக்களைக் கசக்கிப் பிழிந்து, உறிஞ்சுகிற நிலை பல இடங்களில் இருக்கிறது.

பொழுது விடிந்து 8 மணிக்கு மேல் சினிமாக் கொட்டகையின் கேட்டுகளைத் திறந்து சினிமாப்படம் காட்ட ஆரம்பித்தால், இரவு 1, 2, 3 மணி வரை தியேட்டர்கள் நடைபெறுவதும் திரும்பத் திரும்பக் காட்சிகள் காட்டப்படுவதுமான நிலை இருக்கிறது. இடைவெளி என்று ஒரு ½ மணி நேரம் கூட இல்லாத அளவுக்கு மக்களைச் சிரமத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

(திரு. க. இராமமூர்த்தி) [1979 ஏப்ரல் 30

சினிமாப் பார்க்கப்போகிற மக்கள் இத்தகைய சிரமத்திற்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளத் தயாராகத்தான் போகிறார்கள் என்று சொல்லலாம். திரையில் தோன்றும் நட்சத்திரங்களின் வாழ்க்கையைப் போல் தங்கள் வாழ்க்கையும் அமைய வேண்டும் என்ற விருப்பத்தில், அவர்களைப் போல் நாமும் சில மணி நேரத்திற்காவது நம்மை மறந்து இருக்கலாம் என்ற எண்ணத்தில் பார்த்தாலும், சினிமாக் கொட்டகை அதிபர்களைப் பொறுத்த வரையில், அவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்று எண்ணிக்கொண்டு, அவர்களுக்கு சாதாரண அடிப்படை சுகாதார வசதிகளைக் கூட செய்து கொடுக்காமல் திரை அரங்குகளை நடத்துகிற

(பிற்பகல் 12-20)

முறை தமிழகத்தில் மலிந்து கிடக்கிறது. மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. நடவடிக்கை எடுக்க முடியாமல் மற்றவர்கள் தடுத்து விடுகிறார்கள். என்ற நிலை இருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், நாள் ஒன்றுக்கு இரண்டு சினிமாக் காட்சிகளை நடத்தப் போகிறார்கள் என்ற அளவிலே கம்பவுண்டிங் முறையை அமுல் படுத்தினோம். ஆனால் கம்பவுண்டிங் முறையை அமுல்படுத்திய பிறகு, அவர்கள் ஒரு நாளைக்கு 6 முறை காட்சிகளை நடத்திக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமான வரியை விதிக்க வேண்டும். தமிழகம் முழுமைக்கும் ஒரே சீரான வரியை வைக்க வேண்டிய அவசியத்தை வரவேற்கிற நேரத்தில், தியேட்டர்களில் காட்டக்கூடிய காட்சி களுக்கேற்ப கம்பவுண்டிங் முறை வர வேண்டும். அப்போதுதான் சீராக இருக்கும், ரேஷனலாக இருக்கும்.

விற்பனை வரிச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு முனை வரி விதிப்பைக்கொண்டு வந்திருக்கிறார்கள். பல காலமாக இந்த அவையிலும், மற்ற அவையிலும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கேட்டு வந்த ஒன்றுதான் இது. இதிலே முழுமையாக என்னுடைய கருத்தைச் சொல்ல இயலவில்லை. இதைச் செயல்படுத்துகிற அளவிலே செயல்படுத்த வேண்டுமென்று தெரிவித்து அமைகிறேன்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, **கேளிக்கை** வரியைப் பொறுத்தவரையில், நான் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொல்ல **விரும்புகிறேன்.**

1979 ஏப்ரல் 30] (திரு. க. அறிவழகன்)

டூரிங் தியேட்டர்களோடு திறந்த வெளி தியேட்டர்களையும் இணைத்திருக் கிறார்கள். சோமங்கலத்திலுள்ள திறந்தவெளி தியேட்டருக்கு நான் சென்றிருந்தேன். மாலை ஏழரை அல்லது 8 மணிக்கு முதல் காட்சி ஆரம்பித்து 12 மணியளவில் முடிகிறது. மழைக் காலத்திலே காட்சிகளை நடத்த முடியவில்லை. பனிக் காலத்திலும் காட்சிகளை நடத்த முடியவில்லை ஆகவே டூரிங் தியேட்டர்களுக்கு வரி கணக்கிடும்போது, அதனோடு திறந்த வெளி தியேட்டரையும் இணைத்திருப்பது சரியாக இருக்காது. திறந்த வெளி தியேட்டரை வைத்துக்கொண்டிருப்பவர்கள் எதிர்காலத்திலே முன்னேற முடியாமல் போகும். தமிழகத்திலே மிகக் குறைந்த அளவுக்குத்தான் திறந்த வெளி தியேட்டர்கள் இருக்கின்றன. மேலும் திறந்த வெளி தியேட்டர்கள் வரவேண்டுமென்பது அரசினுடைய நோக்கமாக இருக்கு மானால், டூரிங் தியேட்டருக்கு இருக்கிற வரியை அவர்களுக்கும் விதித்திருப்பது பொருந்தாது. ஆகவே அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நில வருமான வரியைப் பொறுத்தவரையில், அதை உயர்த்தியிருப்பது மிகப் பொருத்தம். ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர் களுக்கு எவ்வளவு வரியென்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். எட்டாயிரம் ரூபாய் வரையில் வரியில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். கடைசியாக ஐம்பதாயிரம் ரூபாய் வந்த பிறகு, வருகிற வருமானத்தில் ரூபாய்க்கு 65 காசு என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வரியை மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பெரியகுளம், மற்றும் பல பகுதிகளில் ஏலக்காய் போன்ற பயிர்களைப் பயிர் செய்கிறவர்கள் பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் பெறுகிறார்கள். ஆகவே ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகிறவர்களுக்குள்ள 65 சதவீத வரியை மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேளாண்மை வரி விதிப்பு முறையில், நெல்லைப் பொறுத்தவரையில், பெரிய மாற்றம் இல்லாமலிருப்பது பாராட்டத்தக்கதாகும். வருமானம் அதிகமாகப் பெறுபவர்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கும் முறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் நம்முடைய நாட்டிலே பழ உற்பத்தியை அதிகமாக்க வேண்டும். தலைவர் அவர்களே, தாங்கள் கூட அதிகமாக திராட்சைப் பழத்தைச் சாப்பிட வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். திராட்சை போன்ற பயிர்கள் நிறைய விளைந்து சமுதாயத்தில் இருக்கிற எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற முறையை ஏற்படுத்த வேண்டும். பழ உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்றால், பழப் பயிர்களுக்கு

அதிகமான வரியை விதிக்காத முறையைக் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் அணில் வந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பழத்தைப்பற்றி இன்று பேசுவதால் அணில் வந்திருக்கிறதென்று குறிப்பிட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தெய்விக அருளை மாண்புமிகு உறுப்பினர் நம்பியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அவையில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள மூன்று சட்டத் திருத்தங்களைப் பற்றியும் தனித்தனியாக என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

முதலில் விவசாய வருமான வரிச் சட்டத்தை எடுத்துக் கொள்ளுகிறேன். அதிலே வருமான வரிக்குக் கணக்கிடப்படுகிற நிலங்களின் தரத்தைப் பிரிப்பதில் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். வரி விதிப்பிலே முதலில் ஒரு அடிப்படைக் கொள்கையை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். மனிதன் ஒரு காலத்திலே காடுகளில், குகைகளில் வாழ்ந்தான். பிறகு தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஒரு சமுதாயம் அமைத்து, தன் உரிமைகளில் சிலவற்றை விட்டுக் கொடுத்து, உரிமைகளை அதிகாரமாக மாற்றி, வரவிலும் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்து அதை வைத்துத் தன்னைப் பாதுகாக்க ஒருவருக்கு உரிமை கொடுத்தான். பிறகு அந்த சமுதாயம் கிராமமாக மாறி, நாடாக மாறி, நாட்டாட்சியாக மாறுகிற போது, அதற்கு ஒரு வரியைக் கொடுத்து இந்த சமுதாயத்தின்மீது உள்நாட்டுத் தாக்குதலிலிருந்தும், வெளிநாட்டுத் தாக்குதலிலிருந்தும் பாதுகாக்க வரி கொடுக்கிற முறையை ஏற்படுத்தினார்கள். மக்களிடமிருந்து அரசாங்கம் வரி வாங்குவதற்கு அன்றைக்கிருந்த ஒரே தொழில் விவசாயம். அப்போதிருந்த முறை விவசாயம் ஒன்றுதான். இந்த வரி முறை வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே வந்ததாகவும், நம்முடைய சுதந்திரத்திற்குப் பின் வந்ததாகவும் சொல்ல முடியாது. வரி முறையிலே பல மாற்றங்கள் இருந்திருக்கின்றன. மனிதன் என்று ஆட்சி அமைத்துக் கொண்டானோ அன்றிலிருந்தே வரி இருந்திருக்கிறது. அப்போது மக்கள் நெல்லை வரியாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். வேறு வகையிலும் வரியைக் கொடுத்திருக்கிறார்கள். அரசுக்குத் தேவைப்படுகிறபோது, அரசுக் கட்டளை என்று ஒவ்வொருவரும் தங்களுடைய உழைப்பைக் கொடுத்திருக்

கிறார்கள். நாகரீகத்தின் அடிப்படையில் இறுதியில் ஆட்சி அமைத்த பிறகு, நில வரி ஒரு பெரிய வரியாக இருந்தது. அதன் மூலம் வருகிற வரியை வைத்துக்கொண்டு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அரசுக்கு வருகிற வரி முறைகளில் எத்தனையோ வகையான வரிகளின் மூலம் வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரசே எல்லாத் தொழில் களையும் செய்ய வேண்டிய சூழ்நிலை வந்திருப்பதால், பல்வேறு வகையில் வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. நிலவரியையும் நாம் விதிக்கிறோம், விவசாய வருமான வரியையும் விதிக்கிறோம். இப்போது நில வரித் தத்துவத்தைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெல் விவசாயம் செய்கிறவர்களுக்கு உண்மையிலேயே வருடத்திற்கு ஒரு முறை நஷ்டஈடாக உதவி கொடுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. இப் போது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் யாரும் வைத்திருக்க முடியாது. அப்படி வைத்துக் கொண்டிருந்தால் அது தப்பு. "ஜாயின்ட் ஃபாமிலியாக" இருந்தால், குடும்பங்களில் உள்ளவர்களுக்குச் சேர்த்து வருமான வரியைப் போடுகிறோம். வருமான வரியைப் போடுகிறபோது, நெல் விவசாயத்திற்கு வரியைக் கூட்டியிருக்கிறார்கள். ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு நில வரி 90 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். இதைத் தவிர பஞ்சாயத்து செஸ், வாட்டர் செஸ் என்று அடிக்கடி பலவிதமான செஸ்களைப் போடுகிறார்கள். சாதாரண விவசாயிக்கு அத்தனை வரியிலிருந்தும் விலக்குக் கொடுக்க வேண்டிய கால கட்டத்திலே இருக்கின்றபோது, சிந்தனையற்ற நிலையிலே இந்த அரசு போய்க் கொண்டிருக்கிறது.

அதிகமான நிலத்தை வைத்துக்கொண்டு வருமானம் அதிகமாகப் பெறு கிறவர்களுக்கு வரியைப் போடலாம். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் இருந்து அதன் மூலம் அதிக வருமானம் இருந்தால், வருமான வரியை விதிக்கலாம். இப்போது கொண்டு வந்திருக்கிற வருமான வரியை நான் எதிர்க்கிறேன். ஏனென்றால் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் வருமான வரியைப் போட முடியும். ஆனால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் என்று நிலத்தை வைத்துக்கொண்டு நெல் போன்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு எல்லாவிதமான வரிகளையும் ரத்து செய்யாத வரையில் வருமான வரியைப் போடுவதில் நியாயமில்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(திரு. ம. சங்ரெலிங்கம்) [1979 ஏப்ரல் 30

மக்கள் தாங்களாகவே விரும்பி தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஆட்சியை அமைத்து, அந்த ஆட்சியில் செல்வங்களாக இருக்க வரியைக் கொடுக்க அவர்களாகவே முன்வந்தார்கள் முன்பு. இப்போது வரி வசூல் செய்வதற்கு எத்தனையோ வழிவகைகள் இருக்கின்றன. பல தொழில்கள் வந்த பிறகு, சாதாரண விவசாயிகளுக்குப் போடுகிற வருமான வரியிலிருந்து முழு அளவுக்கு விலக்கு அளித்திருக்க வேண்டும். வருமான வரியை முழு அளவிற்கு ரத்து செய்திருக்க வேண்டும். அதுதான் மக்களின் நலன் கருதுகிற அரசின் இலக்கணமாக அமைய முடியும். இப்போது அப்படியல்ல. அரை ஏக்கர் வைத்திருந்தாலும்கூட ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு 90 ரூபாய் என்ற விகிதத்தில் வரி வசூலிக்கிறார்கள். அதற்கு மேல் வாட்டர் செஸ் வேறு. பேச்சிப்பாறை அணை மன்னர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டது. கட்டி 50 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னும் வாட்டர் டாக்ஸ் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். திருவிதாங்கூர் மகாராஜா 300 வருடங்களுக்கு முன்னால் கட்டிய பேச்சிப்பாறை அணைக்கு இன்னும் அங்குள்ள மக்கள் வரி

(பிற்பகல் 12-30.)

கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பெருஞ்சாணி அணை சர் சி. பி. இராமசாமி அய்யர் காலத்தில் கட்டப்பட்டது. அதற்கு வாட்டர் செஸ் கேட்கிறார்கள். மணிமுத்தாறு எப்போதோ கட்டப்பட்டது. அதற்கும் வாட்டர் செஸ் கேட்கிறார்கள். ஆகவே இந்த அரசு வரி விதித்துக் கொள்ளை அடிக்கிறது என்று சொன்னால், அது கடுமையான வார்த்தை அல்ல என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றி நாம் உன்னூர கவனத்தில் கொண்டு பார்க்க வேண்டும். சாதாரண ஏழை விவசாயிகள் மீது வரி போடுகிறார்கள். பெரிய விவசாயிகள் மீது வருமான வரி போடுவது சரி. 15 ஏக்கர் என்று இருந்தால், 10 ஏக்கர் ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் இருந்தால் வரி போடுங்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் 5 ஏக்கருக்குக் கீழே இருக்கக்கூடிய நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, நெல்லை மட்டும் உற்பத்தி செய்யக் கூடிய, இருபோகம் உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்கு வரியை ரத்து செய்யவேண்டும். அவர்களுக்கு மாதத்திற்கு அல்லது வருடத்திற்கு ஒரு ஆயிரம் ரூபாய் மான்யம் கொடுக்கக்கூடிய அளவுக்குத்தான் இருக்க வேண்டும். அவர்கள் நெல் விளைவித்து வருடந்தோறும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நெல் விளைவை நஷ்டத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை அரசு உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த விவசாயிகளுடைய வீட்டு நிலைமைகளை நாம் கவனிக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்களும் தஞ்சை மாவட்டத்திலே இருந்து வந்தவர்கள்

1979 ஏப்ரல் 30] (திரு. ம. சங்ரெலிங்கம்)

தான். தஞ்சை மாவட்டத்தில் 2, 3 ஏக்கர் நிலம் வைத்து விவசாயம் செய்து வாழ்ந்துகொண்டிருக்கக்கூடியவர்கள், நெல் விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கிறவர்கள், அவர்கள் குடும்பத்தில் இருப்பவர் ஒருவர்கூட அரசாங்கத்திலே வேலையிலே இல்லாமல் இருந்தால், அந்தக் குடும்பத்தவர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன் பிச்சைக்காரன்தான். அவனுடைய குடும்பம் இருக்கின்ற விடு பழுது பார்க்கக்கூடியதாகக்கூட இல்லாத வீடாக இருக்கும். அப்படி இருக்கின்ற அந்த வீட்டின் கதவை, தடுக்கதவையும் பிடுங்கி விற்றுக் கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய அளவில் இருக்கின்றார்கள். அந்த நிலையில் இருக்கின்ற விவசாயியைத்தான் நாம் விவசாயி, விவசாயி, விவசாயப் பெருங்குடிமக்கள் என்று இந்த நாட்டிலே சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த நாட்டிலே இப்படிச் சொல்கின்ற நிலைக்கு வந்த பிறகும்கூட, வருமானவரி என்று அவனுக்குப் போட்டுக்கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் நாம் குறைந்த நிலமுடைய விவசாயிகளுடைய நிலங்களுக்கு வரியை ரத்து செய்ய அல்லது குறைத்துக்கொடுக்க அல்லது வரியில்லாமல் ஆக்க வழி செய்ய வேண்டும். இது ஒரு 'கரோலரி'; தன்னை அறியாமலேயே எழுகின்ற ஒரு நிலைமை என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அவருடைய காலத்திலேயே அதை நிறைவேற்றி, அந்தப் பெருமை இந்தியாவிலேயே முதலில் அவர்களுக்கு வந்ததாக இருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில், இந்தக் கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு ஸ்டான்டர்ட் ஏக்கர் என்பதைப்பற்றி எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஆங்காங்கே இதில் தவறுகள் நடந்திருக்கின்றன. பெரிய கமிட்டி போய் ஊர் ஊராகச் சுற்றி, எல்லாவற்றையும் விசாரித்துக் கேட்டிருக்கிறார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நெல் விளையும் நிலம் 100 சென்ட் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர். அம்பாசமுத்திரம் தாலுகாவிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே, தஞ்சை மாவட்டத்திலே எல்லாம் நெல் விளைவிக்கும் நிலம் 100 சென்ட் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர். அதே நேரத்தில் தென்னை 2 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர். இரண்டுக்கும் என்ன வருமானம்? ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? நெல் விளையும் நிலம் நூறு செண்ட் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர். அந்த நிலத்தில் ஆண்டுக்கு இரண்டு போகம் நெல் விளைந்தாலும் ஒரு ஏக்கருக்கு வருமானம் 200 ரூபாய் இல்லை. சில இடங்களிலே நஷ்டத்திலே இருக்கிறது. ஒரு போகம் விளைந்தால், நெல் விளைவு சீராக இருந்தால், விவசாயிக்கு எந்தவிதமான பூச்சித்தாக்குதலோ மழைத் தாக்குதலோ இல்லாமலிருக்க பயிர் அறுக்கிற வரை நெல் விவசாயி

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 ஏப்ரல் 30

வயலுக்கு அடிக்கடி போய்வந்துகொண்டிருப்பான். எந்த நேரம் போனா லும் நாம் அவனை அங்கே பார்க்கலாம். விவசாயி காலையிலேயே வயலுக் குப் போய் நிலத்தை, விளைச்சலைக் கும்பிட்டுவிட்டு வருகின்ற நிலைமையில் தான் இருக்கிறான். அவன் பார்க்கும்போது அந்த விளைச்சல் நன்றாகத் தான் இருக்கும். அவன் அறுவடை செய்யும்போது, அரை மேனி, முக்கால் மேனி என்ற அளவுக்கு விளைச்சல் குறைந்துவிடும். அதற்கும் காரணங்கள் சொல்வார்கள். விவசாய இலாகாவிலே சொல்வார்கள். அதற்குக் காரணம் பூச்சி அடித்துவிட்டது. பயிருக்கு நோய் வந்துவிட்டது, அது 'இன்பெக்ஷனாக' இருக்கும் என்றெல்லாம் சொல்வார்கள். அவன் விளை விலே ஒரு நிரந்தரம் இல்லாது இருக்கும். ஆண்டுக்காண்டு ஒவ்வொரு போகத்திலும் அவர்கள் தோல்வி அடைந்து கொண்டு வருகிறார்கள். நஷ்டத்தை விவசாயத் தொழில் அவர்களுக்கு உருவாக்கிக்கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே கடற்கரைப் பகுதியிலே தென்னை விவசாயம் பண்ணுகின்ற வர்களுக்கு ஒரு ஆண்டுக்கு நிகர லாபம் கிட்டத்தட்ட ரூ. 5,000 வரைகூட கிடைக்கும். அந்த நிலம் 2 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர். இங்கு ஒரு அங்கத்தினர் புகையிலை பயிரிட்டாலும் நல்ல வருமானம் கிடைக்கிறது என்று சொல்கிறார். (குறுக்கீடு) ஒரு சாதாரண 2 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர் ஏக்கர் விஸ்தீரணம் என்று இருக்கிறது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1 :2 என்றுதான் இருக்கிறது. ஒரு ஏக்கர் இரண்டு ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொல்வார்கள். அங்கத்தினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : 1:2 என்று சொல்கிறார்கள். அப்படியானாலும் நெல்லைவிட 5 மடங்கு நிகர வருமானம் தென்னையில் இருக்கிறது. சட்டத்தை நான் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதற்கும் அமைச்சர் அவர்கள் அதை மாற்றியதற்கும் காரணம் உண்டு. இன்னொன்றை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சட்டத்தை நிறைவேற்றுகிறபோது, அந்தச் சட்டத்தை மதிப்பதில்லை. எங்களையும் மதிப்பதில்லை. நேற்று அமைச்சர் அவர்கள் இல்லாதபோது குறிப்பிட்டேன். ஆகவே, திரும்பவும் சொல் கிறேன். சட்டம் என்று சொன்னால் ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்து கின்றபோது சட்ட வரைவை உறுப்பினர்களுக்கு முன்னதாகத் தந்து, ஒரு வார காலமாவது அவகாசம் கொடுத்திருந்தால்தான், அந்தச் சட்டத்தைப் நாங்கள் படித்துப்பார்த்து பின் விவாதிக்க முடியும்.

1979 ஏப்ரல் 30]

திரு. க. இராமமூர்த்தி : அந்தச் சட்ட முன்வடிவு செலக்ட் கமிட்டிக்குப் போகவிருப்பதாகச் சொல்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ம. சங்கரலிங்கம் : செலக்ட் கமிட்டிக்குப் போவதாக இருந்தாலும் செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டையும் படித்துப்பார்க்க வேண்டும் அல்லவா ? நேற்றுக் காலையிலேதான் அங்கே பேசப்பட்டது. பழைய காலத்திலே முனிவர்களைப்பற்றி ஒரு பழமொழி சொல்வார்கள். அதை இந்த அவைக் குச் சொல்வது நல்லதல்ல. பழைய ரிப்போர்ட்டையும் செலக்ட் கமிட்டிக்குப் போனாலும்கூட படித்தாக வேண்டுமல்லவா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முனிவர்களுக்கு என்ன சிறப்பு ?

திரு. ம. சங்கரலிங்கம்: மற்றவர்களுக்கெல்லாம் 360 நாட்கள் என்றால், முனிவர்களுக்கு ஒரு நாள் என்று கணக்குச் சொல்வார்கள். இந்த அவைக்கு அதை நான் சொல்வது அவ்வளவு நல்லதாக இருக்காது என்பதால் சொல்ல விரும்பவில்லை. அந்த அவையிலே காலையிலே நிறைவேற்றி, மாலையிலேயே இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். நேற்று அந்த அவையில் நிறைவேற்றி, இன்றைக்கு இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் முழு அளவில் படிக்கா மலேயே இந்தமாதிரிச் சட்டத்தை நிறைவேற்றுவோமானால், உலகத்திலே யாராவது அவசரமாகச் சட்டம் நிறைவேற்ற வேண்டுமானால், நம்மிடம் தான் வந்து யோசனை கேட்பார்கள். ஏனென்றால் படிக்காமலேயே பேசு வோம், என்ன இருக்கிறது என்று தெரியாமலேயே பேசுவோம், அது புரியாம லேயே நாங்கள் அமைச்சர்களிடம் விளக்கம் கேட்போம். அதற்கு விளக்கம் என்ன என்று அவர்களும் சொல்வார்கள். இந்த மாதிரி பண்ணினால், மற்ற வர்கள் என்ன சொல்வார்கள்? அவர்கள் நன்றாகப் படித்து ஒழுங்காக விவா தித்து பாஸ் பண்ணியிருந்தால்தானே, நிறைவேற்றியிருந்தால்தானே, அதை உண்மையாகச் செய்திருந்தால்தானே, அது சரியாக இருக்கும். 24 சட்டங் களும் மொத்தமாக வந்திருக்கின்றன. அது என்ன சட்டம், எப்படி விவாதித்து நிறைவேற்றினார்கள் என்று எங்களுக்குத் தெரியாதா என்றுகூட கேட்பார்கள். பெரிய நிபுணர்கள் இவர்கள் என்று நினைப்பார்களா அல்லது சரியான . . . . அதற்கு எதிர்பதத்தைத்தான் நினைப்பார்கள். நான் அந்த வார்த்தையைச் சொல்ல விரும்பவில்லை.

தலைவர் அவர்களே, முதலில் சொன்னது முனிவர்களைப்பற்றிச் சொன்னது. அது உண்மையாக இருக்க முடியாது என்று எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால் அவர்கள் மத்தியிலேதான் நாமும் பிறந்து வளர்கிறோம், வாழ்ந்து வருகிறோம். இந்தச் சட்டங்களைப் பற்றி இப்போது பேசி முடித்து விட்டாலும், இனிமேல் மற்ற சட்டங்கள் வருகின்றபோதும், அறிமுகப் படுத்தப்படும்போதும், அதைப்பற்றிய விவாதத்தை எடுத்துக்கொள்வதற்கும் இடையில் ஒரு நாள் இடைவெளி இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு உள்ள சங்கடங்களை இதுகாறும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறோம். அதற்காக பொறுப்பை ஏற்றவரிடம் அடிக்கடி இந்தச் சங்கடத்தைத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். காலையிலே அந்த அவையிலே நிறைவேற்றி மாலையிலே இங்கே எடுத்துக் கொள்கிறார்கள். நேற்றுக் காலையிலே அங்கு முடிந்ததை இன்றைக்கு இங்கு கொண்டுவருவது என்று வைத்திருக்கிறார்கள். நாங்கள் இன்று ஒரு கட்சியாகத்தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. கட்சி என்ற அளவிலே அவர்கள் அதைக் கொஞ்சம் வேறு நிலைகளில் பார்க்க வேண்டும். இப்போது இந்த நிலைமைகள் இருந்தாலும்கூட உங்களைப் போன்றவர்களுடைய ஆலோசனைகளை அவர்கள் ஏற்கலாம். இப்போதும்கூட நேரமாகிவிடவில்லை. மற்ற மசோதாக்களைப் பொறுத்தவரையிலும், இன்னும் கொஞ்சம் 10 அல்லது 15 கழித்துக்கூட கூப்பிடுங்கள். நாங்கள் வருகிறோம். விவாதிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவை விதிகளின்படி நான்கு நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதைக் கடைப்பிடித்தாலும், பயன் உள்ளதாக இருக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம் : நமக்கு இரண்டுவிதமான சங்கடம். நாங்களே இதை எதிர்த்து, இந்த சபைக்கு வரக்கூடாது என்ற அளவுக்குக்கூட, நடைமுறைப்படுத்த முடியும். அதற்கு சக்தி இருக்கிறது. ஆனால் என்ன சொல்வார்கள் என்றால், "நாட்டிலே நாங்கள் பெரிய பெரிய சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றி, ஏப்ரல் 30 ஆம் தேதி நிறைவேற்றி மே மாதம் உங்கள் நன்மைக்காக தரப் புறப்பட்டோம், இவர்கள் எல்லாம் தடுத்து விட்டார்கள்" என்பார்கள். இது நன்மை அளிப்பதற்கு பதிலாகத் தீமை விளைவித்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான் சொல்கி

றோம். அப்படிக் குறை சொல்லிவிடுவார்களோ என்றுதான் அச்சப்பட வேண்டியிருக்கிறது. ஒரு கோணத்திலே இருந்து சட்டத்தைக் கொண்டு வரும்போது, நாங்கள் வேறு ஒரு கோணத்தில் எடுத்துச் சொல்வோம். இதை உங்கள் மனதிலே கொள்ளவேண்டும். உங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான் சொல்கிறோம். இனிமேல் ஒரு அமைச்சரவை ஒரு நாளைக்கு 3 சட்டத்திற்கு மேல் கொண்டு வந்து நிறைவேற்றாமல் இருக்க வேண்டும். ஒவ்வொரு சட்டத்தை அறிமுகப்படுத்துகின்றபோதும், துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், நான்கு நாளாவது அவகாசம் இருக்க வேண்டும் என்பது மரபு. எங்களை மரபு காக்க வேண்டுமென்று சொல்வதற்குப் பதிலாக, நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்துகொண்டு உங்களை மரபு காக்க வேண்டுமென்று கேட்கின்ற அவல நிலைக்கு வந்திருப்பது ஒரு பரிதாபகரமான நிலைதான்.

இந்தச் சட்டங்களை நிர்ணயம் செய்வதற்கு இந்தக் கமிட்டி பரிசிலனை செய்து தெளிவான அறிக்கை வருவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தாலும், தேவைப்படுகின்றபோது, எதெதற்கு வருவாய் கிடைக்கிறதோ அந்த வருவாய்க்கேற்ப சட்டம் கொண்டு வந்து திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், சேல்ஸ் டாக்ஸ். அந்த வரி விதிப்பைப் பொறுத்த அளவிலே, எனக்கு ரொம்ப வேடிக்கையாகத் தோன்றுகிறது. கையால் செய்யப்பட்ட நிப்பெட்டிக்கு வரி போடுகிறார்கள். அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்து, அங்கு எழுந்த எதிர்ப்பைக் கண்டு அவர்கள் வாபஸ் பெறுவதாகச் சொன்ன பிறகு, நீங்கள் அதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சேல்ஸ் டாக்ஸை வாபஸ் வாங்கினார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : சர்சார்ஜைத்தான் வாபஸ் வாங்கினார்கள். தேங்காய்க்கும் நிப்பெட்டிக்கும் போட்டிருந்தார்கள். நிப்பெட்டிக்கு வாபஸ் பெற்றதாகச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தென்னைக்குப் போட்டதைத்தான் வாபஸ் வாங்கிவிட்டார்கள். பிறகு அதைப்பற்றி அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். தென்னைக்கு ரத்து செய்து அறிவித்தார்கள். நிப்பெட்டிக்கு கவனிக்கப்படும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் எல்லாம் நிப்பெட்டிக்கு இறுதியாக விலக்கு அளிப்பார்கள் என்று நினைத்தபோது, நிப்பெட்டிக்கு சேல்ஸ் டாக்ஸை ஒரு முனை வரியாகக் கொண்டுவந்து சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். நிப்பெட்டித் தொழில் ஓரளவுக்கு கிராமப்புறங்

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 ஏப்ரல் 30

களிலே உள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்ற ஒரு நல்ல தொழிலாக பரவி வந்துகொண்டிருக்கிறது. பெரிய நிப்பெட்டி ஆலை அதிபர்கள் தங்களை பாதித்துவிட்டது என்றும், மத்திய அரசு வேறு வரி போட்டிருக்கிறது என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு கிராமங்களிலே சிறு தொழில்களாக இருக்கின்ற நிப்பெட்டித் தொழிலுக்கும், பெரிய ஆலைத் தொழிலுக்கும் வரிவிதிப்பதன் மூலம் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாக அவர்கள் சொல்லும்போது, கிராமங்களிலேயும் இப்போது நிப்பெட்டித் தொழிலுக்கு 2 சதம் வரி என்று அறிகிறேன்.

(பிற்பகல் 12-40)

அது கிராமத் தொழிலைப் பெருமளவில் பாதிக்கும். அந்தத் தொழில்களின் வளர்ச்சியில் தடைக் கல்லாக அமையும். அதனால் ஏழை மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். எனவே அதைச் செய்யக் கூடாதென்று சொல்லி, அதை மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், கேளிக்கை வரி விதிப்பிலே, திறந்தவெளி அரங்குகளுக்கு, இணைக்க முறையிலே வரி விதிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் எதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமோ அதில் அதிக கவனம் செலுத்தாமல், நாட்டு மக்களை சினிமா மோகத்திலேயே மயக்கிக்கொண்டு போக முயற்சி செய்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. பெரியார் அவர்களே, இந்த நாட்டிலே ஒழிக்க வேண்டிய பேய்களிலே ஒன்று சினிமா என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு அவருடைய நூற்றாண்டு விழாவை நடத்துகிறது. இந்த நேரத்தில் அரசு என்ன செய்கிறதென்றால், எந்த ஊரிலாவது சினிமா பார்க்காமல் இருக்கிறார்களென்றால், அந்த ஊரில் தியேட்டர் ப்ரோவைட் பண்ண வழி இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். நாட்டில், சினிமாப் படங்களின் தரம் மிகத் தாழ்ந்திருக்கிறது. எஜுகேடிவ் வேல்யு கொடுக்கும் படங்களை—கல்வி அறிவு, விஞ்ஞான அறிவு ஆகியவற்றை ஊட்டும் நிலைமையில் சினிமாப் படங்களைத் தயாரித்தால், அதைத் தமிழகத்தில் காட்டிக்கொண்டே இருக்கலாம். கட்டணம் இல்லாமலேயே காட்டலாம். மேலை நாடுகளில் இருக்கிறவர்கள்—ரஷ்யா போன்ற நாடுகளில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்படுகிறதென்றால், 16, 17, 18, 20 வயதிற்குட்பட்டவர்கள், அதாவது 16லிருந்து 20 வயதிற்குட்பட்டவர்கள் சந்திக்கிறபோது, மாணவர்களாக இருந்தாலும் சரி, தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களாக இருந்தாலும், விண்வெளியில்

1979 ஏப்ரல் 30] (திரு. ம. சங்கரலிங்கம்)

கலங்கள் எப்படிப் போகின்றன என்பதைப் பற்றிப் பேசுகிறார்கள், ஆராய்ச்சி செய்கிறார்கள். சாலையில் சந்தித்தாலும், இரயில்வே நிலையத்தில் சந்தித்தாலும், விஞ்ஞான வளர்ச்சி பற்றி அவர்கள் சிந்தனை இருக்கக்கூடிய அளவிற்கு, அங்குள்ள சினிமாத் துறையும், வானொலித் துறையும் செயல்பட்டு, அதை ஒரு இயக்கமாகவே கொண்டு வந்திருக்கிறார்கள். இல்லையென்றால், அவர்கள் விளையாட்டு வீரர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய 16 வயது மாணவர்களுக்கு சினிமா நடிகர்களின் பெயர்கள் தெரியும், சினிமா நடிகைகளைப் பற்றித் தெரியும். ஆங்காங்கே இருக்கும் வால் போஸ்டர்களைப் பார்த்து, வாய் பிளந்து நின்று, வலிமை பெற்ற சக்தியை இழந்து, தரத்தை இழந்து, தகுதியை இழந்து, எதிர்காலத்திற்கு வேண்டிய ஆற்றலை இழந்து இருக்கக்கூடிய இந்த நாட்டிலே, நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோமென்றால், அந்தத் துறையை வளர்க்கிறோம். இன்னும் கொஞ்சம் பேரைக் கெடுத்து, இளம் உள்ளங்களைக் கெடுத்து, அவர்களை சினிமா மோகத்தில் சுற்ற வைத்து, மதி மயங்கச் செய்து, அதன்மூலமாக அரசியலைக் கொஞ்ச நாள் நடத்தலாமென்று அரசு திட்டம் போட்டிருப்பதன் விளைவுதான் இந்த வரி விதிப்பு. இணைக்க முறையிலே வரி விதிப்பு செய்த பிறகு,—இப்போது நகரங்களிலும் பெர்மனன்ட் சினிமாக் கொட்டகைகள் சிறப்பாக நடக்கின்றன—அந்தத் தொழில் வளர்ந்து, அவர்களுக்குப் பல நன்மைகள் ஏற்படும். ஆகவே நாடுதோறும், வீதி தோறும் ஆலைகள் வைப்போம் என்று சொல்வதற்குப் பதிலாக வீதிதோறும் சினிமாக் கொட்டகைகள், திறந்தவெளி அரங்குகள் என்று சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். அதைப் பார்த்து இந்த நாட்டிலுள்ள சமுதாயம் போய்க்கொண்டே இருக்க வேண்டும், மக்களுக்கு அந்தத் துறையிலே பிடிப்பு என்று போகிறதோ, அன்றைக்கு நாமும் போய்விடலாம், எனவே அதுவரையில் அந்தத் துறையில் பிடிப்பை வைத்துக்கொண்டிருக்கலாமென்று நம்புகிறீர்கள். அந்தத் துறையின் மூலம் நாட்டிற்குப் பேராபத்து வர இருக்கிறதென்பதை முன்னெச்சரிக்கையாகக் கொண்டு, சினிமாக் கொட்டகைகள் சிறப்பாக நடக்க வழிவகைகள் செய்வதற்கு முன்னால் தரமான சினிமாக்கள் வர வழி வகைகளைச் செய்ய வேண்டும்.

சினிமாத் துறையில் அநாகரிகமான, ஆபாசமான படங்களையே தயாரிக்கிறார்கள். அரை நிர்வாணம் என்று சொன்னால்கூடத் தப்பு, முழு நிர்வாணப் படங்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள் . . . . முக்கால் நிர்வாணம் என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளுவார்களென்று சொல்லுகிறார்கள், அந்த அளவிற்கு இந்த நாட்டிலே சினிமாத் துறை போய்க்

கொண்டிருக்கிறது. கலித் தொகையில் ஒரு பாடல் உண்டு. அந்தப் பாடல் எனக்கு நினைவில் இல்லை. ஒரு பெண்மணி, 18 வயதிலே தன்னுடைய பருவ அழகையெல்லாம் பகிரங்கமாகக் காட்டிக்கொண்டு போகிற ஒரு காட்சியை கலித் தொகைப் புலவர் வர்ணிக்கிறார். அவளை வர்ணிக்கிற போது, அது அந்தப் பெண்மணியின் குறையும் அல்ல, அவளை பெற்றெடுத்துத் தந்தார்களே, அவளுடைய தாய் தந்தையார், அவர்களுடைய குறையுமல்ல, தெருவிலே உலாவவிட்டிருக்கிறாரே, கவிஞர்—அவர் நம்மைப் போன்றவரல்ல, இளமையான கவிஞர், முதுமையான கவிஞரல்ல, 22 வயதுக் கவிஞர், அவர் பாடுகின்றார்—எங்களுடைய கருத்துக்களெல்லாம் அழிகின்ற நிலையில் எங்களைக் கலங்க வைத்திருக்கிறார்களே, அது என்னுடைய தவறுமல்ல, இறையுடையதே தவறு, அரசின் தவறு என்று சொல்லுகிறார். ஏனென்றால், கொல்கிற யானை வரும்போது, கொல்கிற யானை வருகிறது, நீங்களெல்லாம் விலகிக் கொள்ளுங்கள் என்று சொல்லி, மணியை யானையின் கழுத்திலே கட்ட வேண்டுமென்று அரசு சட்டம் போட்டிருக்கிறது. 'கோல் களிறு நீருக்கு விட்டாங்கு'—கழுத்தில் மணியைக் கட்டி, அந்த மணியை அடிக்க வைத்து, யானை வருகிறது, அதற்கு முன்னாலே மணி ஒலி வருகிறது, ஒலியின் காரணமாக விலகிக்கொள்ளுங்கள், ஏனென்றால் அது கொல்கிற யானை, என்பதுபோல இப்படி பெண்மணி வருகிறாள், நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் என்று அரசு அறிவுறுத்தியிருக்க வேண்டும். அவளைப் பார்க்காதீர்கள் என்று தடை போட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் தெருவிலே யாரும் இல்லாதபோது அவளை அனுப்பியிருக்க வேண்டும். இது 12 நூற்றாண்டுகளுக்கு முன்னாலே, கலித் தொகையில் வரும் ஒரு பாடல். கொஞ்சம் கொஞ்சமாகச் சொன்னால் பாடல் நினைவிற்கு வந்துவிடுமென்று நினைக்கிறேன். நின்னை புறந்தாவிட்ட தாய் தந்தையர் தவறில்லை, அரசே தவறுடையது, கோல் களிறு நீருக்கு விட்டாங்கு . . . என்று பாடல் போகிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ரொம்ப நாளைக்கு முன்னால் படித்தது.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்த அரசு என்ன செய்திருக்க வேண்டும்? படங்களை நல்ல முறையில் சென்சார் செய்திருக்க வேண்டும். நல்லறிவைப் புகட்டும் படங்களை நாட்டிலே வெளியிட்டிருக்க வேண்டும். ஆடையில்லாத பெண்களை ஆட வைத்து, அதற்கேற்ற காட்சிகளை அமைத்துவிட்டு அந்த படங்களை அதிகமாகத் தயாரித்து, கிராமந்தோறும் அந்தப் படங்களை திறந்த வெளி அரங்கில் காட்ட, அரங்கு முதலாளிகளுக்குச் சலுகை கொடுத்து, இந்த நாட்டைக் கெடுக்கிறீர்களா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பிற்பகல் 1 மணிக்குள் அவையின் காலை நிகழ்ச்சிகள் முடிந்தால் நல்லது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: விரைவாக முடித்துக்கொள்கிறேன். இப்படிப் பட்ட கேளிக்கை வரிச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் தரமான சினிமாப் படங்களைக் கொண்டு வந்து, நாடகக் கொட்டகைகள், சினிமாக் கொட்டகைகள் நல்ல முறையில் நடக்கத் தேவையான சட்டத்தை பின்னால் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத்தை வன்மையாக எதிர்க்கிறேன். தீப்பெட்டிக்குப் போடுகிற 2 சதவிகித வரியின் காரணமாக, ஒரு தீப்பெட்டி 12 பைசா அளவிற்கு உயர்கிறது. அந்தச் சட்டத்தையும் பலமாக எதிர்க்கிறேன். விவசாய வருமான வரிச் சட்டத்தைக் கொண்டுவருகிற அதே நேரத்தில், அடிப்படை வரியான நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி, அமைகிறேன்.

(பிற்பகல் 12-50)

* **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர்வர்களே, இங்கே கொண்டு வந்திருக்கின்ற சட்ட முன் வடிவுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னவற்றை எல்லாம் ஒன்றாகப் பார்த்து மொத்தமாக ஒரு கணக்குப் போட்டால், எல்லோரும் இந்தச் சட்ட முன்வடிவுகளை வரவேற்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். யாருமே இந்தச் சட்ட முன்வடிவுகளை எதிர்க்கவில்லை என்கிற பொழுது, உறுப்பினர்கள் நம்முடைய நாட்டினுடைய நிலைமைகளையும் நன்றாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதிலே எனக்கு மிக்க மகிழ்ச்சி.

ஆனால் விவசாய வருமான வரி சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை, உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்: இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற பொழுது, "நாட்டிலே விவசாயப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது, தண்ணீர் தீர்வை தரமாட்டேன் என்கிறார்கள், நிலத் தீர்வை தர மாட்டேன் என்கிறார்கள், வாங்கிய கடனைத் திருப்பித் தரமாட்டேன் என்கிறார்கள். இது ஒரு நல்ல தருணமா?" என்று என்னிடத்தில் கேட்டார்கள். அவர்கள் சொல்லியவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துதான் எனக்குக் கொஞ்சம் விழிப்பு வந்தது. அவர்களுக்கெல்லாம் நன்மை

செய்ய வேண்டுமென்றுதான் இந்தச் சட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று இங்கே பேசினார்கள். நான் இதைச் சொல்கிற பொழுது, வேடிக்கையாகச் சொல்வதாகக் கருதக் கூடாது. இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் பேசும்போது, மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே நான் வேளாண்மை வருமான வரி திருத்த சட்டமுன்வடிவைக் கொண்டுவருவதற்கு முன்னால் தமிழ்நாடு பூராவும் போனேன். தமிழ்நாடு பூராவும் போகிற பொழுது இங்கே அமர்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் என்னென்ன சொன்னார்களோ, அவைகள் எல்லாம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காலையிலே 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கூட உட்கார்ந்து எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டோம். மத்தியான உணவைக்கூட சாப்பிடாமல் குறைகளைக் கேட்டுக் கொண்டிருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டினார்கள். எல்லாவற்றையும் முடித்து விட்டு வெளியே புறப்படுவேன். அப்பொழுது கூட முன் கூட்டியே சொல்லாமல் என்னைப் பார்க்க வருவார்கள். நான் என்ன செய்வது? மாண்புமிகு உறுப்பினர்களுடைய முகத்தைப் பரிதாபமாகப் பார்ப்பேன். என்னுடைய பரிதாபத்தை நினைத்துப் பார்த்து, எனக்காக உட்கார்ந்திருந்து பேசி சாதனை புரிந்தார்கள்.

இப்படி எல்லாம் சாதனை செய்து பல நூற்றுக்கணக்கான விசாரணைகள் செய்தோம். அதன் பிறகு சென்னையிலே கூடிப் பேசி இவைகள் எல்லாம் சட்ட முன்வடிவுகளாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கொண்டு வருகிறபொழுது, "அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள் மக்களுடைய நிலையைக்கருதி, அவசர அவசரமாக கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்று சொல்லும்பொழுது, மேலவையிலே நான் ஏற்கெனவே சொன்ன ஒரு தகவலை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் பட்டா வைத்துள்ள விவசாயிகள் 55,47,361 பேர் உள்ளனர். இவ்வளவு பேர்களுக்கும் இன்றைக்கு வரி போடுவதில்லை. வருமான வரி என்றால், வருமானம் உடையவர்களுக்கு வருமானத்தின் மேல்தான் போடுகிறோம். இவ்வளவு பேர் நிலம் வைத்திருக்கும்போது, நாம் வரி போடுவது 1.55 சதவிகிதத்தினருக்குத்தான். அதாவது ஒரு ஊரில் 100 பேர் இருந்தால் ஒருவருக்குத்தான் வரி போடுகிறோம். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது வரி கட்டுகின்றவர்களுடைய மொத்த எண்ணிக்கை இன்றுவரை உள்ள கணக்குப்படி 67,403. இது இன்று வரை உள்ள கணக்கு. நாளைக்கு மாறலாம். ஆனால் இன்றைக்கு

உணவு தானிய உற்பத்தியில் அவர்களுக்கு நஷ்டம் வருகிறது என்றும், விற்பனை ஆகிறபோது அவர்களுக்கு அவ்வளவு விலை கிடைக்கவில்லை என்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நெல் விளைவிக்கின்றவர்களுக்கு வருஷா வருஷம் பணம் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். ஏனென்றால் பணம் கொடுக்காவிட்டால் நெல் விளைவிக்க மாட்டார்கள். நெல் சாகுபடி செய்யாவிட்டால் உணவுப் பஞ்சம் வரும், உணவுப் பஞ்சம் வந்தால் மக்களிடையே பட்டினிச் சாவு வரும் என்று அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிடாமல் வருஷா வருஷம் நீங்கள் பணம் கொடுக்க வேண்டுமென்று ஒரு வார்த்தையிலே அதை மறைமுகமாகச் சொன்னார்கள்.

THIRU K. RAMAMOORTHY : The Hon. Minister's reply is misleading.

விவசாயிகள்பல இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்றால் சில ஆயிரம் பேர் தான் விவசாய வருமான வரி கட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்வது விவசாயிகள் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் என்றும் பணப் பயிர்கள் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் என்றும் இரண்டு விதமாக இருக்கிறார்கள். விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடுகிறவர்கள், சங்கடங்களில் இருப்பவர்கள், கடன்பட்டிருப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் வேறு நிலைகளில் வருகிறார்கள். நான் சொல்வதெல்லாம் பணப் பயிர்களைப் பயிரிடுகிறவர்களை எல்லாம் இதில் கொண்டுவரக்கூடாது என்பது தான்.

MR. DEPUTY CHAIRMAN : In view of the lateness of time, and in view of the lunch by the Hon. Chairman, I would request the hon. Members not to interrupt the reply. Aftr the Hon. Minister finishes his reply, the Hon. Member may put forth his suggestions.

திரு. க. இராமமூர்த்தி : This is an important thing. ஆகவே அதை மட்டும் நான் மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : விவசாயம் என்று வருகிற பொழுது, எல்லாவற்றையும் ஒன்றாகக் கணக்கெடுத்திருக்கிறோம். தனித் தனியாகவும் கணக்கெடுத்திருக்கிறோம். அப்படிப் பார்க்கும்போதுகூட தோட்டப் பயிர் செய்யாத மற்றவர்கள் கணக்கைப் பார்க்கும்போது, மொத்தம்

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1979 ஏப்ரல் 30

63,000 பேர்கள் தான் வரி செலுத்துகிறார்கள். தோட்டப் பயிர் செய்கிறவர்களின் எண்ணிக்கை விவசாயிகளுடைய எண்ணிக்கையான 55,47,361 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகக் குறைவு, இந்த 63 ஆயிரம் பேர்களில் இன்றைக்கு இந்தச் சட்டம் வருவதால் 100 ரூபாய், 50 ரூபாய் என்று எல்லாம் விவசாய வருமான வரி செலுத்தக் கூடியவர்கள் 20 ஆயிரம் பேர் வெளியே போய்விடுகிறார்கள். 20 ஆயிரம் பேர் வரி கொடுக்க வேண்டியதில்லை.

10 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று ஆக்கியது, 5 ஆயிரம் ரூபாய் என்று இருந்த வரம்பை 10 ஆயிரம் என்று மாற்றியதாலும். இப்படி மாற்றங்களைச் செய்ததால் உணவு உற்பத்தி செய்பவர்களில் பெரும்பாலோர் வருமான வரி செலுத்துபவர்களின் பட்டியலிலிருந்து வெளியே போய் விடுகிறார்கள். எனவே, ஏழையெளியவர்களுக்காகத்தான், அவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏழையெளியவர்களுக்குத்தான் முன்பே வரி கிடையாதே, ஆனால் அதற்கு மேல் உள்ளவர்களுக்கெல்லாம்கூட இந்த வரி இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நெல்லுக்கெல்லாம் வரி வேண்டாம் என்று சொன்னார்கள். இந்த அரசு "கொள்ளையடிக்கிறது" என்று சொன்னார்கள். கடுமையாகச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னார்கள். அவர்கள் வேண்டுமென்றே சொல்லவில்லை என்று கருதுகிறேன். வரி போடுவதற்கும் கொள்ளையடிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. வரி என்றால் வசூலிக்கப்படும் வரிக்குக் கணக்கு உண்டு. அந்த வரிப் பணம் மீண்டும் மக்களுக்காகச் செலவு செய்யப்படும். கொள்ளையடிப்பது என்பது எடுத்துக்கொண்டுபோய் விடுவது. அதற்குக் கணக்கு இருக்காது. இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதுபற்றி தமிழ் அறிந்த மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அப்படிப்பட்டதையெல்லாம் சுருட்டிக் கொண்டு போய்விடுவது கொள்ளை. எனவே, விவசாய வருமான வரி விதிப்பதை, அரசு கொள்ளையடிக்கப் பார்ப்பதாகச் சொல்வது சரியல்ல.

1979 ஏப்ரல் 30] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

கால அவகாசம் வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதைப்பற்றித் தெளிவாகப் படித்து என்னிடம் சொல்கிற பொழுது, என்ன என்ன தவறுகள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டினால், நான் அவற்றைத் திருத்திக்கொள்ள முடியும். சட்டத்தில் தவறு இருந்தால், தவறைத் திருத்திக்கொள்ள அமைச்சர் அல்லது அமைச்சரவை அல்லது அரசு தயாராக இருக்க வேண்டும், அதைத் திருத்தி தெளிவு பெற வேண்டும். எல்லாம் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. அப்படிப்பட்ட கருத்துக்கள் சுட்டிக் காட்டப்படுவதை நான் என்றைக்கும் உண்மையிலேயே மனதார வரவேற்பேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னை மரத்திற்கு இன்றைக்கு வரி அதிகம் போடப்பட்டிருக்கிறது. என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஒரு சாதாரண ஏக்கராவை ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆட்படமாட்டார்கள் என்று நினைத்தோம், ஆட்பட்டு விட்டாரோ என்று அய்யப்பட்டார்கள். ஒன்றுக்கு இரண்டு போட்டிருக்கிறேன். இது நல்லதல்ல என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இதை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி மாற்றப்பட வேண்டிய சூழ்நிலைகள் வரும்போது, எப்படி எப்படி மாற்ற வேண்டுமோ அப்படி இவைகளை மாற்ற நான் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, திராட்சையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையினுடைய நடவடிக்கை 1 மணிக்கு மேலும் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முன்பு 2, 3 ஏக்கர் திராட்சை சாகுபடி இருந்தால் வரி கொடுக்க வேண்டியிருந்தது. இனி 4 ஏக்கர் வரை போட்டால் வரி கொடுக்க வேண்டியதில்லை. ஆகவே திராட்சையைப் பொறுத்தவரை, நன்மை தான் செய்திருக்கிறோம். திராட்சைக்கு மட்டுமல்ல, எல்லா விளைபொருள்களைப் பொறுத்தவரைக்கும், நன்மை தான் செய்திருக்கிறோம். நமக்கு வரவேண்டிய வரியையும் அதிகமாக்கியிருக்கிறோம். எப்படி என்றால், மேல் மட்டத்திற்கு 55 சதவிகிதத்திற்கு மேல் வரி போடுகின்ற அதிகாரம் அரசுக்கு முன்பு இல்லாமல் இருந்தது. 55 சதவிகிதம் வரை தான் போடலாம் என்று இருந்தது. இன்றைக்கு அதை 65 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 ஏப்ரல் 30

நான் இன்னும் எவ்வளவு நேரம் பேசலாம் என்பதை மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையினுடைய நடவடிக்கை 1 மணிக்கு மேலும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டுமென்று விரும்புகின்றார்களோ அவ்வளவு நேரம் பேசலாம். ஆனால் விரைவில் பேசி முடித்துக்கொள்வது நல்லது.

(பிற்பகல் 1.00)

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன், நம்முடைய மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. சாதிக் அவர்கள்கூட 1978-79-ல் இருப்பதையே பின்பற்றுவது நல்லது என்றும் முன்பிருந்த சட்டத்தையே பின்பற்ற வேண்டும் என்றும் சொன்னார்கள். அப்படிப் பின்பற்றினால், 20 ஆயிரம் பேருக்கு விலக்கு அளிக்கும் நிலை வராது. இன்னொன்றையும் கேட்டிருக்கிறார்கள், 1978-79-க்கு வரி போடக்கூடாது என்று. அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஊடு பயிர்களுக்கு வரி போடக்கூடாது என்று சொல்கிறார்கள். ஊடு பயிர்களுக்கு வரி போடவில்லை. காப்பியைப் பொறுத்தவரையில், 50 சாதாரண எக்கர்களுக்கு வரி இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேயிலையைப் பொறுத்த வரையில் 40 எக்கர்களுக்கும், ஏலக்காயைப் பொறுத்தவரையில் 80 எக்கர்களுக்கும் இருக்கக்கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மாற்றம் செய்திருப்பது என்னவென்றால், காப்பிக்கு 50 ஆக இருந்ததை 40 எக்கர் என்று வைத்திருக்கிறோம். ஏலக்காய் 80 எக்கர் என்று இருந்ததை 40 என்றும் ரப்பர் 20 எக்கர் என்று இருந்ததை 33.3 என்றும் வைத்திருக்கிறோம். இன்றைக்கு போடப்பட்டிருக்கிற வரியும் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கிறபோது அவர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்றாலும், இன்னும் தீவிரமாக சிலவற்றை இதிலே செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அவர்கள் அப்படிச் சொல்வதற்குக் காரணம் இவைகளுக்கெல்லாம் வரியைக் குறைத்திருப்பதுதான். இவைகளுக்கெல்லாம் குறைத்திருக்கிறீர்களே, அதிகமாகப் போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நான் வரவேற்கிறேன்.

1979 ஏப்ரல் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

தீப்பெட்டியைப் பொறுத்தவரையில், தீப்பெட்டிக்கு போட்டிருக்கிற வரி சரி என்று தெரிவித்தார்கள். இப்படிப் போடுகின்ற வரியால் தீப்பெட்டித் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளிகளுக்குச் சம்பளம் குறையாது. அந்த நிலைமையில்தான் இன்றைக்கு வரிகள் போடப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இயந்திரத்தால் செய்கின்ற தீப்பெட்டி, கையால் தயாரிக்கப்படுகின்ற, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத் தயாரிக்கும் தீப்பெட்டி என்று இப்படி மூன்று விதமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும், 1966-ல் கையால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிக்கு 2½ சதவிதம் வரி இருந்தது. ஆனால், அப்போதே அதை நீக்கிவிட்டார்கள். ஆனால் கையால் செய்யப்படுகின்ற தீப்பெட்டி அன்றைக்கு எவ்வளவு செய்தார்கள் என்று பார்க்க வேண்டும். அன்றைக்கு 2.9 கோடி தான் செய்தார்கள். இன்றைக்கு 71 கோடி செய்கிறார்கள். இயந்திரத்தால் செய்யப்படும் தீப்பெட்டி 6 கோடி தான் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் தீப்பெட்டிக்கு மத்திய அரசு ஆயத் தீர்வையில் சில மாற்றங்கள் செய்திருக்கிறது. மாற்றங்கள் செய்கிறபோது, இயந்திரத்தால் செய்வதைவிட கையால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு அதிகமான சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகைகளுக்குப் பிறகு அவர்களுக்கு வரும் லாபம் அதிகமாக இருக்கிறது. கையால் செய்யப்படும் தீப்பெட்டிக்குச் சலுகை அளித்த பிறகு, ஒரு குரோஸ்க்கு முன்பு இருந்த வித்தியாசம் 1½ ரூபாய். ஆனால் இன்றைக்கு 2.70 ரூபாய் வித்தியாசம் கொடுத்திருக்கிறோம். அதற்குப் பிறகு நாம் இன்றைக்கு வரிபோட்ட பிறகும் அவர்களுக்கு லாபம் 2.40 ரூபாய் வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, கேரளாவில் இப்படிப்பட்ட தீப்பெட்டிக்கு 3 சதவிகிதம் ஒருமுனை வரி வைத்திருக்கிறார்கள். ஆந்திராவில் 4 சதவிதம் பலமுனை வரி. கர்நாடகத்தில் 4 சதவிதம் பலமுனை வரி. ஆனால் தமிழ்நாட்டில் 2 சதவிதம்தான். இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செய்யப்படுகின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு ரூ. 7.60 லாபம் வருகிறது. அந்த அளவுக்கு சட்டம் வழிவகை செய்கிறது. இவைகளையெல்லாம் பார்த்துத்தான் போட்டிருக்கிறோம். இதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வதற்குக் காரணம் ஏழையெளியவர்களுக்கு வரி போடப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொன்னதுதான். இந்த வரி விதிப்பினால் ஏழையெளியவர்கள் சங்கடப்படுகிறார்கள் என்று எந்த நேரத்திலும் இந்த அரசுக்கு உணர்த்தப்பட்டால் அந்த வரியை ரத்து செய்வதற்கு இந்த அரசு என்றைக்கும் சற்றும் தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எப்போது வேண்டுமானாலும் சரி, ஏழை

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 ஏப்ரல் 30

வெளியவர்கள், நடுத்தர மக்கள், அல்லது அவர்களுக்குக் கீழே உள்ளவர்கள் வரியால் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிந்தால், நிச்சயமாக அந்த வரியை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சினிமா தொழில்தான் வளரவேண்டும், அதற்கு மட்டும் தான் சலுகை அளிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. எல்லாத் தொழில்களும் வளர வேண்டும். எல்லாத் தொழில்களிலும் எல்லோரும் வேலை செய்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அதிலே பிழைக்கிறார்கள். பெரிய சினிமாத் தொழில் (தியேட்டர்) நடக்கின்ற இடம், சினிமா படம் பிடிக்கின்ற (ஸ்டுடியோ) இடம் இவைகளை மூடுகிறபோது, அங்கே வேலை செய்கிற ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இல்லாமல் போகிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலும் வளர வேண்டும். அந்தத் தொழில் அழிய வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. இந்தச் சட்டப்படி அரசுக்கு அதிக லாபம் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒன்று சொன்னார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் இன்றைக்கு எப்போது வேண்டுமானாலும் இவர்கள் சினிமா நடத்தலாம், காலையிலிருந்து மாலை வரை நடத்தலாம் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். காலை முதல் மாலையோ, அல்லது காட்சிக்குக் காட்சி இடைவெளியில்லாமலோ, எந்த விதமான வரையறையும் இல்லாமலோ ஒவ்வொரு நாளும் காட்சிகள் எப்படி வேண்டுமானாலும் காட்டலாம் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியிருந்தால், அது மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று இந்த அரசு உணர்ந்தால் அதைத் தடுக்க இந்த அரசு சட்டம் கொண்டு வரத் தயாராக இருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல யோசனைகளைச் சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன். சொல்லப்பட்ட அனைத்து யோசனைகளையும் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம் என்று கூறி, இதோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, கையால் செய்யப்படுகின்ற தீப்பெட்டியின் மீது விதிக்கப்படுகின்ற வரியைப் பொறுத்தவரையில், இரண்டு பெர்சென்ட் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்றாலும்கூட, 10 பைசாவுக்கு விற்ற தீப்பெட்டி இன்றைக்கு 12 பைசாவுக்கு விற்கப்படுகிறது. வரி விதிக்கப்பட்டிருக்கிற சதவிகிதத்திற்கும், வாங்குகின்ற விலைக்கும் பொருத்தம் இல்லாமல் இருக்கிறது. இந்த நிலைமையை இந்த அரசு மாற்றியமைத்து, அவர்கள் விதித்த வரிக்கேற்ப விற்பனை விலையை நிர்ணயிப்பதற்கு, அந்த விலையில்

1979 ஏப்ரல் 30]

வாங்குபவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, பணப் பயிர்களைப் பொறுத்த வரையில், பொதுவாக பணப் பயிர்களிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருகின்ற வருவாயை அரசு கணக்கெடுக்காது வருமான வரியை விதிக்கிறார்கள். அப்படியானால் பணப்பயிர் பயிரிடுபவர்களிலே எத்தனை சதவிதத்தினர் இந்த வருமான வரிச் சட்டத்திற்கு இலக்காகின்றனர்? எத்தனை பேர் இந்தச் சட்டத்திற்குள் வராமல் தப்பித்துக்கொள்கின்றனர்? இந்த நிலைமைகளையெல்லாம் அரசு ஆலோசித்து தகவல் தர இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தீப்பெட்டியைப் பொறுத்த வரையில், அப்படி யாராவது விலையை ஏற்றியிருந்தால், அரசு கவனித்து என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும். பணப் பயிர் செய்பவர்கள் எல்லாம் பெரும்பாலும் கணக்கு கொடுக்கிறார்கள். யாராவது கொடுக்காமல் இருந்தால், அவர்களைக் கண்டுபிடித்து இந்த அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கமிட்டிலே வராதவர்கள் யார் என்ற கணக்கு இல்லை. தவறு செய்பவர்கள் மீது கண்டிப்பாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். சென்ற ஆண்டு 15 லட்சம் ரூபாய் மட்டும் வருமான வரி கட்டிய இடத்திலே நாங்கள் 85 லட்சம் ரூபாய் வாங்கியிருக்கிறோம். சில இடங்களிலே வரியே கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்தும் பல லட்ச ரூபாய் வாங்கியிருக்கிறோம். இதிலே, இந்த அரசு கவனமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.10)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: எல்லாவற்றையும் ஆராய்ந்து நல்ல முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருப்பதற்கு ஆட்சேபணையில்லை. ஆனால் மானாவாரிப் பிரதேசத்திற்கும், நீர்ப்பாசன வசதி உள்ள இடத்திற்கும் ஒரேமுறை என்பது சரிதானா என்று அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மானாவாரி பிரதேசத்தில் 60, ஏக்கர் வரை பயிர் செய்தாலும் வரியில்லாத நிலை இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : ஏக்கர்தான் 60 என்று பெரிதாகச் சொல்லிக்கொள்ளலாம். ஒரு ஏக்கருக்குத் தீர்வை 50 காசு 60 காசு என்று தான் இருக்கிறது. அந்த நிலங்களில் பெரும்பாலும் விளையாமல்தான் இருக்கிறது. சும்மா இருக்கிற நிலத்திற்கு வரி போடுவது எப்படி நியாய மாகும் என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். சாதாரண பயிர் போடுகிறவர்களில் 20,000 பேர் வெளியே போகிறார்கள் என்றால், எவ்வளவு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். மானாவாரி பயிர் என்றால் கம்பு, கேழ்வரகு, சோளம், வேர்க்கடலை, எள், துவரை, உளுந்து, முசுக்கொட்டை ஆகிய வைகளைக் குறிக்கும். முதலில் 30 ஏக்கர் அல்லது 40 ஏக்கர் இருந்தால், அவர்களுக்கு வரியில்லை என்ற நிலை இருந்தது. இன்றைக்கு 60 ஏக்கர் வரை அவர்களுக்கு வரி இல்லை. எனவே முதலில் இருந்ததைவிட இப்போது சவுகர்யம் செய்து கொடுத்திருக்கிறோம்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : ஆயிரம் ஏக்கர் வரை வரியில்லை யென்றாலும் விளைந்தால்தானே? மானாவாரிப் பிரதேசம் விளையவே யில்லை என்றால், 1,000 ஏக்கர் கொடுத்துவிட்டோம் என்று சொல்லுவதிலே என்ன பிரயோசனம்?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைமுன் உள்ள **பிரச்சினை :**

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1978) பரிந்துரை செய்வதற்காக ஆய் விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1978) திருப்பியனுப்பப்பட வேண்டும்". என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1978) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய் விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 696-699 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 30

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

@ 700-703 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன்னுள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் பிற்பகல் 3 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-15)

மேலவை மீண்டும் மாலை 3 மணி அளவில் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(1) ஆளுநரிடமிருந்து செய்திகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளுவதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்—

1. 1979 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு.

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப வியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு.

(2) பேரவையிலிருந்து செய்திகள்—தொடர்ச்சி.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்:—

1. 1979 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1979).

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப வியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979).

3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1979).

4. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1979).

5. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1979).

6. 1979 ஆம் ஆண்டு மாநகரச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் சிவில் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவை, தமிழ்நாடு நீதி மன்றக் கட்டணங்கள், தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1979).

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1979) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டமன்ற பேரவை உறுப்பினர்களும் 10 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக்குழு ஒன்றை அமைப்பதற்கு 30—4—1979 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி, மேற்படி கூட்டாய்வுக் குழுவில் பணியாற்று மாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்:

1. திரு. எம். எம். ஏ. ரசாக்.
2. திரு. கே. சௌந்திரராசன் (திருச்சி தொகுதி).
3. திரு. கரூர் கு. வடிவேல்.
4. திரு. சு. பழனிசாமி.
5. திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்.
6. திரு. ஆர். சண்முகம்.
7. திரு. எம். பெரியசாமி.
8. திரு. எஸ். ஆர். இராதா.
9. திரு. செ. இராமலிங்கம்.
10. திரு. ஆ. நடராசன்.
11. திரு. துரை ராமசாமி.
12. திரு. வி. கே. கோதண்டராமன்.
13. திரு. மு. அம்பிகாபதி.
14. திரு. அ. சுவாமிதாஸ்.
15. திரு. ரா. மார்க்கபந்து.
16. திரு. கே. கந்தசாமி.
17. திரு. சேலம் மு. ஆறுமுகம்.
18. திரு. எம். ஏ. லத்தீப்.
19. திரு. இரா. தாமரைக்கனி.
20. திரு. ஏகாம்பர ரெட்டியார்.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல் கால் நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1979) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களும் 3 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதற்காக 30—4—1979 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி, மேற்படி கூட்டாய்வுக் குழுவில் பணியாற்றுமாறு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(பிற்பகல் 3.10)

7. மேலவை விதி 82-ன்படி அமைச்சரின் விளக்க உரை.

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையால் போடப்பட்ட சில சாலைகள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விதி 82-ன் கீழ் மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை கொடுப்பார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

25—4—1979 அன்று சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு உறுப்பின திரு. நா. வீராசாமி அவர்கள் நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின் மீது ப பொருள்பற்றிப் பேசும்போது நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையால் போடப் பட்ட சில சாலைகள் பற்றிய உண்மைக்குப் புறம்பான கூற்றுகளுக்கு என்னுடைய மறுப்பினையும் அதற்கான விளக்க அறிக்கையினையும் அவையின் முன் வைக்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, "சி இடங்களில் சாலைகளே போடாமல், **சாலைகள் போட்டதாகக் கணக்கு** வைத்திருந்தார்கள், குறிப்பாகச், சொல்ல வேண்டுமானால், திருநீர்மலையி லிருந்து திருமுடிவாக்கம் 25-ம் கிலோ மீட்டரிலிருந்து 29/4 கிலோ மீட்டர் வரை சாலை போட்டதாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கு சாலையே போடவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு நிதி அமைச்சர் இன்றைக்கே அதிகாரிகளை அங்கு அனுப்பிப் பார்க்கலாம். இந்த அரசாங்கப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொல்கிறது என்று தெரிவித்தவுடன் அந்த

சாலை போட்டதாக எம். டி. சுப்பிரமணியம் என்ற காண்ட்ராக்டருக்கு ரூ. 60,000க்கு பில் போட்டு பணம் கொடுத்திருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

அதற்கு என்னுடைய மறுப்பும் விளக்கமும். "இந்த சாலை 25/2 கிலோ மீட்டரிலிருந்து 27/0 கிலோ மீட்டர் வரை 33,000 ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. 28/0 கிலோ மீட்டரிலிருந்து 29/4 கிலோ மீட்டர் வரை ரூபாய் 29,000க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆக இந்த சாலைக்கு 62,000 ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இந்த இரண்டு வேலைகளுமே விண்ணப்பத்தின் பேரில் எம். டி. சுப்பிரமணியம் அவர்களுக்கு தரப்பட்டது. இந்த ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்த ஒப்பந்தத்தின் மதிப்பு ரூபாய் 56,415. 25/2 கிலோ மீட்டரிலிருந்து 27/0 கிலோ மீட்டர் வரை ஜூன் மாதம் 1978-ம் ஆண்டு வேலை ஒப்படைக்கப்பட்டது. இந்த வேலை 31—3—1979-ல் முடிக்கப்பட்டது. அளவு புத்தக எண் 1698பி-யில் வேலையின் விவரங்கள் குறிக்கப்பட்டு அளவும், தரமும் சரி பார்க்கப்பட்டிருக்கிறது. அதே வகையில் 28/0 கிலோ மீட்டரிலிருந்து 29/4 வரை இதே ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பத்தின் பேரில் ஆகஸ்ட் 1978-ல் வேலை ஒப்படைக்கப்பட்டது. வேலையின் விபரம் 1409-பி அளவு எண் புத்தகத்தில் தரப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வேலைகளுக்கும் சேர்ந்து ரூபாய் 25,295 தான் ஒப்பந்தக்காரருக்கு தரப்பட்டிருக்கிறது. ஒப்பந்தத் தொகையில் (ரூபாய் 56,415) மீதமுள்ள பணம் ஒப்பந்தக்காரருக்கு வேலைக்காக கொடுக்கப்பட்ட சாமான்களின் கிரையத்திற்காகப் பிடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரருக்கு 60,000 ரூபாய் தரப்படவில்லை. 25,295 ரூபாய்தான் தரப்பட்டுள்ளது. வேலை செய்யப்பட்டுள்ளதை காஞ்சியில் உள்ள கோட்டப் பொறியாளர் மட்டுமில்லாமல் சென்னை மேற்பார்வைப் பொறியாளரும் சென்று பார்த்து நல்ல முறையில் வேலை செய்து குறிப்பிடப் பட்ட தேதிக்குள் முடிக்கப்பட்டுள்ளதாக வெள்ள நிவாரணப் பணி தலைமை பொறியாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்து மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள், "மாங்காட்டுப் பட்டு என்ற ஊருக்கும் முகறாவாக்கம் என்ற ஊருக்கும் இடையிலே இருக்கக் கூடிய 0 கி. மீ.லிருந்து 3/8 கி.மீ. சாலையை 70 ஆயிரம் ரூபாய் செலவில் போட்டதாகச் காசோலை கொடுத்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். **ஆனால் சாலை வேலை நடக்கவில்லை** என்று அதைப் பற்றி **குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள்.**

(திரு. சி. பொன்னையன்) [1979 ஏப்ரல் 30

இதற்கு என்னுடைய மறுப்பும் விளக்கமும். "இந்த சாலையும் கிலோ மீட்டர் 0/0-2/0 வரை மதிப்பீடு 36,000 ரூபாய்க்கும் 2/0/3-8 வரை 32,000 ரூபாய்க்கும் தயாரிக்கப்பட்டது. மதிப்பீட்டின் மொத்தத் தொகையே 68,000 ரூபாய். இந்த இரண்டு வேலைகளையும் வி. தனசேகரன் என்பவருக்கு டெண்டரில் 0.1 சத விதம் குறைவு, 0.02 சத விதம் குறைவு விகிதத்தில் தரப்பட்டது. வேலை மார்ச்சு மாதம் 1978-ம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தத் தொகை ரூபாய் 61,672 வேலைகள் 31—3—1979ல் முடிக்கப்பட்டுள்ளன. வேலையின் விபரங்கள் 1447-பி, 1698-பி அளவு புத்தக எண்களில் தரப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரருக்கு முடிவாக 31,131 ரூபாய்தான் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத் தொகையில் (61,672) மீதம் வேலைக்காக தரப்பட்ட சாமான்களின் கிரயத்திற்காகப் பிடிக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் கூறியது போல் 70,000 ரூபாய் ஒப்பந்தக்காரருக்குத் தரப்படவில்லை. வேலையின் மதிப்பீடே 68,000 ரூபாய்தான்.

வேலை செய்யப்பட்டுள்ளதை காஞ்சியில் உள்ள கோட்டப் பொறியாளர் மட்டுமல்லாமல் சென்னை மேற்பார்வைப் பொறியாளரும் சென்று பார்த்து நல்ல முறையில் வேலை செய்து குறிப்பிடப்பட்ட தேதிக்குள் முடிக்கப்பட்டுள்ளதாக வெள்ள நிவாரணப்பணி தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். "கோறட்டூர்—பின்னனூர்—பெரியபாளையம் சாலை 0.0 கிலோ மீட்டரிலிருந்து 5/8 கிலோ மீட்டர் வரை சாலை போட்டதாக சொல்லி கே. சி. ஜெயபால் என்ற காண்ட்ராக்டருக்கு பில் போட்டு பணம் கொடுத்திருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார்கள்.

அதற்கும் என்னுடைய மறுப்பையும், விளக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். "இந்த சாலை கிலோ மீட்டர் 0.0-விருந்து 5.8 வரை இரண்டு பிரிவாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. கிலோ மீட்டர் 4/0விருந்து 5/8வரை மதிப்பீட்டின் தொகை ரூபாய் 40,000. இந்தப் பிரிவுதான் கே. சி. ஜெயபால் அவர்களுக்கு விண்ணப்பத்தின் பேரில் மார்ச் 1978-ம் ஆண்டு 37,642 ரூபாய் ஒப்பந்தத் தொகைக்கு வேலை தரப்பட்டது. இந்த வேலை 31—3—1979ல் முடிக்கப்பட்டுவிட்டது. வேலையின் விவரம் 1710-பி அளவுப் புத்தக எண்ணில் குறிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத் தொகை ரூபாய் 37,642-ல் வேலைக்காகக் கொடுக்கப்பட்ட சாமான்களின் கிரயத் தொகை போக 17,797 ரூபாயே கொடுக்கப்பட்டுள்ளது. வேலை நன்றாக முடிக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு பணம் முடிவாகத் தரப்பட்டது.

1979 ஏப்ரல் 30] (திரு. சி. பொன்னையன்)

எல்லா வேலையும் செய்யப்பட்டுள்ளதை காஞ்சியில் உள்ள கோட்டப் பொறியாளர் மட்டுமில்லாமல் சென்னை மேற்பார்வைப் பொறியாளரும் சென்று பார்த்து நல்ல முறையில் வேலை செய்து குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்கப்பட்டுள்ளதாக வெள்ள நிவாரணப் பணி தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கூறப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை. அவை முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(3) சதாசிவம் கமிஷன் அறிக்கை குறித்து.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அவையிலே விவாதத்திற்கு, அரசு தரப்பிலே இறுதி முடிவெடுப்பதற்காக இங்கே திரு. ஆர். சதாசிவம் கமிஷன் அறிக்கை இன்றைக்கு வந்திருக்கிறது. அதில் பல விஷயங்கள், தகவல்கள், சிபாரிசுகள் எல்லாம் வந்திருக்கின்றன. இந்த அறிக்கை இன்றைக்குத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை பற்றிய விவாதத்தை இன்னொரு நாள் வைத்துக்கொள்வதா அல்லது நாளையே தொடர்ந்து விவாதிக்கின்ற அளவுக்கு வைத்துக்கொள்ள முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதுபோல பல அறிக்கைகள், போலீஸ் கமிஷன் அறிக்கைகள் கூட வந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின்மீது விவாதம் நடத்தித்தான் ஆகவேண்டுமென்பதில்லை. அப்படி விவாதிக்கவேண்டுமென்று சொன்னால், அரசினுடைய நிலையையும் அறிந்து இதற்கு அடுத்த கூட்டம் வரும்போது அரசு அதனுடைய கருத்தைத் தெரிவிக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : அறிக்கையை அவையில் வைத்திருக்கிறார்கள். முக்கியமாக இருக்கின்ற காரணத்தினாலே, இந்தக் கோரிக்கையை ஏற்றால், அதிலுள்ள குறைகளைப் பற்றிய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு இடம் இருக்கும். இப்போது இடமில்லாமல் இருக்கிறது. அதில் பல தகவல்கள் இருக்கின்றன. அதைப்பற்றிப் பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அரசு கவனிப்பதாக இருந்தால், அதை எடுத்துக்கொள்ள முயற்சிக்கலாம்.

(பிற்பகல் 3-20)

6. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(7) 1979 ஆம் ஆண்டு, சென்னை பல்கலைக் கழக, மதுரை காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1979.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவையும், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவையும் சேர்த்து, ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். பிறகு தனித் தனியாக நிறைவேற்றலாம். பேசுகின்ற உறுப்பினர்கள் இரண்டு சட்ட முன்வடிவுகளின்மீதும் பேசுவதற்கு அனுமதிக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, சென்னை பல்கலைக் கழக மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இந்த நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பொதுக் கல்வி மற்றும் தொழிற் கல்வி போன்று மருத்துவக் கல்வியும் இம்மாநிலத்தில் நீண்டு நிலைத்த பாரம்பரியம் பெற்றிருப்பதால், மருத்துவக் கல்வி இயக்குநரை, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகங்களின் ஆட்சி மன்றம், பேரவை மற்றும் கல்விக் குழுவில் துறைச் சார்ந்த நிரந்தர அங்கத்தினராக நியமிக்கக் கருதி, சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் பிரிவுகள் 14, 18, 23-க்கும் மதுரை—காமராசர் பல்கலைக் கழகச் சட்டத்தின் பிரிவுகள் 15, 19, 24-க்கும் திருத்தங்கள் இச்சட்ட முன்வடிவில் இடம் பெற்றுள்ளன.

தவிரவும் மதுரை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராயச் செம்மல்களில் பதின்மரை அப்பல்கலைக் கழகத்தின் கல்விக் குழுவின் ஆயுட்கால அங்கத்தினர்களாக நியமிக்க வழிவகை செய்யும் பொருட்டு இப் பல்கலைக் கழகச் சட்டத்தின் விதி 24-க்கும் உரிய திருத்தம் இந்தச் சட்ட முன்வடிவில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கூறிய இந்தத் திருத்தங்களை நிறைவேற்றி, சட்ட முன்வடிவை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 704-706 ஆம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, சென்னை பல்கலைக் கழக மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத் திருத்தங்கள் பற்றிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவில், 'மாநிலச் சட்டப் பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரும், மாநிலச் சட்ட மேலவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரும்' என்றிருக்கிறது. ஆனால் சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்களுக்கு இரண்டு அவைகளிலிருந்தும் நால்வர் செல்கிறார்கள். அதேபோன்று தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கும் பேரவையிலிருந்து இருவரும், மேலவையிலிருந்து இருவரும், தேர்ந்தெடுக்கப்பட்டுச் செல்கிற அளவிற்கு, திருத்தங்களைச் செய்யுமாறு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு குறித்த இணைப்பில், 'உயர்கல்வி இயக்குநர்' என்று போடப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில், 'Hhigher Education' என்று போட்டிருக்கிறார்கள். அதாவது, ஆங்கிலத்தில் 'Director of Higher Education' என்றிருக்கிறது. தமிழில் 'உயர் கல்வி இயக்குநர்' என்று போட்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது சந்தேகம் வருகிறது. உயர் கல்வி இயக்குநர் என்று ஒரு பதவி இல்லை. 'கல்லூரிக் கல்வி இயக்குநர்' என்று அதை மாற்ற வேண்டும். சட்டப் பிரச்சினைகள் வராவிட்டால் பரவாயில்லை. சட்டப் பிரச்சினைகள் வருமென்றால், 'கல்லூரிக் கல்வி இயக்குநர்' என்று இருப்பது நல்லதென்ற கருத்தையும் கல்வி அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகங்களை ஒட்டிய திருத்தச் சட்ட முன்வடிவாக இருப்பதால், இதில் சில முக்கிய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒரு தகவலைக் கொண்டு வருவது நல்லதென்று நான் நினைக்கிறேன். நம்முடைய தமிழகக் கல்வித் துறை பெருமைதிக்குப் புகழ் பெற்றது. அமைச்சரவர்கள் பத்திரிகைகள் மூலமாக

ஒரு செய்தியை அறிந்திருப்பார்கள். மாணவர்கள் காப்பி அடித்ததை பேராசிரியர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். பிறகு அவர் வெளியிலே வரும் போது, அவர் கத்திக் குத்துக்கு ஆளாகியிருக்கிறார். இது விரும்பத்தக்கதல்ல. இதை வளரவிடக் கூடாது. இப்படிப்பட்ட துர்பாக்கியமான சம்பவங்கள், விரும்பத்தகாத சம்பவங்கள் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்றிருக்கின்றன. அதை நாம் கண்டித்து வருகிறோம். தமிழ் நாட்டிலே இதுதான் முதல் தடவை என்று நினைக்கிறேன். எனவே இதை நாம் அனைவரும் சேர்ந்து கண்டிக்க வேண்டும். அதே சமயத்தில் இவ்வாறு நிகழ்ச்சிகள் நடைபெறக் காரணம் என்ன என்பதை பல்கலைக் கழகம் ஆராய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'சட்ட முன்வடிவிற்கும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பல்கலைக் கழகத்திற்குத் தொடர்புடையதால், மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாணவர்களுக்கான தேர்வு முறையிலே மாற்றம் செய்வது அவசியம். அயல் நாடுகளிலே ஆய்வு அறிக்கை கொடுப்பது, கட்டுரைகள் எழுதுவது போன்ற நிலைமைகளை அதிகப்படுத்தி, மனப்பாடங்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்காமல் தேர்வுப் பளுவைக் குறைக்கிறார்கள். இங்கே நாம் மனப்பாடத்திற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினரவர்கள், சட்ட முன்வடிவிற்குச் சம்பந்தமில்லாமல் பேசுகிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பல்கலைக் கழகத்திற்குத் தொடர்புடையதாக இருப்பதால் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அப்படிப் பார்த்தால், எல்லாம்தான் தொடர்புடையது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி, நான் முடித்துக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை, இந்த நேரத்திலே, சட்ட முன்வடிவின்மீது சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்னதுபோல, 'Higher Education' என்பதை Collegiat Education என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத் திருத்தங்கள் அனைத்தையும் வரவேற்று, இரண்டு மூன்று கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்திலும், மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்திலுமுள்ள செனட் சபையில், டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் அவர்களை அங்கத்தினராகப் போடுவது மிகமிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக நீண்ட காலமாக நானே அதைச் சொல்லிக்கொண்டு வந்தேன். அந்த முறையில் அவர்கள் அங்கத்தினராக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சின்டிகேட்டிலும் உறுப்பினராக, எக்ஸ்-அபிஷியோ மெம்பராக இருப்பார்களென்று கருதுகிறேன். அதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'டைரக்டர் ஆஃப் ஹையர் எஜுகேஷன்' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிற காரணத்தாலே, 'ஹையர் எஜுகேஷன்' என்பது 'ஹையர் செகண்டரி எஜுகேஷன்' என்று இப்போது வந்துவிட்டதால்—'கலிஜியேட் எஜுகேஷன்' என்று மாற்ற வேண்டிய நிலைமை வரும். 'ஹையர் செகண்டரி எஜுகேஷன்' பொறுத்து ஒரு டைரக்டர் வந்தால், அவரும்கூட பல்கலைக் கழகங்களில் அங்கம் வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் 10 தமிழ் அறிஞர்களை வாழ்நாள் முழுவதும் உறுப்பினர்களாக இருக்கத்தக்க முறையில், ஓர் அறிவிப்பை சேன்சலர் அவர்கள் செய்திருக்கிறார்கள். தலைவரவர்களே அதை அறிவார்கள். நாம் இருக்கிற பிரதேசத்திலுள்ள சென்னைப் பல்கலைக் கழகமும் அது போன்ற ஒன்றை ஏற்படுத்திக்கொள்வது மிக்க நன்மையாக முடியும். காரணம், சென்னைப் பல்கலைக் கழகம் ஏதோ தமிழிலே அக்கறை கொள்ளவில்லை என்ற கருத்து தொனிக்கும். மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு முதலிலே அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. உலகத் தமிழ் மாநாடு நடைபெற இருக்கும் இந்தச் சூழ்நிலையில் அதைச் செய்திருப்பது மிக்க பாராட்டத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உலகத் தமிழ் மாநாட்டை முதலிலேயே நடத்தி முடித்த சென்னைப் பிரதேசத்திலுள்ள பல்கலைக் கழகத்திலும், தமிழ் அறிஞர்கள் பதின்மரை 'லைஃப் மெம்பர்கள்' ஆக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, பாவலானதொரு சென்னை, மதுரை-காமராசர் பல்கலைக் கழக சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதாக வாக்கு அளித்திருக்கிறோம். அடுத்த முறை சபை கூடும்போது, சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத் திருத்தங்களை முழுமையாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப்

(திரு. க. அறிவழகன்) [1979 ஏப்ரல் 30

பல்கலைக் கழக செனட்டுக்கு உறுப்பினர்களை நாம் இங்கேயிருந்து தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். அதேபோன்று சென்னை, மதுரை, பல்கலைக் கழக செனட்டுக்கும் உறுப்பினர்கள் இரண்டு பேரை அனுப்பும் முறையைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத் திருத்தங்களை வரவேற்று, ஒருசில கருத்துக் களைச் சொல்ல விழைகிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்தில் 10 தமிழ் அறிஞர்களை செனட் உறுப்பினர்களாக்கியது கண்டு, கல்வி அமைச்சரவர் களுக்கு தமிழ் மீதுள்ள காதலை அறிந்து, அவரைப் பாராட்டுகிறேன். அதோடு, எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் மாணவர்களுடைய பிரதிநிதிகள், ஆசிரியர்களின் பிரதிநிதிகள் இருக்கின்ற நிலையை உருவாக்கிவிட்டால், மாணவர்கள் வினாகத் சுற்றும் நிலை ஏற்படாதென்று தெரிவித்துக்கொள் கிறேன். மேலும், அதனால் சுமுகமான சூழ்நிலை ஏற்படுமென்றும் சொல்லி, அதற்கும் எதிர்காலத்தில் வழிவகை காண வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மசோதாவின்மீது ஒரேயொரு கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய செனட், சிண்டிகேட், அகடமிக் கவுன்சில் மூன்றிலும் டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் பங்கு பெறும் அளவிற்கு சட்டத் திருத்தம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், செனட்டுக்கு உறுப்பினர்களை நாம் அனுப்பிக் கொண்டிருக்கிறோமேயொழிய, பல்கலைக் கழகத்தின் செனெட் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாத வகையிலேதான் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த அவைக்கு இங்கேயிருந்து அங்கத்தினர் களை அனுப்புகிறோம். ஆனால், பல்கலைக் கழகத்தினுடைய செனட், நிர்வாகத்தையோ, பல்கலைக் கழகத்தினுடைய ஆராய்ச்சியாளர்கள் செய்கின்ற பணியைக் கண்காணிக்கும் பணியையோ ஏற்க முடியவில்லை. இன்னமும்

(பிற்பகல் 3.30)

சொல்லப்போனால், சென்னைப் பல்கலைக் கழகம் குறிப்பாக இந்த இரண்டு பல்கலைக் கழகங்களும் அதிகமான ஆராய்ச்சியாளர்களை, அறிஞர்களை ஈடுபடுத்த முடியவில்லை என்கின்ற ஒரு நிலை உருவாகியிருக்கிறது. இங்கே யிருந்து அயல் நாடுகளுக்குச் செல்கின்ற நம்முடைய பிரதிநிதிகள் மற்றும்

1979 ஏப்ரல் 30] (திரு. க. இராமமூர்த்தி)

பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகளாகச் செல்கின்றவர்களின் எண்ணிக்கைகூட இன்றையதினம் குறைந்துகொண்டே வருகிறது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாம் மற்ற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களோடு போட்டியிடுகின்ற அளவிலே அமையவில்லை. அவற்றின் தரம் கூட குறைந்துகொண்டே வருகிறது. இன்றைய செனட் அமைப்பு இயங்க முடியாத, கட்டுப்படுத்த முடியாத, விமர்சிக்க முடியாத, ஆலோசனைகளை ஏற்க முடியாத அமைப்பாக இருக்கிறது. இதுபோன்ற நிலை நல்ல நிலையல்ல. இதுபோன்ற அமைப்பு களுக்கு நம்முடைய உறுப்பினர்களை அனுப்ப வேண்டும், அல்லது பிரதிநிதிகள் இருக்க வேண்டும் அல்லது அரசினுடைய பிரதிநிதிகள் இருக்க வேண்டும். நம்முடைய பிரதிநிதிகள் அங்கே முழுமையாகச் செயல்படக்கூடிய அளவில் பல்கலைக் கழகங்களுடைய சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம், கட்டாயம் இருக்கிறது என்பதை இந்த அவையின் பிரதிநிதி என்ற முறையில், நானும் அங்கு சென்றவன் என்ற முறையில், இந்த நேரத்தில் இந்த அவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலுள்ள மற்ற திருத்தங்கள் எல்லாம் தேவை என்ற அளவில் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளுக்கும் என்னுடைய ஆதரவைத் தருகிறேன் என்று கூறி அமை கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, அவைமுன் வைக்கப் பட்டுள்ள சென்னை பல்கலைக் கழக, மதுரை-காமராசர் பல்கலைக் கழக திருத்த சட்ட முன்வடிவு மீதும், பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பவியல் பல்கலைக் கழக திருத்த சட்ட முன்வடிவு மீதும் எனது இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு, பேரவைக் குழு, கல்விக் குழு இந்த மூன்றிலும் மருத்துவக் கல்வி இயக்குநர் இடம் பெறுகின்ற வகையில் முதல் மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய பல்கலைக் கழகத்தின் பல்வேறு அமைப்புகளிலும் எல்லாத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்களும் இருக்க வேண்டியது மிக மிக இன்றியமையாதது.

மதுரைப் பல்கலைக் கழகம் தோன்றியது 1965-ல் என்று நினைக்கிறேன். அது தோன்றி 14 வருடங்கள் ஆகின்றன. 14 வருடங்களாகத் தொடர்ந்து நல்ல பணிபுரிந்து அந்த வட்டாரத்திலே கல்வியை நல்லமுறையில் பரப்பி வருகின்றது. அதனுடைய ஆட்சிக் குழுவிலே நான் 6 ஆண்டு காலம் இருந்த அனுபவத்தையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். தொழில் நுட்பக் கல்வி சம்பந்தப்பட்ட அனைத்து வல்லுநர்களும் பல்கலைக் கழகங் களினுடைய அமைப்புகளிலே இடம் பெற்றால் தான், அந்தப் பகுதியிலே தொழில்நுட்பக் கல்வி நன்றாக வளர வாய்ப்பு ஏற்படும்.

இப்பொழுது வேளாண்மைப் பல்கலைக் கழகம் தமிழகம் முழுவதற்கும் ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. அது நல்ல முறையில் சிறப்பாகச் செயல் பட்டு வருகிறது.

மருத்துவக் கல்விக்கென்று தனி பல்கலைக் கழகம் இல்லை. எனவே ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் எல்லைக்குள்ளும் அமைந்திருக்கின்ற மருத்துவக் கல்லூரிகளின் நிபுணர்களும் பல்கலைக் கழக அமைப்புகளில் இடம் பெறுவது அவசியம் தேவை. மருத்துவக் கல்லூரி எந்தெந்த பல்கலைக் கழக எல்லைக்குள் வருகிறதோ அங்கெல்லாம் மருத்துவக் கல்வி இயக்குநர் இருப்பது இன்றியமையாதது.

நமது திருநெல்வேலி சித்த வைத்தியக் கல்லூரியில் ஒரு சீர்திருத்தம் கொண்டுவர அதனுடைய ஆட்சிக் குழு உறுப்பினர் என்ற முறையில் முயன்றேன். நான் உறுப்பினராக இருந்தபோது, தொழில்நுட்ப வல்லுநர்கள் அங்கு இல்லாததால், நான் கொண்டுவந்த சீர்திருத்தம் வெற்றி பெற முடிய வில்லை. சித்த வைத்தியக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்க குறைந்தபட்ச கல்வித் தகுதி புகுமுக வகுப்பில் தமிழ் சிறப்புப் பாடமெடுத்து வெற்றி பெற்றிருக்க வேண்டுமென்று இருக்கிறது. சித்த வைத்தியக் கல்லூரிக்கு மாணவர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதி இதுதான்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் டைரக்டர் ஆப் சித்த வைத்தியம் என்று இருக்கிறாரே அவரை எக்ஸ்-அபிசியோ என்ற முறையில் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் உறுப்பினராக ஆக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அதைத் தான் சொல்ல வருகிறேன். எல்லா தொழில்நுட்ப கல்வித் தலைவர்களும், கல்விக் குழு, பேரவைக் குழு போன்ற குழுக்களிலே இடம் பெற வேண்டும். மருத்துவக் கல்வியைப் பொறுத்தமட்டில், மருத்துவக் கல்லூரிகளின் முதல்வர்கள் அக்காடமிக் கவுன்சிலில் இடம் பெற்றிருக்கிறார்கள். மருத்துவக் கல்வி முதல்வர்களைப்போல், சித்தா வைத்தியக் கல்லூரிகளின் முதல்வர்களும் 3 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் செனட் மற்றும் அக்காடமிக் கவுன்சிலில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஆட்சிக் குழுவில் இடம் பெறவில்லை. அதனால் நடந்த ஒரு சிக்கலை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

சித்தா வகுப்பில் சேர வேண்டுமென்றால் மாணவர்கள் புகுமுக வகுப்பில் தமிழ் சிறப்புப் பாடம் எடுத்து வெற்றி பெற்றிருக்க வேண்டும். பயாலஜி படித்திருக்க வேண்டாம். புதிய கல்வித் திட்டத்தை எடுத்துக் கொண்டால், 10-வது வகுப்பு வரை விஞ்ஞானத்தை எடுத்துப் படிக்காமல் பொருளாதாரம், வரலாறு போன்றவற்றை ஹையர் செகண்டரி வகுப்பில் எடுத்துப் படித்திருந் தால், இடம் கிடைக்கும். ஆனால், நியாயமாக பயாலஜி எடுத்துப் படித் திருந்தால் தான், இடம் கொடுத்திருக்க வேண்டும். 'பிளட் சர்குலேஷன்' எல்லாம், 'பயாலஜி' எடுத்துப் படித்திருந்தால்தான், தெரிய வாய்ப்பு உண்டு. எகானாமிக்ஸ், வரலாறு போன்ற பாடங்களை எடுத்துப் படித்து விட்டு, விஞ்ஞான ரீதியான பாடங்களைப் படிக்காமல் இருப்பவர்களுக்கும், தமிழ் சிறப்புப் பாடத்தைப் படித்திருப்பவர்களுக்கும் மட்டும்தான் இடம் கிடைக்கும் என்று வழிவகை செய்திருக்கிறார்கள்.

நான் ஆட்சிக் குழுவில் இடம் பெற்றிருந்தபோது, தனியாக ஒரு தீர்மானம் கொண்டுவந்து, புகுமுக வகுப்பில் பயாலஜி, அதாவது மனிதயியல் படித்தவர் களுக்குத்தான், தமிழ் வழி பயின்றவர்களுக்குத்தான் சிறப்பாக இடம் தர வேண்டுமென்று கேட்டு வந்தேன். பொருளாதாரம், வரலாறு போன்ற ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் ஒரு போர்டு இருப்பது மாதிரி சித்த வைத்தியக் கல்லூரியிலும் அக்காடமிக கவுன்சில் மற்றும் போர்டு இருக்கிறது. என்னுடைய தீர்மானம் சித்த வைத்திய அகடமிக் கவுன்சிலுக்கு வந்த பின், போர்டுக்கு வந்தது. அந்த போர்டுக்கு அது வந்தபோது அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். உண்மையில் மருத்துவக் கல்வி இயக்குநர் அதில் இடம் பெற்றிருந்தால், என்னுடைய வேண்டுகோளை, தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருப்பார்கள். தமிழில் படித்திருக்க வேண்டு மென்று வைத்திருக்கிறார்கள். பழைய சித்தர் பாடங்களைப் படிக்க தமிழ் வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

எம்.பி.பி.எஸ்.-ஐ எடுத்துக்கொண்டால், முதலாவது ஆண்டு அவர்களுக்கு ஆங்கிலம் தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதேமாதிரி சித்தா கல்லூரியிலும் மனிதவியல் படித்திருப்பவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தமிழை

முதலாண்டு கற்றுக் கொடுக்கலாம். விஞ்ஞான ரீதியாக பயாலஜி தெரியாதவர்களை அங்கே சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போதும் அப்படித்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் பல்கலைக் கழக அமைப்பில் ஒவ்வொரு தொழில் நுணுக்க வல்லுநரும் இடம் பெறாதது தான் என்பது என்னுடைய கருத்து. இப்பொழுது மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களை இடம் பெறச் செய்து இதை நடைமுறைக்குக் கொண்டு வந்ததற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஒவ்வொரு தொழில் பிரிவிலே உள்ள வல்லுநர்களும் பல்கலைக் கழக அமைப்புகளில் இடம் பெறுமாறு வழிவகை செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வர வேண்டும். சித்தா வைத்தியக் கல்லூரி இயக்குநரும் அதில் இடம் பெற வேண்டும். வேளாண்மை இயக்குநர் அவர்களும் அதில் இடம் பெறலாம். பல்கலைக் கழக எல்லைக்குள் இருக்கின்ற தொழில்நுட்பக் கல்லூரிகளின் வல்லுநர்கள் எல்லாம் பல்கலைக் கழக அமைப்புகளில் இடம் பெற வேண்டும். அப்படிச் செய்தால் **தான், தொழில் நுட்பக்** கல்வி வளர வாய்ப்பு உண்டாகும்.

பாடத் திட்டங்களில் நாம் பெரிய மாற்றங்களைச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். புதிய பாடத் திட்டங்களை அமுல்படுத்தவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் யார் யாரைச் சேர்க்க வேண்டுமோ அவர்களையெல்லாம் சேர்த்து, தனியாக ஒரு குழுவை அமைத்து, புதிய பாடத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டியிருக்கிறது.

தொழில் நுட்பக் கல்வியில் ஒரு சீர்திருத்தம் செய்வது பற்றியும், அதன் நடைமுறையை வைத்து என்னென்ன திருத்தங்கள் முழுமையாகத் தேவையோ அவற்றையெல்லாம் கூட கொண்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தினுடைய எல்லை இன்றைக்கு சென்னையோடு நின்று கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கிண்டி பொறியியல் கல்லூரி, குரோம்பேட்டை எம்.ஐ.டி. இவைகள் எல்லாம்தான் அதிலே இடம் பெற்றிருக்கின்றன. தமிழகத்திலே இருக்கிற எல்லாப் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்ஸ், தொழில் நுட்பக் கல்லூரிகள் அத்தனையும் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக எல்லைக்குள் கொண்டு வரப்பட வேண்டும். அதே நேரத்திலே அவைகளிலே அட்டானமஸ் கல்லூரி என்று சொல்கிற தனித் தன்மையும் ஏற்பட வேண்டும்.

பிற நாடுகளில் தொழில் நுட்பக் கல்வியைப் பொறுத்தமட்டில், ஒரே டைப் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் அவர்களால் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை. எப்போதும் அதற்குத் தேவையும் இல்லை. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ஏற்பாடு செய்து, பாடத் திட்டங்களை காலத்திற்கேற்ப மாற்றிவிடுகிறார்கள். அதைப்போல நாமும் செய்யலாம்.

இன்றைக்கு டூரிசம் கோர்ஸ் என்று கற்றுக்கொடுக்கிறார்கள். இரண்டு பேச் கற்றுக் கொடுப்பதோடு அது நின்று விடுகிறது. டூரிசம் டிப்பார்ட்மெண்டில் அவர்களை பயிற்சி முடித்த உடன் 'அப்சார்ப்' பண்ணுகிறார்கள் அல்லது பெரிய பெரிய நட்சத்திர ஓட்டல்களில் அவர்களை 'அப்சாரப்' பண்ணுகிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளுக்கு 300 பேர் தேவை என்றால், 400 பேரைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து உற்பத்தி செய்தால் போதும், அதற்காக 4,000 பேரை உற்பத்தி செய்தால், அவர்களும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதிக்குள்ளாகி "ராக்கெட்டில்" போய் வேலை தேடக் கூடிய அவல நிலைக்கு உள்ளாகக் கூடாது.

அதுபோல ஸ்ட்ரக்சுரல் என்சினியரிங் என்று எடுத்துக்கொண்டால், அதிலேயும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பழைய முறைப்படி கட்டை வண்டியில் பொருள்களை ஏற்றிக்கொண்டு செல்கிற ஒரு முறையில் தான் இன்றைக்கும் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஒருவிதமான

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 3.40)

மாற்றமும் சாதாரண மக்கள் மத்தியிலே, விவசாயிகள் மத்தியிலே வரவில்லை. மாற்றங்கள் எல்லாம் சுகபோகங்களிலேதான் வந்திருக்கிறது. உற்பத்தி செய்கின்ற முறைகளிலே மாற்றங்கள் வரவில்லை. அதுபோல பல்கலைக் கழகங்களை எடுத்துக்கொண்டால், உதாரணமாக, சென்னையில் இருக்கும் அறிஞர் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு மிகப் பெரிய பொறுப்பு, கடமை இருக்கிறது. ஏதோ இரண்டு மூன்று என்ஜினியரிங் கல்லூரிகளை நிறுவுவது மாத்திரமல்ல நமது கடமை. தமிழகம் முழுவதும் தொழில் நுட்பக் கல்லூரிகளைப் பரப்பி, அந்தந்த வட்டாரத்திற்குத் தேவையான தொழில்களை, பாடத் திட்டங்களை வகுத்து, அவர்கள் அங்கேயே கற்றுக்கொடுத்து, பட்டம் கொடுக்கிற முறையில் அட்டானமஸ் கல்லூரிகள் தோன்றியாக வேண்டும்.

இப்போது நாம் சொன்னப் பல்கலைக் கழகத்தின் சென்டினெரி விழா கொண்டாடியிருக்கிறோம் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமையான பாடத் திட்டங்களைத்தான் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த 'ஃபேக்கல்டி' தான் இப்போதும் இருக்கிறது. ஹிஸ்டரி, பாலிடிக்ஸ் இவைகளை எடுத்துக்கொண்டால், இப்போதுதான் மாடர்ன் கவர்ன்மென்ட்ஸ், கம்பேரேட்டிவ் ஸ்டடீஸ் என்றெல்லாம் மாறியிருக்கிறது. ஆகவே, எவ்வளவோ பெரிய மாற்றங்கள் எல்லாம் வரக்கூடிய அளவுக்கு இப்போது இருக்கின்ற கல்லூரிகளானாலும், அல்லது வரக்கூடிய புதிய கல்லூரிகளானாலும், இதனுடைய எல்லையைப் பரப்பி, கல்வியின் தரத்தையும் பரப்பி, அது மதுரையிலே இருக்கின்ற எஞ்ஜினியரிங் கல்லூரியானாலும், அல்லது திருச்சியிலே 'பெல்' பகுதியில் இருக்கின்ற கல்லூரியானாலும், அந்தக் கல்லூரிகளை ஒரு ஆட்டானமஸ் அந்தஸ்துள்ள கல்லூரிகளாக மாற்றி, புதிய பாடத் திட்டத்தின்படி புதிய எஞ்சினியரிங் கல்லூரிகளைக் கொண்டு வரும் நோக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து தேவையான திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய தொழில் நுட்பக் கல்லூரி சீர்திருத்த மசோதாவிலே கொண்டு வந்திருக்கக்கூடிய தொழில் நுட்பக் கல்லூரி சீர்திருத்த மசோதாவிலே வெறும் அட்மினிஸ்ட்ரேஷன் சைடிலேதான் கொஞ்சம் மாற்றம் கொண்டு வந்திருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே இருந்து இந்த நாடும் மக்களும் எதிர்பார்க்கின்ற நல்ல நிலைமைகளை ஏற்படுத்த, இன்னும் விரிவான ஒரு மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது கருத்து தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் சில நல்ல யோசனைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் ஆட்சி மன்றக் குழுவில் எம்.எல்.ஏக்களும், எம்.எல்.சிக்களும் வேண்டும் என்ற கருத்தினைச் சொன்னார்கள். விவசாயப் பல்கலைக் கழகத்திலே அப்படி வைத்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் பல்கலைக் கழகத்திலேயும் அப்படி வைத்திருக்கிறோம். ஆனால் இரண்டு பல்கலைக்

கழகத்திலேயும் செனட் இல்லை. சென்னை பல்கலைக் கழகத்திலேயும், மதுரை பல்கலைக் கழகத்திலேயும் செனட் இருக்கிறது. செனட்டிலே எம்.எல்.ஏக்களும், எம்.எல்.சிக்களும் அங்கம் வகிக்கிறார்கள். இது ஒரு மாதிரியாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அது ஒரு மாதிரியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் இப்போது கிடைத்திருக்கின்ற அனுபவங்களையெல்லாம் வைத்து நாம் விரிவாகப் பரிசீலனை செய்து நல்லமுறையில் அந்தப் பல்கலைக் கழகங்கள் நடைபெறுவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என்ற ஆசை இந்த அரசுக்கு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தெரிவித்ததைப் போல, செனட் சபை என்ன செய்துகொண்டிருக்கிறது என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நாம் பல்கலைக் கழக நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோது, நல்ல முறையிலே சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியது அவசியம்தான். அவைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். பல்கலைக் கழகம் என்றாலே, அங்கே ஆராய்ச்சித் துறையிலே அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் பலரும் கேட்கிறார்களே தவிர, "அவர்களுக்குச் சம்பளம் கிடைத்துவிட்டதா? சம்பள உயர்வு கிடைத்துவிட்டதா? அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வேறு பல சலுகைகளையும், வசதிகளையும் அவர்கள் பெற்றுவிட்டார்களா?" என்ற பிரச்சினைகள் நிர்வாகப் பிரச்சினைகளே தவிர, அவைகள் பொது மக்களுக்குத் தேவையான விஷயங்கள் அல்ல. ஆனால் பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சித்துறை மக்களுக்குப் பயன்படும் வகையில் என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தம்முடைய பல்கலைக் கழகங்கள் ஓரளவுக்கு பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அவைகள் நல்லமுறையில் பணியாற்றுவதற்கு இந்த அமைப்புக்களை எந்த அளவுக்கு மாற்ற வேண்டும் என்று நிச்சயமாகப் பரிசிலனை செய்து உரிய நடவடிக்கை எடுப்போம் என்பதைக் கூறி முன்மொழியப்பட்ட மசோதாக்களை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[1979 ஏப்ரல் 30

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு, சென்னை பல்கலைக் கழக மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு, சென்னை பல்கலைக் கழக மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(8) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 186-190 ஆம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 30] (திரு. செ. அரங்கநாயகம்)

இம் மாநிலத்தில் 4-9-1978-லிருந்து செயல்பட்டுவரும் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டத்தை செயற்படுத்துவதில் தங்களுக்கு அனுபவப்பூர்வமாக, எதிர்ப்பட்ட இடையூறுகளைக் களையும் பொருட்டும், அச்சட்டத்தை மேலும் திறம்படச் செயலாற்றும் பொருட்டும், அச்சட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்களை, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணை வேந்தர்கள் சில பரிந்துரைகளுடன் அரசிற்கு அனுப்பி வைத்தனர். இதனை நேரில் விவாதித்தபின் துணை வேந்தர்கள் தெரிவித்த திருத்தங்களை ஏற்பதெனவும், மூலச்சட்டத்தின் தொடர்புடைய விதிகளைத் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்ட முன்வடிவில் ஆட்சிக் குழுவில் வேந்தரின் பரிந்துரைபின்படி 2 துறைத் தலைவர்கள் அல்லது நெறியாளர்களுக்குப் பதிலாக 3 துறைத் தலைவர்கள் அல்லது நெறியாளர்களை நியமிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது. தவிரவும் அரசின் ஆளுகையில் 4-9-1978 வரை இருந்த கிண்டி பொறியியற் கல்லூரிப் பணியாளர்களுக்கு அவர்கள் புதிய பல்கலைக் கழகத்தின்கீழ் பணிபுரிய விருப்பம் தெரிவித்தற்பொருட்டு அவர்களுக்கு உரிமை வழங்கவும், சென்னை குரோம்பேட்டை தொழில் நுட்பவியல் நிறுவனத்தின்கீழ் பணி புரிந்த பணியாளர்களும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆளுகையின் கீழ் இருந்த கிண்டி அழகப்பா தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பணி புரிந்தோரும் அந்தந்த கல்வி நிறுவனங்களுக்காகவே பணியிலமர்த்தப்பட்டிருப்பதால் அவர்களை புதிய பல்கலைக் கழகத்தின் பணியாளர்கள் என தெரியப்படுத்தவும் இச்சட்ட முன்வடிவு விழைகின்றது. இதற்கென மூலச் சட்டத்தின் பிரிவு 36 முழுமையாகத் திருத்தப்படுகின்றது.

மேலும் பல்கலைக் கழகத்தின் அங்கங்களின் அமைப்பிலோ அன்றி பல்கலைக் கழகச் சட்டத்தினை அமுல்படுத்துவதிலோ ஏற்படும் இடர்பாடுகளைத் தீர்க்கும்பொருட்டு மூன்றாண்டுகள்வரை அரசு உரிய அரசிதழ் வெளியீடு செய்யவும் புதிய விதி 45 சேர்க்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகத்தின் கல்விக் குழுவின் பெருகிவரும் தொழில் நுட்பத் தேவைகளையும், கிராமப்புற தொழில் வளம், தொழில் நுட்பவியல் திறமை ஆகியவைகளுக்கெனவும் மைய-மாநில அரசு பொறியியல் நிறுவனங்களிலிருந்தும், போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் முகத்தானும், இன்ன பிற காரணங்களுக்காகவும், மூலச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பேராணை 9-க்கு போதிய திருத்தங்கள் இச்சட்ட முன்வடிவில் இடம் பெற்றுள்ளன

தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979)

(திரு. செ. அரங்கநாயகம்) [1979 ஏப்ரல் 30

இறுதியாகப் பல்கலைக் கழகப் பணியாளர் தேர்வுக் குழுவில் துணைத் தலைவருக்குப் பதிலாக நிறுவனத்தின் தலைவர்களை அங்கத்தினராக நியமிக்கவும் அங்ஙனமே பல்கலைக் கழகப் பேராணை 13-க்குத் திருத்தமும் இச்சட்ட முன்வடிவு கொண்டுள்ளது. ஆகவே, இந்த அடிப்படையிலே இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) நிறைவேற்றப்பட வேண்டும்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(9) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1979).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் சேர்த்து தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன் வடிவும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப் பினர்கள் இரண்டையும் சேர்த்துப் பேசலாம்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இரண்டு மசோதாக்களும் மிக மிகத் தேவை என்பதற்காகவும், உரிய அவசரத்தோடு சட்ட மன்றங்களும் இதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்காகவும், பாராட்டுகிறேன். இதிலே ஒன்றைமட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்நாடு மணி லெண்டர்ஸ் ஆக்டைப் பொறுத்தவரையில், ஆறாவது பிரிவிலே 10-ஏ-லே ஒரு வாசகம்.

"No money-lender, whether licensed or not, shall take from a debtor or an intending borrower any note, promise to pay, acknowledgment, power of attorney, bond, security or other document which does not state the actual amount of the loan, the rate of interest charged and the time, if any, within which the principal is stipulated to be repaid in full, or which states any of such particulars incorrectly, nor shall he take from any debtor or an intending borrower any document in which any entry is left blank for completion at a later date."

@ 191 ஆம் பக்கத்தில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(திரு. க. இராமமூர்த்தி) [1979 ஏப்ரல் 30

(பிற்பகல் 3.50)

. . . இந்தப் பிரிவு இன்றையதினம் இருக்கிற பிரச்சினையைப் படம் பிடித்துக் காட்டுவதைப்போல் அமைந்திருக்கிறது. அநேகமாக இந்தப் பிரிவுக்கு அடங்காத கடன் கொடுப்பவர்கள் தமிழகத்தில் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

பலர் தொகையைக் குறிப்பிடாமல், அந்த இடத்தை மட்டும் காலியாக வைத்துவிட்டு, எண்ணாகக் குறிப்பிட வேண்டிய இடத்தையும் எழுத்தால் குறிப்பிடப்பட வேண்டிய இடத்தையும்—இதற்காக என்று ஒன்றிரண்டு லைன்களை பிளாங்க்காக விட்டுவிட்டுப் புரோ நோட்டில் கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள். பல இடங்களில் இப்படிப்பட்ட முறை கையாளப்படுகிறது. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்திலும், வடாற்காடு மாவட்டத்திலும், நகையை அடகு வைத்தாலும் சரி, வைக்காவிட்டாலும் சரி, ரசீது கொடுப்பதில்லை. ரசீது கொடுத்தாலும், நகையை ரூ. 400-க்கு அடகு வைத்தால் இன்னொரு ரூ. 500-க்கு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக்கொள்கிறார்கள். வட்டிக்காகத் தகராறு ஏற்படும் நிலை வருகிறபோது, உடனடியாக இந்த பிராமிசரி நோட்டைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோய் வழக்குத் தொடருகிறார்கள். பிராமிசரி நோட்டைப் பொறுத்தவரையில், கோர்ட்டில் அதுதான் நிற்கும். வேறு என்ன சாட்சியம் அதற்கு எதிராக இருந்தாலும், அது எடுபடாது. இதன் காரணமாக அடகு வைப்பவர்கள் நகையையும் இழந்து விடுகிறார்கள். வறுமை காரணமாகவும், பணம் வாங்குகிறபோது இருக்கிற நிர்ப்பந்தம் காரணமாகவும் அவர்கள் இதற்கெல்லாம் ஒப்புக்கொள்கிறார்கள். இப்படி ஒரு பெரிய 'எக்ஸ்பிளாய்டேஷன்' சமுதாயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னொன்று எப்போது வேண்டுமென்றாலும் தொகையைப் பின்னாலே குறித்துக்கொள்ள முடியும் என்ற நிலையை வைத்துக்கொள்வதாகும். இதில் பெரிய சங்கடம் என்னவென்றால் பணம் கொடுப்பவர், பணம் வாங்குகிறவர் ஆகிய இருவரைத் தவிர வேறு யாரும் அப்போது இருப்பதில்லை. கோர்ட்டுக்குப் போவதற்கு முன்னால்தான் யார் யார் சாட்சி என்றே எழுதுகிறார்கள். அதனால் கடன் வாங்கியவர்களைப் பொறுத்தவரையில், நீதிமன்றத்தின் மூலமாகப் பரிகாரம் தேடிக் கொள்வது என்பது இயலாமல் போய்விடுகிறது. சட்டப்படி கடன் வாங்கியவர்கள் அதன் பிடியிலிருந்து மீள்வதற்கு வகையற்றவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சட்டம் அப்படிப்பட்ட நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதற்கான தண்டனையைக் கடுமையாக ஆக்கவேண்டும் என்று கொண்டுவரப்

1979 ஏப்ரல் 30] (திரு. க. இராமமூர்த்தி)

பட்டாலும்கூட, இதற்கு மேலும் ஏதாவது பாதுகாப்பு தருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று சட்டத்துறை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை இதில் நீண்ட அனுபவம் பெற்றவர்கள். நீதிமன்றத்தில் இதுபோன்ற பல வழக்குகளைச் சந்திக்கிற வாய்ப்பைப் பெற்றவர். எனவே இதையெல்லாம் மனதில் கொண்டு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

20-வது பிரிவில் இந்த வழக்குகளை விசாரிக்கிற உரிமையைப் பொறுத்த வரையில், கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

" Jurisdiction to try offences. No court inferior to that of a Metropolitan Magistrate or of a Judicial Magistrate of the first class shall try any offence punishable under this Act.

இதில் அரசாங்கம் தொடருகிற வழக்குக்கு இது பொருந்துமா அல்லது தனியார் தொடருகிற வழக்குகளுக்கும் இது பொருந்துமா என்று எனக்குப் புரியவில்லை. அரசாங்கம் தொடருகிற வழக்கு என்று வருகிறபோது, முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் என்று இருப்பதில் நியாயம் இருக்கும். தனியார் தொடருகிற வழக்குகளில் இந்தக் கண்டிஷன் போடப்பட்டால், பல நேரங்களில் கடன் வாங்கியவர்கள் தங்களுடைய இடங்களிலிருந்து பல மைல்கள் கடந்து வந்து வழக்காட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுவார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு அதிகப்பணச் செலவு ஏற்படுவதுடன் நேரமும் வீணாகிறது. இப்படி செலவுக்குப் பயந்து கொண்டு கூடுதல் பணத்தைக் கொடுத்துவிட்டு நகையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கடனைத் தீர்த்துவிடலாம் என்ற நிலை ஏற்படும்.

இன்றையதினம் ஆர். டி. ஓ. மற்றும் சப்-கலெக்டர்கள் எல்லாம் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்களாகப் பல இடங்களில் பணியாற்றுகிறார்கள். இதில் என்ன சங்கடம் ஏற்படுகிறது என்றால், அவர்களுக்கு முழுமையான அதிகாரம் வந்து சேருவதற்கு மிகுந்த காலதாமதமாகிறது. சில சமயங்களில் ஓராண்டுக் காலம்கூட ஏற்படுகிறது. அதோடு பல நேரங்களில் அவர்கள் அரசாங்க அலுவல் காரணமாக அமைச்சர்கள் சுற்றுப்பயணம் காரணமாக, ஆர்.டி.ஓ.க்களும் சப்-கலெக்டர்களும் தங்கள் கோர்ட்டில் வாய்தா போட்டுவிட்டு திடீரென்று வெளியே கிளம்பிவிடுகிற நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக இந்த வழக்குக்காக வந்து போகிறவர்களுக்கு மிகுந்த சிரமம்

ஏற்படுகிறது. இப்படி மேலும் மேலும் பளுவைச் சுமப்பதற்கு பதில் கூடுதல் வட்டியைக் கொடுத்து விடலாம் என்று அவர்கள் எண்ணுகிற நிலை ஏற்படும். ஆகவே இதற்கான விதிகளை அமைக்கிறபோது, இதையும் மனதில் கொண்டு பரிகாரம் காணவேண்டும் என்று கூறி, இதற்கு என் ஆதரவைத் தெரிவித்து அமர்கிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அடகுக் கடைக்காரர்களைப் பொறுத்த சட்டமுன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன், அதற்கு முன்னாலே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம் 'குழலினிது, யாழினிது என்ப, தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்று சொல்லும் வகையில் அவருடைய மழலைச் சொற்களால், தமிழில் மிக அழுத்தந்திருத்தமாகப் படித்தமைக்காக அவரை வாழ்த்துவதோடு இந்த நிலை மீண்டும் தொடர வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் அவரிடத்தில் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : வரும் சேஷனிலிருந்து முழுமையாக நான் தமிழிலேயே பேச முயற்சிக்கப் போகிறேன். (சிரிப்பு).

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மிக்க நன்றி. இதில் நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தால். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதில் நீண்ட நேரம் பேசுவதற்கு ஆசிரியப் பிரதிநிதிக்கு என்ன இருக்கிறதோ !

திரு க. மீனாட்சிசுந்தரம் : நீண்ட நேரம் வாய்ப்பிருக்குமானால் பேசுவதற்கு பொருள் நிறைய இருக்கிறது. எனவே தலைவர் அவர்கள் நீண்ட நேரம் அனுமதித்தால், நான் நீண்ட நேரம் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு ஒரு பட்ஜெட்டைத் தயாரிக்கிறது. அது சுமார் 850 கோடிக்கு வரவு-செலவு செய்கிறது. ஆனால் இந்த நாட்டில் அடகுக் கடைக்காரர்களும் ஒரு பட்ஜெட்டைத் தயாரிக்கிறார்கள் என்று ஒரு புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அடகுக் கடைக்காரர்கள் சுமார் 1,500 கோடி ரூபாய்க்கு

ஆண்டொன்றுக்கு பட்ஜெட் தயாரிக்கிறார்கள். ஒரு தனியான அரசாங்கத்தைப்போல் அவர்கள் தங்களுடைய தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில், வரவு ரூ. 850 கோடிதான். அந்தத் தொகையை வசூலிக்க 200 கோடி ரூபாயைச் செலவிடுகிறது. ஆனால் அடகுக் கடைக்காரர்கள் 17,000 குமாஸ்தாக்களை மட்டுமே நியமித்து ரூ. 15 லட்சம் மட்டுமே செலவழித்து, இந்த 1,500 கோடி ரூபாயை வசூலித்துவிடுகிறார்கள்.

தங்கத்திற்கு ரூபாய்க்கு 3 பைசா முதல் 4 பைசாவரை வட்டி. வெள்ளிக்கு ரூபாய்க்கு 4 முதல் 5 பைசா வரைவட்டி. பித்தளை—செம்புப் பாத்திரங்களுக்கு 6 முதல் 10 பைசாக்கள் வட்டி சைக்கிள், ரேடியோ, மின் விசிறி, துணி இவைகளுக்கு 12 காசு வட்டி. இப்படித்தான் இந்த அடகுக் கடைக்காரர்கள் வட்டி வாங்கி மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

நாட்டில் இவர்கள் இன்னும் அடகு பிடிக்காதது பெண்களை மட்டும்தான். பழைய கதைகளில் வருவதைப் போல் சந்திரமதியை அரிச்சந்திரன் அடகு வைத்ததைப்போல், திரவுபதியை பஞ்ச பாண்டவர்கள் அடகு வைத்ததைப் போல் யாராவது முன்வருவார்கள என்றால், இந்த அடகுக்கடைக்காரர்கள். . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பஞ்சபாண்டவர்கள் திரவுபதியை அடகு வைத்ததாகச் சொல்வது சரியில்லை. அவர்கள் அடிமையாக வைத்தார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அய்யா அவர்களைப்போல் அதை என்னால் அவ்வளவு சரியாகச் சொல்ல முடியாது என்பதால் அதை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன்.

இன்றையதினம் எந்தவிதமான முதலீடும் இல்லாமலேயே இந்த அடகுக் கடைக்காரர்கள் லட்சாதிபதிகளாகத் திகழ்கிறார்கள் என்று அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 200 மட்டும் முதலீடு இருந்தால், அதை வைத்துக் கொண்டு ரூ. 60-க்கு ஒரு இடத்தை வாடகைக்கு வாங்கி ரூ. 300-க்கு பான் புரோக்கர் லைசென்ஸ் வாங்கி வைத்துக்கொள்வார்கள். இவர்களுக்கு உதவி செய்வதற்காக என்று காத்தா மார்வாடிகள் என்று இருக்கிறார்கள்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1979 ஏப்ரல் 30

இவர்கள் சாதாரண மார்வாடிகள் என்றால் இவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் காத்தா மார்வாடிகள் என்பவர்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ரூ. 50,000-த்தை ஒரு இரும்புப் பெட்டியில் போட்டுப் பூட்டி அதன் ஒரு சாவியை இந்த சாதாரண மார்வாடியிடம் கொடுக்கிறார்கள். இன்னொரு சாவியை அவர்களே வைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், பெட்டியைத் திறந்து பார்த்தால், எப்போதும் அதில் ரூ. 50,000 இருக்க வேண்டும் அல்லது 125 சவரன் இருக்க வேண்டும். இப்படி சவரனாகவோ பணமாகவோ இருக்க அனுமதித்து விடுகிறார்கள். இந்த மார்வாடிகள் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வியாபாரம்

(பிற்பகல் 4-00)

செய்கிறார்கள். அவர்கள் அப்படி அனுமதிக்கிறபோது, அங்கேயிருக்கிற பணத்தை எடுத்துக் கொடுப்பது இவருடைய வேலை. ஒரு நாளைக்கு இவர்கள் இலட்சக் கணக்கில் சம்பாதிக்கிறார்கள். இருநூறு ரூபாய் கொடுக்கிறார்கள் என்றால் மூன்று காசு விதம் ஆறு ரூபாய் வட்டியைப் பிடித்துக் கொண்டு மீதம் 194 ரூபாயைத்தான் தருகிறார்கள். அது மட்டுமல்ல, இவர்கள் இரசீது போடுவதன் மூலமும் வருமானத்தைப் பெறுகிறார்கள். ஒரு ரசீதுக்கு 25 காசு என்று வசூலிக்கிறார்கள். அந்த ரசீது 3 காசுதான் மதிப்பு ஆகும். இப்படி ஒரு நாளைக்கு 100 ரசீதுகள் எழுதுகிறார்கள் என்றால், ஒவ்வொரு ரசீதுக்கும் 22 காசு இலாபம் என்ற முறையில், 22 ரூபாய் வருமானத்தைப் பெறுகிறார்கள். இப்படியெல்லாம் அங்கே கொள்ளையடிக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தை நான் வைத்திருக்கிறேன். தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு அந்தப் புத்தகத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடத்திலே தந்துவிடலாம் என்று நினைக்கிறேன். அந்தப் புத்தகத்திலே அடகுக் கடைக்காரர்களின் ஊழல் என்ற தலைப்பில், அவர்கள் சுரண்டுகிற தன்மையைத் தெளிவாகவும், மிக விரிவாகவும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: தலைவர் அவர்களே, நன்றி கலந்த வருத்தத்துடன் பேசுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அந்த விவரத்தை என்னிடம் கொடுத்தால், அதை அனுதாபத்துடன் பரிசீலித்து அதற்குத் தகுந்த லெஜிஸ்லேஷன் கொண்டு வர முடியும். அதைப்பற்றி ஆராய்ந்து பரிசீலிக்கிறேன்.

1979 ஏப்ரல் 30]

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். எந்தத் தரப்பிலேயிருந்து கருத்து வந்தாலும், கருத்து தந்தவர்களைப்பற்றிக் கவலையில்லாமல், அதில் உள்ள நல்லவைகளை எடுத்துக்கொண்டு செயல்படுவதாக அமைச்சர் அவர்கள் உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். "பிச்சை எடுப்பான் தமிழன்" என்ற தலைப்பில், பறக்கும்படைத் தலைவர் திரு. எம். கே. சீனிவாசன் அவர்கள் எழுதிய புத்தகத்தில் அப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதைப் படிக்க அனுமதியில்லை. அந்தப் பெயரை சொல்லுவதற்குக் கூட முன் அனுமதி பெற வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அடுத்து, அவர்கள் ஏலம் போடுவதாகக் கூறி, ஏலம் போடாமல், ஏலம் போட்டதாக ரிஜிஸ்டரில் எழுதிக் கொண்டு தவறான முகவரிக்கு ஏல நோட்டீசை அவர்கள் வேண்டுமென்றே ரிஜிஸ்டர் போஸ்டில் அனுப்பி, போஸ்ட்மேனுடைய துணையோடு அதைத் திரும்பப் பெற்று பின்னால் அந்தப் பொருள்களை ஏப்பம் விட்டுவிடுகிறார்கள் என்ற வகையிலே நிலைமை இருக்கிறது. இவர்கள் இப்படியெல்லாம் மக்களைச் சுரண்டி, பல்கலைக் கழகங்களைக் கட்டுவதும், கல்லூரிகளைக் கட்டுவதும், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை செய்வதும் போன்ற காரியங்களைச் செய்து ஊரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ரௌடிகளை வைத்துக்கொண்டு வழக்குகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தடுக்க மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடன் பெற்றவர்களைத் துன்புறுத்தக்கூடாது, அவர்களுடைய பொருள்களை அபகரிக்கக் கூடாது, வீட்டுக்குச் சென்று மனைவி, மக்களைத் துன்பப்படுத்தக்கூடாது. அவர்கள் வேலை செய்கிற தொழிற்சாலை, அலுவலகங்கள் ஆகியவற்றுக்குச் சென்று கடன் கேட்கக் கூடாது என்றெல்லாம் சட்டத்திலே இருந்தாலும்கூட, நடைமுறையிலே நடப்பது வேறு விதமாக இருக்கின்றது. சம்பளத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வர முடியாத அளவிற்கு கடன்காரர்கள் வழிப்பறி செய்கிற அளவுக்கு நாட்டிலே நிலைமைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட கொடுமைகளைத் தடுக்கிற வகையிலே உரிய சட்டத்தை, இப்போதுள்ள சட்டத்திலே அதற்கான வழிவகை இல்லையென்றாலும்கூட, மீண்டும் கொண்டுவர மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக் கேட்டு அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அடகுக் கடைக்காரர்கள் திருத்த சட்ட முன்வடிவு எண் 34, 35 ஆகிய இரண்டும் இரண்டு முக்கிய கருத்துக்களைக் கொண்டதாகும். என்ன வட்டியை வாங்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவதும், ரிசர்வ் வங்கி தருகிற வட்டியைக் காட்டிலும் கூடுதலாக வாங்கக் கூடாதென்று கட்டுப்படுத்துவதும், இந்த வங்கிகள் எந்த அளவிலே ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதற்கும் இந்த இரண்டு சட்ட முன்வடிவுகள், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மிகத் தேவையான ஒன்று என்ற முறையிலே வரவேற்கிறேன்.

எதிர்காலத்தில் வங்கி என்கிறபோது, இந்த அளவுக்குத்தான் இருக்க வேண்டுமென்று குறித்துவிடுவது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் சிறிய பெட்டிக் கடை அளவு எடுத்துக்கொண்டு, அந்த இடத்திலே வசூல் செய்து, எந்தப் பொருளை வேண்டுமானாலும் வைத்து பணத்தை வாங்கிக் கொள்ளலாம் என்ற முறையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பொருளுக்குத்தான் தரலாம் என்ற நியதியை வைப்பதன் மூலம் அரசு இதைக் கட்டுப்படுத்த முடியுமென்று கூறி அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அடகுக் கடைக்காரர்கள் பற்றிய இரண்டு மசோதாக்களையும் நான் வரவேற்கிறேன்.

அடகுக் கடைக்காரர்கள் சம்பந்தப்பட்ட முதல் மசோதா எண் 34, ரிசர்வ் வங்கி அப்போதைக்கப்போது தீர்மானிக்கிற வட்டி விதத்தை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு தீர்மானிக்கிற வட்டி விதங்களுக்கு மேல் அடகுக் கடைக்காரர்கள் வட்டியை வசூலிக்கக் கூடாதென்று கூறுகிறது. தற்போது 12 சதவீதம் சிம்பிள் இன்டரஸ்டாக அது இருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தத்தைப் பார்க்கும்போது இந்த வட்டி விதம் மேலும் ஏறினாலும் ஏறுமோ என்ற பயம் இருக்கிறது. 12 சதவீதம் வட்டியை "ஒரு வட்டி" என்று கிராமப்புறத்திலே சொல்லுவார்கள். 1936 ஆம் ஆண்டில் திரு. இராஜாஜி அவர்கள் வட்டிச் சட்டம் கொண்டு வருகிறபோது 6 சதவீதம் என்று சொன்னார்கள். இப்போது 12 சதவீதம் என்று வந்திருக்கிறது. ரிசர்வ் வங்கி, நாட்டிலேயுள்ள பாங்குகளுக்கு கடன் கொடுக்கிற வட்டியின் அடிப்படையிலே போகும்போது, இந்த வட்டியின் அளவும் மேலே போகுமென்று நினைக்கிறேன். ஆனால் அடகுக் கடைக்காரர்கள் 12 சதவீதத்திற்கு மேலே கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

அப்போதைக்கப்போது ரிசர்வ் வங்கி அதிகாரிகளோடு பேசும்போது, சாதாரண மக்களுக்கு 12 சதவீதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பெரும்பாலான மக்கள் அடகுக் கடைக்காரர்களையே நம்பிக் கொண்டிருக்காமல், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும் கடன்களைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக, நகைகள், பொருள்கள், தானியங்கள் ஆகியவைகளை வைத்து கூட்டுறவு ஸ்தாபனங்களில் கடன்களைப் பெற ஏற்பாடு செய்தால், அடகுக் கடைக்காரர்களை கடன்களுக்காக நெருங்கும் தேவை குறையும். அரசு நிர்மானிக்கிற வட்டிக்கு மேல் அடகுக் கடைக்காரர்கள் வாங்காமலிருக்க, அரசு கண்காணிக்க வேண்டும். இதை அமுலபடுத்துவதற்கு "எலாபரேட் மெஷினரி" வேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாட்டையும் அரசு செய்ய வேண்டும். இன்னொரு பக்கத்திலே வறுமைக் கோட்டிற்கும் கீழேயுள்ள மக்கள், அடகுக் கடைக்காரர்களிடம் போகாமலிருக்க அரசே நிதி உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு மசோதாக்களையும் நான் ஆதரிக்கிறேன். பினாமி நோட் எழுதுவது, தொகை போடாமல் எழுதுவது, பிளாங்க் பேப்பரில் எழுதுவது, கூடுதல் தொகையை எழுதுவது, போன்ற தவறுகளுக்காக குறைந்தது மூன்று மாத தண்டனை வழங்கலாம் என்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்க ஏற்பாடாகும். தொகை எவ்வளவு கொடுத்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, கடன் கொடுத்தவர்களைச் சேர்ந்தது என்று சொல்லியிருப்பது சரியான ஏற்பாடு. "பர்டன் ஆஃப் புரூஃப்" கடன் கொடுத்தவர்களுக்கே இருக்கிறது. கொடுத்தவர்கள் கணக்குகளை ஒழுங்காக எழுதி வைத்திருந்தால், கடன் வாங்கியவர் எவ்வளவு பணம் வாங்கியிருக்கிறார் என்று நிரூபிக்க முடியும். ஆகவே இந்த ஏற்பாட்டை நான் வரவேற்கிறேன்.

நான்-நேஷனல்ஸ், அன்னியர்கள், மணி லெண்டிங் பிசினெஸ் நடத்தக் கூடாதென்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன்

செக்ஷன் 18(5)-ல் "Any court trying an offence under this section shall, unless it is proved to the contrary, presume that the accused is not a citizen of என்று குறிப்பிட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள சட்டம் பூராவிலும், ஒரு தடவை கோர்ட்டில் ஒவ்வர் குற்றவாளி என்று சார்ஜ்ஷீ கொடுத்தால், அவர் நிரபராதியென்றே கருத வேண்டும் என்ற ஷரத்தைச் சேர்த்திருக்கிறார்கறள். இப்படிப்பட்ட ஷரத்து புரொஹிபிஷன் சட்டத்திலும், பாரஸ்ட் சட்டத்திலும் இருக்கிறது. இதை ஏற்கெனவே அரசினர் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே புராசிகியூஷன் தரப்பிலே ஒருவர், "நான் நேஷனல்" என்று சார்ஜ்-ஷீட் கொடுத்தவுடனே, அவர்தான் அதை நிரூபிக்க வேண்டும். நிரூபிக்க வேண்டிய பொறுப்பு போலீசுக்கு அல்லவா இருக்க வேண்டும்? இல்லையென்றால், போலீஸ்காரன் யார் மீது குற்றம் சாட்டுகிறானோ அவர் ஆடடோமெடிக்காக குற்றவாளி ஆகிறான். ஆகவே நான்-நேஷனல் வந்து லேவாதேவி நடத்தக் கூடாதென்றால், அவர் மீது வழக்குத் தொடர்கிற காலத்திலே அவர் நான்-நேஷனல் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு போலீசுக்குத்தான் இருக்க வேண்டும். பிரசம்ப்ஷன் கூடாது. இது ஆபத்தான போக்கு என்பதை திரும்பத் திரும்பச் சொல்லி, மாண்புமிகு சட்ட அமைச்சர் இதற்கு விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்த சட்டமுன்வடிவிலே ஏற்கெனவே முடிந்துபோன வழக்கையும் திரும்ப எடுத்துக்கொண்டு பேசுவதற்கும், விசாரணை நடத்துவதற்கும், வட்டியைக் குறைப்பதற்கும், தரவேண்டிய பணத்தைத் தவணையிலே கொடுக்கலாம் என்று சொல்வதற்கும் அதிகாரத்தை கோர்ட்டுக்குக் கொடுக்க இந்த மசோதாவிலே ஷரத்து இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். சென்ற ஆண்டு அரசு ஏழை மக்களுக்கு கடன் நிவாரணம் என்று சட்டம் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தின் மூலம் மக்களுக்கு, லட்சக் கணக்கானவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அந்த வாக்குறுதியில் மக்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும். இந்தச் சட்டமும் ஏழைகளுக்குச் சாதகமான சட்டமாக இருப்பதால், நான் இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்கள் ஆணைக்குட்பட்டு நான் இங்கிலீஷிலேயே பேசுவதற்கு அனுமதி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அனுமதிக்குட்பட்டு என்று சொல்லுங்கள். நான் இங்கிலீஷிலே பேசும்படி ஆணை போடமாட்டேன்.

* THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, four hon. Members have participated in this debate and all of them have, in varying degrees, welcomed these two measures which are alike to each other in respect of what may be called the design in giving relief to the poor debtors who are in the clutches of the money-lenders.

The hon. Member Thiru Ramamoorthy raised a question or two which are practically self-explanatory on the face of the Bill itself. While characterising section 10(a) as a section in favour of the debtor, Thiru Ramamoorthy raised a doubt whether a private citizen could go to a Court miles away and prove the offence against the money-lender. There is no need for the private debtor to go all the way to the Court. After all, First class powers are both in the Metropolitan Magistrate as well as in a Judicial First class Magistrate. With the integration scheme which is now going to come into vogue shortly, any Magistrate will be vested with the power and jurisdiction to try First class offences. Therefore, there will be no difficulty on that score whatever. But I would like to remind the hon. Member Thiru Ramamoorthy about the inability of the Government to vest the Sub-Collector with the necessary power. In this State, from the year 1948, there has been progressive separation of powers between he Judiciary and the Executive and no Sub-Collector can be vested with this power. It is not permissible under the Constitution of India. Therefore, no Sub-Collector can be vested with the power to try First class offences except during the course of his training when some cases are given to him just to give a sort of judicial training. All the regular cases must go before the First Class Magistrates. In the City, they must go to the Chief Metropolitan Magistrates. In other places,

they should go to the Judicial Sub-Divisional Magistrates, as they are now called in the Criminal Procedure Code. Therefore, for a private debtor who wants to bring a case against a rack-renting money-lender and who wants to prove his case, there is absolutely no difficulty which he has got to surmount before he goes to any Court. The road is royal to prove his case before any Judicial Magistrate even in the mofussil.

The hon. Member Thiru Meenakshisundaram expressed his joy, just like a teacher and just like a person who expresses his joy whenever he hears a speech on Tamil literature. Those who believe in God say God and those who believe in Nature say Nature. Whatever may be the presiding deity, I have been blessed with many things in life. But, unfortunately, when this State was a composite State, I had my education in a Telugu region and, therefore, I really lost the golden opportunity of mastering the Tamil language. Now, I am very persistent at this age. I have a tutor and almost everyday, provided my public engagements do not shakle me, I spend two hours on mastering that language. I have already started with Thirukkural and I hope to complete it as early as possible. I am still hopeful that one day I would use alliterative Tamil language in order to make my speech more effective.

I am really grateful to Thiru K. Meenakshisundaram for spot-lighting and high-lighting some of the malpractices resorted to by these money-lenders in this State. I would like to make an appeal straightway to all the hon. Members because they are in touch with the rural electorate, rural debtors, rural people and their difficulties. I would beg of them to give me as much material as possible and to come forward with suggestions, constructive suggestions as to how best I can devise legislation to eliminate those malpractices. I would then be able to bring into effect what may be called a protective legislation to safeguard the interests of the debtors as far as possible.

I am also glad that Dr. Janarthanam gave a word of praise to the two measures that had been on the legislative anvil and I think it is the appropriate word, as the Bills have not yet become Acts.

I am really beholden to Thiru Nallasivan, who though he struck a very severely critical note day before yesterday, has, in contra-distinction from that attitude, struck a note of welcome to both these measures. He expressed one apprehension that the rates of interest might, corresponding by increase whenever the Reserve Bank raised its rate of interest. It should be remembered that the issue of notification is in the hands of the Government, in my hands and unless I sign the notification, it will not come into effect. The hon. Member may rest assured that even assuming for a moment that the Reserve Bank raises the rate of interest, this hand won't sign the notification raising the rates of interest to the deteriment of the debtors in the State. Therefore, I request Thiru Nallasivan to rest assured that his apprehension is totally unfounded.

A number of Members, on various occassions, have pleaded for making credit facilities available through the Co-operative institutions. It is a larger question. This question does not exclusively fall within my portfolio. I cannot speak on behalf of the Minister for Co-operation. I would plead with him for extending the credit facilities to the rural people, because to the extent to which these credit facilities are extended to the poor, the malpractices about which reference has been made would be reduced directly in proportion to that. Therefore, it is for the Co-operative institutions to devise means and methods to make credit facilities available to the poor debtors in the rural areas. I have also pleaded, as a matter of fact, some 10 or 12 years back when I opened a branch of the State Bank of India, that the State Bank itself must have two rotations if eight hours' work so that the poor people hight go straightway and get credit ranging from Rs. 10 to Rs. 200 or

even Rs. 500. The State Bank is a prestigious Bank and they do not seem to consider that to be worth while. But they may please remember that relief of human suffering is a greater asset than making profits in a Bank. The great Bank authorities forget that. I have myself pleaded with a former Secretary and Treasure of the State Bank that they must open a few branches to work in two or three shifts right from 8 a.m. to 8 p.m. so that poor persons could borrow amounts from Rs. 5 to Rs. 500 for urgent needs. But, that depends on the Reserve Bank Governors to make provision for such facilities. It is not within my jurisdiction to effect such reform.

The hon. Member Thiru Nallasivan was mentioning about any proceedings launched against the—to use a local language—'Eettikkaran'. He may be a 'Subhan Khan' or some other 'Khan' coming from the North West Frontier Province or from Afghanistan and, therefore, a Pathan and therefore what you call in the usual language "Eettikkaran". The presumption is that he is that. I want to make this very clear because the hon. Member Thiru Nallasivan has been time and again asking me to clear this doubt in him. Presumption, in English law, is presumption. Proof is undoubted proof. There is a tremendous amount of difference between these two words in the legal language, namely, presumption and proof. Presumption is never proof and it does not even touch the borderland or proof. The Court presumes and the presumption is only what may be called rebuttable presumption. It is not conclusive presumption but it is only rebuttable presumption. One can easily rebut it. Ample opportunity is given to rebut the presumption. If the Court starts with that presumption, there is nothing illegal about shifting the burden to the accused. That is the position so far as presumption is concerned. So far as proof is concerned, there is no shifting of the burden. If the hon. Member Thiru Nallasivam will take the trouble, he may kindly look into some old Acts which I am quoting from my memory. Thiru Rajaji, the great lawyer of Salem and the great lawyer of the former Madras State, brought in a section in the then Madras Prohibition Act, 1937 and that section made room for presumption. There was a similar provision in Act 2 of 1947, the prevention of Corruption Act, which was held to be valid by the Supreme Court. That provision may apply to a public servant who receives a reward, some gift, or

some bribe amount which is said to have been caught. Let us imagine that a public servant is the Collector and District Magistrate of Burdwan. He receives a bribe of Rs. 5,000. Let us imagine that the notes are marked 'K.N.' and that the amount is seized from him. The law says that it may be presumed that it is a reward for some favour to be shown. It is only presumption. It is still open to him to say "well, Sir, day-before-yesterday this Thiru K. N. drew from me through crossed cheque a loan of Rs. 10,000 and he has now given back this Rs. 5,000 as first instalment". He can still prove it because it is only a presumption. If he is not able to prove it, the law presumes that this District Magistrate of Burdwan, for showing a favour, has drawn this amount more as a bribe amount. When it is open to him to rebut it, if he fails to rebut it, the presumption is against him. This is the law. This law has been held to be good, valid, correct and unimpeachably correct by the Supreme Court itself. It is unnecessary for me to quote and bring in the Supreme Court citations. I did quote them when I piloted the Prohibition Amendment Bill. The necessary points of law as seen from the Supreme Court decisions were brought in and quoted here. If I remember aright, Krishna's case was in point. The lady who is now Governor of Kerala was then the Minister for Prohibition here. She raided the house of one Chettiar in Thiagarayanagar. Then, there was a case and they attacked the presumption-section. The Supreme Court held that it was valid. The other day, I quoted it here. Therefore, there is no difficulty. I am quoting these decisions at some length so that my brother, the Hon. Thiru Edmund, may not feel the burden of explaining the presumption-clause. It is absolutely valid and it is very well-known to jurisprudence. Presumption is presumption only. Proof is quite a different matter.

Thank you.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் முடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1979) நிறைவேற்றப் பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1979) நிறைவேற்றப் பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(10) தமிழ் நாடு, 1979ஆம் ஆண்டு, வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1979)

*THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr Chairman, Sir, I move—

"That the Tamil Nadu Money-lenders (Amendment) Bill, @ 1979 (L.A. Bill No. 35 of 1979), as passed by the Assembly, be taken into consideration."

In moving this Bill, I wish to say that in the actual working of the provisions of the Tamil Nadu Money-lenders Act, 1957, certain drawbacks have been brought to the notice of the Government. In order to remove such drawbacks, it is considered necessary to

@ 713-720 ஆம் பக்கங்களில் இணைப்பு XII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

amend the Act suitably. The provisions proposed to be incorporated in the Act are expected to help the poor borrowers substantially in their ways and means position and also relieve them greatly from the accumulated dues The salient features of the Bill have already been discussed and power has been taken by the Government to fix the rate of interest chargeable by the money-lenders from time to time by notification. It is also proposel to make it an offence if a money-lender takes from a debtor a bond or other document which does not state the actual amount of loan, rate of interest etc. or which states any such particular incorrectly and to make such documents void and unenforceable. If a money-lender advanced smaller amount than the amount specified in the document or secured higher rate of interest or molested the debtor for recovery of the loan, he shall be punished with a minimum sentence of three months' imprisonment or with fine or both. The burden of proof in regard to the loan amount specified in the document, if it is challenged in a Court of law, shall lie only on the money-lender. Non citizens shall be prohibited from carrying on the business of money-lending in the State. Such an offence is made cognisable. Certain provisions are sought to be incorporated giving powers to Courts to limit interests recoverable in certain cases, to direct payment of decretal amount by instalments, to reopen past transactions and to inquire into accounts and declare the amounts due. The other amendments are minor in character and are found necessary for proper enforcement of the provisions of this Act.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979ஆம் ஆண்டு, வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

— தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 16 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979ஆம் ஆண்டு, வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979ஆம் ஆண்டு, வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

(11) தமிழ்நாடு, 1979ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1979)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்கள் முன்மொழிந்த மசோதாவின்மீது ஒன்றிரண்டு விஷயங்களை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த சட்டத்திலே, காட்டுப் பகுதிகளிலே உள்ள பொருள்களை எடுத்துச் செல்லுகிறார்கள் என்று காரணம் சொல்லி, பொதுமக்களை 'ஹாரஸ்' பண்ணக் கூடிய அதிகாரிகள், பொது மக்களை நியாயமில்லாமல் துன்புறுத்துகிறார்கள்,

@ 721-725ஆம் பக்கங்களில் இணைப்பு XIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

என்று நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு 6 மாதங்கள் தண்டனை கொடுக்கலாமென்று இருந்த ஷரத்தை இந்த மசோதாவிலே விலக்குவதாக இருக்கிறது. ஏற்கெனவே உள்ள மசோதாவில் அந்த ஷரத்து இருக்கிறது. ஆனால் பேரவையிலே, அந்த ஷரத்து நீக்கப்படாது என்று அரசுத்தரப்பிலே வாக்கு கொடுக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். சாதாரண பொது மக்களைத் துன்புறுத்தக்கூடிய அதிகாரிகள், அப்படி துன்புறுத்துகிறார்களென்று நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு 6 மாதங்கள் தண்டனை என்பது தொடர்ந்து நீடிக்குமென்று அமைச்சரவர்கள் மீண்டும் உறுதியளிப்பார்களென்று நம்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

அடுத்தபடியாக, வன திருத்தச் சட்டமுன்வடிவை அமுல்படுத்துகிறபொழுது, அரசுக்குச் சொந்தமான காடுகளிலுள்ள விலை உயர்ந்த மரங்களை அரசுக்குத் தெரியாமல் வெட்டி கீழே கொண்டுவந்து இலட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்று இலாபம் சம்பாதிக்கிற, பெரும் முதலீடு செய்து ஆட்களை வைத்துக் கொண்டு திட்டமிட்டுச் செய்கிற கொடுமைகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க உதவும் சட்டமாக இது பிரதானமாகக் கொண்டு வரப்படுகிறது என்ற நம்பிக்கையில் நான் இதை வரவேற்கிறேன். இதை நடைமுறையில் கொண்டுவருகிறபொழுது, காடுகளுக்கு உள்ளே சென்று பல சந்தர்ப்பங்களில் நம்முடைய அரசுக் காடுகளிலிருந்து சொந்த உபயோகத்துக்காக தலையில் சுமந்துகொண்டு செல்லக்கூடியவர்களைத் தண்டிக்கக் கூடாது. சென்ற காலத்திலே வன இலாகா அதிகாரிகளால் அப்படிப்பட்ட ஏழை மக்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்திலே 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கவும், அபராதம் வழங்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நடைமுறைப்படுத்துகிறபொழுது, சாதாரண ஏழை எளிய மக்கள் மீது உபயோகப்படுத்தாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

அப்படி பாதுகாப்புக் கொடுப்பதற்கு அரசாங்கம் கேரளாவில் செய்தது போல், கருநாடகாவில் செய்தது போல் நம்முடைய மாநிலத்திலும் காடுகளிலிருந்து கிடைக்கிற பொருள்களைக் கொண்டு தாங்களே சில தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முயற்சி எடுத்தால், அதிலே அரசினுடைய கண்காணிப்பு நேரடியாக இருக்கும். இந்தமாதிரி பணத்தை முடக்கி காட்டிலேயுள்ள விலை உயர்ந்த மரங்களைக் கள்ளத் தனமாகக் கடத்திக் கொண்டு போவதை ஒரு பெரும் தொழிலாக, உத்தரவாதமான தொழிலாக நடக்கிறவதைத் தடுக்க

முடியும், அப்படிப்பட்ட கும்பல்களைக் கட்டுப்படுத்த முடியும். இப்படிப்பட்ட காட்டுப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் காட்டுப் பகுதிகளிலே இருந்தால், அங்கு கண்காணிப்பு அதிகமாக இருக்கும் என்கின்ற காரணத்தால், அவர்களுடைய நடமாட்டம் அதிகமாகக் குறையும். இப்பொழுது சில அதிகாரிகளை அவர்கள் சரிக்கட்டி, விலை உயர்ந்த காட்டு மரங்களைக் கடத்திக் கொண்டு வருவதைக் கட்டுப்படுத்தக் கூடிய முறையில் இது அமையும்.

ஆகவே இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் அரசு வன இலாகா அதிகாரிகளிடம் மிகப் பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவினால் சாதாரண பொதுமக்கள் துன்புறுத்தப்படுவார்கள். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வன இலாகா சொத்துக்களைக் கொள்ளையடிக்கின்ற கும்பலை ஒடுக்க வேண்டும். வன இலாகா சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்களைத் தடுக்க வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும். அவர்கள் பல வருடங்களாக இந்தச் செயல்களைச் செய்து நம்முடைய காடுகளை அழித்து பல தடவைகளில் மாட்டிக்கொண்டு வழக்குகளில் சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இன்னும் மாட்டாமல் இருக்கிற பலர் இந்த சட்ட முன்வடிவின் மூலம் மாட்டப்படுவார்கள், கட்டுப்படுத்தப்படுவார்கள் என்கின்ற முறையில் காட்டு இலாகா அதிகாரிகள் சாதாரண ஏழையெளிய பொதுமக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காமல், நீக்குப் போக்கு காட்டும் வகையிலும், சாதாரண மக்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து பாதுகாப்பு கொடுக்கும் வகையிலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதிலுள்ள விதிகளைச் சிறிது மாற்றியமைத்துக் கொள்வதன் மூலம் இதிலுள்ள சிறிய குறைபாடும் அகற்றப்படும் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு தலைவரவர்களே, 1979ஆம் ஆண்டு வன திருந்தச் சட்ட முன்வடிவு குறித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தற்போது எப்படி வன இலாக்கா பொருள்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற முறையிலும் எப்படி தவறுகள் திருத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்துடனும் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதிகாரிகளால் முன்பு தன்னிச்சையாக தண்டனை வழங்கப்படுகிற முறை இருந்தது. அதிகாரிகள் தவறு செய்து கொண்டிருந்த நிலை இருந்ததால், இப்பொழுது நீதிமன்றங்களின் மூலம் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரிய முயற்சி. முதல் முறை தவறு செய்தால், ஓராண்டு வரை சிறைத்

தண்டனையும், மூவாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் அபராதத் தண்டனையும் இந்தச் சட்டத் திருத்தத்திலே விதித்திருப்பது பாராட்டுக்குரியது. அதே போல் இரண்டாவது முறை தவறு செய்தால், மூன்றாண்டுக் காலம்வரை சிறைத் தண்டனையும், ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் அபராதத் தண்டனையும் விதித்திருப்பது பாராட்டத்தக்க முயற்சிகள். இதனால் காடுகளில் பெருமளவு நடக்கின்ற தவறுகள் குறையும் என்பதோடு நம்முடைய வனப் பொருள்கள் காப்பாற்றப்பட வழி ஏற்படும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விவர அட்டவணையில் வெட்டு மரங்கள் என்ற அடிப்படையில் ஈட்டிமரம், செம்மரம், நூக்கமரம், சந்தனமரம், சில்வர் ஓக் மரம், தேக்குமரம் போன்ற மரங்களை வகைபடுத்தியிருக்கிற முயற்சி பாராட்டத்தக்க முயற்சி.

> "செத்துப் போனவள் வீட்டுக்கு போனபோது ஒருத்தி பந்தலிலே
> பாகைக்காய் என்று சொன்னாள். பக்கத்திலே இருப்பவள்
> போகையிலே பார்க்கலாம் என்று சொன்னாள். வீட்டுக்காரர்
> விதைக்கல்லவோ விட்டிருக்கிறேன்"

என்று சொன்னதுமாதிரி வன இலாகா பொருள்களைப் பாதுகாக்க இந்த அரசு இந்தச் சட்டத்தைத் திருத்தி கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் சொன்னதை எத்தனை உறுப்பினர்கள் சரிதான் என்று ஒத்துக்கொள்வார்கள்?

டாக்டர் இரா. இனார்த்தனம்: வன பொருள்கள் பாதுகாக்கப்படவேண்டுமென்ற முறையிலும், தவறு செய்பவர்கள் நீதிமன்றத்தின் மூலம் தண்டனைக்குள்ளாவார்கள் என்ற முறையிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்த வன திருத்த சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவரவர்களே, வன திருத்த சட்ட முன்வடிவுபற்றி நான் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல முற்படுமுன், மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இந்த மசோதா, தேவையை உணர்ந்து கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி) [1979 ஏப்ரல் 30

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதுபோல், வன இலாகாவிலே உள்ள பொருள்களை நாமே பயன்படுத்தக்கூடிய அளவில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சந்தன மரத்தைப் பொறுத்த வரை, இன்றைக்கு சந்தன எண்ணெய் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்ற சந்தன மரங்களில் நூற்றுக்கு 90 சதவிகிதம் தமிழகக் காடுகளில்தான் கிடைக்கின்றன. மற்ற மாநிலங்களுக்கு அவைகள் கொண்டு செல்லப்பட்டு, சந்தனப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, சந்தனப் பொருட்களை நாமே தயாரிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சமீபத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருந்தார்கள். தொழிற்சாலை துவக்க மத்திய அரசு குறுக்கே நிற்கிறது என்று சொல்லியிருந்தார்கள். எப்படியாவது அந்தத் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் உருவாக்க வேண்டும். உலகம் முழுவதும் உற்பத்தி செய்யக் கூடிய சந்தன மரங்களில் 90 சதவிகிதம் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்தச் சட்ட முன்வடிவில் வகைப்படுத்தியிருக்கின்ற விவர அட்டவணையில் கண்டுள்ள ஈட்டி மரம், செம்மரம், நூக்கமரம், சந்தனமரம், சில்வர் ஓக் மரம், தேக்குமரம் போன்ற வெட்டு மரங்களில் ஒன்றிரண்டு தவிர மற்ற மரங்கள் எல்லாம், பெரும்பாலும் மலைத் தோட்டங்களில் நாம் காண்கின்ற மரங்கள்தான். இந்த மரங்களைப் பொறுத்தவரை, களவு மிக **அதிகமாக நடைபெறுகிறது.**

தனி நபர்கள் இந்தக் களவைச் செய்வதைவிட, சாதாரணமான பொது மக்கள் இந்தத் தவற்றைச் செய்வதைவிட, செல்வாக்கு படைத்தவர்கள் அல்லது பெரும் பண்ணைகள், தோட்டங்கள், எஸ்டேட்டுகள் போன்றவைகளை வைத்திருப்பவர்கள் திட்டமிட்டுச் செய்கின்ற தவறுகள் மிக அதிகம். இப்படிப்பட்டவர்கள் இதை ஒரு தொழிலாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த மரங்களை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிற மரங்களோடு சேர்த்து வெட்டி அனுப்புகின்ற நிலை எஸ்டேட் வைத்து நடத்திக்கொண்டிருப்பவர்களிடம் இருக்கிறது.

1979 ஏப்ரல் 30] (திரு. க. இராமமூர்த்தி)

மலைகளில் உள்ள எஸ்டேட்டுகளை வாங்கி, அதிலுள்ள மரங்களை உடனடியாக வெட்டி, பக்கத்திலுள்ள விலை உயர்ந்த அரசுக் காடுகளிலுள்ள மரங்களையும் இதனுடன் சேர்த்து வெளியே கொண்டு வந்து விற்று அவர்கள் எஸ்டேட்டை வாங்கிய விலைக்கு அதிகமாக அந்த மரங்களை வைத்துக் கொண்டே சம்பாதித்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு எஸ்டேட்டிலிருந்து நிரந்தர வருவாய் என்ற முறையில் அவர்கள் அமைத்திருப்பதை நானே நேரிடையாகக் கண்டிருக்கிறேன், மற்றவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதை அரசு உடனடியாகத் தடுக்க வேண்டும். இந்த நிலை நீடிக்கக் கூடாது.

மலைப் பகுதிகளில், எந்த அளவிலே இத்தகைய மரங்களின் செல்வாக்கு இருக்கிறது அல்லது உருவாக்கப்பட்டிருக்கிறது என்கின்ற புள்ளிவிவரம் எடுக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம். அதை வைத்துக்கொண்டு அவற்றின் எண்ணிக்கை குறைகின்றபோது, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த விலை உயர்ந்த மரங்கள் சாதாரண பொது மக்களால் கொண்டு போகப்படுவதில்லை. சுமையாகவோ, வேறு முறைகளின் மூலமாகவோ போவதில்லை. ரோடுகளிலே லாரிகளின் மூலம் தான் பெரும்பாலும் கடத்தப்படுகின்றன. சுலபமாக தெரியாத இடத்திற்குப் புகுந்து போய்விட்டார்கள் என்கின்ற அளவில் கூட அமைவதில்லை. திருட்டு அதிகமாக நடைபெறுகிற ஈட்டி மரம், சில்வர் ஓக் மரம் போன்ற மரங்களைப் பொறுத்தமட்டில், திட்டமிட்டு பலருக்குத் தெரிய நடைபெறுகிறது. இப்படி திட்டமிட்டுச் செய்கின்ற தவறுகளைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற அளவில் அரசாங்கம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது.

இந்தச் சட்டம் நிறைவேறிய பின் இதைக் கடுமையான முறையில் நிறைவேற்றுகின்ற அளவிலே யார் நிறைவேற்ற வேண்டும் என்பதையும் நாம் அறிவோம். இந்தச் சட்ட முன்வடிவில் மிகக் கடுமையான தண்டனைகள் வழங்குகின்ற பிரிவுகள் எல்லாம் இருக்கின்றன. வாய்ப்பு இல்லாதவர்களையும், வசதி இல்லாதவர்களையும் தவிர, மற்றவர்களை இந்தச் சட்டத்தின் மூலம், தவறு செய்தால், பிடித்து கடுமையான தண்டனை வழங்கக்கூடிய முறையில் இந்தச் சட்டம் இயங்க வேண்டும், செயல்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

(பிற்பகல் 4-40)

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் நடைபெறுகின்ற களவு முதலியவற்றைத் தடுப்பதற்காக இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. உண்மையிலேயே, நம்முடைய நாட்டிலே வனச் செல்வம் அழிந்துகொண்டே வருகிறது என்று சொன்னால், அது தவறல்ல. உலக நாடுகள் பலவற்றில் அவைகளின் மொத்தப் பரப்பில் எவ்வளவு சதவீதம் வனம் இருக்கிறதோ அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்தின் வனத்தினுடைய சதவீத அளவு மிகக் குறைவு. பிற நாடுகளில் இதைவிட அதிகமாக இருக்கிறது. குறிப்பாக ரஷ்யா, செக்கோஸ்லவாக்கியா நாடுகளில்—என்னிடத்தில் சரியான புள்ளிவிவரம் தற்போது இல்லை—6, 7 மாதத்திற்கு முன்னால் அமெரிக்க நாட்டிலிருந்து வந்த ஒரு வெளியீட்டில் அங்கெல்லாம் "ரிசர்வ்ட் ஃபாரஸ்ட்" எப்படி வைத்திருக்கிறார்கள், எவ்வளவு வைத்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்களையெல்லாம் கொடுத்திருந்தார்கள். மொத்த நிலப் பரப்பில் 36 சதவீதம் காடுகள் உள்ள நாடுகள் எல்லாம் கூட இருக்கின்றன. நம் நாட்டைப் பார்க்கும்போது, இந்த சதவீதம் மிகவும் குறைவாக இருக்கிறது. இருக்கிற காடுகளைப் பாதுகாக்க வேண்டும்; காடுகள் குறைவாக இருப்பதே பருவ மழைகளிலே மாற்றம் ஏற்படுவதற்குக் காரணம். வனம் அழிந்து கொண்டிருப்பதுதான் காரணம். காடுகளைத் திட்டமிட்டு அழித்து பெரும் பொருள் சேர்ப்பவர்கள் இருக்கிறார்கள். காடுகளைப் பற்றிய முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல் அழித்துக்கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், லாபத்தைக் கருதி அரசுக் காடுகளை அழித்து, 8 ஆயிரம் ஹெக்டேரில் ரப்பர் பயிரிட்டிருக்கிறார்கள். தனிப்பட்ட நிலத்துக்குச் சொந்தக்காரர்கள், பட்டா நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் பணப் பயிரான ரப்பர், நல்ல மிளகு போன்ற பயிர்களைச் செய்திருக்கிறார்கள். அரசிடம், 'ரிசர்வ்ட் பாரஸ்ட்' என்று முன்பு இருந்தது. இப்போது அரசின் தத்துவமே மாறிவிட்டது. பணம் சேர்ப்பதுதான் அரசின் குறிக்கோள் என்ற நிலைமை வந்துவிட்டது. பணம் சேர்ப்பதும் அரசின் பொறுப்புதான். முன்பு இருந்த அரசுகள் எல்லாம் காடுகளைப் பாதுகாக்க வேண்டியது கடமை என்று கருதினார்கள். பிற நாடுகளில் உள்ளவர்கள் படையெடுக்காமல் காடுகள் பாதுகாப்பாக முன்பு இருந்தன. இப்போது உள்ள நாடுகளை எடுப்பதானால், ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தைச் சுரண்டுவது, அடக்குவது, பணக்காரர்கள் ஏழைகளைச் சுரண்டுவது என்பதிலேதான் இருக்கிறது. அவ்வாறே அரசும் ஈடுபடத் துவங்கியுள்ளது. இப்போது அரசு எந்தெந்தத் தொழில்

களிலே ஈடுபட்டால், நிரம்ப லாபம் வருகிறது என்று கருதி, அந்தப் பணிகளிலே ஈடுபடுகிறார்கள். இது ஒரு தவறான போக்கு. கன்னியாகுமரி மாவட்டத்திலே 8 ஆயிரம் ஹெக்டேர்களில், 16 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் ஏக்கர் என்ற அளவிலே ரப்பர் பயிர் செய்து லாபம் சம்பாதிக்கிறார்கள். உண்மையிலேயே, இதனால், நாட்டுக்குப் பெருத்த நஷ்டம் ஒரு பக்கம் விளைகிறது. தனிப்பட்ட முறையில் காட்டை வைத்திருப்பவர்கள், பயிர் செய்யும்பொருட்டு அந்தக் காடுகளை அழிக்கிறார்கள். காடுகளை அழித்து பணப் பயிர் போடுகிறார்கள். ரப்பர் மரம், அதிகமாகப் போனால், 60 அடி வளருகிறது. மாறாக, தேக்கு, ஈட்டி, வேங்கை போன்ற மரங்கள் 300 அடி வரை உயரமாக வளர்கின்றன. இப்படி 300 அடி வரை உயரமாக வளர்ந்து அடர்த்தியான ஒரு காடு மேகங்களை ஈர்க்கும் சக்தியைப் பெற்று மழையைக் கொட்டச் செய்வது எப்படி, 60 அடி வளர்ந்த மரம் மேகத்தை ஈர்க்கும் நிலை எப்படி? பெரிய காடுகளில் பெருமழை பெய்தால், எப்படி இருக்கும் என்றால், தொட்டில் கட்டி தண்ணீரை இறக்குவது போல இருக்கும். பெரு மழை பெய்யும் உணர்ச்சியே இருக்காது. மழை பெய்வதே தெரியாது. அங்கே தண்ணீர் தான் கொட்டிக்கொண்டிருக்கும், மழையின் வேகத்தை 300 அடி வரையில் உயர்ந்து இருக்கும் மரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தாங்கித் தாங்கி தண்ணீர் கீழே வரும். சர்க்கஸ் கொட்டகைகளிலே சர்க்கஸ் உயரத்தில் ஆடுகிறவர்களை நெற்று கட்டி இறக்குகிறார்களே, அதுபோல அந்த மழையும் தரையிலே இறங்குகிறது. அப்படி மழைத் தண்ணீர் வரும் போது 'எரோஷன்' ஏற்படுவதில்லை. நில அரிப்பு ஏற்படுவதில்லை. மணல் அரிப்பினால் கடலே கூட இப்போது மாறியிருக்கிறது. வெள்ளப் பெருக்கு ஏற்படும்போதுகூட, தண்ணீர் மெதுவாக தரையிலே விழுந்து செல்வதால் அதிக அளவிலே அரிப்பு ஏற்படுவதில்லை. நாம் இந்தச் சட்டத்தை மட்டும் போட்டு வனத்தைப் பாதுகாத்தால் மட்டும் போதாது. காடுகள் இப்போது அழிக்கப்படுகின்றன. இதைத் தடுப்பதற்கு சட்டம் மட்டும் போதாது. நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் வனத்துக்கு உள்ளே இருக்க வேண்டும். அவர் நாட்டிலே மட்டும் இருந்தால் போதாது. முன்னால் இருந்த அரசர்கள் கூட காடு 6 மாதம், நாடு 6 மாதம் என்ற முறையிலே இருந்தார்கள். நாட்டில் 6 மாதம் இருந்து எப்படி மக்களுக்குச் சேவை செய்கிறாரோ அதுபோல 6 மாதம் காட்டிலே இருந்து காட்டைக் காப்பாற்ற வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கே அவருக்குத் துணையாக யார் இருப்பது?

திரு. ம. சங்கரலிங்கம்: அதற்கு நாங்கள் போகிறோம்.

[1979 ஏப்ரல் 30

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, some years back I read the Nilgiris District Gazetteer where I found one interesting fact. The Maharajah of Mysore owned all the forests from Mysore right up to the Nilgiris. He gave a free gift of all the lands—the entire forest to the Zamorin of Calicut—because he thought that forests were of no use, or perhaps he never wanted to live in the forests.

திரு. ம. சங்கரலிங்கம்: இதையெல்லாம் சட்ட அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்பெல்லாம் மைசூர் மகாராஜா இருக்கும் போதுகூட அவர் காடுகளைப் பராமரித்து, அங்கே சென்று தங்கி வருவார். இது உண்மையான விவரம். நம்முடைய வனம், அடர்த்தியான காடாக, உயர்ந்த மரங்களைக் கொண்ட காடாக இருக்க வேண்டும். இப்போது காடுகளிலே இருக்கும் கூப்புகளை ஏலம் விடுகிறார்கள். தேக்கு மரங்கள் 200 வருஷம் வரை நிற்கும். ஒரு மரமே 3, 8, 10 ஆயிரம் ரூபாய் என்று போகும். அவ்வளவு விலை போகும் மரங்களை வளர விடாமல் ஐந்தாம் வருஷத்திலேயே ஏலம் விடுகிறார்கள். தேக்கு மரங்களை வைக்கும்போது நெருக்கமாக வைக்கிறார்கள். இரண்டாவது வருஷத்திலே சின்ன கன்றுகள் உண்டு பண்ணுகிறார்கள். இதுபோக, தன்னாலேயே காடுகள் வளர்கின்றன. இந்தக் காடுகளை அழிக்காமல் இருக்க, தக்க முறையில் சட்டம் கொண்டுவர வேண்டும். ஆனால் விறகுக்காக காடுகளிலே செல்வார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடாது. வீட்டுக்கு விறகுக்கும், உழவுக்கு ஒரு கலப்பை செய்வதற்கும் மரங்கள் எடுக்கப் போவார்கள். அவர்கள் பெரிய மரங்களைத் திருட மாட்டார்கள். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. மரங்களை யார் அழிக்கிறார்கள் என்று பார்த்தால், அரசு அதிகாரிகளுடைய துணையோடு பெரிய கூப்பு காண்ட்ராக்டர்கள்தான் அழிக்கிறார்கள். வன இலாக்காவிலே சிறிய விறகு மரங்களுக்காக காண்ட்ராக்ட் எடுத்தவர்கள், அங்கே நிற்கும் வகையான பெரிய மரங்களை வெட்டி லாரியிலே போட்டுக்கொண்டு அதற்கு மேலே விறகைக் கொஞ்சம் போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். மறுநாள் அவர்கள் காட்டிலே போய் தீ வைத்துவிட்டு, ஒரு பெட்டிஷன் எழுதி டி.எஃப்.ஓ.வுக்குக் கொடுத்து, தீ பிடித்துவிட்டதனால் எனக்குப் பெருத்த நஷ்டம் என்று சொல்லி, 10 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு தரவேண்டும் என்று கேட்கிறார்கள். டி.எஃப்.ஓ. அவருக்கு வேண்டியவராக இருந்தால், அவர் வெற்றி பெற்று விடுவார். இத்தகைய தவறுகள் எல்லாம் தடுக்கப்பட வேண்டும். வனத் துறையிலேதான் அதிக அளவிலே கொள்ளை நடக்கிறது. இவ்வளவு பெரிய அளவிலே கொள்ளை அடிக்கவிட்டுவிட்டு, எவன் ஒருவன்

1979 ஏப்ரல் 30] (திரு. ம. சங்கரலிங்கம்)

விறகுக்கு என்று கொஞ்சம் எடுக்கிறானோ அவனைப் பிடித்து அடிக்கிறார்கள். வெளிநாடுகளிலே இந்த "ஃபாரஸ்ட்களை" பல்கலைக் கழகமே நடத்துகிறது. காடுகளைப் பராமரித்தல், காண்ட்ராக்டர்களுக்கு விடுதல் போன்ற அனைத்தையும் பல்கலைக் கழகமே மேற்கொண்டுள்ளது. நம் நாட்டில் இவைகளையெல்லாம் அரசே செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. சில கடுமையான தண்டனைகள் தர வேண்டும் என்றெல்லாம் விதி வைத்திருக்கிறார்கள். நான் உண்மையாகவே பாராட்டுகிறேன். இந்தச் சட்டத்திலே முதல் தடவை தவறு செய்தால் 1 வருஷம் அல்லது 3 ஆயிரம் ரூபாய் என்று தண்டனை இருக்கிறது. இரண்டாவது தடவை என்றால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் என்று இருக்கிறது. அதற்கு மேலும் என்றால், தண்டனை 5 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாது என்று இருக்கிறது. தண்டனை அளிக்கும்போது, நீதிபதியினுடைய டிஸ்கிரீஷனுக்கு நாம் இடம் கொடுக்க வேண்டும். யாராவது அகப்பட்டால், அவர்கள் உண்மையில் பெரும் தப்பு செய்பவர்களாக இருக்க மாட்டார்கள். அதிக அளவில் கொள்ளையடிப்பவர்களுக்கு நாம் இந்தச் சட்டத்தை வைத்துக் கொள்ளலாம். சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரி மிகவும் சுத்தமானவராக இருந்து, யாருடைய பேச்சைக் கேட்டும் யாருக்கும் எத்தவித பாதகமும் செய்பவராக இல்லாமல் இருந்தால், இதைவிட அதிக தண்டனை வழங்கும்

(பிற்பகல் 4-50)

சட்டங்கள் கூட கொண்டு வரலாம். இப்போது இருக்கிற சட்டங்கள் மீறப்படுவதற்கு அதிகாரிகளே துணை நிற்கிற நிலைதான் எங்கேயும் இருக்கிறது.

பல வழக்குகளில் பலர் தண்டனை பெறுகிறார்கள். கேட்டால் இன்ன அதிகாரி என்னிடம் ரூ. 2,000 கேட்டார். அதைக் கொடுக்கவில்லை, எனவே என்மீது வழக்குப் போட்டுவிட்டார் என்று சொல்கிறார். என்னிடத்தில் பலர் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். காரணம் அவர்கள் தவறு செய்கிறார்கள். வனத் துறையில் இது சர்வ சாதாரணமாக நடக்கிறது. எனவே இந்தச் சட்டங்களில் நீதித் துறைக்கு உரிமை கொடுக்கிற முறையை உருவாக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான், கண்டிப்பாக வனத்தைப் பாதுகாக்க முடியும் என்று சொல்லி, என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தின்மீது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லும்போது, இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிற நல்ல நோக்கத்தினுடைய அடிப்படையைப் புரிந்துகொண்டு பேசியதற்காக அரசின் சார்பில் அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, குறைந்த பட்ச தண்டனை கொடுக்கிற அதிகாரத்தை நீதிமன்றங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த முறை புதிதாக ஏற்படுத்தப்பட்ட முறையல்ல. இந்தியன் பினல் கோடில்கூட சில குற்றங்களுக்குச் சில தண்டனை இந்த வரம்புக்கு மேல் அதிகரிக்கக்கூடாது என்று இருக்கிறது. அதைப்போல் கொடுக்கப்படுகிற தண்டனையும் சில நேரங்களில் இந்த அளவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று வரைமுறையை ஏற்படுத்திக் கொள்கிற அதிகாரம் எப்போதும் அரசுக்கு உண்டு என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் 52-வது விதியைச் சுட்டிக்காட்டினார்கள். திருத்தச் சட்டத்தில் அதை நீக்கிவிட வேண்டும் என்றிருப்பது முறையல்ல என்று குறிப்பிட்டார்கள். காலையில் இந்தச் சட்டத் திருத்தத்தைப் பேரவையில் அறிமுகம் செய்தபோது, இப்படிப்பட்ட கருத்துக்கள் எதிர்த் தரப்பிலிருந்து சொல்லப்பட்டபோது அவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அனுமதியோடு 52-வது விதி திருத்தப்பட்ட சட்டத்திலும் இடம் பெறலாம் என்று முடிவெடுத் திருக்கிறோம். அதனால் திருத்தப்பட்ட புதிய சட்டத்தில் 52-வது விதி இருப்பதால், அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துக்கொண்டு, அரசு நல்ல நோக்கத்தோடு இந்தத் திருத்தச் சட்டத் தைக் கொண்டு வந்திருக்கிறது, ஆகவே அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1979, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 19/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 19/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

12) 1979 ஆம் ஆண்டு, மாநகரச் சிறுவழக்கு நீதி மன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவை, தமிழ்நாடு நீதி மன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1979).

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, மாநகரச் சிறுவழக்கு நீதி மன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவை, தமிழ்நாடு நீதி மன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 206ஆம் பக்கத்தில் இணைப்பு XIV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, மாநகரச் சிறுவழக்கு நீதி மன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவை, தமிழ்நாடு நீதி மன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 24/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, மாநகரச் சிறு வழக்கு நீதி மன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவை, தமிழ்நாடு நீதி மன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 24/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, மாநகரச் சிறு வழக்கு நீதி மன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவை, தமிழ்நாடு நீதி மன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 24/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(13) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 41/1979).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 41/1979) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் 10 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு அமைப்பதில் சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. (ஏற்கெனவே 27 உறுப்பினர்கள் அடங்கியதாக இருந்ததை இப்போது 30 என்று ஆக்கி அதில் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 என்ற திருத்தத்தோடு இது கொண்டு வரப்படுகிறது). மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. அ. தங்கவேலு.
3. திரு. ஆ. திராவிடமணி.
4. திரு. பி. மாணிக்கம்.
5. திரு. க. இராமமூர்த்தி.
6. திரு. டி. வி. டி. டி. மாண்டி.
7. திரு. கே. எஸ். அப்துல் வகாப்.
8. திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்.
9. திரு. ஆ. நல்லசிவன்.
10. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்).

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 41/1979) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் 10 சட்ட

